உ

ஆதிபகவன் துணை.

திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

திருக்குறள்

மூலமும் பரிமேலழகருரையும்

ஏனை உரையாசிரியர் உரையும் விளக்கமும்,

அருஞ்சொற்பொருளகராதியும்

(நான்காம் பதிப்பு)

திருநெல்வேலித், தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை.

தாரணை—ஐப்பசி

First Edition : February 1937
Second Edition : July 1939
Third Edition : Sep. 1941

[*All Rights Reserved*]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
::PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

November 1944

Half Bound	Price	Rs. 4 - 8
Calico Bound	,,	5 - 0
Rexine Bound	,,	7 - 0
Rexine Box Bound	,,	8 - 0

RAJAN ELECTRIC PRESS, MADRAS.

ஆதிபகவன் துணை

பதிப்புரை

உலகில் மக்களறியுமாறு உண்மையுணர்த்தும் ஆசிரியர் இரு பெரும் பிரிவினுள் அடங்குவர். அவருள் வினையினீங்கி விளங்கிய அறிவினையுடையார் ஒருவகையர். அம்மெய்யறிவுடையரல்லராய் அளவை முறைப்படி நுணுகி ஆராய்ந்து அறியும் கருவியறிவினை யுடையார் மற்றொருவகையர். இவ்விருவகையினருள் இந்நூலாசிரியராகிய திருவள்ளுவர் போன்றார் முதற்பிரிவினருளடங்குவர். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரையாசிரியர்களாய் உரையெழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், இளம்பூரணர், சேனாவரையர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் முதலியவர்கள் இரண்டாவது பிரிவினருள் அடங்குவர். இவர்கள் ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஆராய்ச்சி அறிவுடையவர்களாவர்.

இவ்வாராய்ச்சியறிவில் எவர் எந்தெந்த நிலையில் ஒன்றை நோக்கினரோ அவர் அதனையே அறியவல்லவர். ஒருவர் ஒருநிலையில் நின்று ஒன்றே நோக்கியறிந்த உண்மையைப் பிறரொருவர் பிறிதொருநிலையில் நின்று அறியவல்லாரல்லர். அதுவன்றி, ஆராய்ச்சி அறிவாளர்க்கு எவ்வகையான உள்ளச்சார்பும் உள்ளத் தடிப்பும் (Prejudice) உண்மை யறிதற்குத் தடையாயுள்ளன. இத்தடைகள் முற்றும் நீங்கியவர்களே உலகிலுள்ள ஆராய்ச்சி அறிவாளரிற் காண்பதரிது.

திருக்குறளுக்குப் பத்து உரைகள் எழுதப்பட்டனவாக நாம் அறிகின்றோம். அவற்றுள் இதுவரை இரண்டு உரைகளே அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளன. அவ்விரண்டு உரைகளிலும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்ததென்பதற்கு ஐயமின்று.

ஆசிரியர் பரிமேலழகர் பெரும்பகுதியான குறட்பாக்களில் எளிதில் விளங்காத மிக நுண்ணிய கருத்துக்களைக் கற்பார் யாவர்க்கும் விளங்கத்தெரிக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையவர் என்பது தெள்ளிதிற் புலனும். ஆனால், இதுபற்றி அவர் எழுதிய உரைக

எல்லாம் நூலாசிரியரின் உண்மைக் கருத்துக்களே முற்றும் விளக்குவனவென்று கொள்ளுதல் தமிழறிஞர்களின் ஆராய்ச்சியறிவு வளர்ச்சிக்குத் தடை செய்வதாகும்.

யாதாமொரு குறட்பாவுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பொருத்தமுடைய தன்றென்று ஆராய்ச்சியாளர்களின் அறிவிற்குப் புலப்பட்டால் அவ்வுரை எவ்வாறு பொருத்தமில்லை யென்று தக்க காரணங்காட்டித் தமது கருத்தை அறிவிப்பதே உண்மையை யறியும் முறைமையாம். பரிமேலழகர் உரையை மறுக்கக்கூடா தென்று பிடிவாதமாய்க் கொள்ளும் கொள்கையுரனது மாண்புடைத் தன்று.

மேலேகூறிய காரணங்களால் பரிமேலழகர் கண்ட உரைக்கு மாறுபாடாகக் காணப்படும் உரைகளிற் சிற்சில தமிழுலகுக்குப் பயன் படுமாறு இந்நூலிற் பிற்சேர்க்கையாக (அநுபந்தமாக)க் குறிக்கப் பெற்றுள்ளன. இதனுடன் **"அருஞ்சொற் பொருள் அகராதி"** யொன்றுங் குறள் எண்களுடன் சேர்க்கப்பட் டிருக்கின்றது. மாண வர்கட்கும் ஆராய்ச்சியாளர்கட்கும் இவை பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றோம்.

ஆசிரியர் வள்ளுவர்பெருமான் மக்களெல்லாம் அறநெறி யொழு கிப் பெரும்பயனடைய வேண்டுமென்னும் பெருநோக்குடன் செய் தருளிய இந்நூலைக் கற்பார் பலரும் எளிதிற்பெற்றுப் புலமை யடையவேண்டி மிகவும் குறைந்த விலைக்கு அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

இந்நூலைச் செவ்விய முறையில் அச்சிடுவதற்கு, நீண்டகால மாகத் தங்கள் நுண்ணறிவாற் கண்ட அரும்பெருங் கருத்துக் களைத் திரட்டித் திருக்குறள் ஆராய்ச்சி முன்னுரையும் குறள் மாறு பாட்டுரைகளிற் சிலவும் எழுதி யுதவிய திருவாளர் தூ. சு. கந்தசாமி முதலியார், பி. ஏ., அவர்கட்கும், திருக்குறட்பாயிரக் கருத்தும், குறள் மாறுபாட்டுரைகளிற் சிலவும் எழுதித் தந்த திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ., அவர்கட்கும், அருஞ்சொற் பொருளக ராதியைத் திருத்தம் செய்துதந்த திருவாளர் வே. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கட்கும், அச்சியற்றுங்காற் பிழைபார்த் துதவிய காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ., அவர்கட்கும் இக்கழகத்தின் நன்றி உரியதாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

		பக்கம்
ஆராய்ச்சி முன்னுரை	...	எ
அதிகார வகராதி	...	கஎ
உரைப்பாயிரம்	...	க
அறத்துப்பால்		
க. பாயிரம்	...	ங
உ. இல்லறவியல்	...	ககூ
ங. துறவறவியல்	...	அசூ
ச. ஊழியல்	...	கசo
பொருட்பால்		
க. அரசியல்	...	கசரு
உ. அங்கவியல்	...	உஙக
ங. ஒழிபியல்	...	ஙருக
காமத்துப்பால்		
க. களவியல்	...	சoசூ
உ. கற்பியல்	...	சஙரு
உரைச்சிறப்புப்பாயிரம்	...	ருoசூ
திருவள்ளுவமாலை	...	ருoஎ
ஆசிரியர் திருப்பெயர்களும் நூலின் திருப்பெயர்களும்...		ருஉரு
திருக்குறட் பாயிரக்கருத்து	...	ருஉசூ
சில குறட்பாக்களுக்கு ஏனை உரையாசிரியர் உரையும் விளக்கமும்	...	ருஙஉ
அருஞ்சொற்பொருள் அகராதி	...	ருஙஅ
பாட்டு முதற்குறிப்பகராதி	...	1-20



திருவள்ளுவர்

ஆராய்ச்சி முன்னுரை

[சாத்தூர், வழக்கறிஞர்
திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்கள், B.A.]

திருவள்ளுவர் ஓர் உலக கவி; உலக கவிகளுள்ளும் அவர் தலை சிறந்த கவி. அவருள்ளத்துத் தோன்றிய கருத்துக்கள் உலக மக்களனைவருடைய உள்ளங்களையுங் கவரும் நலமுடையன. எவராயினும் அவர்தம் அழகிய கருத்துக்களைச் செவியுறின், அவற்றின் அமைந்துள்ள நுட்பத்தையும் திட்பத்தையும் மாண்பையும் கண்டு வியவாதிரார். ஆசிரியர் தம்மறிவின் உச்சியினின் றுதுகிறாதலின் அவர் கூறும் மொழிகள் என்றும் பொய்யா மொழிகள்; உள்ளுள்ளிருந் தெழும் கருத்துக்களை உணர்த்துகிறாதலின் அவர் மொழிகள் உண்மை மொழிகள். ஊழிபல செல்லினும், அவர் மொழிகள் படிப்போருள்ளத்தைத் குழைவிக்கும்; கருதுவோருள்ளத்தில் மெய்ம்மையையும் அறத்தையும் நாட்டும்; கவில்வார் நெஞ்சத்தில் கவில் தொறும் கவில்தொறும் கயத்தினை கல்கும். அவர் கூறும் பொன் மொழிகள் எந்நாட்டிற்கும் செல்சார்புடையன: ஒரு நாட்டிற்குமட்டும் செல்சார்புடையனவல்ல. அவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளின் பொருள்நலத்தை யறிந்து நுகர்ந்த வேற்று நாட்டாரெல்லாரும், அக்குறளைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துத் தத்தம் நூற் செல்வங்களைப் பெருக்கினர். அதனைப் பயின்ற நூலாசிரியர்கள் அதன் பொருள் நலத்தையும், சொன்னலத்தையும் தம் நூல்களில் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். உலக கவிகளனைவரும் கலைச் செல்வர்; எனினும் ஏனைய உலக கவிகள் பொருட் பரப்பின் ஒரு மருங்கேபற்றி நூல் செய்துள்ளார்கள்; நம்பெருங் கவி பொருட் பரப்பின் எம்மருங்கும்பற்றி நூல் செய்துள்ளார்.

திருவள்ளுவர் தமிழணங்கு பெற்ற தவப் புதல்வர். அவர் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய புலவர் என அறிஞர் சிலர் கருதுகின்றனர். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் திருக்குறள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சாத்தனார் தம் 'மணிமேகலை'யில் 'தெய்வம் தொழாஅள்' என்ற குறளை எடுத்துக் கூறி, நம் தெய்வப் புலவரைப் 'பொய்யில் புலவன்' எனச் சூட்டிப் போந்தமை தமிழுலகம் நன்கறிந்த தொன்று. பண்டை வழக்கின்

படி தம்காலத்துத் தோன்றிய ஒரு கவி எவ்வளவு சிறப்புற்றிருப்பினும் அக்கவியை ஒருவரும் மிகப் புகழ்வதில்லை. ஆகவே, சாத்தனார் காலத்துக்கு மிக மிக முற்பட்ட காலத்தே திருவள்ளுவர் திருக்குறளைச் செய்தாராதல் வேண்டும். அன்றியும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்றில் அப்புலவர் திருக்குறளிற் சிறந்த குறளும், திருவள்ளுவர் மதியிலச்சினையையுடையதுமாகிய 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற குறளைத் தம் பாட்டிற் கேற்றுங்கு மாற்றிப் பாடித் திருக்குறளை 'அறம்' எனச் சிறப்பித்து,

"நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம் பாடிற்றே யாயிழை கணவ"

என அழகுறக் கவி செய்துள்ளார். செய்ந்நன்றி கோறலை உய்வில்ல தோர் குற்றமெனத் திருவள்ளுவர் திருக்குறளிற் கூறியதனையே ஆலத்தூர்கிழார் இக்கவியில் கூறுகிறார். அக்குற்றத்தை வேறு அற நூலாசிரியர் எவரும் அங்ஙனங் கண்டித்துக் கூறவில்லை. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் ஆலத்தூர்கிழாரும் ஒரே காலத்தவரென மதிக்க இடமுண்டு.

புறநானூற்றுள் காக்கைபாடினியார் பாடிய 'நரம்பெழுந் தலறிய' என்ற செய்யுளில் வரும் 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே' என்ற சொற்றொடருக்கும், "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்ற குறளில் வரும் 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்ற சொற்றொடருக்கும் பெரிதும் ஒற்றுமையுளது. அவ்வொற்றுமையைக் கண்ட திரு. K. N. சிவராஜபிள்ளை அவர்கள் காக்கைபாடினியாரைப் பின்பற்றித் திருவள்ளுவர் அச்சொற்றொடரைத் தம் திருக்குறளில் அமைத்துக் கொண்டிருப்பதாகக் கருதுகிறார்கள். காக்கைபாடினியார் திருவள்ளுவரைப் பின்பற்றி அச்சொற்றொடரையமைத்துக் கொண்டாராதல் வேண்டும், திருவள்ளுவர் பிற்காலத்தவர் எனப் பிள்ளையவர்கள் கருதினமையால், காக்கைபாடினியாரை அவர் பின்பற்றிக் குறள் செய்தாரெனக் கூறினர்கள். தங்கொள்கையை நாட்டத் தக்க ஏது ஒன்றும் பிள்ளையவர்கள் காட்டவில்லை. திருவள்ளுவர் கூறிய சொற்றொடரின் வழித்தாயது காக்கைபாடினியார் சொற்றொடர் என்ற மெய்ம்மை,

முன்னையதின் பொதுத் தன்மையையும் பின்னையதின் சிறப்புத் தன்மையையும் நோக்குவார்க்கு வெளியாம். ஆனால் ஆலத்தூர் கிழார், திருவள்ளுவரைப் பின்பற்றிச் செய்யுள் செய்துளார் என்பது, இரண்டு செய்யுட் பகுதிகளையும் ஒப்பு நோக்குவார்க்குப் புலனும். அன்றியும், ஆலத்தூர்கிழார் தாம் வேறு ஓர் அறநூலின் கொள்கையை மேற்கொண்டு செய்யுள் செய்துளார் என்று குறிப்பால் கூறுகிறார். அந்நூல் திருக்குறள் என்று மேலே காட்டப்பட்டது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியெனவும், காக்கைபாடினியார் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியெனவும் திரு. சிவராஜ பிள்ளையவர்கள் கருதுகிறார்கள்.

காக்கைபாடினியார், ஆலத்தூர்கிழார் ஆகிய புலவர்கள் காலத்திற்கு மிக முற்பட்ட காலத்தே திருக்குறள் தோன்றியிருத்தல் வேண்டும். கௌதமபுத்தர் கொள்கைகளைத் திருவள்ளுவர் கண்டிக்கிறாராதலின், திருவள்ளுவர் புத்தர் காலத்துக்குப் பிற்பட்டுத் தோன்றிக் காக்கைபாடினியார் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்துளார் என்பது பெறப்படுகின்றது. ஆகவே, **திருவள்ளுவர் காலம் கி. மு. மூன்றும் நூற்றாண்டெனக் கொள்ளின் அது மெய்யாகும்.**

ஒழுக்கங் கூறவந்த நூல்கள் பல. அவற்றுட் பல காலச்செலவில் வழக்கு வீழ்ந்தன; பெயரளவில்மட்டும் போற்றப்படுவன. திருக்குறள் தோன்றிப் பன்னூற்றாண்டுகள் சென்றன. ஆயினும், அஃது இன்றும் பெருவழக்கிற்றாயுளது; மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செலுத்திப் பயனடையப் பெரிதும் உதவி செய்கின்றது. அறத்தின் வேரையும் அதன் உயிர்ப்பையும் பற்றி ஆசிரியர் திருவள்ளுவர் நூல் செய்துள்ளாராதலின், அஃது என்றும் நின்று நிலவுவதாயும், என்றும் இன்பம் பெருக்குவதாயும் விளங்குகின்றது. **அறத்தின் பரிசை உள்ளவாறு விரித்துரைப்பதில் திருக்குறள் இணையற்ற நூல்.** உலகத்துத் தோன்றிய அறநூல்கள் எல்லாவற்றுள்ளும் அறத்தை எஞ்சாது முழுதுற விரித்த பேரறநூல் இஃதொன்றே என்று கொள்ளலாம். அறம் மிக விரிந்தது; பெருங்கடலினும் மிகப் பரந்தது; அது பல விதிகளுக்கும், அவையினும் பலவாய விலக்குகளுக்கும் இடங்கொடுத்து நிற்பது; ஆதலான், அறத்தை முழுதுறக் கூறல் யார்க்கும் முடியாதென மேல்நாட் டாசிரியர்கள் மலைவெய்துகின்றனர். அவர்கள் திருக்குறளே உள்ளவாறறியின் பிறரெவர்க்கு முடியாததொன்றை நம்மாசிரியர் அழகுறச் செய்து முடித்திருத்தலைக் கண்டின்புறுவர். அறம்பற்றிய பற்பல பொருள்

களும் மிக விளக்கமுறத் திருக்குறளில் கூறப்பட்டுள்ளன. அறமாவது யாது? அதனைச் செய்வது எங்ஙனம்? எதனை நோக்கி அது செய்யப்படும்? ஒருவனால் செய்யப்படும் வினை அறவினையா என்று ஆராய்வதற்குமுன் அஃது எத்தகைய வினையாயிருத்தல் வேண்டும்? அறவினையைச் செய்யவிரும்புவான் அதனை யறியுமாறு யாங்ஙனம்? செய்யத்தகும் வினைகள் பலவாயவழி ஒருவன் எத்தகைய வினையைச் செய்தல்வேண்டும்? எதனை ஒருவுதல் வேண்டும்? என்ற இன்னோரன்ன அறம்பற்றிய பல வினாக்களுக்குத் தக்க விடைகளைத் திருக்குறளின்றி வேறெந்நூலிலும் காண்பதரிது.

அறவொழுக்கம் கூறப்புகும் ஆசிரியர்க்குத் தாம் கூறும் அறநெறியைப் பிறர் யாரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி உள்ளவாறு புனைந்துரையின்றிக் கூறுதல் கடன். உண்மையை மயங்க வைப்பதால், புனைந்துரை அறநூலில் இடம்பெறு தென்ப. அறவுண்மையைக் காணவொட்டாது மயக்கம் செய்யுமாயின், கவிநயம்பற்றியுரைக்கப்படும் அணிகளும் அறநூலின்கண் வரின் இடைப்பிறவரலாக நோக்கப்படும். கவிகளுட்கவியாம் நம் ஆசிரியரும் அறம் பொருள்களை யுரைக்குங்கால் கவிநயம் பெருகக் காட்டாமைக்குக் காரண மதுவேதான். சிற்சில விடங்களில் நம் தெய்வப் புலவர் புனைந்துரையில் நினைப்பதுபோற் காணப்படினும், நுனித்து நோக்கின் ஆண்டுமவர் புனைந்துரைக்கவில்லை என்பது வெளியாகும். சிலரால் புனைந்துரைகளாகக் கருதப்படுபவற்றை யாராயின், அவை அறப்பொருளை மயக்காது விளக்குவதைக் காணலாம்; அவற்றுட் சில இம்மியும் புனைந்துரைக் கலப்பின்றி, முற்றிலும் மெய்யுரைகளாக விளங்குவதையும் காணலாம்.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

என்னுங் குறளை நோக்குக.

'தான் யாதொரு உதவியும் முன் ஒருவனுக்குச் செய்யாதிருக்குங்கால், அவன், தனக்குச் சிறியதோர் உதவி செய்யினும், அச்சிறிய உதவிக்குக் கைம்மாறுகத் தான் மண்ணுலகையும் விண்ணுலகையும் அவனுக்கொருங்கே சேர்த்துக் கொடுப்பினும், அவ்வுலகங்கள் அச்சிற்றுதவிக்கு நேராகா' எனத் திருவள்ளுவர் இக்குறளிற் கூறுங்கால், புனைந்துரையை அவர் கையாளவில்லையா எனச் சிலர் வினவலாம். இக் குறட்பொருளின்கட் கடுகளவும் புனைந்துரையில்லை யெனத் துணிந்து கூறுதல் கூடும். இவ்வுரை புனைந்துரையே

யன்று; மெய்யுரை; இரண்டும் இரண்டும் சேரின் நான்கா மெனக் கூறுவது, கணித முறையில் எவ்வளவு மெய்யுரையோ, அவ்வளவு மெய்யுரை. அவ்வுரையைச் சிறிது ஆராய்வோம். சாத்தன் கொற்றனுக்கு உதவியொன்றும் செய்யாதிருக்குங்கால் சாத்தனது கடும்பசியைத் தீர்க்கக் கொற்றன் நான்கணுக்கள் பெறுமுணவளிக்கிறான். பசிப்பிணி தீரப்பெற்ற சாத்தன் பிறிதொரு காலத்திலொரு நூறாயிரம் வெள்ளிக் காசுகள் கொற்றனுக்குக் கொடுக்கிறான். நூறாயிரம் வெள்ளிக் காசுகளும் நான்கணுக்களுக்கு நிகராகா. நிகரா காமை எங்ஙனமெனிற் காட்டுதும். கொற்றன் நான்கணு உதவி செய்தக்கால் சாத்தன் செய்த உதவி யொன்றுமில்லை. சாத்தன் செய்த உதவியோடு கொற்றன் உதவியை ஒப்பு நோக்கிக் கணித வாய்பாட்டிற் கூறுதும்: சாத்தன் உதவி = 0; கொற்றன் உதவி = ரூ. $\frac{1}{4}$; அதாவது 0 : $\frac{1}{4}$: அங்ஙனமே கொற்றன் உதவியோடு சாத்தன் உதவியை ஒப்பு நோக்கிக் கணிதவாய்பாட்டிற் காணுதும். அது ரூ. $\frac{1}{4}$: ரூ. 100000; அதாவது $\frac{1}{4}$: 100000, 0 : $\frac{1}{4}$ = எண்ணிலி = (infinity). $\frac{1}{4}$: 100000 = 400000; நான்குநூறாயிரம் எண்ணிலிக்குச் சற்றும் நேர்நிலாதென்பது புகழோ? புகழன்று; உண்மை. ஆதலின், மேல் நோக்காகக் காண்பார்க்குப் பூனைத்துரையாகக் காணப்பட்ட வுரை முற்றிலும் மெய்யுரையாயுள்ளதைக் காண்க. நம் தெய்வப் புலவர் கவியாதலாலும், கலைவலாராதலாலும் தாம் கூறும் பொருள்களைக் கலைக்கண் கொண்டு நோக்கிக் கவிநாக் கொண்டுரைப்பர்.

திருவள்ளுவ ரோதியருளிய அறநெறி பிறர்கூறிய அறநெறிகள் எல்லாவற்றினும் மிகச் சிறந்தது. அறத்தின் முதல், வினை செய்வா னுள்ளக்கருத்திலா, அல்லது அவன் செய்யும் வினையிலா தங்கியுளதென வாராயப் புகுந்தாரெல்லாந் தம்முண் மாறுபட்டு அவற்றுள் ஒரோ வொன்றுபற்றிச் சாதித்துள்ளார்கள். வினை செய்வானுளம் மாசின்றியிருக்கு மளவுக்குத்தான் அறம் உளதென்றும், வினைசெய்ய ஒல்லாவழி உளத்தாலும் அறம் செய்யலாமென்றும் நம்மாசிரியர் கூறியுள்ளார். அக்கூற்றினுட்பம் மிக அழகுடையது. 'வாய்மை', 'இன்சொல்'லை நம்மாசிரியர் வரையறை செய்து காட்டியருளிய திறத்தை நோக்குக. அவற்றை யங்ஙனம் திட்பமுறக் கூறிய தனிச் சிறப்புத் திருவள்ளுவர்க்கே யுரியது. வாய்மையை நிகழ்ந்தது கூறல் என்றும், இன்சொல்லைச் செவிக்கினிமை பயக்கும் சொல்லென்றும் பிறர் கூறுநிற்க, அவற்றை முறையே 'யாதொன்றும் தீமையிலாத சொலல்' என்றும், 'ஈரமலைஇப் படிறிலவாம்

செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்றும் நம்மாசிரியர் விளக்கிக் காட்டியுள்ளார். இங்ஙனம் விளக்கிக் காட்டல் 'செம்பொருள் கண்டா' ராகிய நம்மாசிரியர்க்கன்றி யார்க்குத்தான் இயலும் ?

ஒருவன் இடையறாது நல்லொழுக்கத்தில் ஒழுகி, அந் நல் லொழுக்கத்தினின்றும் மறந்தும் வழுவாது நிற்றல் வேண்டுமென யாப்புறுத்தி 'ஒழுக்கமுடைமை' யெனத் தனியதிகாரம் திரு வள்ளுவர் வகுத்துரைத்துள்ளார். இடையறா நல்லொழுக்கத்தில் நிற்றல் அறத்திற்கு வித்தாம் என்றும், ஒரோவொருகால் நல்வினை செய்தலால் பெருநலமாம் அறம் விளையாதென்றும் நம்மாசிரியர் கூறியுள்ளதன் சிறப்பை நோக்குக. பல்வேறொழுக்கங்களை விதந்து கூறிய ஆசிரியர், ஒழுக்கமுடைமையெனத் தனிவேறதிகாரம் வகுத்து, ஒழுக்கத்தை யென்று மொருவன் தனக்குடைமையாகக் கொள்ள வேண்டுமென்று உய்த்துணரவைத்துள்ளார்.

திருக்குறள் முழுதுறழ் அறநூல் என முன்னார்க் கூறப்பட் டது. மனம் மொழி மெய்களுள் ஒல்லுமவற்றானெல்லாம், ஒல்லு மற வினைக ளெல்லாவற்றையும், இடையறாது, செல்லுமிடங்களிலெல் லாம் செய்கவெனக் கூறி, அறத்தைச் செய்யுமாற்றைக் கூறுமுகத் தால் அறத்தின் உண்மை யுருவத்தை ஆசிரியர் முழுதுறக் கூறி யிருத்தல் காண்க. குற்றங்கள் தன்கண் நிகழாமற் குறிக்கொண்டு ஒருவன் காத்தல் வேண்டுமென்று கூறி, வாக்கால் நிகழுங் குற் றங்களனைத்தையும், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என வகைப்படுத்தி, அவற்றை வெவ்வேறதிகாரங்களில் அகப்படுத்தி ஆசிரியர் கூறியிருப்பதும், திருக்குறளின் முழுதுறழ் தன்மைக்குக் காரியாம். அறம் செய்வான் மறவிவழிப் புகாது, தீவினைகளி னின்றும், தீயகுணங்களினின்றும் தன்னைக் குறிக்கொண்டு காத்தல் வேண்டுமென்றும், ஏற்ற இடங்களில் எல்லாம் ஒல்லும் அறவினைகள் எல்லாவற்றையும் வினைவுகூர்ந்து செய்தல்வேண்டுமென்றும் ஆசிரியர் உய்த்துணர வைத்திருப்பதும் அதற்கு மற்றொரு சான்று. பயனில சொல்லுதலா லுண்டாம் இழிவும், சொல்லாமையால் வரும் உயர்வும் திருக்குறளில் மிகத்திட்பமாகக் கூறப்பட்டுள்ளன. 'பயனில சொல் லலை'க் குற்றங்களுட்படுத்தி யிங்ஙனம் கண்டித்துரைத்த அற நூலாசிரியர்கள் யாமறிந்தவரை வேறெவருமிலர்; வேறெந் நாட்டிலு மிலர். பயனில சொல்லுதலாலும், பயனிலசெய்தலாலுமே, பயனுடை யனவற்றைச் சொல்லவும், செய்யவும் இடம் வாய்க்கப்பெறுது பலர் வருந்துகிறார்கள் என்னும் உண்மையை அறிபவர்க்குத்தான், பயனில சொல்லலை யாசிரியர் கண்டிப்பதன் கருத்தும் நுட்பமும் வெளியாம்.

நீதியுரைப்பதில் நம் தெய்வப்புலவர்க் கீடாகும் பெரும் புலவரைக் காண்பதரிது. தனக்கொருவன் தீமைசெய்தால் அவனை யொறுத்தல் வேண்டுமெனப் பலரும், அத்தீமையைப் பொறுத்தல் வேண்டுமென வேறு சிலரும் கூற, நம்மாசிரியர் அத்தீமையை யப்பொழுதே மறத்தல் வேண்டுமென்றும், தீமை செய்தான் தன்னுள் நாணுமாறு அவனுக்குப் பெருநலம் தரும் செயலைப் புரிகவென்றும் ஓதியருளித் தனிச் சிறப்பாம் வென்றி கொண்டனர். 'நன்றல்ல தன்றே மறப்பது நன்று' என்றும், 'இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு' என்றும், 'இன்னு செய்தாரை யொறுத்தல், அவர்நாண நன்னயம் செய்துவிடல்' என்றும் ஆசிரியர் கூறிய மொழிகள் உலகம் பொன்றினும் பொன்றுப் பொன் மொழிகள். 'இன்னு செய்தாரை ஒறுத்தல் வேண்டு' மென்பார் மதத்தைத் தழுவுவார் போல், அவரை யொறுக்குமாறுவது அவர்க்குக் கழிபெரு நலம் தரும் செயலைப் புரிதலென்பார், 'நன்னயம் செய்து' என்றும், நலம் செய்தோமென்றும் எண்ணாது, அவர் செய்த தீமையையும் அப்பொழுதே மறந்து விடுக என்பார் 'விடல்' என்றும் ஆசிரியர் கூறியுள்ளதன் நுட்பத்தையும், பெருவனப்பையும் நோக்குங்கால், அறிஞர் கூட்டம் பெருமகிழ்வெய்தும்.

நம்மாசிரியர் ஒரு பெருங்கவி. கவி, தான் புறவுலகிற் காணும் காட்சிகளின் நலங்களைத் தன் அகக்கண்ணிலும் கண்டு களிப்பெய்தி, அக்காட்சிகளை நலமுறத் தன்னுள்ளக்கிழியி னுருவெழுதிப் பார்த்து, அவ்வுருவத்தைத் தக்க சொற்களால் அழகு மினிமையுமுடைய சொற் படம் செய்து, கவியாக்கித் தருகிறான். அச் சொற்படம், அதனை யாக்கியோன் உள்ளத்திற் கண்ட உருவப் படத்தைப் பிறரும் பிறிதோர் காலத்தும் கண்டின்புறுமாறு செய்யுமாற்றலுடையதாய், இன்னிசைப் பிண்டமாய், கலைக்கொழுந்தாய், வனப்பிற் குறையுளாய், காலத்திற் கழியாததாய், இடத்தால் தடையுறுததாய் விளங்கும். அத்தகைய சொற்படங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வது நம் திருக்குறள்.

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று."

"இரப்ப னிரப்பாரை யெல்லாம் இறப்பிற்
கரப்பார் இரவன்மின் என்று."

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

"எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோற் கொண்கண்
பழிகாணேன் கண்ட விடத்து."

என்ற குறள்களில் ஆசிரியருடைய கவி நயங்களைக் காணலாம். நம் புலவர் பெருமானுடைய கவி நலன்களை இன்பத்துப்பாலிற் பல விடங்களிற் காணலாம்.

கவிமன்னர் கவிநயம் காட்ட விரும்பினால், பிறர் கவி யழகு காணுத சிறு செய்தியையும் தங்கள் கவிச் சுவைக்கு நிலைக்களமாக வாக்கிக் கவி புனைவர். இளங் குதலைச்சிறார் மழலைமொழியைப் பண்ணளரும் பலரும் கேட்டுளார். ஆனால் அம்மழலைமொழிபற்றி நம் தெய்வவருட் கவி, செய்யுள் செய்வதை நோக்குக.

"குழலினிது யாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்."

என்ற திருக்குறளைக் கேளாதாரில்லை. இசைக் கருவிகளுள் குழலும், யாழும் மிகச் சிறப்புடையன; அவையினும் இனியன தம் மக்கள் மழலை மொழிகள் என்றபொருளை நம்மாசிரியர் கூறியுள்ள சிறப்பியல்பை யாராய்க. இடையினம் மருவப்பெற்றுச் செய்யுள் செய்து இன்னிசையும், "கேளாதவர்.....இனிதென்ப" என எதிர்மறையிற் கூறிப் பொருள் நயமும் ஆசிரியர் விளைத்துளார்.

'என்னைமுன் னில்லன்மின்,' 'செல்லாமையுண்டேல் எனக்குரை' என்ற குறள்கள் நாடகத் தனியுரைகளாக விளங்குகின்றன.

நம் கவிமன்னர் நகைச்சுவையையும் காட்டியுள்ளார். ஆசிரியர் நகைச்சுவையுள் பெருநகச் சிரித்தற்கிடமில்லை; அளவே சிரித்தற்கும், முறுவலித்து நகுதற்கும் இடமுண்டு. நகைச்சுவை மணக்கும் கவிகளில் நச்சுத்தன்மை இல்லை.

"தேவரனையர் கயவர்"
"நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்"
"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்"

என்ற குறள்களில் வரும் நகைச்சுவை மிக வழகுடையது. நம் மாசிரியர் எடுத்தாளும் சொற்கள், அழகு வாய்ந்தன; இனிய வோசை யுடையன; பொருட் செறிவுடையன; நவின்றோர்க் கினிமை பயப்பன; குறுகிய வுருவத்தன. அத்தகைய சொற்களைத் தொகுத்துத் திருவள்ளுவர் குறள் வெண்பாக்கள் பாடுகின்றாராகலின் அவை மிக வழகுடையனவாய் விளங்குகின்றன. ஒரு முற

ளில் வரும் ஒரு சொல்லையேனும் அக்குறளின் பொருளழகையும், சொல்லின்பத்தையும் சிதைக்காது, அதன் இடத்தை விட்டுப் பெயர்க்கவோ, அகற்றவோ, அதற்குப் பதிலாக வேறொரு சொல் லைப் பெய்துரைக்கவோ யார்க்கும் முடியாது. தாஜ்மஹால் உருவ வுயர்மாடத்தின் சுவர்களிலுள்ள சலவைக் கற்களில் ஒன்றைக் கையாலசைத்தெடுக்க ஒருவர்க்கு முடியினும் முடியும்; நம் திரு வள்ளுவர் குறள் வெண்பாவிலுள்ள எச்சொல்லையும் அசைக்கவும் யார்க்கும் முடியாது. ஆதலால் **திரிபின்றியும் சிதைவின்றியும் விளங் கும் உலகநூல்களில் திருக்குறள் தலைநின்றது.** அங்ஙனம் அது விளக்குதலே தேவர் கலைவன்மைக்கும், கவி நலத்திற்கும் தக்க சான்று. இவ்வுண்மையை யறியாதார் சிலர் திருக்குறளருளுருவத்தைத் திருத்தியும் மாற்றியும் வடுப்படுத்த முற்பட்டு இடர்ப்பட்டனர். திருக்குறளில் காணப்படும் பாடபேதங்கள் மிகச் சிலவேயாம்.

திருவள்ளுவருடைய உவமையணிகள் பேரழகுடையன; என் றும் மாறுபுதுமையாம் நலமுடையன. கவிகள் சிலர் கூறும் உவமை முதற்கண் கேட்டக்கால் அழகுடையனவாய்க் காணப்படும்; பின் பலமுறை கேட்டக்கால் அவ்வழகினை யிழந்துநிற்கும். நம்மா சிரியருடைய உவமைகளைப் பலமுறை ஒருவர் படித்தாலும், அவை நவில்தொறும் நயம் பயப்பன; அவை அறிஞர்க் கென்றும் இன்ப மூட்டுவன.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை."

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

திருவள்ளுவரில் பிறிதுமொழிதல் முதலிய பொருளணிகளும் சொற்பொருட்பின்வருநிலை முதலிய சொல்லணிகளும் அழகு செய் கின்றன.

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

"நுனிக்கொம்ப ரேறினர் அஃதிறந் தாக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்."

"இலைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து."

என்ற குறள்களில் பிறிதுமொழிதலாகிய அணி பிறங்குவது காண்க.

'சொல்லுக சொல்லை' என்ற குறளிலும், 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற குறளிலும் சொற்பொருட்பின் வருநிலையணி வந்துள்ளது.

ஆசிரியர் தம் உள்ளத்தெழுந்த கருத்துக்களைக் குறள் வெண்பாவின் துணைகொண்டு வெளிப்படுத்துகிறார். குறள் வெண்பாவினுருவம் மிகக் குறுகியது. திருவள்ளுவர்க்கன்றி யேனையோருக்குத் தம் கருத்துக்களை வெளிப்படுத்தத் தகுந்த கருவியாக அதனை யமைத்துக்கொள்ள முடியாது. நம்மாசிரியர் அதனைத் தம்முள்ளத் தெழுந்த ஆழ்ந்தகன்ற நுண்பொருள்களைத் தாங்கியுய்க்கும் வனப்பு மிக்கினிய ஊர்திகளாக ஆக்கியுள்ளார்; அத்தகைய குறள்களைக் கவினலன்களா லலங்கரித்து மூள்ளார்.

அரசியலைப்பற்றி யாசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் தமிழ் நாகரிகத்திற்கு ஏற்றம் தருவன. அரசியற்செய்திக ளனைத்தையும் திருவள்ளுவர் அழகொழுகக் கூறியுள்ளார். நாட்டிற்கரசன் இன்றியமையாது வேண்டப்படுவான் என்னும் உண்மையை, 'ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே, வேந்தமை வில்லாத நாடு' என்ற குறளில் உணர்த்தியுள்ளார். நாட்டிற்கு அரசன் இன்றியமையாது வேண்டப்படுபவன் என்றும், அரசன் காவற் சாகாடுகைத்தற்கண் பெரியோரைத் துணைக்கொள்ளவேண்டுமென்றும், நாடு நாடாதற்கு நாடா வளமுடையதாய், தக்காரையும், தாழ்விலாச் செல்வரையும் தன்னகத்தே யுடையதாய், பசியும், பிணியும் சேரப்பெறுததாயிருக்க வேண்டுமென்றும் ஆசிரியர் கூறும் உண்மைகள் உன்னற்பாலன. திருக்குறளில் நுவலப்படும் அரசியற் கருத்துக்கள் பல உலகம் அமைதி பெற்று இன்பநலம் அடைதற்கு ஏற்ற முறைகளாயுள்ளன.

திருக்குறள், அறத்தினை உணரத்தலைப்படுவார்க்கு ஒரு பேரற நூல்; அரசியலை யறியவிரும்புவோர்க் கோர் அரசியல் நூல்; ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்; கவிச்சுவை விரும்புவார்க் கொரு காவியம்; காமச்சுவை விரும்புவார்க் கொரு காமநூல்; போரின்பம் விரும்புவார்க் கொரு போரின்ப நூல்; வாழ்க்கை நெறியறிய விரும்புவார்க் கொரு வாழ்க்கை வழிகாட்டுநூல்; அந்நூலைப் பயில்வார் பெரும்புலமையும் ஒப்பமும் பெறுவர்; அதன் நெறியின்கண் வாழ்பவரே 'வாழுநம்' என்னும் செருக்குடன் வாழ்ந்து, இம்மையில் இன்புற்றுப் பின் வீடுபேறடைவர்.

அதிகார அகரார்தி

[எண்கள் பக்கங்களைக் குறிக்கும்]

அடக்கமுடைமை	ச எ	ஒழுக்கமுடைமை	ரி0
அமைச்சு	உ ங கூ	ஒற்றுடல்	உ உ க
அரண்	உ எ கூ	கடவுள்வாழ்த்து	ங
அருளுடைமை	அ சு	கண்ணோட்டம்	உ க அ
அலரறிவுறுத்தல்	ச ங0	கண்விதுப்பழிதல்	ச ச ங
அவர்வயின்விதும்பல்	ச எ எ	கயமை	ச0 க
அவாவறுத்தல்	க ங ரி	கல்லாமை	க ரி ச
அவையஞ்சாமை	உ எ உ	கல்வி	க ரி0
அவையறிதல்	உ சூ கூ	கள்ளாமை	க0 க
அழுக்காறுமை	சு0	கள்ளுண்ணுமை	ங ச சு
அறன்வலியுறுத்தல்	க ரி	கனவுநிலையுரைத்தல்	ச ரி அ
அறிவுடைமை	க சூ க	காதற்சிறப்புரைத்தல்	ச உ உ
அன்புடைமை	உ கூ	காலமறிதல்	க அ ச
ஆள்வினையுடைமை	உ ங உ	குடிசெயல்வகை	ங அ ங
இகல்	ங உ0	குடிமை	ங ரி கூ
இடனறிதல்	க அ அ	குறிப்பறிதல் (பொருள்)	உ சு ரி
இடுக்கணழியாமை	உ ங சு	குறிப்பறிதல் (காமம்)	ச க0
இரவச்சம்	ங க அ	குறிப்பறிவுறுத்தல்	ச அ உ
இரவு	ங கூ ச	குற்றங்கடிதல்	க சு ரி
இல்வாழ்க்கை	க க	கூடாநட்பு	ங0 கூ
இறைமாட்சி	க ச ரு	கூடாவொழுக்கம்	கூ எ
இனியவைகூறல்	ங எ	கேள்வி	க ரி எ
இன்னாசெய்யாமை	க க ங	கொடுங்கோன்மை	உ க0
ஈகை	எ கூ	கொல்லாமை	க க எ
உட்பகை	ங ங க	சான்றாண்மை	ங சு கூ
உழவு	ங அ எ	சிற்றினஞ்சேராமை	க எ உ
உறுப்புநலனழிதல்	ச சு சு	சுற்றந்தழால்	க க கூ
ஊக்கமுடைமை	உ உ ரி	சூது	ங ரி0
ஊடலுவகை	ரி0 க	செங்கோன்மை	உ0 எ
ஊழ்	க ச0	செய்ந்நன்றியறிதல்	ச0
ஒப்புரவறிதல்	எ சு	சொல்வன்மை	உ ச ங

தகையணங்குறுத்தல்	சoசு
தவம்	கூந
தனிப்படர்மிகுதி	சநிக
தீநட்பு	நoசு
தீவினையச்சம்	எஉ
துறவு	கஉசு
தூது	உநிஅ
தெரிந்துசெயல்வகை	களசு
தெரிந்துதெளிதல்	ககஉ
தெரிந்துவினையாடல்	கஙசு
நடுவுநிலைமை	சஙந
நட்பாராய்தல்	உகக
நட்பு	உகநி
நலம்புனைந்துரைத்தல்	சகக
நல்குரவு	நகo
நன்றியில்செல்வம்	நஎசு
நாடு	உளசு
நாணுடைமை	நஃo
நாணுத்துறவுரைத்தல்	சஉசு
நிலையாமை	கஉக
நிறையழிதல்	சளஙந
நினைந்தவர்புலம்பல்	சநிச
நீத்தார்பெருமை	கக
நெஞ்சொடுகிளத்தல்	சளo
நெஞ்சொடுபுலத்தல்	சஅக
பகைத்திறந்தெரிதல்	நஉள
பகைமாட்சி	நஉச
பசப்புறுபருவரல்	சசள
படர்மெலிந்திரங்கல்	சஙக
படைச்செருக்கு	உகக
படைமாட்சி	உஅள
பண்புடைமை	நஎந
பயனிலசொல்லாமை	சுகு
பழைமை	நoஉ
பிரிவாற்றுமை	சஙநி
பிறனில்விழையாமை	நிந
புகழ்	அஉ
புணர்ச்சிமகிழ்தல்	சகச
புணர்ச்சிவிதும்பல்	சஅநி
புதல்வரைப்பெறுதல்	உசு
புலவி	சகுங
புலவிநுணுக்கம்	சகள
புலான்மறுத்தல்	கூo
புல்லறிவாண்மை	நகள
புறங்கூறுமை	சுசு
பெண்வழிச்சேறல்	நஙஅ
பெரியாரைத்துணைக் கோடல்	ககுஅ
பெரியாரைப்பிழையாமை	நஙச
பெருமை	நசுசு
பேதைமை	நகங
பொச்சாவாமை	உoங
பொருள்செயல்வகை	உஅங
பொழுதுகண்டிரங்கல்	சசுஉ
பொறையுடைமை	நிள
மடியின்மை	உஉக
மருந்து	நநிங
மன்னரைசேர்ந்தொழுகல்	உசுஉ
மானம்	நசுஉ
மெய்யுணர்தல்	கஙo
வரைவின்மகளிர்	நசஉ
வலியறிதல்	கஅo
வாய்மை	கoநி
வாழ்க்கைத்துணைநலம்	உங
வான்சிறப்பு	எ
விருந்தோம்பல்	நங
வினைசெயல்வகை	உநிச
வினைத்திட்பம்	உநிக
வினைத்தூய்மை	உசள
வெகுளாமை	கoக
வெஃகாமை	சுங
வெருவந்தசெய்யாமை	உகச

உ

திருச்சிற்றம்பலம்

திருக்குறள்

பரிமேலழகருரை

உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் மூன்று: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகை யாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன எனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ் வவற்றிற்கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென் றிருப்பார் அதுகாரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண் மேற் செல்வது. அது கடன்கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினுரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக வொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வுமிகுதி யானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப் புடைய ஒழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபா டுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலையால் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லு கின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவி யோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான் றொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கிய மினிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

க. அறத்துப்பால்

க. பாயிரவியல்

அதிகாரம் க—கடவுள் வாழ்த்து

[அஃதாவது, கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யெனவறிக; என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றுகிய உறுதிப் பொருட்கு அவற்றுன் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையுங் கூறலுற்றுர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினுரென வுணர்க.]

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன் பொருள்) எழுத்து எல்லாம் அகர முதல-எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை யுடையன; உலகு ஆதிபகவன் முதற்று - அதுபோல உலகம் ஆதிபகவனுகிய முதலை யுடைத்து.

இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வா னன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லா'மென்றுர். ஆதிபகவன் என்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு. உலகென்றது ஈண்டுயிர்க்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே' யென உலகின்மேல் வைத்துக் கூறினுர்; கூறினுரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது. (க)

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

(இ - ள்.) கற்றதனால் ஆய பயன் என் - எல்லா நூல்களாயுங் கற்றவர்க்கு அக்கல்வியறிவாலாய பயன் யாது? வால் அறிவன் நற்றாள் தொழாஅர் எனின் - மெய்யுணர்வினை யுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்.

எவனென்னும் வினாப்பெயர் என் னென்றாய், ஈண்டின்மை குறித்து நின்றது. கொல்லென்பது அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், 'நற்றா'ளென்றார். ஆகம வறிவிற்குப் பயன் அவன் றாளைத் தொழுது பிறவியறுத்த லென்பது இதனாற் கூறப் பட்டது. (உ)

ஊ. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ - ள்.) மலர் மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் - மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்; நிலமிசை நீடு வாழ்வார் - எல்லா வுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்.

அன்பானினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், 'ஏகினா'னென இறந்தகாலத்தாற் கூறினார்; என்னை? "வாராக் காலத்து நிகழுங் காலத்து, மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி, யிறந்த காலத் துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனார் புலவர்"* என்பதோத் தாகலின். இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட் கேற்றுவாருமுளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல். (ஊ)

எ. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ - ள்.) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு - ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலு மில்லாதவனடியைச் சேர்ந்தார்க்கு; யாண்டும் இடும்பை இல - எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா.

பிறவித் துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிற வுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமென

*தொல்காப்பியம், வினையியல் - சக.

மூவகையான் வருந்துன்பங்கள். அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டு* மின்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின. (சு)

ரு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ - ள்.) இருள் சேர் இருவினையும் சேரா - மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை யென்னு மிரண்டு வினையும் உளவாகா; இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு - இறைவனது மெய்மை சேர்ந்த புகழை விரும்பினரிடத்து.

இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை 'இரு'வென்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் 'இருவினையுஞ் சேரா'வென்றுங் கூறினர். இறைமைக் குணங்களிலராயினரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின், அவை முற்றவுமுடைய இறைவன் புகழே 'பொருள்சேர்புக'ழெனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல். (ரு)

சு. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ - ள்.) பொறி வாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் பொறிகளே வழியாகவுடைய ஐந்தாவினையும் அறுத்தானது; பொய் தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார்; நீடு வாழ்வார் - பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. 'ஒழுக்கநெறி' ஐந்தவித்தானைச் சொல்லப்பட்டமையின், ஆண்டை யாறனுருபு செய்யுட்கிழமைக்கண் வந்தது, "கபில ரது பாட்டு" என்பது போல. இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலுஞ் செய்தார் வீடு பெறுவரென்பது கூறப்பட்டது. (சு)

எ. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ - ள்.) தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்

*வேண்டுதலும் வேண்டாமையும்.

தார்க்கல்லது; மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கணிகழுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

"உறற்பால - தீண்டா விடுத லரிது."* என்றூற்போல ஈண்டு அருமை இன்மைமே னின்றது. தாள் சேராதார் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றுன் வருந் துன்பங்களுள் அழுந்துவரென்பதாம். (எ)

அ. அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(இ - ள்.) அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது; பிற ஆழி நீந்தல் அரிது - அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது.

அறம், பொருள், இன்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான். ஏனைப்பொருளுமின்பமும் பிறவெனப்பட்டன. பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவாகவுடையனாகலின், 'அறவாழி யந்தண' னென்றூர். 'அறவாழி' யென்பதனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென் றுரைப்பாரு முளர். அப்புணையைச் சேராதார் கரைகாணுது அவற்றுள்ளே யழுந்துவராகலின், 'நீந்தலரி' தென்றூர். இஃதேகதேச வுருவகம். (அ)

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளை வணங்காத் தலை.

(இ - ள்.) கோள் இல் பொறியின் குணம் இல - தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடையவல்ல; எண்குணத்தான் தாளை வணங்காத் தலை - எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள்.

எண்குணங்களாவன தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்று மூணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில்பமுடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. அணிமாவை முதலாகவுடையன வெனவும், கடையிலாவறிவை முதலாகவுடையன வெனவும் உரைப்பாரு முளர். காணுத

*நாலடியார். கூக

கண் முதலியனபோல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல் வைத்துக் கூறினர்; கூறினரேனும், இணம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனிலவென்பதூஉங் கொள்க. இவை மூன்று பாட்டானும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யா வழிப் படுங்குற்றங் கூறப்பட்டது. (கூ)

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

(இ - ள்.) இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - இறைவனடி யென்னும் பூணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; சேராதார் நீந்தார் - அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் ளழுந்துவர்.

காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், 'பிறவிப்பெருங்கட' லென்றார். சேர்ந்தாரென்பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதருமையு மாகிய இரண்டும் இதனுள் நியமிக்கப்பட்டன. (கo)

அதி. உ—வான்சிறப்பு

[அஃதாவது, அக்கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ - ள்.) வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான்; தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று - அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையை யுடைத்து.

நிற்ப வென்பது நின்றெனத் திரிந்து நின்றது. 'உலக' மென்றது ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது, பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலை பெறுத்துகின்ற வானை 'அமிழ்தமென் றுணர்க' வென்றார். (க)

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(இ - ள்.) துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி - உண்பார்க்கு நல்ல வுணவுகளே உளவாக்கி; துப்பார்க்குத் துப்பு ஆயதூஉம் மழை - அவற்றை யுண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்ப தூஉம் மழை.

தானு முணவாதலாவது தண்ணீரா யுண்ணப்படுதல். சிறப் புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக் கும் இஃதொக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கை யையும் நீக்குதலின், அவை வழங்கிவருதலுடையவாயின வென்ப தாம். (உ)

கஙு. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(இ - ள்.) விண் இன்று பொய்ப்பின் - மழை வேண்டுங் காலத் துப் பெய்யாது பொய்க்குமாயின்; விரி நீர் வியன் உலகத்துள்-கட லாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண்; நின்று உடற்றும் பசி - நிலைபெற்று உயிர்களே வருத்தும் பசி.

கடலுடைத்தாயினும் அதனுற் பயனில்லை யென்பார், 'விரி நீர் வியனுலகத்' தென்றார்; உணவின்மையின், பசியான் உயிர்கள் இறக்குமென்பதாம். (ஙு)

கச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ - ள்.) உழவர் ஏரின் உழாஅர் - உழவர் ஏரா னுழுதலைச் செய்யார்; புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் - மழையென் னும் வருவாய் தன் பயன் குன்றின்.

குன்றியக்கா லென்பது குறைந்துநின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு. (ச)

கஙி. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

(இ - ள்.) கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்; கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப் பதூஉம் - அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து மூன் கெடுத்

தாற்போல எடுப்பதூஉம்; எல்லாம் மழை - இவை யெல்லாம் வல்லது மழை.

'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. 'ஆங்'கென்பது மறு தலைத் தொழிலுவமத்தின்கண் வந்த உவமச்சொல். கேடுமாக்கமும் எய்துதற்குரியார் மக்களாதலின், 'கெட்டார்க்'கென்றார். எல்லா மென்றது அம்மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல் கடாம் பலவாதல் நோக்கி. 'வல்ல'தென்பது அவாய்நிலையான் வந்தது. மழையினதாற்றல் கூறியவாறு. (இ)

கசு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ - ள்.) விசும்பின் துளி வீழின் அல்லால் - மேகத்திற்றுளி வீழிற் காண்பதல்லது; மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது - வீழாதாயின், அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டல் அரிது.

'விசும்பு' ஆகுபெயர். 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது; ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம். (கூ)

கள. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ - ள்.) நெடுங் கடலும் தன் நீர்மை குன்றும் - அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும்; எழிலி தான் தடிந்து நல்காது ஆகி விடின் - மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர் கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலை; அது "கடல்குறை படுத்தநீர் கல் குறைபட வெறிந்து" [1] என்பதனுணும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டுமென்பதாம். இவை ஏழுபாட்டானும் உலக நடத்தற்கேதுவாதல் கூறப்பட்டது. (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ - ள்.) வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல் லாது - தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழ

1 பரிபாடல் - உ0.

வும் பூசையும் நடவாது; வானம் வறக்குமேல் - மழை பெய்யா தாயின்.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியமென்றாராகலின், 'செல்லா தென்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்திற் றுழ்வுதீரச் செய்வது நைமித்திக மாதலின், அதனை முற்கூறினர். (அ)

கக. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ - ள்.) வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா - அகன்ற வுலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உள வாகா; வானம் வழங்காதெனின் - மழை பெய்யாதாயின்.

தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மைபற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துற வறத்தின்மேலும் நின்றன. (கூ)

உo. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(இ - ள்.) யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின் - எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின்; ஒழுக்கு வான் இன்று அமையாது - அந்நீர் இடையறுதொழுகும் ஒழுக்கும் வானையின்றி யமையாது.

பொருளின்பங்களை உலகியலென்றார், அவை இம்மைக் கண்ணவாகலின். இடையறுதொழுகுதல் எக்காலத்தும் எவ் விடத்தும் உளதாகல். நீரின்றமையாதுலகென்பது எல்லாரானுந் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்றமையாமை தெளியப்படுமென்பார், 'நீரின்றமையா துலகெனி' னென்றார். இதனை நீரையின்றி யமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையை யின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாரு முளர். இவை மூன்று பாட்டானும் அறம்பொருளின்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது. (கo)

அதி. ஈ—நீத்தார்பெருமை

[அஃதாவது, முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களே உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராகலின், இது வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது.]

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ - ள்.) ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தாரது பெருமையை; விழுப்பத்து வேண்டும் பனுவல்துணிவு - விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு.

தமக்கு உரிய வொழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கு முரிய ஒழுக்கங்களே வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந் தேயும், பாவந் தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன்மாலையவாய இம்மை மறுமையின்பங்களி னுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அவை தோன்ற வீட்டின்க ணுசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றுகிய எனதென்பதும் அகப்பற்றுகிய யானென்பதும் விடும், ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்துவிடுதலெனக் கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனுன், ஒன்றையொன்றுறுவ்வாத சமய நூல்களெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவென்பது பெற்றும். செய்தாரது துணிவு பனுவன்மே லேற்றப்பட்டது. (க)

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ - ள்.) துறந்தார் பெருமை துணைக்கூறின் - இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணற் கூறியறியலுறின், அளவுபடாமையான்; வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று - இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணையாரென அறியலுற்றாற்போலும்.

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் 'கொண்' டெனத் திரிந்து நின்றது. (உ)

உங. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(இ - ள்.) இருமை வகை தெரிந்து - பிறப்பு வீடென்னும் இரண்டனது தன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து; ஈண்டு அறம் பூண்டார் பெருமை - அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப் பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே; உலகு பிறங் கிற்று - உலகின்க ணுயர்ந்தது.

"தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என் புழிப்போல 'இருமை' யென்றது ஈண்டு எண்ணின்கணின்றது. பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. இதனால், திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கதென்பது கூறப்பட்டது. (ங)

உச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

(இ - ள்.) உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப் பான் - திண்மையென்னுந் தோட்டியால் பொறிகளாகிய யானை யைந்தனையும் தத்தம் புலங்கண்மேற் செல்லாமற் காப்பான்; வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து - எல்லாநிலத்தினும் மிக்க தென்று சொல்லப்படும் வீட்டுநிலத்திற்கு ஓர் வித்தாம்.

இஃதேகதேசவுருவகம். திண்மை ஈண்டு அறிவின்மேற்று. அங்நிலத்திற் சென்று முளைத்தலின், 'வித்'தென்றார். ஈண்டுப் பிறந்திறந்து வரும் மகனல்லனென்பதாம். (சு)

உடு. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(இ - ள்.) ஐந்து அவித்தான் ஆற்றல் - புலன்களிற் செல் கின்ற அவாவைந்தனையும் அடக்கினனது வலிக்கு; அகல் விசும்பு ளார் கோமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற வானத்துள்ளா ரிறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று.

ஐந்து மென்னும் முற்றும்மையும் ஆற்றற்கென்னும் நான்க னுருபும் செய்யுள் விகாரத்தாற் றொக்கன. தான் ஐந்தவியாது சாப மெய்திநின்று அவித்தவனதாற்றல் உணர்த்தினமையின், 'இந் திரனே சாலுங் கரி' யென்றார். (எ)

உசு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ - ள்.) செயற்கரிய செய்வார் பெரியர் - ஒத்த பிறப்பின ராய மக்களுள் செய்தற்கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்; செயற்கரிய செய்கலாதார் சிறியர் - அவ்வெளி யவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்.

செயற்கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறி வழிகளால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோகவுறுப்புக்கள். நீரிற் பலகான் மூழ்கல்* முதலாய "நாலிரு வழக்கிற் ரூபதபக்க" மென்பாருமுளர்; அவை நியமத்துள்ளே அடங் கலின், நீத்தாரது பெருமைக்கேலாமை யறிக. (சு)

உஎ. சுவையொளி யூரோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ - ள்.) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை - சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமு மென்று சொல் லப்பட்ட தன்மாத்திரைக ளைந்தனது கூறுபாட்டையும்; தெரிவான் கட்டே உலகு - ஆராய்வா னறிவின்கண்ணதே உலகம்.

அவற்றின் கூறுபாடாவன பூதங்கட்கு முதலாகிய அவைதா மைந்தும், அவற்றின்கட் டோன்றிய அப்பூதங்க ளைந்தும், அவற் றின் கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்து மாக இருபதுமாம். 'வகைதெரிவான் கட் 'டென உடம்பொடு புணர்த் ததலை, தெரிகின்ற புருடனும் அவன் றெரிதற்கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும். தத்துவ மிருபத்தைந்தினுள் தெரிதலாவது, மூலப்பகுதி ஒன்றிற் ரூன்றிய தன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகா தெனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட்டோன்றிய அகங் காரமும் அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத் தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கட்டோன்றுவன வற்றை நோக்கப் பகுதியாதலு முடையவெனவும், அவற்றின்கட் டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினொன்றும் தங்கட்டோன்றுவன வின்மையின் விகுதியேயாவதல்லது பகுதியாகாவெனவும், புருடன் தானொன்றிற் ரூன்றுமையானும் தன்கட் டோன்றுவன வின்மையானும் இரண்டு

1 புறப்பொருள் வெண்பாமாலை, வாகைத்திணை ; கச

மல்ல னெனவும், சாங்கியநூலு ளோதியவாற்றுன் ஆராய்தல். இவ் விருபத்தைந்து மல்லது உலகெனப் பிறிதொன்றில்லை யென உலகினதுண்மையறிதலின், அவனறிவின்கண்ணு தாயிற்று. இவை நான்குபாட்டானும் பெருமைக்கேது ஐந்தவித்தலும் யோகப்பயிற்சியும் தத்துவ வுணர்வு மென்பது கூறப்பட்டது. (எ)

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ - ள்.) நிறைமொழி மாந்தர் பெருமை - நிறைந்த மொழி யினையுடைய துறந்தாரது பெருமையை; நிலத்து மறைமொழி காட்டிவிடும் - நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந் திரங்களே கண்கூடாகக் காட்டும்.

'நிறைமொழி' யென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறி னும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் பயனு ணுணர்த்துதல். (அ)

உக. குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(இ - ள்.) குணம் என்னும் குன்று ஏறி நின்ருர் வெகுளி - துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கணின்ற முனிவரது வெகுளி; கணமேயும் காத்தல் அரிது - தானுள்ளவளவு கணமேயாயினும், வெகுளப்பட்டா ராற் றடுத்தல் அரிது.

சலியாமையும் பெருமையும்பற்றிக் குணங்களைக் குன்றுக வுருவ கஞ் செய்தார். குணம் சாதியொருமை. அநாதியாய் வருகின்ற வாறுபற்றி ஒரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய் யுணர்வு அழிக்குமாகலின் 'கணமேயு' மென்றும், நிறைமொழி மாந்த ராகலின் 'காத்தலரி' தென்றுங் கூறினர். இவை யிரண்டு பாட் டானும் அவராணை கூறப்பட்டது. (க)

உ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(இ - ள்.) எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் எல்லாவுயிர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான்; அந்தணர் என்போர் அறவோர் - அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர்.

பூணுதல் விரதமாகக் கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத்தினையுடையாரென ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து. அவ்வாருயிரையுடையராயினும் உயிர்கண்மாட் டருளுடைய ரென்பது இதனாற் கூறப்பட்டது. (கo)

அதி. ச—அறன்வலியுறுத்தல்

[அஃதாவது, அம்முனிவரா னுணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளு மின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றினையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத் தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு, மறத்து வழிப் படூஉந் தோற்றம் போல"* என்றுர் பிறரும்.]

நக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு.

(இ - ள்.) சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந் தரும்; செல்வமும் ஈனும் - துறக்கம் முதலிய செல்வத்தையுந் தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

எல்லாப்பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு 'சிறப்' பெனப்பட்டது. ஆக்கந்தருவதனை 'ஆக்க' மென்றுர்: ஆக்கம் - மேன்மேலுயர்தல். ஈண்டுயிரென்றது மக்களுயிரை, சிறப்புஞ் செல்வமும் எய்துதற் குரியது அதுவேயாகலின். இதனால் அறத்தின்மிக்க வுறுதி இல்லை யென்பது கூறப்பட்டது. (க)

நஉ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(இ - ள்.) அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை.

---

1 புறநானூறு—நக.

'அறத்தினூஉங் காக்கமு மில்லை' யென மேற் சொல்லிய தனையே அனுவதித்தார், அதனாற் கேடுவருதல் கூறுதற்பயனேக்கி. இதனால் அது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது. (உ)

நக. ஒல்லும் வகையா றறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) ஒல்லும் வகையான் - தத்தமக்கியலுந் திறத்தான்; அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல் - அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்து மிடத்தா னெல்லாஞ் செய்க.

இயலுந்திறமாவது இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துற வறம் யாக்கைநிலைக் கேற்பவுஞ் செய்தல். ஓவாமை - இடை விடாமை. எய்துமிடமாவன மனம் வாக்குக் காய மென்பன. அவற்றுற் செய்யும் அறங்களாவன, முறையே, நற்சிந்தையும் நற் சொல்லும் நற்செயலு மெனவிவை. இதனான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (ந)

நச. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

(இ - ள்.) மனத்துக்கண் மாசு இலன் ஆதல் - அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன் மனத்தின்கட் குற்றமுடையனல்லனாக; அனைத்து அறன் - அவ்வளவே அறமாவது; பிற ஆகுல நீர - அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய.

'குற்றம்' தீயன சிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச் செய் கின்றன வாகலின்: 'ஆகுல நீர' வென்றார். மனத்துமாசுடையனை வழி அதன் வழியவாகிய மொழி மெய்களாற் செய்வன பயனில வென்பதூஉம் பெறப்பட்டது. (ச)

நடு. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(இ - ள்.) அழுக்காறு - பிறராக்கம் பொறுமையும்; அவா - புலன்கண்மேற் செல்கின்ற அவாவும்; வெகுளி - அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும்; இன்னாச்சொல் - அதுபற்றிவருங் கடுஞ்சொல்லுமாகிய; நான்கும் இழுக்கா இயன்றது அறம் - இந் நான்கினையுங் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது.

இதனுன் இவற்றோடு விரவியியன்றது அறமெனப்படாதென் பதூஉங் கொள்க. இவை யிரண்டுபோட்டானும் அறத்தினதியல்பு கூறப்பட்டது. (இ)

நசு. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(இ - ள்.) அன்று அறிவாம் என்னுது அறம் செய்க - யாம் இதுபொழு திளையமாகவின் இறக்குஞான்று செய்துமெனக் கரு தாது அறத்தினை நாடோறுஞ் செய்க; அது பொன்றுங்கால் பொன்றுத் துணை - அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்.

'மற்' றென்பது அசைநிலை. 'பொன்றுத் துணை' யென்றூர், செய்த வுடம்பழியவும் உயிரோடொன்றி ஏனையுடம்பினுஞ் சேற லின். இதனுன் இவ்வியல்பிற்றய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்கவென்பது கூறப்பட்டது. (சு)

நஎ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டோர்ந்தா னிடை.

(இ - ள்.) அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல்வேண்டா; சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக் காவு வானேடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னுனே உணரப் படும்.

பயனே 'ஆ' றென்றூர், பின்னதாகலின். 'என' வென்னுமெச் சத்தாற் சொல்லாகிய வாகமவளவையும், 'பொறுத்தானே டோர்ந்தா னிடை' யென்றதனுற் காட்சியளவையும் பெற்றும். உணரப்படு மென்பது சொல்லெச்சம். இதனுற் 'பொன்றுத் துணை' யாதல் தெளிவிக்கப்பட்டது. (எ)

நஅ. விழ்நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(இ - ள்.) வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் - செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின்; அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் வழியை வாராமலடைக்குங் கல்லாம்.

ஐவகைக் குற்றத்தான்வரும் இருவகை வினையு முள்ளதுணை யும், உயிர் யாக்கையோடுங் கூடிநின்று அவ்வினைகளதிருவகைப்

பயனையும் நுகருமாகலான், அந்நாண் முழுவதும் 'வாழ்நா'ளெனப் பட்டது. குற்றங்க ளேந்தாவன: அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன; இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேச மென்பர். வினை யிரண்டாவன நல்வினை, தீவினையென்பன. பயனிரண்டாவன இன்பந் துன்பமென்பன. இதனுன் அறம், வீடு பயக்குமென்பது கூறப்பட்டது. (அ)

நக. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ - ள்.) அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; மற்ற எல்லாம் புறத்த - அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன் பத்தினிடத்த; புகழும் இல - அதுவேயுமன்றிப் புகழுமுடைய வல்ல.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையா னோங்கு நடைய"* என்புழிப்போல. 'இன்பம்' காமநுகர்ச்சி: அஃதாமாறு காமத்துப்பாலின் மூதற்கட் சொல்லுதும்.† இன்பத் திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்து ளின்பமாய்த் தோன்றுமாயினும் பின் றுன்பமாய் விளைதலின், 'புறத்த' வென்றார். அறத்தோடு வாராதன புகழுமிலவெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றும். இதனுன் அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவரென்பது கூறப்பட்டது. (க)

சo. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(இ - ள்.) ஒருவற்குச் செயற்பாலது அறனே - ஒருவனுக் குச் செய்தற்பான்மையது நல்வினையே; உயற்பாலது பழியே - ஒழிதற்பான்மையது தீவினையே.

'ஒரு' மென்புனவிரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் 'பழி' யென்றார், இதனுற் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன. (கo)

பாயிரவியல் முற்றிற்று.

---

*புறநானூறு - உஉ. †"ஈண்டின்பமென்றது ஒருகாலத் தொரு பொருளான் ஐம்புலனுகர்தற் சிறப்புடையதாய காமவின்பத்தினை."

உ. இல்லறவியல்

அதி. டு—இல்வாழ்க்கை

[அஃதாவது, இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃ தறன்வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.]

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு நல்லாற்றி னின்ற துணை.

(இ - ள்.) இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுவான்; இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை - அறவியல்பினையுடைய ஏனை மூவர்க் கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்.

'இல்' லென்பது ஆகுபெயர். 'என்பா' னெனச் செயப்படு பொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார், ஆசாரியனிடத்தி னின்றோதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய வொழுக்கத்தானும், இல்லிலிட்டு வம்பத்தின்கட் டீயொடுசென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக்கத்தானும், முற்றத் துறந்த யோகவொழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னை யிருவரையும் பிறர்மதமேற்கொண்டு கூறினார். இவர், இவ்வொழுக்க நெறிகளை முடியச்செல்லுமளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய வுதவி அவ்வவ நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், 'நல்லாற்றினின்ற துணை' யென்றார். (க)

சஉ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பான் றுணை.

(இ - ள்.) துறந்தார்க்கும் - கள்ளகணைவராற் றுறக்கப் பட்டார்க்கும்; துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும்; இறந் தார்க்கும் - ஒருவருமின்றித் தன்பால்வந் திறந்தார்க்கும்; இல் வாழ்வான் என்பான் துணை - இல்வாழ்வானென்று சொல்லப்படு வான் துணை.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் கள்ளகணையின்று வேண்டு வன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்த

லானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் 'துணை' யென்றார். இவை யிரண்டு பாட்டானும் இன்னிலை எல்லாவுபகாரத்திற்கு முரித்தாதல் கூறப்பட்டது. (உ)

சஉ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்ருங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

(இ - ள்.) தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற - பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட; ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை - ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்.

பிதிரராவார் படைப்புக் காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், 'தென்புலத்தா' ரென்றார். 'தெய்வ' மென்றது சாதியொருமை. 'விருந்' தென்பது புதுமை; அஃது ஈண்டாகு பெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது; அவர் இருவகையர், பண்டறி வுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் - சுற்றத்தார். எல்லாவறங்களும் தானுளனுய் நின்று செய்ய வேண்டுதலின், தன்னே யோம்பலும் அறனுயிற்று. என்ற வென்பது விகாரமாயிற்று. 'ஆங்கு' அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடனுகலின் 'ஐம்புல' மென்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்ரு யிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலானென்பதறிக. (கூ)

சஊ. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(இ - ள்.) பழி அஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின் - பொருள் செய்யுங்கால் பாவத்தை யஞ்சி யீட்டி, அப்பொருளே இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலே ஒருவனில்வாழ்க்கை உடைத்தாயின்; வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் - அவன் வழி உலகத் தெஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை.

பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளுடையார் மேலும் பாவந் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சுமாகலின், 'பழியஞ்சி' யென்றார். வாழ்வான துடைமை வாழ்க்கையேலேற்றப்பட்டது. (எ)

சடு. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(இ - ள்.) இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - ஒருவ னில்வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினை யும், பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையு முடைத்தாயின்; அது பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.

நிரனிறை. இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சொன்றுகாவழி இல்லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று, அற னுடைமை பயனுயிற்று. இவை மூன்று பாட்டானும் இன்னிலேயி னின்றுன் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (டு)

சசு. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(இ - ள்.) இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியேசெலுத்துவனுயின்; புறத்தாற் றில் போஒய்ப் பெறுவது எவன் - அவன் அதற்குப் புறமாகிய நெறி யிற் போய்ப் பெறும் பயன் யாது?

'அறத்தாறென்பது' பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடை மையுமென மேற்சொல்லிய ஆறு. 'புறத்தாறு' இல்லேவிட்டு வனத் துச் செல்லு நிலே. அந்நிலேயின் இது பயனுடைத் தென்பார், 'போஒய்ப் பெறுவதெவ' னென்றுர். (சூ)

சஎ. இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலே.

(இ - ள்.) இல்வாழ்க்கை இயல்பினுன் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவ னென்று சொல்லப்படுவான்; முயல்வாருள் எல்லாம் தலே - புலன் களே விட முயல்வா ரெல்லாருள்ளும் மிக்கவன்.

முற்றத்துறந்தவர் விட்டமையின், 'முயல்வா' ரென்றது மூன்று நிலேயினின்றுரை, அந்நிலேதான் பலவகைப்படுதலின் 'எல்லா ருள்ளு' மெனவும், முயலாது வைத்துப் பயனெய்துதலின் 'தலே' யெனவுங் கூறினுர். (எ)

சஅ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னென்மை யுடைத்து.

(இ - ள்.) ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தவஞ் செய்வாரையுந் தத்தநெறியின்க ணெழுகப்பண்ணித் தானுந் தன்னறத்திற் றவறுத இல்வாழ்க்கை ; நோற்பாரின் நோன்மை உடைத்து - அத்தவஞ்செய்வார் நிலையினும் பொறை யுடைத்து.

பசி முதலிய விடையூறு நீக்கலின், 'ஆற்றினெழுக்கி' யென்றார். 'நோற்பா' ரென்பது ஆகுபெயர். நோற்பார் நிலைக்கு அவர் தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலைபோற் பிறரையுற்ற நோயும் பொறுத்தலின்மையின், 'நோற்பாரி னோன்மையுடைத்' தென்றார். (அ)

சக. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(இ - ள்.) அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகை யறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ; அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனுற் பழிக்கப் படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக நன்று.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது ; இதனுற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், 'அஃது' என்னுஞ் சுட்டுப் பெயர் அதன்மேனின்றது. 'பிறன்பழிப்ப' தென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமையுடைத்தாய வழியே, அவற்றை யொறுக்க வேண்டாது ஐம்புலவின்பங்களாரத்துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப்படுவ தென்றவாறுயிற்று. இவை நான்கு பாட்டானும் இன்னிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

சுO. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(இ - ள்.) வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் - இல்லறத்தோடு கூடி வாழுமியல்பினுல் வையத்தின்கண் வாழ்பவன் ; வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - வையத்தானேயெனினும் வானின்கணுறையுந் தேவருள் ஒருவனுக வைத்து நன்கு மதிக்கப் படும்.

பின்றேவனுய் அவ்வறப்பயனுகர்தல் ஒருதலையாகலின், 'தெய்வத்துள் வைக்கப்படு' மென்றார். இதனுன் இன்னிலையது மறுமைப்

பயன் கூறப்பட்டது. இம்மைப் பயன் புகழ்; அதனை யிறுதிக்கட்* கூறுப. (கo)

அதி. கூ—வாழ்க்கைத்துணைநலம்

[அஃதாவது, அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளதுநன்மை. அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.]

ருக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(இ - ள்.) மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண் டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கை களை யுடையளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையையுடையாள்; வாழ்க்கைத்துணை - அதற்குத் துணை.

நற்குணங்களாவன துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வரு வாய்க்குத் தக்க வாழ்க்கையாவது முதலையறிந்து அதற்கியைய அழித்தல். இதனுன் இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது. (க)

ருஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
வெனைமாட்சித் தாயினு மில்.

(இ - ள்.) மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத் திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவனில்லாளிடத் தில்லை யாயின்; வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல் - அவ்வில் வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமை யுடைத்தாயினும் அஃ துடைத்தன்று.

இல்லையென்றார், பயன்படாமையின். (உ)

ருங. இல்லதெ னில்லவண் மாண்பானு ளுள்ளதெ
னில்லவண் மாணக் கடை.

(இ - ள்.) இல்லவள் மாண்பு ஆனல் இல்லது என் - ஒருவ னுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையளாயினக்கால் இல்லாததியாது?

---

* அதி. உச - புகழ்.

இல்லவள் மாணாக்கடை உள்ளது என் - அவள் அன்ன ளல்லாக்கால் உள்ளதியாது ?

மாண்பெனக் குணத்தின்பெயர் குணிமேனின்றது. இவை யிரண்டுபாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்லவென்பது கூறப்பட்டது. (ஈ)

ஙிச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) பெண்ணின் பெருந்தக்க யா உள - ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்களியாவையுள ; கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவண்மாட்டுக் கற்பென்னுங் கலங்கா நிலைமை யுண்டாகப்பெறின் ?

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற வின்மையின், ' யாவுள ' வென்றார். இதனுற் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (ச)

ஙிங. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(இ - ள்.) தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுது எழுவாள் பெய் எனா - பிறதெய்வந் தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல; மழை பெய்யும்- மழை பெய்யும்.

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங் காலத்தா கலின், ' தொழுதெழுவா ' ளென்றார். ' தொழாநின் ' றென்பது ' தொழு ' தெனத் திரிந்து நின்றது. தெய்வந்தா னேவல் செய்யு மென்பதாம். இதனுற் கற்புடையவளதாற்றல் கூறப்பட்டது. (ஙி)

ஙிசு. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(இ - ள்.) தற்காத்துத் தற்கொண்டான் பேணி - கற்பினின் றும் வழுவாமற் றன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றுற் பேணி ; தகைசான்ற சொல் காத்து - இருவர் மாட் டும் நன்மை யமைந்த புகழ் நீங்காமற் காத்து, சோர்வு இலாள் பெண் - மேற் சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடியுடையாளே பெண்ணுவாள்.

தன்மாட்டுப் புகழாவது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி. இதனால் தற்புகழ்தற் சிறப்புக் கூறப் பட்டது. (சு)

ருள. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(இ - ள்.) மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் - மகளிரைத் தலைவர் சிறையாற் காக்குங் காவல் என்ன பயனைச் செய்யும்? நிறை காக்கும் காப்பே தலை - அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவல்.

'சிறை' மதிலும், வாயில் காவலும் முதலாயின. 'நிறை' நெஞ்சைக் கற்பு நெறியி னிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவலில் வழி எனைச் சிறைக்காவலாற் பயனில்லை யென்பார், 'நிறைகாக்குங் காப்பே தலை' யென்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனால் தற்காத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

ருஅ. பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(இ - ள்.) பெண்டிர் பெற்றுற் பெறின் - பெண்டிர், தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்; புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப் பெறுவர் - புத்தேளிர் வாழுமுலகின்கண் அவராற் பெருஞ்சிறப்பினைப் பெறுவர்.

'வழிபடுத' லென்பது சொல்லெச்சம். இதனால் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப் பட்டது. (அ)

ருக. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(இ - ள்.) புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழை விரும்பிய இல்லாளை யில்லாதார்க்கு; இகழ்வார் முன் ஏறு போல் பீடு நடை இல்லை - தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர் முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமித நடை இல்லை.

புரிந்த வென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது. பெருமித முடையானுக்குச் சிங்கவேறு நடையா னுவமமாகலின், 'ஏறுபோ' லென்றார். இதனால் தகைசான்ற சொற் காவாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (கூ)

சுo. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

(இ - ள்.) மங்கலம் என்ப மனைமாட்சி - ஒருவற்கு நன்மை யென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கை களே; அதன் நன்கலம் (என்ப) நன்மக்கட்பேறு - அவை தமக்கு நல்ல வணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலே.

அறிந்தோ ரென்பது எஞ்சி நின்றது. 'மற்று' அசைநிலே. இதனால் வாழ்க்கைத்துணைக்கு ஆவதோ ரணிநலங் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. (கo)

அதி. எ—புதல்வரைப்பெறுதல்*

[அஃதாவது, இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின், அக்கட னிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகார முறைமை மேலே பெறப்பட்டது.]

சுக. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ - ள்.) பெறுமவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள் அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற - அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளே; யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பதில்லை.

'அறிவ' தென்பது அறிதலைச் செய்வதென அத்தொழின்மே னின்றது. காரணமாகிய வறிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விமோதலான், அத்துணிவுபற்றி 'அறிந்த' வென இறந்த காலத்தாற் கூறினர். 'அறிவறிந்த' வென்றதனுன், 'மக்க' ளென்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது. இதனாற் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சுஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

---

* 'மக்கட்பேறு' என்பதும் பாடம்.

(இ - ள்.) எழுபிறப்பும் தீயவை தீண்டா - வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா ; பழி பிறங்காப் பண்பு உடை மக்கள் பெறின் - பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவாரையின்.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவரையி னென்றவாறுயிற்று. பிறப்பேழாவன : " ஊர்வ பதிலென்ரு மொன்பது மானுடம், நீர் பறவை நாற்காலோர் பப்பத்துச் - சீரிய, பந்தமாந் தேவர் பதிலுலயன் படைத்த, அந்தமில்சீர்த் தாவரமா லேந்து." தந்தைதாயர் தீவினை தேய்தற் பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தான தருமங் கட்கு அவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுங் காரணப் பெயர் காரியத்தின்மேனின்றது. (உ)

சுரு. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(இ - ள்.) தம் மக்கள் தம்பொருள் என்ப - தம் புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர் ; அவர் பொருள் தந்தம் வினையான் வரும் - அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான்.

' தந்தம் வினை ' யென்புழித் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை " முருகனது குறிஞ்சி நிலம் " என்புழிப்போல உரிமைப் பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களைப் ' பொரு ' ளென உபசரித்தார். இவை யிரண்டு பாட்டானும் நன்மக்கட் பெற்றூர் பெறும் மறுமைப்பயன் கூறப்பட்டது. (ரு)

சுசு. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(இ - ள்.) அமிழ்தினும் ஆற்ற இனிதே - சுவையான் அமிழ்தத்தினும் மிக வினிமை யுடைத்து ; தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் - தம் மக்களது சிறுகையா னளாவப் பட்ட சோறு.

சிறுகையானளாவலாவது " இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும், நெய்யுடை யடிசின் மெய்படை விதிர்த்தல்."* (சு)

சுரு. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

---

* புறநானூறு - கஅஅ.

(இ - ள்.) உடற்கு இன்பம் மக்கள் மெய்தீண்டல் - ஒருவன் மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கு இன்பம் அவர் சொல் கேட்டல் - செவிக்கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்.

'மற்று' வினைமாற்று. மக்களது மழலைச் சொல்லேயன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் 'சொல்' லென்றார். 'தீண்டல்', 'கேட்டல்' லென்னுங் காரணப் பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மேனின்றன. (இ)

சுசு. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(இ - ள்.) குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசையினிது யாழிசை யினிதென்று சொல்லுவர்; தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் - தம் புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர்.

'குழல்', 'யாழ்' என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொல் இனிதென்ப தென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச் சொல்லைச் சிறப்பு வகையானுங் கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது. (சு)

சுஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(இ - ள்.) தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது; அவையத்து முந்தி இருப்பச் செயல் - கற்றாரவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல்.

பொருளுடையனாக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மையாகாவென்பது கருத்து. இதனால் தந்தை கடன் கூறப்பட்டது. (எ)

சுஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ - ள்.) தம் மக்கள் அறிவுடைமை - தம்மக்களதறிவுடைமை; மா நிலத்து மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது - பெரிய நிலத்து மன்னுநின்ற உயிர்கட்கெல்லாந் தம்மினு மினிதாம்.

ஈண்டறி வென்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியறி வினை. 'மன்னுயி' ரென்றது ஈண்டறிவுடையார்மேனின்றது, அறிவுடைமை கண்டின்புறுதற்கு உரியார் அவராகலின். இதனால், தந்தையினும் அவையத்தா ருவப்பரென்பது கூறப்பட்டது. (அ)

உகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(இ - ள்.) ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான் பெற்றபொழுதை மகிழ்ச்சியினும் மிகமகிழும்; தன் மகனைச் சான் றோன் எனக் கேட்ட தாய் - தன் மகனைக் கல்விகேள்விகளா னிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்.

கவான்றின்கட் கண்ட பொதுவுவகையினுஞ் சால்புடைய னெனக்கேட்ட சிறப்புவகை பெரிதாகலின் 'பெரிதுவக்கு' மெனவும், பெண்ணியல்பாற் றூலைகவறியாமையிற் 'கேட்டதா' யெனவுங் கூறினர். 'அறிவுடையா' ரென்பது வருவிக்கப்பட்டது, சான்றோனென்றற்குரியர் அவராகலின். தாயுவகைக்களவின்மை யின், அஃதிதனுற் பிரித்துக் கூறப்பட்டது. (கூ)

உ0. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

(இ - ள்.) தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - கல்வியுடைய னாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறுவது; இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல் - தன்னறிவு மொழுக்கமுங் கண்டார் இவன்றந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவஞ்செய் தான்கொல்லோவென்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல்.

'சொல்' லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணந்தோன்ற நின்றது. நிகழ்த்துதல் - அங்ஙனஞ் சொல்லவொழுகல். இதனாற் புதல்வன் கடன் கூறப்பட்டது. (உ0)

அதி. அ—அன்புடைமை

[அஃதாவது, அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர் புடையார்கட் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர் கண்மேல் அருள்பிறத்தலும் அன்பின்பயனாகலின், இது வேண் டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லற

மினிது கடவாமை ; "அறவோர்க் களித்தலு மந்தண ரோம் பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னே"* என்பதனுனும் அதனுலருள் பிறத்தல், "அருளென்னு மன்பீன் குழவி"† என்பதனுனு மறிக.]

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச ரும்.

(இ - ள்.) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் பிறரறியாம லடைத்துவைக்குந் தாழுளதோ ? ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் - தம்மா லன்புசெய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாருமறியத் தூற்றும் ஆதலான்.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மே லேற்றப்பட்டது. காட்சியளவைக் கெய்தாதாயினும் அனுமானவளவையான் வெளிப்படுமென்பதாம். இதனுல் அன்பின துண்மை கூறப்பட்டது. (க)

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(இ - ள்.) அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானுந் தமக்கே யுரியர் ; அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்புடையார் அவற்றுனேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்.

ஆனுருபுகளும் பிரிநிலையேகாரமும் விகாரத்தாற் றொக்கன. 'என்பு' ஆகுபெயர். 'என்புமுரிய' ராதல், "தன்னகம் புக்க குறுநடைப் புறவின், றபுதி யஞ்சிச் சீரை புக்கோன்"‡ முதலாயினுர் கட் காண்க. (உ)

எங. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ - ள்.) ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு-பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை ; அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்.

* சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை - வரி எக-எங. † குறள்-எருள
‡ புறநானூறு - சங.

பிறப்பின தருமை பிறந்தவுயிர்மே லேற்றப்படடது. 'இயைந்த' வென்பது உபசார வழக்கு. 'வழக்கு' ஆகுபெயர். உடம்போடியைந் தல்லது அன்புசெய்ய லாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக் குப் பயன் அன்புடைமை யென்றுயிற்று. (கூ)

எச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(இ - ள்.) அன்பு ஆர்வமுடைமை ஈனும் - ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்தவன்பு அத்தன்மையாற் பிறர் மாட்டும் விருப்பமுடைமையைத் தரும்; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும் - அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகையும் நொதுமலுமில்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப் படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்.

'உடைமை' உடையனுந் தன்மை. யாவரு நண்பாதல் எல் லாப் பொருளு மெய்துதற்கேதுவாகலின், அதனை 'நாடாச் சிறப்' பென்றார். (ச)

எந. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

(இ - ள்.) அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடைய ராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்; வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுல கத்து இல்வாழ்க்கைக்கணின்று இன்ப நுகர்ந்து அதன்மேல் துறக் கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை.

'வழக்கு' ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங் கூடி யின்புற்றார் தாஞ்செய்த வேள்வித் தொழிலாற் றேவராய் ஆண்டுமின்புறுவராகலின், 'இன்புற்று ரெய் துஞ்சிறப்' பென்றார். தவத்தாற் றுன்புற்றெய்துந் துறக்க வின் பத்தினை ஈண்டு மின்புற்றெய்துதல் அன்பானன்றி யில்லையென் பதாம். (ஞ)

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(இ - ள்.) அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் - அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல்லுவர் சிலரறியார்; மறத்

திற்கும் அஃதே துணை - ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணை யாவது.

ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்து மற நிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேலன்புசெய்ய அது நீங்குமாகலின் மறத்தை நீக்குதற்குத் துணையா மென்பார், 'மறத்திற்குமஃதே துணை யென்றார்,' "துன்பத்திற் கியாரே துணையாவார்"* என்புழிப் போல. இவை யைந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப் பட்டது. (சு)

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(இ - ள்.) என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில் லாத வுடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும்; அன்பு இலதனை அறம் - அன்பில்லாதவுயிரை அறக்கடவுள்.

'என்பில' தென்றதனுன் உடம்பென்பதூஉம், 'அன்பில' தென்றதனுன் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எங்கு மொரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல் பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின் முன் 'அன்பில்லது' தன்னியல்பாற் கெடுமென்பதாம். அதனைக் 'காயு' மென வெயிலறங்களின்மே லேற்றினர், அவற்றிற்கும் அவ்வியல் புண்மையின். இவ்வாறு, "அல்லவை செய்தாற் கறங்கூற்றம்"† எனப் பிறருங் கூறினர். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(இ - ள்.) அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை - மனத் தின்க ணன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்; வன்பாற் கண் வற்றல் மரம் தளிர்த்தற்று - வன்பாலின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதாம். 'வன்பால்' வன்னிலம். 'வற்ற' லென்பது பால்விளங்கா வஃறிணைப் படர்க்கைப்பெயர். (அ)

எக. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(இ - ள்.) யாக்கையகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு - யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடையரல்லா

* திருக்குறள் - கஉகக. † நான்மணிக்கடிகை - அந.

தார்க்கு; புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் - ஏனைப்புறத்தின் கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ் செய்தற்கண் என்ன வுதவியைச் செய்யும்!

'புறத்துறுப்' பாவன இடனும், பொருளும், எவல் செய்வாரு முதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின், 'எவன் செய்யு' மென்றார். உறுப்புப்போறலின், 'உறுப்' பெனப் பட்டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பய னைச் செய்யும், மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க்கென் றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதுமியைபில்லாமை யறிக. (கூ)

அ०. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ - ள்.) அன்பின் வழியது உயிர்நிலை - அன்பு முதலாக அதன்வழிநின்ற உடம்பே உயிர்நின்ற வுடம்பாவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த - அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர் நின்றன வாகா.

இல்லறம் பயவாமையின் அன்னவாயின. இவை நான்கு பாட் டானும் அன்பில்வழிப் படுங்குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. கூ—விருந்தோம்பல்

[அஃதாவது, இருவகை விருந்தினரையும்* புறந்தருதல். தென் புலத் தார் முதலிய வைம்புலத்துள் முன்னைய விரண்டும் கட்புலனாகா தாரை நினைத்து செய்வனவாகலானும், பின்னைய விரண்டும் பிறர்க்கீத லன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப் புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன் புடை யிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன் புடைமையின் பின் வைக்கப்பட்டது.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவி யோடும் வனத்திற் செல்லாது இல்லின்கணிருந்து பொருள்களைப்

* குறள் - சஈ உரை.

போற்றி வாழுஞ் செய்கையெல்லாம்; விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு - விருந்தினரைப்பேணி அவர்க்குபகாரஞ் செய்தற் பொருட்டு.

எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள் செய்தலுங் காரணமாக வருந் துன்பச் செய்கைகட்கெல்லாம் பயனில்லை யென்பதாம். (க)

அஉ. **விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ - ள்.) சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும்; விருந்து புறத்ததாத் தான் உண்டல் - தன்னை நோக்கி வந்த விருந்து தன்னில்லின் புறத்ததாகத் தானே உண்டல்; வேண்டற்பாற்று அன்று - விரும்புதன் முறைமையுடைத் தன்று.

'சாவாமருந்து' சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந் தின்றியே ஒருகாற் றுணுண்டலைச் சாவாமருந்தென்பார் உளராயினும் அதனை யொழிகவென் றுரைப்பினு மமையும். இவை யிரண்டு பாட்டா னும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது. (உ)

அங. **வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை**
பருவந்து பாழ்படுத லின்று.

(இ - ள்.) வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை - தன்னை நோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானதில் வாழ்க்கை; பருவந்து பாழ்படுதல் இன்று - நல்குரவான் வருந்திக் கெடுதலில்லை.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனற் பொருடொலையாது மேன்மேற் கிளைக்கு மென்பதாம்.

அச. **அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து**
நல்விருந் தோம்புவா னில்.

(இ - ள்.) செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும்; முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் - முகமினியனுய்த் தக்க விருந்தினரைப் பேணுவான தில்லின் கண்.

மனமகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞான வொழுக்கங்களா னுயர்தல். பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறியவாறு. (ச)

அடி. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(இ - ள்.) விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்-முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு; வித்தும் இடல் வேண்டுமோ - வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா.

'கொல்' லென்பது அசைநிலை. தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்க ணெய்தும் பயன் கூறப்பட்டது. (நி)

அசு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(இ - ள்.) செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் - தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான்; வானத்தவர்க்கு நல்விருந்து - மறுபிறப்பிற் றேவனுய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம்.

'வருவிருந்' தென்பது இடவழுவமைதி. 'நல்விருந்து' எய்தாவிருந்து. இதனுன் மறுமைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது. (சு)

அள. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(இ - ள்.) வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்னவளவிற் றென்பதோ ரளவுடைத்தன்று; விருந்தின் றுணைத்துணை - அதற்கு அவ்விருந்தின் றகுதியளவே அளவு.

ஐம்பெருவேள்வியி னொன்றுகலின் வேள்வியென்றும், பொருளளவு "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறி தாப் போர்த்துவிடும்"* ஆகலின், 'இனைத் துணைத் தென்ப தொன்றில்லை' யென்றுங் கூறினர். இதனுன் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது. (எ)

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

* நாலடியார் - நஅ.

(இ - ள்.) பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப் பொருளை வருந்திக் காத்துப் பின் அதனை யிழந்து இது பொழுது யாம் பற்றுக்கோடிலமாயினேமென் றிரங்குவர்; விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - அப்பொருளான் விருந்தினரை யோம்பி வேள்விப் பயனை யெய்தும் பொறியிலாதார்.

"ஈட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன் பம்"* ஆகலின், 'பரிந்தோம்பி' யென்றார். 'வேள்வி' ஆகு பெயர். (அ)

அசு. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(இ - ள்.) உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை - உடைமைக்காலத் தின்மையாவது விருந்தோம்பலை யிகழும் பேதைமை; மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார் மாட்டு உளதாகாது, பேதையார்மாட்டே யுளதாம்.

'உடைமை' பொருளுடையனுந்தன்மை. பொருளாற் கொள்ளும் பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை 'இன்மை' யாக வுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலை யிகழிற் பொருள் நின்றவழியும் அதனற் பயனில்லை யென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் விருந்தோம்பாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (க)

கo. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(இ - ள்.) அனிச்சம் மோப்பக் குழையும் - அனிச்சப்பூ மோந்துழியன்றிக் குழையாது; விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்.

'அனிச்சம்' ஆகுபெயர். சேய்மைக்கட் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றூற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் செய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், தீண்டியவழி யல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லிய ரென்பதாம். இதனுன் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது. (கo)

---

* நாலடியார் - உ அo.

[அஃதாவது, மனத்தின்க ணுவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். இதுவும், விருந்தோம்பு வார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.]

கக. இன்சொலா லீர மளவிப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ - ள்.) இன்சொல் - இன்சொலாவன; ஈரம் அளவிப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் - அன்போடு கலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார்வாயிற் சொற்கள்.

'ஆல்' அசைநிலை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ் சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், 'செம்பொரு' ளெனப்பட்டது. இலவாஞ்சொல்லென வியையும். 'வாய்' என வேண்டாது கூறினர், தீயசொற் பயிலாவென்ப தறிவித்தற்கு. இதனுன் இன்சொற்கிலக்கணங் கூறப்பட்டது. (க)

கூஉ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின்.

(இ - ள்.) அகன் அமர்ந்து ஈதலின் நன்று - நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் நன்று; முகன் அமர்ந்து இன்சொலனுகப் பெறின் - கண்டபொழுதே முகமினிய னுய் அதனேடு இனியசொல்லையு முடையனுகப் பெறின்.

இன்முகத்தோடு கூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள் வயத்ததன்றித் தன்வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாகவின்மையின், அதனினுமரிதென்னுங் கருத்தான், 'இன் சொலனுகப் பெறி' னென்றார். (உ)

கூக. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தா
மின்சொ லினதே யறம்.

(இ - ள்.) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - கண்ட பொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி; அகத்தா ஆம் இன்சொலினதே அறம் - பின் நண்ணியவழி மனத்துடனுகிய இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம்.

'நோக்கி' யென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்து நின்ற முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது. ஈதலின் கண்ணதன்றென்றவாறு. இவை யிரண்டு பாட்டானும் இன்முகத்தோடுகூடிய வின்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது. (நு)

நூச. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

(இ - ள்.) யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்கு; துன்பு உறூஉம் துவ்வாமை இல்லாகும் - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம்.

நாமுதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமையுடைமையின், 'துவ்வாமை' யென்றார். 'யார்மாட்டு மின்புறூஉ மின் சொலவர்க்கு'ப் பகையும் கொதுமலுமின்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச்செல்வமும் மெய்துவரென்பது கருத்து. (சு)

நூடு. பணிவுடைய னின்சொல னுத் லொருவற்
. கணியல்ல மற்றுப் பிற.

(இ - ள்.) ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனுதல் - ஒருவனுக்கணியாவது தன்னைச் சூழப்படுவார்கட் டாழ்ச்சியுடையனாய் எல்லார்கண்ணும் இனியசொல்லையுமுடையனுதல்; பிற அல்ல - இவை யிரண்டுமன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா.

இன்சொலனுதற்கினமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினர். 'மற்று' அசைநிலை. வேற்றுமையுடைமையாற் 'பிற' வெனவும், இவைபோலப் பேரழகு செய்யாமையின் 'அல்ல' வெனவுங் கூறினர். இவை இரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயன் கூறப்பட்டது. (நி)

நூசு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(இ - ள்.) நல்லவை நாடி இனிய சொலின் - பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை மனத்தானாராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின்; அல்லவை தேய அறம் பெருகும் - அவனுக்குப் பாவங்கடேய அறம் வளரும்.

தேய்தல் தன் பகையாகிய அறம் வளர்தலிற் றனக்கு நிலை யின்றி மெலிதல். "தவத்தின்முன் னில்லாதாம் பாவம்"* என்ப தூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலும், கடியவாகச் சொல்லின், அறனுகாதென்பதாம். இதனுன் மறுமைப்பயன் கூறப் பட்டது. (சு)

க்எ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(இ - ள்.) நயன் ஈன்று நன்றி பயக்கும் - ஒருவனுக்கு இம் மைக்கு நீதியையு மூண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும்; பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் - பொருளாற்பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பி னீங்காத சொல்.

நீதி உலகத்தோடு பொருந்துதல். 'பண்' பென்பது ஈண்டதி காரத்தான் இனிமைமே னின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர் மைத்து. (எ)

கூஅ. சிறுமையு நீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(இ - ள்.) சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல்; மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும்.

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மை யின்பமாவது உலகம் தன்வயத்ததாகலான் நல்லனவெய்தி இன்புறு தல். இவை யிரண்டு பாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது. (அ)

கூகூ. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

(இ - ள்.) இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - பிறர் கூறும் இன்சொற் றனக்கின்பம் பயத்தலை அனுபவித்தறிகின்றவன்; வன்சொல் வழங்குவது எவன்கொல் - அது நிற்கப் பிறர்மாட்டு வன் சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருதி!

'இனி' தென்றது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொற் பிறர்க்கு மின்னுதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து. (கூ)

* நாலடியார் - ஞக.

கoo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(இ - ள்.) இனிய உளவாக இன்னாத கூறல் - அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களே ஒருவன் கூறுதல்; கனி இருப்பக் காய் கவர்ந்தற்று - இனிய கனிகளும் தன்கைக்க ணுளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களே நுகர்ந்ததனேடொக்கும்.

'கூற' லென்பதனைச் சொற்களென்பது பெற்றும். பொருளே விசேடித்து நின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ் சென்றன. 'இனிய கனிக' ளென்றது ஒளவையுண்ட நெல்லிக்கனி* போல அமிழ்தா வனவற்றை. 'இன்னாத காய்க' ளென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சாவனவற்றை. கடிஞ்சொற் சொல்லுதல் முடிவிற் றனக்கே யின்னாதென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் இன்னாத கூறலின் குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. கக—செய்ந்நன்றியறிதல்

[அஃதாவது, தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனி யவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்ந் நன்றி கோறலே யாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற் பொருட்டு, இஃதினியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.]

கoக. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(இ - ள்.) செய்யாமல் செய்த உதவிக்கு - தனக்கு முன்னே ருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த வுதவிக்கு; வையக மும் வானகமும் ஆற்றல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகுங் கைம் மாறுகக் கொடுத்தாலும் ஒத்தலரிது.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்த வுதவியென்று பாட மோதி, மறித்துதவமாட்டாமை யுள்ளவிடத்துச் செய்தவுதவி யென் றுரைப்பாருமுளர். (க)

கoஉ. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

*சிறுபாணாற்றுப்படை - வரி, கo - கக. புறநானூறு - கூக.

(இ - ள்.) காலத்தினுல் செய்த நன்றி - ஒருவனுக்கு இறுதி வந்த வெல்லைக்கண் ஒருவன் செய்த வுபகாரம்; சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது - தன்னை நோக்கச் சிறிதாயிருந்த தாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப்பெரிது.

அக்காலநோக்குவதல்லது பொருணோக்க லாகாதென்பதாம். 'காலத்தினு' லென்பது வேற்றுமை மயக்கம். (உ)

கூ. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(இ - ள்.) பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்த வுதவியாகிய ஈரமுடைமையை ஆராயின்; நன்மை கடலிற் பெரிது - அதனன்மை கடலினும் பெரிதாம்.

இவை மூன்று பாட்டானும் முறையே காரணமின்றிச் செய்த தூஉம், காலத்தினுற் செய்ததூஉம், பயன்றூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது. (ங)

கூ. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(இ - ள்.) தினைத்துணை நன்றி செயினும் - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானுயினும்; பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார் - அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார்.

'தினை' 'பனை' யென்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சிலவளவை. அக்கருத்தின் பயனுவது அங்ஙனங் கருதுவார்க்கு வரும் பயன். (ச)

கூ. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(இ - ள்.) உதவி உதவி வரைத்து அன்று - கைம்மாறுன உதவி காரணத்தானும் பொருளானும் காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று.

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், 'சால்பின்வரைத்' தென்றார். இவை யிரண்டு பாட்டா

னும் மூன்று மல்லாத வுதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது. (இ)

கo சு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(இ - ள்.) துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க - துன் பக்காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயிராத நட்பை விடாதொழிக; மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவொழுக்கங்களிற் குற்றமற் றாரது கேண்மையை மறவாதொழிக.

'கேண்மை' கேளாந் தன்மை. இம்மைக்குறுதி கூறுவார் மறுமைக் குறுதியும் உடன் கூறினர். (சு)

கo எ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(இ - ள்.) தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தங்களெய் திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம்மெழுவகைப் பிறப்பினும் நினைப் பர் நல்லோர்.

'எழுமை' யென்றது வினைப்பயன்றொடரும் எழுபிறப்பினை; அது வானோபதியுட்கண்டது. எழுவகைப்பிறப்பு மேலே யுரைத்தாம்.* விரைவு தோன்றத் 'துடைத்தவ' ரென்றார். நினைத்தலாவது துன் பந்துடைத்தலான் அவர்மாட்டுளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்புவிடலாகா தென்பது கூறப்பட்டது. (எ)

கo அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(இ - ள்.) நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று - அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது அறன்.

இரண்டும் ஒருவனுற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு. (அ)

கo கூ. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

* திருக்குறள் - சுஉ.

(இ - ள்.) கொன்று அன்ன இன்னுசெயினும் - தமக்கு முன் னொரு நன்மை செய்தவர் பின் கொன்றுலொத்த இன்னுதவற்றைச் செய்தாரர்யினும்; அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - அவையெல்லாம் அவர் செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம்.

நினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ் வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்கு மென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது. (க)

ககo. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ - ள்.) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - பெரிய வறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினீங்கும் வாயிலுண்டாம்; செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன் றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை.

பெரிய வறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை யறுத்தலும், மகளிர்கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்.* இதனுற் செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது. (கo)

அதி. கஉ—நடுவுநிலைமை

[அஃதாவது, பகை நொதுமல் நண்பென்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கு நிலைமை. இது, நன்றிசெய் தார் மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்கு, செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப்பட்டது.]

கஎக. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(இ - ள்.) தகுதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று; பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் - பகை நொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன் முறைமையை விடாதொழுகப்பெறின்.

---

* புறநானூறு - கூச.

தகுதியுடையதனைத் 'தகுதி' யென்றார். "ஊராளுநர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதியாளனென்புழி ஆளுருபு தோன்றுமென்பதன்பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத் தருமைதோன்ற நின்றது. இதனான் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது. (க)

ககஉ. செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(இ - ள்.) செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவுநிலைமையையுடையவனது செல்வம்; சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - பிறர்செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து.

விகாரத்தாற்றொக்க எச்சவும்மையான் இறக்குந் துணையும் அவன் றனக்கும் ஏமாப்புடைத் தென்பது பெற்றாம். அறத்தோடு வருதலின், அன்னதாயிற்று. தானிறந்துழி எஞ்சி நிற்பதாகலின், 'எச்ச' மென்றார். (உ)

ககஊ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(இ - ள்.) நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும்; நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழியவிடல் - நடுவுநிற்றலை யொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழியவிடுக.

நன்மை பயவாமையின், 'நன்றே தரினு' மென்றார். இகத்தலானென்பது இகந்தெனத் திரிந்துநின்றது. இவை யிரண்டு பாட்டானும் முறையே நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச்செல்வம் தீமை பயத்தலுங் கூறப்பட்டன. (ஊ)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(இ - ள்.) தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமை யிலரென்னும் விசேடம்; அவரவர் எச்சத்தால் காணப்படும் - அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்.

தக்கார்க் கெச்சமுண்டாதலும் தகவிலார்க் கில்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறி

யாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப் பட்டது. (அ)

கசகு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ - ள்.) கேடும் பெருக்கமும் இல் அல்ல - தீவினையாற் கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ் வாற்றை யறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது.

அவை* காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒருதலைக்க ணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை யழகுசெய்தலின், 'சான்றோர்க்கணி' யென்றார். (இ)

கசசு. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(இ - ள்.) தன் னெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலை யொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின்; யான் கெடுவல் என்பது அறிக - அந்நினைவ யான் கெடக் கடவே னென்றுணரும் உற்பாதமாக அறிக.

நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின், 'செயி'னென் றார். (சு)

கசஎ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

(இ - ள்.) நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாக நின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை; கெடுவாக வையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர்.

'கெடு' வென்பது முதனிலைத் தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாராவென்பதூஉம், கோடுதல் கேட்டிற் கேதுவாமென்பதூஉம், கோடாதவன் றாழ்வு கேடன்றென்பதூஉம் கூறப்பட்டன. (எ)

* கேடும் பெருக்கமும்.

ககஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ - ள்.) சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - முன்னே தான் சமனுக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல; அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம்.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும், உவமைக்கண்ணும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தொடைவிடை*களாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும், 'ஒருபாற் கோடாமை' யாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பென்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களானமைதல் இருவழியும் ஏற்பனகொள்க. (அ)

ககக. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

(இ - ள்.) செப்பம் சொல் கோட்டம் இல்லது - நடுவுநிலைமையாவது சொல்லின்கட் கோடுதலில்லாததாம்; உள் கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின் - அஃதன்னதாவது மனத்தின்கட் கோட்டமின்மையைத் திண்ணிதாகப் பெறின்.

'சொல்' ஊழான் அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையா மெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமை யன்றென்பது பெறப்பட்டது. (கூ)

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(இ - ள்.) பிறவுந் தமபோல் பேணிச் செயின் - பிறர் பொருளையுந் தம்பொருள்போலப் பேணிச் செய்யின்; வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகஞ் செய்வார்க்கு நன்முய வாணிகமாம்.

'பிறவுந் தமபோற் செய்க' வாவது கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டு மூன்ற

* புறப்பொருள் வெண்பாமாலை. வாகை - கூ.

னுள், முன்னையவிரண்டும் அவையத்தாரை நோக்கின, எனையது வாணிகரை நோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின். (க0)

அதி. கஉ—அடக்கமுடைமை

[அஃதாவது, மெய், மொழி, மனங்கள் தீ நெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனுதல். அஃது எதிலார் குற்றம்போற் றன் குற்றமுங் காணும்* நடுவு நிலைமை யுடையாற்காதலின், இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.]

கஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(இ - ள்.) அடக்கம் அமாருள் உய்க்கும் - ஒருவனை அடக்க மாகிய வறம் பின் றேவருலகத் துய்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின் கட் செலுத்தும்.

'இரு'ளென்பது ஓர் நரகவிசேடம். "எல்லாம், பொருளிற் பிறந்துவிடும்"† என்றுற்போல 'உய்த்துவிடு' மென்பது ஒரு சொல் லாய் நின்றது. (க)

கஉஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினுங் கில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - உயிர் கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை ; அடக்கத்தைப் பொருளாக் காக்க - ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமற் காக்க.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மே னின்றது, அறிந்தடங்கிப் பயன்கொள்வது அதுவே யாகலின். (உ)

கஉங. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(இ - ள்.) அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின் - அடங் குதலை மக்கு அறிவாவதென்றறிந்து நெறியானே ஒருவன் அடங்

*குறன் - கக0. † நான்மணிக்கடிகை - ஏ.

கப்பெறின் ; செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோ ரானறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும்.

இல்வாழ்வானுக்கு அடங்கு நெறியாவது மெய்ம்மூதன் மூன் றும் தன்வயத்தவாதல். (சு)

சஉச. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(இ - ள்.) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - இல் வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவ னது உயர்ச்சி ; மலையினும் மாணப்பெரிது - மலையினுயர்ச்சியினும் மிகப் பெரிது.

'திரியா தடங்கு'தல் பொறிகளாற் புலன்களை நுகராநின்றே அடங்குதல். 'மலை' ஆகுபெயர். (ச)

சஉடு. எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ - ள்.) பணிதல் எல்லார்க்கும் நன்றும் - பெருமிதமின்றி யடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும்; அவருள்ளும் செல் வர்க்கே செல்வந் தகைத்து - அவ்வெல்லாருள்ளுஞ் செல்வமுடை யார்க்கே வேறொரு செல்வமாஞ் சிறப்பினையுடைத்து.

பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்புமுடையார் அஃதின்றி அவை தம்மானே யடங்கியவழி அவ்வடக்கஞ் சிறந்து காட்டாதாகலின், 'செல்வர்க்கே செல்வந் தகைத்' தென்றார். செல் வத் தகைத்தென்பது மெலிந்து நின்றது. பொதுவென்பாரையு மூடம்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு. இவை யெந்துபாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (டு)

கஉசு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையு மடக்க வல்லனாயின்; எழுமையும் ஏமாப்பு உடைத்து - அவ்வன்மை அவ னுக்கு எழுபிறப்பின் கண்ணும் அரணுதலை யுடைத்து.

ஆமை ஐந்துறுப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாம லடக்கவேண்டுமென்பார் 'ஆமைபோ'லென்றார். ஒருமைக்கட் செய்த வினையின் பயன் எழுமை

யுந் தொடருமென்பது இதனானறிக. இதனுன் மெய்யடக்கங் கூறப் பட்டது. (சு)

கஉஎ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ - ள்.) யா காவா ராயினும் நா காக்க - தம்மாற் காக்கப்படு வனவெல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றினையுங் காக்க; காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டுச் சோகாப்பர் - அதனைக் காவாராயிற் சொற்குற்றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவர்.

'யா' வென்பது அஃறிணைப் பன்மை விளிப்பெயர். அஃது ஈண்டு எஞ்சாமை யுணர நின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக் கது. சொற்குற்றம் சொல்லின்கட் டோன்றுங் குற்றம். அல்லாப்பர், செம்மாப்பர் என்பனபோலச் 'சோகாப்ப'ரென்பது ஒருசொல். (எ)

கஉஅ. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

(இ - ள்.) தீச்சொற் பொருட்பயன் ஒன்ருனும் உண்டாயின் - தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந் துன்ப மொன்ருயினும் ஒருவன்பக்க லுண்டாவதாயின்; நன்று ஆகாதாகி விடும் - அவனுக்குப் பிறவறங்களானுண்டான நன்மை தீதாய்விடும்.

தீய சொல்லாவன தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் லென்பன. ஒருவன் நல்லவாகச் சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்ருயினுந் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்குண்டாவ தாயி னென்றுரைப்பாருமுளர்.* (அ)

கஉக. தீயினுற் சுட்டபு ணுள்ளா றுமாருதே
நாவினுற் சுட்ட வடு.

(இ - ள்.) தீயினுல் சுட்ட புண் உள் ஆறும் - ஒருவனையொரு வன் தீயினுற் சுட்ட புண் மெய்க்கட்கிடப்பினும் மனத்தின்கண் அப் பொழுதே யாறும்; நாவினுல் சுட்ட வடு ஆறாது - அவ்வாறன்றி வெவ் வுரையுடைய நாவினுற் சுட்ட வடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினுற் சுட்டதனைப் 'புண்' ணென்றும், ஆறாது கிடத்தலால் நாவினுற் சுட்டதனை 'வடு'வென்றுங் கூறினர். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற்

* மணக்குடவர்.

றீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது குறிப்பான் வந்த வேற்றுமையணியலங்காரம். இவை மூன்று பாட்டானும் மொழியடக்கங் கூறப்பட்டது. (கூ)

கஙo. **கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி**
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(இ - ள்.) கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி-மனத்தின்கண் வெகுளி தோன்றுமற் காத்துக் கல்வியுடையனாயடங்குதலை வல்லவனது செவ்வியை; அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து-அறக்கடவுள் பாராநிற்கும் அவனை யடையும் நெறியின்கட் சென்று.

அடங்குதல் மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். 'செவ்வி' தன்குறை கூறுதற்கேற்ற மன மொழி முகங்கள் இனியனுங் காலம். இப்பெற்றியானே அறந் தானே சென்றடையுமென்பதாம். இதனான் மனவடக்கங் கூறப்பட்டது. (கo)

அதி. கச—ஒழுக்கமுடைமை

[அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமோதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல். இது, மெய்ம்முதலிய அடங்கினார்க்கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.]

கஙக. **ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க**
முயிரினு மோம்பப் படும்.

(இ - ள்.) ஒழுக்கம் விழுப்பம் தரலான்-ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலான்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் - அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந் தருதலின், பொதுப்படக் கூறினார். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்பந் தருவதாயது 'ஒழுக்க' மென்பது பெற்றும். உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந்தாராமையின், 'உயிரினுமோம்பப்படு' மென்றார். (க)

கஙஉ. **பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்**
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க - ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமற் பேணி வருந்தியுங் காக்க; தெரிந்து ஓம்பித்

தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையு மாராய்ந்து இவற் றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை யொருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமே யாகலான்.

'பரிந்து' மென்னு மும்மை விகாரத்தாற்றொக்கது. இவை யிரண்டு பாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

கஙஙு. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(இ - ள்.) ஒழுக்கமுடைமை குடிமை - எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அவ்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத் திற் றாழ்ந்த வருணமாய்விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கமுடை யராக உயர்குலத்தாராவாகலின் குடிமையாமென்றும், உயர்ந்த வரு ணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்த ராவாகலின் 'இழிந்த பிறப்பாய் விடு' மென்றுங் கூறினர். உள் வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்விரைவுபற்றி அவ்வேது வாகிய வினைகளே பயனுக வோதப்பட்டன. (ங)

கஙச. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(இ - ள்.) ஓத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தானெனினும் அவ்வருணத்கெடாமையிற் பின்னும் அஃதோதிக் கொளலாம்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தண னது உயர்ந்த வருணம் தன்னொழுக்கங் குன்றக் கெடும்.

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகா தென்னுங் கருத் தான் 'மறப்பினு' மென்றார். சிறப்புடைவருணத்திற்கு மொழிந்தமை யின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும். (ச)

கஙஞ. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(இ - ள்.) அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - அழுக்கா றுடையான் மாட்டு ஆக்கமில்லாதாற்போல; ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கமில்லாதவன் மாட்டும் உயர்ச்சி யில்லை.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென்பது பெற்றும்; என்னை ? "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற"* மும் நல்கூர்தலின். 'உயர்வு' உயர்குலமாதல். (இ)

கஉசு. ஒழுக்கத்தி னெல்கா குரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கருமை நோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார்; இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - அவ்விழுக்கத்தால் தமக்கிழிகுலமாகிய குற்ற மூண்டாமாற்றை அறிந்து.

ஒழுக்கத்திற் சுருக்கம் அதனையுடையார்மே லேற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, 'உரவோ' ரென்றார். (சு)

கஉள. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

(இ - ள்.) ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டையெய்துவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனினின் றிழுக்குதலானே தாம் எய்துதற்குரித் தல்லாத பழியை யெய்துவர்.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், 'எய்தாப்பழி' யெய்துவ ரென்றார். இவை யைந்துபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப்படுங் குற்றமுங் கூறப்பட்டன. (எ)

கஉஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(இ - ள்.) நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும்.

'நன்றிக்கு வித்தாகு' மென்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும் 'இடும்பைதரு' மென்றதனால் நல்லொழுக்கம் இன்பந் தருதலும் பெற்றும், ஒன்று நின்றே வேனையதை முடிக்குமாகலின், இதனாற் பின்னிலவு கூறப்பட்டது. (அ)

* குறள் - உசுசு.

கருக. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(இ - ள்.) வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள்; ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா - ஒழுக்கமுடையவர்க்கு முடியா.

தீயசொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்மொழிகளனவும், வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற்மொழில் பலவாயின. 'சொலல்' சாதியொருமை. சொலலெனவே அமைந்திருக்க 'வாயா' லென வேண்டாது கூறினர், நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரிய மென்ப. (கூ)

கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(இ - ள்.) உலகத்தோடு ஒட்டஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார்; பல கற்றும் அறிவிலாதார் - பல நூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார்.

'உலகத்தோடு பொருந்த வொழுகுத'லாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனவொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டுவருதலான் அவையுமடங்க 'உலகத்தோடொட்ட' வென்றும், கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் 'பலகற்றுமறிவிலாதா' ரென்றுங் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவையிரண்டு பாட்டானும் சொல்லானுஞ் செயலானும் வருமொழுக்கங்களெல்லாம் ஒருவாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன. (கo)

அதி. கரு—பிறனில்விழையாமை

[அஃதாவது, காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வதாகலின் ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.]

கசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(இ - ள்.) பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை - பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழுகு

கின்ற அறியாமை ; ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல் - ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார் மாட்டில்லை.

'பிறன்பொருள்' பிறனுடைமை. 'அறம் பொரு' ளென்பன ஆகு பெயர். செவ்வெண்ணின் முறுகை தொக்குநின்றது. இன்பமொன் றையே நோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீய* மென்று கூறுவராகலின், 'அறம் பொருள் கண்டார்கணில்' லென்றார். எனவே, அப்பேதைமை யுடையார்மாட்டு அறமும் பொரு ளும் இல்லையென்பது பெறப்பட்டது. (க)

கசஉ. அறன்கடை நின்ற தருளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(இ - ள்.) அறன்கடை நின்றருள் எல்லாம் - காமங் காரண மாகப் பாவத்தின்கண் நின்றெல்லாருள்ளும்; பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார்போலப் பேதையாரில்லை.

அறத்தினீக்கப்பட்டமையின், 'அறன்கடை' யென்றார். அறன் கடை நின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின் மகளிரோடும் இழி குலமகளிரோடுங்கூடி இன்பநுகர்வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப் 'பிறன்கடை நின்றார்' அச்சத்தால் தாங் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், 'பேதையா ரில்' லென்றார்; எனவே, இன்பமுமில்லை யென்பது பெறப்பட்டது. (உ)

கசஊ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(இ - ள்.) தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை ஐயுறாதாரில்லாள்கண்ணே பாவஞ் செய்தலை விரும்பியொழுகுவார்; விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற-உயிருடையவரேனும், இறந்தாரே யாவர்.

அறம் பொருளின்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின், 'விளிந்தாரின் வேறல்ல' ரென்றும், அவர் 'தீமைபுரிந்தொழுகு' வது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் 'தெளிந்தாரில்' லென்றுங் கூறினார். (ஙு)

கசக. எனைத்துணைய ராயினு மென்னந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

*பரகீயம் - பிறர்க்குரியது.

(இ - ள்.) எனைத்துணையர் ஆயினும் என்னும் - எத்துணைப் பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும்; தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் - காமமயக்கத்தால் தினையளவுந் தம் பிழையை யோராது பிறனுடைய இல்லின்கட் புகுதல்!

இந்திரன்போல எல்லாப் பெருமையு மிழந்து சிறுமையெய்தல் நோக்கி, 'என்னை' மென்றூர். "என்னீ ரறியாதீர் போல விவை கூறி, னின்னீர வல்ல நெடுந்தகாய்"* என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. 'தேரான்பிற' னென்பதனைத் தம்மை ஐயுறுத பிறனென் றுரைப்பாருமுளர். (சு)

கசஞ. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(இ - ள்.) எளிது என இல் இறப்பான் - எய்துதலெளிதென்று கருதிப் பின்விளைவு கருதாது பிறனில்லின்க ணிறப்பான்; விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும் - மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்கும் குடிப்பழியினை யெய்தும்.

இல்லின்கணிறத்தல் இல்லாள்கண் நெறிகடந்து சேறல். (ரு)

கசசு. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ - ள்.) இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறி கடந்து செல்வானிடத்து; பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் - பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியு மென்னும் இந் நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

எனவே இருமையுமிழத்தல் பெற்றும். இவை யாறுபாட்டானும் பிறனில் விழைவான்கட் குற்றங் கூறப்பட்டது. (சு)

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(இ - ள்.) அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அறனெனிய இயல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்; பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக் குரிமைபூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பாதவன்.

* கலித்தொகை, பாலைக்கலி - ரு.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ்செய் வானெனப்படுவான் அவனே யென்பதாம். (எ)

கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனென்றே ரு வான்ற வொழுக்கு.

(இ - ள்.) பிறன்மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனை யாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை; சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனுமாம், நிரம்பிய வொழுக்கமுமாம்.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகை யாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' யென்றார். 'ஒன்றே' வென்பது எண்ணிடைச் சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம். (அ)

கசக. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(இ - ள்.) நாம நீர் வைப்பின் - அச்சந் தருங் கடலாற் சூழப் பட்ட உலகத்து; நலக்கு உரியார் யார் எனின் - எல்லா நன்மை களும் எய்துதற்குரியார் யாவரெனின்; பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறரெருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றுள் அளவிடப் படாமையின், 'நாமநீ' ரென்றார். நலத்திற்கென்பது 'நலக்' கெனக் குறைந்து நின்றது. உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது.* இருமை யினும் நன்மையெய்துவ ரென்பதாம். (கூ)

கரு0. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(இ - ள்.) அறன் வரையான் அல்ல செயினும் - ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்; பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று - அவனுக்குப் பிற னெல்லைக்கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமை யுண்டாயின், அது நன்று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறனில் விழையாதான்கட் குணங் கூறப்பட்டது. (கo)

*நாம் என்றது 'நாம' எனத் திரிந்து நின்றது.

அதி. ஙசு—பொறையுடைமை

[அஃதாவது, காரணம்பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலேயுடையராதல். நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்க வேண்டு மென்றற்கு, இது பிறவில் விழையாமையின் பின் வைக்கப்பட்டது.]

ஙரிக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் தலை.

(இ - ள்.) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னை யகழ்வாரை வீழாமற் றாங்கு நிலம்போல; தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாயவறம்.

இகழ்தல் மிகையாயின செய்தலும், சொல்லுதலும். (க)

ஙரிஉ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(இ - ள்.) என்றும் இறப்பினைப் பொறுத்தல் - பொறை நன்றாகலால், தாமொறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனினும் நன்று - அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று.

மிகை யென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலே 'அதனினு நன்' றென்றார். (உ)

ஙரிங. *இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(இ - ள்.) இன்மையுள் இன்மை விருந்து ஓரால்-ஒருவனுக்கு வறுமையுள் வைத்து வறுமையாவது விருந்தினரை யேற்றுக்கொள்ளாது நீக்குதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அது போல வன்மையுள் வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகை செய்தாரைப் பொறுத்தல்.

இஃதெடுத்துக் காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமை யாகாதவாறுபோல, 'மடவார்ப்பொறை' யும் மென்மையாகாதே வன்மையாமென்பது கருத்து. (ங)

---

* 'உடைமையு ளின்மை விருந்தோம்பல்'—குறள் அக.

கநிசு. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ - ள்.) நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின்; பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - அவனாற் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும்.

பொறையுடையாற் கல்லது சார்பில்லை யென்பதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

கநிஙி. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ - ள்.) ஒறுத்தாரை ஒன்றாக வையார் - பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறாது அவனை யொறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார்; பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர் - அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர்.

ஒறுத்தவர்தாமும் அத்தீங்கு செய்தவனை டொத்தலின், 'ஒன்றாக வையா' ரென்றார். பொதிந்து வைத்தல் சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல். (ங)

கநிசு. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(இ - ள்.) ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் - தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை யின்பமே; பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் - அதனைப் பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம்.

'ஒருநாளை யின்பம்' அந்நாளொன்றினும் கருதியது முடித்தே மனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடை யுலகென்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது. (சு)

கநிஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(இ - ள்.) திறன் அல்ல தன் பிறர் செய்யினும் - செய்யத் தகாத கொடியவற்றைத் தன்கட் பிறர் செய்தாராயினும்; நோ நொந்து

*நாலடியார் - நுஅ.

அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால் வருந் துன்பத் திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யா திருத்தல் ஒருவனுக்கு நன்று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை, யிரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்"* என்று பரிதல். (எ)

கருஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்.

(இ - ள்.) மிகுதியான் மிக்கவை செய்தாரை - மனச்செருக் காற் றங்கட் டீயவற்றைச் செய்தாரை; தாம் தம் தகுதியான் வென்றுவிடல் - தாம் தம்மூடைய பொறையான் வென்றுவிடுக.

தாமும் அவர்கட் டீயவற்றைச் செய்து தோலாது, பொறையான் அவரின் மேம்பட்டு வெல்கவென்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது. (அ)

கருக. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ னோற்கிற் பவர்.

(இ - ள்.) துறந்தாரின் தூய்மை உடையர் - இல்வாழ்க்கைக்க ணின்றேயும் துறந்தார்போலத் தூய்மையுடையார்; இறந்தார் வாய் இன்னுச்சொல் நோற்கிற்பவர் - தெறியைக் கடந்தார் வாய் இன்னுத சொல்லைப் பொறுப்பவர்.

'தூய்மை' மனமாசின்மை.'வா'யென வேண்டாது கூறினர், தீய சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதனிழிபு முடித்தற்கு. (க)

கசுo. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சொ னோற்பாரிற் பின்

(இ - ள்.) உண்ணாது நோற்பார் பெரியர் - விரதங்களான் ஊணைத் தவிர்ந்து உற்றநோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரி யர்; பிறர் சொல்லும் இன்னுச் சொல் நோற்பாரிற் பின் - அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னுத சொல்லைப் பொறுப் பாரிற் பின்.

'பிறர்' அறிவிலாதார். நோலாமைக் கேதுவாகிய இருவகைப் பற்றையும் நின்றே நோற்றலின், 'இன்னுச்சொ னோற்பாரிற் பின்' னென்றார். இவை யிரண்டு பாட்டானும் பிறர் மிகைக்கச் சொல்லி யன பொறுத்தல் கூறப்பட்டது. (கo)

அதி. கஎ—அழுக்காருமை

[இதனுள் அழுக்காறென்பது ஒரு சொல். அதற்குப் பொருள்* மேலே யுரைத்தாம். அச்சொற் பின் னழுக்காற்றைச் செய் யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை யாகாரமும் மகர வைகார விகுதியும் பெற்று அழுக்காருமையென நின்றது. இப்பொருமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின் பின் வைக்கப்பட் டது.]

கசுக. ஒழுக்காருக் கொள்க வொருவன்றன் நெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(இ - ள்.) ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்ற மில்லாத இயல்பினை ; ஒழுக்காருக் கொள்க - தனக்கோதிய ஒழுக்க நெறியாகக் கொள்க.

'இயல்பு' அறிவோடு கூடிய தன்மை. அத்தன்மையும் நன்மை பயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புக† வென்பதாம். (க)

கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

(இ - ள்.) யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்-யாவர் மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலே ஒருவன் பெறுமாயின்; விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்றவன் பெறுஞ் சீரிய பேறு களுள் அப்பேற்றினை யொப்பதில்லை.

அழுக்காறு பகைவர் மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், 'யார் மாட்டு' மென்றார். 'அன்மை' வேறுதல். இவை யிரண்டுபாட்டானும் அழுக்காறின்மையது குணங் கூறப்பட்டது. (உ)

கசுஙு. அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

(இ - ள்.) அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - மறுமைக் கும் இம்மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான்; பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான் - பிறன்செல்வங் கண்டவழி அதற்கு உவவாது அழுக் காற்றைச் செய்வான்.

---

*குறள் - ஙடு †குறள் கஙக.

அழுக்கறுத்தலெனினும் அழுக்காறெனினு மொக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமா மென்பதாம். (ந)

கசுசு. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அழுக்காறு வதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்; இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - அத்தீதெறியால் தமக்கிருமையினுந் துன்பம் வருதலே யறிந்து.

'அறனல்லவை' யாவன செல்வம் கல்வி முதலியனவுடையார் கட் டூங்குனினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம். (சு)

கசுடி. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ - ள்.) ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது - அழுக்காறு பகைவரை யொழிந்துங் கேடு பயப்பதொன்றுகலின்; அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடு பயத்தற்கு அதுதானே யமையும்.

அதுவே யென்னும் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் ரொக்கது.

கசுசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(இ - ள்.) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம்; உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதுமின்றிக் கெடும்.

கொடுப்பதன்க ணழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள். கூலப்பற்றிப் பொருமை செய்தல். சுற்றங்கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர் பேறு பொருமை தன் பேற்றையேயன்றித் தன் சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்கு மென்பதாம். (சு)

கசுள. அவ்வித் தழுக்கா றுடையாளைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(இ - ள்.) அழுக்காறு உடையானை - பிறராக்கங் கண்டவழிப் பொருமை யுடையானை; செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டிவிடும் - திருமகள் தானும் பொருது தன் றவ்வைக்குக் காட்டி நீங்கும்.

'தவ்வை' மூத்தவள். 'தவ்வையைக் காட்டி' யென்பது "அறிவுடையந்தண னவளைக் காட்டென்றலே*" என்பதுபோல உருபுமயக்கம். மனத்தைக் கோடுவித்து அழுக்காறுடையனாயினானை யென்றுரைப்பாருமுளர். (எ)

கசுஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(இ - ள்.) அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி; திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் - தன்னையுடையானை இம்மைக்கட் செல்வத்தைக் கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும்.

பண்பிற்குப் பண்பி யில்லையேனும், தன்னையாக்கினானை இருமையுங் கெடுத்தற் கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் 'பாவி' யென்றார். கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவையாறு பாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப்பட்டது. (அ)

கசுக. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(இ - ள்.) அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனதாக்கமும்; செவ்வியான் கேடும் நினைக்கப்படும் - ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும்.

'கோட்டம்' ஈண்டழுக்காறு. 'உளவாயி' னென்பது எஞ்சிநின்றது. ஆக்கக் கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினை யாதென்றாராயப்படுதலின், 'நினைக்கப்படு' மென்றார்: "இம்மைச் செய்தன யானறி நல்வினை, யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித், திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"† என நினைக்கப்பட்டவாறறிக. (கூ)

கஎO. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(இ - ள்.) அழுக்கற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியராயினாருமில்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அச்செயலிலாதார் பெருக்கத்தினின்றுங்கினாருமில்லை.

---

* கலித்தொகை, மருதம் - எ.
† சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, வரி - கூக - கூஉ.

இவை யிரண்டு பாட்டானும் கேடுமாக்கமும் வருதற்கேது ஒருங்கு கூறப்பட்டது. (கO)

அதி. கஅ—வெஃகாமை

[அஃதாவது, பிறர்க்குரிய பொருளை வௌவக் கருதாமை. பிற ருடைமை கண்டவழிப் பொருமையேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலுங் குற்றமென்றற்கு இஃது **அழுக்காறாமை** யின் பின் வைக்கப்பட்டது.]

களக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ - ள்.) நடுவு இன்றி நன் பொருள் வெஃகின் - பிறர்க் குரியன கோடல் நமக்கு அறனன்றென்னும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின்; குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் - அவ்வெஃகுதல் அவன் குடியைக் கெடச் செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும்.

குடியை வளரச்செய்து பல நன்மையும் பயக்கு மியல்புபற்றி, வெஃகினென்பார், 'நன்பொருள் வெஃகி' னென்றார். பொன்ற வென்பது 'பொன்றி' யெனத் திரிந்து நின்றது; 'செய்'தென்பது சொல்லெச்சம். (க)

களஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(இ - ள்.) படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் - பிறர் பொருளை வௌவினுல் தமக்கு வரும் பயனை விரும்பி, அது வௌவு தற்குப் பழியின் கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார்; நடுவு அன்மை நாணுபவர் - நடுவுநிலைமை யன்மையை அஞ்சுபவர்.

'நடுவு' ஒருவன் பொருட்குப் பிறன் உரியனல்லனென்னும் நடுவு. (உ)

களங. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ - ள்.) சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார் - பிறர் பால் வௌவியபொருளால் தாமெய்தும் நிலையில்லாத வின்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார்; மற்றின்

பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய வின்பத்தைக் காதலிப்பவர்.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே யழியுமென்பார், 'சிற்றின்ப' மென்றார். மற்றை யின்பமென்பது 'மற்றின்ப' மென நின்றது. (நூ)

களசு. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(இ - ள்.) இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறிய மென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார்; புலம் வென்ற புன்மையில் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார்.

வெல்லுதல் பாவநெறிக்கட் செல்லவிடாமை. 'புலம் வென்ற புன்மையில் காட்சியவர்' க்கு வறுமையின்மையின் வெஃகுதலு மில்லையாயிற்று. 'புன்மையில் காட்சி' பொருள்களைத் திரிபின்றி யுணர்தல். (சு)

களஎ. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ - ள்.) அஃகி அகன்ற அறிவு என்னும் - நுணுகிதாய எல்லா நூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்ன பயத்ததாம்? வெஃகி யார்மாட்டும் வெறிய செயின் - பொருளை விரும்பி யாவர் மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வ ராயின்.

'யார்மாட்டும் வெறிய செய்த' லாவது தக்கார்மாட்டும் தகாதார் மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின், 'அறிவென்னு' மென்றார். (ரு)

களசூ. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(இ - ள்.) அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அரு ளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்க ணின்றவன்; பொருள் வெஃகிப் பொல்லாத சூழக் கெடும் - பிறர் பொருளை யவாவி அதனை வருவிக்கும் குற்றநெறிகளை எண்ணக் கெடும்.

இல்லற நெறியால் அறிவு முதிர்ந்தழியல்லது துறக்கப்படா மையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல் இரண்

டறமுஞ் சேர்விழத்தல். சூழ்ந்த துணையானே கெடுமெனவே, செய்தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது. (சு)

கஎஎ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(இ - ள்.) வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை யவாவிக்கொண்டு அதனலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக; விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம் - பின்னனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றுதலில்லை ஆகலான்.

'விளை' யென்பது முதனிலைத் தொழிற்பெயர். இவை யேழு பாட்டானும் வெஃகுதலின் குற்றங் கூறப்பட்டது. (எ)

கஎஅ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(இ - ள்.) செல்வத்திற்கு அஃகாமை யாதெனின் - சுருங்கன் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாதென்று ஒருவனாராயின்; பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை - அது பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்.

'அஃகாமை' ஆகுபெயர். வெஃகாதான் செல்வம் அஃகா தென்பதாயிற்று. (அ)

கஎக. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

(இ - ள்.) அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - இஃதற னென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை; திரு திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தானடைதற்காங் கூற் றினை யறிந்து அக்கூற்றனே சென்றடையும்.

அடைதற்காங் கூறு காலமும், இடனும், செவ்வியும் முதலா யின. இவை யிரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது. (க)

கஅ0. இறலீனு மென்னுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) எண்ணுது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவ தறியாது ஒருவன் பிறன்பொருளை வௌவக்கருதின் அக்கருத்து அவனுக்கிறுதியைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு

விறல் ஈனும் - அப்பொருளே வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும்.

பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனு' மென்றும், அப் பொருளே வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் 'விற லீனு' மென்றுங் கூறினர். 'செருக்கு' ஆகுபெயர். இதனால் அவ் விருமையும்* ஒருங்கு கூறப்பட்டன. (கo)

அதி. ககக—புறங்கூருமை

[அஃதாவது, காணுதவழிப் பிறரையிகழ்ந்துரையாமை. மொழிக் குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது **அழுக்காருமை, வெஃகாமை**களின் பின் வைக்கப்பட்டது.]

கஅக. **அறங்கூரு னல்ல செயினு மொருவன்**
புறங்கூரு னென்ற லினிது.

(இ - ள்.) ஒருவன் அறம் கூறுன் அல்ல செயினும் - ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களேச் செய்யுமாயி னும்; புறங்கூறுன் என்றல் இனிது - பிறனைப் புறங்கூறுனென்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று.

புறங்கூருமை அக்குற்றங்களா னிழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப் பட்டது. (க)

கஅஉ. **அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே**
புறனழீஇப் பொய்த்து நகை.

(இ - ள்.) அறன் அழீஇ அல்லவை செய்தலின் **தீது** - அற னென்பதொன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற் பாவங் களேச் செய்தலினுந் தீமையுடைத்து; புறன் அழீஇப் பொய்த்து நகை - ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல் லிக் கண்டவழி அவனெதி பொய்த்து நகுதல்.

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் - ஒளியைக்† கோறல். (உ)

கஅங. **புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத**
லிறங்கூ றுமாக்கந் தரும்.

---

*வெஃகுதலின் குற்றமும் வெஃகாமையின் குணமும். †குறள்-சூளுக உரை.

(இ - ள்.) புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனாகப் பொய்த்து ஒருவனுயிர்வாழ்தலின்; சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

பின் புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், சாதல் ஆக்கந்தரு மென்றார். 'ஆக்கம்' அஃதொழிந்தார் மறுமைக்கணெய்தும் பயன். 'அறம்' ஆகுபெயர். 'தரு' மென்பது இடவழுவமைதி. (கூ)

கஅசு. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ - ள்.) கண் நின்று கண் அறச் சொல்லினும் - ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னாலும்; முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின் வருங் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக.

'பின்' ஆகுபெயர். சொல்வான்றொழில் சொன்மேலேற்றப் பட்டது. இவை மூன்று பாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது. (சு)

கஅடு. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ - ள்.) அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - புறஞ் சொல்லுவானொருவன் அறனை னென்றென்று சொல்லினும் அது தன் மனத்தானுய்ச் சொல்லுகின்றானல்லனென்பது; புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும்.

மனந்தீதாகலின், அச்சொற் கொள்ளப்படா தென்பதாம். (ஙி)

கஅசு. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்.

(இ - ள்.) பிறன் பழி கூறுவான் - பிறனொருவன் பழியீய அவன்புறத்துக் கூறுமவன்; தன்பழியுள்ளும் திறன்தெரிந்து கூறப் படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந் திறமுடையவற்றைத் தெரிந்து அவனுற் கூறப்படும்.

புறத்தென்பது அதிகாரத்தாற் பெற்றாம். இது வருகின்றவற் றிற்குமொக்கும். 'திறன்' ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு

கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையுந் திறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின், 'திறன் தெரிந்து கூறப்படு' மென்றார். (கூ)

கஅஎ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ற தவர்.

(இ - ள்.) பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றைப் புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவர்; நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர் - கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதார்.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கேளிரையும் பிரிப்பரென்ற கருத்தான், அயலாரோடுமென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் தமக்குறுதி யென்றறிதல். "கடியு - மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை"* என்புழிப்போலத் தேற்றாமை தன் வினையாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து. (எ)

கஅஅ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினர்
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(இ - ள்.) துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் - தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார்; ஏதிலார்மாட்டு என்னை கொல் - அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ!

'தூற்றுதல்' பலருமறியப் பரப்புதல். அதனிற் கொடியதுபிறிதொன்று காணுமையின், 'என்னைகொ' லென்றார். 'செய்வ' தென்பதுசொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென் றுரைப்பாருமுளர். (அ)

கஅக. அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(இ - ள்.) புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழித்துரையை உரைப்பானது உடற்பாரத்தை; வையம் அறன்நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக்கொடியது பொறுத்தலே எனக் கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும்.

*கலித்தொகை, மருதம் - உள.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால், 'அறனெனக்கி யாற்றுங்கொ' லென்றார். இவை யைந்து பாட்டானும் புறங்கூறுவார்க் கெய்துங் குற்றங் கூறப்பட்டது. (கூ)

ககூ0. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(இ - ள்.) ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்–ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங் காணுமாறு போலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின்; மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - அவர் நிலைபேறுடைய வுயிர்க்கு வருவ தொரு துன்பமுண்டோ?

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமை நோக்கிக் 'காண்கிற்பி' னென்றும், கண்டவழியொழிதலிற் பாவமின்மையும், ஆகவே வரும் பிற விகளினுந் துன்பமில்லை யென்பது நோக்கி உயிர்க்குத் 'தீதுண்டோ' வென்றுங் கூறினர். இதனைப் புறங்கூற்றொழிதற்கு உபாயங் கூறப்பட்டது. (க0)

அதி. உ0—பயனிலசொல்லாமை

[அஃதாவது, தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்லென வாக்கின்கணிகழும் பாவ கான்கனுள், பொய், துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாரா ற் கடியப்படும் ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூறுமையானும் விலக்கி நின்ற பயனில்சொல் இதனுள் விலக்குகின்றாராகலின், இது புறங்கூறுமையின் பின் வைக்கப்பட்டது.]

ககூக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ - ள்.) பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான் - அறிவுடையார் பலரும் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான்; எல்லாரும் எள்ளப்படும் - எல்லாராலு மிகழப்படும்.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப் படுதலின், 'எல்லாரு மெள்ளப்படு' மென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. (க)

ககூ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(இ - ள்.) பயன் இல பல்லார்முன் சொல்லல்-பயனிலவாகிய சொற்களே அறிவுடையார் பலர் முன்பே ஒருவன் சொல்லுதல்; நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விருப்பமிலவாகிய செயல்களைத் தன்னட்டார்மாட்டுச் செய்தலினும் தீது.

'விருப்பமில' வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக விகழற்பாடு பயக்கு மென்பதாம். (உ)

ககூ. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(இ - ள்.) பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனில வாகிய பொருள்களே ஒருவன் விரித்துரைக்கு முரைதானே; நயன் இலன் என்பது சொல்லும் - இவன் நீதியில னென்பதனை உரைக்கும்.

உரையால் இவன் 'நயனில' னென்பதறியலாமென்பார், அதனை உரைமேலேற்றி உரைசொல்லு மென்றார். (ங)

ககூ. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(இ - ள்.) பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனெடுபடாத பண்பில் சொற்களே ஒருவன் பலரிடைச் சொல்லு மாயின்; நயன் சாரா நன்மையின் நீக்கும் - அவை அவர்மாட்டு நீதியொடுபடாவாய், அவனை நற்குணங்களி னீக்கும்.

'பண்பு' இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். 'சொல்லுமாயி' னென்பதும் 'அவர்மாட்' டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன. (ச)

ககூஙி. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(இ - ள்.) பயன் இல நீர்மையுடையார் சொலின் - பயனில வாகிய சொற்களே இனிய நீர்மையுடையார் சொல்லுவராயின்

சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும்.

'நீர்மை'* நீரின்றன்மை. 'சொலி' னென்பது சொல்லாமையை விளக்கிற்று. (கூ)

ககசு. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(இ - ள்.) பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க; மக்கட் பதடி எனல்-மக்களுட்பதரென்று சொல்லுக.

'அல்' விகுதி வியங்கோள்; மூன் எதிர்மறையினும், பின் உடம் பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், 'மக்கட் பதடி' யென்றார். இவை யாறு பாட்டானும் பயனில்லாத சொற் களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது. (சு)

ககஎ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(இ - ள்.) நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக - நீதியொடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னராயினும், அஃதமையும்; பயன் இல சொல்லாமை நன்று - அவர் பயனில வற்றைச் சொல்லாமை பெறின், அது நன்று.

'சொல்லினு' மெனவே, சொல்லாமை பெறப்பட்டது. 'நயனில' வற்றினும் 'பயனில' நீயவென்பதாம். (எ)

ககஅ. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(இ - ள்.) அரும்பயன் ஆயும் அறிவினர்-அறிதற்கரிய பயன் களை ஆராயவல்ல அறிவினையுடையார்; பெரும்பயன் இல்லாதசொல் சொல்லார் - மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாத வெனவே, பயன் சிறிதுடை யனவும் ஒழிக்கப்பட்டன. (அ)

ககக. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

---

* நீர்மை - குணம்.

(இ - ள்.) பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்-பயனில் லீங்கிய சொற்களே மறந்துஞ் சொல்லார்; மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தி னீங்கிய தூய வறிவினை யுடையார்.

தூயவறிவு-மெய்யறிவு. 'மருடீர்ந்த' வென்னும் பெயரெச்சம் 'காட்சியவ' ரென்னுங் குறிப்புப்பெயர் கொண்டது. இவை மூன்று பாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங் கூறப்பட்டது. (கூ)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(இ - ள்.) சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக; சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க - சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லா தொழிக.

'சொல்லி' னென்பது இருவழியும் மிகையாயினும், சொற் பொருட்பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக்கண்டும்"* என்பதுபோல. இதனாற் சொல்லப்படு வனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன. (கo)

அதி. உக—தீவினையச்சம்

[அஃதாவது, பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுள் மெய்யின்க ணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்கு கின்றாராகலின், இது பயனிலசொல்லாமையின் பின் வைக்கப் பட்டது.]

உoக. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) தீவினை யென்னும் செருக்கு - தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை; தீவினையார் அஞ்சார் - முன்செய்த தீவினையுடையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர்.

'தீவினையென்னும் செருக்' கெனக் காரியம் காரணமாக உப சரிக்கப்பட்டது. மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் 'அஞ்சா' ரென்றும், செய்தறியாமையான் 'அஞ்சுவ'ரென்றுங் கூறினர். (க)

* நாலடியார் - நூ.

உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ - ள்.) தீயவை தீய பயத்தலால் - தனக்கின்பம் பயத்தலைக் கருதிச்செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான்; தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத்தன்மைய வாகிய தீவினைகள் ஒருவனுற் றீயினு மஞ்சப்படும்.

பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோரு டம்பினுஞ்சென்று சுடுதல் தீக்கின்மையின், 'தீயினு மஞ்சப்படுவ' தாயிற்று. (உ)

உ0ஊ. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ - ள்.) அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்குறுதி நாடும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர்; செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார்மாட்டுந் தீவினைகளைச் செய்யாது விடுதலே.

விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விட' லென்றும், செயத் தக்குழியுஞ் செய்யா தொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை 'அறிவினுளெல்லாந்தலை' யென்றுங் கூறினர். செய்யாதென்பது கடைக்குறைந்து நின்றது. இவை மூன்று பாட்டானும் தீவினைக் கஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது. (ஊ)

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ - ள்.) பிறன்கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின், தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும்.

'கே' டென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானுமுடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவு ளெண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலுமாகாதென்பதாம். (ச)

உ0ரு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறிய னென்று கருதி அது நீர்த்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒரு

வன் செய்யாதொழிக; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வானுயின், பெயர்த்தும் வறியனும்.

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனு மென்பதாம். அன்விகுதி மூன் தனித் தன்மையினும், பின் படர்க்கை யொருமையினும் வந்தது. தனித்தன்மை "உளனுவென் னுயிரையுண்டு"* என் பதனுனுமறிக. 'மற்று' அசைநிலை. இல†மென்று பாடமோதுவாருமுளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க, செய்யின் அப்பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனுமென் றுரைப்பாரு முளர். (இ)

உ0சு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

(இ - ள்.) நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன்; தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமைக்கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக.

செய்யின், அப்பாவங்களடுதல் ஒருதலையென்பதாம். (சு)

உ0ஏ. எனைப்பகை யுற்றரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ - ள்.) எனைப் பகை உற்றரும் உய்வர் - எத்தனைப் பெரிய பகையுடையாரும் அதனையொருவாற்றுற் றப்புவர்; வினைப் பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும்.

"வீயா—துடம்பொடு நின்ற வுயிருமில்லை"‡ என்புழியும் வீயாமை நீங்காமைக்கண் வந்தது. (எ)

உ0அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைத் தற்று.

(இ - ள்.) தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தெனின்; நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று - ஒருவனிழல் நெடிதாகப் போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கட் டங்கிய தன்மைத்து.

---

*கலித்தொகை, குறிஞ்சி - உஉ. † மணக்குடவர்.
‡ புறநானூறு - நசுந.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றி நின்று அது வந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனுற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்த நிழறன்னே வீய்ந்தற்றென்னுது 'வீயாதடியுறைந்தற்' றென்ற பாடமே கரியாயிற்று. மேல் 'வீயாது பின் சென்றறி' மென்றூர்,* ஈண்டு அதனையுவமையான் விளக்கினர். (அ)

உ0க. தன்னேத்தான் காதல னுயி னெனேத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(இ - ள்.) தன்னேத் தான் காதலன் ஆயின் - ஒருவன், தன்னேத் தான் காதல் செய்தலுடையனுயின்; தீவினேப்பால் எனேத்து ஒன்றும் துன்னற்க - தீவினேயாகிய பகுதி எத்துணேயுஞ் சிறிய தொன்றுயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக.

நல்வினே தீவினேயென வினேப்பகுதி இரண்டாகலின், 'தீவினேப்பா' லென்றூர். பிறர்மாட்டுச் செய்த தீவினே தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினுராகலின், ' தன்னேத்தான் காதலனுயி' னென்றூர். இவை யாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினேசெய்யிற் ருங்கெடுவரென்பது கூறப்பட்டது. (க)

உக0. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ - ள்.) மருங்கு ஓடித் தீவினே செய்யான் எனின் - ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட் சென்று பிறர்மாட்டுத் தீவினேகளேச் செய்யானுயின்; அருங்கேடன் என்பது அறிக - அவனே அரிதாகிய கேட்டையுடைய னென்பதறிக.

அருமை-இன்மை. 'அருங்கேட'னென்பதனேச் "சென்று சேர் கல்லாப் புள்ள புள்ளி லென்றூழ் வியன்குளம்"† என்பதுபோலக் கொள்க. 'ஓடி' யென்னும் வினேயெச்சம் 'செய்யா' னென்னும் எதிர்மறைவினேயுட் செய்தலோடு முடிந்தது. இதனுல் தீவினே செய்யாதவன் கேடில னென்பது கூறப்பட்டது. (க0)

---

* குறள் - உ0ள, †அகநானூறு - சஉ.

அதி.உஉ—ஒப்புரவறிதல்

[அஃதாவது, உலக நடையினை யறிந்து செய்தல். உலக நடை வேத நடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்து செய்யுந் தன்மைத்தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மன மொழி மெய்களாற் றவிரத்தகுவன கூறினார், இனிச் செய்யத் தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.]

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோ வுலகு.

(இ - ள்.) மாரிமாட்டு உலகு என் ஆற்றும் - தமக்கு நீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யா நின்றன! கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல.

'என்ஞற்று' மென்ற வினா யாதுமாற்ற வென்பது தோன்ற நிற்றலின், அது வருவித் துரைக்கப்படும். தவிருந் தன்மைய வல்ல வென்பது 'கடப்பா' டென்னும் பெயராலே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமே லேற்றினார். (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) தக்கார்க்கு - தகுதியுடையார்க்காயின்; தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் - முயற்சிசெய்தீட்டிய பொருண் முழுதும்; வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம்.

பிறர்க்குதவாதார்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற்பொருட்டு மன்றென்பதாயிற்று. (உ)

உகங. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ - ள்.) புத்தேள் உலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ்வுலகத்தும்; ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது - ஒப்புரவு போல நல்லன பிற செயல்களைப் பெறுதலரிது.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் 'புத்தேளுலகத்' தரிதாயிற்று; யாவர்க்கு மொப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத் தரிதாயிற்று. பெறற்கரிதென்று

பாடமோதிப் பெறுதற்குக் காரணமரிதென் றுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ - ள்.) உயிர் வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடி வாழ்வானுவான் உலக நடையினை யறிந்து செய்வான்; மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃதறிந்து செய்யாதவன், உயிருடையானேயாயினும், செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும்.

உயிரினறிவுஞ் செயலுங் காணுமையின், 'செத்தாருள் வைக்கப் படு' மென்றார். இதனுல் உலகநடைவழு வேதநடை வழுப்போலத் தீர்திறனுடைத்தன் றென்பது கூறப்பட்டது. (ச)

உகடு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ - ள்.) உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய வறிவினையுடையவனது செல்வம்; ஊருணி நீர் நிறைந்தற்று - ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந்தாற்போலும்.

நிறைத லென்னும் இடத்து நிகழ் பொருளின் முழில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பா துதவுமென்பதாம். (எ)

உகசு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ - ள்) செல்வம் நயனுடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின்; பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று - அது பயன்படு மரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும்.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நய' னென்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கு மென்பதாம். (சு)

உகஎ. மருந்தாகித் தப்பா மரத்தற்றுற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

(இ - ள்.) செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரிய தகைமையை யுடையான்கண்ணே படுமா

யின்; மருந்து ஆகித் தப்பா மரத்தற்று - அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை யொக்கும்.

'தப்புத' லாவது கோடற்கரிய இடங்களினின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன் குறை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்குமென்பதாம். இவை மூன்று பாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப் பட்டது. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ - ள்.) இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்; கடன் அறி காட்சியவர் - தாஞ்செய்யத் தகுவனவற்றை யறிந்த இயற்கையறிவுடையார்.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம். (அ)

உகக. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ - ள்.) நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவு செய்தலையுடையான் நல்கூர்ந்தானுதலாவது; செயும்நீர செய்யாது அமைகலா ஆறு - தவிராது செய்யு நீர்மைபையுடைய அவ்வொப் புரவுகளைச் செய்யப்பெறுது வருந்துகின்ற வியல்பாம்.

தானுகர்வன நுகரப்பெறுமையன்றென்பதாம். இவையிரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புரவொழிதற்பாற் றன்றென்பது கூறப்பட்டது. (க)

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ - ள்.) ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவு செய் தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பா ருளராயின்; அஃது ஒருவன் விற்றுக் கோள் தக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே? இஃதாயின் அதுவுஞ் செய்யப்படுமென்றது, புகழ் பயத்தலைக்கி. இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது. (க0)

அதி. உஉ—ஈகை

[அஃதாவது, வறியராயேற்றூர்க்கு மாற்றூது கொடுத்தல். இது மறுமை நோக்கியதாகலின், இம்மை நோக்கிய **ஒப்புரவறித** லின்பின் வைக்கப்பட்டது.]

உஉக. **வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்**
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ - ள்.) வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; மற்று எல்லாம் குறி யெதிர்ப்பை நீரது உடைத்து - அஃதொழிந்த எல்லாக் கொடையுங் குறியெதிர்ப்பை கொடுக்கு நீர்மையையுடைத்து.

ஒழிந்த கொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயனேக்கிக் கொடுப்பன. 'குறியெதிர்ப்பா'வது அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது. 'நீர' தென்புழி அதுவென் பது பகுதிப்பொருள் விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், 'குறி யெதிர்ப்பை நீரதுடைத்' தென்றார். இதனுல் ஈகைய திலக்கணங் கூறப்பட்டது. (க)

உஉஉ. **நல்லா றெனினுங் கொளறீது மேலுலக**
மில்லெனினு மீதலே நன்று.

(இ - ள்.) கொளல் நல்லாறு எனினும் தீது-ஏற்றல் வீட்டுல கிற்கு நல்ல நெறியென்பார் உளராயினும் அது தீது; மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று - ஈந்தார்க்கு அவ்வுல கெய்துதலில்லை யென்பார் உளராயினும் ஈதலே நன்று.

'எனினு'மென்பது இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கி நின்றது. பிரிநிலை யேகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றும். நல்லது கூறுவார் தீயது முடன்கூறி னர். (உ)

உஉக. **இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்**
குலனுடையான் கண்ணே யுள.

(இ - ள்.) இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறிய னென்று இரப்பான் சொல்லு மிவ்வரவைத் தான் பிறர்கட் சொல் லாமையும்; ஈதல் - அதனைத் தன்கட் சொன்னர்க்கு மாற்றூ தீத லும்; உள குலன் உடையான்கண்ணே - இவையிரண்டுமுளவாவன குடிப்பிறந்தான்கண்ணே.

மேற்றீதென்றது ஒழிதற்கும் நன்றென்றது செய்தற்கு முரிய வனை உணர்த்தியவாறு. இனி 'இலனென்னு மெவ்வமுரையாமை யீத'லென்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலெனவும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தலெனவும்* உரைப்பாருமுளர். அவர் 'ஈத' லென்பதனைப் பொருட்பன்மைபற்றி வந்த பன்மையாக வுரைப்பர். (நா)

உஉச. **இன்னு தீரக்கப் படுத லீரந்தவ**
ரின்முகங் காணு மளவு.

(இ - ள்.) இரக்கப்படுதல் இன்னாது - இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று; இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒரு பொருளே யிரந்தவர் அது பெற்றதனால் இனிதாகிய அவர்முகங் காணுமளவும்.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற் றொக்கன. இரக்கப்படுதல் இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை 'இன்னாதென்றது, "எல்லா—மிரப்பார்க்கொன் றீயாமை"† கூடுங் கொல்லோவென்னும் அச்சநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. (ச)

உஉடு. **ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை**
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ - ள்.) ஆற்றுவார் ஆற்றல் பசி - ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்; அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையா லொழிப்பாரது வலிக்குப்பின்.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதா ராற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பா ராற்றல் நன்றென்பதாம். (ஙி)

உஉசு. **அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்**
பெற்ரூன் பொருள்வைப் புழி.

(இ - ள்.) அற்றூர் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறவேக்கித் தீர்க்க; பொருள் பெற்றூன் ஒருவன் வைப்

* மணக்குடவர். † நாலடியார் - கசடு.

புழி அஃது - பொருள் பெற்ற லெருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமாகலான்.

எல்லா நன்மைகளும் அழிய வருதலின், ' அழிபசி ' யென்றார். ' அறனெக்கி ' யென்பது எஞ்சி நின்றது. ' அற்றாரழிபசி தீர்த்த' பொருள் பின் றனக்கே வந்துதவு மென்பதாம். (கூ)

உஉஎ. **பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்**
தீப்பிணி தீண்ட லரிது.

(இ - ள்.) பாத்து ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல் பயின்றவனை ; பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்று சொல்லப்படுந் நீயநோய் தீண்டுதலில்லை.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை அழித்து அதனால் வருமுடம்புகட்குந் துன்பஞ்செய்தலின் ' தீப்பிணி ' யெனப்பட்டது. தனக்கு மருத்துவன் முனைகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம். இவை யாறு பாட்டானும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

உஉஅ. **சத்துவக்கு மின்ப மறியார்கொ ருமுடைமை**
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ - ள்.) தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாமுடைய பொருளை ஈயாதுவைத்துப் பின்னிழந்துபோம் அருளி லாதார் ; ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையா ரெய்தும் இன்பத்தினைக் கண்டறியார்கொல்லோ !

'உவக்கு'மென்பது காரணத்தின்கண் வந்த பெயரெச்சம் ; அஃது 'இன்ப' மென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தா ராயின், தாமும் அவ்வின்பத்தை யெய்துவதல்லது வைத்திழவா ரென்பது கருத்து. (அ)

உஉக. **இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய**
தாமே தமிய ருணல்.

(இ - ள்.) நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கீயாது தாமே தனித்துண்டல் ; இரத்த லின் இன்னாது மன்ற-ஒருவர்க்குப் பிறர்பாற் சென்று இரத்தலினு மின்னாது ஒருதலையாக.

பொருட்குறை நிரப்பலாவது ஒரோவெண்களைக் குறித்து அத்துணையீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்

கூட்டுதல். தனித்தல் பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப் பொழுதை யிளிவரவே, பின் நல்குரவில்லை; தமியருண்டற்கு அவை யிரண்டு முளவாமாகலின், 'இரத்தலி னின்னு' தென்றூர். 'கிரப்பிய' வென்பதற்குத் தேடிய வுணவுகளை* யென் றுரைப் பாருமுளர். (கூ)

உகo சாதலி னின்னுத தில்லை யிளிததூஉ
மீத லியையாக் கடை.

(இ - ள்.) சாதலின் இன்னுதது இல்லை - ஒருவற்குச் சாதல் போல இன்னுததொன்றுமில்லை; அதூஉம் ஈதல் இயையாக் கடை இனிது - அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கொன் றீதன் முடியாதவழி இனிது.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், 'இனி' தென்றூர். இவை மூன்று பாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப் பட்டது. (கo)

அதி. உச—புகழ்

[அஃதாவது, இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்க ணிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி. இது, பெரும்பான்மை யும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.]

உகக. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) ஈதல் - வறியார்க் கீக; இசைபட வாழ்தல் - அத னாற் புகழுண்டாக வாழ்க; அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லையாகலான்.

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிற காரணங்க ளும் உளவேனும், "உணவின் பிண்ட முண்டி முதற்று"† ஆக லின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக 'ஈத' லென்றூர். 'உயிர்க்' கென்பது, பொதுப்படக் கூறினுரேனும் விலங்குயிர்கட் கேலாமை யின், மக்களுயிர்மே னின்றது. (க)

உகஉ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னில்கும் புகழ்.

* மணக்குடவர். † புறநானூறு - கச.

(இ - ள்.) உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்றுரைப்பா ருரைப்பனவெல்லாம்; இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் - வறுமையா னிரப்பார்க்கு அவர் வேண்டிய தொன்றை யீவார்க ணிற்கும் புகழாம்.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்.* அவற்றுள் 'உரைப்பா ருரைப்பவை' யென எல்லார்க்குமுரிய வழக்கினையே யெடுத்தாராயினும் இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழா மென்பதூஉம் பெற்றும். ஈதற்காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லுக, புகழ் ஈவார்மேனிற்குமென் றுரைப்பாருமுளர். அது புகழது சிறப்புநோக்காமை யறிக. (உ)

உகக. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு துநிற்பதொன் றில்.

(இ - ள்.) ஒன்ரு உயர்ந்த புகழ் அல்லால் - தனக்கு இணையின்றுக வோங்கிய புகழல்லது; உலகத்துப் பொன்ரு துநிற்பது ஒன்று இல் - உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்றில்லை.

'இணையின்றுக வோங்குத' லாவது கொடுத்தற்கரிய உயிருறுப் புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னெடொப்ப நின்றித் தானேயுயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவ தென்பதாம். இனி 'ஒன்ரு' வென்பதற்கு ஒருவார்த்தையாகச் சொல்லினெனவும், ஒருதலையாகப் 'பொன்ரு துநிற்ப' தெனவும் உரைப்பாருமுளர். இவ்வ மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

உகச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு துபுத்தே ளுலகு.

(இ - ள்.) நிலவரை நீள் புகழ் ஆற்றின் - ஒருவன் நிலவெல் லைக்கண்ணே பொன்ரு துநிற்கும் புகழைச் செய்யுமாயின்; புத் தேள் உலகு புலவரைப் போற்ரு து - புத்தேளுலகம் அவனையல் லது தன்னை யெய்திநின்ற ஞானிகளைப் பேணுது.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின் 'புலவரைப்போற்ரு' தென்ரார். அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல் "புலவர் பாடும் புகழுடையோர்

* புறநானூறு - உள.

விசும்பின, வலவ மனவா வான வூர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து''* எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது. (ச)

உகடு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(இ - ள்.) நத்தம் (ஆகும்) கேடும் - புகழுடம்பிற்கு ஆக்க மாகுங் கேடும்; உளது ஆகும் சாக்காடும் - புகழுடம்புளதாகுஞ் சாக்காடும்; வித்தகர்க்கு அல்லால் அரிது - சதுரப்பாடுடையார்க் கல்லதில்லை.

நந்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று, 'நத்த'மென் றாயிற்று. 'போ' லென்பது ஈண்டுரையசை. 'ஆகு' மென்பதனை முன் னுங்கூட்டி, 'அரி'தென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. 'ஆக்க மாகுங்கே' டாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர் தல். 'உளதாகுஞ் சாக்கா'டாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுள் நிலையினவெய்துவார் வித்தகராக லின், 'வித்தகர்க்கல்லா லரி' தென்றார். இவை யிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது. (ங)

உகசு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ - ள்.) தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக்குணமில்லாதார் மக்க ளாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று.

'புகழ்' ஈண்டு ஆகுபெயர். 'அஃதிலா' ரென்றமையின் 'மக்களா' யென்பதூஉம், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் 'விலங்காய்ப் பிறத்த' லென்பதூஉம் பெற்றாம். இகழ்வாரின்மை யின் 'நன்' றென்றார். (சு)

உகஎ. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்

(இ - ள்.) புகழ்பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழ மாட்டாதார்; தம்நோவார் - அதுபற்றிப் பிறரிகழ்ந்தவழி, இவ் விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே;

* புறநானூறு - உஎ.

தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை யிகழ்வாரை நோவ தென் கருதி!

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிற ரிகழ்தல் ஒருதலேயாகலின், 'இகழ்வாரை' யென்றார். (எ)

உஉ.அ. **வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு மெச்சம் பெறுஅ விடின்.**

(இ - ள்.) இசை என்னும் எச்சம் பெறுவிடின்-புகழென்னு மெச்சம் பெறலாயிருக்க அது பெறுதொழிவராயின்; வையத் தார்க்கு எல்லாம் வசை என்ப - வையகத்தோர்க்கெல்லாம் அது தானே வசையென்று சொல்லுவர் நல்லோர்.

'எச்ச' மென்றார், செய்தவ ரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டாவென் பது கருத்து. (அ)

உஉ.கூ. **வசையிலா வண்பயன் குன்று மிசையிலா யாக்கை பொறுத்த நிலம்.**

(இ - ள்.) இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழில் லாத வுடம்பைச் சுமந்த நிலம்; வசை இலா வண் பயன் குன்றும் - பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும்.

உயிருண்டாயினும் அதனாற் பயன்கொள்ளாமையின் 'யாக்கை' யெனவும், அது நிலத்திற்குப் பொறையாகலிற் 'பொறுத்த' வென வுங் கூறினர். விளையுள் குன்றுதற்கேது பாவயாக்கையைப் பொறுக் கின்ற வெறுப்பு. 'குன்று' மென இடத்து நிகழ்பொருளின் முழில் இடத்தின்மே னின்றது. இவை நான்கு பாட்டானும் புகழில்லா தாரது தாழ்வு கூறப்பட்டது. (கூ)

உசO. **வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய வாழ்வாரே வாழா தவர்.**

(இ - ள்.) வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவார்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தா ராவார்.

'வசையொழி' தலாவது 'இசை' யென்னுமெச்சம் பெறுதலாயின மையின், 'இசையொழி' தலாவது வசைபெறுதலாயிற்று. மேல் 'இசையிலா யாக்கை' யென்றதனை விளக்கியவாறு. இதனால் இவ்

விரண்டும் உடன்கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"* என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பய னென்பது பெற்றும்.

இனி மனு முதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங் கும். அஃதறிந் தடக்கிக்கொள்க; யாமுரைப்பிற் பெருகும். (க0)

இல்லறவியல் முற்றிற்று.

ந. துறவறவியல்

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவற மாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடைய ராய்ப் பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுன் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

வி ர த ம்

அவற்றுள் விரதங்களாவன இன்னவறஞ் செய்வலெனவும் இன்னபாவமொழிவலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொள் வன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவைதம் முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்புடையன சில வற்றை ஈண்டுக் கூறுவான்றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

அதி. உடு—அருளுடைமை

[அஃதாவது, தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.]

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(இ - ள்.) செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங் கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான்

* திருக்குறள் - நு0.

வருஞ் செல்வம்; பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள - அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார்கண்ணு முளவாம் ஆகலான்.

அருளான் வருஞ் செல்வமாவது உயிர்களே யோம்பி அவ்வறத் தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணே யல்லதில்லாத 'அருட் செல்வ'மே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணுமுளவாம் பொருட் செல்வங்கள் சிறப்பில வென்பதாம். (க)

உசஉ. நல்லாற்ரு னுடி யருளாள்க பல்லாற்ரும்
றேரினு மஃதே துணை.

(இ - ள்.) நல்லாற்றான் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று, நமக்குத்துணையாம் அறம் யாதென்றாராய்ந்து, அருளுடையராக; பல்லாற்றுல் தேரினும் துணை அஃதே - ஒன்றையொன் றெவ்வாத சமயநெறிகளெல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை.

'அளவைக'ளாவன பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமுமென மூன்று. ஒப்புப்பற்றி யுணரும் உவமையும், இங்ஙனமன்றுயின் இது கூடாதென் றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலேகருத்து. பொருந்துமாறுவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது. இதனே வடநூலார் யுத்தி யென்ப. 'ஆற்ரு' னென்பது வேற்றுமை மயக்கம். ஒன்றையொன் றெவ்வாமையாவது மதவேறு பாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முண் மாறுகோடல்; அன்னவாயினும் அருடுணையென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினு முதவலின், 'துணை' யென்ரூர். இவை இரண்டு பாட்டானும் அருளினது சிறப்புச் கூறப்பட்டது. (உ)

உசஙு. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.

(இ - ள்.) இருள் சேர்ந்த இன்ன உலகம் புகல் - இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்றுபுகுதல்; அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை - அருள் செறிந்த நெஞ்சினே யுடையார்க்கில்லை.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது திணிந்த விருளேயுடைத் தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பஞ் செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின், 'உலக' மெனப்பட்டது. (ங)

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ - ள்.) மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு - நிலைபேறுடைய உயிர்களைப் பேணி அவற்றின்கண் அருளுடையராவானுக்கு; தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற் கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர்.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், 'மன்னுயி' ரென்றார். 'அஞ்சுதல்' துன்பநோக்கி யஞ்சுதல். அன்னவறத்திலேன் கொலை முதலிய பாவங்கள் செய்யானெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறாயிற்று. (ச)

உசஞ. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ - ள்.) அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பமுண்டாகாது; வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று.

சான்றுவார் தாங்கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவருங் கண்டறிவாரின்மையின், இன்மை முகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்றென்பார், 'வளி வழங்கு மல்லன்மா ஞாலங் கரி' யென்றார்: எனவே இம்மைக்கணென்பது பெற்றாம். 'ஞாலம்' ஆகுபெயர். இவை மூன்று பாட்டானும் அத் துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது. (ஙி)

உசசு. பொருணீங்கப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ - ள்.) அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்த்து தவிரப்படுங்கொடுமைகளைச் செய்தொழுகுவாரை; பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப்பொருளைச் செய்யாது தாந் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர்.

உறுதிப்பொருள் - அறம். 'துன்புறுதல்' பிறவித் துன்ப* மூன்றினையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறொழுகாரென்பது கருத்து. (சு)

பிறவித் துன்பம் மூன்றும் மேலே நான்காம் குறளுரையிற் கூறப்பட்டது.

உசஎ. அருளில்லார்க் கவ்வுலக மில்லே பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

(இ - ள்.) அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லே - உயிர்கண் மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லே; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு - பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லேயாயினேற்போல.

'அவ்வுலகம்' 'இவ்வுலகம்' என்பன ஆகுபெயர். இவ்வுலகத்தின்பங்கட்குப் 'பொருள்' காரணமாஞற்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு 'அருள்' காரணமென்பதாயிற்று. (எ)

உசஅ. பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
ரற்றூர்மற் றூதலரிது.

(இ - ள்.) பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர் - ஊழான் வறியராயினர் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற் பொலிவர்; அருள் அற்றூர் அற்றூர் மற்று ஆதல் அரிது - அவ்வாறன்றி அருளிலாதார் பாவமறுமையின் அழிந்தாரே; பின்னெருகாலத்தும் ஆதலில்லே.

'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாற்றுனெப்புமை கூறினுராகலின், அது மறுத்துப் பிறவாற்றுன் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு. (அ)

உசக. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

(இ - ள்.) அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கண் மாட்டு அருள்செய்யாதவன் செய்யுமறத்தை யாராயின்; தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று - ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளே உணர்ந்தாற்போலும்.

'மெய்ப்பொருள்' மெய்ந்நூலிற் சொல்லும் பொருள். நிலை பெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளே யுணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானே யழித்துவிடும்; அதுபோல, அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானே யழித்துவிடுமென்பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றும். இவை நான்கு பாட்டானும் அத்துணேயில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.

உருo. வலியார்முற் றன்னே நினேக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ - ள்.) வலியார் முன் தன்னை நினைக்க - தன்னின்வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர் முன் தானஞ்சி நிற்கு நிலையினை நினைக்க; தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து - அருளில்லாதவன் தன்னினெளியார்மேல் தான் நலியச் செல்லும் பொழுது.

'மெலியார்' ரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினுராயினும், எனையஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென் றறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து. இதனால் அருள்பிறத்தற் குபாயங் கூறப்பட்டது. (கo)

அதி. உசு.—புலான்மறுத்தல்

[அஃதாவது, ஊனுண்டலையொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னுமுளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனன் வருதலின் அதன் காரியமாதலையும் ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றுகலின், அதனை விலக்குதற்கு, இஃதருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.]

உடுக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(இ - ள்.) தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் - தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரினுடம்பைத் தின்பவன்; எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை!

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக் கருதி இக்கொடுமை செய்வானை அறிவிலாத கொடியோ னென்றவாருயிற்று. 'எங்ஙன மாளுமருள்' ளென்பது ஆளானென்பது பயப்பதின்ற இகழ்ச்சிக் குறிப்பு. (க)

உடுஉ. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ - ள்.) பொருள் ஆட்சி போற்றுதார்க்கு இல்லை - பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை; ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளாற் பயன்கோடல் ஊன்றின்பவர்க்கில்லை.

பொருட் பயனிழத்தற்குக் காரணம் காவாமை போல அருட் பயனிழத்தற்கு ஊன்றினல் காரணமென்பதாயிற்று. ஊன் றின்று ராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கிழுக் கில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவை யிரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (உ)

உருக. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றுக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(இ - ள்.) படை கொண்டார் நெஞ்சம்போல் - கொலைக் கருவியைத் தங்கையிற் கொண்டவர் மனம் அதனாற் செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறுபோல ; ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோ ருயிரினுடலைச் சுவைபட வுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவ தல்லது அருளை நோக்காது.

சுவைபடவுண்டல் காயங்களால் இனிய சுவைத்தாக்கி யுண் டல். இதனால் ஊன்றின்றூர் மனம் தீங்கு நினைத்தல் உவமவளவை யாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. (ங)

உருச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ - ள்.) அருள் யாதெனின் கொல்லாமை - அருள் யா தெனின், கொல்லாமை ; அல்லது (யாதெனின்) கோறல் - அரு ளல்ல தியாதெனிற் கோறல் ; அவ்வூன் றினல் பொருளல்லது - ஆக லான், அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்.

உபசாரவழக்காற் 'கொல்லாமை கோற'லாகிய காரியங்களை 'அருள் அல்ல' தெனக் காரணங்களாக்கியும், 'ஊன்றின்கை' யாகிய காரணத்தைப் 'பாவ' மெனக் காரியமாக்கியும் கூறினர். 'அருளல்லது' கொடுமை, சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப் படுதலின், பாவம் 'பொருளல்ல' தெனப்பட்டது. 'கோற' லென முன்னின்றமையின், 'அவ்வூ 'னென்றூர். இனி இதனை இவ்வாறன்றி 'அருளல்ல 'தென்பதனை ஒன்றாக்கி, 'கொல்லாமை கோற' லென் பதற்குக் கொல்லாமை யென்னும் விரதத்தை யழித்த*லென் றுரைப் பாருமுளர். (ச)

உருஙு. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு.

* மணக்குடவர்.

(இ - ள்.) உயிர் நிலை ஊன் உண்ணுமை உள்ளது - ஒருசா ருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணுமை யென்கின்ற அறத் தின்கண்ணது; உண்ண அளறு அண்ணுத்தல் செய்யாது - ஆக லான், அந்நிலை குலைய ஒருவன் அதனை யுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது.

உண்ணப்படும் விலங்குகள் அதனுற்றேய்ந்து சிலவாக வனைய பலவாய் வருதலின், 'உண்ணுமையுள்ள துயிர்நிலை' யென்றார். உண்ணினென்பது 'உண்ண' வெனத் திரிந்துநின்றது. ஊனுண்ப வன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துளழுந்து மென்பதாம். கொலைப்பாவம் கொன்றார் மேனிற்றலின் பின்னூனுண்பார்க்குப் பாவமில்லை யென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (கூ)

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ - ள்.) தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாகவல்லது ஊன்றின்னுகை காரணமாக உலகங் கொல்லாதாயின்; விலைப்பொருட்டு ஊன்தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை.

'உல' கென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிக ழுந் தின்கை முன்னிகழுங் கொலைக்குக் காரணமாகாமையின் தின் பார்க்குக் காரணத்தான் வரும் பாவ மில்லையென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது. (சு)

உருஎ. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) புலாஅல் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறி தோருடம்பின் புண்; அது உணர்வார்ப் பெறின் உண்ணுமை வேண்டும் - அது தூய்தன்மையறிவாரைப்பெறின், அதனை உண்ணு தொழியல் வேண்டும்.

அஃதென்னல் வேண்டு மாய்தம் விகாரத்தாற்றொக்கது. அம் மெய்ம்மை யுணராமையின், அதனை யுண்கின்று ரென்பதாம். பொருந்துமாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது இதனுற் கூறப்பட்டது. (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ - ள்.) செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார்; உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணூர் - ஒருயிரி னீங்கிவந்த ஊனை யுண்ணூர்.

'தலைப்பிரி' வென்பது ஒருசொல். பிணமென ஊனின் மெய்ம்மை தாமே யுணர்தலின், 'உண்ணூ' ரென்றார். (அ)

உருக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(இ - ள்.) அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - நீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும்; ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒரு விலங்கினுயிரைப் போக்கி அது நின்ற ஊனையுண்ணாமை நன்று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம். (கூ)

உசுo. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ - ள்.) கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையுமுண்ணாதவனை; எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் - எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும்.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடை யார்க்கு அதனாற் பயனில்லையாகலின், கொல்லாமையு முடன்கூறி னார். இப்பேரருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்காளு மென அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்று பாட்டா னும் ஊனுண்ணாமைய துயர்ச்சி கூறப்பட்டது. (கo)

அதி. உஎ—தவம்

[அஃதாவது, மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விர தங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற் றலும், மாரியினும் பனியினும் நீர்நிலைநிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் றம்முயிர்க்கு வருந் துன் பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான் மறுத்து உயிர்கண்மேல் அருண்முதிர்ந்துழிச் செய்யப்படுவ தாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.]

உசுக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(இ - ள்.) தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு; உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - உண்டி சுருக்கன் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், 'அற்றே' யெனத் தேற்றேகாரங் கொடுத்தார். 'தவத்திற்குருவற்' றென்பது "யானையதுகோடு கூரி" தென்பதனை யானைக்குக் கோடு கூரி தென்றாற்போல ஆறாவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்த திலக்கணங் கூறப்பட்டது. (க)

உசுஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(இ - ள்.) தவமும் தவம் உடையார்க்கு ஆகும் - பயனெயன் றித் தவந்தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே; அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் - ஆகலான், அத்தவத்தை அம்முற்றவ மில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம்.

பரிசயத்தால் அறிவுமாற்றலுமுடையராய் முடிவுபோக்கலின் 'தவமுடையார்க் காகு' மென்றும், அஃதில்லாதார்க்கு அவை யின்மையின் முடிவுபோகாமையின் 'அவ'மாமென்றுங் கூறினர். (உ)

உசுங. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறத்தார்கொல்
மற்றை யவர்க டவம்.

(இ - ள்.) மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பார்; துறந்தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார்கொல் - துறந் தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளு முதலவேல விரும்பித் தாந் தவஞ்செய்தலே மறந்தார்போலும்!

'துப்புரவு' அனுபவிக்கப்படுவன. "வேண்டிய வேண்டியாங் கெய்தற்"* பயத்ததாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத் தைத் தாஞ்செய்யுந் தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் 'மறந்தார் போலு' மெனவே, தானத்திற் றவம் மிக்கதென்பது பெற்றும். (கூ)

உசுச. ஒன்னலர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

* திருக்குறள் - உசுடு.

(இ - ள்.) ஒன்னூர்த் தெறலும் - தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைக் கெடுத்தலும்; உவந்தாரை ஆக்கலும் - அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும்; எண்ணின் தவத் தான் வரும் - தவஞ்செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம்.

முற்றத்துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடா மையின், தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. 'எண்ணி' னென்றதனான், அவர்க்கு அவை யெண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னார் பெரியராயினும், உவந்தார் சிறியராயினும், கேடுமாக்கமும் நினைந்த துணையானே வந்து நிற்குமெனத் தவஞ்செய்வார் மேலிட்டுத் தவத்தினதாற்றல் கூறியவாறு. (ச)

உசுடு. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ - ள்.) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால்-முயன்றால் மறுமைக்கட் டாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால்; செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்.

'ஈண்' டென்பதனான் மறுமைக்கணென்பது பெற்றும். மேற் கதி,† வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம். இவை நான்கு பாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது. (டு)

உசுசு. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு

(இ - ள்.) தம் கருமம் செய்வார் தவம் செய்வார் - தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரை யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்க ணாசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.

அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின்வேறுய உடற்கு வருத்தம் வருமென்றெழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்தி வரு கின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், தவஞ் செய் வாரைத் 'தங்கருமஞ் செய்வா' ரென்றும், கணத்தாளழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ்

† இந்திரன் முதலிய இறையவர் பதங்கள்.

செய்து கோடலின், அல்லாதாரை 'அவஞ் செய்வா' ரென்றும், கூறினர். 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. (சு)

உசுஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ - ள்.) சுடச் சுடரும் பொன்போல் - தீயின்கணேடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னெடு கலந்த குற்ற நீங்கி ஒளி மிகுமாறுபோல; நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச் சுட ஒளிவிடும். தவஞ்செய்ய வல்லார்க்கு அதனன் வருந் துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவநீங்கி ஞானமிகும்.

'சுடச்சுடரும் பொன்போ' லென்றாயினும், கருத்துநோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின் 'ஒளி' யென்றார். (எ)

உசுஅ. தன்னுயிர் தானறப் பெற்றானே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ - ள்.) தன் உயிர் தான் அறப் பெற்றானே-தன்னுயிரைத் தான் றனக்குரித்தாகப் பெற்றவனே; ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும் - அது பெறுதனவாகிய மன்னுயிர்களெல்லாந் தொழும்.

தனக்குரித்தாதல் தவமாகிய தன்கருமஞ் செய்தல். அதனி னுங்குப் பெறுதற்கரிய தின்மையின், 'பெற்றானே' யென்றார். 'அது பெறுதன' வென்றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யு முயிர்களை. சாபமுமருளுமாகிய இரண்டாற்றலு முடைமையின், 'தொழு' மென்றார். (அ)

உசுக. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

(இ - ள்.) கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்; நோற்றலின் ஆற்றல் தலைப்பட் டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு.

சிறப்புமை அது கூடாமை விளக்கிற்று; 'மன்னுயிரெல்லாந் தொழு' தலேயன்றி இதுவுங் கைகூடுமென எச்சவும்மையாக வுரைப் பினுமையும். 'ஆற்றல்' சாபவருள்கள். இவை நான்கு பாட்டா னும் தவஞ் செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது. (கூ)

உஎ0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ - ள்.) இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர் கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின்; நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்.

செல்வரென்பன ஈண்டறிவினது உண்மையின்மைகளே யுங் குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை—பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்"* என்றா ராகலின். 'நோற்பார் சில' ரெனக் காரணங் கூறினமையான் காரி யம் வருவித்துரைக்கப்பட்டது. தவஞ் செய்யாதார்க்கு இம்மையின் பமுமில்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது. (கo)

அதி. உஅ—கூடாவொழுக்கம்

[அஃதாவது, தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மையிற் பின் னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயவொழுக்கம். அது விலக்கு தற்கு இது **தவத்தின் பின்** வைக்கப்பட்டது.]

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(இ - ள்.) வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் - வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்த வொழுக்கத்தை; பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்துங் கண்டு தம்முள்ளே நகும்.

காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமன' மென்றும், அந்நலிவு பொறுக்கமாட்டாதொழுகுங் களவொழுக்கத்தைப் 'படிற்றொழுக்க' மென்றும், உலகத்துக் களவுடையார் பிறரறியாமற் செய்வனவற் றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையு மறிந்து அவனறியாமற் றம்முள்ளே நகுதலின், 'அகத்தே நகு' மென்றுங் கூறினர். செய்த குற்றம் மறையா தாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து. (க)

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சத்
தானறி குற்றப் படின்.

---

*நாலடியார்—உடுக.

(இ - ள்.) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்; தான் அறிகுற்றம் தன் நெஞ்சம் படின் - தான் குற்றமென்றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சு தாழுமாயின்.

'வானுயர் தோற்ற' மென்பது "வான்றோய்குடி"* என்றாற் போல இலக்கணை வழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்து வைத்துச் செய்த குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை யென்பதாம். (உ)

உஎக. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ - ள்.) வலி இல் நிலைமையான் வல்லுருவம் - மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக் கொண்டு தான் அதன்வழிப் படுதல்; பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று - பசு காவலர் கடியாமற் புலியின் றோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்.

இல்பொருளுவமை. 'வலியினிலைமையா' னென்ற அடையானும், 'மேய்ந்தற்' றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப்படுதலென்பது பெற்றமும். காவலர் கடியாமை புலிபுற்றின்னுதென்பதனானும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன் அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையுந் துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லை விட்டுப் பிறர்க்குரிய 'பைங்கூழை மேய்ந்தாற்போலு' மென்ற உவமையான் அறிக. (ங)

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ - ள்.) தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வலியினிலைமையான் தவவேடத்தின் கண்ணே மறைந்துநின்று தவமல்லவற்றைச் செய்தல்; வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும்.

* நாலடியார்—கசஉ.

'தவம்' ஆகுபெயர். 'தவமல்லவற்றைச் செய்த'லாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்ததாக்குதல். இதுவும் இத்தொழிலுவமையானறிக. (சு)

உஎஙி. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென் றேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) பற்று அற்றேம் என்பார் படிற்றொழுக்கம் - தம்மைப் பிறர் நன்குமதித்தற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம்; எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தேமென்று தாமே யிரங்கும்வகை, அவர்க்குப் பல துன்பங்களையுங் கொடுக்கும்.

சொல்லளவல்லது பற்றறுமையின், 'பற்றற்றே மென்பா'ரென்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்கால நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் "அந்தோ வினையேயென் றழுவ"* ராகலின், 'எற்றெற்' றென்றுங் கூறினர். இவை யைந்து பாட்டானும் கூடாவொழுக்கத்தினிழுக்கம் கூறப்பட்டது. (ரு)

உஎசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணு ரில்.

(இ - ள்.) நெஞ்சின் துறவார் - நெஞ்சாற் பற்றறுதுவைத்து; துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் - பற்றற்றூர்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல்; வன்கணர் இல் - வன்கண்மையையுடையார் உலகத்திலில்லை.

'தானஞ்செய்வாரை வஞ்சித்த'லாவது யாம் மறுமைக்கட்டேவ ராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னதீதுமென்று அறியா தீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல், "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினி லலமு முந்நீர்த்—தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி—யுடம்பொடு முகங்க ளொவ்வா வுழ்கனி மாந்தி வாழ்வர்—மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே"* என்பதனானறிக. தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், 'வன்கணரில்' லென்றார். (சு)

---

* சிவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - உள.
* சிவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - உசச.

உஎஎ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ - ள்.) குன்றிப்புறம் கண்டு அனையரேனும் - குன்றியின் புறம்போல வேடத்தாற் செம்மையுடையராயினும்; குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப்போல மனமிருண்டிருப் பாரை உடைத்து உலகம்.

'குன்றி' ஆகுபெயர். செம்மை கருமையென்பன பொருளின்க ணிறத்தை விட்டுச் செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றன வாயினும், பண்பாலொத்தலின், இவை பண்புவமை: "கூழின் மலி மனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே"† என்பதுமது. (எ)

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ - ள்.) மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின்கண்ண தாக; மாண்டார் நீராடி - பிறர்க்குத் தவத்தான் மாட்சிமை யுடையராய் நீரின்மூழ்கிக் காட்டி; மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர்.

'மாசு' காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி 'மாண்டா'ரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலே அவர் மறைதற்கிடனுக்கினர். இனி 'மாண்டார் நீராடி' யென்பதற்கு மாட்சிமைப் பட்டாரது நீர்மையை யுடையரா யென உரைப்பாரு முளர்.* இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்க முடையாரது குற்றமும் அவரை யறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன.

உஎகூ. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ - ள்.) கணை கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடி வாற் செவ்விதாயினும், செயலாற் கொடியது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற் செவ்விது; ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவஞ்செய்வோரையுங் கொடியர் செவ்விய ரென்பது, வடிவாற் கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற் றானே அறிந்துகொள்க.

கணைக்குச் செயல் கொலை, யாழுக்குச் செயல் இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற் 'கொடிய' ரெனவும் அற

† திருச்சிற்றம்பலக் கோவையார் - கூஉஉ.
*மணக்குடவர்

மாயிற் 'செவ்வியர்' ரெனவுங் கொள்க வென்பதாம். இதனான் அவரை யறியுமாறு கூறப்பட்டது. (க)

உஅo. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ - ள்.) மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா; உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் தவத்திற் காகாதென்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்.

பறித்தலும் மழித்தலுளடங்கும். 'மழித்த' லென்பதே தலை மயிரை உணர்த்தலின், அது கூரராயினர். இதனாற் கூடா வொழுக்க மில்லாதார்க்கு 'வேடமும் வேண்டா'வென அவரது சிறப்புக் கூறப் பட்டது. (கo)

அதி. உக—கள்ளாமை

[அஃதாவது, பிறருடைமையா யிருப்ப தியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடொத்தலின், 'கள்ளாமை' யென்றார். இவ்வாழ் வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித் துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனங் கொள்ளினும் அமையும், துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோ ரிழுக்காம் ஆகலின், இது துறவறமாயிற்று. புறத் துப்போகாது மடக்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பால தாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப் பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மைமுதற் கொல் லாமையீறாய ஞானகதிகாரத்திற்கு மொக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ - ள்.) எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினை யிகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப் படுவான்; எனைத்தொன்றும் கள்ளாமை தன் னெஞ்சு காக்க-யாதொரு

பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன் னெஞ்சினைக் காக்க.

எள்ளாதென்னும் எதிர்மறை வினையெச்சம் 'எள்ளாமை'யெனத் திரிந்து நின்றது. 'வீட்டினை யிகழ்த'லாவது காட்சியே அளவை யாவ தென்றும், நிலம், நீர், தீ, வளி யெனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற்றோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப் பட்டழியுமென்றும், இறந்தவுயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவனவென்றுஞ் சொல்லும் உலோ காயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அவற்றிற்கேற்ப ஒழுகு தல். ஞானத்திற்கேதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவாமாக லின், 'எனைத்தொன்று' மென்றார். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதலென்பது பெற்றாம். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்ளே மெனல்.

(இ - ள்.) உள்ளத்தால் உள்ளலும் தீதே - குற்றங்களைத் தன் நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்ளேம் எனல் - ஆதலால், பிறனொருவன் பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்துக் கொள்வேமென்று கருதற்க.

'உள்ளத்தா' லென வேண்டாது கூறினார், அவருள்ளம் எனையா ருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. 'உள்ளலு' மென்பது இழிவு சிறப்பும்மை. அல் விகுதி வியங்கோ ளெதிர்மறைக் கண் வந்தது. இவை யிரண்டு பாட்டானும் இந்நடைக்குக் களவாவது இஃதென்பதூஉம் அது கடியப்படுவ தென்பதூஉங் கூறப்பட்டன. (உ)

உஅந. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ - ள்.) களவினால் ஆகிய ஆக்கம் - களவினாலுளதாகிய பொருள்; ஆவதுபோல அளவு இறந்து கெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்து கெடும்.

ஆக்கத்திற்கேதுவாகலின், 'ஆக்க' மெனப்பட்டது. 'எல்லையைக் கடந்து கெடுத'லாவது தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தவறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்

தென்று பாடமோதி, அவர் பயன்கொள்ளுமளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென் றுரைப்பாருமுளர். (கூ)

உஅசு. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ - ள்.) களவின்கண் கன்றிய காதல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை; விளைவின்கண் வீயா விழுமம் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனாற் பாவமும் பழியும் பயந்தேவிடுதலின், 'வீயாவிழுமந் தரு'மென்றார். இவை யிரண்டு பாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது. (ச)

உஅஞ. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ளில்.

(இ - ள்.) அருள் கருதி அன்புடையராதல் - அருளினது உயர்ச்சியை யறிந்து அதன்மேல் அன்புடையரா யொழுகுதல்; பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல் - பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர், பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியராலல், அவர் மாட்டு, உயிர்கண்மே லருள்செய்தல் நமக்குறுதி யென்றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுந் தெருட்சி கூடாதென்பதாம். (ஙி)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

(இ - ள்.) அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - உயிர் முதலியவற்றை யளத்தலாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார்; களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையை யுடையார்.

'உயிர் முதலியவற்றை யளத்த'லாவது காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்குற்ற விளைவுகளையும், அவற்றுள் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்

றைக் கெடுத்தற் குபாயமாகிய யோகஞானங்களையும் அவற்றுன் அஃதெய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப, 'அதற்கேற்ப ஒழுகுத' லாவது அவ்வளக் கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

உஅள. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ - ள்.) களவு என்னும் கார் அறிவாண்மை - களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட வறிவினையுடையராதல்; அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் மூதலியவற்றை அளத்த லென்னும் பெருமையை விரும்பினர்க ணில்லை.

இருள் - மயக்கம். காரியத்தைக் காரணமாக உபசரித்துக் 'களவென்னுங் காரறிவாண்மை' யென்றும், காரணத்தைக் காரியமாக்கி 'அளவென்னு மாற்ற' லென்றுங் கூறினர். களவுக்குறவும் இருளு மொளியும்போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லாவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது. (எ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ - ள்.) அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் - அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்றுற்போல நிலைபெறும்; களவு அறிந்தார் நெஞ்சில் கரவு - களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை.

உயிர் மூதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ் சலியாது நிற்குமென்பது இவ்வுவமையாற் பெற்றும். களவோடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது. (அ)

உஅக. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர்.

(இ - ள்.) அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர்; களவு அல்ல மற்றைய தேற்றுதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர்.

'தீய நினைவுக'ளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலுஞ் செய்தலோடொக்குமாகலிற் 'செய்'தென்றும், அஃது உள்ளவறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே 'கெடுக்கு

மாகலின் 'ஆங்கே வீவ' ரென்றுங் கூறினர். 'மற்றைய'வாவன துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்றுமை அவற்றையே நுகர்ந்து அவ்வளவா னிறைந்திருத்தலே அறியாமை. இதனாற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது. (க)

உகூ0. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ - ள்.) கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் - களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும்; கள்ளார்க்குப் புத்தேளுலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு கெடுஞ்சேணதாகிய புத்தேளுலகுந் தவறாது.

உயிர் நிற்றற்கிடனுகலின், 'உயிர்நிலை' யெனப்பட்டது. சிறப்பும்மைக ளிரண்டும் விகாரத்தாற் றொக்கன. இம்மையினும் அரசனலொறுக்கப்படுதலின் உயிர்நிலையுந் தள்ளுமென்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலிற் புத்தேளுலகுந் தள்ளாதென்றுங் கூறினர். "மற்றது—தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"* என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இதனுல் இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (கO)

அதி. நo—வாய்மை

[அஃதாவது, மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங், கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.]

உகக. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ - ள்.) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின்; தீமை யாதொன்றும் இலாத சொலல் - அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

தீமை யாதொன்று மிலாதவென இயையும். 'எனப்படுவ' தென்பது "ஊரெனப்படுவ துறையூர்" என்றுற்போல நின்றது. இதனுன் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அது தானும்,

* திருக்குறள் - நுகூ.

தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையா மென்பது கருத்து. (க)

உகூ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ - ள்.) புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்; பொய்ம்மையும் வாய்மை யிடத்த - பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின்பால வாம்.

'குற்றந்தீர்ந்த நன்மை' அறம்; அதனைப் பயத்தலாவது கேடா தல் சாக்காடாதல் எய்தநின்றதோருயிர் அச்சொற்களின் பெய்ம்மை யானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாததுகூறலும், நன்மைபயவா தாயிற் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மையா மென்பது கருத்து. இவை யிரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மைபயக்கும் நிகழாதது கூறலும், மெய்ம்மையெனவும், நன்மைபய வாத நிகழாததுகூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும், அவற்ற திலக்கணங் கூறப்பட்டது. (உ)

உகூ. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ - ள்) தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன் னெஞ்சறிவதொன்றனைப் பிறரறிந்திலரென்று பொய்யாதொழிக; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் - பொய்த்தானுயின், அதனையறிந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்குக் காரியாய் நின்று, தன்னை அதன் பயனுய துன்பத்தை யெய்துவிக்கும்.

நெஞ்சு காரியாதல், "கண்டவ ரில்லென வுலகத்து ளுணரா தார்—தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு—ணெஞ் சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா—நெஞ்சத்திற் குறுகிய காயில்லே யாகலின்"* என்பதனுனுமறிக. பொய் மறையாமை யின், அது கூடலாகாதென்பது இதனுற் கூறப்பட்டது. (ஊ)

உகூ. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(இ - ள்.) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் தன் னுள்ளத்திற் கேற்பப் பொய்கூறு தொழுகுவனுயின்; உலகத்தார்

* கலித்தொகை, நெய்தல் - அ.

உள்ளத்துள் எல்லாம் உளன் - அவன் உயர்ந்தோருள்ளத்தின்க ணெல்லாம் உளனும்.

'உள்ளத்தா' லென்பது வேற்றுமை மயக்கம். 'பொய் கூறு தொழுகுத' லாவது மெய்கூறி யொழுகுதல். அவனதறத்தின தருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்ப ரென்பதாம். இதனுன் இம்மைப்பயன் கூறப்பட்டது. (ச)

உகடு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ - ள்.) மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின்; தவத்தொடு தானம் செய்வாரின் தலை - அவன் தவமுந் தானமும் ஒருங்குசெய் வாரினுஞ் சிறப்புடையன்.

'மனத்தொடு பொருந்துதல்' மனத்திற்கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யு மது பயனுடைத் தென்பதாம். (ஙி)

உகசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ - ள்.) பொய்யாமை அன்ன புகழ் இல்லை - ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை யொத்த புகழ்க்காரணமில்லை ; எய் யாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா வறங்களையுந் தானே கொடுக்கும்.

'புகழ்' ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றினும் துறவறத்திற்கு உண்ணுமை முதலியவற்றினும் வருந்தல்வேண்டு மன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விரு வகைப்பயனையுந் தானே தருமென்பார், 'எய்யாமை எல்லாவற மும் தரு'மென்றார். (சு)

உகஅ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ - ள்.) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லனுயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமைமேற்று, எனை யது துணிவின் மேற்று. பல்வறங்களையும் மேற்கொண்டு செய்தற்

கருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றுய இதனையே மேற்கொண்டு தவருமற் செய்தல் நன்றென்பார், 'செய்யாமை செய்யாமை நன்' றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிற வறஞ்செய்கை நன்றுகாதென்பது அதனைற் போந்த பொருளாக்கி உரைப்பாருமூளர்.* பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தருமாற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது. (எ)

உகஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ - ள்.) புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீரானே யுண்டாம்; அகம் தூய்மை வாய்மை யான் காணப்படும் - அதுபோல மனந் தூய்தாந்தன்மை வாய்மையா னுண்டாம்.

காணப்படுவதுள்ளதாகலின் உண்டாமென் றுரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமைநீங்குதல். மனந்தூய்தாதல் மெய் யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லையென்றவாருயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டு மென்பதூஉம் பெற்றும். (அ)

உகக. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ - ள்.) எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்திருள் கடி யும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா; சான்றேர்க்கு விளக்கு பொய்யா விளக்கே - துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற் றிற்குப் போகாதவிருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்' கென்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாத விளக்கென்பது குறைந்துநின்றது; பொய்கூறுமையாகிய விளக்கென்றவாறு. இனி, இதற்குக் கல்வி முதலியவற்றுன்வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமேயென் றுரைப்பாருமூளர்.† (க)

* மணக்குடவர். † மணக்குடவர்.

கூoo. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும் வாய்மையி னல்ல பிற.

(இ - ள்.) யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல் களாகக் கண்ட நூல்களுள்; எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை - யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை.

மெய்யுணர்த்துவனவற்றை 'மெய்' யென்றார். அவையாவன: தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை யுள்ளவாறுணரவல்ல ராய்க் காமவெகுளிகளின்மையின் அவற்றையுணர்ந்தவாறே உரைக்க வும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதியெய்து தற்பொருட்டுக் கூறிய வாகமங்கள். அவை யெல்லாவற்றினும் இஃதொப்ப மூடிந்த தென்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது. (கo)

அதி. நக—வெகுளாமை

[அஃதாவது, சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட் டெதாய விடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மை பற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், **வாய்மையின்** பின் வைக்கப்பட்டது.]

கூoக. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்.

(இ - ள்.) சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்குமிடத்து அதனையெழாமற் றடுப்பானே அருளாற் றடுப்பானுவான்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் - எனைப் பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென், தடா தொழிந்தாலென்?

'செல்லிடம்' 'அல்லிட' மென்றது தவத்தாற் றன்னின் மெலியாரையும் வலியாரையும். வலியார்மேற் காவாவழியும் அத னான் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அற னில்லை யென்பார், 'காக்கினென் காவாக்காலென்' னென்றார். இதனான் வெகுளாமைக் கிடங் கூறப்பட்டது. (க)

கூo2. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து மில்லதனிற் றீய பிற.

(இ - ள்.) சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மே லெழின் தனக்கே தீதாம்; செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - மற்றை யெளியார்மே லெழினும் அதனிற் றீயன பிற இல்லை.

'செல்லாவிடத்துச் சினம்' பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே, எனையது இம்மைக்கட் பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலின், அதனிற் றீயன பிறவில்லை யென்றார். ஓரிடத்து மாகா தென்பதாம். (உ)

கூoக. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(இ - ள்.) யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர்மாட்டும் வெகுளியை யொழிக; தீய பிறத்தல் அதனான் வரும் - ஒருவர்க்குத் தீயனவெல்லாமுளவாதல் அதனான் வரும் ஆகலான்.

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமை யின் 'யார்மாட்டு' மென்றும், மனத்தாற் றுறந்தார்க்கு ஆகாதன வாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் 'தீயபிறத் தலதனான் வரு' மென்றுங் கூறினார். (ங)

கூoச. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(இ - ள்.) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - துறந் தார்க்கு அருளானுளவாய முகத்தின்க ணகைகையையும் மனத்தின்க ணுவகையையுங் கொன்று கொண்டெழுகின்ற சினமேயல்லது; பிற பகையும் உளவோ - அதனிற் பிறவாய பகைகளும் உளவோ? இல்லை.

துறவாற் புறப்பகையிலராயினும் உட்பகையாய் நின்று அருண் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமு மெய்துவித்த லான், அவர்க்குச் சின்த்தின்மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்று பாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது. (ச)

கூoடி. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(இ - ள்.) தன்னைத் தான் காக்கின் சினம் காக்க - தன்னைத் தான் துன்ப மெய்தாமற் காக்க நினைத்தானாயின், தன்மனத்துச் சினம் வாராமற் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் -

காவாஞயின், அச்சினம் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தற்"* பயத்ததாய தவத்தைப் பிறர்மேற் சாபம் விடுதற்காக இழந்து, அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கெய்துதலின், 'தன்னையே கொல்லு' மென்றார். "கொல்லச் சுரப்பதாங் கீழ்"† என்புழிப் போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்திநின்றது. (இ)

கூ0சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு மேமப் புணையைச் சுடும்.

(இ - ள்.) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி - சினமென்னும் நெருப்பு; இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் - தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும்.

'சேர்ந்தாரைக் கொல்லி' யென்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்த விடத்தைக் கொல்லுந்தொழில தென்றவாறு. 'சேர்ந்தாரை' யென உயர்திணைப் பன்மைமேல்வைத்து ஏனை நான்குபாலும் தங்கருத்தோடுகூடிய பொருளாற்றலாற் கொண்டார், ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையேயாகலின். சினமென்னு நெருப்பென்ற விதப்பு,‡ உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்தவிடத்தையே இந்நெருப்புச் சேராதவிடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டினமென்றது முற்றத் துறந்த தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் 'சுடு'மென்னுந் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பது பொருளாகக் கொள்க. 'ஏமப்புணை' ஏமத்தை உபதேசிக்கும் புணை. 'இனமென்னு மேமப்புணை' யென்ற ஏகதேசவுருவகத்தாற் பிறவிக்கடலை ளழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. தன்னையும் வீழ்த்து, எடுப்பாரையு மகற்றுமென்பதாம். (சு)

கூ0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(இ - ள்.) சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைத் தன்னுற்ற வுணர்த்துவதோர் குணமென்று தன்கட்

* திருக்குறள் - உசுடு. † நாலடியார் - உஎக.
‡ வேண்டியதொன்றை முடித்தற்கு வேண்டாதொன்றைக் கூறுதல்.

கொண்டவன் அவ்வாற்ற லிழத்தல்; நிலத்து அறைந்தான் கை பிழையாதற்று - நிலத்தின்கண் அறைந்தவன் கை அந்நிலத்தை யுறு தல் தப்பாதவாறுபோலத் தப்பாது.

வைசேடிகர்* பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொரு ளென்ற்போல, ஈண்டுக் 'குணம்' 'பொரு'ளெனப்பட்டது. 'பிழையாததற்'றென் பது குறைந்து நின்றது. இவை மூன்று பாட்டானும் வெகுண் டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது. (எ)

நஂஅ. இணரெரி தோய்வன்ன வின்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ - ள்.) இணர் எரி தோய்வு அன்ன இன்ன செயினும் - பலசுடரை யுடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தாலொத்த இன்னுத வற்றை ஒருவன் செய்தானுயினும்; வெகுளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின், அது நன்று.

இன்னுமையின் மிகுதி தோன்ற 'இணரெரி' யென்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்ன' வென்றும், அச் செயல் முனிவரையும் வெகுள்விக்குமென்பது தோன்றப் 'புணரி' னென்றுங் கூறினர். இதனுன் வெகுளாமையது நன்மை கூறப் பட்டது. (அ)

நஂஆ. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(இ - ள்.) உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ் செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையா ஞயின்; உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான் கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும்.

'உள்ளத்தா'லென வேண்டாது கூறியவதனுன், அருளுடை யுள்ளமென்பது முடிந்தது. அதனு னுள்ளாமையாவது அவ்வரு ளாகிய பகையை வளர்த்து அதனுன் மூற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல் லாம் இவ்வொன்றுனே யெய்து மென்பார், 'உள்ளியதெல்லா முட னெய்து' மென்றார். இதனுன் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. (க)

* விசேஷம் என்னும் பதார்த்தத்தை (கணதரது நியாயமதத்தை) யங்கீகரித்தவர் வைசேடிகர்.

ஈகo. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(இ - ள்.) இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார், உயிருடையராயினும், செத்தாரோடொப்பர்; சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார், சாதற்றன்மைய ராயினும், அதனையொழிந்தா ரளவினர்.

மிக்க சினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை 'இறந்தாரனைய' ரென்றும், சினத்தைவிட்டார்க்குச் சாக்கா டெய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோ டொப்ப ரென்றுங் கூறினர். இதனுள் அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப் பட்டது. (கo)

அதி. ஈஉ—இன்னசெய்யாமை

[அஃதாவது, தனக்கு ஒருபயனேக்கியாதல், செற்றம்பற்றி யாதல் சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை. இன்னுசெய்தல் வெகுளி யொழியவும் நிகழுமென்பது அறி வித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.]

ஈகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ - ள்.) சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னு செய்து பெறலாமாயினும்; பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்றார் கோள் - அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றான் மனந்தூயாரது துணிவு.

'உம்'மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் 'சிறப்' பென்றும், அதன் பயிற்சியான் வாயுவைவென் றெய்தப்படுதலின் எட்டுச் சித்திகளையுஞ் 'சிறப்பீனுஞ் செல்வ'மென்றும், காமம் வெகுளி மயக்க மென்னுங் குற்றங்களற்றமையான் 'மாசற்றார்' ரென்றுங் கூறினர். இதனால் தமக்கொரு பயனேக்கிச் செய்தல் விலக்கப் பட்டது.

ஈகஉ. கறுத்தின்னு செய்தவக் கண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ - ள்.) கறுத்து இன்ன செய்தவக்கண்ணும் - தம்மேற் செற்றங்கொண்டு ஒருவன் இன்னதவற்றைச் செய்தவிடத்தும்; மறுத்து இன்ன செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக் கின்னதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அவ்வின்னதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பால தென்ப தாம். (உ)

நகநு. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ - ள்.) செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான் முன்போ ரின்னமை செய்யாதிருக்கத் தன்மேற் செற்றங் கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்; உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும்.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல். (ங)

நகச. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ - ள்.) இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னாதவற் றைச் செய்தாரைத் துறந்தா ரொறுத்தலாவது; அவர் நாண நன் னயம் செய்து விடல் - அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தல்.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற் பாலவாயின. அவரை வெல்லு முபாயங் கூறியவாறு. இவை மூன்று பாட்டானுஞ் செற்றம்பற்றிச் செய்தல் விலக்கப்பட்ட டது. (ச)

நகஙு. அறிவினு னுகுவ துண்டோ பிறதினெய்
தந்நோய்போற் போற்றுக் கடை.

(இ - ள்.) அறிவினுன் ஆகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறறிந்த* அறிவினுலுவதொரு பய னுண்டோ? பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றுக்கடை - பிறி தோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்கு வந்தன போலக் குறிக்கொண்டு காவாவிடத்து.

* குறள்—உசசு உரைக்குறிப்புக் காண்க.

குறிக்கொண்டு காத்தலாவது கடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தன்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்களுறுவனவற்றை முன்னே யறிந்து உறுமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணிய வுடம்புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப்படப் 'பிறிதினோய்' யென்றும், மறப்பான் அது துன்புறினும் எமக்கின்னு செய்தலாமென் றறிந்து காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி 'அறிவினை நோவ துண்டோ' வென்றுங் கூறினார். இதனைத் சோர்வாற் செய்தல் விலக்கப்பட்டது. (இ)

ஈகசு. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(இ - ள்.) இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட்கின்னாதனவென அனுமானத்தாற் றானறிந்தனவற்றை; பிறன்கண் செயல் துன்னுமை வேண்டும் - பிறன்மாட்டுச் செய்தலை வேண்டாமை துறந்தவனுக்கு வேண்டும்.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப்படாமை யறிக. அறமும் பாவமு முளவாவது மனமுளதாகிய வழியாகலான், 'உணர்ந்தவை' யென்றார். (சு)

ஈகஎ. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணைசெய் யாமை தலை.

(இ - ள்.) மனத்தான் ஆம் மாணை - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை; எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் யாவர்க்குஞ் சிறிதாயினுஞ் செய்யாமை தலையாயவறம்.

ஈண்டு மனத்தானுகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் 'எஞ்ஞான்று' மென்றும், எளியார்க்கு மாகாமையின் 'யார்க்கு' மென்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் 'எனைத்தானு' மென்றுங் கூறினார். (எ)

ஈகஅ. தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னெவ்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

(இ - ள்.) தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் - பிறர் செய்யுமின்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாந் தன்மையை அனுபவித்தறிகின்றவன்; மன் உயிர்க்கு இன்னு செயல் என்கொல் - நிலைபேறுடைய பிறவுயிர்கட்குத் தானவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்!

இவ்வாறே இவை பிறவுயிர்க்கு மின்னுவென்பது அனுமானத்தானறிந்து வைத்துச் செய்கின்ற இப்பாவங் கழுவப்படாமையின், இன்னுதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தானுமறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் 'தா' னென்றும், அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற 'என்கொலோ' வென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது. (அ)

ஙகசு. பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் ருமே வரும்.

(இ - ள்.) பிறர்க்கு இன்னு முற்பகல் செய்யின் - துறந்தவர் பிறர்க்கின்னுதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின்; தமக்கு இன்னு பிற்பகல் தாமே வரும் - தமக்கின்னுதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாடிற் ருமேவரும்.

'முற்பகல்' 'பிற்பக' லென்பன பின்முன்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத்தொகை. தவமழிதலின், அங்ஙனங் கடிதினும் எளிதினும் வரும்; அதனுல் அவை செய்யற்க வென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின், அச்செயருனே தமக்கின்னுதன வாய் வருமென உபசார வழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க. (கூ)

ஙஉ0. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

(இ - ள்.) நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - இன்னுதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்தார்மேலவாம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - அதனுல் தம்முயிர்க்கு இன்னுதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்யார்.

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு வினைவும் அதுவே* யாகவின், 'நோயெல்லா நோய்செய்தார் மேலவா' மென்றுர். இது சொற்பொருட்பின்வருநிலை. இவை யிரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (கo)

---

*சிவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - ககூச.

அதி. நந—கொல்லாமை

[அஃதாவது, ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையனவீறுய உயிர்களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது மேற் கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறுத வறங்களையும் அகப்படுத்துநிற்றலின் இறுதிக்கண் வைக்கப்பட்டது.]

நஉக. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.

(இ - ள்.) அறவினை யாது எனின் கொல்லாமை - அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஒருயிரையுங் கொல்லாமையாம்; கோறல் பிறவினை எல்லாம் தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச்செய்கைகளெல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான்.

'அறம்' சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின், கொல்லாமையை 'அறவினை' யென்றார். ஈண்டுப் 'பிறவினை' யென்றது அவற்றின் விளைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பம் ஏனைப் பாவங்களெல்லாங் கூடியும் விளைக்க மாட்டா வென்பதாம். கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள்கூறி, அதற்கேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாறுயிற்று. (க)

நஉஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(இ - ள்.) பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் - உண்பதனைப் பகித்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு ஐவகையுயிர்களையு மோம்புதல்; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்த வறங்களெல்லாவற்றினுந் தலையாய வறம்.

பல்லுயிருமென்னும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. 'ஓம்புதல்' சோர்ந்துங்கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையா வுறுப்பாகலின், அச்சிறப்புத்தோன்ற, அதனை இறந்தகால வினையெச்சத்தாற் கூறினர். எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோ' ரென்றும், அவரெல்லோர்க்கும் ஒப்பமுடிதலான் இது 'தலை'யாயவற மென்றுங் கூறினர். (உ)

கஉஉ. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(இ - ள்.) ஒன்றுக நல்லது கொல்லாமை-நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னை டிணைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை ; பொய்யாமை அதன் பின்சார நன்று - அஃதொழிந்தால் பொய்யாமை அதன்பின்னே நிற்க நன்று.

நூலோர் தொகுத்தவறங்களென்பது அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேற் 'பொய்யாமை பொய்யாமையாற்றி'னெனவும். 'யாமெய்யாக் கண்டவற்றுளில்லை' யெனவுங் கூறினாராகலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐய நிக ழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன்பின்சாரப் பொய்யாமை நன்' றென்றார் ; முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப் 'பின்சார நன்' றென்றது, நன்மைபயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப்பற்ற அது நிரிந்துவருதலானென வுணர்க. இவை மூன்று பாட்டானும் இவ்வறத்தினது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

கஉச. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(இ - ள்.) நல்லாறு எனப்படுவது யாது எனின் - மேற்கதி வீடு பேறுகட்கு நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின் ; யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி.

'யாதொன்று' மென்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு காத்தல் வழுவாமற் காத்தல். இதனால் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது. (உ)

கஉஎ. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(இ - ள்.) நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தாரெல்லாருள்ளும் ; கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன்.

பிறப்பு நின்றநிலையாவது இயங்குவ நிற்பவென்னுமிருவகைப் பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமே

யாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமய வேறுபாட்டாற் பல வாமாகலின், 'நீத்தாருளெல்லா'மென்றார். இதனால் இவ்வறம் மற வாதவ னுயர்ச்சி கூறப்பட்டது. (நி)

ஙூஉசு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று.

(இ - ள்.) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாண் மேல் - கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ்நாளின்மேல்; உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிருண் ணுங் கூற்றுச் செல்லாது.

மிகப்பெரிய வறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்ப ரென்னும் அறநூற்றுணிபுபற்றி, இப்பேரறஞ் செய்தான்றானுங் கொல்லப்படான்; படாஞ்சுவே, அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், 'வாழ்நாண்மேற்' கூற்றுச் 'செல்லா'தென்றார்; செல்லாதாகவே, கால நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுமென்பது கருத்து. இதனால் அவர்க்கு வரு நன்மை கூறப்பட்டது. (சு)

ஙூஉஎ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை.

(இ - ள்.) தன் உயிர் நீப்பினும் - அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினீங்கிப் போமாயினும்; தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பினீக்குந் தொழி லைச் செய்யற்க.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்கவென் றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்த லும் நோக்கி. இனித் 'தன்னுயிர் நீப்பினு'மென்பதற்குச் சாந்தி யாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினு மென்றுரைப்பாரு முளர். பிற செய்தலுமாகாமையின், அஃதுரையன்மை யறிக. (எ)

ஙூஉஅ. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றாகு மாக்கங் கடை.

(இ -ள்.) நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கட்கொன்றால் இன்பமிகுஞ் செல்வம் பெரிதா மென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும்; சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை - துறவா னமைந்தார்க்கு ஓருயிரைக் கொல்லவருஞ் செல்வங் கடை.

'இன்பமிகுஞ் செல்வ'மாவது தாமுந் தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கேதுவாகலானும், வீடாகிய ஈறிலின்பமெய்துவார்க்குக் 'கடை' யெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகாதென்றமையின், விதி விலக்குக்கள் தம்முண் மலையாமை விளக்கியவாறுயிற்று. இஃதில்லறமன்மைக்குக் காரணம். இவை யிரண்டு பாட்டானும் கொலையது குற்றங் கூறப்பட்டது. (அ)

கூஉக. கொலைவினைய ராகிய மாக்கள்* புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(இ - ள்.) கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலையுடையராகிய மாந்தர்; புன்மை தெரிவார் அகத்துப் புலைவினையர் - அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர்.

'கொலைவினைய' ரென்றதனான், வேள்விக்கட் கொலையன்மையறிக. 'புலைவினைய' ரென்றது தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவரென்பதாம். (க)

கூகூ0. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(இ - ள்.) செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர் - நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை; உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவ ரென்று சொல்லுவர் வினைவிளைவுகளை யறிந்தோர்.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை யெனக் கூட்டுக. 'செயிருடம்பின'ராதல், " அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்—துக்கத் தொழுநோ யெழுபவே " †என்பதனானு மறிக. மறுமைக்கண் இவையுமெய்துவரென்பதாம். இவை யிரண்டு பாட்டானுங் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (க0)

அருளுடைமைமுதற் கொல்லாமைமீறுகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களுமடங்கும்; அஃதறிந்தடக்கிக் கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

---

* 'மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சி யில்லாதார்' என்பர் நச்சினார்க்கினியர்.

† நாலடியார் - கஉகூ.

ஞானம்

இனி, அவற்றின் பயனுகிய ஞானங்கூறிய தொடங்கினர். ஞானமாவது வீடுபெயக்கு முணர்வு. அது 'நிலையாமை' முதல் 'அவாவறுத்த'லிறுதியாக நான்கதிகாரத்து ளடக்கப்பட்டது.

அதி. கச— நிலையாமை

[அவற்றுள், நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற் புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றி லரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும்,* நிலை வேறுபட்டு வருதலாற் கணந் தோறும் பிறந்திறக்கு மென்பாரும்,† ஒருவாற்றுன் வேறுபடுதலும் ஒருவாற்றுன் வேறுபடாமையு மூடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடைய வென்பாரு‡ மெனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தராவர்; எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றுர். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்று விடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.]

கஉக. நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(இ - ள்.) நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை-நிலையுதலிலவாகிய பொருள்களே நிலையுதலுடையவென்று கருதுகின்ற புல்லியவறிவினையுடையராதல்; கடை - துறந்தார்க்கிழிவு.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற் கேதுவாகலின், அது வீடெய்துவார்க் கிழுக்கென்பது இதனுற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்துக் கேதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனை யனுபவிக்கும் யாக்கையின்கண்ணு மாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப. (க)

கஉஉ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவினிற் றற்று.

---

* அத்துவித சித்தாந்திகள். † பௌத்த சித்தாந்திகள்.
‡ பிற சித்தாந்திகள்.

(இ ள்.) பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவை குழாத்தற்று - ஒருவன் மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்; போக்கும் அது விளிந்தற்று - அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக் குழாம் போயினாற்போலும்.

'பெருஞ்செல்வ' மெனவே துறக்கச்செல்வமு மடங்கிற்று. 'போக்கு'மென்ற எச்சவும்மையான், வருதலென்பது பெற்றும். அக் குழாங் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கட் பஃறித்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போல, செல்வ மும் ஒருவனல்வினை காரணமாக அவன்மாட்டுப் பஃறித்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமென்றதாயிற்று. (உ)

நகநக. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல்.

(இ - ள்.) அற்கா இயல்பிற்றுச் செல்வம் - நில்லாதவியல்பினை யுடைத்துச் செல்வம்; அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் - அதனைப் பெற்றால், அதனாற் செய்யப்படும் அறங்களே அப்பெற்ற பொழுதே செய்க.

அல்காவென்பது திரிந்துநின்றது. ஊழுள்ளவழியல்லது துறக் தாராற் பெறப்படாமையின் அது 'பெற்றா' லென்றும், அஃதில்வழி நில்லாமையின் 'ஆங்கே'யென்றுங் கூறினார். அதனாற் செய்யப்படும் அறங்களாவன பயனெக்காது செய்யப்படுங் கடவுட் பூசையும், தான மும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடு பயத்தலின், அவற்றை 'அற்குப' வென்றும், 'செயல்' என்றுங் கூறினார். இவை யிரண்டு பாட்டானும் செல்வநிலையாமை கூறப்பட்டது. (ங)

நகநச. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக்காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்; உணர்வார்ப் பெறின் - அஃதுணர்வாரைப் பெறின்.

காலமென்னும் அருவப்பொருள் உலகியனடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவ தல்லது தானுங் கூறுபடாமையின் 'நாளெனவொன்றுபோ' லென் றும், அதுதன்னை வாளென்றுணர மாட்டாதார் நமக்குப்பொழுது

போகா நின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலிற் 'காட்டி' யென்றும், இடைவிடாதீர்தலான் வாளின் வாயதென்றும், அஃதீர் கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப்பெறி'னென் றுங் கூறினர். 'உயி' ரென்னுஞ் சாதியொருமைப் பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். 'வா' ளென் பது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை யீர்வதொரு வாளாமென் றுரைப்பாருமுளர்:* 'என'வென்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், 'ஒன்று போற் காட்டி' யென்பதற்கு ஒருபொருட்சிறப் பின்மையானும் 'அது' வென்பது குற்றியலுகரமன்மையானும், அஃதுரையன்மை யறிக. (சு)

கஉகஎ. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(இ - ள்.) நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் - உரை யாடாவண்ணம் நாவையடக்கி விக்குளெழுவதற்குமுன்னே; நல் வினை மேற்சென்று செய்யப்படும் - வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும்.

மேலேக்கி வருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலே யன்றிச் சொல்லலு மாகாமையானும் 'வாராமு' னென்றும், அது தான் இன்னபொழுது வருமென்பதின்மையின் 'மேற்சென்' றென்றுங் கூறினர். மேற்சேறல் - மண்டுதல். நல்வினை செய்யு மாற்றின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. (இ)

கஉகஅ. நெருநற் றுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(இ - ள்.) ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து - ஒருவன் நெருநலுளனாயினன், அவனே இன் றில்லையாயினனென்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து; இவ்வுலகு - இவ்வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையுமுணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கு முளவாயினும், சிறப்புப்பற்றி ஆண் பாற்கே கூறினர். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம். (அ)

கஉகஉ. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

* மணக்குடவர்.

(இ - ள்.) ஒருபொழுதும் வாழ்வது அறியார் - ஒருபொழுதளவும் தம்முடம்பு முயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்; கோடியும் அல்ல பல கருதுப - மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை* நினையாநிற்பர் அறிவிலாதார்.

இழிவுசிறப்பும்மையாற் 'பொழு'தென்பது ஈண்டுக் கணத்தின் மேனின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்த்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று. பலவாய நினைவுகளாவன; பொறிகளானுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாமுயலுமாறும், அவற்றிற்கு வரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனான் நட்டாரை யாக்குமாறும், கள்ளாரை யழிக்குமாறும், தாம் அவ்வின் பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரதியல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் 'கருதுப' வென்பதனை அஃறிணைப் பண்மைப் பெயராக்கி உரைப்பாருமுளர். (எ)

நஉஅ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.

(இ - ள்.) குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - மூன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து; உடம்பொடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்குமுளதாய நட்பு.

'தனித்தொழிய' வென்றதனான், மூன்றனியாமை பெற்றும். அஃதாவது, கருவுந் தானும் ஒன்றுபுய்ப் பிறந்து வேறுந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல்; அதனால் அஃது உடம்பிற்குவமையாயிற்று; அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற்போகலின், 'புள்' உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினர், பறந்துபோதற் றொழிலான் உயிரோடொப்புமையெய்துவது அதுவேயாகலின். 'நட்' பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப்போத லுணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாறுகலின், வினைவயத்தாற்கூடிய தல்லது நட்பில வென்ப தறிக. இனிக் 'குடம்பை' யென்பதற்குக்

* நல்வழி - உஅ.

கூடென்றுரைப்பாருமூளர்.* அது புள்ளுடன் மூன்றுமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக. (அ)

கூகூக. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

(இ - ள்.) சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடொக்கும்; பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும் - அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடொக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றுற்போலச் 'சாக்காடு'ம் 'பிறப்பு'ம் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து.† நிலையாமையே நிலை பெற்றவா றறிவித்தற்குப் பிறப்பும் உடன்கூறப்பட்டது. (கூ)

கூசூ0. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட் டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(இ - ள்.) உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - வாத முத லியவற்றின் இல்லாய வுடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு; புக்கில் அமைந்தின்றுகொல் - எஞ்ஞான்று மிருப்பதோரில் இது காறும் அமைந்ததில்லேபோலும்!

அங்நோய்கள் இருக்கவமைந்த ஞான்று இருத்தும், வெகுண்ட ஞான்று போயும், ஒருடம்பினும் நிலைபெறுது வருதலால், 'துச்சி லிருந்த' வென்றார். பின் புறப்படாது புக்கேவிடுமில் அமைந்த தாயின், பிறரிற்களுள் ஒதுக்கிராதென்பதாம்; ஆகவே உயிரோடு கூடிநிற்பதோருடம்பு மில்லையென்பது பெறப்பட்டது. இவை யேழு பாட்டானும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழி கின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஒரோ வழிப் பிறந்தவளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென் பது தெளியப்படாமையும், உயிர் நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற் றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க் குரியவன்மையு மென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறிய வாறு கண்டுகொள்க. (கo)

---

* மணக்குடவர்.

† மணிமேகலை, கள - ஆம் காதை, வரி - அசு, அள.

அதி. நடு—துறவு

[அஃதாவது, புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.]

கூசக. யாதனின் யாதனி னீங்கியா னெஞ்சே
லதனி னதனி னிலன்.

(இ - ள்.) யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் யாதொருபொருளின் யாதொருபொருளின் நீங்கினான் ; அதனின் அதனின் நோதல் இலன் - அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதலிலன்.

அடுக்குக்கள் பன்மை குறித்துநின்றன. நீங்குதல் - துறத்தல் ஈண்டுத் 'துன்ப' மென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கட் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை. அஃதன்றி ஒரோவொன்றாக விடினும் அவற்றான் வருந் துன்பமிலனாமென்பது கருத்து. (க)

கூசஉ. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(இ - ள்.) துறந்தபின் ஈண்டு இயற்பால பல - எல்லாப் பொருள்களையுந் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல ; வேண்டின் உண்டாகத் துறக்க - அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறத் துறக்க.

அவ்வின்பங்களாவன, அப்பொருள்கள் காரணமாக மனமொழி மெய்கள் அலையாது நிற்றலானும், அவை நன்னெறிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கட் டுறந்தான் அவற்றை நெடுங்கால மெய்துமாகலின், 'உண்டாகத் துறக்க' வென்றார். 'இன்பங்க'ளென்பதும் 'கால' மென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கட் டுன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்களுளவாதலு முண்டென்பதாம். (உ)

கூசஙூ. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ - ள்.) ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் - வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய

ஐம்புலன்களையுங் கெடுத்தல்வேண்டும் ; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத் தாம் படைத்த பொருண்முழுதையும் ஒருங்கே விடுதல்வேண்டும்.

'புல' மென்றது அவற்றை நுகர்தலே. அது மனத்தைத் துன் பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டு நெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனை 'யடல்வேண்டு' மென்றும், அஃது அப்பொருள்கண்மேற் செல்லின் அந்துகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப் படாமையின், 'வேண்டியவெல்லா மொருங்கு' விடல்வேண்டு மென்றுங் கூறினர். (கூ)

நகச. இயல்பாகு நோன்பிற்கொன்றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் - பற் றப் படுவதொருபொருளுமில்லாமை தவஞ்செய்வார்க்கு இயுல்பாம் ; உடைமை பெயர்த்து மற்றும் மயலாகும் - அஃதன்றி, ஒன்றுயினு முடைமை அத்தவத்தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற் கேதுவாம்.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'நோன்' பென்ப தூஉம் 'மய' லென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலா னென்பது திரிந்து நின்றது. நோன்பைப் பெயர்த்தலானென வேற்றுமைப் படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாத வழியும், அது சார்பாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற் கிடையூடாய் மனக்கலக்கஞ்செய்யு மென்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது. (ச)

நகசஞ. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

(இ - ள்.) பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பறுத்தலே மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம் பும் மிகையாம் ; மற்றும் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பாடுளவாதல் என்னும் !

'உடம்' பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகையிந்திரிய வுணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினை விளைவுகளோடுங்

கூடிய மனம்; இது நுண்ணுடம்பெனவும்படும். இதன்கட் பற்று நிலையாமையுணர்ந்ததுணையான் விடாமையின், விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப.* இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது வரு தலையுணர்ந்து இவற்றாலுய கட்டினை இறைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், 'உடம்பு மிகை' யென்றார். இன்பத் துன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம்புகளும் 'யா' னெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது. (இ)

நஅசுஉ. யானெனை தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(இ - ள்.) யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - தானல்லாத வுடம்பை யானென்றும் தன்னுடையதில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச்செய்தற் கேது வாகிய மயக்கத்தைக் கெடுப்பான்; வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை யெய்தும்.

மயக்கம் - அறியாமை. அதனைக் 'கெடுத்த' லாவது தேசிகர்பாற் பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின்கட் பற்றை விடுதல். சிறப் பும்மை விகாரத்தாற்றொக்கது. இதனுன் இவ்விருவகைப் பற்றினை யும் விட்டார்க்கே வீடுளதென்பது கூறப்பட்டது. (சு)

நஅசுஎ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(இ - ள்.) பற்றினைப் பற்றி விடாஅதவர்க்கு - இருவகைப் பற்றினையும் இறுகப்பற்றி விடாதாரை; இடும்பைகள் பற்றி விடாஅ - பிறவித்துன்பங்கள் இறுகப்பற்றி விடா.

இறுகப் பற்றுதல் - காதல்கூர்தல். 'விடாதவர்க்' கென்பது வேற்றுமை மயக்கம். இதனுல் இவை விடாதவர்க்கு வீடில்லை யென்பது கூறப்பட்டது. (எ)

நஅசுஅ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(இ - ள்.) நீரத் துறவத்தார் தலைப்பட்டார் - மூற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனந் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார்.

* குறள்-நடு0.

'மூற்றத்துறத்த'லாவது பொருள்களையும் இருவகையுடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல். அங்ஙனந் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் 'தலைப்பட்டா' ரென்றும் பொய்ந்நெறி கண்டே பிறப்புவலையு ளகப்படுதலின் 'மயங்கி' யென்றுங் கூறினர். (அ)

கூசகூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

(இ - ள்.) பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இருவகைப்பற்று மற்றபொழுதே, அப்பற்றறுத்தி அவன் பிறப்பை யறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அவை யறுதபொழுது அவற்றுற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும். (கூ)

காரணமற்றபொழுதே காரியமும் அற்றதா முறைமைபற்றி, 'பற்றற்றகண்ணே' யென்றார்; "அற்றது பற்றெனி—லுற்றது வீடு"* என்பதூஉம் அதுபற்றி வந்தது. இவையிரண்டு பாட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

கூகூo. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ - ள்.) பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக் கொள்க; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்க ணுபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ஈண்டும் பொதுவகையாற் 'பற்றற்றார்' னென்றார். 'பற்றற்றான் பற்' றென்புழி ஆறாவது செய்யுட் கிழமைக்கண் வந்தது. ஆண்டுப் 'பற்'றென்றது பற்றப்படுவதனை. 'அதன்கணுபாய'மென்றது தியானசமாதிகளை. 'விடாதுவந்த பற்' றென்பது அநாதியாய் வரும் உடம்பிற் பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனுற் கூறப்பட்டது. (கo)

———

* திருவாய்மொழி, உ-ம் திருப்பதிகம்-டு.

அதி. நக—மெய்யுணர்தல்

[அஃதாவது, பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களானன்றி உண்மையானுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. இதுவும் 'பற்றற்றான் பற்றினைப்' பற்றியவழி உளதாவதாகலின், அக்காரண வொற்றுமை பற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.]

நஙிக. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளான மாணப் பிறப்பு.

(இ - ள்.) பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்றுணரும் விபரீதவுணர்வானே உளதாம்; மாணப் பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு.

அவ்'விபரீதவுணர்' வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளுமில்லையெனவும், மற்றுமித்தன்மையவுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குக்களே மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட் கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப் பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின், 'மாணப் பிறப்' பென்றார். இதனைற் 'பிறப்புத்' துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சை யென்பதூஉங் கூறப்பட்டன. (க)

நஙிஉ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ - ள்.) மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு-அவிச்சையினீங்கி மெய்யுணர்வுடையராயினார்க்கு; இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம் மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்.

'இருள்' நரகம்;* அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேனின்றது. 'நீங்கி' யெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவென்பதன் றிரிபெனினு மமையும். 'மருணீங்கி' யென்னும் வினையெச்சம் 'காட்சியவ' ரென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது, 'மாசறு காட்சி' யென்றது கேவலவுணர்வினை. இதனால்

*குறள்-கஉக.

வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருளென்பதூஉங் கூறப்பட்டன. (உ)

கூருக. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வான நணிய துடைத்து.

(இ - ள்.) ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு ; வையத்தின் வானம் நணியது உடைத்து - எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதலுடைத்து.

'ஐய' மாவது பலதலையாய வுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றிற் றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ, கயிறோ அரவோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர் மதங்களைந்து தம்மத நிறுத்தல் எல்லாச் சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழுமையத்தினையோக முதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர்வராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தா' ரென்றும், அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டை யுலகியலுணர்வு தூர்த்து வருமாகலின் அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின் வான நணியதுடைத்' தென்றுங் கூறினர் ; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது. (ஊ)

கூருச. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(இ - ள்.) ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய வுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்தாய வழியும், அதனாற் பயனில்லையாம் ; மெய்யுணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினையுணர்தலில்லாதார்க்கு.

'ஐந்தாகியவுணர்வு' மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக்கணிற்றல். அங்ஙனங் கின்றவழியும் வீடு பயவாமையின் 'பயமின்' றென்றார். சிறப்பும்மை எய்துதற்கருமை விளக்கிநின்றது. இவை யிரண்டு பாட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடுளதென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது. (ச)

கூருஞ. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - யாதொரு பொருள் யாதோ ரியல்பிற்ருய்த் தோன்றினும்; அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அத் தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறு யிற்று. அஃதாவது, "கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறை" என்றவழி அரசனென்பதோர் சாதியும் சேரமானென்பதொரு குடியும், வேழ நோக்கினையுடையா னென்பதோர் வடிவும், சேயென்பதோரியற் பெயரும், மாந்தரஞ் சேரலிரும்பொறை யென்பதோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனையாகலின், அவ்வாறுணராது நிலமுதல் உயிரீருகிய தத்துவங்களின் றொகுதியென வுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களு ளொடுக்கிக்கொண்டு சென்ருற் காரண காரியங்க ளிரண்டுமன்றி முடிவாய் நிற்பதனை யுணர்தலாம். 'எப்பொரு'ளெனற் பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுணரப்படும். இதனுன் மெய்யுணர்வின திலக்கணங் கூறப்பட்டது. (இ)

கூடுசு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ - ள்.) ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுன் மெய்ப்பொருளை யுணர்ந்தவர்; மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் - மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை யெய்துவர்.

'கற்' றென்றதனுல் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும் 'ஈண்' டென்றதனுல் வீடுபேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றும். 'ஈண்டு வாராநெறி' வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனையென்பன. அவற்றுட் கேள்வி இதனுற் கூறப்பட்டது. (ஈ)

கூடுஎ. ஒர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
போர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ - ள்.) உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - அங்ஙனங்கேட்ட உபதேசமொழிப்பொருளே ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றானுந் தெளியவாராய்ந்து, அதனுன் முதற் பொருளே யுணருமாயின்; பேர்த்துப் பிறப்பு உள்ளவேண்டா - அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா.

ஒருதலையா வோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்து மாறும் மேலே*யுரைத்தாம். இதனுல் விமரிசந் கூறப்பட்டது. (எ)

கஉஅ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சைகெட; சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

'பிறப்பென்னும் பேதைமை' யெனவும், 'சிறப்பென்னுஞ்செம் பொரு'ளெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனைய நான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகலால், வீடு 'சிறப்' பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், தோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையிற் றூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல்பற்றி, அதனைச் 'செம்பொரு' ளென்றார். மேல்† 'மெய்ப்பொரு' ளெனவும், 'உள்ள' தெனவுங் கூறியதூஉம் இதுபற்றி யெனவுணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சைகெட்டு அதனேடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல்; இதனைச் சமாதியெனவுஞ் சுக்கிலத்தியான‡ மெனவுங் கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லா வாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்க வுபாயமில்லையென்ப தறிக. இதனுற் பாவனை கூற்பட்டது. (அ)

---

*உசாட - ம் குறளுரை.

†இவ்வதிகாரத்தின் ரு-ஆம், எ-ஆம் குறள்கள்.

‡சிவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - சஅஉ.

நஉஙக. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.*

(இ - ள்.) சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம்பொருளே யுணர்ந்து இரு வகைப்பற்றுமற ஒழுகவல்லனாயின்; சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா - அவனை மூன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக்கங்களே யழித்துப் பின்சாரமாட்டா.

ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் 'சார்' பென்றார். ஈண்டு 'ஒழுக்க' மென்றது யோகநெறி யொழுகுதலே. அஃது இமயம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின் பரப் பெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்;† யோக நூல்களுட்காண்க. 'மற்றுச் சார்தரா' வென விகையும். சாரக்கடவனவாய் நின்ற துன்பங் களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி யீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித் தனவும் பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவுமொழியப் பின்னு மனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின்முன் னிருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், 'அழித்துச் சார்தரா' வென்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப் பிற்குக் காரணமாகலான், நல்வினைப்பயனும்‡ 'நோ'வெனப்பட்டது. மேன்மூன் றுபாயத்தானும் பரம்பொருளே யுணரப் பிறப்பறுமென் றார். அஃதறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யுமென் னுங் கடாவை யாசங்கித்து அவை ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடைய வுயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பின்மையானுங் கெட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது. (க)

நஉஙஅ. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(இ - ள்.) காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சையென்னு மிக்குற்றங்கண் மூன்றனுடைய பெய ருங்கூடக் கெடுதலான்; நோய் கெடும் - அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா.

---

*திருக்களிற்றுப்படியார் - நஉ.
†தொல்; பொருள் - புறத்திணையியல், சூ. எடு, நச்சினார்க்கினியருரை.
‡குறள், சூ - ன் உரை.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லு மாசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட்செல்லுங் கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணுமடங்குதலான், 'மூன்' றென்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கண் மூன்றுங் காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலுமாகலின், அம்மிகுதி தோன்ற 'இவை மூன்றுமகெட' வென்றார். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'கெட' வென்பது எச்சத்திரிவு. 'நோ' யென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களுமில்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களுமிலவாதல் மெய்யுணர்வின் பயனுகலின், இவையிரண்டு பாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம். (கO)

அதீ. நஎ—அவாவறுத்தல்

[அஃதாவது, முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருளுணர்வானறுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.]

கூசுக. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(இ - ள்.) எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பு ஈனும் வித்து - எல்லா வுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து; அவா என்ப - அவா வென்று சொல்லுவர் தூலோர்.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்தவினையும், அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், அக்கதிக்கணவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட்கொண்டு செல்லுமாகலான், அதனைப் 'பிறப்பீனும் வித்'

தென்றும், கதிவயத்தானுளதாய அவ்வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மைதிரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங் காலவேறு பாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் 'எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்று,' மென்றும், இஃது எல்லாச் சமயங்கட்குமொத்தலான் 'என்ப' வென்றுங் கூறினர். இதனாற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது. (க)

உசுஉ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.*

(இ - ள்.) வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்புத் துன்பமாதலறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டும்; அது வேண்டாமை வேண்ட வரும் - அப்பிறவாமைதான் ஒரு பொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானே யுண்டாம்.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களாற்றுன்ப முற்று வருகின்றமையை யுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணே யாகலிற் பிறவாமையை 'வேண்டு' மென்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளை யவாவின் அது 'பிறப்பீனும் வித்' தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் அது 'வேண்டாமை வேண்ட வரு' மென்றுங் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமை யின், 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. (உ)

உசுஉ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(இ - ள்.) வேண்டாமை அன்ன விழுசெல்வம் ஈண்டு இல்லை - ஒருபொருளையும் அவாவாமையை யொக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கணில்லை; ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி அவ்வுலகவேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத் தின்கண்ணும் அதனை யொப்பதில்லை.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேலுக்கக் கீழாத லுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை 'விழுச் செல்வ' மென்றும், அதற்கு இரண்டுலகினு மொப்பதின்மையின் 'அஃதொப்பதில்லை' யென்றுங் கூறினர். ஆகமவளவைபோலாது காட்சியளவையான் எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள் செல் வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும்,

* திருக்களிற்றுப்படியார். ச0.

விழுச்செல்வமா மெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (கூ)

கூசூச. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ - ள்.) தூஉய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அது வாய்மை வேண்ட வரும் - அவ்வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே யுண்டாம்.

வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் 'தூய்மை' யென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் 'தூய்மையென்ப தவாவின்மை' யென்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மையென்றுங் கூறினார். 'மற்று' மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல், இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல், வீட்டிற்குப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்பதூஉம் அது வரும்வழியும் இதனுற் கூறப்பட்டன. (ச)

கூசூடு. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

(இ - ள்.) அற்றவர் என்பார் அவா அற்றார் - பிறவியற்றவ ரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரே யேதுவாகிய அவாவற்றவர்கள்; மற்றையார் அற்றாக அற்றது இலர் - பிறவேதுக்களற்று அஃதொன்றுமாறுதவர்கள், அவற்றுள் சில துன்பங்களற்றதல்லது அவர்போற் பிறவியற்றிலர்.

இதனுல் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறப்பட்டது. (டு)

கூசூசு. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ - ள்.) ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்த லீறுகிய காரணங்களெல்லாமெய்தி அவற்றுன் வீடெய்தற்பாலனை ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்க வல்லது அவா; அஞ்சுவதே அறன் - ஆகலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது.

'ஒரு' மென்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மைவேண்டலையொழிந்து பராக்காற் காவானுயின்,

அஃதிடமாக அவனறியாமற் புகுந்து பழையவியற்கையாய் நின்று பிறப்பினையுண்டாக்குதலான், அதனை 'வஞ்சிப்ப'தென்றார். காத்தலாவது வாய்மை வேண்டலே இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதூஉங் கூறப்பட்டன. (சு)

உகுசுஎ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றுன் வரும்.

(இ - ள்.) அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவினையஞ்சித் துவரக்கெடுக்க வல்லனாயின்; தவா வினை தான் வேண்டும் ஆற்றுன் வரும் - அவனுக்குக் கெடாமைக்கேதுவாகிய வினை தான் விரும்புகெறியானே யுண்டாம்.

கெடாமை பிறவித்துன்பங்களா னழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. 'வினை' சாதியொருமை. 'தான் விரும்புகெறி' மெய்வருந்தாகெறி. 'அவாவினை' மூற்றவறுத்தானுக்கு வேறறஞ்செய்யவேண்டா; செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

உகுசுஅ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாவது மேன்மேல் வரும்.

(இ - ள்.) அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவாவில்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமுமில்லை; அஃது உண்டேல் தவாவது மேன்மேல் வரும் - ஒருவற்குப் பிற காரணங்களெல்லாமின்றி அஃதொன்று முண்டாயின், அதனானே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகவின், ஈண்டுத் 'துன்ப'மென்றது இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. 'தவாவது மேன்மேல் வரு' மென்றதனான் மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றும். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது. (அ)

உகுசுக. இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ - ள்.) அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடி

மாயின் ; ஈண்டும் இன்பம் இடையறாது - அவன் வீடுபெற்றவழியே யன்றி உடம்போடு நின்றவழியும் இன்ப மிடையறாது.

'துன்பத்துட் டுன்பம்' எனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந்துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணும் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரிய மாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துட்டுன்ப' மென்றும், அது கெட்டார்க்கு மனந்தடுமாறாது நிரம்பி நிற்றலான், 'ஈண்டு மின்பமிடையறா' தென்றும் கூறினர். இனி 'ஈண்டு' மென்பதற் குப் பெருகுமென் றுரைப்பாருமுளர்.* இதனால் அவாவறுத்தார் வீட் டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது. (க)

கஉ०. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ - ள்.) ஆரா இயற்கை அவா நீப்பின் - ஒருகாலும் நிரம் பாத வியல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின் ; அந் நிலையே பேரா இயற்கை தரும் - அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையை யியல்பைக் கொடுக்கும்.

'நிரம்பா' மையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமை யின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர் தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவற்சிகளும் பிறப்புப் பிணி மூப் பிறப்புக்களும் மூதலாயினவின்றி உயிர் நிரதிசயவின்பத்ததாய் நிற்றலின், வீட் டினைப் 'பேராவியற்கை' யென்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே 'தரு' மென்றுங் கூறினர். "நன்றுய் ஞானங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்— தொன்றுய்க் கிடந்த வரும்பெரும்பா ழூலப்பி லதனை யுணர்ந் துணர்ந்து—சென்றுங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசை யற்று—லன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே"† என்ப தும் இக்கருத்தேபற்றி வந்தது. இந்நிலைமை யுடையவனை வட நூலார் சீவன்முத்தனென்ப. இதனால் வீடாவது இதுவென்பதூஉம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே யுளதாமென்பதூஉங் கூறப்பட்டன. (கo)

துறவறவியல் முற்றிற்று.

---

* மணக்குடவர். † திருவாய்மொழி, எஅ - ஆம் திருப்பதிகம் - சு.

ச. ஊழியல்

இவ்வதிகாரம் இம்மை மறுமை வீடென்னு மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறங்கூறினார்; இனிப் பொருளுமின்ப மும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறு கின்றார்.

அதி. ஙஅ—ஊழ்

[அஃதாவது, இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒருபொருட்கிளவி. இது பொரு ளின்பங்க ளிரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப் படாமையானும், மேற்கூறிய அறத்தோ டியையுடைமை யானும், அதனதிறுதிக்கண் வைக்கப்பட்டது.]

ஙஎக. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(இ - ள்.) கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும் - ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சியுண்டாம்; போகு ஊழால் மடி தோன்றும் - அஃ தழிதற்குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம்.

'ஆகூழ்', 'போகூ' ழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத் தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு - மடி. பொருளிலக்கவழிவுகட்குத் துணைக்காரணமாகிய முயற்சி மடிகளையுந் தானே தோற்றுவிக்குமென்பது கருத்து. (க)

ஙஎஉ. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

(இ - ள்.) இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப் படுக்கும் - ஒருவனுக்கு எல்லாவறிவு மூளவாயினும் கைப்பொரு ளிழத்தற்கேதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ் உற்றக்கடை அகற்றும் - இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃததனை விரிக்கும்.

'கைப்பொரு' ளென்பது அதிகாரத்தான் வந்தது. 'இழவூழ்' 'ஆகலூ' ழென்பன விரண்டும் வேற்றுமைத்தொகை. 'உற்றக்கடை'

யென்பது முன்னுங்கூட்டப்பட்டது. இயற்கையாலுய வறிவை யும் வேறுபடுக்குமென்பதாம். (உ)

கூஎந. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

(இ - ள்.) நுண்ணிய நூல் பல கற்பினும் - பேதைப்படுக்கு மூழுடையாலெருவன் நுண்ணிய பொருள்களே யுணர்த்தும் நூல் பலவற்றையுங் கற்முலுயினும்; மற்றும் தன் உண்மையறிவே மிகும் - அவனுக்குப் பின்னுந் தன்னூழாலுகிய பேதைமையுணர்வே மேற்படும்.

பொருளி 'னுண்மை' நூலின்மே லேற்றப்பட்டது. 'மேற்படு தல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்காக்கிச் செயலுக்குத் தான் மூற் படுதல். "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா—வாதல் கண் ணகத் தஞ்சனம் போலுமால்"* என்பதுமது. செயற்கையாலுய வறிவையுங் கீழ்ப்படுத்துமென்பதாம். (ஊ)

கூஎச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(இ - ள்.) உலகத்து இயற்கை இருவேறு - உலகத்து ஊழிலு லுயவியற்கை இரண்டு கூறு; திருவேறு தெள்ளியராதலும் வேறு - ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு.

செல்வத்தினைப் படைத்தலுங் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்ல தியலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடைய ராதற் காகுமுழ் செல்வமுடையராதற் காகாது; செல்வமுடைய ராதற் காகுமுழ் அறிவுடையராதற் காகாதென்றதாயிற்று. ஆகவே, செல்வஞ் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா வென்பது பெற்மும். (எ)

கூஎடு. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ - ள்.) செல்வம் செயற்கு - செல்வத்தையாக்குதற்கு நல்லவை எல்லாம் தீயவாம் - நல்லவை யெல்லாந் தீயவாய் அழிக்கும்; தீயவும் நல்லவாம் - அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக் கும், ஊழ்வயத்தான்.

* சிவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம் - எசு.

'நல்லவை', 'தீயவை' யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. 'ஊழா'னென்பது அதிகாரத்தாற் பெற்றும். அழிக்குமூழ் ழுற்றவழிக் கால முதலிய நல்லவாயினும் அழியும், ஆக்குமூழ் ழூற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே, காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்கு மென்பது பெற்றும். (கூ)

கூஎசு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தமம்.

(இ - ள்.) பால் அல்ல பரியினும் ஆகாவாம் - தமக்கூழல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்; தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழாற் றமவாய பொருள்கள் புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்தாலும், தம்மை விட்டுப்போகா.

பொருள்களினிலையும் போக்கும் ஊழினுணுவதல்லது காப்பிகழ்ச்சிகளா னுகாவென்பதாம். இவை யாறு பாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (சு)

கூஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(இ - ள்.) கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும்; வகுத்தான் வகுத்த் வகையல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தலுண்டாகாது.

ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், 'வகுத்தா'னென்றார். "இசைத்தலு மூரிய வேறிடத்தான"* என்பதனுன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்கு† மென்றமையால், உம்மை எச்சவும்மை. வெறுமுயற்சி‡களாற் பொருள்களைப் படைத்தல்லது நுகர்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டுமென்பதாயிற்று. (எ)

கூஎஅ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

(இ - ள்.) துப்புரவு இல்லார் துறப்பார் - வறுமையானுகர்ச்சியில்லாதார் துறக்குங் கருத்துடையராவர்; உறற்பால வூட்டா

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம் - டுக
† தொகாதார்க்கே யன்றித் தொகுத்தார்க்கும் என்றும் பாடம்.
‡ இலக்கணக்கொத்து, வினையியல், பதினேழாஞ் சூத்திரவுரை.

கழியுமெனின் - ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியா தொழியுமாயின்.

'துறப்பா' ரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்பெறுவன தாமே விடப்பெற்று வைத்துங், கருத்து வேறுபாட்டாற் றுன்பமுறுகின்றது ஊழின் வலியாரெனபது எஞ்சி நிற்றலின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. (அ)

நஎக. நன்ருங்கா ளல்லவாக் காண்பவ ரன்ருங்கா
லல்லற் படுவ தெவன்.

(இ - ள்.) நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்தனுபவிப்பார்; அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன் - வினைத் தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறனுபவியாது துடைக்குந் திறன் நாடி அல்லலுழப்பது என் கருதி?

தாமே மூன்செய்து கொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டு மியைந்தனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்தனுபவித்து வினையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் இன்பத்துன் பங்கட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (கூ)

நஅ0. ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ - ள்.) மற்ருென்று சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோ ருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமே யானும் பிறிதொன்ருனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; ஊழிற் பெருவலி யாவுள - அதனுல் ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள?

'பெருவலி' ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழுதறவெண்ணுதல். செய்தற்கே யன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாதென்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனுன் அவ்விருவகை யூழின் வலியும் பொதுவாகக் கூறப்பட்டது. (கO)

ஊழியல் முற்றிற்று.

அறத்துப்பால் முற்றிற்று.

உ. பொருட்பால்

க. அரசியல்

இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவா னெடுத்துக் கொண்டார். அது தன் றுணைக்காரணமாய அரசனீதி கூறவே யடங்கும். அரசனீதியாவது காவலே நடாத்துமுறைமை. அதனை **அரசியல், அங்கவியல்,** ஒழிபியலென மூவகைப்படுத்து, மலர்தலேயுலகிற் குயிரெனச் சிறந்த அரசன தியல்பு இருபத்தைந் ததிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கண் **இறைமாட்சி** கூறுகின்றார்.

அதி. நக—இறைமாட்சி

[அஃதாவது, அவன்றன் நற்குண நற்செய்கைகள். உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின், 'இறை' யென்றார்; "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்"* என்று பெரியாரும் பணித்தார்.]

நடஅக. **படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு**
முடையா னரசரு ளேறு.

(இ - ள்.) படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் - படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணு மென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையு முடையவன்; அரசருள் ஏறு - அரசருள் ஏறுபோல்வான்.

ஈண்டுக் 'குடி' யென்றது அதனையுடைய நாட்டினை; 'கூ' ழென்றது அதற்கேதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுணோக்கிப் பிறழவைத்தார். 'ஆறுமுடையா' னென்றதனால், அவற்றுள் ஒன்றில்வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றும்; வடநூலார் இவற்றிற்கு அங்கமெனப் பெயர்கொடுத்ததூஉம் அது நோக்கி. 'ஏ' றென்பது உபசாரவழக்கு. இதனால் அரசற்கங்கமாவன இவை

* திருவாய்மொழி, நச-ஆம் திருப்பதிகம்-அ.

யென்பதூஉம் இவை முற்றுமுடைமையே அவன் வெற்றிக்கேது வென்பதூஉங் கூறப்பட்டன. (க)

ஈஅஉ. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ - ள்.) வேந்தற்கு இயல்பு - அரசனுக்கியல்பாவது ; அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல்.

'ஊக்கம்' வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் 'அறிவு' ஆறங்கத்திற்கு மூரித்து, 'ஈகை' படைக்குரித்து, ஏனைய வினைக்குரிய. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற ஏனைய வடங்கிவரும் ; அவற்றுள் இவையடங்கின், அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதுந் தோன்றிநிற்றல் இயல்பாக வேண்டுமென்பார், 'எஞ்சாமை வேந்தற் கியல்' பென்றார். (உ)

ஈஅஊ. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

(இ - ள்.) நிலன் ஆள்பவற்கு - நிலத்தினையாளுந் திருவுடையாற்கு ; தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா - அக்காரியங்களில் விரைவுடைமையும் அவை யறிதற்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா.

கல்வியது கூறுபாடு முன்னர்க்கூறப்படும்.* 'ஆண்மை' யாவது ஒன்றனையும் பாராது கடிதிற் செய்வதாகலின், அஃது ஈண்டு உபசார வழக்காற் 'றுணி'வெனப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. இவற்றுட் 'கல்வி' ஆறங்கத்திற்கு மூரித்து, ஏனைய வினைக்குரிய. 'நீங்கா' வென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங் குரைக்க. (ஊ)

ஈஅசு. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(இ - ள்.) அறன் இழுக்காது - தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி ; அல்லவை நீக்கி - அறனல்லவை தன்னூட்டின் கண்ணும் நிகழாமற் கடிந்து ; மறன் இழுக்கா மானம் உடையது அரசு - வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன்.

* அதி - சஅ.

அவ்'வற' மாவது ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறந் தெறுத லென்னுஞ் சிறப்புத்தொழிலினும் வழுவாது நிற்றல். "மாண்ட—வறநெறி முதற்றே யரசின் கொற்றம்"* என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாத லறிக. 'அல்லவை' கொலை, களவு முதலாயின. குற்றமாய மானத்தினீக்குதற்கு,† 'மறனிழுக்கா மான' மென்றார்; அஃதாவது "வீறின்மையின் விலங்காமென மத வேழமு மெறியா—னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான் - மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா-னூறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்" ‡ எனவும், "அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சான்"§ எனவுஞ் சொல்லப்படுவது. 'அரசு' அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் அவன்றன்மே னின்றது. (சு)

கூஅடு. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ - ள்.) இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழி களே மேன்மேலுளவாக்கலும்; ஈட்டலும் - அங்ஙனம் வந்த வற்றை ஒருவழித் தொகுத்தலும்; காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற் காத்தலும்; காத்த வகுத்தலும் - காத்தவற்றை அறம்பொருளின்பங்களின் பொருட்டு விடுத்தலும்; வல்லது அரசு - வல்லவனே அரசன்.

'ஈட்டல்', 'காத்தல்' 'வகுத்த'லென்றவற்றிற் கேற்ப 'இயற்ற' வென்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'பொருள்க' ளாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை 'வரும் வழிக'ளாவன பகைவரை யழித்தலும், திறைகோடலும், தன்னுடு தலையளித்தலும் முதலாயின. 'பிற' ரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினர். கடவுளர், அந்தணர், வறியோரென்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலே அறப்பொருட்டாகவும்; யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்குந் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலேப் பொருட்பொருட்டாகவும்; மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களானுகர்வனவற்றிற்குங் கொடுத்தலே இன்பப் பொருட்டாகவுங் கொள்க.

---

* புறநானூறு-ருடு. † சஙஉ-ஆம் குறளுரை.
‡ சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம்-கசுo.
§ புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சி-உo.

'இயற்றன்' முதலிய தவருமற்செய்தல் அரிதாகலின், 'வல்ல'தென் ரூர். இவை நான்கு பாட்டானும் மாட்சியே கூறப்பட்டது. (டு)

நஅசு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ - ள்.) காட்சிக்கு எளியன் - முறை வேண்டினுர்க்குங் குறைவேண்டினுர்க்குங் காண்டற்கெளியனுய்; கடுஞ்சொல்லன் அல்லனேல் - யாவர்மாட்டுங் கடுஞ்சொல்ல னல்லனுமாயின்; மன் னன் நிலம் மீக்கூறும் - அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களி னும் உயர்த்துக் கூறும் உலகம்.

'முறைவேண்டினுர்' வலியரா னலிவெய்தினுர். 'குறைவேண் டினுர்' வறுமையுற்றிரந்தார். 'காண்டற்கெளி'மையாவது பேரத்தா ணிக்கண் அந்தணர் சான்ரோருள்ளிட்டாரோடு செவ்வியுடையனு யிருத்தல். 'கடுஞ்சொல்' கேள்வியினும், வினையினுங் கடியவாய சொல். நிலத்தை மீக்கூறுமெனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்ல வேண்டாவாயிற்று. 'மீக்கூறு'தல் இவன் காக்கின்ற நாடு, பசி பிணி பகை முதலியவின்றி யாவர்க்கும் பேரின்பந் தருதலிற் றேவருலகி னும் நன்றென்றல். 'உலக'மென்னு மெழுவாய் வருவிக்கப்பட்டது. (சு)

நஅஎ. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
ருன்கண் டனைத்திவ் வுலகு.

(இ -ள்.) இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலேச்செய்து அளிக்கவல்ல அரசனுக்கு; இவ்வுலகு தன் சொலால் தான் கண்டனைத்து - இவ்வுலகந் தன்புகழோடு மேவித் தான் கருதியவளவிற்ரும்.

'இன்சொல்' கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். 'ஈதல்' வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். 'அளித்தல்' தன் பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமற் காத்தல். இவை அரியவாகலின் 'வல்லாற்' கென்றும், அவன் மண்முழுது மாளுமாக லின் 'இவ்வுல' கென்றுங் கூறினுர். கருதியவளவிற்ருதல் கருதிய பொருளெல்லாஞ் சுரத்தல். (எ)

நஅஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ - ள்.) முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான் முறைசெய்து பிறர் நலியாமற் காத்தலேயுஞ் செய்யுமரசன்; மக்

கட்கு இறை என்று வைக்கப்படும் - பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும்.

'முறை' அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. 'பிற'ரென்றது மேற்சொல்லியாரை. வேறு வைத்தல் மக்களிற் பிரித்து உயர்த்துவைத்தல். (அ)

கூஅகூ. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(இ - ள்.) சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்குந் துணையாயினூர் சொற்களைத் தன்செவி பொறுதாகவும் வீளவுநோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது; கவிகைக்கீழ்த் தங்கும் உலகு - குடை நிழற்கண்ணே தங்கும் உலகம்.

'செவிகைப்ப' வென்றதற் கேற்ப 'இடிக்குந் துணையா' ரென்பது வருவிக்கப்பட்டது. நாவின்புலத்தைச் செவிமேலேற்றிக் 'கைப்ப' வென்றூர். 'பண்புடைமை' விசேடவுணர்வினனுதல். அறநீதிகளிற் றவறுமையின், மண்முழுதுந் தானேயாளு மென்பதாம். (கூ)

கூகூ0. கொடையளி செங்கோல் குடியோம்ப னன்கு முடையானும் வேந்தர்க் கொளி.

(இ - ள்.) கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும்; அளி - யாவர்க்குந் தலையளி செய்தலும்; செங்கோல் - முறை செய்தலும்; குடி ஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய; நான்கும் உடையான் - இந்நான்கு செயலையுமுடையவன்; வேந்தர்க்கு ஒளியாம் - வேந்தர்க்கெல்லாம் விளக்காம்.

'தலையளி' முகமலர்ந்தினிய கூறல். செவ்வியகோல் போறலின், 'செங்கோ'லெனப்பட்டது. 'குடியோம்ப' லென வெடுத்துக் கூறினமையால், தளர்ச்சி பெற்றும்; அஃதாவது ஆறிலொன்றுய பொருடன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின் 'விளக்' கென்றூர். 'ஒளி' ஆகுபெயர். இவை யைந்து பாட்டானும் மாட்சியும் பயனும் உடன்கூறப்பட்டன. (கo)

அதி. ச0—கல்வி

[அஃதாவது, அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென் றிவற்றி னூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுத லேக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தாங்காமை கல்வி'* எனத்தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃதிறு மாட்சியின் பின் வைக்கப்பட்டது.]

நகக. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(இ - ள்.) கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க - அங்ஙனங் கற்றால் அக்கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க.

'கற்பவை' யென்றதனால், அறம் பொரு ளின்பம் வீடென்னு மூறுதிப்பொரு ளுணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன வின்னுட் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா வென்பது பெற்றாம். 'கசடறக் கற்ற'லாவது விபரீத வையங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது இல்வாழ்வுழிக் "கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்—தருமமுந் தக்கார்க்கே செய்"† தலினும், துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும், வழுவாமை. சிறப்புடை மகற்காயிற் கற்றல்வேண்டு மென்பதூஉம், அவனுற் கற்கப்படு நூல்களும், அவற்றைக் கற்கு மாறும், கற்றதனாற் பயனும் இதனுட் கூறப்பட்டன. (க)

நகஉ. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ - ள்.) எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகளிரண்டினையும்; வாழும் உயிர்க்குக் கண் என்ப - அறிந்தார் சிறப்புடை யுயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர்.

---

* குறள் - நஅந. † நாலடியார் - உரு0.

'எண்'ணென்பது கணிதம். அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்ப முதலிய நூல்களுட் காண்க. 'எழுத்' தெனவே, அதனோடொற்றுமையுடைய சொல்லுமடங்கிற்று. இவ் விருதிறமும், அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் 'கண்'ணெனப்பட்டன. அவை கருவியாதல், "ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி—னீதி வழுவா நிலைமையவான் - மாதே—யற மார் பொருளின்பம் வீடென் றிவற்றின்—றிறமாமோ வெண்ணிறந் தாற் செப்பு"; "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்த்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா ளாகு - மொழித்திறத்தின்—முட்ட றுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து—கட்டறுத்து வீடு பெறும்." இவற்று னறிக. 'என்ப' வென்பவற்றுள், முன்னைய விரண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினை. 'அறியாதார்' 'அறிந்தா' ரென்பன வருவிக்கப்பட் டன. 'சிறப்புடையுயி' ரென்றது மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதியுடையதனை. இதனுற் கற்கப்படு நூல்கட்குக் கருவியாவன வும் அவற்ற தின்றியமையாமையுங் கூறப்பட்டன. (உ)

நகஙக. **கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ - ள்.) கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடைய ரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் - மற்றைக் கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர்.

தேய மிடையிட்டவற்றையுங் கால மிடையிட்டவற்றையுங் காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றோரைக் 'கண்ணுடைய' ரென் றும், அஃதின்றி நோய் முதலியவற்றுற் றுன்பஞ்செய்யும் ஊனக் கண்ணேயுடைமையிற் கல்லாதவரைப் 'புண்ணுடைய' ரென்றுங் கூறினர். மேற் கண்ணன்மை யுணராநின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றுன், பொருணூல்களேயுங் கருவிநூல்களேயும் கற்றுர துயர்வும் கல்லாதார திழிவும் இதனுற் றெருகுத்துக் கூறப்பட் டன. (ஙு)

நகஙச. **உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித**
லனைத்தே புலவர் தொழில்.

(இ - ள்.) உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரையும் அவருவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாமெங் ஙனங் கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து; புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில்.

தாம் நல்வழியொழுகல் பிறர்க்குறுதி கூறலென்பன இரண்டுந் தொழிலென ஒன்றாயடங்குதலின், 'அத்தன்மைத்' தென்றார். 'அத் தன்மை' அப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமு முறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வெதிர்வுகளின் இன் பம் பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாருமன்புடையராவ ரென்ப தாம். இதனாற் கற்றாரதுயர்வு வகுத்துக்கூறப்பட்டது. (சு)

நகூடு. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர்.

(இ - ள்.) உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் - "பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்"* றுதலான்; செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்று நின்றுங் கற்றார் தலையாயினர்; கல்லாதவர் கடையரே - அங்ஙனமாகாணிக் கல்லாதவர் எஞ்ஞான்று மிழிந்தாரேயாவர்.

'உடையார்', 'இல்லார்' ரென்பன உலகவழக்கு. 'ஏக்கறுதல்' ஆசையாற் றுழ்தல். 'கடைய' ரென்றதனுன் அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானநோக்கி மெய்யாய கல்வி யிழந்தார் பின்னெருநாளுன்றும் அறிவுடையராகாமையின், 'கடை யரே' யென்றார். இதனாற் கற்றாரதுயர்வுங் கல்லாதாரதிழிவுங் கூறப்பட்டன. (டு)

நகூசு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு.

(இ - ள்.) மணற்கேணி தொட்டனைத்து ஊறும் - மண லின்கட் கேணி தோண்டிய வளவிற்றாகவூறும்; மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் - அதுபோல மக்கட்கறிவு கற்றவளவிற்றாக வூறும்.

ஈண்டுக் 'கேணி' யென்றது அதன்கண்ணீரை. 'அளவிற்றாக' வென்றது அதனளவுஞ் செல்லவென்றவாறு. சிறிது கற்றதுணையான் அமையாது மேன்மேற் கற்றல்வேண்டுமென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் 'உண்மையறிவே மிகும்'† என்றதனோடு மலையாமை யறிக. (சூ)

நகூஎ. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ - ள்.) யாதானும் நாடாம் ஊராம் - கற்றவனுக்குத் தன் னொடு தன்னூருமேயன்றி யாதானுமொரு நாடும் நாடாம், யாதானு

*புறநானூறு - கஅந. †திருக்குறள் - நஎந.

மோரூரும் ஊராம்; ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்? இங்ஙனமாயின் ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி?

உயிரோடு சேறலிற் 'சாந்துணையு' மென்றார். பிறர்நாடுகளும் ஊர்களுந் தமபோல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கேதுவாகலிற் கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதுஞ் செய்கவென்பதாம். (எ)

நகஅ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு; தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தானெஞ்ஞ பிறப்பின்கட் கற்ற கல்வி; எழுமையும் ஏமாப்பு உடைத்து - எழுபிறப்பினுஞ் சென்று உதவுதலையுடைத்து.

வினைகள்போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், 'எழுமையு மேமாப்புடைத்' தென்றார். எழுமை மேலே கூறப்பட்டது.* உதவுதல் நன்னெறிக்க ணுய்த்தல். (அ)

நகஆ. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ - ள்.) தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு - தாமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலக மின்புறுதலால் அச் சிறப்புநோக்கி; கற்றறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர்.

'தாமின்' புறுதலாவது நிகழ்வின்கட் சொற்பொருள்களின் சுவைநுகர்வானும், புகழ் பொருள் பூசைபெறுதலானும், எதிர்வின் கண் அறம் வீடு பயத்தலானும். அதனுன் இடையுறுத வின்ப மெய்துதல். 'உலகின்புறுத' லாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், "யாண்டு பலவாக நரையில"† மாயினே மென்று மூவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற்றுற் றுன்புறுதலும், பலரையும் பகையாக்கலுமுடைத்தென அறிந்து அதனைக் காமுறுமையிற் 'கற்றறிந்தா'ரென்றும், கரும்பயிறற்குக் கூலிபோலத் தாமின்புறுதற்கு, உலகின்புறுதல் பிறவாற்றுனின்மையின் அதனையே 'காமுறுவ' ரென்றுங் கூறினர். (க)

* கூஉ - ஆம் குறளுரை. † புறநானூறு - ககக.

சOO. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ - ள்.) ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வங் கல்வி - ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி ; மற்றையவை மாடு அல்ல - அஃதொழிந்த மணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல.

அழிவின்மையாவது* தாயத்தார், கள்வர், வலியர், அரசரென்றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை தக்கார்கண்ணே நிற்றல். மணி, பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டு மின்மையின், அவற்றை 'மாடல்ல' வென்றார். இவை யைந்து பாட்டானுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது. (கO)

அதி. சக—கல்லாமை

[அஃதாவது, கற்றலைச்செய்யாமை ; என்றது அத்தன்மையுடையானை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறியதனையான் முற்றுப்பெறுமை நோக்கி, எதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.]

சOக. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(இ - ள்.) அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினையிழையாது வட்டாடினாற்போலும் ; நிரம்பியநூல் இன்றிக் கோட்டி கொளல் - தானிரம்புதற்கேதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின்கணென்றனைச் சொல்லுதல்.

'அரங்கு' வகுத்த தானம். 'வட்டா'டல் உண்டையுருட்டல். இவை "கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச் சிறுசிர் நெல்லிவட் டாடும்"† என்பதனு னறிக. நிரம்புதல் அறியவேண்டுவனவெல்லா மறிதல். 'கோட்டி' யென்பது ஈண்டாகுபெயர், "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி"‡ என்பதுபோல. சொல்லும்பொருளும் நெறிப்படா வென்பதாம். (க)

சOஉ. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

---

* நாலடியார் - கஉச. † நற்றிணை - ங. ‡ நாலடியார் - கடுடு.

(இ - ள்.) *கல்லாதான் சொற் காமுறுதல் - கல்வியில்லாதா னொருவன் அவையின்க ணொன்றுசொல்லுதலே அவாவுதல்; மூலி யிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று - இயல்பாகவே மூலி யிரண்டுமில்லாதா ளொருத்தி பெண்மையை அவாவினுற்போலும்.*

"இனைத்தெனவறிந்த சினை"* யாகலின், தொகையொடு முற் றும்மை கொடுத்தார்; சிறிதுமில்லாதா ளென்பதாம். அவாவியவழிக் கடைபோகாது, போகினும் நகைவிளைக்கு மென்பதாயிற்று. (உ)

சுஙஉ. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ - ள்.) *கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிக நல்லராவர்; கற்றார்முன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம்மையறிந்து கற்றாரவையின்கண் ஒன்றனையுஞ் சொல்லாதிருக் தல் கூடுமாயின்.*

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத்தா மறியாமையின் அது கூடாதென்பார் 'பெறி' னென்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் 'நனிநல்ல' ரென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானுங் கல்லா தார் அவைக்கட் சொல்லுதற்குரியரன்மை கூறப்பட்டது. (ஙு)

சுஙச. கல்லாதா ரொட்பங் கழியநன் ருயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ - ள்.) *கல்லாதான் ஒட்பம் கழிய நன்ருயினும் - கல்லாத வன தொண்மை ஒரோவழி மிக நன்ருயிருப்பினும்; அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையார் அதனை யொண்மையாகக் கொள்ளார்.*

ஒண்மை - அறிவுடைமை. அது நன்ருகாது, ஆயிற்ருயினும் ஏரலெழுத்துப்† போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம். (ச)

சுஙஞ. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ - ள்.) *கல்லா ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாத வொருவன் யானறிவுடையே னெனத் தன்னை மதிக்கு மதிப்பு;*

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம் - நஉ.

† ஏரல் - நத்தை; அது மணலிற் செல்லுங்கால் தோன்றும் எழுத்துப் போன்றது.

தலைப்பெய்து சொல்லாடச் சோர்வுபடும் - அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெடும்.

'கற்றவ' னென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுங் தூணேயுமே நிற்பது, சொல்லிய வழி வழுப் படுதலின், அழிந்துவிடுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானுங் கல்லாதார தியற்கையறிவின் குற்றங் கூறப்பட்டது. (டு)

சுOசு. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனேயர் கல்லா தவர்.

(இ - ள்.) கல்லாதவர் - கல்லாதவர்; உளர் என்னும் மாத்தி ரையர் அல்லால் - காணப்படுதலான் இலரல்லர் உளரென்று சிலர் சொல்லுமளவினராதலன்றி; பயவாக் களர் அனேயர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளேயாத களர்நிலத்தோடொப்பர்.

'களர்' தானும் பேணற்பா டழிந்து உயிர்கட்கும் உணவு முத லிய உதவாததுபோலத் தாமும் தன்கு மதிக்கற்பா டழிந்து பிறர்க் கும் அறிவு முதலிய உதவாரென்பதாம். இதனேற் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது. (சு)

சுOஎ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனேபாவை யற்று.

(இ - ள்.) நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினுஞ் சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும்; மண் மாண் புனே பாவை யற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனேந்த பாவை யுடைய எழுச்சியும் அழகும்போலும்.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களேக் கடிதிற்காண்ட லும் மறவாமையும் முதலாயின. 'பாவை' ஆகுபெயர். "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலுமரிது"* ஆகலான் எழினலங்களும் ஒரு பயனே யெனினும், நூலறிவில்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனுன் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது. (எ)

சுOஅ. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ - ள்.) நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுது - கற் றூர்மாட்டு நின்ற வறுமையினுமின்னுது; கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார்மாட்டு நின்ற செல்வம்.

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - கடுச.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தத்தங்கிலையி னன்றி மாறி நிற்றலால் தாமிடுக்கட்படுதலும் உலகிற்குத் துன்பஞ் செய்த லும் இரண்டற்கு மொக்குமாயினும், திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாதுநிற்றலான், வறுமையினுந் திரு 'வின்மை' தென்றார். இதனால் அவர் நிருவின் குற்றங் கூறப்பட்டது.

சஅக. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(இ - ள்.) கல்லாதார் மேற்பிற்ந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும்; கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப் பாடு இலர் - தாழ்ந்தசாதிக்கட் பிறந்துவைத்துங் கற்ற ரது பெருமையளவிற்றாய பெருமையிலர்.

உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லுங் கல்வி* யுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். இதனால் அவர்சாதி யுயர்ச்சியாற் பயனின்மை கூறப்பட்டது. (க)

சகஅ. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(இ - ள்.) விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையர்; இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் - விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்.

'விலங்கு', 'நூல்' சாதிப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட்கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்ல ரென்பதாம். மயக்கநிரனிறை. இதனால் அவர் மக்கட் பிறப்பாற் பயனெய்தாமை கூறப்பட்டது. (கஅ)

அதி. சஉ—கேள்வி

[அஃதாவது, கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். கற்றவழி அதனினுயவறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனை யுண்டாக்குதலானும் இது கல்வி, கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.]

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

---

* குறள், நகஅ.

(இ - ள்.) செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் - ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ் செல்வம்; அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை - அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினுந் தலையாகலான்.

செவியான் வருஞ்செல்வம், கேள்வியான் எல்லாப் பொருளையுமறிதல். பிற செல்வங்கள் பொருளான் வருவன. அவை நிலையாவாகலானும், துன்பவினைவின வாகலானும், இது 'தலை' யாயிற்று. அவற்றையொழித்து இதனையே செய்கவென்பது குறிப்பெச்சம். (க)

சகஉ. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ - ள்.) செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்குணவாகிய கேள்வி யில்லாதபொழுது; வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும்.

சுவைமிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வியுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் 'இல்லாதபோழ்' தென்றும், பெரிதாயவழித் தேடற்றுன்பமேயன்றி நோயுங் காமமும் பெருகுதலாற் 'சிறி' தென்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாகலான் 'ஈயப்படு' மென்றுங் கூறினர். ஈதல் வயிற்ற நிழிவுதோன்ற நின்றது. இவை யிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

சகஊ. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னொன்றோ டொப்பர் நிலத்து.

(இ - ள்.) செவியுணவிற் கேள்வி உடையார் - செவியுணவாகிய கேள்வியினையுடையார்; நிலத்து அவியுணவின் ஆன்றோரோடு ஒப்பர் - நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவரோடொப்பர்.

'செவியுணவு' செவியானுண்ணு முணவு. அல்வழிக்கண் வந்த இன்சாரியையது னகரம் வலிந்து நின்றது. அவியாகிய வுணவு தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுப்பன. அறிவானிறைந்தமையான் 'ஆன்றோ' ரென்றும், துன்பமறியாமையாற் 'றேவரோ டொப்ப' ரென்றுங் கூறினர். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

சகஎ. *கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்குத்தீ னூற்றுந் துணை.

*பழமொழி நானூறு - ஙு.

(இ - ள்.) கற்றிலன் ஆயினுங் கேட்க-உறுதிநூல்களைத் தான் கற்றிலனாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க; அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றும் துணை - அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக்கோடாந் துணையாகலான்.

உம்மை கற்கவேண்டு மென்பது பட நின்றது. 'தளர்ச்சி' வறுமையானுதல் அறிவின்மையானுதல் இடுக்கட்பட்டுழி மனந்தளர் தல். அதனைக் கேள்வியினைய அறிவு நீக்குமாகலின், 'ஊற்றுந்துணை' யென்றார். ஊன்றென்னு மாகுபெயரின் னகரம் திரிந்து நின்றது.

சகடு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
பொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ - ள்.) இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்று, - வழுக்குதலையுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல் போலுதவும்; ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் - காவற்சாகா கைப்பார்க்கு † ஒழுக்கமுடையார் வாயிற்சொற்கள்.

அவாய்நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக் கப்பட்டது. ஊற்றுகிய கோல்போ லுதவுதல் தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின் ‡ அவர் வாய்ச்சொற் கேட்கப்படா தென்பது தோன்ற 'ஒழுக்க முடையார் வாய்ச்சொல்' லென்றார். 'வா'யென்பது தீச்சொலறி யாமையாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம். (இ)

சகசு. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ - ள்.) எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன் சிறிதாயி னும் உறுதிப்பொருள்களைக் கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் - அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெரு மையைத் தரும் ஆகலான்.

'எனைத்து', 'அனைத்து' என்பன கேட்கும் பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந் தீண்டி எல்லா வறிவுகளையு முளவாக்கலின், சிறிதென் றிகழற்க வென்பதாம். (கு)

சகள. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா பிழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

† புறநானூறு - கஅடு. ‡ குறள் -கசo.

(இ - ள்.) பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழவுணர்ந்த வழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ்சொற்களைச் சொல்லார்; இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் - பொருள்களைத் தாமும் நுண்ணிதாக வாராய்ந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினையுடையார்.

பிழைப்பவென்பது திரிந்துகின்றது. 'பேதைமை' ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமுமறிந்து அறிந்தாரோ டொப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை நான்கு பாட்டானுங் கேட்டார்க்கு வருநன்மை கூறப்பட்டது. (எ)

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ - ள்.) கேட்பினும் கேளாத் தகையவே - தம்புலமாய ஓசைமாத்திரத்தைக் கேட்குமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம்; கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியாற்றூளைக்கப்படாத செவிகள்.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசை மாத்திரத்தான் உறுதியெய்தாமையிற் 'கேளாத் தகைய' வென்றும் மனத்தின்கண் நூற்பொருள் நுழைத்தற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினர். பழைய தூளை தூளையன்றென்பதாம். (அ)

சகக. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

(இ - ள்.) நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடைய ரல்லாதார்; வணங்கிய வாயினர் ஆதல் அரிது - பணிந்த மொழியினையுடையராதல் கூடாது.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமே லேற்றப்பட்டது. 'வாய்' ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையாற் றம்மைவியந்து கூறுவரென்பதாம். அல்லாலென்பதூஉம் பாடம். (க)

சஉ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(இ - ள்.) செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் - செவியானுகரப்படுஞ் சுவைகளை யுணராத வாயுணர்வினையுடைய

மாந்தர் ; அவியினும் வாழினும் என் - சாவினும் வாழினும் உலகிற்கு வருவதென்னே ?

செவியா னுகரப்படுஞ் சுவைகளாவன : சொற்சுவையும் பொருட்சுவையும். அவற்றுட் சொற்சுவை குணம், அலங்காரமென இருவகைத்து ; பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தமென ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். 'வாயுணர்' வென்பது இடைப்பதங்க டொக்குநின்ற மூன்றும் வேற்றுமைத் தொகை ; அது வாயானுகரப்படுஞ் சுவைகளே யுணரும் உணர்வென விரியும். அவை கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பென ஆறும். செத்தாலிழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதுமின்மையின், இரண்டு மொக்குமென்பதாம். வாயுணவினென்று பாடமோதுவாரு முளர். இவை மூன்று பாட்டானுங் கேளாதவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. சஉ—அறிவுடைமை

[அஃதாவது, கல்வி கேள்விகளினுய அறிவோடு உண்மையறிவுடையுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.]

சூஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

(இ - ள்.) அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவென்பது இறுதிவாராமற் காக்கும் கருவியாம் ; செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும் - அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள்ளரணுமாம்.

'கா'த்தல் முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் உள்ளாய வரண் ; உள்புக் கழிக்கலாகா அர ணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சூஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ - ள்.) சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்லவிடாது ; தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளே யாராய்ந்து தீயதனினீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒரு காலத்து ஒன்றின்கணல்லது செல்லாமையின், 'இடத்தா' லென்றார். 'விடா' தென்பது கடைக் குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறுக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது 'அறி'வென்றார், அஃது உயிர்க்குணமாகலின். (உ)

சஉஙு. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் - யாதொரு பொருளே யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் ; அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

குணங்கண் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்குமுண்மை யின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடு பொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான், 'எப் பொருள் யார்யார்வாய்க் கேட்பினு' மென்றார். அடுக்குப் பன்மை பற்றி வந்தது. 'வா'யென்பது அவர் அப்பொருளின்கட் பயிலாமை யுணர நின்றது. மெய்யாதல் நிலைபெறுதல். சொல்வாரதியல்பு நோக்காது அப்பொருளின் பயனேக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்ய தறிவென்பதாம். (ங)

சஉச. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) தான் எண்பொருளவாகச் செலச் சொல்லி - தான் சொல்லுஞ் சொற்களே அரியபொருளவாயினும் கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு மனங்கொளச் சொல்லி ; பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு - பிறர்வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருள் காண வரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு.

உடையவன் றெழில் அறிவின்மே லேற்றப்பட்டது. சொல்லு வன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன்மேல் வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக் கொண் டொழிகவென்பார் பொருண்மேல் வைத்துங் கூறினர். (ச)

சஉ஛. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(இ - ள்.) உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒரு நிலையனாவது அறிவாம்.

'தழீஇயது', 'இல்ல' தென்பன அவ்வத் தொழின்மேனின்றன. 'உலக'மென்பது ஈண்டுயிர்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது "கோட்டுப்பூப்போல"* ஒரு நிலையே நட்பாயினன் எல்லாவின்பமும் மெய்துமாகலின், அதனை 'அறி' வென்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தின் 'மலர்தலும்' கல்குரவிற் 'கூம்பலு' மில்லதென்று உரைப்பாருமுளர்.

சுஉசு. †எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(இ - ள்.) உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொரு வாற்றா னொழுகுவதாயிற்று; உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றா னொழுகுவது அரசனுக் கறிவு.

உலகத்தையெல்லாம் யானியமித்தலான் என்னை நியமிப்பாரில்லை யெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாமாகலான், அவ்வாறொழுகுதல் அறிவன்றென விலக்கியவாறுயிற்று. இவையைந்து பாட்டானும் அதன நிலக்கணங் கூறப்பட்டது. (சு)

சுஉஎ. அறிவுடையார் ஆவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

(இ - ள்.) அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறியவல்லார்; அறிவிலார் அஃது அறிகல்லாதவர் - அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார்.

முன்னறிதல் முன்னே யெண்ணியறிதல். 'அஃதறிகல்லாமை' யாவது வந்தாலறிதல். இனி 'ஆவதறிவா' ரென்பதற்குத் தமக்கு நன்மையறிவாரென் றுரைப்பாருமுளர். (எ)

சுஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(இ - ள்.) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம்.

* நாலடியார் - உகடு. † குறள் - கசஅ.

பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி 'அஞ்சுவ' தென்றார். 'அஞ்சாமை' எண்ணுது செய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாதென்பார் 'அறிவார் தொழி' லென்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண் டஞ்ச வேண்டு மிடங் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதனை யுடையா ரதிலக்கணங் கூறப்பட்டது. (அ)

சஉக. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(இ - ள்.) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - வரக்கடவ தாகிய வதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு; அதிரவருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமுமில்லை.

'நோ' யென வருகின்றமையின், வாளா 'எதிரதா' வென்றார். இதனைற் காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனைற் கூறப்பட்டது. (கூ)

சஉo. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.*

(இ - ள்.) அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடை யார் பிறிதொன்று மிலராயினும் எல்லாமுடையராவர்; அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றுமிலராவர்.

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவுங் காக்கவும் படுதலின் அஃதுடையாரை 'எல்லாமுடையா' ரென்றும், அவையெல்லாம் முன்னேயமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெய்வத்தா னழிந்துழிப் படைத்தற்குங் கருவியுடையரன்மையின் அஃதில் லாதாரை 'என்னுடையரேனுமில' ரென்றுங் கூறினார். 'என்னு' மென்புழி உம்மை விகாரத்தாற் றொக்கது. இதனான் அவரதுடை மையும் ஏனையார தின்மையுங் கூறப்பட்டன. (கo)

---

* நாலடியார் உரை.

அதி. சஅ—குற்றங்கடிதல்

[அஃதாவது, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன் தன்கணிகழா மற் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கமென்ப. இவை குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.]

சஙக. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(இ - ள்.) செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் .வெகுளியுங் காமமுமாகிய குற்றங்களில்லாத வரச ரது செல்வம்; பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினை யுடைத்து.

'மதம்' செல்வக்களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமஞ் 'சிறுமை' யெனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்த லான், இவற்றைக் கடிந்தார்செல்வம் நல்வழிப்பாடும், நிலைபேறு முடைமையின் மதிப்புடைத் தென்பதாம். மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன. (க)

சஙஉ. இவறலு மாண்பிறந்த மானமு மாண
வுவகையு மேத மிறைக்கு.

(இ - ள்.) இவறலும் - வேண்டும்வழிப் பொருள்கொடாமை யும்; மாண்பு இறந்த மானமும் - நன்மையி னீங்கிய மானமும்; மாண உவகையும் - அளவிறந்த வுவகையும்; இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம்.

மாட்சியான மானத்தினீக்குதற்கு 'மாண்பிறந்த மான' மென் றார்: அஃதாவது "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன் னோர் தந்தை தாயென்றிவ"*ரை வணங்காமையும், முடிக்கப் படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அள விறந்த வுவகையாவது கழிகண்ணேட்டம்; பிறருஞ் "சினனே காமங் கழிகண்ணேட்ட" மென்றிவற்றை "யறந்தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீ"† தென்றார். இவை யிரண்டு பாட்டானுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது. (உ)

* புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண் - ஙங.
† பதிற்றுப்பத்து - உஉ.

சஙஙு. தீனைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்.

(இ - ள்.) பழி நாணுவார் - பழியை யஞ்சுவார்; தினைத் துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தங்கட் டினையளவாங் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையினளவாகக் கொள்வர்.

'குற்றம்' சாதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்று பொருர்; பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமற் காப்பரென்பதாம். (ங)

சஙுச. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே யற்றந் தருஉம் பகை.

(இ - ள்.) அற்றம் தருஉம் பகை குற்றமே - தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே; குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்க வேண்டும்.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் 'குற்றமே யற்றந் தருஉம் பகை' யென்றும், இவற்றதின்மையே குணங்களதுண்மை யாகக்கொண்டென்பார் 'பொருளாக' வென்றுங்கூறினர். 'குற்றமே காக்க' வென்பது "அரும்பண்பிலைத் தீமைகாக்க" என்பதுபோல நின்றது. (ச)

சஙுஞ. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

(இ - ள்.) வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை; எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக்குவைபோல அழிந்துவிடும்.

'குற்ற' மென்பது அதிகாரத்தான் வந்தது. 'முன்ன' ரென்றதனீற்றது பகுதிப்பொருள் விகுதி. 'வரு' மென்னும் பெயரெச்சம் 'முன்ன' ரென்னுங் காலப்பெயர் கொண்டது; அதனைக் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனைப் பெரிய செல்வம் அழிந்தேவிடு மென்பது உவமையாற் பெற்றும். (ஞ)

சஙுசு. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி னென்குற்ற மாகு மிறைக்கு.

(இ - ள்.) தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின்; இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது?

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர் குற்றங் கடிதல் குற்றமாவது; கடிந்தவழி முறைசெய்தலாமென்பார், 'என்குற்ற மாகு' மென்றார்; எனவே, தன்குற்றங்கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்பதாயிற்று. இவை ஈரான்கு பாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது, இனிச் சிறப்பு வகையாற் கூறுப. (சு)

சஙஎ. செயற்பால செய்யா தீவறியான் செல்வ
சமுயற்பால தன்றிக் கெடும்.

(இ - ள்.) செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படுமவற்றைச் செய்து கொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம்; உயற் பால தன்றிக் கெடும் - பின் உளதாம்பான்மைத்தன்றி வறிதே கெடும்.

'செயற்பால' வாவன அறம் பொருளின்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது "பொன்னி னுகும் பொருபடை யப்படை—தன்னி னுகுந் தரணி தரணியிற்—பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொரு—டின்னுங் காலத்துன் னுதன வில்லையே"* என்பதனானறிக. அறஞ்செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் 'உயற்பால தன்றி' யென்றும், இன்பப்பயன் கொள்ளாமையிற் 'கெடு' மென்றுங் கூறினார். உயற்பாலதின்றி யென்று பாடமோதுவாரு முளர். (எ)

சஙஅ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(இ - ள்.) பற்றுள்ளம் என்னும் இவறன்மை, பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யுமுள்ளமாகிய உலோ பத்தினது தன்மை; எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று - குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப்படுவ தொன்றன்று, மிக்கது.

'இவற' லது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயி னும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்படவல்ல வியல்பு.

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம் - ஈடு.

ஒழிந்தன அதுமாட்டாமையின், 'எற்றுள்ளு மெண்ணப்படுவ தொன்றன்' றென்றார். எவற்றுள்ளுமென்பது இடைக்குறைந்து நின்றது. இவை யிரண்டுபாட்டானும் உலோபத்தின் றீமை கூறப் பட்டது. (அ)

ஊகூ. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(இ - ள்.) எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்ப வுயர்ந்த ஞான்றும் மதத்தாற் றன்னை நன்குமதியா தொழிக ; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத் தால் விரும்பாதொழிக.

தன்னை வியந்துழி இடமுங் காலமும் வலியும் அறியப்படாமை யானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் 'வியவற்க'வென்றும், கருதியது முடித்தே விடுவலென்று அறம் பொருளின்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்றை 'நயவற்க'வென்றுங் கூறி னார். இதனுன் மதமானங்களின் றீமை கூறப்பட்டது. (கூ)

ஊஊ0. காதல காதல றியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(இ - ள்.) காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலறியாமல் அனுபவிக்க வல்ல ரெயின் ; ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற் கெண்ணுமெண்ணம் பழுதாம்.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படானென்பதாம். காமம், வெகுளி, உவகையென்பன முற்றக்கடியுங் குற்றமன்மையின், இதனுற் பெரும்பான்மைத் தாகிய காமதுகருமாறு கூறி, ஏனைச் சிறு பான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந் தார். (ஊ0)

அதி. சடு—பெரியாரைத்துணைக்கோடல்

[அஃதாவது, மூவிரு குற்றமும் முறைமையிற்கடிதலிற், காவற்சாகா டுகைத்தற் குரியனுய அரசன், தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும். பேரறி

வுடையராவார் : அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத்தெய்வக் குற்றங்கள் வாராமற்காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர்.]

சசக. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(இ - ள்.) அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை - அறத்தினது நுண்மையையறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை ; தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதனதருமையை யோர்ந்து, கொள்ளுந் திறமறிந்து கொள்க.

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின், 'அறனறிந்'தென்றார். 'மூத்தல்': அறிவானும் சீலத்தானும், காலத்தானும் முதிர்தல். 'அறிவுடையார்': நீதியையும், உலகியலையு மறிதலையுடையார். 'திறனறி'தலாவது நன்கு மதித்தல், உயரச்செய்தல், அவர்வரைநிற்ற லென்பன முதலாக அவர் பிணிப் புண்ணுந் திறனறிந்து செய்தல். (க)

சசஉ. உற்றநோய் நீக்கி யுருவமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(இ - ள்.) உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானுக மக்களானுகத் தனக்கு வந்த துன்பங்களே நீக்குமாறறிந்து நீக்கி ; உருமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை ; பேணிக் கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க.

தெய்வத்தான் வருந் துன்பங்களாவன :—மழையினதின்மை மிகுதிகளானும், காற்றுத் தீப் பினி யென்றிவற்றானும் வருவன. அவை கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளானீக்கப்படும். மக்களான் வருந் துன்பங்களாவன :—பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வா ரென்றிவர்களான் வருவன. அவை சாமபேத தான தண்டங்களாகிய நால்வகை யுபாயத்துள் ஏற்றதனு னீக்கப்படும். 'முற்காத்த'லாவது, தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களா னறிந்து அச்சாந்திகளாற் காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம் செயலென்பனவற்றானறிந்து அவ்வுபாயங்களுளொன்றாற் காத்தலுமாம். ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவா றாயிற்று. இங்கிதம்: குறிப்பானிகழும் உறுப்பின் றொழில். ஆகாரம் : குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன : நன்குமதித்தன் முதலியன. இவை யிரண்டு பாட்

டானும் பெரியாரதிலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டு மென்பதூஉம், கொள்ளுமாறுங் கூறப்பட்டன. (உ)

சசஈ. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(இ - ள்.) பெரியாரைப் பேணித் தமராக்கொளல் - அப்பெரியவர்களே அவர் உவப்பன வறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல்; அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகளெல்லாவற்றுள்ளும் அரிது.

உலகத்தரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது, இதனுல் அவையெல்லாம் உளவாதலேக்கி. (ஈ)

சசச. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(இ - ள்.) தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றுல் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல்; வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலியுடைமையினுந் தலை.

பொருள், படை, அரண்களாய வலியினும் இத்துணைவலி சிறந்ததென்றது, இவர் அவற்று னீக்கப்படாத தெய்வத்துன்பமுதலியனவும் நீக்குதற்கு உரியராகலின். (ச)

சசஉ. சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(இ - ள்.) சூழ்வார் கண்ணுக ஒழுகலால் - தன் பாரம் அமைச்சரைக் கண்ணுகக் கொண்டு நடத்தலான்; மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. தானே சூழ வல்லனெயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலமெய்து மரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரானல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் 'கண்ணுக'க் கூறினர். ஆராய்தல் அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தின ரென்பதனே யாராய்தல். இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

சசக. தக்கா ரினத்தனெய்த் தானெழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

(இ - ள்.) தக்கார் இனத்தனுய்த் தான் ஒழுக வல்லானே - தக்காராகிய வினத்தையுடையனுய்த் தானு மறிந்தொழுகவல்ல வரசனே; செற்றூர் செயக் கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்த தொரு துன்பமுமில்லை.

'தக்கார்' அறிவொழுக்கங்களாற் றகுதியுடையார். ஒழுகுதல் : அறநீதிகளின் நெறிவழுவாம னடத்தல். வஞ்சித்தல், கூடினரைப் பிரித்தல், வேறுபகை வினைத்தலென்றிவற்றனும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பலதிறத்தவாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொண்டொழுகுவான்கண் அவற்றுளொன்றும் வாரா தென்பார், 'செற்றூர் செயக்கிடந்த தில்' லென்றூர். (சு)

சசஎ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

(இ - ள்.) இடிக்கும் துணையாரை ஆள்வாரை - நீயன கண்டால் நெருங்கிச் சொல்லுந் துணையாந் தன்மையையுடையாரை இவர் நமக்குச் சிறந்தாரென்றாளு மரசரை ; கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர் ?

தீயன பாவங்களும் நீதியல்லனவும். துணையாந்தன்மையாவது தமக்கு அவை யின்மையும் அரசன்க ணன்புடைமையுமாம். அத் தன்மையுடையார் நெறியினீங்கவிடாமையின், அவரையாளுமரசர் ஒருவரானுங் கெடுக்கப்படாரென்பதாம். நெருங்கிச் சொல்லுமளவி லேனையென் றுரைப்பாருமுளர். இவை யிரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது. (எ)

சசஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(இ - ள்.) இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற் குரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன்; கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும்.

'இல்லாத,' 'ஏமரா' வென்பன பெயரெச்சவடுக்கு. கொடுப்பார் உளராவரென்பது தோன்ற, 'இலானு'மென்றூர். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லாநெறிச் சென்று கெடுதல். (அ)

சசக. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(இ - ள்.) முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதற்பொருளில்லாத வணிகர்க்கு அதனால் வரு மூதியமில்லையாம்; மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதாந் துணையில்லாத அரசர்க்கு அதனான் வரும் நிலையில்லை.

முதலைப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறு போலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டு மென்பதாம். 'நிலை': அரசர் பாரத்தோடு சலியாது நிற்றல். (கூ)

சஙிo. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(இ - ள்.) பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான் றனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலிற் பதிற்று மடங்கு தீமையுடைத்து; நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு ஸட்பினைக் கொள்ளாதொழிதல்.

பலர் பகையாயக்கால் "மோதி முள்ளொடு மூட்பகை கண்டிடல்—பேது செய்து பிளந்திடல்"* என்பவை யல்லது ஒருங்குவினையாக் குறித்துச்† செய்தாலும் ஒருவாற்றா னுய்தல்கூடும்; நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவாற்றானு முய்தல்கூடாமையின், இது செய்தல் அதனினுந் தீதென்பதாம். இவை மூன்று பாட்டானும் அது செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. சகூ—சிற்றினஞ்சேராமை

[அஃதாவது, சிறியவினத்தைப் பொருந்தாமை. சிறியவினமாவது, "நல்லத னலனும் நீயதன் றீமையு மில்லை யென்போ"‡ ரும் விடரும் தூர்த்தரும் ஸடரும்முள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்றாய அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்ப துணர்த்தற்கு இஃததன்பின் வைக்கப்பட்டது.]

சஙிக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(இ - ள்.) பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறியவினத்தை யஞ்சாநிற்கும்; சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து

* சீவகசிந்தாமணி. விமலையாரிலம்பகம் - ஸ உ.
† 'ஒருங்கு வினையாக்குதல் தீது; செய்தாலும்' என்னும் பாடம். ‡ புறநானூறு - உசு.

விடும் - ஏனைச் சிறியோரியல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாகவெண்ணித் துணியும்.

தத்த மறிவு திரியுமாறும் அதனாற் றமக்கு வருந்துன்பமும் நோக்கலின் அறிவுடையா ரஞ்சுவரென்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவரென்றுங் கூறினர். பொருளின்மெழுில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறியவினம் பெரியோர்க் காகாதென்பது கூறப்பட்டது. (க)

சஉஉ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(இ - ள்.) நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தின தியல்பானே நீர் தன்றன்மை திரிந்து அந் நிலத்தின்றன்மைத்தாம்; மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு (திரிந்து) அதாகும் - அதுபோல மாந்தர்க்குத் தாஞ்சேர்ந்த இனத்தினதியல் பானே அறிவுந் தன்றன்மை திரிந்து அவ்வினத்தின் றன்மைத்தாம்.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கட் டன்றன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற் போலத் தனிநிலைக்கட் டன்றன்மைத்தாய வறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியுமென இதனால் அதனது காரணங் கூறப்பட்டது. (உ)

சஉங. மனத்தான மாந்தர்க் குணர்ச்சி யினத்தான
மின்ன னெனப்படுஞ் சொல்.

(இ - ள்.) மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான்ஆம் - மாந்தர்க்குப் பொது உணர்வு தம் மனங் காரணமாக வுண்டாம்; இன்னன் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத்தன்மையனென்று உலகத்தாராற் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக வுண்டாம்.

இயற்கையாய புலனுணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டா மையின் அதனை 'மனத்தான'மென்றும், செயற்கையாய விசேட வுணர்வுபற்றி நல்லனென்றுங் தீயனென்றுங் நிகழுஞ் சொற்கு இனம் வேண்டுதலின் அதனை 'இனத்தான'மென்றுங் கூறினர். உவமையளவை கொள்ளாது அத்திரிபும் மனத்தானமென்பாரை நோக்கி இதனான் அது மறுத்துக் கூறப்பட்டது. (ங)

சஉச. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(இ - ள்.) அறிவு - அவ்விசேட வுணர்வு; ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி - ஒருவற்கு மனத்தின்கண்ணே யுளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி; இனத்து உளதாகும் - அவன் சேர்ந்தவினத்தின்கண்ணே யுளதாம்.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும், பின்னெக்கியவழிப் பயின்றவினத்துளதாயு மிருத்தலின், 'காட்டி' யென இறந்தகாலத்தாற் கூறினர். விசேடவுணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றேயுளதாவதென்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந் தன்மையேயுள்ளது, அதற்கு மூலம் இனமென்பது இதனாற் கூறப்பட்டது. (ச)

சருகு. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

(இ - ள்.) மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனாய மனந்தூயனுதற்றன்மையும் செய்யும்வினை தூயனுதற்றன்மையுமாகிய விரண்டும்; இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனந்தூயனுதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம்.

மனந்தூயனுதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையி னீங்குதல். செய்வினை தூயனுதலாவது மொழிமெய்களாற் செய்யும் நல்வினையுடையனுதல். தூவென்பது அப்பொருட்டாதல், "தூவறத் துறந்தாரை"* என்பதனானு மறிக. ஒருவன் இனந்தூயனாகவே அதனாலே பயிற்சிவயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அதனாற் சொல்லுஞ் செயலுந் தூயனாமென, இதனால் இனத்துள்ளவாமாறு கூறப்பட்டது. (இ)

சருகு. மனந்தூயார்க் கெச்சநன் ருகு† மினந்தூயார்க்
கில்லைநன் ருகா வினை.

(இ - ள்.) மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் - மனந்தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்றாகும்; இனம் தூயார்க்கு நன்று ஆகாவினை இல்லை - இனந்தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதுமில்லை.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் 'எச்சநன்ருகு' மென்றும், நல்லினத்தோடெண்ணிச் செயப்படுதலின் எல்லா வினையு நல்லவாமென்றுங் கூறினர். (சு)

* கலித்தொகை, நெய்தற்கலி - க. † குறள் - ககச.

சருஎ. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

(இ - ள்.) மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலை பெற்றவுயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனநலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்.

'மன்னுயி' ரென்றது ஈண்டு உயர்திணைமே னின்றது. 'தரு' மென்னும் இடவழுவமைதிச்சொல் முன்னுங் கூட்டப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. மனநன்மூதருனே அற மாகலின்* அதனை ஆக்கந் தரு மென்றும், புகழ் கொடுத்தற்குரிய நல்லோர் தாமே இனமாகலின் 'இனநல மெல்லாப்புகழுந் தரு' மென்றுங் கூறினர்.†மேல் மனநன்மை இனநன்மைபற்றிவரு மென்பதனை உட்கொண்டு, அஃதியல்பாகவே யுடையார்க்கு அவ்வின நன்மை வேண்டாவென்பாரை நோக்கி, அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையுந் தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது இவ் விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (எ)

சருஅ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(இ - ள்.) மனநலம் நன்கு உடையராயினும் - மனநன்மையை முன்னை நல்வினையாற் முமேயுடையராயினும்; சான்றோர்க்கு இன நலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலையுடைத்து.

நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. அந்நல் வினை யுள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலின், அதற் 'கேமாப் புடைத்' தாயிற்று. (அ)

சருக. மனநலத்தி னுகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(இ - ள்.) மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மனநன்மை யானே மறுமை யின்பமுண்டாம்; மற்றஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச் சிறப்புத்தானும் இனநன்மையான் வலி பெறுதலையுடைத்து.

'மனநலத்தினுகு மறுமை'யென்றது, மறுமை பயப்பது மன நன்மைதானே பிறிதொன்றன் றென்னும் மதத்தை யுடம்பட்டுக்

* குறள் - நச. † குறள் - சருடு.

கூறியவாறு. 'மற்று' வினைமாற்று. உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனஎலக்திரியினும், நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமை பயப்பிக்குமென நிலைபெறச் செய்யுமாறு கூறப்பட்டது. இவை யைந்து பாட்டானுஞ் சிற்றினஞ் சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவா றறிக. (கூ)

சசுo. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(இ - ள்.) நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையுமில்லை ; தீயினத்தின் (ஊங்கு) அல்லற் படுப்பதூஉம் இல் - தீயவினத்தின் மிக்க பகையுமில்லை.

ஐந்தனுருபுகள் உறழ்பொருவின்கண் வந்தன. ஊங்கென்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையினீக்கித் துயருறுமற் காத்தலின் அதனைத் 'துணை'யென்றும், தீயினம் அறிவினீக்கித் துயருறுவித்தலின் அதனைப் பகையென்றுங் கூறினர். 'அல்லற்படுப்ப' தென்பது ஏதுப்பெயர். இதனால் விதியெதிர்மறைகள் உடன் கூறப்பட்டன. (கo)

அதி. சஎ—தெரிந்துசெயல்வகை

[அஃதாவது, அரசன் தான்செய்யும் வினைகளை யாராய்ந்து செய்யுந் திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின் இது சிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.]

சசுக. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(இ - ள்.) அழிவதூஉம் - வினை செய்யுங்கால் அப்பொழுது அதனாலழிவதனையும் ; ஆவதூஉம் - அழிந்தாற்பின் ஆவதனையும் ; ஆகி வழி பயக்கும் ஊதியமும் - ஆய்ந்தின்று பிற்பொழுது தரு மூதியத்தையும்; சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயிற் செய்க.

உறுவதாவது, நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு, எதிர்வினும் அது வளர்ந்து வருதல். அழிவதின்மையின், எதிர்வின்கண் வருமாக்கத்தை 'ஊதிய'மென்றார். எனவே அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதுந் தம்மொளொத்தாலும் ஒழிதற்பாற்

றன்றென்பது பெற்றும். இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்து செய்க வென்பதாம். (க)

சசுஉ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(இ - ள்.) தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - தாந் தெரிந்துகொண்ட இனத்துடனே* செய்யத் தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயுமெண்ணிச் செய்து முடிக்க வல்ல அரசர்க்கு ; அரும்பொருள் யாதொன்றும் இல் - எய்துதற் கரிய பொருள் யாதொன்றுமில்லை.

ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்துபோந்த 'இன' மென்றுமாம். 'செய்வார்க்' கென்றதனால், வினையென்னுஞ் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது மேற்சேறன் முதல் கூற லீறுய தொழில். பொருள்கட் கேதுவாய அதனிற்றவருமையின், அரிய பொருள்களெல்லாம் எளிதி னெய்துவரென்பதாம். இவை யிரண்டு பாட்டானுஞ் செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறுங் கூறப்பட்டன. (உ)

சசுஊ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(இ - ள்.) ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேலெய்தக்கடவ வூதியத்தினை நோக்கி முன்னெய்திநின்ற முதன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை ; அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார்.

'கருதி'யென்னும் வினையெச்சம் 'இழக்கு'மென்னும் பெயரெச்ச வினைகொண்டது. எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. ஆக்கமேயன்றி முதலையு மிழக்கும் வினைகளாவன, வலியுங் காலமும் இடனு மறியாது பிறர்மண் கொள்வான்சென்று தம்மண்ணு மிழத்தல் போல்வன. முன்செய்துபோந்த வினையாயினு மென்பார், 'செய்வினை'யென்றார். (ஊ)

சசுசு. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(இ - ள்.) தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தோடுந் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார் ; இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவென்னுங் குற்றமுண்டாதலை அஞ்சுவார்.

* இனம் - புரோகிதரும் அமைச்சரும் ; சசஉ - ஆம் குறளுரை.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், 'தொடங்கா' ரென்றார். இளிவரவு அவ்வினையாற் பின்னழிவெய்தியவழி அதன் மேலும் அறிவும் மானமுமிலரென்று உலகத்தா ரிகழு மிகழ்ச்சி. அஃதுண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம். (ச)

சுசுடு. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(இ - ள்.) வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழுந் திறங்களே யெல்லாம் முற்றவெண்ணுது சிலவெண்ணிய துணை யானே அரசன் பகைவர்மேற் செல்லுதல்; பகைவரைப் பாத்திப் படுப்பது ஓராறு - அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வ தொரு நெறியாம்.

அத்திறங்களாவன: வலி, காலம், இடனென்றிவற்றால் தனக் கும் பகைவர்க்கு முளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்குவரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லு மாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற்றுட் சில வெஞ்சினும் பகைவர்க்கு இடனாமகலான், முற்றுப்பெறவெண்ண வேண்டுமென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படு மிழுக்குங் கூறப்பட்டன. (நி)

சுசுசு. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(இ - ள்.) செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன் வினைகளுட் செய்யத்தக்கன வல்லவற்றைச் செய்தலாற் கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானேயன்றிச் செய்யத்தக்கனவற்றைச் செய்யாமைதானுங் கெடும்.

செய்யத்தக்கனவல்லவாவன: பெரிய முயற்சியினவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்றுயர் விளைப்பனவு மெனவிவை. செய்யத்தக்கனவாவன: அவற்றின் மறு தலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான், அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றலுட் பொருள் படையென இரு வகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனு மாக்கான், இசண்டுங் கேட்டிற் கேதுவாயின. இதனாற் செய்வன செய்து ஒழிவன வொழிகவென இருவகையனவும் உடன் கூறப் பட்டன. (சு)

சகுஎ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(இ - ள்.) கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கு முபாயத்தை யெண்ணித் தொடங்குக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கிவைத்தும் பின்னெண்ணக் கடவேமென் றெழிதல் குற்றமாதலான்.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவெனப்பட்டது. சிறப்புமை விகாரத்தாற்றொக்கது. உபாயமென்பது அவாய்நிலையான் வந்தது. அது, கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டமென்ப. அவற்றுண் முன்னையவிரண்டும் ஐவகைய; ஏனைய மூவகைய; அவ்வகைகளெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். இவ்வுபாயமெல்லா மெண்ணுது தொடங்கின் அவ்வினை மாற்றலால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையி னெழிதலாகாமையானும், அரசன் றுயருறுதலின், அவ்வெண்ணுமையை 'இழுக்' கென்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடங்குக வென்பதாம். (எ)

சகுஅ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(இ - ள்.) ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியுமுபாயத்தாற் கருமத்தை முயலாத முயற்சி; பலர் நின்று போற்றினும் பொத்துப் படும் - துணைவர் பலர் நின்று புரைபடாமற் காப்பினும் புரைபடும்.

முடியுமுபாயத்தான் முயறலாவது கொடுத்தலேப் பொருணசையாளன் கண்ணும்; இன்சொல்லேச் செப்பமுடையான், மடியாளன். முன்னே பிறரோடு பொருது நொந்தவனென இவர்கண்ணும்; வேறுபடுத்தலேத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தானென இவர்கண்ணும்; ஒறுத்தலே இவற்றின் வாராதவழி இவர் கண்ணுந், தேறப்படாத கீழ்மக்கள் கண்ணுஞ் செய்து வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல்: கருதிய நன்மையன்றிக் கருதாத தீமை பயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு. (அ)

சகுக. நன்ருற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(இ - ள்.) நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்று வேந்தர்மாட்டு நன்றான உபாயஞ் செய்தற்கண்ணுங் குற்றமுண்டாம்;

அவரவர் பண்பு அறிந்து ஆற்றுக்கடை - அவரவர் குணங்களை யாராய்ந்தறிந்து அவற்றிற்கியையச் செய்யாவிடின்.

ஈன்ற ன வுபாயமாவது, கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலு மாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப்பும்மை. அவற்றை 'அவரவர் பண்பறிந்தாற்ற'மை யாவது அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல். 'தவறு', அவ்வினை முடியாமை. (கூ)

சஎ0. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(இ - ள்.) தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அர சர் வினைமுடித்தற் பொருட்டுத் தந்நிலைமையோடு பொருந்தாத உபா யங்களைச் செய்வராயின் உலகந் தம்மை யிகழாநிற்கும்; எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் - ஆகலான் அஃது இகழா வுபாயங்களை நாடிச் செய்க.

'தம்' மென்பது ஆகுபெயர். தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது: தாம் வலியராய்வைத்து மெலியார்க் குரிய கொடுத்தன் முதலிய மூன்றினைச் செய்தலும், மெலியராய் வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவை யிரண் டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங் கொள்ளாதென்றார். அஃதெள்ளாதன செய்தலாவது, அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட் கேற்பச் செய்தல். மேல்* இடவகையா னுரிமைகூறிய உபாயங்கட்கு வினைமுதல் வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்கு பாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனதுரிமை யுங் கூறப்பட்டன. (கo)

அதி. சஅ—வலியறிதல்

[அஃதாவது. அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த வரசன் னால்வகை வலியையும் அளந்தறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

சஎக. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(இ - ள்.) வினை வலியும் - தான் செய்யக் கருதிய வினை வலியையும்; தன்வலியும் - அதனைச் செய்து முடிக்குந் தன்வலியை

* குறள் - சசுஅ.

யும்; மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும்; துணைவலியும் - இருவர்க்குந் துணையாவார் வலியையும்; தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.

இந்நால்வகை வலியுள் 'வினைவலி' அரண்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், எனைய மூவகை யாற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். 'தன்வலி' மிகவின்கட் செய்கவென்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின் கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றும். (க)

சஎஉ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

(இ - ள்.) ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து; அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழி மெய்களே அதன்கண் வைத்துப் பகைமேற் செல்லும் அரசர்க்கு; செல்லாதது இல் - முடியாத பொருளில்லை.

'ஒல்வ'தெனவே வினைவலி முதலாய மூன்று மடங்குதலின், ஈண்'டறிவ'தென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப் பொருளு மெய்துவரென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் வலியின் பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனுங் கூறப்பட்டன. (உ)

சஎஊ. உடைத்தம் வலியறியா ருக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ - ள்.) உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலையுடைய தம் வலியி னளவறியாதே; ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியாற் றம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி; இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப் பெறுது இடையே கெட்டவரசர் உலகத்துப் பலர்.

உடையவென்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், 'முரிந்தார் பல' ரென்றார். அதனால் தம் வலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது. (ஙு)

சஎச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(இ - ள்.) ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தியொழுகுவதுஞ் செய்யாது; அளவு அறியான் - தன் வலியளவறிவதுஞ் செய்யாது; தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்தவரசன்; விரைந்து கெடும் - விரையக்கெடும்.

காரியத்தைக் காரணமாக உபசரித்து 'வியந்தா'னென்றார். விரையவென்பது திரிந்துநின்றது. நட்பா யொழுகுதல், வலி யறிந்து பகைத்த லென்னுமிரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்த ரோடு செயற்பாலது; இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலையின்மையின், 'விரைந்து கெடு' மென்றார். இவை யிரண்டு பாட்டானுந் தன் வலியறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது. (ச)

சஎஞ. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(இ - ள்.) பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலி யேற்றிய சகடமும் அச்சு முறியும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்குமளவின்றி மிகுத்தேற்றின்.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது நொய்ம் மைச்சிறப்புந் தோன்றநின்றது. 'இறு'மென்னுஞ் சினைவினை முதன்மே னின்றது. எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம்; இதனை நுவலாநுவற்சியென்பாரும், ஒட்டென்பாரு முளர். ஒருவன் தொகுவார்பலரோடு பகைகொள்ளற்க வென்றமை யின், இதனுன் மாற்றான்வலியும் அவன் றுணைவலியும் அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது. (ஞ)

சஎசு. நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(இ - ள்.) கொம்பர் நுனி ஏறினுர் அஃது இறந்து ஊக்கின் - ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணே யேறினின்றார் தம்மூக்கத் தால் அவ்வளவினைக் கடந்து மேலுமேற ஊக்குவராயின்; உயிர்க்கு இறுதியாகி விடும் - அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும்.

'நுனிக்கொம்ப' ரென்பது கடைக்கணென்பதுபோலப் பின் முன்னுகத்தொக்க ஆறும்வேற்றுமைத் தொகை. பன்மை அறிவின் மைபற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனை 'இறுதி' யென்றார். பகைமேற்செல்வான் முடங்கித் தன்னுற் செல்லலா

மளவுஞ் சென்று நின்றான், பின் அவ்வளவினில்லாது மனவெழுச்சி யான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற் கேது வாகாது அவனுயிர்முடிவிற் கேதுவாமென்னும் பொருடோன்ற நின்றமையின், இதுவும் மேலையலங்காரம். அளவறிந்துநிற்றல் வேண்டு மென்றமையின், இதனுல் வினைவலி யறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது. (சு)

சஎஎ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

(இ - ள்.) ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயுநெறியானே தமக்குள்ள பொருளி னெல்லையை யறிந்து அதற்கேற்பவீக; அது பொருள்போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக்கொண்டொழுகும் நெறியாம்.

ஈயுநெறி, மேல் இறைமாட்சியுள் 'வகுத்தலும் வல்லதரசு'* என்புழி உரைத்தாம். எல்லைக்கேற்ப வீதலாவது ஒன்றனவெல் லையை நான்கு கூறுக்கி, அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி, ஒன்றனை மேல் இடர்வந்துழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்றவொன்றனை யீதல்; பிறரும் "வருவாயுட் கால்வழங்கி வாழ் தல்"† என்றார். பேணிக்கொண் டொழுகுதல் ஒருவரோடு நட் பிலாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண் டொழுகுதல். முதலிற் செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம்.

சஎஅ. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(இ - ள்.) ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனைக் கேடில்லையாம்; போகு ஆறு அகலாக்கடை - போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதாயின்.

'இட்டி' தெனவும் 'அகலா' தெனவும் வந்த பண்பின்றொழில் கள் பொருண்மே னின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வரு வித்து, அளவென்பது பின்னுங்கூட்டி யுரைக்கப்பட்டன. முத லும் செலவுந் தம்முளொப்பினுங் கேடில்லையென்பதாம். (அ)

சஎக. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்.

(இ - ள்.) அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக் குள்ள பொருளி னெல்லையை யறிந்து அதற்கேற்ப வாழமாட்டா

* கஅடு - ஆம் குறளுரை. † திரிகடுகம் - உக.

தான் வாழ்க்கைகள்; உளபோல இல்லாகித் தோன்றுக் கெடும் - உள்ளன போலத் தோன்றி, மெய்ம்மையான் இல்லையாய்ப், பின்பு அத்தோற்றமுமின்றிக் கெட்டுவிடும்.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது, அதனிற் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்துந் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின், 'உளபோல'த் 'தோன்று' வென்றார். முதலிற் செலவு மிக்கால் வருமேதங்* கூறியவாறு. (கூ)

சஅ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

(இ - ள்.) உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ளவளவு தூக்காமைக்கேதுவாய ஒப்புரவாண்மையால்; வள வரை வல்லைக் கெடும் - ஒருவன் செல்வத்தினெல்லை விரையக் கெடும்.

ஒப்புரவேயாயினும் மிகலாகா தென்றமையான், இதுவுமது.† இவை நான்கு பாட்டானும் மூவகையாற்றலுட் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்புநோக்கி வகுத்துக் கூறப்பட்டது. (க0)

அதி. சகூ — காலமறிதல்

[அஃதாவது, வலியான் மிகுதியுடையனெய்ப் பகைமேற் சேறலுற்ற அரசன், அச்செலவிற்கேற்ற காலத்தினையறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

சஅக. ‡பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(இ - ள்.) கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாநிற்கும்; இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - அதுபோல, பகைவர திகலே வெல்லக் கருது மரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது.

எடுத்துக்காட்டுவமை, காலமல்லாவழி வலியாற் பயனில்லையென்பது விளக்கி நின்றது. இனிக் 'கால'மாவது, வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முளொத்து நோய் செய்யாது, தண்ணீரும் உண

---

* நல்வழி - உடு.
† சஎகூ - ஆம் குறளிற் கூறியதுபோல.
‡ சீவகசிந்தாமணி, விமலையாரிலமபகம் - ஙகூ.

வும் முதலிய உடைத்தாய்த் தானே வருந்தாது செல்லுமியல்பின தாம். இதனைக் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சஅஉ. பருவத்தோ டொட்ட வொழுக லிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(இ - ள்.) பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினைசெய் தொழுகுதல்; திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்கணீங்காமற் பிணிக்குங் கயிறும்.

காலத்தோடு பொருந்துதல் காலந்தப்பாமற் செய்தல். 'தீராமை' யென்றதனால், தீர்தன்மாலையதென்பது பெற்றும். வினைவாய்த்து வருதலான், அதனினுங்குஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்கா தென்பதாம். (உ)

சஅஊ. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(இ - ள்.) அருவினை என்ப உளவோ - அரசராற் செய்தற் கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ; கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடித்தற்காங் கருவிகளுடனே செய்தற்காங் காலம் அறிந்து செய்வராயின்?

'கருவி' களாவன: மூவகையாற்றலும் நால்வகை யுபாயங்களு மாம்; அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்ப தறிவித் தற்கு, 'கருவியா' னென்றார். எல்லா வினையும் எளிதின் முடியு மென்பதாம். (ஙு)

சஅசு. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

(இ - ள்.) ஞாலம் கருதினுங் கைகூடும் - ஒருவன் ஞாலமுழு துந் தானேயாளக் கருதினுஞ்யினும், அஃது அவன் கையகத்ததாம்; காலம் கருதி இடத்தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனாயின்.

'இடத்தா' னென்பதற்கு, மேற் கருவியானென்பதற்கு உரைத் தாங்குரைக்க. கைகூடாதனவும் கைகூடு மென்பதாம். இவை மூன்று பாட்டானும் காலமறிதற்பயன் கூறப்பட்டது. (சு)

சஅஙி. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(இ - ள்.) கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞால மெல்லாங் கொள்ளக் கருது மரசர் ; காலம் கருதி இருப்பர் - தம்வலி மிகுமாயினும், அது கருதாது, அதற்கேற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேற் செல்லார்.

தப்பாமை கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி 'காலங் கருதி' யென்றதனாற்பெற்றும். அது கருதாது செல்வின் இருவகைப் பெருமையுந்தேய்ந்து வருத்தமுமுறுவராகலின், 'இருப்ப'ரென்றார். இருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக் குணங்களுள் மேற் செலவிற்கு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது. (இ)

சஅசு. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(இ - ள்.) ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடைய வரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு ; பொரு தகர் தாக்கற்குப் பேரும் தகைத்து - பொருகின்ற தகர், தன் பகை கெடப் பாய்தற்பொருட்டுப், பின்னே கால்வாங்குந் தன்மைத்து.

உவமைக்கட் 'டாக்கற்' கென்றதனால், பொருளினும் வென்றி யெய்தற்பொருட் டென்பது கொள்க. இதனால் அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது. (சு)

சஅள. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(இ - ள்.) ஒள்ளியவர் - அறிவுடைய வரசர் ; ஆங்கே பொள் ளெனப் புறம் வேரார் - பகைவர் மிகைசெய்தபொழுதே அவரறியப் புறத்து வெகுளார் ; காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்வேற்ற காலத்தினையறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர்.

'பொள்ளென' வென்பது குறிப்புமொழி. 'வேரார்', 'வேர்ப்ப' ரெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். அறியவெகுண் டழித் தம்மைக் காப்பராகலிற் 'புறம்வேரா'ரென்றும், வெகுளி யொழிந்துழிப் பின்னும் மிகை செய்யாம லடக்குதல் கூடாமை யின் 'உள்வேர்ப்ப' ரென்றுங் கூறினர். (எ)

சஅஅ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(இ - ள்.) செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய வரசர், பகைவர்க்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கண்டாற் பணிக; இறுவரைகாணின் தலை கிழக்காம் - பணியவே அக்காலம் வந்திறும்வழி அவர் தகைவின்றி யிறுவர்.

பகைமையொழியும் வரை மிகவுந் தாழ்கவென்பார் 'சுமக்க' வென்றும், அங்ஙனந் தாழவே அவர் தம்மைக்காத்த விகழ்வராகலிற் றப்பாமற்கெடுவ ரென்பார், அவர்தலை கீழாமென்றுங் கூறினர். தலைமேற்கொண்ட தொருபொருளைத் தள்ளுங்கால் அது தன் றலை கீழாக விழுமாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது. இவை யிரண்டு பாட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றுமலிருக்க வென்பது கூறப்பட்டது. (அ)

சஅக. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ - ள்.) எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருது மரசர் தம்மா லெய்துதற்கரிய காலம் வந்துகூடியக்கால்; அந்நிலையே செய்தற்கு அரிய செயல் - அது கழிவதற்கு முன்பே, அது கூடாவழித் தம்மாற் செய்தற்கரிய வினைகளைச் செய்க.

ஆற்றன் முதலியவற்றாற் செய்துகொள்ளப்படாமையின் 'எய்தற்கரிய' தென்றும்; அது தானே வந்தியைதல் அரிதாகலின் 'இயைந்தக்கா'லென்றும், இயைந்தவழிப் பின்னில்லா தோடுதலின் 'அந்நிலையே' யென்றும், அது பெறுவழிச் செய்யப்படாமையிற், 'செய்தற்கரிய'வென்றுங் கூறினர். இதனாற் காலம் வந்துழி விரைந்து செய்கவென்பது கூறப்பட்டது. (க)

சகக. *கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(இ - ள்.) கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேற் செல்லாதிருக்குங் காலத்துக் கொக்கிருக்குமாறுபோல இருக்க; மற்றுச் சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க - மற்றைச் செல்லுங் காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற் செய்து முடிக்க.

மீன்கோடற் கிருக்கும்வழி அது வந்தெய்துந் துணையும் முன்னறிந்து தப்பாமற்பொருட்டு உயிரில்லதுபோன் றிருக்குமாகலா

* முதுரை - ககூ.

னும், எய்தியவழிப் பின் றப்புவதற்கு முன்பே விரைந்து குத்துமாக லானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கு உவமையாயிற்று. 'கொக்கொக்க' வென்றாராயினும் அது கூம்புமாறு போலக் கூம்புக வென்றும், 'குத்தொக்க' வென்றாராயினும் அது குத்துமாறுபோலக் குத்துகவென்று முரைக்கப்படும், இது தொழிலுவமமாகலின். உவமைமுகத்தால் இருப்பிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறிய வாராயிற்று. (கo)

அதி. நo—இடனறிதல்

[அஃதாவது, வலியுங் காலமுமறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.]

சகக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(இ - ள்.) முற்றும் இடம் கண்டபின் அல்லது - பகைவரை முற்றுதற்காவதோரிடம் பெற்றபின் னல்லது ; எவ்வினையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொரு வினையையுந் தொடங்கா தொழிக ; எள்ளற்க - அவரைச் சிறியரென் றிகழாதொழிக.

முற்றுதல் - வளைத்தல். அதற்காமிடமாவது, வாயில்களானும் நூழைகளானும் அவர் புகலொடு போக்கொழியும் வகை அரணினைச் சூழ்ந்து, ஒன்றற்கொன்று துணையாய்த் தம்மு ணலிவிலாத பல படையிருப்பிற்கும், மதிலும் அகழுமுதலிய வரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கு மேற்ற நிலக்கிடக்கையும் நீருமுடையது. அதுபெற் றூல் இரண்டுஞ் செய்க வென்பதாம். (க)

சகஉ. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

(இ - ள்.) முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட் டோடு கூடிய வலியினையுடையார்க்கும் ; அரண் சேர்ந்து ஆம் ஆக் கம் பலவும் தரும் - அரணைச் சேர்ந்தாகின்ற வாக்கம் பல பயன்களை யுங் கொடுக்கும்.

'மாறுபா'டாவது ஞாலம் பொதுவெனப் பொருவராசர் மனத் தின்க ணிகழ்வதாகலானும், வலியுடைமை கூறியவதனானும் இது பகைமேற்சென்ற வரசர்மேற் றூயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண்

சேராதா மாக்கமுமுண்மையின், ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது 'ஆக்க'மென்றது அதற்கேதுவாய முற்றினை. அது கொடுக்கும் 'பயன்க'ளாவன : பகைவராற் றமக்கு நலிவின்மையும், தாம் நிலை பெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின. (உ)

சகஙக. ஆற்றரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

(இ - ள்.) ஆற்றரும் ஆற்றி அடுப - வலியரல்லாதாரும் வலிய ராய் வெல்வர் ; இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கேற்றவிடத்தினை யறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டி வினை செய்வராயின்.

வினையென்பதூஉம், தம்மையென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. காத்தல், பகைவரான் நலிவுவாராமல் அரணனும் படையானுங் காத்தல். இவ்வாற்றான் வினைசெய்வராயின் மேற்சொல்லிய* வலியின்றியும் வெல்வரென்பதாம். (ங)

சகச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(இ - ள்.) இடன் அறிந்து துன்னியார் - தாம் வினைசெய்தற் கேற்றவிடத்தினை யறிந்து சென்ற வரசர் ; துன்னிச் செயின் - அரணைப் பொருந்தினின்று அதனைச் செய்வராயின், எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவரை வெல்வதாக வெண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர்.

அரணென்பது அவாய்நிலையான் வந்தது. 'எண்ண'மென்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. அதனை 'யிழப்ப' ரென்றார், அவர் வினை செய்யாமற் றம்மைக் காத்தமையின். இதனால் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பகைவரரணின் புறத்திறுப்பார் அதற்கா மிடமறிதல் கூறப்பட்டது. (ச)

சகஙு. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

(இ - ள்.) முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும் - முதலை ஆழமுடைய நீரின்கணுயிற் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும் ; புனலின் நீங்கின் அதனைப் பிற அடும் - அப்புனலினீங்கு மாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும்.

* குறள் - சகஉ.

எனவே, எல்லாருந் தந்நிலத்து வலியரென்பது கூறப்பட்டது. 'பிற'வென்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கட் பிறவெல்லாம் நிற்றலாற்றுமையின் அவையெல்லாம் முதலைக்கெளிய வாம்; அவை யியங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங்கலாற்றுமை யின் அஃதவற்றிற்கெல்லா மெளிதாமென்றது, மேற்செல்லும் அர சர் பகைவர் நிற்றலாற்று விடனறிந்து செல்வராயின், அவர் தமக் கெளியராவரன்றித், தாநிற்க லாற்றுவிடத்துச் செல்வராயின் அவர்க் கெளியராவரென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதலென்னு மலங்காரம். அவரை அவர் நிற்றலாற்று விடத்துச் சென்று வெல்க வென்பதாம். (இ)

சகசு. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(இ - ள்.) கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்க ணோடுங் கால் வலிய நெடிய தேர்கள் கடலின்க ணோடமாட்டா; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்க ணோடும் நாவாய்கடாமும் நிலத்தின்க ணோடமாட்டா.

'கடலோடா' வென்ற மறுதலையடையான் நிலத்தோடு மென் பது வருவிக்கப்பட்டது. 'கால்வனெடுந்தே' ரென்பது ஓடுதற்கேற்ற காலும், பெருமையு முடையவாயினு மென்பதுபட நின்றது. மேற் சென்றூர் பகைவரிடங்களே யறிந்து, அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்றநின்றமையின். இதுவும் மேலையலங் காரமாயிற்று. (சு)

சகஎ. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ - ள்.) எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் - பகை யிடத்து வினைசெய்யுந் திறங்களெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய்வராயின், அஞ் சாமை அல்லால் துணை வேண்டா - அச்செயற்குத் தந்திண்மையல் லது பிறிதொரு துணை வேண்டுவதில்லை.

திண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுவதல்லது 'துணைவேண்டா' வென்றூர், அவ்வினை தவறுதற்கேதுவின்மையின். இவை மூன்று பாட்டானும் வினைசெய்தற்கா மிடனறிதல் கூறப்பட் டது. (எ)

சகஅ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னுக்க மழிந்து விடும்.

(இ - ள்.) உறுபடையான் - பெரும்படையுடைய வரசன்; சிறு படையான் செல் இடம் சேரின் - ஏனைச் சிறுபடையுடையானை யழித்தல்கருதி, அவன் புகலைச் சென்று சாருமாயின்; ஊக்கம் அழிந்துவிடும் - அவனுற் றன்பெருமை யழியும்.

'செல்லிடம்' அவனுக்குச் செல்லுமிடம். 'அழிந்துவிடு' மென்பது எழுந்திருக்கு மென்றாற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான்மே லேற்றப்பட்டது. தன் படைப்பெருமை நோக்கி இடனேக்காது செல்வனுயின், அஃது, அப்படைக் கொருங்கு சென்று வினைசெயலாகாமையானுகப் பயிற்சியின்மையானுக அப் பெருமையாற் பயனின்றித் தானழிந்துவிடு மென்பதாம். (அ)

ககூ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(இ - ள்.) சிறைநலனும் சீரும் இலர் எனினும் - அரணழித்தற் கருமையும் பெருமையாகிய வாற்றலுமுடைய ரல்லராயினும்; மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின்கட் சென்று தாக்குதலரிது.

'நிலத்தோ' டென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கட் சென்று தாக்கின், அவர் அது விட்டுப்போதற் றுணிவினரன்றிச் சாதற் றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை யுடையு மென்பதாம். (கூ)

ஙஂ. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(இ - ள்.) கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க் கடங்காவுமாய், வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை; கால் ஆழ் களரின் நரி அடும் - அவை காலாழு மியல்பிற்றுய சேற்று நிலத்துப் பட்டுழி நரி கொல்லும்.

'முகம்' ஆகுபெயர். ஆண்மையும், பெருமையு முடையாரும் தமக்கேலா நிலத்துச் செல்லின் அவற்றுற் பயனின்றி மிகவுமெளிய ரால் அழிவரென்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ்வலங் காரம். வேலாழ் முகத்தவென்று பாடமோதுவாரு முளர்*: வேற்படை குளித்த முகத்தவாயின், அதுவும் நரியடுதற் கேதுவாய் முடிதலின், அது பாடமன்மையறிக. இவை மூன்று பாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்துழிப் படுமிழுக்குங் கூறப்பட்டன. (கo)

* மணக்குடவர்.

அதி. நிக—தெரிந்துதெளிதல்

[அஃதாவது, அமைச்சர் முதலாயினரைப் பிறப்புக் குணம் அறிவென் பனவற்றையுஞ் செயலையுங் காட்சி கருத்து ஆகமமென்னும் அளவைகளா னாராய்ந்து தெளிதல். வலிமுதன் மூன்று மறிந்து பகைமேற் செல்வானுங்குத் தானே வினையுற்றுச் செய்தற் பொருட்டும் அறைபோகாமற் பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.]

நிoக. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து நேறப் படும்.

(இ - ள்.) அறம் பொருள் இன்பம் உயிரச்சம் - அரசனுற் றெளியப்படுவா னெருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப் பொருட்டான்வரும் அச்சமுமென்னும்; நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை நான்கின் றிறத்தான் மனவியல்பாராய்ந்தால் பின்பு தெளியப்படும்.

அவற்றுள், அறவுபதையாவது: புரோகிதரையும் அறவோரை யும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப் போக்கி அறனுமுரிமையு முடையானெருவனே வைத்தற்கெண்ணி னம் இதுதான் யாவர்க்குமியைந்தது நின்கருத்தென்னே யெனச், சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது: சேனைத் தலைவனையும் அவனெடியைந்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன்மாலைய னாகலின் இவனைப் போக்கிக் கொடையு முரிமையு முடையானெருவனே வைத்தற்கெண்ணினம் இதுதான் யாவர்க்கு மியைந்தது நின்கருத் தென்னையெனச், சூளுறவோடு சொல்லு வித்தல். இன்பவுபதையாவது: தொன்றுதொட்டு உரிமை யொடு பயின்றாளொரு தவமுதுமகளை விட்டு, அவளால், உரிமையுள் இன்னுள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள், அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும்பொரு ளும் கைகூடுமெனச், சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது: ஒரு நிமித்தத் தின் மேலிட்டு ஓரமைச்சனுல் ஏனையோரை அவனில்லின்க ணழைப்பித்து, இவர் அறைபோவா னெண்ணற்குக் குழீஇயினு ரென்று தான் காவல்செய்து, ஒருவனுல் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக் கினிய வரச னெருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னையெனச், சூளுறவோடு சொல்லுவித்தல். இங்ஙான்

இனுந் திரிபிலனையவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத் தளவையாற் றெளியப்படுமென்பதாம். இவ் வடநூற் பொருண் மையை யுட்கொண்டு இவரோதிய தறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்ச மெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார். (உ)

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு. (ஙஙஅ.

(இ - ள்.) குடிப் பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து ; குற் றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி ; வடுப் பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு - நமக்கு வடு வருங்கொலென் றஞ்சா நிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு.

குற்றங்களாவன : மேலரசனுக்குச் சொல்லிய வகையாறும்,* மடி, மறப்பு, பிழைப்பென் றிவைமுதலாயவுமாம். 'நாண்', இழி தொழில்களின் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவையாற் றெரிவன. இந் நான்கு முடையவனையே தெளிகவென்பதாம். (ஙஅ)

அரியகற் றாசற்றூர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யறிதே வெளிறு. (ஙஙஆ.

(இ - ள்.) அரிய கற்று ஆசு அற்றூர் கண்ணும் - கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய† குற்றங்களற்றூர்மாட்டும் ; தெரி யுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது.

வெண்மை - அறியாமை ; அஃது இவர்மாட்டுளதாவது மனத் தது நிலையாமையான் ஒரோவழியாகலின், 'தெரியுங்கா' லென்றார். காட்சியளவையாற் றெரிந்தால் அதுவுமில்லாதாரே தெளியப்படுவ ரென்பது குறிப்பெச்சம், இவ்வளவைகளான் இக்குணமுங் குற்ற முந் தெரிந்து குணமுடையாரைத் தெளிகவென்பது, இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது. (ஙக)

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (ஙஙஇ.

(இ - ள்.) குணம் நாடி - குணங் குற்றங்களுள் ஒன்றே யுடை யார் உலகத்தின்மையின் ஒருவன் குணங்களை யாராய்ந்து ; குற்றமும் நாடி - எனைக் குற்றங்களையு மாராய்ந்து ; அவற்றுள் மிகை நாடி -

* குறள்கள் - சஙக, சஙஉ. † குறள் - ஙஅ.

பின் அவ்விருபகுதியுள்ளு மிக்கவற்றை யாராய்ந்து ; மிக்க கொளல் - அவனை அம் மிக்கவற்றுனே யறிக.

மிகையுடையவற்றை 'மிகை' யென்றார். அவையாவன: தலைமை யாலுக, பன்மையாலுக உயர்ந்தன. அவற்று னறிதலாவது, குண மிக்கதாயின் வினைக்குரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்ல னென்றுமறிதல். குணமேயுடையார் உலகத்தரியராகலின், இவ் வகை யாவரையுந் தெளிகவென்பது இதனுற் கூறப்பட்டது. (ச)

குடு. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(இ - ள்.) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக்கல் - பிறப்புக் குணம் அறிவென்பனவற்றுன் மக்களெய்தும் பெருமைக் கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது ; தத்தம் கருமமே - தாந்தாஞ் செய்யுங் கருமமே, பிறிதில்லை.

இஃதேகதேசவுருவகம். மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாம லறியலுறுவார்க்குப் பிற கருவிகளுமுளவாயினும், முடிந்த கருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றும். இதனுற் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது. (டு)

குஎ. அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணர் பழி.

(இ - ள்.) அற்றுரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாரைத் தெளிதலையொழிக ; அவர் மற்றுப் பற்று இலர் - அவர் உலகத் தோடு தொடர்பிலர் ; பழிநாணர் - ஆகலாற் பழிக்களுசார்.

'பற்றில' ரென்பதனுல் 'சுற்ற'மென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொழிதற்கும், புகழ்வன செய்தற்கு மேது வாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம். (சு)

குஅ. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(இ - ள்.) காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் - அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியா தாரைத் தெளிதல் ; பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா வறியாமையையுங் கொடுக்கும்.

தன்னுெடு அவரிடைநின்ற, அன்புபற்றி, அரசன் அறிவிலார் மேல் வினையை வைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும் ;

கெட்டால் அவர்க்குளதேயன்றி, வினைக்குரியாரை அறியாமை, மேல் வினைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவுமுளவா மென்பதாம். (எ)

குoஅ. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னெடியை புடையனல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு ; வழிமுறை தீரா இடும்பைதரும் - அத் தெளிவு தன் வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

'இயைபு' தன் குடியொடு தொடர்ந்த மரபு. இதனானே அதுவும் வேண்டுமென்பது பெற்றும். தெளிதல் அவன்கண்ணே வினையை வைத்தல். அவ் வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர்கைப்பட்டுக் கீழாய் விடுவரென்பதாம். ஈன்கனுருபு விகாரத்தாற்றொக்கது. (அ)

குoக. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(இ - ள்.) யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாதொழிக ; தேர்ந்த பின் தேறும்பொருள் தேறுக - ஆராய்ந்த பின் தெளியும் பொருட்களே ஐயுறுதொழிக.

'தேறற்க' வென்ற பொதுமையான் ஒரு வினைக்கண்ணுந் தெளியலாகாதென்பது பெற்றும். ஈண்டுத் 'தேறுக' வென்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின்மே னின்றது. 'தேறும் பொரு' ளென்றது அவரவ ராற்றற்கேற்ற வினைகளே. 'பொருள்' ஆகுபெயர். (க)

குகo. தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) தேரான் தெளிவும் - அரசன் ஒருவனை யாராயாது தெளிதலும் ; தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன் மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும் ; தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

வினை வைத்தபின் ஒரு தவறு காணுதுவைத்து ஐயுறுமாயின், அதனை அவனறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தான் அவ் வினையை கெகிழ்த்துவிடும் ; அதுவேயன்றிப் பகைவரால் எளிதிற்

பிரிக்கவும்படும் ; ஆதலாற் 'தெளிந்தான்கண் ஐயுறவு' மாகாதாயிற்று. தெளிவிற் கெல்லை கூறியவாறு. இவை யைந்து பாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படு மிழுக்கும், தெளிவிற் கெல்லையுங் கூறப்பட்டன. (கo)

அதி. நூஉ—தெரிந்துவினையாடல்

[அஃதாவது, அத்தெளியப்பட்டாரை அவர் செய்ய வல்ல வினைகளை யறிந்து அவற்றின்கண்ணே யாளுந் திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.]

நூகக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளெப் படும்.

(இ - ள்.) நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண் வைத்தால், அதன்கணவனவும் ஆகாதனவுமாய செயல்களை யாராய்ந்தறிந்து; நலம் புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய வியல்பினை யுடையான் ; ஆளப்படும் - பின் அவனுற் சிறந்த வினைகளிலே யாளப்படும்.

தன்னை யுரிமை யறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாய தோர் வினையை அரசன் றன்கண்வைத்தவழி, அதன்கண் ஆஞ் செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பினனுதல்பற்றி அக மாய வினைக்கண்ணே யாளப்படுவ னென்பதாயிற்று. 'புரிந்த' வென்ற இறந்த காலத்தான், முன்னுரிமை யறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும். (க)

நூகஉ. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

(இ - ள்.) வாரி பெருக்கி - பொருள் வரு வாயில்களை விரியச் செய்து ; வளம்படுத்து - அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து ; உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கு முற்ற இடையூறுகளை நாடோறு மாராய்ந்து நீக்க வல்லவன் ; வினை செய்க - அரசனுக்கு வினை செய்க.

வாயில்களாவன : மேல் இறைமாட்சியுள் " இயற்றலும் "* என் புழி யுரைத்தனவும், உழவு, பசுக்காவல் , வாணிக மென்னும் வார்த்தையுமாம். † செல்வங்களாவன : ஆண்டுப் பொருளுமின்பமுமாக

*திருக்குறள் - நூஅடு. † வார்த்தை - தொழில்.

உரைக்கப்பட்டன. 'இடையூறுக'ளாவன : அரசன்வினை செய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வரென் றிவராள் வரு நலிவுகள். (உ)

குகக. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(இ - ள்.) அன்பு - அரசன்மாட் டன்பும் ; அறிவு - அவனுக் காவன வறியுமறிவும் ; தேற்றம் - அவை செய்தற்கட் கலங்காமை யும் ; அவாவின்மை - அவற்றுற் பொருள் கையுற்றவழி அதன்மே லவாவின்மையுமாகிய ; இந்நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களையும் நிலைபெற வுடையான்மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு.

'இந்நான்கு நன்குடை'மை இவன் செய்கின்ற வினைக்கண் யாது மாராய வேண்டுவதில்லையென்று அரசன் றெளிதற்கேதுவாகலின், அவனை அதன் பிறப்பிடனுக்கிக் கூறினர். இவை மூன்று பாட்டா னும் ஆடற்குரியான திலக்கணங் கூறப்பட்டது. (ங)

குகச. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர்.

(இ - ள்.) எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லா வகை யானு மாராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும் ; வினைவகை யான் வேறுரும் மாந்தர் பலர் - அவ்வினையி னியல்பானே வேறுபடு மாந்தர் உலகத்துப் பலர்.

கட்டியங்காரன் *போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப் படுவதல்லது அதனைக் குற்றமென் றெழுந்து தம்மியல்பினிற்பார் அரியராகலின், 'வேறுகுமாந்தர் பல' என்றார். வினை வைப்பதற்கு முன் எல்லாக் குணங்களுமுடையராய், வைத்தபின் விகாரப்படு வாரை இடையாய தொருவினையை வைத்தறிந்து ஒழிக்க வென்ப தாம். இதனுன் ஒருவகையா லொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது. (ச)

குகடு. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(இ - ள்.) அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் - செய்யு முபாயங்களை யறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந் துன் பங்களைப் பொறுத்து முடிவு செய்ய வல்லானை யல்லது ; வினைதான்

* கட்டியங்காரன் சீவகசிந்தாமணியில் கூறப்படும் சச்சந்தனென்னும் அரசனுடைய மந்திரி (நாமகளிலம்பகம்.)

சிறந்தான் என்று ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் நம்மாட்டு அன்புடையனென்று பிறனொருவனே யேவுமியல்புடைத்தன்று.

'செய்கிற்பாற் கென்பது வேற்றுமை மயக்கம். அறிவாற்றல் களானல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையினதியல்பு கூறப்பட்டது. (இ)

இகசு. செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(இ - ள்.) செய்வானே நாடி - முதற்கண்ணே செய்வான திலக்கணத்தை யாராய்ந்து ; வினை நாடி - பின் செய்யப்படும் வினையினதியல்பை யாராய்ந்து ; காலத்தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையும் காலத்தோடு படுத்துப் பொருந்தவறிந்து அவனை அதன்கண் ஆடலைச் செய்க.

செய்வான திலக்கணமும்* வினையினதியல்பும்† மேலே கூறப் பட்டன. 'காலத்தோடெய்த வுணர்த'லாவது இக்காலத்து இவ் விலக்கணமுடையான் செய்யின் இவ்வியல்பிற்ருய வினை முடியு மென்று கூட்டி யுணர்தல். (சு)

இகஎ. இதனை யிதனு லிவன்முடிக்கு மென்ருய்ந்
ததனை யவன்கண் விடல்.

(இ - ள்.) இதனை இதனுல் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறுபடுத் தாராய்ந்து ; அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முளியைந்த வழி அவ்வினையை அவன்கண்ணே விடுக.

கருவி : துணைவரும், பொருளும் முதலாயின. வினைமுத லும் கருவியும் வினையுந் தம்முளியைதலாவது ஒரொன்ருேடு ஏனைய விரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடுதல் அதற்கு அவனை யுரிய ஞக்குதல். (எ)

இகஅ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னுகச் செயல்.

(இ - ள்.) வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன்வினை செய்தற்குரியனுக வாராய்ந்து துணிந்தால் ; அவனை அதற்கு உரியனுகச் செயல் - பின்னவனை அதற்குரியனு மாறு உயரச்செய்க.

* குறள்கள் - இகக, இகஉ, இகஙு. † குறள் - இகடு.

உயரச்செய்தலாவது அதனைத் தானே செய்து முடிக்கு மாற்ற லுடையனாக்குதல்; அது செய்யாக்காலுங் கெடு மென்பது கருத்து. ()

குகக. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ருக
நினைப்பானை நீங்குந் திரு.

(இ - ள்.) வினைக்கண் வினை உடையான் கேண்மை - எப் பொழுதுந் தன்வினையின்கண்ணே முயறலையுடையான் அவ்வரிமை யாற் றனக்குக் கேளாயொழுகுகின்ற தன்மையை; வேரூக நினைப் பானைத் திரு நீங்கும் - அது பொருதார் சொற்கேட்டு அரசன் மாறு படக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்கும்.

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனுய் நில்லாது கேளிர்செய்யு முரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவ மதிப்பாகக்கொண்டு செறக் கருதுமாயிற் பின்னொருவருமுட்பட்டு முயல்வாரில்லையாம்; ஆகவே, தன்செல்வங் கெடுமென்பது கருத்து. இந்நான்கு பாட்டானும் ஆடற்குரியானை யாளுந்திறங் கூறப்பட் டது. (க)

குஉ0. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(இ - ள்.) வினைசெய்வான் கோடாமை உலகு கோடாது - வினை செய்வான் கோடாதொழிய உலகங் கோடாது; மன்னன் நாடோறும் நாடுக - ஆதலான் அரசன் அவன் செயலை நாடோறு மாராய்க.

அஃதொன்றனையு மாராயவே அதன்வழித்தாய உலகமெல்லா மாராய்ந்தானும்; அதனுல் அவனுரிமை அழியாமற் றன்னுள்ளே யாராய்ந்து போதுகவென்பதாம். இதனுன் ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது. (கo)

அதி. நுஉ—சுற்றந்தழால்

[அஃதாவது, அரசன் தன் கிளைஞரைத் தன்னினீங்காமல் அணைத் தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச் சுற்றங் கூறுகின்றராக லின், இது தெரிந்துவினையாடலின்பின் வைக்கப்பட்டது.]

குஉக. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(இ - ள்.) பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒருவன் செல்வந்தொலைந்து வறியனாயவழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக்கொண்டாடு மியல்புகள்; சுற்றத்தார்கண்ணே உள - சுற்றத்தார்மாட்டே உளவாவன.

சிறப்பும்மை, வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. 'பழைமை' பற்றறுக்காலத்துத் தமக்குச் செய்த உபசாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்ற பொழுதே தாமும் அவனோடு பற்றறு வராகலின், ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இதனாற் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

குஉ. விருப்பருச் சுற்ற மியையி னருப்பரு
வாக்கம் பலவுந் தரும்.

(இ - ள்.) விருப்பு அறுச் சுற்றம் இயையின் - அன்பறுத சுற்றம் ஒருவற்கெய்துமாயின்; அருப்பு அறு ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கிளைத்தலறுத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கும்.

உட்பகையினீக்குதற்கு 'விருப்பறுச்சுற்ற' மென்றும், தானே வளர்க்கு மொருதலையாய செல்வத்தினீக்குதற்கு 'அருப்பறுவாக்க' மென்றும் விசேடித்தார். தொடைநோக்கி விகாரமாயிற்று. 'இயையி' னென்பது அதனதருமை விளக்கிநின்றது. 'ஆக்க' மென்பது ஆகுபெயர். 'பலவு' மென்றது அங்கங்களாறனையு நோக்கி. பலர்கூடி வளர்த்தலின், அவை மேன்மேற் கிளைக்குமென்பது கருத்து. (உ)

குஉக. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

(இ - ள்.) அளவளாவு இல்லாதான் வாழ்க்கை - அச்சுற்றத்தோடு நெஞ்சுகலத்த லில்லாதவன் வாழ்க்கை; குள வளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற் போலும்.

சுற்றத்தோடென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலப்புத் தன்னளவும் அதனளவு முசாவுதலான் வருவதாகலின், 'அள வளா' வென்பது ஆகுபெயர். 'வாழ்க்கை' யென்றதூஉம் அதற்கேது வாய செல்வங்களே. நிறைதலென்னும் இடத்து நிகழ்பொருளின் மேழில் இடத்தின்மேனின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் ரு ங்குவாரின்மையிற் புறத்துப் போமென்பதாம். (க)

குஉச. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(இ - ள்.) செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன் - செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனுவது; சுற்றத்தான் தான் சுற்றப்பட ஒழுகல் - தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇ யொழுகுதல்.

'பெற்ற' வென்பதனுள் அகரமும், அதனுனென்பதனுள் அன் சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற் கேதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் பயனென்றார். இவை மூன்று பாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற்கேதுவும் அரணும் பயனுமாமென்பது கூறப்பட்டது. (க)

குஉகு. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

(இ - ள்.) கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் - ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் வல்லனுயின்; அடுக்கிய சுற்றத்தான் சுற்றப்படும் - தம்மிற் றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும்.

இரண்டும் அளவறிந்தாற்றுத லரிதென்பது தோன்ற, 'ஆற்றி' னென்றார். தம்மிற் றொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றுற் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப. (கு)

குஉசு. பெருங்கொடையான் பேணன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(இ - ள்.) பெருங்கொடையான் வெகுளி பேணன் - ஒருவன் மிக்க கொடையை யுடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின்; அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல் - அவன்போலக் கிளையுடையார் இவ்வுலகத்தில்லை.

மிக்ககொடை, ஒன்றானும் வறுமை யெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை இஃதரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை. (சு)

குஉஎ. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ராக்கே யுள.

(இ - ள்.) காக்கை கரவா கரைந்து உண்ணும் - காக்கைகள் தமக்கிரையாயின கண்டவழி, மறையாது இனத்தை யழைத்து அத னோடுங்கூட வுண்ணுகிற்கும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள - சுற்றத்தானெய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே உளவாவன.

அவ்வாக்கங்களாவன : பகையின்மையும், பெருஞ்செல்வ முடை மையும் முதலாயின. எச்சவும்மையான் அறமு மின்பமுமேயன்றிப் பொருளுமெய்து மென்பது பெறுதும். அப்பெற்றித்தாயவியல் பென்றது தாம் நுகர்வனவெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல். (எ)

0உஅ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(இ - ள்.) பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக் கின் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தந் தகுதிக்கேற்ப நோக்குமாயின்; அதுநோக்கி வாழ்வார் பலர் - அச் சிறப்புநோக்கி அவனைவிடாது வாழுஞ் சுற்றத்தார் பலர்.

உயர்ந்தார் நீங்குதலேக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லா ரும் விடாதொழுகுதலேக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்கு பாட்டானுஞ் சுற்றந் தழுவு முபாயங் கூறப்பட்டது. (அ)

0உக. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(இ - ள்.) தமராகித் தற்றுறந்தார் சுற்றம் - முன்றமராய் வைத்துத் தன்னேடு அமராது யாதானுமொரு காரணத்தாற் றன் னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல்; அமராமைக் கார ணம் இன்றி வரும் - அவ்வமராமைக் காரணம் தன்மாட்டில்லையாகத் தானேயுளதாம்.

'அமராமைக் காரணமின்றி' யென்றதனான், முன் அஃதுண் டாய்த் துறத்தல் பெற்றாம். அஃதாவது, அரசன் முனைறிகெட வொழுகல், வெறுப்பன செய்த லென்றிவை முதலியவற்றான் வரு வது. ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடைய ராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனையொழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கன்புசெய்து கொள்ளவேண்டா, பழைய வியல்பாய் நிற்குமென்பார், ''வரு'' மென்றார். (க)

0ங. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(இ - ள்.) உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை - காரணமின்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தான் வந்த சுற்றத்தானை; வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக்கொளல்- அரசன் அக் காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழீஇக் கொள்க.

வாளா 'உழைப்பிரிந்' தென்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றும். வருதற்காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் 'இழைத்திருந்' தென்றும், அன்பின்றிப் போய்ப் பின்னுங் காரணத்தான் வந்தமையின் 'எண்ணிக்கொள' லென்றுங் கூறினர். பிரிந்துபோய சுற்றத்தாருள் நீமைசெய்யப்போய் அதனையொழியவருவானும், அது செய்யாமற் போய்ப் பின் நன்மை செய்ய வருவானும் தழுவப்படுமாகலின், தழுவுமாறு முறையே இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (கo)

அதி. நிச—பொச்சாவாமை

[அஃதாவது, உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றுன் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தன் முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வில்வழி யாகலின், இது சுற்றந் தழாலின்பின் வைக்கப்பட்டது.]

ஙூக. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(இ - ள்.) சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு - மிக்கவுவகைக் களிப்பான் வரும் மறவி; இறந்த வெகுளியிற் றீது - அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுங் தீது.

மிக்கவுவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதமென்றிவற்றுன் வருவது. அளவு பகைவரை யடர்த்தற்கும் கொடியோரை யொறுத்தற்கும் வேண்டுவது. 'இறந்த வெகுளி', ஒரோவழிப் பகைவரையுங் கொல்லும்; இஃதன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினுங் தீதாயிற்று. (க)

ஙூஉ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(இ - ள்.) புகழைப் பொச்சாப்புக் கொல்லும் - ஒருவன் புக

ழினை அவன் மறவி கெடுக்கும் ; அறிவினை நிச்சநிரப்புக் கொன் றாங்கு - அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறு போல.

'நிச்சநிரப்பு' நாடோறும் இரவான் வருந்தித் தன் வயிறு நிறைத் தல். அஃது அறிவுடையான்க ணுண்டாயின் அவற்கு இளிவரவா னும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவ னன்குமதிப் பினை யழிக்கும் ; அதுபோல மறவியும் புகழுடையான்க ணுண்டா யின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளற் பாட்டினை விளைத்து அவ னன்கு மதிப்பினை அழிக்கு மென்ப தாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் பொச்சாப்பினது குற்றங் கூறப்பட்டது. (உ)

நூகூ. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு.

(இ - ள்.) பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை - பொச்சாந் தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை ; அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு - அவ்வின்மை இந் நீதிநூலுடையார்க்கே யன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது.

அரசர்க்கேயன்றி அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க் கும் அவை கைகூடாமையிற் புகழில்லையென்பது தோன்ற, 'எப்பா னூலோர்க்குந் துணி' வென்றார். (கூ)

நூகூ. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(இ - ள்.) அரண் அச்சம் உடையார்க்கு இல்லை - காடு மலை முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்க ணச்சமுடை யார்க்கு அவற்றாற் பயனில்லை ; ஆங்கு நன்கு பொச்சாப்பு உடை யார்க்கு இல்லை - அதுபோலச் செல்வமெல்லாமுடையராயினும், மனத்தின்கண் மறவியை யுடையார்க்கு அவற்றாற் பயனில்லை.

நன்மைக் கேதுவாகலின், 'நன்' கென்றார். அச்சமுடையார் கின்ற அரணழியுமாறு போல, மறவியுடையாருடைய செல்வங்களும் அழியுமென்பதாயிற்று. (எ)

நூகூ. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னு நிரங்கி விடும்.

(இ - ள்.) முன்னுறக் காவாது இழுக்கியான் - தன்னுற் காக்கப்படுந் துன்பங்களை அவை வருவதற்குமுன்னே அறிந்து

காவாது மறந்திருந்தான்; பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும் - பின்வந்துற்ற காலத்துக் காக்கலாகாமையின் அப் பிழைப்பினை நினைந் திரங்கிவிடும்.

காக்கப்படுந் துன்பங்களாவன; சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்க ணெண்புழி உருபுஞ் சாரியையும் உடன் றொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், 'இரங்கிவிடு'மென் றார். இவை மூன்று பாட்டானும், பொச்சாப்புடையார்க்கு வரு மேதங் கூறப்பட்டது. (இ)

இருகு. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

(இ - ள்.) இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் - அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின்; அது ஒப்பது இல் - அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை.

வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் 'யார்மாட்டு' மென்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின் 'என்று'மென்றும், எல்லாக் காரியங்களினும் ஒப்பவேண்டுதலின் 'வழுக்காமை' யென்றுங் கூறி னார். 'வாயி' னென்பது முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த வினையெச்சம். வாய்த்தல் - நேர்படுதல். (சு)

இருஎ. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(இ - ள்.) அரிய என்று ஆகாத இல்லை - இவை செய்தற் கரியனவென்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்க ளில்லை; பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின் - மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின்.

பொச்சாவாத என்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. அந்தக்காரணமாகவிற் 'கருவி' யென்றார்.* இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியுமுடையார்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்ப தாம். இவை யிரண்டு பாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது. (எ)

இருஅ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

---

*பொச்சாவாக் கருவி என்பதற்குப் பொச்சாவாமையாகிய கருவி யெனப் பொருள்கோடலே சிறப்பு.

(இ - ள்.) புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் - நீதி நூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துக்கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க; செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - அங்ஙனஞ் செய்யாது மற்றவர்க்கு எழுமையினும் நன்மையில்லையாகலான்.

அச் செயல்களாவன: * மூவகையாற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்துன்பமேயாகலின், 'எழுமையுமில்' லென்றார். 'எழுமை' ஆகுபெயர். இதனாற் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன. (அ)

குசுக. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(இ - ள்.) தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம் மகிழ்ச்சிக்கட்டாம் வலியுறும்பொழுது; இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனினுய சோர்வாற் கெட்டவர்களை நினைக்க.

காரணங்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றித் 'தம்மகிழ்ச்சியி' னென்றும், இகழ்ச்சியுங் கேடும் உடன்சேறுமாகலின், 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்' தென்றுங் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதுமென்று அதன்கண் மைந்துறுரென்பது கருத்து. எண்ணுக† வென்று பாடமோதுவாருமுளர். (க)

குசo. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(இ - ள்.) தான் உள்ளியது எய்தல் எளிது மன் - அரசனுக்குத் தானெய்த நினைத்த பொருளை அந் நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம்; மற்றும் உள்ளியது உள்ளப்பெறின் - பின்னும் அதனையே நினைக்கக்கூடுமாயின்.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது, மறவியின்றி

* இவற்றுள், மூவகையாற்றலை சசுசு - ம் குறளுரையினும், நால்வகை உபாயத்தை சசுள - ம் குறளுரையினும், ஐவகைத்தொழிலை சசுஉ, சளக - ம் குறளுரையினும், அறுவகைக்குணத்தை சஅடு - ம் குறளுரையினும் காண்க.

† மணக்குடவர்.

அதன்கண்ணே முயறல். இவை யிரண்டு பாட்டானும் பொச்சா வாமைக்கு உபாயங் கூறப்பட்டது. (க0)

அதி. நடு—செங்கோன்மை

[அஃதாவது, அரசனுற் செய்யப்படும் முறையினது தன்மை. அம் முறை ஒருபாற்கோடாது செவ்வியகோல்போறலிற் செங் கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டமென்றார். அது சோர்வில்லாத அரசனுற் செயற்பாலதாகலின், இது பொச்சா வாமையின்பின் வைக்கப்பட்டது.]

நிசக. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(இ - ள்.) ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக் குற்றத்தை நாடி; யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டுங் கண்ணோடாது; இறை புரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி; தேர்ந்து-அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடு மாராய்ந்து; செய்வஃதே முறை - அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம்.

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் அதனை 'யிறை' யென்றும், உயிரினுஞ் சிறந்தார்கண்ணு மென்பார் 'யார்மாட்டு' மென்றுங் கூறினர். இறைமை 'இறை' யெனவும், செய்வது 'செய்வஃ' தென வும் நின்றன. இதனுற் செங்கோன்மையதிலக்கணங் கூறப் பட்டது. (க)

நிசஉ. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(இ - ள்.) உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத் துயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகாநிற்குமே யெனினும்; குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் - குடிகள் அரசன் செங்கோ லுளதாயின் உளவாகாநிற்கும்.

நோக்கிவாழ்தல் - இன்றியமையாமை. வானினுய வுணவை 'வா' னென்றும், கோலினுய ஏமத்தைக் 'கோ' லென்றுங் கூறினர். அவ்வேமமில்வழி உணவுளதாயினுங் குடிகட்கு அதனுற் பயனில்லை யென்பதாம். (உ)

நிசந. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(இ - ள்.) அந்தணர்நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது- அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய் நிலைபெற்றது; மன்னவன் கோல் - அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோல்.

அரசர் வணிகரென்னு மேனையோர்க்கு மூரித்தாயினும், தலைமைபற்றி 'அந்தணர்நூ' லென்றார். "மாதவர் நோன்பு மடவார் கற்புங்—காவலன் காவ"* லன்றித் தங் காவலான் ஆகலின், ஈண் 'டற'மென்றது அவை யொழிந்தவற்றை. வேதமும் அறனும் அநாதி யாயினுஞ் செங்கோ லில்வழி நடவாவாகலின், அதனை அவற்றிற் 'காதி' யென்றும், அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லை யென்பார் 'நின்ற' தென்றுங் கூறினர். இவை இரண்டு பாட்டா னுஞ் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது. (ரு)

நிசச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(இ - ள்.) குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன் அடி - தன் குடிகளையு மணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநில வேந்தனடியை; தழீஇ நிற்கும் உலகு - பொருந்திவிடார் உலகத்தார்.

அணைத்தல் இன்சொற் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டு வன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற் செய்வான் நிலமுழுதுமாளு மாகலின் அவனை 'மாநிலமன்ன' னென் றும், அவன்மாட்டியாவரும் நீங்காவன்பினராவராகலின் 'அடி தழீஇ நிற்குமுல' கென்றுங் கூறினர். (ச)

நிசசு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(இ - ள்.) பெயலும் விளையுளும் தொக்கு - பருவமழையுங் குன்றுதலிலவும் ஒருங்கு கூடி; இயல்புளிக் கோல் ஓச்சும் மன்ன வன் நாட்ட - நூல்கள் சொல்லிய வியல்பாற் செங்கோலைச் செலுத்துமரசனது நாட்டின்கண்ணவாம்.

'உளி' யென்பது மூன்றுவதன் பொருள்படுவதோ ரிடைச் சொல். வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம். (கு)

நிசசு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

* மணிமேகலை, சிறைசெய்காதை, வரி - உ0அ, உ0க.

(இ - ள்.) மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் - மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவனெறியும் வேலன்று கோல்; அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின்.

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பதென்பார் 'வேலன்' றென்றார். ''மாண்ட - வறநெறி முதற்றே யரசின் கொற்றம்''* என்றார் பிறரும். கோடானென்பது பாடமாயின் † கருவியின் மிழில் வினைமுதன்மே னின்றதாக வுரைக்க. (கூ)

குசஎ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

(இ - ள்.) வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தை யெல்லாம் அரசன் காக்கும்; அவனை முறை காக்கும் - அவன் றன்னை அவனது செங்கோலே காக்கும்; முட்டாச் செயின் - அதனை முட்டவந்துழியும் முட்டாமற் செலுத்துவனையின்.

முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான் ‡ கண்ணும், தன் கை குறைத்தான் § கண்ணுங் காண்க. 'முட்டா' தென்பதன் இறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினனெய்தும் பயன் கூறப்பட்டது.

குசஅ. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

(இ - ள்.) எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் - முறை வேண்டினோர்க்கு எளிய செவ்வியை யுடையனாய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடு மாராய்ந்துகின்ற வண்மைக் கொப்ப முறைசெய்யாத வரசன்; தண்பதத்தான் தானே கெடும் - தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும்.

'எண்பதத்தா' னென்னும் முற்றுவினையெச்சமும், 'ஓரா'வென்னும் வினையெச்சமும், 'செய்யா'வென்னும் பெயரெச்சவெதிர்மறையுஞ் செய்தல்வினை கொண்டன. தாழ்ந்த பதம் பாவமும் பழியுமெய்திநிற்கும் நிலை. ''அல்லவை செய்தாற் கறங் கூற்றம்''¶ ஆகலின், பகைவரின்றியுங் கெடுமென்றார். இதனான் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது. (அ)

---

* புறநானூறு - ருடு. † மணக்குடவர்.
‡ சிலப்பதிகாரம், வழக்குரைகாதை, வரி. ருகூ - டு. § சிலப்பதிகாரம், கட்டுரைகாதை, வரி, சஉ - ருகூ ¶ நான்மணிக்கடிகை, அடி.

குசகூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

(இ - ள்.) குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் - குடிகளைப் பிறர் கலியாமற் காத்துத் தானும் கலியாது பேணி, அவர் மாட்டுக் குற்றங்கழின் அதனை யொறுப்பா னெழித்தல்; வேந்தன் வடு அன்று தொழில் - வேந்தனுக்குப் பழியன்று, தொழிலாகலான்.

துன்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று; அவற்றுள் ஈண்டைக் கெய்துவன முன்னையவென்பது 'குற்றங்கடிதல்' லென்பதனுற் பெற்றும். தன் கீழ் வாழ்வாரை யொறுத்தல் அறனன்மையின் வடுவாமென்பதனை யாசங்கித்து, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக் குற்றத்தினீக்கித் தூயராக்கு தலுஞ் சாதிதரும மென்றார். (கூ)

குருo. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(இ - ள்.) வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவர்களைக் கொலையா னெறுத்துத் தக்கோரைக் காத்தல்; பைங்கூழ் களை கட்டதனொடு நேர் - உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடொக்கும்.

கொடியவரென்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவாரென் றிவர்முதலாயினாரை. இவரை வடநூலார் ஆததாயிக ளென்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சாகின்ற பைங்கூழ்போன்று கலிவுபல வெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதரும மென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானுஞ் செங்கோல்செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பாலவல்ல வென்பது கூறப்பட்டது. (கo)

அதி. நுகூ—கொடுங்கோன்மை

[அஃதாவது, அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.]

நுருக. கோலமேற்கொண் டாரிற் கொடிதே யலமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

(இ - ள்.) கொலை மேற்கொண்டாரிற் கொடிது - பகைமை பற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம்மேற்கொண் டொழுகுவாரினுங் கொடியன்; அலை மேற்கொண்டு அல்லவைசெய்து ஒழுகும் வேந்து - பொருள் வெஃகிக் குடிகளை யலைத்தற்றொழிலைத் தன்மேற் கொண்டு முறையல்லவற்றைச் செய்தொழுகும் வேந்தன்.

அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன் செய்வது எப்பொழுதுந் துன்பமாமென்பதுபற்றி, அவரினுங் 'கொடிய'னென்றார். பான்மயக்குறழ்ச்சி. 'வேந்' தென்பது உயர்திணைப்பொருட் கண்வந்த அஃறிணைச்சொல். 'அலை' கொலையினுங் கொடிதென்ப தாயிற்று. (க)

குறள. வேலொடு நின்று லிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்று னிரவு.

(இ - ள்.) வேலொடு நின்றான்-ஆறலைக்குமிடத்துத் தனியே வேல் கொண்டு நின்ற கள்வன்; இடு என்றது போலும் - ஆறு செல்வானை நின் கைப்பொரு டாவென்று வேண்டுதலோ டொக்கும்; கோலொடு நின்றான் இரவு - ஒறுத்தற் றொழிலோடு நின்றவரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல்.

'வேலொடு நின்று' னென்றதனுற் பிறரொடு நில்லாமையும், 'இர' வென்றதனுல் இறைப்பொருளன்மையும் பெற்றும். தாராக் கால் ஒறுப்பலென்னுங் குறிப்பினலுகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவை யிரண்டு பாட்டானுங் கொடுங் கோன்மையது குற்றங் கூறப்பட்டது. (உ)

குறள. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னுடொறு நாடு கெடும்.

(இ - ள்.) நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் - தன்னுட்டு நிகழுந் தீமைகளை நாடோறுமாராய்ந்து அதற்கொக்க முறைமையைச் செய்யாத வரசன்; நாடொறும் நாடு கெடும் - நாடோறும் நாடிழக்கும்.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன் வினை அவன்மே னின்றது. இழத்தல் - பயனெய்தாமை. மன்னவனுடு நாடொறுங் கெடுமென் றுரைப்பாருமுளர்.* (ங)

குறள. கூழுங் குடியு மொருங்கீழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

* மணக்குடவர்.

(இ - ள்.) சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு - மேல் விளைவதெண்ணாது முறைதப்பச் செய்யுமரசன்; கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற் கேதுவாகிய குடிகளையுஞ் சேரவிழக்கும்.

கோட வென்பது திரிந்துநின்றது. முன்னீட்டிய பொருள் இழத்தற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (ச)

ருருடு. அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(இ - ள்.) அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே; செல்வத்தைத் தேய்க்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி.

'அழுதகண்ணீர்' அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை யென்ஞமையின், இஃதேகதேசவுருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மே னின்றது, அக் கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின். செல்வங் கடிதிற் றேயுமென் பது கருத்து. (ஞ)

ருருசு. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி.

(இ - ள்.) மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க் குப் புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும்; அஃது இன் றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம் - அச்செங்கோன்மை யில்லையா யின், அவர்க்கு அப் புகழ்கடாம் உளவாகா.

விகாரத்தாற்றொக்க மூன்றுவது விரித்து ஆக்கம் வருவித் துரைக்கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதல் "இந்நிலத்து மன்னு தல் வேண்டி னிசைநாடுக"* என்பதனானு மறிக. 'மன்னு'மை ஒரு காலு நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம், ஆகவே, தாமு மன்னுரென்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய வேதுக்களாற் புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மையில்வழி இலவாமென்பதாம். இவை நான்கு பாட்டா னுங் கொடுங்கோலனையனென் எய்துங் குற்றங் கூறப்பட் டது. (ஈ)

ருருள. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

* நான்மணிக்கடிகை - கடு.

(இ - ள்.) துளியின்மை ஞாலத்திற்கு எற்று - மழையில் லாமை வையத்து வாழுமுயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும்; அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத் துன் பம் பயக்கும், அரசன் றண்ணளியில்லாமை அவனுட்டு வாழுங் குடி கட்கு.

சிறப்புப்பற்றித் 'துளி' யென்பது மழைமேனின்றது; 'உயி' ரென்பது குடிகண்மே னின்றது. மேல் 'வானோக்கிவாழு'* மென்ற தனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு. (எ)

நிநிஅ. இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(இ - ள்.) முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின்; இன்மை யின் உடைமை இன்னது - யாவர்க்கும் பொருளின்மையினும் உடைமை இன்னது.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது நாட்டுக் கைங்கோல யாப்புண்டல் முதலிய வருவது பொருளுடை யார்க்கே யாகலின், அவ்வுடைமை இன்மையினு மின்னதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் அவனுட்டு வாழ்வார்க்கு வருங் குற்றங் கூறப்பட்டது. (அ)

நிநிக. †முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(இ - ள்.) மன்னவன் முறை கோடிச் செய்யின் - மன்ன வன் தான் செய்யும் பொருளே முறை தப்பச் செய்யுமாயின்; உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவனுட்டுப் பருவமழை இன்றும் வகை மேகம் பொழிதலைச் செய்யாது. (க)

இரண்டிடத்துங் கோடவென்பன திரிந்து நின்றன. 'உறை' கோடுதலாவது பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கேது வரு கின்ற பாட்டாற் கூறுப.

நிசுஂ. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(இ - ள்.) காவலன் காவான் எனின் - காத்தற்குரியவரசன் உயிர்களைக் காவானாயின்; ஆ பயன் குன்றும் - அறனில்லாத அவ

* குறள் - நிசஉ. † சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் - உநிடு; மணிமேகலை, எ : வரி, அ - கஉ.

ஞட்டுப் பசுக்களும் பால்குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர் – அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்.

'ஆபயன்,' ஆவாற் கொள்ளும் பயன். அறுதொழிலாவன : ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலெனவிவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற் குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லா தென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் அவஞுட்டின்கணிகழுங் குற்றங் கூறப் பட்டது. (கO)

அதி. நுஎ—வெருவந்தசெய்யாமை

[அஃதாவது, குடிகளஞ்சுவதும் பகுதி* யஞ்சுவதும் தானஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற்படுதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.]

நிசுக. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(இ - ள்.) தக்காங்கு நாடி - ஒருவன் தன்னின் மெலியார்மேற் சென்றவழி அதனை நடுவாகநின் ரூராய்ந்து; தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக் குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரசனுவான்.

'தக்காங்கு', 'ஒத்தாங்' கென்பன ஒரு சொல். தகுதி யென்பது நடுவுநிலைமையாதல், "தகுதி யெனவொன்று நன்றே"† என்பதனுனுமறிக. இதனுனே தக்காங்கு நாடாமையும், பிறிதோர் காரணம்பற்றி மிகவொறுத்தலும், குடிகளஞ்சும் வினையாதல் பெற்றும். (க)

நிசுஉ. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

(இ - ள்.) கடிது ஓச்சி - அவ்வொத்தாங் கொறுத்தல் தொடங்குங்கால் அளவிறப்பச் செய்வார்போற் ரொடங்கி; மெல்ல எறிக - செய்யுங்கால் அளவிறவாமற் செய்க; ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் - ஆக்கந் தங்க ணெடுங்கால நிற்றலை வேண்டுவார்.

---

* பகுதி - மருநிரி முதலியவர்கள். † குறள், ககக

'கடிதோச்'சல் குற்றஞ்செய்வார் அதனை யஞ்சுதற் பொருட்டும், 'மெல்லவெறி'தல் யாவரும் வெருவாமைப் பொருட்டுமாம். தொடங்கினவளவிற் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதலென்பன விரண்டும் உவமைபற்றி வந்தன. இவை யிரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமைய தியல்பு கூறப்பட்டது. (உ)

குசுஉ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

(இ - ள்.) வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் - குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனு மாயின்; ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - அரசன் ஒருதலையாகக் கடிதிற் கெடும்.

'வெங்கோல' னென்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தமென்பன ஒருபொருட்கிளவி. அச் செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறப்படும். (ஊ)

குசுக. இறைகடிய னென்னுரைக்கு மின்னுச்சொல் வேந்த
னுறைகடுக் கொல்லைக் கெடும்.

(இ - ள்.) இறை கடிபன் என்று உரைக்கும் இன்னுச் சொல் வேந்தன் - குடிகளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னுத சொல்லையுடைய வேந்தன்; உறை கடுகி ஒல்லைக் கெடும் - ஆயுளுங் குறைந்து செல்வமுங் கடிதி னிழக்கும்.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னுமை பயப்பதாய சொல்லை 'இன்னுச்சொல்' லென்றார். 'உறை' யென்பது முதனிலைத் தொழிற்பெயர்; அஃது ஈண்டாகுபெயராய் உறைதலைச் செய்யும் நாண்மே னின்றது. அது குறைதலாவது அச்சொல் லில்லா தார்க்கு உள்ளதிற் சுருங்குதல். (எ)

குசுஙி. அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

(இ - ள்.) அருஞ்செவ்வி இன்னு முகத்தான் பெருஞ்செல்வம் - தன்னைக் காணவேண்டுவார்க்குக், காலமரியனுய்க் கண்டால் இன்னுத முகத்தினையுடையானது பெரிய செல்வம்; பேஎய் கண்டன்னது உடைத்து - பேயாற் காணப்பட்டாற்போல்வதொரு குற்றமுடைத்து.

எனவே, இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின. இவை செய்வானைச் சார்வாரின்மையின், அவனது செல்வந் தனக்கும் பிறர்க்கும் பயன்படா தென்பதுபற்றிப் 'பேஎய்கண்டன்ன துடைத்' தென்றார். காணுதல் - தன்வயமாக்குதல். (சி)

சூசூ. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(இ - ள்.) கடுஞ்சொல்லன் கண் இலன் ஆயின் - அரசன் கடிய சொல்லையுமுடையனாய்க் கண்ணோட்டமுமிலனாயின்; நெடுஞ் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரிய செல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும்.

"வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு—ளீட்டங் கட் காமமோ டேழு" எனப்பட்ட விதனங்களுட் கடுஞ் சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெய்தலு ளடக்கினார். 'கண்' ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடுஞ் சிறுமைத் தன்றாயினு மென்பார், 'நெடுஞ்செல்வ' மென்றார். நீடுதல் - நீட்டித்தல். (சு)

சூஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(இ - ள்.) கடுமொழியும் கையிகந்த தண்டமும் - கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும்; வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம் - அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்.

கடுமொழியாற் றானையுங் கையிகந்த தண்டத்தாற் றேசமுங் கெட்டு, முரண் சுருங்கி வருதலின் அவற்றை 'அர'மாக்கி, திண்ணி தாயினுந் தேயுமென்றற்கு 'அடுமுர'னை இரும்பாக்கினர். ஏகதேச வுருவகம். 'அர'மென்பதனைத் தனித்தனி கூட்டுக. இவையைந்து பாட்டானும், செவ்வியின்மை, இன்னாமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்ததண்ட மென்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்பதூஉம், இவை செய்தான் ஆயுளும் அடுமுரணுஞ் செல்வமு மிழக்குமென்பதூஉங் கூறப்பட்டன. (எ)

சூஅ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

(இ - ள்.) இனத்து ஆற்றி எண்ணுத வேந்தன் - காரியத்தைப்பற்றி வந்த வெண்ணத்தை அமைச்சர்மேல் வைத்து

அவரோடு தானுமெண்ணிச் செய்யாத வரசன்; சினத்து ஆற்றிச் சீறின் - அப்பிழைப்பாற் றன் காரியந் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின்; திருச் சிறுகும் - அவன் செல்வம் நாடோறுஞ் சுருங்கும்.

அரசர் பாரம் பொறுத்துய்த்த லொப்புமையான் அமைச்சரை 'இன'மென்றும், தான் பின் பிழைப்பாதலறிந்து அமையாது அதனை அவர்மேலேற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே அப்பிழைப்புத் தீருமாறும் அப் பார மினிதுய்க்குமாறும் இலனு மென்பது நோக்கித் திருச் 'சிறுகு' மென்றுங் கூறினர். இதனைற் பகுதியஞ்சும் வினையும் அது செய்தானெய்துங் குற்றமுங் கூறப் பட்டன. (அ)

குசுக. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

(இ - ள்.) சிறை செய்யா வேந்தன் - செரு வருதற்கு முன்னே தனக்குப் புகலாவதோரரண் செய்துகொள்ளாத வரசன்; செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும் - அது வந்த காலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதிற் கெடும்.

பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலிற் றமியனுய்த் தானும் வெருவி அப் பகைவயத்தனு மென்பதாம். இதனுல் தானஞ்சும் வினை யும் அது செய்தானெய்தும் பயனுங் கூறப்பட்டன. (கூ)

குஅ0. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.*

(இ - ள்.) கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும் - கடுங்கோலனைய வரசன் நீதிநூன்முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாநிற்கும்; அதுவல்லது நிலக்குப் பொறை இல்லை - அக் கூட்ட மல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லை.

'கடுங்கோ' லென்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்றன்றி அதனைச் செய்வான்மேற் றூயிற்று. அவன் அது செய்தற் கியை வாரையல்லது கூட்டாமையிற் 'கல்லார்ப் பிணிக்கு' மென்றும், எனையவற்றையெல்லாம் பொறுக்கின்ற நியல்பாகலின் நிலத்திற் குப் பொறை 'அதுவல்ல தில்லை' யென்றுங் கூறினர். 'நிலக்' கென்பது செய்யுள்விகாரம். இதனுல் வெருவந்த செய்தலின் குற் றங் கூறப்பட்டது. (கo)

---

* குறள் - கஅக.

அதி. நுஅ—கண்ணோட்டம்

[அஃதாவது, தன்னெடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்தசெய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுகின்றமையின், இஃததன்பின் வைக்கப்பட்டது.]

நிஎக. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(இ - ள்.) கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் - கண்ணோட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்புடையவழகு அரசர்மாட்டு உண்டாகலான்; இவ்வுலகு உண்டு - இவ்வுலக முண்டாகாகின்றது.

'கழிபெருங்காரிகை' யென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகது சிறப்புணராகின்றது. இவ்வழகு அதற்குறுப்பாகலின், 'உண்மையா' னென நிலைபேறுங் கூறினார். இன்மை வெருவந்த செய்தலாகலின், அவர்காட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம் போன்று ஏமஞ் சாராமைபற்றி, இவ்வுலகுண்டென்றார். (க)

நிஎஉ. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(இ - ள்.) உலகியல் கண்ணோட்டத்து உள்ளது - உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வது; அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை - ஆகலான், அக் கண்ணோட்ட மில்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கன்று.

உலகநடையாவது ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலென்றிவை முதலாயின. அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி, 'நிலக்குப்பொறை' யென்றார். ஆதற்கென்பது சொல்லெச்சம். இவை யிரண்டு பாட்டானுங் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

நிஎந. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ - ள்.) பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்ன பயத்ததாம் பாடற்றொழிலோடு பொருத்தமின்றாயின்? கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்ன பயத்ததாங் கண்ணோட்டமில்லாதவிடத்து?

'பண்', 'கண்'ணென்பன சாதிப்பெயர். பண்களாவன : பாலையாழ் முதலிய நூற்றுமூன்று. பாடற்றொழில்களாவன : யாழின்கண் வார்தல் முதலிய வெட்டும், பண்ணல் முதலிய வெட்டும், மிடற்றின் கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடில மென்னு மைந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ண முதலிய வண்ணங்க ளெழுபத்தாறுமாம்.* இவற்றோ டியையாதவழிப் பண்ணற் பயனில்லாதவாறுபோலக் கண்ணோட்டத் தியையாதவழிக் கண்ணுற் பயனில்லை யென்பதாம். கண்சென்றவழி நிகழ்தல் பற்றி அதனை யிடமாக்கினர். இறுதிக்கட் கண்ணென்பதனைக் "கண்ணகன்ஞாலம்"† என்புழிப்போலக் கொள்க. (௬)

குஎசு. உளபோல் முகத்தெவன் செய்யு மளவினைற்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ - ள்.) முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத்தின்கண் உளபோற் றோன்றலல்லது வேறென்ன பயனைச் செய்யும்; அளவினுள் கண்ணோட்டம் இல்லாத கண் - அளவிறவாத கண்ணோடுதலை யுடையவல்லாத கண்கள்?

தோன்ற வல்லதென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. கழிகண்ணோட்டத்தி னீக்குதற்கு, 'அளவினை' னென்றார். ஒரு பயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம். (சு)

குஎஞ. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

(இ - ள்.) கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் - ஒருவன் கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணோட்டம்; அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் - அக் கலமில்லையாயின் அஃதறிவுடையாராற் புண்ணென் றறியப்படும்.

வேறணிகல மின்மையிற் 'கண்ணிற் கணிகல' மென்றும், கண்ணுய்த் தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானுந் துயர்விளைத்தலேக்கிப் 'புண்ணென் றுணரப்படு' மென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் ஓடாது நின்ற கண்ணின் குற்றங் கூறப்பட்டது. (௭)

குஎசு. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

(இ - ள்.) கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் - ஓடுதற்குரிய கண்ணோடு பொருந்திவைத்து அஃதோடாதவர்; மண்

* விரிவு சிலப்பதிகார உரையிற் காண்க. † திருக்குறள் - க.

ணேடு இயைந்த மரத்து அனேயர் - இயங்காகின்ருராயினும் மண் ணேடு பொருந்திநிற்கின்ற மரத்தினே யொப்பர்.

'ஓடாதவ' ரென்புழிச் சினேவினே முதன்மேனின்றது. மர மூங் கண்ணேடியைந்து கண்ணேடாமையின், இது தொழிலுவமம். இதனேச் சுதைமண்ணேடு கூடிய மரப்பாவையென் றுரைப்பாரு மூளர்.* அஃதுரையன்மை, காணப்படுங் கண்ணுனன்றி அதனுண் மறைந்து நிற்கின்ற ஒருசா ருள்ளீட்டாற் கூறினமையானும், "மரக் கண்ணே மண்ணுள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்"† என் பதனுனு மறிக. (சு)

நிஎ. கண்ணேட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார் கண்ணேட்ட மின்மையு மில்.

(இ - ள்.) கண்ணேட்டம் இல்லவர் கண் இலர் - கண் ணேட்ட மில்லாதவர் கண்ணுடையருமல்லர்; கண் உடையார் கண்ணேட்டம் இன்மையும் இல் - கண்ணுடையவர் கண்ணேட்ட மிலராதலு மில்லே.

கண்ணுடையராயிற் காட்சிக்கண்ணே அஃதோடுமென்பது பற்றிக் 'கண்ணேட்ட மில்லவர் கண்ணில' ரெனக் கூறிப் பின் அதனே யெதிர்மறைமுகத்தான் விளக்கினர். உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. இவை யிரண்டு பாட்டானும் கண்ணேடா தாரதிழிபு கூறப்பட்டது. (எ)

நிஎஅ. கருமஞ் சிதையாமற் கண்ணேட வல்லார்க் குரிமை யுடைத்தீவ் வுலகு.

(இ - ள்.) கருமம் சிதையாமல் கண்ணேட வல்லார்க்கு - முறைசெய்த லாகிய தந் தொழிலழியாமற் கண்ணேட வல்ல வேந்தர்க்கு; உரிமை உடைத்து இவ்வுலகு - உரித்தாந்தன்மை யுடைத்து இவ்வுலகம்.

தம்மோடு பயின்றூர் பிறரை யிடுக்கண்செய்துழி அவரைக் கண்ணேடி யொறுத்தார்க்கு முறை சிதைதல் மேல் "ஓர்ந்துகண் ணேடாது‡" என்ற முறையிலக்கணத்தானும் பெற்றும். முறை சிதைய வரும்வழிக் கண்ணேடாமையும் வாராவழிக் கண்ணேட லும் ஒருவற்கியல்பாத லருமையிற் 'கண்ணேடவல்லார்க்' கென்றும் அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேறலின் 'உரிமையுடைத்' தென்றுங் கூறினர். இதனுற் கண்ணேடுமாறு கூறப்பட்டது. (அ)

* மணக்குடவர். † முத்தொள்ளாயிரம். ‡ குறள் - நிசக.

இளக. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(இ - ள்.) ஒறுத்தாற்றும் பண்பினர்கண்ணும் - தம்மை யொறுக்கு மியல்புடையாரிடத்தும்; கண்ணேடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை - கண்ணேட்டமுடையராய்க் குற்றத்தைப் பொறுக்கு மியல்பே அரசர்க்குத் தலையாயவியல்பாவது.

'பண்பினர்' ரென்றதனால் அவர் பயிற்சி பெற்றும். 'ஒருத் தாற்றும்', 'பொறுத்தாற்று' மென்பன ஈண்டொருசொன்னீர.

(கூ)

இஅ0. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(இ - ள்.) நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் - பயின் ரூர் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்கமாட்டாமையின் அதனை யுண்டு பின்னு மவரோடு மேவுவர்; நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் - யாவரானும் விரும்பத்தக்க கண்ணேட்டத்தினை வேண்டுமவர்.

'நாகரிக' மென்பது கண்ணேட்டமாதல் "மூந்தை யிருந்து நட் டோர் கொடுப்பி—னஞ்சு மூண்பர் நனிநா கரிகர்"* என்பதனானு மறிக. அரசர் அவரை யொறுது கண்ணேடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்துழி யென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட் டது. (கo)

அதி. இகூ—ஒற்றுடல்

[அஃதாவது, பகை, கொதுமல், நட்பென்னும் மூன்றுதிறத்தார் மாட்டும் நிகழ்ந்தனவறிதற்கு ஒற்றரையாளுதல்.† மேற் சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன்னுடு செலுத் துங்காலும் பிறர் நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறு கின்றராகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.]

இஅக. ஒற்று முரைசான்ற நூலு மீவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

(இ - ள்.) ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும் - ஒற்றும், புகழமைந்த நீதிநூலுமாகிய இவை இரண்டனையும்; மன்

* நற்றிணை-கூருடு.

† கூக முதல் டுஅ உள்ளிட்ட அதிகாரங்களிற் கூறியன.

னவன் கண் தெற்றென்க - அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக.

ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாஞ் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லா முணர்த்தலானும், நூல் அந் நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளெயெல் லாஞ் சொல்லியுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கூனக் கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்து கொண்டொழுகுக வென் பதாம். ஒற்றனே 'ஒற்' றென்றார், வேந்தனே வேந்தென்றாற்போல. 'தெற்றென்க' வென்பது தெற்றெனென்பது முதனிலையாக வந்த வியங்கோள். அது தெற்றென வென்னுஞ் செயவெனெச்சத்தா னறிக. இதனுல் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

நிஅஉ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் ருெழில்.

(இ - ள்.) எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் - எல்லார்கண்ணும் நிகழ்வன வெல்லாவற்றையும் நாடோறும் ஒற்றன் விரைந்தறிதல்; வேந்தன் தொழில் - அரசனுக் குரிய தொழில்.

'எல்லார்க்கு' மென்றது மூன்று திறத்தாரையும். நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. நிகழ்வன 'வெல்லா' மென்றது நல்லவுந் தீயவுமாய சொற்களையுஞ் செயல்களையும். அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத்தக்க அளியாகத் தெறலாகச் செய்ய வேண்டு தலின் 'வல்லறித' லென்றும், அவ்விருதொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே யுபசாரவழக்காற் 'ருெழி' லென்றுங் கூறினர். ஒற்றனென்பது அதிகாரத்தான் வந்தது. இதனுல் ஒற்றினுய பயன் கூறப்பட்டது. (உ)

நிஅங. ஒற்றினு னெற்றிப் பொருடெரியா* மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(இ - ள்.) ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினுனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற் ருனெய்தும் பயனேயாராயாத வரசன்; கொற்றம் கொளக் கிடந்தது இல் - வென்றியடையக் கிடந்தது வேருெரு நெறியில்லை.

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்களியனுதல் பிறிதிற் றீராமையின், 'கொற்றங் கொளக்கிடந்த தில்' லென்றார். இதற்குக் கொளக்கிடந்ததொரு வென்றியில்லையென் றுரைப்பினு †

* இனியவை நாற்பது. † மணக்குடவர்.

மையும். இதனால் அத்தொழில் செய்யாதவழி வருங் குற்றங் கூறப்பட்டது. (ங)

குஅசை. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(இ - ள்.) தம் வினை செய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது - தங் காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களா னாராய்வானே ; ஒற்று - ஒற்றனுவான்.

'தம்' மென்றது அரசனுடைளப்படுத்தி. அவனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகைவர் தன்னற்ற மாராய்தலும் மேற் றேறப்படுத லும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவு மறிந்து, அவற்றிற் கேற்றன செய்யவேண்டுதலின், இம்மூவகையாரையும் எஞ்சாம லாராய வேண்டுமென்பார், 'அனைவரையு மாராய்வ தொற்' றென்றார். (ச)

குஅடு. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(இ - ள்.) கடாஅ உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயு றுத வடிவோடு பொருந்தி ; கண் அஞ்சாது - அவர் ஐயுற்றறிய லுறிற் செயிர்த்துநோக்கிய அவர் கண்ணிற் கஞ்சாதுநின்று ; யாண் டும் உகாமை வல்லதே ஒற்று - நான்குபாயமுஞ் செய்தாலும் மனத் துக் கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றுளுவான்.

'கடா' வென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறுத வடிவாவன : பார்ப்பார், வணிகர் முதலாயினர் வடிவு. (கு)

குஅசு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்விலை தொற்று.

(இ - ள்.) துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து - முற்றத் துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் உள்புகுதற்கரிய விடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன வாராய்ந்தறிந்து ; என்செயினும் சோர்வு இலது ஒற்று - ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத் துன்பமுஞ் செய்து கேட்டாலும் தன்னைவெளிப் படுத்தாதவனே ஒற்றுளுவான்.

விரதவொழுக்கம் நீர்த்தயாத்திரை முதலாயின. 'செயினு' மென்பது அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது.

மேல்* நால்வகை யுபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்து ஈண்டுந் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற் கருமைச் சிறப்பு நோக்கி. இதனுட் 'படிவ' மென்றதனை வேட மாக்கித் துறந்தார் வேடத்தாராகி† யென் றுரைப்பாருமுளர். (சு)

நிஅள. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

(இ - ள்.) மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களை அவர்க்குள்ளாயினாற் கேட்க வல்ல னாய்; அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணியவல்லவனே ஒற்றனாவான்.

'மறைந்தவை' சொல்லுவாரை யறிந்து, அவரயிராமற் சென் றொட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாக, செய லாக முன்னே விளைத்து, அத்தொடர்பாற் கேட்குங்காலும் உரு தார்போன்று நின்று கேட்கவேண்டுதலிற் 'கேட்கவற்றாகி' யென் றும், கேட்டறிந்தவற்றைத் தானே யையுற்று வந்து சொல்வின் அரசனுல் அவற்றிற் கேற்ற வினை செய்யலாகாமையின் 'ஐயப் பாடில்லதே' யென்றுங் கூறினர். இவ்வ நான்கு பாட்டானும் ஒற்றின திலக்கணங் கூறப்பட்டது. (எ)

நிஅஅ. ஒற்றெற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல்.

(இ - ள்.) ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் - ஒரொற்றன் ஒற்றிவந் தறிவித்த காரியத்தன்னையும்; மற்றும் ஒரொற்றினுல் ஒற் றிக்கொளல் - பிறனே ரொற்றனுலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டு கொள்க.

ஒற்றப்பட்டாரோ டொத்துநின்று மாறுபடக்கூறலுங் கூடு மாகலின், ஒருவன் மாற்றந் தேறப்படாதென்பதாம். (அ)

நிஅக. ஒற்றெற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றெக்க தேறப் படும்.

(இ - ள்.) ஒற்று ஒற்று உணராமை ஆள்க - ஒற்றரையாளு மிடத்து ஒருவனையொருவ னறியாம லாள்க; உடன்மூவர் சொல் தொக்க தேறப்படும் - அங்ஙனமாண்ட வொற்றர்மூவரை ஒரு பொருண்மேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனு லொத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும்.

* நிஅடு - ஆம் குறளுரை. † மணக்குடவர்.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனேயொருவ னறியிற் றம்மூளியைந்து ஒப்பக்கூறுவராகலின் 'உணராமையாள்க' வென்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப்படுதலும் பட்டால் நீடு நிற்றலுங் கூடாமையிற் 'றேறப்படு' மென்றுங் கூறினர். இதனானே அஃதொத்திலவாயிற் பின்னுமாராய்கவென்பதூஉம் பெற்றும். (கூ)

ஙகூ0. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

(இ - ள்.) ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க - மறைந்தவை யறிந்து கூறிய ஒற்றின்கட் செய்யும் சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக; செய்யின் மறை புறப்படுத்தான் ஆகும் - செய்தானுயிற் றன்னகத்தடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும்.

'மறை' யாவது அவனெற்றனையதூஉம், அவன் கூறியதூஉமாம். சிறப்புப்பெற்ற விவன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின், 'புறப்படுத்தானாகு' மென்றார். இவை மூன்று பாட்டானும் ஒற்றரை யாளுமாறும், அவரானிகழ்ந்தன வறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யுமாறுங் கூறப்பட்டன. (கo)

அதி. கூ0—ஊக்கமுடைமை

[அஃதாவது, மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல். ஒற்றரான் நிகழ்ந்தனவறிந்து அவற்றிற்கேற்ற வினை செய்வானுக்கு இஃதின்றியமையாமையின், ஒற்றுடலின் பின் வைக்கப்பட்டது.]

ஙகூக. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

(இ - ள்.) உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடைய ரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம்; அஃது இல்லார் மற்று உடையது உடையரோ - அவ்வூக்கமில்லாதார் வேறுடையது தானும் உடையராவரோ? ஆகார்.

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்குமாற்ற லிலராகலின், அதுவுமிழப்ப ரென்பதாம். (க)

நிகஉ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(இ - ள்.) உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைகின்ற உடைமையாவது; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும் - மற்றைப் பொருளுடைமை நிலைகில்லாது நீங்கிப் போம்.

'உள்ளம்' ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின் அதற்கு நிலைகிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன் மாலத்தாகலின் அதற்கு நிலைகில்லாமையுங் கூறினார். கூறவே, அஃது உடைமையன்றென்பது பெறப்பட்டது. (உ)

நிகஊ. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ருக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(இ - ள்.) ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம் கைப்பொருளே யிழந்தேமென் றலமரார்; ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார் - நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார்.

'ஆக்கம்' ஆகுபெயர். ஒருவந்தமாய ஆக்கமென்க. 'கைத்து' கையகத்தாய பொருள்: "கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்"* என்றார் பிறரும். அல்லாவாமைக் கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (ஊ)

நிகஎ. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

(இ - ள்.) அசைவு இலா ஊக்கம் உடையானுழை - அசைவில்லாத ஊக்கத்தையுடையான்மாட்டு; ஆக்கம் அதர் வினுய்ச் செல்லும் - பொருள் தானே வழி வினவிக்கொண்டு செல்லும்.

'அசைவி'ன்மை, இடுக்கண் முதலியவற்றாற் றளராமை. வழி வினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாரு மென்பார், 'அதர் வினுய்ச் செல்லு' மென்றார். எய்தினின்ற பொருளினும் அதற்குக் காரணமாய 'ஊக்கஞ்' சிறந்ததென்பது இவை நான்கு பாட்டானுங் கூறப்பட்டது. (எ)

நிகஏ. வெள்ளத் தனைய மலர்நீட்ட † மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

(இ - ள்.) வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - நின்ற நீரினளவினவாம் நீர்ப்பூக்களின் நுளினது நீளங்கள்; மாந்தர்தம் உள்ளத்து

* நாலடியார் - ஙக. † மூதுரை - எ.

அனையது உயர்வு - அதுபோல் மக்கடம் மூக்கத்தளவினதாம் அவ ருயர்ச்சி.

'மலர்' ஆகுபெயர். நீர் மிக்கதனையும் மலர்த்தாள் நீளுமென் பதுபட, 'வெள்ளத்தனைய' வென்றார். இவ்வுவமையாற்றலான் ஊக்க மிக்கதனையும் மக்களுயர்வரென்பது பெறப்பட்டது. 'உயர்'தல், பொருள் படைகளான் மிகுதல். (இ)

குகூசு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(இ - ள்.) உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயி னர் கருதுவதெல்லாம் தம்முயர்ச்சியையே கருதுக; அது தள்ளி னும் தள்ளாமை நீர்த்து - அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லை யாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மை யுடைத்து.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள் ளியவழியுந் தாளாண்மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப் படாமையின், தள்ளாவியற்கைத் தென்பதாம். மேல் 'உள்ளத் தனைய துயர்வு' என்றதனையே வற்புறுத்தியவாறு. (சு)

குகூஎ. சிதைவிடத் தோல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டுன்றுங் களிறு.

(இ - ள்.) களிறு புதை அம்பின் பாட்டுப் பாடு ளுன்றும் - களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அதுபோல ஊக்கமுடையார் தாங் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

'புதை' அம்புக்கட்டு: பண்மை கூறியவாறு. பட்டாலென்பது பட்டெனத் திரிந்துநின்றது. 'ஒல்கா'மை களிற்றுடனும், 'பாடுன்று' தல் உரவோருடனும் சென்றியைந்தன. தள்ளினுந் தவறு துள்ளி யது முடிப்பரென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஊக்கமுடை யார துயர்ச்சி கூறப்பட்டது. (எ)

குகூஅ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாத வரசர்; உல கத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையமென்று தம்மைத்தா மதித்தலைப் பெறார்.

ஊக்கமில்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின், 'செருக்கெய்தா' ரென்றார். கொடைவென்றியினுய வின்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனு காமையின் தன்மையாற் கூறப்பட்டது. (அ)

குகூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(இ - ள்.) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லாவிலங் கினுந் தான் பேருடம்பினது, அதுவேயுமன்றிக் கூரிய கோட்டையு முடையதாயினும், யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கஞ்சும்.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய் வலியுங் கருவிச்சிறப்புமுடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய் வலியுங் கருவிச்சிறப்பு முடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃதுடைய வரசர்க் கஞ்சுவரென்பது தோன்றின்றமையின், பிறிது மொழிதல். (கூ)

சுஂ. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(இ - ள்.) ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை - ஒருவற்குத் திண்ணிய வறிவாவது ஊக்கமிகுதி; அஃது இல்லார் மரம் - அவ் ஊக்க மிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்; மக்களாதலே வேறு - சாதிமரங்களோடு இம் மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள் வடிவே, பிறிதில்லை.

'உர' மென்பது அறிவாதல் "உரனென்னுந் தோட்டியான்"* என்பதனை மறிக. 'மர' மென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற்சியு மின்மைபற்றி 'மர' மென்றும், மரத்திற் குள்ள பயன்பாடின்மைபற்றி 'மக்களாதலே வேறு' என்றுங் கூறி னார். பயன்: பழமுதலியவும், தேவர்கோட்டம், இல்லம், தேர், நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய. இவை மூன்று பாட்டானும் ஊக்கமில்லாதார திழிபு கூறப்பட்டது. (கஂ)

---

* குறள் - உச.

அதி. கூக—மடியின்மை

[அஃதாவது, கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்க முடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதலுணைக்கி இஃதூக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.]

கூ0க. குடியென்னுங் குன்ரு விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

(இ - ள்.) குடி என்னும் குன்ரு விளக்கம் - தான் பிறந்த குடியாகிய நந்தாவிளக்கு; மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் - ஒருவன் மடியாகிய இருளடர நந்திப்போம்.

உலகுடையுள்ள துணையும் இடையருது தன்னுட் பிறந்தாரை விளக்குதலிற் குடியைக் 'குன்ருவிளக்க' மென்றும். தாமதகுணத்தான் வருதலின் மடியை 'மா' சென்றும், அஃது ஏனையிருள் போலாது அவ்விளக்கைத் தானடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் 'மாசூர மாய்ந்து கெடு' மென்றுங் கூறினர். 'கெடு'தல், பெயர் வழக்கமு மில்லையாதல். (க)

கூ0உ. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

(இ - ள்.) குடியைக் குடியாக வேண்டுபவர் - தாம் பிறந்த குடியை மேன்மே லுயரும் நற்குடியாக வேண்டுவார்; மடியை மடியா ஒழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக.

முயற்சியோடென்பது அவாய்நிலையான் வந்தது. நெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக வென்ருற்போல மடியிற் றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர்தன்னுனே கூறினர். அங்ஙனங் கருதியதனைக் கடிந்து முயன்ருழுகவே தாமுயர்வர், உயரவே, குடியுயருமென்பார், 'குடியைக் குடியாக வேண்டுபவ' ரென்ருர். அங்ஙனமொழுகாக்காற் குடியழியு மென்பது கருத்து. இனி 'மடியா' வென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுக* வென் றுரைப்பாருமுளர். (உ)

கூ0ங. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

(இ - ள்.) மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடிவிடத் தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறி

* மணக்குடவர்.

வில்லாதான் பிறந்த குடி; தன்னினும் முந்து மடியும் - அவன்றன்னினும் முந்துறவழியும்.

அழிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலிற் 'பேதை' யென்றும், அவளுற் புறந்தரப்படுவ தாகலிற் குடி தன்னினு முந்துறவழியுமென்றுங் கூறினர். ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படு மென்பதாம். (கூ)

சுO2. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(இ - ள்.) மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு - மடியின்கண்ணே வீழ்தலாற் றிருந்திய முயற்சி யிலராயினர்க்கு; குடி மடிந்து குற்றம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பெருகும்.

'மடிந்' தெனத் திரிந்துநின்ற வினையெச்சம் 'இலவ' ரென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின் றீமை கூறப்பட்டது. (ச)

சுO3. நெடுநீர் மறவி மடிதுயி லொன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(இ - ள்.) மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்துசெய்வதனை நீட்டித்துச்செய்யு மியல்பும் மறப்பும் துயிலு மாகிய இந்நான்கும்; கெடும் நீரார் காமக் கலன் - இறக்குமியல் பினையுடையார் விரும்பியேறும் மரக்கலம்.

முன்னிற்கற்பாலதாய 'மடி' செய்யுணோக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்க ணிகழ்வதாய செயன்மேனின்றது. காலநீட்டத்தையுடைய செயன்முதல் மூன்றும் தாமத குணத்திற் றோன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங் கெண்ணப்பட்டன. இறக்கு மியல்பு காலுலத்தல். இவை துன்புறுநீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி, அவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாலுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்று காட்டி அவர் விரும்பியேறியவழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக்குறிப்புக் 'காமக் கல' னென்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணுமாபரணமென் றுரைப்பாரு மூளர். (கி)

சுO4. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(இ - ள்.) படி உடையார் பற்று அமைத்தக்கண்ணும் - நில முழுதுமாண்டாரது செல்வந் தானே வந்தெய்தியவிடத்தும்; மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது - மடியுடையார் அதனான் மாண்ட பயனை எய்துதலில்லை.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. 'மாண்பயன்' பேரின்பம். அச்செல்வம் அழியாமற் காக்கும் முயற்சியின்மையின் அழியும்; அழியவே, தந்துன்ப நீங்காதென்பதாம். இதற்கு நிலமுழுதுமுடைய வேந்தர் துணையாதல் கூடியவிடத்து* மென்றுரைப்பாருமுளர். (சு)

சுoஎ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

(இ - ள்.) மடி புரிந்து மாண்ட உளுற்று இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி யில்லாதார்; இடிபுரிந்து எள்ளும் சொற் கேட்பர் - தங்கட்டார்முன் கழறுதலை மிகச்செய்து அதனாற் பயன் காணுமையிற் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர்.

'இடி'†யென்னும் மூதனிலைத்தொழிற்பெயரான், நட்டாரென்பது பெற்றும். அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லு மாற்றலின்மையின், 'கேட்ப' ரென்றார். (எ)

சுoஅ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னென்னுர்க்
கடிமை புகுத்தி விடும்.

(இ - ள்.) மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமையுடையான்கண்ணே தங்குமாயின்; தன் ஒன்னுர்க்கு அடிமை புகுத்திவிடும் - அஃதவனைத் தன் பகைவர்க்கு அடியனுந் தன்மையை யடைவித்துவிடும்.

'மடி'யினது தன்மை காரியக்கேடு. 'குடிமை' குடிசெய்தற்றன்மை. அஃது அதனையுடைய வரசன்மேற்றுதல், 'தன்னென்னுர்க்' கென்றதனான் அறிக. அடியனுந்தன்மை தாழ்ந்துநின் றேவல்கேட்டல். இவை நான்கு பாட்டானும் மடிமைக் குற்றங்கள் கூறப்பட்டன. (அ)

சுoக. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(இ - ள்.) ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன் மடியாளுந் தன்மையை யொழிக்கவே; குடி ஆண்மையுள் வந்த குற்றம்

* மணக்குடவர். † குறள் - எஅச.

கெடும் - அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும்.

'மடியா' ளுந்தன்மை, மடியுடைமைக்கேதுவாய தாமதகுணம். 'குடியாண்மை' யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த 'குற்ற' மென்பது மடியானன்றி முன்னே பிற காரணங்களான் * நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம். (கூ)

சுகo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ருஅய தெல்லா மொருங்கு.

(இ - ள்.) அடி அளந்தான் தாயது எல்லாம் - தன்னடியளவானே எல்லாவுலகையு மளந்த இறைவன் கடந்த பரப்புமுழுதையும்; மடி இலா மன்னவன் ஒருங்கு எய்தும் - மடியிலாதவரசன் முறையானன்றி ஒருங்கே யெய்தும்.

'அடியளந்தா' னென்றது வாளா பெயராய் நின்றது. தாவிய தென்பது இடைக்குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின் கண்ணே முயறலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் மடியிலாதான் எய்தும் பயன் கூறப்பட்டது.

அதி. கூஉ—ஆள்வினையுடைமை

[அஃதாவது, இடைவிடாது மெய்ம்முயற்சியுடையனாதல். அஃது ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினைமுயற்சியானன்றி யாளப்படாமையின், இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.]

சுகக. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(இ - ள்.) அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தஞ் சிறுமை நோக்கி நாமிவ் வினைமுடித்த லருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக; பெருமை முயற்சி தரும் - அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக்கும்.

சிறுமைநோக்கி யென்பது பெருமை தருமென்றதனானும், வினைமுடித்தலென்பது அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன.

* காலம், இடம், செய்வினையின் மூலம், முடிவு முதலிய அறியாமையும், சூழ்வன சூழாமையும், துணைவலி தெரியாமை முதலியவுமாம்.

விடாது முயலத் தாம் பெரியராவர்; ஆகவே, அரியனவும் எளிதின் முடியுமென்பதாம். (க)

சுகஉ. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(இ - ள்.) வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது; வினைக்கண் வினைகெடல் ஓம்பல்-ஆதலால், செய்யப்படும் வினைக்கட் டவிர்ந்திருத்தலே யொழிக.

'குறை' இன்றியமையாப்பொருள். அது "பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே"* என்பதனுனு மறிக. இதற்கு வினைசெய்ய வேண்டுங் குறையை நீங்கினரி னீங்கிற்றென் றுரைப்பாருமுளர்.

சுகக. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று - முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது; வேளாண்மை என்னும் செருக்கு - எல்லார்க்கு முபகாரஞ் செய்தலென்னும் மேம்பாடு.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையா ரென்பார் அவ்வகுணங்கண்மேல் வைத்தும், அது பிறர்மாட் டில்லையென்பார் 'தங்கிற்றே' யென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

சுகச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(இ - ள்.) தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி இல்லாதவன் உபகாரியாந் தன்மை; பேடி கை வாள் ஆண்மை போலக் கெடும் - படைகண்டா லஞ்சும் பேடி அதனிடைத் தன் கையில் வாளை ஆளுதற்றன்மைபோல இல்லையாம்.

'ஆ' ளென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப் பணிகோடற் கருத்துடையளாயினும் அது தன்னச்சத்தான் முடி யாதவாறுபோல, முயற்சியில்லாதான் பலர்க்கு முபகரித்தற் கருத் துடையனுயினும் அதுதன் வறுமையான் முடியாதென்பதாம். 'வா ளாண்மை' யென்பதற்கு வாளாற் செய்யு மாண்மையென் றுரைப் பாருமுளர். இதனுன் அஃதில்லாதானது குற்றங் கூறப்பட்டது. (சு)

* புறநானூறு - கஅஅ.

சுகருி. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(இ - ள்.) இன்பம் விழையான் வினை விழைவான் - தனக் கின்பத்தை விரும்பாஞகி வினேமுடித்தலேயே விரும்புவான் : தன் கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண் - தன் கேளிராகிய பாரத்தின் துன்பத்தினே நீக்கி அதனேத் தாங்குந் தூணும்.

இஃதேகதேச வுருவகம். 'ஊன்று' மென்றது அப்பொருட்டா தல் "மதலேயாய் மற்றதன் வீழ்ஞன்றி யாங்கு"* என்பதனுனுமறிக. சுற்றத்தார் ஈட்டாரது வறுமையுந் தீர்த்து அவர்க் கேமஞ்செய்யு மாற்றலே யுடையனு மெனவே, தன்னேக் கூறவேண்டா வாயிற்று. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனு மெய்துமென்றதனுல், காரணத்தை விழையாது காரியத்தை விழை வான் யாதுமெய்தானென்பது பெற்றும். இதனுல் அஃதுடையா னது நன்மை கூறப்பட்டது. (இ)

சுகசு. முயற்சி திருவினே யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(இ - ள்.) முயற்சி திருவினே ஆக்கும் - அரசர்மாட்டுளதாய முயற்சி அவரது செல்வத்தினே வளர்க்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் - அஃதில்லாமை வறுமையை யடைவித்து விடும்.

செல்வம் அறுவகை யங்கங்கள். † வறுமை அவற்றுன் வறிய ராதல். அதனே யடைவிக்கவே, பகைவரா னழிவரென்பது கருத்து.

சுகள. மடியுளான் மாமுகடி யென்ப மடியிலான்
ருெளுளா டாமரையி னுள்.

(இ - ள்.) மா முகடி மடி உளாள் - கரிய சேட்டை ஒருவன் மடியின்கண்ணே யுறையும்; தாமரையினுள் மடிஇலான் தாள் உளாள் என்ப - திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே யுறையுமென்று சொல்லுவர் அறிந்தோர்.

பாவத்தின் கருமை அதன் பயனுய 'முகடி'மே லேற்றப்பட் டது. மடியும் முயற்சியு முடையார்மாட்டு நிலேயை அவைதம்மேல் வைத்துக் கூறினுர். இவை யிரண்டு பாட்டானும் அவ்விருமைக்கு மேது கூறப்பட்டது. (எ)

* நாலடியார் - நகள. † குறள் - நஅக.

சுகஅ. பொறியின்மை யார்க்கும் பழியன் றதிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(இ - ள்.) பொறி இன்மை யார்க்கும் பழியன்று - பயனைத் தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது; அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி - அறிய வேண்டுமவற்றை யறிந்து வினை செய்யாமையே பழியாவது.

அறியவேண்டுவன வலி முதலாயின*. தெய்வமியையாவழி ஆள் வினையுடைமையாற் பயனில்லை யென்பாரை நோக்கி, உலகம் பழ வினைபற்றிப் பழியாது, ஈண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிப் பதென்றார். அதனால் விடாது முயல்கவென்பது குறிப்பெச்சம். (அ)

சுஉக. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(இ - ள்.) தெய்வத்தான் ஆகாது எனினும் - முயன்ற வினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும்; முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும் - முயற்சி தனக் கிடமாய உடம்பு வருந் திய வருத்தத்தின் கூலியளவு தரும், பாழாகாது.

தெய்வத் தானையவழித் தன்னளவின் மிக்க பயனைத் தருமென் பது உம்மையாற் பெற்றும். இருவழியும் பாழாக வின்மையின் தெய்வ நோக்கியிராது முயல்கவென்பது கருத்து. (கூ)

சுஉO. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ - ள்.) ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவ தாய ஆழினையும் புறங்காண்பர்; உலைவு இன்றித் தாழாது உஞற்று பவர் - அவ்விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார்.

தாழ்வறுதல்: சூழ்ச்சியினும், வலி முதலிய வறிதலினும், செயலினுங் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்கலாகாமையிற் பலகான் முயல்வார் பயனெய்துவ ரென்பார் 'உப்பக்கங் காண்ப' ரென்றார். தெய்வத்தா னிடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப் பட்டது. (கO)

---

* காலமும், இடமும்.

அதி. சுரு—இடுக்கணழியாமை

[அஃதாவது, வினையின்கண் முயல்வான், தெய்வத்தாலுக, பொருளின்மையாலுக, மெய்வருத்தத்தாலுகத் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங் கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.]

சுஉக. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(இ - ள்.) இடுக்கண் வருங்கால் ஈகுக - ஒருவன் வினையாற்றனக்கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ்விடுக்கணை மேன்மேலடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாகலான்.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத் தள்ளி அக்குறைமுடிக்கு மாற்றலுடையனாகலின், 'அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்' லென்றார். (க)

சுஉஉ. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(இ - ள்.) வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம் போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம்; அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும் - அறிவுடையவன் தன்னுள்ளத்தான் ஒன்றனை நினைக்க, அத்துணையானே கெடும்.

'இடும்பை' யாவது உள்ளத்து ஒரு கோட்பாடேயன்றிப் பிறிதில்லையென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல் வேண்டுதலின், 'அறிவுடையா' னென்றும், அவ்வுபாயத்தெண்மை தோன்ற 'உள்ளத்தினுள்ள' வென்றுங் கூறினார். இவையிரண்டு பாட்டானும் ஊழினுனைய இடுக்கணால் அழியாமைக்கு உபாயங் கூறப்பட்டது. (உ)

சுஉக. இடும்பைக் கிடும்பை படுப்ப மிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(இ - ள்.) இடும்பைக்கு இடும்பை படாதவர் - வினைசெய்யுங்கால் அதற்கிடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர்; இடும்பைக்கு இடும்பை படுப்பர் - அத்துன்பத்தனைக்குத் தாந் துன்பம் விளைப்பர்.

வருந்துதல் இளைத்துவிட நினைத்தல். மனத்திட்பமுடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே, எல்லாவிடும்பையு மிலவாமாகலின், 'இடும்பைக் கிடும்பை படுப்ப' ரென்றார். வருகின்ற பாட்டிரண்டினும் இதற்கிவ்வாறே கொள்க. சொற்பொருட் பின்வரு நிலை. (ந)

சுஉச. மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(இ - ள்.) மடுத்த வாய் எல்லாம் பகடு அன்ன - விலங்கிய விடங்களெல்லாவற்றினுஞ் சகடமீர்க்கும் பகடுபோல வினையை யெடுத்துக்கொண்டு உய்க்கவல்லானை; உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து - வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலையுடைத்து.

'மடுத்தவா யெல்லா' மென்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளத்துநில முதலியவாகவும், வினைக்கு இடையூறுக ளாகவுங் கொள்க. பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும்* அரிதினுய்க்குமாறுபோலத் தன் மெய்வருத்த நோக்காது முயன்றுய்ப்பானென்பார் 'பகடன்ன' னென்றார். (ச)

சுஉருஎ. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(இ - ள்.) அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும்; அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும் - தன் னுள்ளக்கோட்பாடு விடாதான் உற்ற விடுக்கண்டாம் இடுக்கணிலே பட்டுப்போம்.

ஒன்றே பலகால் வருதலும், வேறுபட்டன வராய்வருதலு மடங்க, 'அடுக்கிவரினு' மென்றார். அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மே னின்றது. இவை மூன்று பாட்டானும் தெய்வத்தா னுயதற் கழியாமை கூறப்பட்டது. (ஙி)

சுஉசு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்ற தவர்.

(இ - ள்.) அற்றேம் என்று அல்லற்படுபவோ - வறுமைக் காலத்து யாம் வறியமாயினேமென்று மனத்தாற் றுயருழப்பாரோ? பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர் - செல்வக்காலத்து இது பெற்றேமென்று இவறுதலே யறியாதார்.

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - கஅசு.

பெற்றவழி இவருமை கோக்கி, அற்றவழியும் அப்பகுதி விடா தாகலின், அல்லற்பா டில்லையாயிற்று. இதனாற் பொருளின்மையா னுயதற்கு அழியாமையும், அதற்குபாயமுங் கூறப்பட்டன. (கூ)

கூஉஎ. இலக்க முடம்பிடும்பைக் கென்னு கலக்கத்தைக் கையாருக் கொள்ளாதா மேல்.

(இ - ள்.) உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று - நாற்கதி யினுமுள்ள வுடம்புகள் இடும்பையென்னும் வாளுக் கிலக்கென்று தெளிந்து; கலக்கத்தைக் கையாருக் கொள்ளாதாம் மேல் - தம் மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடை யார்.

ஏகதேச வுருவகம். 'உடம்பு' சாதிப்பெயர். 'கலக்க' மென்னுங் காரியப்பெயர் காரணத்தின்மே னின்றது. 'கையா' றென்பது ஒரு சொல்; இதற்கு ஒழுக்கநெறியென் றுரைப்பாருமுளர். இயல் பாகக் கொள்வரென்பது குறிப்பெச்சம். (எ)

கூஉஅ. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான் றுன்ப முறுத லிலன்.

(இ - ள்.) இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன்னுடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையாலிடும்பை யெய்துதல் இயல்பென்று தெளிந்திருப்பான்; துன்பம் உறுதல் இலன் - தன் முயற்சியாற் றுன்ப முறான்.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னாது காக் கக் கருதினும், துன்பம் வினைதலின், இவ்விரண்டுஞ் செய்யா தானைத் 'துன்பமுறுதலில' னென்றார். (அ)

கூஉகூ. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட் டுன்ப முறுத லிலன்.

(இ - ள்.) இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையாற் றனக்கின்பம் வந்துழி அதனை யனுபவியாநின்றே மனத்தான் விரும்பாதான்; துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் - துன்பம் வந்துழியும் அதனை யனுபவியாநின்றே மனத்தான் வருந்தான்.

'துன்பம்' முயற்சியான் வரு மிடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக் கோடலின், பயன்களுமிலவாயின. (கூ)

கூஉ0. இன்மை யின்ப மெனக்கொளி னுகுந்தன் னென்னர் விழையுஞ் சிறப்பு.

(இ - ள்.) இன்னுமை இன்பம் எனக் கொளின் - ஒருவன் வினை செய்யுமிடத்து முயற்சியான் வருந் துன்பந்தன்னையே தனக் கின்பமாகக் கற்பித்துக்கொள்வானுயின்; தன் ஒன்னர் விழையும் சிறப்பு ஆகும் - அதனுற் றன் பகைவர் நன்குமதித்தற்கேதுவாய உயர்ச்சியுண்டாம்.

துன்பந்தானும் உயிர்க்கியல்பன்றிக் கணிகமாய்* மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கழிவின்றி மனமகிழ்ச்சியுடையனுய் அதனுற் றொடங்கிய வினை முடித்தேவிடு மாற்றலுடையனுமென்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் மெய்வருத்தத்தானுயதற்கு அழியாமையும் அதற்குபாய முங் கூறப்பட்டன. (கo)

அரசியல் முற்றிற்று.

உ. அங்கவியல்

இனி, முறையானே அரசிய னடாத்துதற்கண் ஒன்றற் கொன்று துணையாய அங்கங்க ளாறனதியல்பு முப்பத்திரண்டதிகா ரத்தாற் கூறுவானெடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் "காவற் சாகா டுகைத்தற்"†கண் அவ்வரசற்கினேயாய **அமைச்சன தியல்பு** பத்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் **அமைச்சுக்** கூறுகின்றூர்.

அதி. கூசு—அமைச்சு

[அஃதாவது, அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங் களையுஞ் செயல்களையும்.]

கூடுக. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(இ - ள்.) கருவியும் - வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டுங் கருவிகளும்; காலமும் - அதற்கேற்ற காலமும்; செய்கையும் - அது செய்யுமாறும்; செய்யும் அருவினையும் - அவ்வாற்றிற் செய்யப்படும் அவ்வரிய வினைதானும்; மாண்டது அமைச்சு - வாய்ப்ப வெண்ண வல்லவனே அமைச்சனுவான்.

* எப் பதார்த்தத்திற்குத் தனதுற்பத்திக் கணத்தின் பிற்கணத்திற் சம்பந்தம் சம்பவிப்பதன்றே, ஆனல், உற்பத்திக் கணமாத்திரத்திலேயே சம்பந்தம் சம்பவிக்கின்றதோ அப்பதார்த்தம் கணிகமாம் என்று நியாய நூல் கூறும். †புறநானூறு - கஅடு.

'கருவி'கள் : தானையும் பொருளும். 'காலம்': அது தொடங் குங்காலம். 'செய்கை' யெனவே, அது தொடங்குமுபாயமும், இடை யூறு நீக்கி முடிவுபோக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற் பெரிய பயன்றருவதென்பார், 'அருவினை' யென்றார். இவை யைந் தினையும் வடநூலார் மந்திரத்திற் கங்கமென்ப. (க)

சுஉ. வன்கண் குடிகாத்தல் கற்றறிந்த லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(இ - ள்.) வன்கண் - வினைசெய்தற்கண் அசைவின்மையும்; குடி காத்தல் - குடிகளைக் காத்தலும், கற்று அறிதல் - நீதிநூல் களைக் கற்றுச் செய்வன தவிர்வன வறிதலும்; ஆள்வினை - முயற்சி யும்; ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ்வங்கங் களோடுடனே திருந்தவுடையானே அமைச்சனாவான்.

எண்ணெடு நீண்டது. அவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க. இங்ஙனமெனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந் தொகை பெறுதற்கும். இனி, இதனை ஈண்டெண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் 'குடிகாத்த' லென்ப தனைக் குடிப்பிறப்பும் அதனை யொழுக்கத்தாற் காத்தலுமெனப் பகுப்பாரும், 'கற்றறித' லென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாருமுளர். அவர் 'உட' னென்பதனை முற்றும்மைப்பொருட் டாக்கியும், 'குடி' யென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப. (உ)

சுஉஉ. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(இ - ள்.) பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணை யாயினரை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும்; பேணிக்கொள லும் - தம்பாலாரை அவர் பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும்; பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்னே தம்மி னுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்தவேண்டிற் பொருத்தலும்; வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான்.

இவற்றுள் அப்பொழுதை நிலைக்கேற்றசெயலறிதலும் அதனை அவரறியாமல் ஏற்ற வுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாத லென்னை, 'வல்ல' தென்றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச் சந்தியென்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப. (ங)

சூஉச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(இ - ள்.) தெரிதலும் - ஒரு காரியச்செய்கை பலவாற்றுற் றேன்றின் அவற்றுள் ஆவதாராய்ந் தறிதலும்; தேர்ந்து செய லும் - அது செய்யுங்கால் வாய்க்குந்திற ஞடிச் செய்தலும்; ஒரு தலையாச் சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான்.

'தெரிதல்' செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.

சூஉஙி. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(இ - ள்.) அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான்-அரச னுற் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியானிறைந் தமைந்த சொல்லையுடையனுய்; எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் - எக்காலத்தும் வினைசெய்யுந் திறங்களை யறிந்தான்; தேர்ச்சித் துணை - அவர்க்குச் சூழ்ச்சித் துணையாம்.

தன்னரசன் சுருங்கியகாலத்தும் பெருகியகாலத்தும் இடை நிகராயகாலத்து மென்பார், 'எஞ்ஞான்று' மென்றூர். 'சொல்லா' னென்பதனை ஒடுவருபின்பொருட்டாய ஆனுருபாக்கி யுரைப்பாரு மூளர். இவை யைந்து பாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது. (ஙி)

சூஉசு. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

(இ - ள்) மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கை யாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு, அதிநுட்பம் முன் நிற்பவை யா உள - மிக்கநுட்பத்தை யுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற்பன யாவை யுள?

'மதிநுட்ப' மென்பது பின்மொழிநிலையல். அது தெய்வந் தர வேண்டுதலின் முற்கூறப்பட்டது. 'நூ'லென்பதனுலும், 'அதிநுட்ப' மென்பதனுலும் ஆகுபெயர். 'அதி' யென்பது வடசொல்லுள் மிகுதிப் பொருளதோ ரிடைச்சொல்; அது திரிந்து நுட்பமென்பதனேடு தொக்கது. முன்னிற்றல், மாற்றூர் சூழ்ச்சியாயின தஞ்சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி அதினுட்பமென்று பாடமோதி, அதனி

னுட்பம் யாவென்றுரைப்பாரு முளர்.* அவர் சூழ்ச்சிக் கினமாய் முன்சுட்டப்படுவதொன்றில்லாமையும், சுட்டுப் பெயர் ஐந்தாமுரு பேற்றவழி அவ்வாறு நில்லாமையு மறிந்திலர். பகைவர் சூழ்வன வற்றைத் தாமறிந்து அழித்து அவரறிந்தழியாதன தாஞ்சூழ்வரென் பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது. (சு)

சுஙூஎ. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(இ - ள்.) செயற்கை அறிந்தக் கடைத்தும் - நூனெறியான் வினை செய்யுந் திறங்களை யறிந்த விடத்தும்; உலகத்து இயற்கை அறிந்து செயல் - அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையை யறிந்து அதனோடு பொருந்தச் செய்க.

'கடைத்து' மென்புழித் து பகுதிப்பொருள்விகுதி. நூனெ றியேயாயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க, செய் யின் அது பழிக்குமென இயற்கையறிவாற் பயன் கூறியவாறு. (எ)

சுஙூஅ. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(இ - ள்.) அறி கொன்று அறியான் எனினும் - அறிந்து சொல்லியாரது அறிவையு மழித்து அரசன் தானு மறியானேயாயி னும்; உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக்குற்றநோக்கி யொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை.

'அறி' யென்பது முதனிலைத்தொழிற்பெயர். கோறல் தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்துகூறுதல். 'உழையிருந்தா' னெனப் பெயர்கொடுத்தார், அமாத்தியரென்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி கூறுக்கால் அவனதிறுதியெய் தற்குற்றத்தை உலகத்தன்மே லேற்றுமென்பார், 'கூறல்கட' னென் றார். இவை யிரண்டு பாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (அ)

சுஙூக. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

(இ - ள்.) பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத் திருந்து பிழைப்ப வெண்ணும் அமைச்சனொருவனில்; ஒரெழுபது கோடி தெவ் உறும் - அரசனுக்கு எதிர்நிற்பார் ஒரெழுபது கோடி பகைவ ருறுவர்.

* மணக்குடவர்.

'எழுபது கோடி' யென்றது மிகப் பலவாய வெண்ணிற் கொன்று காட்டியவாறு. வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப்படா னென்பதுபற்றி, இவ் வாறு கூறினர். எழுபதுகோடி மடங்கு நல்லரென்றுரைப்பாரும், எழுபது கூறு தலையென்று பாடமோதுவாருமுளர்.* (க)

சுசo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(இ - ள்.) முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய் யப்படும் வினைகளை முன் அடைவுபட வெண்ணிவைத்தும், செய் யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாநிற்பர்; திறப்பாடு இலாத வர் - முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதார்.

அக்கூறுபாடாவன: வந்தவந்த விடையூறுகட்கு ஏற்றவேற்ற பரிகாரமறிந்து செய்தலும், தாந் திண்ணியராதலுமாம். பிழையாம லெண்ணவல்லராய் வைத்தும் செய்து முடிக்கமாட்டாரு முளரென் பதாம். இவை யிரண்டு பாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. சுடு—சொல்வன்மை

[அஃதாவது, தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சியனடத் தற்கேதுவாய சொற்களைச் சொல்ல வல்லனுதல். மேல் "ஒரு தலையாச் சொல்லலும் வல்ல"† தென்றதனையே சிறப்புப் பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.]

சுசக. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

(இ - ள்.) நாநலம் என்னும் நலன் உடைமை,- அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலமென்று சிறப் பித்துச் சொல்லப்படும் நலத்தினை யுடையராதல்; அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று - அந்நலம் பிறர்க்கும் பிறநல மெல்லாவற்றுள் ளும்‡ அடங்குவதன்றி மிக்கதாகலான்.

நாவாலுளதாய நலமென விரியும். இந்நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறுகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்

* "எழுபது கோடி தலை" என்று பாடங்கொண்டார் மணக்குடவர்.
† குறள் - சுஉச. ‡ கல்வி, பொருள், ஆண்மை, அழகு முதலிய.

குப்பற்றி 'நாநலமென்னு நல' னென்றும், பிறர்க்கும் இதுபோற் சிறந்தது பிறிதின்மையான் 'அந்நலம் யாநலத்துள்ளதூஉமன்' றென்றுங் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழிலில்லாதார்க்கும் இஃதின்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோ வென்பது கருத்து. (க)

சுசஉ. ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(இ - ள்.) ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால் - தம்மரசற்கும் அங்கங்கட்கும் ஆக்கவழிவுகள் தஞ்சொல்லான் வருமாகலான்; சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அப்பெற்றித்தாய சொல்லின்கட் சோர்தலை அமைச்சர் தங்கணிகழாமற் போற்றிக் காக்க.

ஆக்கத்திற்கேதுவாய நற்சொல்லையும், கேட்டிற்கேதுவாய தீச்சொல்லையும் சொல்லாத வொப்புமைபற்றி 'அதனா' லென்றார். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வு போலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்குவருதலால், 'காத்தோம்ப' லென்றார். இவை இரண்டு பாட்டானும் இஃது இவர்க்கின்றியமையாதென்பது கூறப்பட்டது. (உ)

சுசஙு. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(இ - ள்.) கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - நட்பாயேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி, கேளாரும் வேட்ப மொழிவது - மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரும் பின் அப் பகைமையொழிந்து நட்பினை விரும்பும் வண்ணஞ் சொல்லப்படுவதே; சொல்லாம் - அமைச்சர்க்குச் சொல்லாவது.

அக்குணங்களாவன: வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் றருத லென்றிவை முதலாயின.* அவற்றை யவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி, வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின்மேலும் நோக்குடைத்தாதல். 'அவா' யென்னுஞ் செய்தெனெச்சம் மொழிவதென்னுஞ் செயப்பாட்டு வினைகொண்டது. இனிக் 'கேட்டார்', 'கேளா' ரென்பதற்கு நூல் கேட்டார் கேளாதாரெனவும், வினவியார் வினவாதா† ரெனவு முரைப்பாருமுளர். 'தகையவா' யென்பதற்கு எல்லாருந் தகுதியை யுடையவா யென்றுரைத்தார், அவர் அப்

* நன்னூல், சூ - கஉ, † மணக்குடவர்.

பன்மை மொழிவதென்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற் றிலர். இதனாற் சொல்லின திலக்கணங் கூறப்பட்டது. (கூ)

சுசசு. தீறனறிந்து சொல்லுக சொல்லி யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(இ - ள்.) சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அப்பெற் றித்தாய சொல்லை அமைச்சர் தம்முடையவுங் கேட்பாருடையவு மாய நிறங்களை யறிந்து சொல்லுக; அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனஞ் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளுமில்லையாகலான்.

அத்திறங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவ மென்பனவற்றான் வருந் தகுதி வேறுபாடுகள். அவற்றை 'யறிந்து சொல்லு'தலாவது: அவற்றுற் றமக்கும் அவர்க்கு முளவாய ஏற்றத்தாழ்வுகளை யறிந்து அவ்வம் மரபாற் சொல் லுதல். அஃது உலகத்தோடொட்ட வொழுகலையும் இனிமையை யும் பயத்தலின் அறனுயிற்று; தங் காரியமுடித்தலிற் பொருளா யிற்று. அறனும் பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர். (சு)

சுசசு. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ - ள்.) சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து - தாஞ்சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்லவல்ல தொருசொல் இல்லாமை யறிந்து; அச் சொல்லைச் சொல்லுக - பின் அச்சொல்லைச் சொல்லுக.

'பிறிதோர்சொல்' மாற்றாரது மறுதலைச் சொல். 'வெல்லு'தல் குணங்களான் மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக வென்பதாம். இனிப் பிறிதோர்சொல் வெல்லுஞ் சொல்லெனச் செவ்வெண் ணுக்கி, ஒத்தசொல்லும் மிக்கசொல்லு முளவாகாமற் சொல்லுக வென் றுரைப்பாருமுளர்.* இது சொற்பொருட் பின்வருநிலை. (ரு)

சுசசு. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்.

(இ - ள்.) வேட்பத் தாம் சொல்லிப் பிறர் சொற் பயன் கோடல் - பிறர்க்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங்கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங்கால் அச்சொல்

* மணக்குடவர்,

லின்பயனைக் கொண்டொழிதல்; மாட்சியின் மாசு அற்றூர் கோள் - அமைச்சியலுட் குற்றமற்றூரது துணிபு.

பிறர்சொற்களுட் குற்றமுளவாயினும் அவை நோக்கி யிகழா ரென்பதாம். வல்லாரையிகழ்தல் வல்லுர்க்குத் தகுதியின்மையின், இதுவு மூடன்கூறினர். இவை மூன்று பாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது. (ச)

சுசஎ. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனி
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(இ - ள்.) சொலல் வல்லன் - தானெண்ணிய காரியங்களைப் பிறர்க்கேற்பச் சொல்லுதல்வல்லனுய்; சோர்வு இலன் - அவை மிகப் பலவாயவழி ஒன்றினுஞ் சோர்விலனுய்; அஞ்சான் - அவைக் கஞ்சானுயினன் யாவன்; அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கு மரிது.

ஏற்பச்சொல்லுதல்: அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆமெனத் துணியும்வகை சொல்லுதல். 'சோர்வு': சொல்லவேண்டுவதனை மறப்பா னெழிதல். இம்மூன்று குணமு முடையானை மாற்றூராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வாரில்லை யென்பதாம். (எ)

சுசஅ. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(இ - ள்.) தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் - சொல்லப்படுங் காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின்; ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந் தேற்றுக்கொள்ளும்.

'தொழில்' சாதியொருமை. நிரல்படக் கோத்தல்: முன்சொல்வனவும் பின்சொல்வனவுமறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல், கேட்டார்க்கின்பம்பயத்தல். சொல்லுதல்வல்லான் நூறுயிரவருளொருவன் என்ற வடமொழிபற்றிப் 'பெறி' னென்றூர். ஈண்டுங் கேட்டல் ஏற்றுக்கோடல்.* இவை யிரண்டுபாட்டானும் அவ்வாற்றூற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது. (அ)

சுசஉ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ரு தவர்.

(இ - ள்.) மாசு அற்ற சில சொல்லல் தேற்றுதவர் - குற்றமற்

* குறள் - சுஉக.

றனவாய்ச் சிலவாய வார்த்தைகளே அவ்வாற்றாற் சொல்லுதலே யறியாதார்; பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொகுத்துச் சொல்ல விரும்புவர்.

குற்றம் மேற்சொல்லிய குணங்கட்கு † மறுதலையாயின. இடைவிடாது பலசொல்லுதலேயுஞ் சொல்வன்மையென்று விரும்புவாருமுளர், அவர் இவ்வாறு சொல்லமாட்டாதாரே, வல்லார் அது செய்யாரென யாப்புறுப்பார், 'மன்ற' வென்றார். (க)

சுஙo. இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(இ - ள்.) கற்றது உணர விரித்து உரையாதார் - கற்று வைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர்; இணர் ஊழ்த்தும் நாறு மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்து வைத்தும் நாறுத பூவையொப்பர்.

செவ்விபெற மலர்ந்து வைத்தும் நாற்றமில்லாத பூச் சூடப் படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்குமதிக்கப்படா ரென்றமையின், இது தொழிலுவமமாயிற்று. இவை இரண்டுபாட்டானும் அது மாட்டாதாரதிழிபு கூறப்பட்டது.

அதி. சுசு—வினைத்தூய்மை

[அஃதாவது, செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாகவேண்டு மென்கின்றமையின், இது சொல்வன்மையின் பின் வைக்கப்பட்டது.]

சுஙக. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

(இ - ள்.) துணை நலம் ஆக்கம் தருஉம் - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வமொன்றனையுங் கொடுக்கும்; வினை நலம் வேண்டிய எல்லாம் தரும் - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங் கொடுக்கும்.

'வேண்டியவெல்லா' மென்றது, இம்மைக்கண் அறம் பொருளின்பமுதலாயவற்றையும், மறுமைக்கட் டான் விரும்பிய பதங்களே

† சுசசு - ஆம் குறளுரை.

யும்: இதனாற் காணப்படுந் துணைநன்மையினுங் கருதப்படும் வினை நன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

சுருஉ. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(இ - ள்.) புகழொடு நன்றி பயவா வினை - தம்மரசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை; என்றும் ஒருவுதல் வேண்டும் - அமைச்சர்க்கு எக்காலத்து மொழிதல்வேண்டும்.

பெருகல், சுருங்கல், இடைநிற்ற லென்னும் நிலைவேறுபாடு* காலத்தான் வருதலின், 'என்று' மென்றார். 'வேண்டு' மென்பது ஈண்டு இன்றியமையாதென்னும் பொருட்டு. (உ)

சுருக. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(இ - ள்.) ஆஅதும் என்னுமவர் - மேலாகக்கடவே மென்று கருதுவார்; ஒளி மாழ்கும் வினைசெய் ஓஒதல்வேண்டும் - தம்மொளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க.

'ஓஒதல்வேண்டு' மென்பது ஒருசொன்னீர்மைத்து. ஓவுத லென்பது குறைந்துநின்றது. 'ஒளி' தாமுளகாலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல்.† செய்யென்னும் முதனிலைத்தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் 'செய்வினை' யென வினைத்தொகையாக்கிய வழிப் பொருளின்மையறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்றென்பதாம். (க)

சுருஎ. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(இ - ள்.) இடுக்கட்படினும் இளிவந்த செய்யார் - தாமிடுக்கணிலேபடவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளிவந்த வினைகளைச் செய்யார்; நடுக்கு 'அற்ற காட்சியவர் - தளக்கமற்ற தெளிவினையுடையார்.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கணுக்கு, எஞ்ஞான்றுங் கழியாதவிழிவு எய்தற்பாலதன்றென்பதூஉம், அஃதெய்தினாலும் வருவது வருமென்பதூஉம் தெளிவாகலால், 'செய்யா' ரென்றார். (எ)

சுருடு. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

* சுருஉ - ஆம் குறளுரை. † குறள் - கூஎக.

(இ - ள்.) எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத்தென்று பின் ருனே யிரங்கும் வினைகளே ஒருகாலுஞ் செய்யாதொழிக ; செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒருகான் மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையனயினு ஞயின், பின்னிருந்து அவ்விரங்கல்களேச் செய்யாதொழிதல் நன்று.

'இரங்குவ'வென முன்வந்தமையிற் பின் 'அன்ன' வெனச்சுட்டி யொழிந்தார். அவ்வினேகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்திரங்குவனுயின், அது தீரும் வாயிலறிந் திலனெனவும், திட்பமிலனெனவும், பயனில்லன செய்கின்ரு னெனவும், தன் பழியைத் தானே தூற்றுகின்ரு னெனவும், எல்லாரு மிகழ்தலிற் பின்னிரங்காலமை நன்றென்ரூர். இதுவும் வினேத் தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. பிற்ரொடருக்குச் செய்வானுயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்றெனப் பிற ரெல்லாம் இயைபற வுரைத்தார்.* (இ)

சுருசு. ஈன்ருள் பசிகாண்பா னுயினுஞ் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினே.

(இ - ள்.) ஈன்ருள் பசி காண்பான் ஆயினும் - தன்னேப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டிரங்குந் தன்மையனயினு னெனினும் ; சான்ரோர் பழிக்கும் வினே செய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினேகளே ஒருவன் செய்யாதொழிக.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும், கற்புடைமனேவியும், குழவியும் பசியான் வருந்துமெல்லேக்கண் தீயன பலவுஞ் செய்தாயி னும் புறந்தருகவென்னும் அறநூற்பொதுவிதி, பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்குமதிக்கற்பாடு முடைய அமைச்சர்க்கெய்தாமைபற்றி இவ்வாறு கூறினர். இவை யைந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினே செய்யற்க வென்பது கூறப்பட்டது. (சு)

சுருள. பழிமலேந் தெய்திய வாக்கத்திற் சான்ரோர்
கழிநல் குரவே தலே.

(இ - ள்.) பழிமலேந்து எய்திய ஆக்கத்தின் - சான்ரோர் தீய வினேகளேச் செய்து அதனேற் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின் ; சான்ரோர் கழி நல்குரவே தலே - அது மேற்கொள் ளாத சான்ரோர் நுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது.

* மணக்குடவர்.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பழியை மேற் கோடல் சால்போடியையாமையின், 'சான்ரோர் கழிநல்குரவே தலை' யென்ரார். (எ)

சுருஅ. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(இ - ள்.) கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு - தூலோர் கடிந்த வினைகளைத் தாமுங் கடிந்தொழியாது பொருணேக்கிச் செய்த அமைச்சர்க்கு; அவைதாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தூயவன்மையின் முடியா, ஒருவாற்ரான் முடியினும் பின்னுன்பத் தையே கொடுக்கும்.

முடிதல் கருதிய பொருடருதல். பீழைதருதலாகிய பொரு ளின் ரெழில் அதற்குக் காரணமாய வினைகண்மே லேற்றப்பட் டது. (அ)

சுருக. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(இ - ள்.) அழக்கொண்ட எல்லாம் அழப் போம் - ஒருவன் தீவினைகளைச் செய்து பிறரிரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம் மையிலே அவன்ருனிரங்கப் போகாநிற்கும்; நற்பாலவை இழப் பினும் பிற்பயக்கும் - மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தாலுயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

'பின்' னெனவே, மறுமையுமடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளதியல்பு கூறியவாறு. (க)

சுசுO. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(இ - ள்.) சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் - அமைச் சன் தீயவினைகளாற் பொருள்படைத்து அதனால் அரசனுக்கேமஞ் செய்தல்; பசுமட்கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று - பசியமட் கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கேமஞ் செய்ததனேடொக்கும்.

முன் ஆக்கம் பயப்பனபோற் ரோன்றிப் பின் னழிவே பயத்த லால், அவை 'சல' மெனப்பட்டன. ஏமமார்த்தலென்பது 'ஏமார்த்த' லென்ரியிற்று; ஏமத்தையடையப்பண்ணுத லென்றவாறு. இருத்து தல் நெடுங்காலமிருப்பச்செய்தல். அரசனும் பொருளும் சேரப்போ மென்பதாம். பிறரெல்லாம் ஏமாத்தலென்று பாடமோதி, அதற்கு மகிழ்தலென்றும், 'இரீஇயற்' றென்பதற்கு வைத்தாற்போலு

மென்று முரைத்தார்;* அவர் அவை தன்வினையும் பிறிதின்வினையு மாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது. (கo)

அதி. சுஎ—வினைத்திட்பம்

[அஃதாவது, அத்தூயவினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத் திண்மை அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.]

சுசுக. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

(இ - ள்.) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் - வினைசெய்தற்கட் டிண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியானொருவன் மனத்தினது திண்மை; மற்றைய எல்லாம் பிற - அஃதொழிந்தன வெல்லாம் அதற்குத் திண்மையென்று சொல்லப்படா.

ஒழிந்தனவாவன: படை, அரண், நட்பு முதலியவற்றின் றிண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் 'மற்றைய' வென்றும், வேண்டினும் அஃதில்வழிப் பயனிலவாகலிற் பிற வென்றுங் கூறினர். இதனால் 'வினைத்திட்ப' மாவது இன்னதென்பது கூறப்பட்டது. (க)

சுசுஉ. ஊறோரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னூறென்ப ராய்ந்தவர் கோள்.

(இ - ள்.) ஆய்ந்தவர் கோள் - முன் நீதியாராய்ந்த அமைச்சரது துணிபு; ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும் வினை தெய்வத்தாற் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையுமாகிய இவ்விரண்டின் வழியென்பர் நூலோர்.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர். உறுதலுடையதனை முன் 'ஊ' றென்றமையின், 'உற்றபி' னென்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் 'இரண்டி' னென்றுங் கூறினர். ஊறொராவென்று பாடமோதுவாருமுளர்; அஃது 'ஒல்

* மணக்குடவர்.

காமை' யென்னு மெண்ணேடும் 'இரண்' டென்னுந் தொகை யோடும் இயையாமை அவரறிந்திலர். (உ)

சுசுசுக. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி னெற்ரு விழுமந் தரும்.

(இ - ள்.) கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செய்யப் படும் வினைய முடிவின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத் துச் செய்வதே திட்பமாவது; இடைக் கொட்கின் எற்ரு விழுமம் தரும் - அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும்.

மறைத்துச் செய்வதாவது அங்கமைந்து மெண்ணியவாறு பிற ரறியாமலும்; தாணறிந்ததூஉம், தன்னிங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவருய்த்துணராமலும் அடக்கிச் செய்தல். அத் திட்பம், ஆண்டன்மையான் வருதலின், 'ஆண்மை' யெனப்பட்டது. 'எற்ருவிழும' மாவன பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்கு தல், செய்வானே விலக்குதல் செய்வராகலின், அவற்ருன் வருவன. 'விழுமம்' சாதிப்பெயர். இவை யிரண்டு பாட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது. (ங)

சுசுச. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்.

(இ - ள்.) சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம் இவ்வினையை இவ்வாற்ருற் செய்துமென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கு மெளிய; சொல்லிய வண்ணம் செயல் அரியவாம் - அதனை அவ் வாற்ருனே செய்தல் யாவர்க்கு மரியவாம்.

'சொல்லுதல்,' 'செய' லென்பன சாதிப்பெயர். அரியவற்றை யெண்ணிச் சொல்லுதல் திட்பமில்லாதார்க்கு மியறலின், 'எளிய' வென்ருர். இதனுல் அதனதருமை கூறப்பட்டது. (ச)

சுசுருக. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க ணூறெய்தி யுள்ளப் படும்.

(இ - ள்.) வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணத் தாற் சிறப்பெய்திப்* பிறவிலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம்; வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப் படும் - வேந்தன்கண்ணே உறுதலையெய்தலான், எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்.

*குறள் : சுச - ஆம் அதிகாரம்.

'வேந்தன்கணூறெய்' தல், எடுத்தவினை அதனால் முற்றுப் பெற்றுச் செல்வமும் புகழும் அவன் கண்ணேவாதல். எய்தலானென் பது திரிந்து நின்றது. 'உள்ளல்': மதிப்பான் மறவாமை. இதனால் அதன் சிறப்புக் கூறப்பட்டது. (நி)

சுசுசு. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(இ - ள்.) எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாமெய்த எண்ணிய பொருள்க ளெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர்; எண்ணியார் திண்ணியராகப் பெறின் - எண்ணியவர் அவற் றிற்கு வாயிலாகிய வினைக்கட் டிண்மையுடையராகப்பெறின்.

எளிதினெய்துபவென்பார், 'எண்ணியாங்கெய்துப' வென்றார். அவர் அவ்வாறல்ல தெண்ணுமையிற் 'றிண்ணியராக'வே வினைமுடி யும், அது முடிய, அவ்வ யாவையுங் கைகூடுமென்பது கருத்து. இதனால் அஃதுடையாரெய்தும் பயன் கூறப்பட்டது. (சு)

சுசுஎ. *உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து.

(இ - ள்.) உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னர் உடைத்து - உருளாகின்ற பெரிய தேர்க்கு அச்சின்க ணுணிபோல வினைக்கட் டிண்ணியாரையுடையது உலகம்; உருவு கண்டு எள் ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமைநோக்கி இகழ்தலே யொழிக.

சிறுமை, 'எள்ளாமைவேண்டு' மென்பதனானும், உவமை யானும் பெற்றாம். 'அச்சு' உருள்கோத்த மரம். 'ஆணி' உருள் கழலாது அதன் கடைக்கட் செருகுமது. அது வடிவாற் சிறிதா யிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுய்க்குந் திட்பமுடைத்து; அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரியவினைகளைக் கொண் டுய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர்; அவரை அத்திட்ப நோக்கி அறிந்துகொள்க வென்பதாம். இதனால் அவரை யறியுமாறு கூறப்பட்டது. (எ)

சுசுஅ. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(இ - ள்.) கலங்காது கண்ட வினைக்கண் - மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண்; துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின்னைசதலின்றி நீட்டித்தலே யொழிந்து செய்க.

* அறநெறிச்சாரம் - எசு., மூதுரை - கஉ.

கலங்கியவழி ஒழிவதும் செய்துவதுபோற் றேன்றுமாகலின், தெளிந்து பலகா லாராய்ந்து தாஞ்செய்வதாக ஒர்த்த வினையைக் 'கலங்காது கண்டவினை' யென்றார். துளங்காமை திட்ப முடைமை. (அ)

சுசுக. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

(இ - ள்.) துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சி யாற் றமக்குத் துன்பம் மிக வருமாயினும்; இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செய்க - அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க.

'துணிவு' கலங்காமை. அஃதுடையார்க்கல்லது கணிகமாய முயற்சித்துன்ப நோக்காது நிலையுதலுடைய பரிணமவின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின், 'துணிவாற்றிச் செய்க' வென்றார். இவையிரண்டு பாட்டினும் அவர் வினைசெய்யுமாறு கூறப் பட்டது. (க)

சுஎ0. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா வுலகு.

(இ - ள்.) வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்ததென்று கொள்ளாத அமைச்சரை; எனைத் திட்பம் எய்தியக்கண்ணும் - ஒழிந்த திட்பங்களெல்லாமுடையராய விடத்தும்; வேண்டாது உலகு - நன்குமதியார் உயர்ந்தோர்.

மனத்தின்கட் டிட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முத லியவற்றின் றிட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம்; ஆகவே, அவையெல்லாம் கெடு மென்பதுபற்றி உலகு வேண்டா தென்றார். இதனால் வினைத்திட்ப மில்லாதார திழிபு கூறப் பட்டது. (எ0)

அதி. சுஅ—வினைசெயல்வகை

[அஃதாவது, அத்திட்பமுடைய வமைச்சன் அவ்வினையைச் செய்யுந் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

சுஎக. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது.

(இ - ள்.) சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற் கெல்லையாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாதென்னுந் துணி

வினைப் பெறுதல்; அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது - அங்ஙனந் துணிவுபெற்ற வினை பின் நீட்டிப்பின்கட் டங்குமாயின், அது குற்றமுடைத்து.

'சூழ்ச்சிமுடிவு துணிவெய்த' லெனவே, துணிவெய்துமளவுஞ் சூழவேண்டுமென்பது பெற்றும். பின்னர்த் 'துணிவு' ஆகுபெயர். நீட்டிப்பு செய்யுங்காலத்துச் செய்யாமை. அஃதுள்வழிக் காலக் கழிவாகலானும், பகைவர் அறிந்தழித்தலானும் முடியாமையின் அதனைத் 'தீ' தென்றார். (க)

சுஎஉ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

(இ - ள்.) தூங்கிச் செயற்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பகுதியவாய வினைகளுள் நீட்டிக்க; தூங்காது செய்யும் வினை தூங்கற்க - நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியா தொழிக.

இருவழியும் இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும் வலியானுங் காலத்தானும் அறியப்படும். மாறிச்செய்யின், அவை வாயாவென்பது கருத்து. மேற் றூங்காமை யென்றார்*, ஈண்டதனைப் பகுத்துக் கூறினார். இவை யிரண்டு பாட்டானும் பொதுவகையால் வினைசெய்யுந் திறங் கூறப்பட்டது. (உ)

சுஎக. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

(இ - ள்.) ஒல்லும் வாய் எல்லாம் வினைநன்று - வினைசெய்யுங் கால் இயலுமிடத்தெல்லாம் போராற்செய்தல் நன்று; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல் - அஃதியலாவிடத்து †ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோ ருபாயநோக்கிச் செய்க.

இயலுமிடம்: பகையிற் றன்வலியுறைய காலம். அக்காலத்துத் தண்டமே நன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாகலின். இயலாவிடம் ஒத்தகாலமும் மெலியகாலமும். அவ்விரண்டு காலத்துஞ் சாமபேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செய்க வென்றார், அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடையவேனும் உடம்படுத்தற் பயத்தாற் றம்முளொக்குமாகலின். இதனுள் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவகைத்தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன. (ங)

* குறள், நஅங. † சசுஅ - ஆம் குறள் உரை.

சுஎச. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(இ - ள்.) வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத் தொடங்கிய வினையும், கலையத்தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனதொழிவும்; நினையுங்கால் தீயெச்சம் போலத் தெறும் - ஆராயுங்காற் றீயினதொழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும்.

இனி இக்குறை என்செய்வதென்று இகழ்ந்தொழியற்க, முடியச் செய்கவென்பதாம். பின் வளர்தலைப்புனைபற்றிப் பகையெச்சமும் உடன்கூறினர். இதனுன் வலியான் செய்யுத்திறங் கூறப்பட்டது. (ச)

சுஎஞ. பொருள்கருவி காலம் வினையிடனெ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்.

(இ - ள்.) பொருள் கருவி காலம் வினை இடனெடு ஐந்தும்-வினை செய்யுமிடத்துப் பொருளுங் கருவியுங் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும்; இருள் தீர எண்ணிச் செயல் - மயக்கமற வெண்ணிச் செய்க.

*எண்ணெடு பிறவழியுங் கூட்டப்பட்டது. 'பொருள்' அழியும் பொருளும் ஆகும் பொருளும். 'கருவி' தன்னுனையும் மாற்றூர் தானையும். 'காலம்' தனக்காங்காலமும் அவர்க்காங்காலமும். 'வினை' தான் வல்லவினையும் அவர் வல்லவினையும். 'இடம்' தான் வெல்லுமிடமும் அவர் வெல்லுமிடமும். இவற்றைத் தான் வென்றியெய்துந் திறத்திற் பிழையாம லெண்ணிச்செய்க வென்பதாம். (ஞ)

சுஎசு. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ - ள்.) முடிவும் - வினைசெய்யுங்கால் அது முடிதற்குள தாம் முயற்சியும்; இடையூறும் - அதற்கு வருமிடையூறும்; முற்றியாங்கு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தாற் றுனையும் பெரும்பயனும்; பார்த்துச் செயல் - சீர்தூக்கிச் செய்க.

'முடிவு' ஆகுபெயர். முயற்சி யிடையூறுகளதளவிற் பயனதளவு பெரிதாயிற் செய்கவென்பதாம். (சு)

சுஎஎ. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

* தொல், சொல் - குத்திரம். உகச.

(இ – ள்.) செய்வினை செய்வான் செயன்முறை – அவ்வாற்றுற் செய்யப்படும் வினையைத் தொடங்கினன் செய்யுமுறைமையாவது; அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் – அதனதுளப்பாட்டினை யறிவான் கருத்தினைத் தானறிதல்.

அவ்வாறென்றது பொருண்முதலிய வெண்ணாலேயும் முடிவு முதலிய தூக்காலேயும். 'உள்ளறிவான்' முன்செய்து போந்தவன். அவன் கருத்து, அவன் செய்து போந்த உபாயம். அதனை யறியவே, தானும் அதனைச் செய்து பயனெய்து மென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யுந் திறங் கூறப்பட்டது. (எ)

சூஎஅ. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(இ – ள்.) வினையான் வினை ஆக்கிக்கோடல் – செய்கின்ற வினையாலே அன்னது பிறிதுமோர் வினையை முடித்துக்கொள்க; னனைகவுள் யானையால் யானை யாத்தற்று – அது மதத்தா னனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப் பிணித்ததனை டொக்கும்.

பிணித்தற் கருமை தோன்ற 'னனைகவு' ளென்பது பின்னுங் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர் வினையை முடித்தற் குபாயமாமாறு எண்ணிச்செய்க; செய்யவே, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம். (அ)

சூஎக. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

(இ – ள்.) நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே – வினை செய்வானுற் றன் னட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும்; ஒட்டாரை ஒட்டிக்கொளல் – தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்.

அவ்வினை வாய்த்தற்பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன் மெலிவு புலனுவதன் முன்னே செய்கவென்பார், 'விரைந்த' தென்றார்; விரைந்து செய்யப்படுவ தென்றவாறு. வினைசெய்யுந் திறமாகவிற் பகைவரோ டொட்டாராயிற்று. தன்னொட்டார் பிறரிட் கூடாமல் மாற்றிவைத்த லெனினு மமையும். (க)

சூஅ0. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெரிதிற்
கொள்வர் பெரியார் பணிந்து.

(இ - ள்.) உறை சிறியார்-ஆளுமிடஞ் சிறியராய அமைச்சர்; உள் நடுங்கல் அஞ்சி - தம்மின் வலியராய் எதிர்ந்தவழித் தம் பகுதி நடுங்கலை யஞ்சி; குறை பெறின் பெரியார்ப் பணிந்து கொள்வர் - அந்நிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதனை யேற்றுக்கொள்வர்.

இடம்: நாடும்-அரணும்; அவற்றது சிறுமை ஆள்வார்மே லேற்றப்பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயைதலரிதாகலின், 'பெறி' னென்றார். அடியிலே மெலியராயினர் தம் பகுதியும் அஞ்சி நீங்கின் முதலோடுங் கெடுவராகலின், அது வாராமற் சிறிது கொடுத்துஞ் சந்தினை யேற்றுக்கொள்க வென்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத்தன்மையின், கொள்வரென உலகியலாற் கூறினர். இவை மூன்று பாட்டானும் மெலியான் செய்யுந் திறங் கூறப்பட்டது. (கo)

அதி. சுகூ — தூது

[அஃதாவது, சந்தி விக்கிரகங்கட்கு* வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் **வினை செயல்வகை** யென்றமையின், இஃததன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக்கூறுவான், கூறியது கூறுவா னெனத் தூது இரு வகைப்படும். அவருள் முன்னோன் அமைச்சனெனொடொப்பா னெகலானும், பின்னோன் அவனிற் காற்கூறுகுணங் குறைந்தானெகலானும் இஃதமைச்சியலாயிற்று.]

சுஅக. **அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்**
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(இ - ள்.) அன்பு உடைமை - தன் சுற்றத்தார் மாட்டு அன்புடையனாதலும்; ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப் பூணற்கமைந்த குடியின்கட் பிறத்தலும்; வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர்சாதி விரும்பும் பண்புடையனாதலும்; தூது உரைப்பான் பண்பு - தூதுவார்த்தை சொல்வானுக் கிலக்கணம்.

முன்னைய விரண்டனாலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமற் முன் பேணியொழுகலும், தன் முன்னோர் தூதியல் கேட்டறிதலும் பெற்றும். 'வேந்தவாம் பண்புடைமை'† முன்னர் **மன்னரைச் சேர்ந்தொழுகற்கட்** பெறப்படும். அதனால் வேற்றரசரும் அவன் வயத்தராதல் பெறுதும். (க)

---

* சுஙக - ஆம் குறளை. † கலித்தொகை - கஙக.

சுஅஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(இ - ள்.) அன்பு - தம்மரசன்மாட் டன்புடைமையும்; அறிவு- அவனுக்கு ஆவனவறியு மறிவுடைமையும்; ஆராய்ந்த சொல்வன்மை- அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையுமென; தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூதுரைக்க வுரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

'ஆராய்'தல்; அவற்றிற் குடம்படுஞ் சொற்களைத் தெரிதல். 'இன்றியமையாத மூன்' றெனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிற குணங்களும் வேண்டுமென்பது பெற்றும். இவை யிரண்டு பாட்டா னும் இருவகையார்க்கும் பொது விலக்கணங் கூறப்பட்டது. (உ)

சுஅங. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(இ - ள்.) வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றி தரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது; நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் - நீதிநூலையுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லனாதல்.

கோறன் மாலையரென்பது தோன்ற 'வேலா' ரென்றும், தூது வினை யிரண்டு மடங்க 'வென்றிவினை' யென்றுங் கூறினர். 'வல்ல னா'தல் உணர்வுமாத்திர முடையராய அவர்முன் வகுக்குமாற்ற லுடையனாதல். (ங)

சுஅச. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

(இ - ள்.) அறிவு - இயற்கையாகிய வறிவும்; உரு - கண்டார் விரும்புந் தோற்றப் பொலிவும்; ஆராய்ந்த கல்வி - பலரோடும் பலகாலு மாராயப்பட்ட கல்வியுமென; இம்மூன்றன் செறிவு உடையான் - நன்குமதித்தற் கேதுவாய இம்மூன்றனது கூட்டத்தை யுடையான்; வினைக்குச் செல்க - வேற்று வேந்தரிடைத் தூது வினைக்குச் செல்க.

இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதலரிதாகலின், 'செறி வுடையா' னென்றார். இவற்றான் நன்குமதிப்புடையனாகவே, வினை இனிது முடியுமென்பது கருத்து. (ச)

சுஅடு. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

(இ - ள்.) தொகச் சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும்வழிக் காரணவகையாற் றொகுத்துச் சொல்லியும்; தூவாத நீக்கி நகச் சொல்லி - இன்னுத காரியங்களைச் சொல்லும் வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும்; நன்றி பயப்பது தூதாம் - தன்னரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதனுவான்.

பலகாரியங்கட் குடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாய தொன்றைச் சொல்ல அதனுல் அவை விளையுமா றுய்த்துணர வருமையானுஞ் சுருக்கத்தானு முடம்படுவர், இன்னுதவற்றிற் குடம்படாதார்தம் மனமகிழச்சொல்ல அவ்வின்னுமை காணுது உடம்படுவராதலின், அவ்விருவாற்றானும் தன் காரியந் தவறுமல் முடிக்கவல்லா னென்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தாற் றொக்கன. (டு)

சுஅசு. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

(இ - ள்.) கற்று - நீதிநூல்களைக் கற்று; செலச் சொல்லி - தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி; கண் அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கஞ்சாது; காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க வுபாயமறிவானே தூதனுவான்.

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற் கல்வியும், அதனுனன்றிப் பிறிதொன்றுன் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலிற் 'காலத்தாற் றக்கதறி'தலும் இலக்கணமாயின. (சு)

சுஅள. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(இ - ள்.) கடன் அறிந்து - வேற்றரசரிடத்துத் தான் செய்யு முறைமை யறிந்து; காலம் கருதி - அவர் செவ்வி பார்த்து; இடன் அறிந்து - சென்ற கருமஞ் சொல்லுதற் கேற்ற இடமறிந்து; எண்ணி - சொல்லுமாற்றை முன்னே விசாரித்து; உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான்.

செய்யு முறைமையாவது அவர் நிலையும் தன்னரசனிலையும் தன் னிலையும் தூக்கி அவற்றிற்கேற்பக் காணுமுறைமையும் சொல்லு

முறைமையும் முதலாயின. செவ்வி : தன்சொல்லை யேற்றுக்கொள் ளும் மனநிகழ்ச்சி; அது காலவயத்ததாகலிற் 'கால' மென்றார். 'இடம்' தனக்குத் துணையாவா ருடனுயவிடம். எண்ணுதல்: தான் அது சொல்லுமாறும் அதற்கு அவர் சொல்லு முத்தரமும் அதற்குப்பின் ருன் சொல்லுவனவுமாக இவ்வாற்றுன் மேன்மேற் ருனே கற்பித்தல், வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை யென்று வகுத்துக் கூறினுராகலின், அவர் மதமுந் தோன்றத் 'தலை' யென்றார். தூதென்பது அதிகாரத்தான் வந்தது. இவை யைந்து பாட்டானும் தான் வகுத்துக் கூறுவான நிலக்கணங் கூறப்பட்டது. (எ)

சுஅஅ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின் வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(இ - ள்.) வழி உரைப்பான் பண்பு - தன்னரசன் வார்த் தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல் லுவான நிலக்கணமாவன; தூய்மை - பொருள் காமங்களாற் றூய னுதலும்; துணைமை - தனக்கு அவரமைச்சர் துணையாந்தன்மை யும்; துணிவுடைமை - துணிதலுடைமையும்; இம்மூன்றின் வாய்மை - இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையுமென விவை.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப் பொருட்டுத் 'தூய்மை' யும், தன்னரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மனோர்க்கஃ தியல்பெனக் கூறி அவர் வெகுளி நீக்குதற் பொருட்டுத் 'துணைமை' யும், இது சொல்லின் இவ ரேதஞ்செய்வரென் றெழியாமைப் பொருட்டுத் 'துணிவுடைமை'யும், யாவரானுந் தேறப்படுதற் பொருட்டு 'மெய்ம்மை'யும் வேண்டப்பட்டன. 'இன்' ஒடுவின் பொருட்கண் வந்தது. (அ)

சுஅக. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம் வாய்சோரா வன்க ணவன்.

(இ - ள்.) விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்-தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச் சென்று சொல்ல வுரியான்; வடு மாற்றம் வாய்சோரா வன்கணவன் - தனக்கு வரு மேதத்திற்கஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந் தஞ் சொல்லாத நிண்மையை யுடையான்.

தாழ்வு சாதிதரும மன்மையின், 'வடு' வென்றார். 'வாய் சோரா' வெனக் காரியங் காரணத்து ளடக்கப்பட்டது. (கூ)

சுகo. இறுதி பயப்பினு மெஞ்சா தியைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(இ - ள்.) இறுதி பயப்பினும் எஞ்சாது - அவ்வார்த்தை தன்னுயிர்க்கிறுதி தருமாயினும் அதற்கஞ்சி யொழியாது; இறைவற்கு உறுதிபயப்பது தூதாம் - தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனுவான்.

'இறுதிபயப்பினு' மென்றதனால், ஏனைய பயத்தல் சொல்ல வேண்டாவாயிற்று. இவை மூன்று பாட்டானுங் கூறியது கூறுவான திலக்கணங் கூறப்பட்டது. (கo)

அதி. எo—மன்னரைச் சேர்ந்தொழுகல்

[அஃதாவது, அமைச்சர் அரசரைப் பொருந்தி யொழுகுமாறு. இது வேந்தவாம் பண்புடைமை* யென மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.]

சுகக. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
வினல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

(இ - ள்.) இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர்; அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க - அவரை மிக நீங்குவதும், மிகச் செறிவதுஞ் செய்யாது தீக்காய்வார் போல இடைநிலத்திலே நிற்க.

கடிதின் வெகுளுந் தன்மையரென்பது தோன்ற, 'இகல்வேந்த' ரென்றார். மிகவகலிற் பயன் கொடாது மிகவணுகின் அவமதி†பற்றித் தெறும் வேந்தர்க்கு, மிகவகலிற் குளிர் நீங்காது மிகவணுகிற் சுடுவதாய தீயோடொத்தாய தொழிலுவமம் பெறப்பட்டது. (க)

சுகஉ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(இ - ள்.) மன்னர் விழைப விழையாமை - தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல்; மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் - அமைச்சர்க்கு அவராலே நிலை பெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

ஈண்டு 'விழைப' வென்றது அவர்க்குச் சிறப்பாக வுரியவற்றை. அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மையென் றிவைமுதலாயின.

---

* குறள் - சுஅக. † மதியாமை.

இவற்றை ஒப்பிற்கஞ்சித் தாம் விழையா தொழியவே, அவ்வச்ச நோக்கி யுவந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் நல்குவரென்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பிற் கேடுதரு மென்பதாம். (உ)

சுகுஙு. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(இ - ள்.) போற்றின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள் தங்கண் வாராமற் காக்க; கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர் ஐயுற்றுல் அவரைப் பின் றெளிவித்தல் யாவர்க்கு மரிதாகலான்.

அரிய பிழைகளாவன அவராற் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையொடு மருவல், அரும்பொருள் வெளவலென்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால், தகுமோ வென் றையுறுது தகாதென்றே அவர் துணிய வொழுகல், ஒருவாற்றுற் றெளிவித்தாலும் கடன்கொண்டான் ரேன்றப் பொருடோன்று மாறுபோலக் கண்டுழி யெல்லாம் அவை நினைக்கப்படுதலின் 'யார்க்கு மரி' தென்றார். இவை மூன்று பாட்டானும் அது பொதுவகையாற் கூறப்பட்டது. (ஊ)

சுகுச. செவிச் சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

(இ - ள்.) ஆன்ற பெரியாரகத்து - அமைந்தவரச ரருகிருந்தால்; செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர் காண ஒருவன் செவிக்கட் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையுந் தவிர்ந்தொழுகுக.

'சேர்'தல் : பிறனெடு சேர்தல். செய்தொழுகின், தங்குற்றங் கண்டு செய்தனவாகக் கொள்வரென்பது கருத்து. (ச)

சுகுடு. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளா
விட்டக்காற் கேட்க மறை.

(இ - ள்.) மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி; எப்பொருளும் ஓரார் - யாதொரு பொருளையுஞ் செவி கொடுத்துக் கேளாது; தொடரார் - அவனை முடுகி வினவுவதுஞ் செய்யாது; அப்பொருளை விட்டக்கால் கேட்க - அம் மறைப் பொருளை அவன் முனே அடக்காது சொல்லியக்காற் கேட்க.

ஓர்தற்கேற்கும் பொருளாயினு மென்பார், 'எப்பொருளு' மென்றார். 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. (ரு)

சுகக. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

(இ - ள்.) குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியஞ்சொல்லுங் கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை யறிந்து; காலம் கருதி - சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி; வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல் - வெறுப்பிலவுமாய் வேண்டுவனவு மாய காரியங்களே அவன் மனம் விரும்பும் வகை சொல்லுக.

குறிப்புக் காரியத்தின்க ணன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவற்றி னிகழ்வுழியும் அதற்கேலாக் காலத்துஞ் சொல்லுதல் பயனின்றுக லிற் 'குறிப்பறிந்து காலங்கருதி' யென்றும் அவனுடம்படாதன மூடிவுபோகாமையின் 'வெறுப்பில' வென்றும், பயனில்லவும் பயன் சுருங்கியவுஞ் செய்தல் வேண்டாமையின் 'வேண்டுப' வென்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்க ளாற் சொல்லுகவென்பார் 'வேட்பச் சொல' லென்றுங் கூறினார்.

சுகஎ. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(இ - ள்.) வேட்பன சொல்லி - பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களே அவன் கேட்டிலனாயினுஞ்சொல்லி; எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லாவிடல் - எஞ்ஞான் றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலுஞ் சொல்லாதுவிடுக.

'வினையில' வெனவுங் 'கேட்பினு' மெனவும் வந்த சொற்க ளான், அவற்றின் மறுதலைச்சொற்கள் வருவிக்கப்பட்டன. வினை யான் வருதலின் 'வினை' யென்றும், வறுமைக்காலமுமடங்க 'எஞ் ஞான்று' மென்றுங் கூறினார். சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு. இவை நான்குபாட்டானும் சிறப்புவகையாற் கூறப்பட்டது. (எ)

சுகஅ. இனைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

(இ - ள்.) இனையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம்மி னிவ்வியலென்றும் எமக் கின்ன முறையினையுடையரென்றும் அரசரை யவமதியாது; நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அவர் மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செயப்படும்.

'ஒளி': உறங்காநிற்கவுந் தாழுலகங் காக்கின்ற அவர் கடவுட் டன்மை.* அதனோடு பொருந்த வொழுகலாவது அவர் கடவுளருந்

* சீவக சிந்தாமணி, நாமகளிலம்பகம் - உகக.

தாம் மக்களுமா யொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட விளமையும் முறையும்பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவ ரென்பது கருத்து. (அ)

கூகூ. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார் துளக்கற்ற காட்சி யவர்.

(இ - ள்.) கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார் - அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டே மென்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார்; துளக்கு அற்ற காட்சியவர் - நிலை பெற்ற வறிவினை யுடையார்.

கொள்ளாதனசெய் தழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப்பின் தம்மை வேறொருவராகக் கருதுவராதலின், முன்னையராகவே கருதி யஞ்சியொழுகுவாரைத் 'துளக்கற்ற காட்சியவ' ரென்றார். (கூ)

எ00. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங் கெழுதகைமை கேடு தரும்.

(இ - ள்). பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழு தகைமை - அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கியல்பல் லாதவற்றைச் செய்யுமூரிமை; கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட் டினைப் பயக்கும்.

அவன் பொறுது செறும்பொழுதின் அப் பழமை நோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன் வேண்டாதனசெய் தற்கேதுவாய 'கெழுதகைமை கேடுதரு' மென்றார். இவை மூன்று பாட்டானும் பொறுப்பரென்று அரசர் வெறுப்பன செய்யற்க வென்பது கூறப்பட்டது. (கo)

அதி. எக—குறிப்பறிதல்

[அஃதாவது, அரசர் கருதியவதனை அவர் கூறுமலறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாதாகலின், அதன் பின் வைக்கப்பட்டது.]

எoக. கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று மாறுநீர் வையக் கணி.

(இ - ள்.) குறிப்புக் கூறுமை நோக்கி அறிவான் - அரசனுற் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன் முகத்தானுங்

கண்ணனுநோக்கி அறியு மமைச்சன்; எஞ்ஞான்றும் மாறு நீர் வையக்கு அணி - எஞ்ஞான்றும் வற்றுத நீராற் சூழப்பட்ட வையத் துள்ளார்க்கு ஓராபரணமாம்.

ஒட்பமுடையவனுய் எல்லார்க்கும் அழகு செய்தலான், 'வையக் கணி' யென்றார். 'குறிப்'பும் 'வைய'மும் ஆகுபெயர். வையத்திற் கென்பது விகாரப்பட்டு நின்றது. (க)

எ0உ. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ - ள்.) அகத்தது ஐயப்படாது உணர்வானை - ஒருவன் மனத்தின்க ணிகழ்வதனை ஐயப்படாது ஒருதலேயாக வுணரவல் லானை; தெய்வத்தோடு ஒப்பக்கொளல் - மகனேயாயினும், தெய் வத்தோடொப்ப நன்குமதிக்க.

உடம்பு முதலியவற்றுன் ஒவ்வாஞயினும் பிறர் நினைத்த துண ருந் தெய்வத்தன்மை யுடைமையின் 'தெய்வத்தோ டொப்ப' வென்றார். (உ)

எ0ஊ. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(இ - ள்.) குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தங்குறிப்பு நிகழு மாறறிந்து, அதனுற் பிறர் குறிப்பறியுந் தன்மையாரை; உறுப்பி னுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம்முறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக் கொள்க.

உண்ணிகழு நெறி யாவர்க்கு மொத்தலின், பிறர் குறிப்பறிதற் குத் தங் குறிப்புக் கருவியாயிற்று. 'உறுப்பு'க்களாவன பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய புறத்துறுப்புக்கள். இதற்குப் பிறர் முகக்குறிப்பானே அவர் மனக்குறிப் புணர்வாரை யென் றுரைப்பாருமுளர்.* இவை மூன்று பாட்டானுங் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது. (ஊ)

எ0எ. குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(இ - ள்.) குறித்தது கூருமைக் கொள்வாரோடு - ஒருவன் மனத்துக் கருதியவதனை அவன் கூறவேண்டாமல் அறியவல்லா ரோடு; வேனை உறுப்பு ஓரனையர் - மற்றை மாட்டாதார் உறுப்பா லொரு தன்மையராக வொப்பாராயினும், வேறு - அறிவான் வேறு.

* மணக்குடவர்.

கொள்ளாதா ரென்பதூஉம், ஆயினுமென்பதூஉம் அவாய்நிலை யான் வந்தன. சிறந்த வறிவின்மையின், *விலங்கென்னுங் கருத் தான் 'வே'றென்றார். (ச)

எ0கி. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.†

(இ - ள்.) குறிப்பின் குறிப்பு உணராவாயின் - குறித்தது காணவல்ல தங் காட்சியாற் பிறர்குறிப்பினே யுணரமாட்டாவாயின்; உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ - ஒருவ னுறுப்புக்களுட் சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செய்வன!

முதற்கட் 'குறிப்பு' ஆகுபெயர். குறிப்பறிதற்கட் டுணையாதற் சிறப்புப்பற்றி உயிரதுணர்வு கண்மே லேற்றப்பட்டது. அக் கண் களாற் பயனில்லையென்பதாம். இவை யிரண்டு பாட்டானுங் குறிப் பறியார திழிபு கூறப்பட்டது. (கி)

எ0கூ. ‡அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(இ - ள்.) அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல; நெஞ்சங் கடுத்தது முகங் காட்டும் - ஒருவனெஞ்சத்து மிக்கதனை அவன் முகந் தானே கொண்டு காட்டும்.

'அடுத்த' தென்பது ஆகுபெயர், 'கடுத்த' தென்பது கடியென்னு மூரிச்சொலடியாய் வந்த தொழிற்பெயர். உவமை ஒரு பொருள் பிறிதொரு பொருளின் பண்பைக் கொண்டு தோற்றுத லாகிய தொழில்பற்றி வந்தது. (க)

எ0எ. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

(இ - ள்.) உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒரு வனை யுவத்தலானுங் காய்தலானுமுறின், தானறிந்து அவற்றின்கண் அதனின் மூற்பட்டு நிற்குமாகலான்; முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - முகம்போல அறிவுமிக்கது பிறிதுண்டோ இல்லை.

உயிர்க்கே அறிவுள்ளது, ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கில்லை யென்பாரை நோக்கி, உயிரது கருத்தறிந்து அஃதுவக்குறின் மலர்ந் துங் காய்வுறிற் கருகியும் வரலான் உண்டென மறுப்பார் போன்று குறிப்பறிதற்குக் கருவி கூறியவாறு. (எ)

*குறள் - சக0. †நான்மணிக்கடிகை - நிடு. ‡நான்மணிக்கடிகை - சசு.

எ0அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) அகம் நோக்கி உற்றது உணர்வார்ப்பெறின் - குறை யுறுவானும் தன் மனத்தைக் குறிப்பானறிந்து தானுற்ற வதனைத் தீர்ப்பாரைப் பெறின்; முகம் நோக்கி நிற்க அமையும் - அவர் தன் முகம் நோக்கும் வரை தானும் அவர்முக நோக்கி அவ்வெல்லைக் கணிற்க வமையும்.

'உணர்வா' ரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினார். அவ்வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவர்க்குஞ் சிறுமையா மாகலின்; அது வேண்டாவென்பதாம். குறையுறுவானியல்பு கூறு வார் போன்று கருவி கூறியவாறு. இவை மூன்று பாட்டானுங் குறிப்பறிதற் கருவி முகமென்பது கூறப்பட்டது. (அ)

எ0கூ. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - வேந்தர் தம் நோக்கு வேறுபாட்டின் றன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின்; பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்துக்கிடந்த பகைமையையும் வேனக் கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்றிலராயினும் அவர் கண்களே சொல்லும்.

இறுதிக்கட் 'கண்' ஆகுபெயர். நோக்கு வேறுபாடாவன வெறுத்த நோக்கமும் உவந்த நோக்கமும். 'உணர்'தல் அவற்றை அவ்வக்குறிகளா னறிதல். (கூ)

எக0. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

(இ - ள்.) நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை யளக்குங் கோலாவது; காணுங்கால் கண்ணல்லது பிற இல்லை - ஆராயுமிடத்து அவர் கண்ணல்லது பிறவில்லை.

அறிவினுண்மை அஃதுடையார்மே லேற்றப்பட்டது. இங் கிதம், வடிவு, தொழில், சொல்லென்பன முதலாகப் பிறர் கருத் தளக்குமளவைகள் பல, அவையெல்லாம் மூன்றறிந்தவழி அவரான் மறைக்கப்படும், நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக் கப்படாதென்பதுபற்றி, அதனையே பிரித்துக் கூறினார். இனி, அவ்வெல்லைக்குங் கோலென்று பாடமோதி, நுண்ணிய மென்றிருக்கும்

அமைச்சரை அரசரலேக்குங் கோலாவது கண்ணென வுரைத்து, தன் வெகுளிநோக்கால் அவர் வெகுடற்குறிப்பறிக வென்பது கருத்தாக்கு வாரு முளர். இவை யிரண்டு பாட்டானும் நுண்கருவி நோக்கென் பது கூறப்பட்டது. (கo)

அதி. எஉ—அவையறிதல்

[அஃதாவது, அரசனேடிருந்த அவையின தியல்பையறிதல். காரி யஞ்சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலே யன்றி, இதுவும் வேண்டுதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.]

எகக. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர்.

(இ - ள்.) சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல் லின் குழுவினே யறிந்த தூய்மையினே யுடையார் ; அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாமொன்று சொல்லுங்கால் அப்பொழுதை யவையினே யறிந்து ஆராய்ந்து சொல்லுக.

சொல்லின் குழுவெனவே, செஞ்சொல் இலக்கணச்சொல், குறிப்புச் சொல்லென்னும் மூவகைச் சொல்லு மடங்கின. 'தூய்மை' அவற்றுள் தமக்காகாதன வொழித்து ஆவன கோடல். 'அவை' யென்றது ஈண் டதனளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. 'அறி'தல் : தம்மொடு தூக்கியறிதல். 'ஆராய்'தல் : இவ்வவைக்கட் சொல்லுங் காரியம் இது, சொல்லுமாறிது, சொன் னுல் அதன்முடி விதுவென்று இவையுள்ளிட்டன வாராய்தல். (க)

எகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

(இ - ள்.) சொல்லின் நடை தெரிந்த நன்மையவர் - சொற் களி னடையினே ஆராய்ந்தறிந்த நன்மையினே யுடையார் ; இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்று சொல் லுங்கால் அதன் செவ்வியை யாராய்ந்தறிந்து வழுப்படாமல் மிகவுந் தெளிந்து சொல்லுக.

சொற்களி 'னடை'யாவது அம் மூவகைச் சொல்லும் செம் பொருள் இலக்கணப்பொருள், குறிப்புப்பொரு ளென்னும் பொருள் களைப் பயக்குமாறு. செவ்வி, கேட்டற்கண் விருப்புடைமை. வழு : சொல்வழுவும், பொருள் வழுவும். இவை யிரண்டு பாட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்ல வேண்டுமென்பது கூறப்பட்டது. (உ)

எகூ. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

(இ - ள்.) அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையின தளவை யறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற் கொள்வார் அச் சொல்லுதலின் கூறுபாடும் அறியார்; வல்லதூஉம் இல் - கற்றுவல்ல கலையும் அவர்க்கில்லை.

அம்மூவகைச் சொற்களால் வருஞ் சொல்லுதல்வகைமை கேட்பார துணர்வுவகைமைபற்றி வருதலாற் 'சொல்லின் வகை யறியா' ரென்றும், இஃதறியார் யாதுமறியாரென்று எல்லாரானு மிகழப்படுதலின் 'வல்லதூஉமில்' லென்றுங் கூறினர். இதனுல் அவை யறியாக்கால் வருங் குற்றம் கூறப்பட்டது. (கூ)

எகச. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

(இ - ள்.) ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் - அறிவாலொள்ளியாரவைக்கட் டாமுமொள்ளியராக ; வெளியார்முன் வான்சுதை வண்ணம்கொளல் - வேனே வெள்ளேக ளவைக்கட் டாமும் வாலிய சுதையினிறத்தைக் கொள்க.

ஒள்ளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் 'ஒளியா' ரென நின்றது : ஒள்ளியராதல், தந்நூலறிவுஞ் சொல்வன்மையுந் தோன்ற விரித்தல். அவை யறியாத புல்லரை 'வெளியா' ரென்றது, வயிரமின் மரத்தை வெளிறென்னும் வழக்குப்பற்றி. அவர் மதிக்கும் வகை அவரினும் வெண்மையுடையராக வென்பார், 'வான்சுதை வண்ணங்கொள' லென்றார். அவையள வறிந்தார் செய்யுந் திறம் இதனுற் ரெருகுத்துக் கூறப்பட்டது. முன்னர் விரித்துக் கூறுப. (ச)

எகஞ. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

(இ - ள்) நன்று என்றவற்றுள்ளும் நன்றே - ஒருவர்க்கு இது நன்றென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே ; முதுவருள் முந்து கிளவாச் செறிவு - தம்மின் மிக்காரவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத வடக்கம்.

தங்குறைவும் அவர் மிகுதியும் முந்துகிளந்தாற்படு மிழுக்கும் கிளவாக்காலெய்து நன்மையும் அறிந்தே யடங்கினமையின், அவ்வடக்கத்தினை 'நன்றென்றவற்றுள்ளு நன்' றென்றார். முன் கிளத்

தலையே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலுமா மென்பது பெற்றும். இதனுன் மிக்காரவைக்கட் செய்யுந் திறங் கூறப்பட்டது. (இ)

எகசு. ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

(இ - ள்.) ஆற்றின் நிலே தளர்ந்தற்று - வீடெய்தற்பொருட்டு தன்னெறிக்க ணின்றுழுலுருவன் அந்நெறியினின்றும் நிலே தளர்ந்து வீழ்ந்தாலொக்கும்; வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருள்களே யுட்கொண்டு அவற்றின் மெய்ம்மை யுணரவல்லா ரவைக்கண் வல்லாலுருவன் சொல்லிழுக் குப்படுதல்.

'நிலேதளர்ந்து' வீழ்தல்: "உரனென்னுந் தோட்டியா லுரைந் துங் கா"* த் தொழுகியான் பின்னிழுக்கிக் கூடாவொழுக்கத் தாதல். பயனிழத்தலேயன்றி இகழவும் படுமென்பதாம். இதனுன் அதன்க ணிழுக்கியவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (சு)

எகள. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

(இ - ள்.) கசடு அறச் சொற்றெரிதல் வல்லாரகத்து - வழுப் படாமற் சொற்களே யாராய்தல் வல்லா ரவைக்கட் சொல்லின்; கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களேயுங் கற்று அவற்றி னுய பயனே யறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.

சொல்லினென்பது அவாய்நிலேயான் வந்தது. ஆண்டே சொல்லுக வென்பதாம். (எ)

எகஅ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு னீர்சொரிந் தற்று.

(இ - ள்.) உணர்வது உடையார்முன் சொல்லல்-பிறருணர்த்த லின்றிப் பொருள்களேத் தாமே யுணரவல்ல அறிவினேயுடையா ரவைக்கட் கற்றூர் ஒன்றனேச் சொல்லுதல்; வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினேச் சொரிந்தாற்போலும்.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளரு மென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ் சொல்லுக வென்பது கூறப்பட்டது. (அ)

* குறள் - உச.

எகக. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(இ - ள்.) நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் - நல்லா ரிருந்த வவைக்கண் நல்ல பொருள்களே அவர் மனங்கொள்ளச் சொல்லுதற் குரியார்; புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவையறியாத புல்லரிருந்த அவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லா தொழிக.

சொல்லின், தம்மை அவையறியாமை நோக்கி 'நல்லவை'யும், பொருளறியாமையாற் 'புல்லவை' தானும் இகழ்தலின், இரண் டவைக்கு மாகாரென்பது கருதிப் 'பொச்சாந்துஞ் சொல்லற்க' வென்றார். (கூ)

எஉ0. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றுற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ - ள்.) தம் கணத்தர் அல்லார் முன் கோட்டி கொளல் - நல்லார் தம்மினத்த ரல்லாதாரவைக்கண் ஒன்றனையுஞ் சொல்லற்க; அங்கணத்துள் உக்க அமிழ்தற்று - சொல்லின், அது தூய்தல்லாத மூற்றத்தின்க ணுக்க அமிழ்தினை யொக்கும்.

கொள்ளென்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன்னின்று பின்னெதிர்மறை யல் விகுதியோடு கூடி, "மகனெனல்"* என்பது போனின்றது. சொல்லின் அது என்பன அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாங் 'கொள' லென்பதனைத் தொழிற்பெயராக்கி யுரைத் தார்; அவர் அத்தொழில் 'அமிழ்' தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவா மருந்தாத லறிந்து நுகர்வார் கையினும் படாது அவ்வங்கணத்துக்கு மியையின்றிக் கெட்டவாறு தோன்ற, 'உக்கவமிழ்' தென்றார். அச்சொற் பயனில்சொல்லா மென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் தாழ்ந்தாரவைக் கண் ஒருவழியுஞ் சொல்லற்க வென்பது கூறப்பட்டது. (கO)

அதி. எந—அவையஞ்சாமை

[அஃதாவது, சொல்லுதற்குரிய அவையினை யறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

எஉக. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர்.

---

* குறள் - ககூக.

(இ - ள்.) வகை அறிந்து வல்லவை வாய்சோரார் - கற்று வல்லவவை, அல்லாவவை யென்னும் அவை வகையினை யறிந்து வல்லவவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச் சொல்லார்; சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் முறுகையெல்லா மறிந்த தூய்மையினை யுடையார்.

இருந்தாரது வன்மை அவைமே லேற்றப்பட்டது. 'வல்லவை' யென்பதற்குத் தாங் கற்றுவல்ல நூற்பொருள்களேயென் றுரைப் பாருமுளர். அச்சத்தானென்பது அதிகாரத்தான் வந்தது. 'சொல்லின் முறுகை', 'தூய்மை'* என்பனவற்றிற்கு மேலுரைத்தாங் குரைக்க. (க)

எஉஉ. கற்றருட் கற்ற ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(இ - ள்.) கற்றருள் கற்றார் எனப்படுவர் - கற்றரெல்லா ரினும் இவர் நன்கு கற்றரென்று உலகத்தாராற் சொல்லப்படுவார்; கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார் - கற்றரவைக்கண் அஞ் சாதே தாங் கற்றவற்றை அவர் மனங்கொள்ளும்வகை சொல்ல வல்லார்.

உலகமறிவது அவரையேயாகலின், அதனைப் புகழப்படுவாரும் அவரென்பதாம். (உ)

எஉக. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

(இ - ள்.) பகையகத்துச் சாவார் எளியர் - பகையிடை யஞ் சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்; அவையகத்து அஞ்சா தவர் அரியர் - அவையிடை யஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.

அஞ்சாமை 'சாவா' ரென்பதனெடுத்து கூட்டி, அதனைச் சொல்ல வல்லாரென்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்று பாட் டானும் அவையஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

எஉச. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(இ - ள்.) கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பலநூல்களை யும் கற்றரவைக்கட் டாங் கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றாற் சொல்லி, தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்க பொருள்களை அம் மிகக் கற்றரிடத் தறிந்துகொள்க.

* குறள் - எகக.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறுய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க் கேற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவராகலான், ஏனைக் கற்கப்பெருதன கேட்டறியலாமென்ப தாயிற்று. இதனுல் அதன தொருசார் பயன் கூறப்பட்டது. (ச)

எஉடு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(இ - ள்.) ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல்லிலக்கண நெறியானே அளவை நூலே அமைச்சர் உட்பட்டுக் கற்க; அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு - வேற்றுவேந்த ரவை யிடை யஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற் பொருட்டு.

அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற் கஃதாறெனப்பட்டது. அளக்குங் கருவியை 'அள' வென்றார், ஆகுபெயரான். அவர் சொல்லே வெல்வதொருசொற் சொல்லலாவது நியாயத்து வாத செற்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கற்றூர்க்கேயாகலின், அவற்றைப் பிழையாமற் கற்க வென்பதாம். இதனுல் அதன் காரணங் கூறப்பட்டது. (டு)

எஉசு. வாளொடென் வன்கண்ணை ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

(இ - ள்.) வன்கண்ணை ரல்லார்க்கு வாளொடு என் - வன்கண்மை யுடைய ரல்லாதார்க்கு வாளோடென்ன வியைபுண்டு? நுண் ணவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியார தவையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியைபுண்டு?

இருந்தாரது நுண்மை அவைமே லேற்றப்பட்டது. நூற் குரியரல்லரென்பதாம். (சு)

எஉஎ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளெவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

(இ - ள்.) பகையகத்துப் பேடிகை ஒள்வாள் - எறியப்படும் பகை நடுவண் அதனை யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளோ யொக்கும்; அவை யகத்து அஞ்சுமவன் கற்றநூல் - சொல்லப்படும் அவை நடு வண் அதனை யஞ்சுமவன் கற்ற நூல்.

*'பேடி' பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பு முடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்முயிருந்தேயாயினும் பிடித்தவள்

* சிவகசிந்தாமணி, காந்தருவதத்தையா ரிலம்பகம் - கூ0.

குற்றத்தால் வாள் சிறப்பின்றுயினுற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றுயிருந்ததே யாயினுங் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றுயிற்று. (எ)

எஉஅ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(இ - ள்.) நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார் - நல்லா ரிருந்த வவைக்கண் நல்ல சொற்பொருள்களைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார் ; பல்லவை கற்றும் பயம் இலரே - பல நூல்களைக் கற்றுராயினும் உலகிற்குப் பயன்படுதலிலர்.

அறிவார்முற் சொல்லாமையிற் கல்வியினுண்மை யறிவாரில்லை யென்பதாம். இனிப் 'பயமில' ரென்பதற்குக் கல்விப்பயனுடைய ரல்லரென் றுரைப்பாரு முளர். (அ)

எஉக. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(இ - ள்.) கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் - நூல் களைக் கற்றுவைத்தும், அவற்றுற் பயனறிந்துவைத்தும் நல்லா ரிருந்த அவையினை யஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை ; கல்லாதவரின் கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல் லுவர்.

அக் கல்வியறிவுகளாற் பயன் றுமுமெய்தாது பிறரையெய்து விப்பதுஞ் செய்யாது, கல்வித்துன்பமே யெய்திநிற்றலின் 'கல்லா தவரிற் கடை' யென உலகம் பழிக்குமென்பதாம். (கூ)

எஉ.O. உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(இ - ள்.) களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் - அவைக் களத்தை யஞ்சித் தாங் கற்றவற்றை அதற்கேற்கச் சொல்லமாட் டாதார் ; உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் - உயிர் வாழ்கின்று ராயினும், உலகத்தாரா லெண்ணப்படாமையின் இறந்தாரோ டொப்பர்.

ஈண்டுக் 'கள' னென்றது ஆண்டிருந்தாரை. இவை யைந்து பாட்டானும் அவையஞ்சுவார திழிபு கூறப்பட்டது. (கO)

அதி. (சுசு—எஉ) அமைச்சியல் முற்றும்.

அதி. எச—நாடு

[இனி, அவ்வரசனுலும் அமைச்சனுலுங் கொண்டுய்க்கப்படுவதாய், ஏனை யரண்முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற் முய நாடு ஓதிகாரத்தாற் கூறுகின்றுர்.]

எஉக. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(இ - ள்.) தள்ளா விளையுளும் - குன்றுத விளையுளைச் செய் வோரும்; தக்காரும் - அறிவோரும்; தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வமுடையோரும்; சேர்வது நாடு - ஒருங்கு வாழ் வதே நாடாவது.

மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற் குழிலோ கும் இயையாமையின், 'விளையு' ளென்பது உழவர்மே னின்றது. குன்றுமை : எல்லா வுணவுகளும் நிறைய வுளவாதல். இதனுன் வாழ் வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் : துறந்தோர், அந்தணர் முதலாயினுர். "நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்"* என்றுர் பிறரும். இதனுல் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை : வழங்கத் தொலையாமை. செல்வர் கலத்தினுங் காலினும் அரும்பொருடரும் வணிகர். இதனுல் அரச னுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது. (க)

எஉஉ. பெரும்பொருளாற் பேட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(இ - ள்.) பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருளுடைமையாற் பிற தேயத்தாரானும் விரும்பத்தக்கதாய்; அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு - கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்க பெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மையென் றிவற்றுன் வருவது. "மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில் கிளி யக்கணர சண்மையோ டாறு," இவற்றை வடநூலார் ஈதிக ளென்ப. இவற்றுண் முன்னையவற்ற தின்மை அரசனறத்தானும், பின்னையதின்மை அவன் மறத்தானும் வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று. (உ)

*சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் - உஅ.

எஉக. பொறையொருங்கு மேல்வருங்காற் குங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(இ - ள்.) பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி - பிற நாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி; இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன்மேற் றன்னரசனுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம் பட்டுக் கொடுப்பதே நாடாவது.

பாரங்கள் மக்கட்டொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். 'தாங்'குதல் அவை தத்தந்தேயத்துப் பகை வந்திறுத்த தாக, அரசு கோல் கோடியதாக, உணவின்மையாலுகைத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப்போல இனிதிருப்பச் செய்தல். அச் செயலால் இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பதென்பார் 'இறையொருங்கு நேர்வ' தென்றார். (கூ)

எஉச. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேராதியல்வது நாடு.

(இ - ள்.) உறுபசியும் - மிக்க பசியும்; ஓவாப் பிணியும் - நீங் காத நோயும்; செறுபகையும் சேராது - புறத்து நின்றுவந் தழிவு செய்யும் பகையுமின்றி; இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடா வது.

'உறுபசி' உழவருடைமையானும் ஆற்றவினைதலானும் சேரா தாயிற்று. 'ஓவாப்பிணி' நீர்காற்று மிக்க குளிர் வெப்பங்களும் நுகரப் படுமவற்றது தீமையு மின்மையிற் சேராதாயிற்று. 'செறுபகை' அரசனுற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணுமுடைமையிற் சேராதாயிற்று. (ச)

எஉஞ. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(இ - ள்.) பல் குழுவும் - சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும்; பாழ் செய்யும் உட்பகையும் - உடனுறையா கின்றே பாழாகச் செய்யுமுட்பகையும்; வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவு வந்தால் வேந்தனை யலைக்கும் கொல் வினைக் குறும்பரு மில்லாததே நாடாவது.

சங்கேதம் சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்குளதா மொருமை. 'உட்பகை': ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். 'உட்

பகை', 'குறும்' பென்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனாலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம். (இ)

எஉசு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை.

(இ - ள்.) கேடு அறியா பகைவராற் கெடுதலறியாததாய்; கெட்டவிடத்தும் வளம் குன்று நாடு - அரிதிற் கெட்டதாயினும் அப்பொழுதுந் தன் வளங் குன்றுத நாட்டினை; நாட்டின் தலை என்ப - எல்லா நாட்டினுந் தலையென்று சொல்லுவர் நூலோர்.

அறியாத குன்றுத வென்னும் பெயரெச்சங்களினிறுதி நிலைகள் விகாரத்தாற் றொக்கன. 'கேடறியாமை' அரசனுற்றலானுங் கடவுட் பூசை யறங்க ளென்றிவற்றது செயலானும் வரும். 'வளம்' ஆகரங் களிற் படுவனவும் வயலினுந் தண்டலையினும் விளைவனவுமாம். 'குன்று'மை அவை செய்யவேண்டாமல் இயல்பாகவே யுளவாயும் முன்னீட்டப்பட்டுங் குறைவறுதல். இவை யாறு பாட்டானும் நாட்ட திலக்கணங் கூறப்பட்டது. (ச)

எஉ.எ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(இ - ள்.) இருபுனலும் - கீழ்நீர் மேனீரெனப்பட்ட தன்க ணீரும்; வாய்ந்த மலையும் - வாய்ப்புடைத்தாய மலையும்; வருபுன லும் - அதனினின்றும் வருவதாய நீரும்; வல் அரணும் - அழியாத நகரியும்; நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கவயவமாம்.

ஈண்டுப் 'புன' லென்றது துரவு கேணிகளும் ஏரிகளும் ஆறு களுமாகிய ஆதாரங்களை; அவயவமாதற்குரியன அவையே யாகவின், அவற்றுள் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி யொருபுடையதாகலும் தன்வளந் தருதலும் மாரிக்க ணுண்டநீர் கோடைக்க ணுமிழ்தலு முடைமை பற்றி, 'வாய்ந்த மலை' யென்றார். 'அரண்' ஆகுபெயர்: இதனுள் அதனவயவங் கூறப் பட்டது. (எ)

எஉஅ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(இ - ள்.) பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் வைந்து - நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவலென் றிவை யுடைமையுமாகிய இவ்வைந்தினையும்; நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற் கழகென்று சொல்லுவர் நூலோர்.

'பிணியின்மை' நிலநலத்தான் வருவது. 'செல்வம்' மேற் சொல்லியன. 'இன்பம்' விழவும் வேள்வியுஞ் சான்ரோருமுடைமை யானும், நுகர்வனவுடைமையானும், நிலநீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உண்ணிகழ்வது. காவலெனவே அரசன் காவலும், வாழ்வோர் காவலும், அரண்காவலு மடங்கின. பிற தேயங்களி னுள்ளாரும் விழைந்து பின் அவை யுள்ளாமைக் கேதுவாய அத னழகு இதனுற் கூறப்பட்டது. (அ)

எஉக. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(இ - ள்.) நாடா வளத்தன நாடு என்ப - தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பாற் ரூனே யடையுஞ் செல்வத்தையுடை யவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்; நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலாற் றேடி வருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மே னின்றது. "பொருள் செய்வார்க்கு மஃதிடம்"* என்ரூர் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத்தாற் குற்றங் கூறியவாறு. இவ்வாறன்றி 'என்ப' வென்பதனைப் பின்னுங் கூட்டி இருபொருள்பட வுரைப்பின், † அனுவாதமாம். (கூ)

எசo. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ - ள்.) வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனெடு மேவுதலில்லாத நாடு; ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றினும் நிறைந் திருந்ததாயினும் அவற்ரூற் பயனுடைத்தன்று.

'வேந்தமை' வெனவே, குடிகள் அவன்மாட்டன்புடையராத லும் அவன்ரூன் இவர்மாட்டருளுடையனுதலும் அடங்கின. அவை யில்வழி வாழ்வோரின்மையின், அவற்ரூற் பயனின்ரூயிற்று. இவை இரண்டு பாட்டானும் அதன் குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. எடு—அரண்

[இனி, அங்காட்டிற் குறுப்பா யடங்குமாயினும் பகைவராற் ரெலைவு வந்துழி அதுதனக்கும் அரசன்றனக்கும் ஏமமாதற் சிறப்புப்

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் - சுஅ. †மணக்குடவர்.

பற்றிப் பிறிதோரங்கமாக வோதப்பட்ட அரண் இவ்வதி காரத்தாற் கூறுகின்றார்.]

எசக: ஆற்று பவர்க்கு மரண்பொரு எஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

(இ - ள்.) ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்-மூவகையாற்றலு முடையராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும் அரண் சிறந்தது; அஞ்சித் தற் போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் - அவையின்றித் தம்மேல் வருவார்க் கஞ்சித் தன்னையே யடைவார்க்கும் அரண் சிறந்தது.

பிறர்மேற் செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டு மாகலானும், அப் பெருமை தொலைத் திறுதிவந்துழிக் கடனடுவ ணுடைகலத்தார் போன்று எமங்காண் திறுவராகலானும்; ஆற்றுபவர்க்கும் போற்று பவர்க்கும் 'அரண், பொரு' ளாயிற்று. ஆற்றலுடையராயினும் அர ணில்வழி அழியும்பால ராகலின், அவரை முற்கூறினார். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

எசஉ: மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

(இ - ள்.) மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண் - மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெள் ளிடைநிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணாவது.

எஞ்ஞான்றும் வற்றாத நீரென்பார் 'மணிநீ' ரென்றும், நீரு நிழலுமில்லா மருநிலமென்பார் 'மண்'ணென்றும், செறிந்தகாடென் பார் 'அணிநிழற்கா'டென்றுங் கூறினார். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண் பற்றாமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலை யரண், காட்டரணென இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான் கரணுஞ் சூழப்படுவது 'அர'ணென்பதாம். (உ)

எசஙு. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

(இ- ள்.) உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமுந் திண்மையும் அருமையுமென்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை; அரண் என்று உரைக்கும் நூல் - அரணென்று சொல்லுவர் நூலோர்.

'அமைவு', 'தூ'லென்பன ஆகுபெயர். 'உயர்வு' ஏணி யெய்தாதது. 'அகலம்': புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்யலாந் தலையகலமும். 'திண்மை': கல்லிட்டிகைகளாற் செய்தலிற் குத்தப்படாமை. 'அருமை' பொறி களான் அணுகற் கருமை. பொறிகளாவன: "வாவிற் பொறியு மயிற்செறி நிலையுங்—கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்—பரிவுறு வெங்neyum பாகடு குழிசியுங்—காய்பொன் னுலையுங் கல்லிடு கூடை யுந்—தூண்டிலுந் துடக்கு மாண்டலை யடுப்புங்—கவையுங் கழுவும் புதையும் புழையு—மையவித் துலாமுங் கைபெய சூசியுஞ்—சென் றெறி சிரலும் பன்றியும் பிணையு—மெழுவுஞ் சீப்பு முழுவிரற்கணைய முங்—கோலும் குந்தமும் வேலும் சூலமும்"* என்றிவை முதலாயின. (கூ)

எசஅ. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(இ - ள்.) சிறுகாப்பிற் பேர் இடத்தது ஆகி - காக்கவேண்டு மிடஞ் சிறிதாய், அகன்ற விடத்தை யுடைத்தாய்; உறு பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னை வந்து மூற்றிய பகைவரது மன வெழுச்சியைக் கெடுப்பதே அரணுவது.

வாயிலும் வழியு மொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலை யென்றிவற்றுள் ஏற்பனவுடைத்தாதல்பற்றிச் 'சிறுகாப்பி' னென் றும், அகத்தோர் நலிவின்றி யிருத்தல்பற்றிப் 'பேரிடத்ததாகி' யென்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே யழித்து மென்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கமொழிதல்பற்றி 'ஊக்க மழிப்ப' தென்றுங் கூறினர். (சு)

எசஉ. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(இ - ள்.) கொளற்கு அரிதாய் - புறத்தாராற் கோடற்கரி தாய்; கொண்ட கூழ்த்தாகி - உட்கொண்ட பலவகை யுணவிற் றாய்; அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகத்தாரது போர்நிலைக் கெளிதாய நீர்மையையுடையதே அரணுவது.

கோடற்கருமை: இலை கிடங்குகளானும் பொறிகளானும் இடங்கொள்ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவுமடங்கின. 'நிலைக்கெளிதா நீர்'மையாவது

*சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, வரி, உ0ள-உகசு.

அகத்தார் விட்ட வாயுதமுதலிய புறத்தார்மே லெளிதிற் சேறலும், அவர் விட்டன அகத்தார்மேற் செல்லாமையும், பதணப் பரப்பும் முதலாயின. (இ)

எசசு. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(இ - ள்.) எல்லாப்பொருளும் உடைத்தாய் - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்க ளெல்லாவற்றையும் உள்ளே யுடைத்தாய்; இடத்து உதவும் நல்லாள் உடையது அரண் - புறத்தோரால் அழி வெய்து மெல்லேக்கண் அஃதெய்தாவகை யுதவிக் காக்கும் நல்ல வீரரையுமுடையதே அரணுவது.

அரசன்மாட் டன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்களுடைமைபற்றி 'நல்லா' ளென்றார். (சு)

எசஎ. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(இ - ள்.) முற்றியும் - புகலொடு போக் கொழியும்வகை நெருங்கிச் சூழ்ந்தும்; முற்றாது எறிந்தும் - அங்ஙனஞ் சூழாது நெகிழ்ந்த விடனேக்கி ஒருமுகமாகப் பொருதும்; அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக் கீழறுத்துத் திறப்பித் தும்; பற்றற்கு அரியது அரண் - புறத்தோராற் கொள்ளுதற் கரியதே அரணுவது.

இம்மூன் றுபாயத்துள்ளும் முதலாவது 'எல்லாப்பொருளு முடைமை' யானும், ஏனைய 'நல்லாளுடை' மையானும், வாயா வாயின. (எ)

எசஅ. முற்றுற்றி முற்றி யவரையும் பற்றுற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

(இ - ள்.) முற்று ஆற்றி முற்றியவரையும் - தானேப்பெரு மையாற் சூழ்தல்வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும்; பற்றி யார் பற்று ஆற்றி வெல்வது அரண் - தன்னேப்பற்றிய வகத்தோர் தாம் பற்றியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணுவது.

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணே யாற்றியென விரியும். 'பற்று' ஆகுபெயர். 'வெல்வ' தென உடையார்தொழில் அரண்மே னின்றது. பெரும்படையானேச் சிறுபடையான் பொறுத்து நிற்கும் துணேயேயன்றி வெல்லுமியல்பின தென்பதாம். இதற்குப் பிறி

துரைப்பாரு மூளர். இவை யேழு பாட்டானும் அதனதிலக்கணங் கூறப்பட்டது. (அ)

எசுக. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

(இ - ள்.) முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர்தொடங்கினவளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று ; மாண்டது அரண் - மற்றும் வேண்டுமாட்சியை யுடையதே அரணாவது.

தொடக்கத்திற் கெட்டார் , பின்னுங் கூடிப்பொருதல் கூடாமையின், 'முனைமுகத்துச் சாய' வென்றார். வினைவேறுபாடுகளாவன, பகைவர் தொடங்கிய போரினை யறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென்றிவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோ ரறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலாயின வுடைமை. (கூ)

எஙo. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.*

(இ - ள்.) அரண் - அரண் ; எனைமாட்சித்து ஆகியக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாமுடைத்தாய விடத்தும் ; வினைமாட்சி இல்லார்கண் இல்லது - வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அவையிலதாம்.

வாளாவிருத்தலும் அளவறியாது செய்தலும் ஏலாதது செய்தலுமெல்லாம் அடங்க வினைமாட்சியில்லா ரென்றும், எற்ற வினையை யளவறிந்துசெய்து காவாக்கால் அம் மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் அவையுடைத் தன்றென்றுங் கூறினார். இவை யிரண்டு பாட்டானுங் காப்பாரையின்றி யமையாதென்பது கூறப்பட்டது.

அதி. எசு—பொருள்செயல்வகை

[இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.]

எஙக. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

---

* 'இல்லை யரண்' என்பது மணக்குடவர்.

(இ - ள்.) பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யவல்ல பொருளையொழிய ; பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவதில்லை.

மதிக்கப்படாதார் அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் தொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல், அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற் சென்று நிற்கப் பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே, பிறிதில்லை யென்பதாம்.

எஞ்ஞ. *இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(இ - ள்.) இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லா நண்மையு முடையராயினும் பொருளில்லாரை யாவரு மிகழ்வர் ; செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் - எல்லாத் தீமையு முடையராயினும் அஃதுடையாரை யாவரு முயரச் செய்வர்.

உயரச்செய்தல் : தாந் தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணுந் தாழ்தற்கண்ணும் பகைவர், நட்டார், நொதுமலென்னும் மூவகையாரு மொத்தலின், யாவரு மென்றார். பின்னுங் கூறியது அதனை வலியுறுத்தற் பொருட்டு. (உ)

எஞ்ஙூ. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(இ - ள்.) பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருளென்று எல்லாராலுஞ் சிறப்பிக்கப்படும் நந்தாவிளக்கு ; எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும் - தன்னைச்செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகையென்னு மிருளைக் கெடுக்கும்.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் 'பொய்யா விளக்க' மென்றும், ஏனை விளக்கோடு இதனிடை வேற்றுமைதோன்ற 'எண்ணிய தேயத்துச் சென்' றென்றுங் கூறினார். ஏகதேசவுருவகம். இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது. (ஙூ)

எஞ்ச. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

*நல்வழி - ஙூ.

(இ - ள்.) திறன் அறிந்து நீதி இன்றி வந்த பொருள் - செய்யுந்திறத்தினை யறிந்து அரசன் கொடுங்கோன்மையிலலுக உளதாய பொருள்; அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அவனுக்கு அறத்தையுங் கொடுக்கும், இன்பத்தையுங் கொடுக்கும்.

செய்யுந்திறம்: தான் பொருள் செய்தற்குரிய நெறி. இலலுக வென்பது இன்றியெனத் திரிந்துநின்றது. செங்கோலனென்று புகழப்படுதலானும் கடவுட்பூசை தானங்களாற் பயனெய்தலானும் 'அறனீனு' மென்றும், நெடுங்கால நின்று துய்க்கப்படுதலான் 'இன்பமுமீனு' மென்றுங் கூறினர். அதனான் அத்திறத்தானீட்டுக வென்பதாம். (சு)

எடுசு. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

(இ - ள்.) அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் - தாங் குடிகண்மாட்டுச் செய்யுமருளோடும் அவர் தம்மாட்டுச் செய்யு மன்போடுங்கூடி வாராத பொருளீட்டத்தை; புல்லார் புரளவிடல் - அரசர் பொருந்தாது கழிய விடுக.

அவற்றோடு கூடிவருதலாவது* ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட் கலத்துணீர்† போலச் செய்தானையுங்கொண்டிறத்தலின், அதனைப் 'புல்லா' ரென் றோதியாது 'புரளவிட' லென்றுங் கூறினர். (இ)

எடுசு. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னென்னுந்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(இ - ள்.) உறு பொருளும் - உடையாரின்மையிற் றானே வந்துற்ற பொருளும்; உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும்; தன் ஒன்னுந் தெறுபொருளும் - தன் பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும்; வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள்கள்.

'உறுபொருள்' வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின் கட் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறுதலுமாம். சுங்கம் கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. 'தெறுபொருள்' தெறுதலான் வரும் பொருளென விரியும். ஆறிலொன்றெழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் அஃதீட்டு நெறி கூறப்பட்டது. (சு)

*சஉ - ஆம் குறள் உரை, †குறள் - சுசூ0.

எஞ்ஏ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(இ - ள்.) அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பிலு லீனப்பட்ட அருளென்னுங் குழவி; பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருளென்று உயர்த்துச் சொல்லப்படுஞ் செல்வத்தையுடைய செவிலியான் வளரும்.

தொடர்பு பற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லுமன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை 'அன்பீன் குழவி' யென்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை களையவல்லார்க் காதலிற் பொருளை அதற்குச் 'செவிலி' யென்றும், அஃது உலகிற்செவிலியர் போலாது, தானே யெல்லாப் பொருளுமுதவி வளர்த்தலிற் 'செல்வச்செவிலி' யென்றுங் கூறினர். (ஏ)

எஞ்அ. குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

(இ - ள்.) தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை யெடுத்துக் கொண்டான் அதனைச் செய்தல்; குன்று ஏறி யானைப்போர் கண் டற்று - ஒருவன் மலைமே லேறிநின்று யானைப்போரைக் கண்டா லொக்கும்.

'ஒன்'றென்பது வினையாதல் 'செய்வா' னென்றதனாற் பெற் றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானை யும் யானையும் பொருபோரைத் தானினிதிருந்து காணுமது போலக், கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமு மின்றி வல்லாரையேவித் தானினிதிருந்து முடிக்கு மென்பதாம். (அ)

எஞ்கூ. *செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

(இ - ள்.) பொருளைச் செய்க - தமக்கொன் றுண்டாகக் கருதுவார் பொருளை யுண்டாக்குக; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு - தம் பகைவர் தருக்கினை யறுக்கும் படைக்கலம் அதுவாம்; அதனிற் கூரியது இல் - அதற் கதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை.

*சிவகசிந்தாமணி காந்தருவதத்தையா ரிலம்பகம் - டு.

அதுவாம், அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்புமுடையராவர்; ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமே யடங்குவ ரென்பார் 'செறுநர் செருக்கறுக்கு மெஃ' கென்றும், ஏனையெஃகுகள் அதுபோல அருவப் பொருளே யறுக்கமாட்டாமையின் 'அதனிற் கூரியதில்' லென்றுங் கூறினர். (கூ)

எசுo. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கென்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(இ - ள்.) ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - தெறியான் வரும் பொருளே இறப்ப மிகப் படைத்தார்க்கு; ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள் - மற்றை யறனு மின்பமும் ஒருங்கே யெளிய பொருள்களாம்.

'காழ்'த்தல்—முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் 'ஒண்பொரு' ளென்றும், ஏனையிரண்டும் அதன் விளைவாகலிற் றமே யொருகாலத்திலே யுளவாமென்பார் 'எண்பொரு' ளென்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது. (கo)

அதி. எஎ—படைமாட்சி

[இனி, அப்பொருளினுளவதாய் வெல்வதாய படை இரண்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.]

எசுக. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(இ - ள்.) உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படையானை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்க ணூறுபடுதற்கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை; வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்க ளெல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வம்.

ஈண்டுப் 'படை' யென்றது அந்நான்கன் றொகுதியை. ஊறஞ்சியவழி வேறல்கூடாமையின் 'ஊறஞ்சா' வென்றும், ஒழிந்தவங்கங்

கட்கும் அரசன்றனக்குங் காவலாகலின் 'வெறுக்கையு ளெல்லாந் தலை' யென்றுங் கூறினர். (க)

எசுஉ. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

(இ - ள்.) தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன் கண் - தான் சிறியதாய வழியும் அரசற்குப் போரின்க ணுலைவுவந் தால் தன்மேலுறுவதற் கஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை ; தொல்படைக் கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கல்லது உளதாகாது.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப் படை, துணைப் படை, பகைப் படையென்னும் அறுவகைப் படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப் படையாகலான், அதனை அரசன் "வெல்பொறியு நாடும் விழுப் பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறு மாவுங் கொடுத் தளிக்க"* என்பது குறிப்பெச்சம். இப்படையை வடநூலார் மௌல மென்ப. (உ)

எசுஊ. ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(இ - ள்.) எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலி யாய பகை திரண்டு கடல்போல வொலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும்! நாகம் உயிர்ப்பக் கெடும் - அந்நாக முயிர்த்த துணை யானே அது தானே கெடும்.

உவமைச்சொற் றொக்குநின்றது. 'இத்தொழிலுவமத்தாற் றிரட்சிபெற்றும். வீரரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான், அவன் கிளர்ந்த துணையானே அவர்தாங் கெடுவரென் பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னு மலங் காரம், வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனே யாடல் நன்றென்ப தாம். இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை எனை யங்கங்களுட் சிறந்ததென்பதூஉம், அதுதன்னுள்ளும் மூலப் படை சிறந்ததென்பதூஉம், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தா னென்பதூஉங் கூறப்பட்டன. (ஊ)

எசுச. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

*புறப்பொருள் வெண்பாமாலை, தும்பை - உ

(இ - ள்.) அழிவு இன்று - போரின்கட் கெடுதலின்றி; அறை போகாதாகி - பகைவராற் கீழறுக்கப்படாததாய்; வழிவந்த வன்கண ணதுவே படை - தொன்றுதொட்டு வந்த தறுகண்மையையுடையதே அரசனுக்குப் படையாவது.

'அழிவின்மை' யான் மறமானங்க ளுடைமையும், 'அறை போகா' மையான் அரசன்மாட் டன்புடைமையும் பெறப்பட்டன. 'வழிவந்தவன்கண்'மை, "கன்னின்று னெந்தை கணவன் களப் பட்டான், முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர் - பின் னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, யெய் போற் கிடந்தானென் னேறு."* என்பதனு னறிக. குற்றியலுக ரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்ற பாட்டுள்ளுமொக்கும். (சு)

எசுஙி. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(இ - ள்.) கூற்று உடன்று மேல்வரினும் - கூற்றுவன்றானே வெகுண்டு மேல்வந்தாலும்; கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை - நெஞ்சொத்து எதிர்நின்று தாங்கு மாற்றலையுடையதே படையாவது.

மருந்தில் கூற்றுகலின்† உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மே லன்பு. 'ஆற்றல்'—மன வலி. (ஞ)

எசுசு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(இ - ள்.) மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே - தறுகண்மையும் மானமும் முன் வீராராயினர் சென்ற நன் னெறிக்கட் சேறலும் அரசனுற் றேறப்படுதலுமென இந்நான்கு குணமுமே; படைக்கு ஏமம் - படைக்கு அரணாவது.

இவற்றுன் முறையே பகைவரைக் கடிதிற் கொன்று நிற்றலும், அரசனுக்குத் தாழ்வு வாராமற் காத்தலும், "அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சா"‡மை முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச் செய்கையார்க்குப் பகைவர் நணுகா ராகலின், வேறரண் வேண்டாவென்பதாம். (சு)

*புறப்பொருள் வெண்பாமாலை, வாகை - உஉ. †புறநானூறு - ங.
‡புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சி - உ0.

எசுஎ. தார்தாங்கிச் செல்வது தானே தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

(இ - ள்.) தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - மாற்றரசால் வருக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகுப்பறிந்து வகுத்துக்கொண்டு; தார் தாங்கிச் செல்வது தானே - அவர் தாசியைத் தன்மேல் வாராமற் றடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை யுறுப்பிற்றாய், வகையா னுன்காய், விரியான் மூப்பதாம். உறுப்பேழாவன உரமுதற் கோடியீறாயின. வகைநான்காவன தண்டம், மண்டலம், அசங்கதம், போக மெனவிவை. விரி மூப்பதாவன தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி யாறும், போகவிரி யைந்து மெனவிவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட் கண்டு கொள்க. இவை நான்கு பாட்டானும் படையின திலக்கணங் கூறப் பட்டது. (எ)

எகூஅ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானே
படைத்தகையாற் பாடு பெறும்.

(இ - ள்.) தானே - தானே; அடற்றகையும் ஆற்றலும் இல் எனினும் - பகைமேற் றான்சென்றடுங் தறுகண்மையும் அது தன் மேல் வந்தாற் பொறுக்குமாற்றலும் இல்லையாயினும்; படைத் தகையால் பாடு பெறும் - தன் றோற்றப் பொலிவானே பெருமை யெய்தும்.

'இல்லெனினு' மெனவே, அவற்ற றின்றியமையாமை பெறப் பட்டது. 'படைத்தகை' யென்றது ஒருபெயர் மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரை களுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், காகள முதலியவற் றுடனும் அணிந்து தோன்று மழகு. 'பாடு': கண்டவளவிலே பகைவரஞ்சும் பெருமை. (அ)

எசுக. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(இ - ள்.) சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லா யின் - தான்றேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்

பும் நல்குரவும் தனக்கில்லையாயின்; படை வெல்லும் - படை பகையை வெல்லும்.

விட்டுப்போதலும், நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. 'செல்லாத் துனி'யாவது மக்களிரை வெளவல், இளிவரவாயின செய்தன் முதலியவற்றான் வருவது. இவையுள்வழி அவன்மாட் டன்பின்றி உற்றுப்பொராமையின், 'இல்லாயின் வெல்லு' மென்றார். (கூ)

எஎ0. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

(இ - ள்.) நிலைமக்கள் சால உடைத்து எனினும் - போரின்க ணிலையுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும்; தலைமக்கள் இல் வழித் தானை இல் - தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் 'காண்போ ரில்'லெனப் பொராது தானும் போமென்பார், தலைமக்களில்வழி யில்' லென்றார். இவை மூன்று பாட்டானும் முறையே படைத் தகையின்மையானும், அரசன் கொடைத் தாழ்வுகளானும், தலைவ ரின்மையானும் தாழ்வு கூறப்பட்டது. (கo)

அதி. எஅ—படைச்செருக்கு

[அஃதாவது, அப் படையது மறமிகுதி. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

எஎக. என்னை முன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

(இ - ள்.) தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர் - பகைவீர்! இன்றினுங் கென் றலைவனெதிர் போரேற்று நின்று அவன் வேல்வாய் வீழ்ந்து பின் கல்லின்கண்ணே நின்ற வீரர் பலர்; என் ஐ முன் நில்லன்மின் - நீவிர் அதன்கணின்றி நுமதுடற்க ணிற்றல்வேண்டின், என் றலைவனெதிர் போரேற்று நிற்றலை யொழிமின்.

'என்னை' யெனத் தன்னைத் தொடர்புபடுத்துக் கூறின மையின், அவன் வேல்வாய் வீழ்தல்பெற்றும். கல்: நடுகல்*. "நம்பன்

*தொல். பொருள், புறம்-நி.

சிலேவாய் நடக்குங்கணே மிச்சி லல்லா, லம்பொன் முடிப்பூ ணரசும் மிலே" * எனப் பதுமுகன் கூறினுற்போல ஒருவீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு நெடுமொழி வஞ்சி.† (க)

எஎஉ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(இ - ள்.) கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கணோடும் முயலைப் பிழையாமலெய்த அம்பை யேந்தலினும்; யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது - வெள்ளிடை நின்ற யானையை யெறிந்து பிழைத்த வேலையேந்துதல் நன்று.

'கானமுய' லென்றதனால் வெள்ளிடை நின்ற வென்பதும், 'பிழைத்த' வென்றதனாற் பிழையாமலென்பதும், முயற்குத் தக 'எய்த' வென்றதனால் யானைக்குத் தக எறிதலும் வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன் அது புறங் கொடுத்ததாக ஈணிப் பின் னவன்றன்மேற் செல்லலுற்றனது கூற்று. (உ)

எஎக. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
ஓராண்மை மற்றது னெஃகு.

(இ - ள்.) தறுகண் பேராண்மை என்ப - பகைவர்மேற் கண் ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்க வாண்டன்மையென்று சொல்லுவர்; ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப)- அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது தீர்த்துக்கோடற் பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை யென்று சொல்லுவர்.

'என்ப' வென்பது பின்னுமியைந்தது. 'ஊராண்மை': உபகாரி யாந்தன்மை; அஃதாவது, இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் னூனை முழுதும்படத் தமியனு யகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது "இன்றுபோய் நாளை நின் னூனை யோடு வா" வென விட்டாற்போல்வது. இவை யிரண்டு பாட்டுந் தழிஞ்சி‡. (ங)

எஎச. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம்-ஙகள.
† புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சி-கஉ.
‡ புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சி - ங.

(இ - ள்.) கைவேல் களிற்றெறி போக்கி வருபவன் - தன் கைப் படையாய வேலைத் தன்மேல் வந்த களிற்றெறி போக்கி, வருகின்ற களிற்றுக்கு வேலடித் திரிவான்; மெய் வேல் பறியா நகும் - தன் மார்பின்க ணின்ற வேலைக் கண்டு பறித்து மகிழும்.

களிற்றெறி போக்கல்: களிற்றினதுயிரைக் கொடுபோமாறு விடுதல். மகிழ்ச்சி தேடியதெய்தலான். இதனுட் களிற்றையல்ல தெறியானென்பதூஉம், சினமிகுதியான் வேலிடை போந்த தறிந்திலனென்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பின னென்பதூஉம் பெறப்பட்டன. நூழிலாட்டு*. (ச)

எஅ. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னேட்டன்றே வன்க ணவர்க்கு.

(இ - ள்.) விழித்த கண் - பகைவரை வெகுண்டு நோக்கிய கண்; வேல்கொண்டெறிய அழித்து இமைப்பின் - அவர் வேலைக் கொண்டெறிய அஃதாற்றாது அந்நோக்கை யழித்து இமைக்குமாயின்; வன்கணவர்க்கு ஓட்டு அன்றே - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம்.

அவ் வெகுளி நோக்க மீட்டலும் போரின்கண் மீட்சியெனக் கருதி அதுவுஞ் செய்யா ரென்பதாம். (ரு)

எஆ. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.

(இ - ள்.) தன் நாளை எடுத்து - தனக்குச் சென்ற நாள்களை யெடுத்தெண்ணி; விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் - அவற்றுள் விழுப்புண் படாத நாள்களை யெல்லாம் பயன் படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன்.

'விழுப்புண்': முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர் பெற்றிருக்கவும் அதுபெறுத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஊறஞ்சாமை கூறப்பட்டது. (சு)

எஇ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(இ - ள்.) சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் - துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை

* புறப்பொருள் வெண்பாமாலை, தும்பை - கசு.

வேண்டி உயிர்வாழ்தலே வேண்டாத வீரர்; கழல் யாப்புக் காரிகை நீர்த்து - கழல் கட்டுதல் அலங்கார நீர்மையை யுடைத்து.

வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றும். செயப் படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல்: அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதி னெய்துவராகலின், ஆபரணமாவது அதுவே யென் பதாம். (எ)

எஎஅ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(இ - ள்.) உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்பெறிற் றம் மூயிர்ப்பொருட் டஞ்சாது அதன்மேற் செல்லும் வீரர்; இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம்மிறைவன் அதுவேண்டாமென்று முனியினும் அவ்வீரமிருதி குன்றார்.

போர்பெற்றறியாமையின், அது பெற்றால் அரசன் றடுப்பினும் நில்லாரென்பதாம். பிறரும், "போரெனிற் புகலும் பூணகழன் மறவர்"* என்றும், "புட்பகைக், சேவா ஞகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப"† என்றுங் கூறினர். (அ)

எஎக. இலழத்த தீகவாமைச் சாவாரை யாரே
பிலழத்த தொறுக்கிற் பவர்.

(இ - ள்.) இழைத்தது இகவாமைச் சாவாரை - தாங்கூறின வஞ்சினந் தப்பாமற்பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை; பிழைத் தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப்பியவாறு சொல்லி யெள்ளுதற் குரியார் யாவர்!

'இழைத்தல்': இன்னது செய்யேனாயின் இன்னதாகவெனத் தான் வகுத்தல். சொல்லியென்பது அவாய்நிலையான் வந்தது. வஞ் சினை முடிப்பான்புக்கு முன்னே சாவினுந் தொலைவன்மையின், அது முடித்தா ராவரெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு. (கூ)

எஎO. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ - ள்.) புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் - தமக்குச் செய்த நன்றிகளே நினைந்து ஆண்டவரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின்; சாக்காடு இரந்து கோட்டக்கது உடைத்து - அச் சாக்காடு இரந்தாயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து.

* புறநானூறு, ஙக. † புறநானூறு, கூஅ.

மல்குதலாகிய இடத்துநிகழ் பொருளின்றெழில் இடத்தின் மேனின்றது. இனையழ இல்லிடை நோயால் விளிவார் பழவினைப் பயனே யெய்தலின், அடுத்த வினையாற் றுறக்கமெய்துஞ் சாதலே 'இரந்துகோட் டக்கதுடைத்' தென்றார். இவை நான்கு பாட்டானும் உயிரோம்பாமை கூறப்பட்டது. (கo)

அதி. எகூ—நட்பு

[இனி, அப்படைபோல அரசனுக்கு வினையிடத் துதவுவதாய நட்பினை ஐந்திகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறை முகத்தானுங் கூறுவான் றொடங்கி, விதிமுக வதிகார மைந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.]

எஅக . **செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்**
வினைக்கரிய யாவுள காப்பு.

(இ - ள்.) நட்பின் செயற்கரிய யா உள - நட்புப்போலச் செய்து கோடற்கரிய பொருள்கள் யாவையுள ? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவையுள ?

நட்புச்செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றுற் செய்யுமுபாயமும் செய்தாற் றிரிபின்றி நிற்றலு முதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கரியன வில்லையென்றும், செய்தாற் பகைவரஞ்சி வினை தொடங்காராதலின் அதுபோல வினைவாராமைக்கு அரிய காவலில்லை யென்றுங் கூறினார். நட்புத்தான் இயற்கை செயற்கை யென இரு வகைப்படும். அவற்றுள், இயற்கை பிறப்புமுறையானெய்தூஉம், தேய முறையானெய்தூஉமென விருவகைப்படும். அவற்றுண் முன்னையது சுற்றமாகலின், அது சுற்றந்தழாலி* னடங்கிற்று ; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாதலின், அது துணைவலியென வலியறிதலு† ளடங்கிற்று. இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன் செய்த வுதவி பற்றி வருஞ் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனுற் கூறப்பட்டது. (க)

எஅஉ. ‡நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

---

* குறள், அதி - ருஉ. † குறள், அதி - சஅ. ‡ நாலடியார் - கஉடு.

(இ - ள்.) நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந் தன்மைபோல நாடோறு நிறையுந் தன்மையவாம்; பேதையார் நட்பு மதிப் பின் நீர - மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன்மைபோல நாடோறுங் குறையுந் தன்மையவாம்.

'நீரவ'ரென்றார், இனிமைபற்றி. 'கேண்மை', 'நட்' பென்பன ஒரு பொருட்கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையாரும் பேதையாருஞ் செய்தன முன்பெருகிப் பின் சுருங்கற்குங் காரணம் தம்முண் முன்னறியாமையும் பின்னறிதலுமாம். (உ)

எஅஉ. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

(இ - ள்.) பண்பு உடையாளர் தொடர்பு பயிறொறும் - நற்குணமுடைய மக்கள் தம்முட்செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கின்பஞ் செய்தல்; நூல் நவிறொறும் நயம்போலும் - நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றூர்க் கின்பஞ்செய்தலே யொக்கும்.

நயத்தினைச் செய்தலான், 'நய'மெனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக் கொருகால் மிகுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் அச் சிறப்பிற் கேது கூறப்பட்டது. (ஙு)

எஅசு. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(இ - ள்.) நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனை டொருவன் நட்புச்செய்தல் தம்மு ணகுதற்கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு - அவர்க்கு வேண்டாத செய்கை யுளதாயவழி மூற்பட்டுக் கழறுதற் பொருட்டு.

பழியும் பாவமுந் தருஞ் செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப்படுவதன்மையின் அதனை 'மிகுதி' யென்றும், அது செய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்'றென்றும், இன் சொற்கு மீளாமையின் 'இடித்தற்பொருட்' டென்றுங் கூறினர். இதனான் நட்பின்பயன் கூறப்பட்டது. (ச

எஅடு. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(இ - ள்.) புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனுடொரு வன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண் டுவதில்லை; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் - இருவர்க்கு மொத்த வுணர்ச்சிதானே நட்பாமுரிமையைக் கொடுக்கும்.

'புணர்ச்சி': ஒரு தேயத்தாராதல்; "இன்றே போல்க நும் புணர்ச்சி"* என்றதும் அதனை. 'பழகுதல்' பலகாற் கண்டுஞ் சொல் லாடியும் மருவுதல். இவ்விரண்டு மின்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உட னுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம்.† நட்பிற் குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்த லென்னுங் காரண மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனுற் கூறப் பட்டது. (கி)

எஅசு. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

(இ - ள்.) முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அக மொழிய, முகமாத்திரமே மலரும் வகை நட்குமது நட்பாகாது; நெஞ் சத்தகம் நக நட்பது நட்பு - அன்பால் அகமுமலர நட்குமதே நட்பா வது.

நெஞ்சின்க ணிகழ்வதனை நெஞ்சென்றார். இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. இதனுல் இரண்டும் ஒருங்கே மலரவேண்டுமென்பது பெற்றும். (சு)

எஅள. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(இ - ள்.) அழிவினவை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத் தருந் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி, ஏனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தி; அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் - தெய்வத்தாற் கேடுவந்துழி அது விலக்கப்படாமையின் அத் துன் பத்தை உடனனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது.

ஆறென வருகின்றமையின், அழிவினைத் தருமவையென் றொழிந்தார். "தெருண்ட வறிவினவர்"‡ என்புழிப்போல இன் சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இனி வையென்று பாட மோதி, அதற்குப் போரழிவினுஞ் செல்வவழிவினும் வந்த துன்பங்க

*புறநானூறு - ூஅ. †புறநானூறு - உகள. ‡நாலடியார் - ஈ0க.

ளென்றும், 'அழிவின்க' ணென்பதற்கு யாக்கை யழிவின்கணென்றும் உரைப்பாருமுளர். (எ)

எஅஅ. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

(இ - ள்.) உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடைகுலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்று தவி அவ்விளிவரல் களையுமாறுபோல; ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்றுதவி அதனைக் களைவதே நட்பாவது.

அற்றங் காத்தற்கட் கை தன் மனத்தினு முற்படுதலின், அவ் விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்கொத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடையவன்றொழில் நட்பின்மே லேற்றப்பட்டது. (அ)

எஅக. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

(இ - ள்.) நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின்; கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும நிலை - அஃது எஞ்ஞான்றும் திரிபின்றி இயலுமெல்லை யெல்லாம் அறம்பொருள்களிற் றளராமைத் தாங்குந் திண்மை.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம்பொருள்களிற் றளர்ந்துழி அத் தளர்ச்சி நீக்கி அவற்றின்கணிறுத்துதற்குமேல் ஒருசெயலுமின்மையின், அதனை நட்பிற்கு முடிந்தவெல்லை யென்றார். (கூ)

எகூ0. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

(இ - ள்.) இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக் கித்துணையன்பினர் யாமிவர்க் கித்தன்மைய மென்று ஒருவரையொருவர் புனைந்துசொல்லினும்; நட்புப் புல்லென்னும் - நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரென்னும் வேற்றுமையின்றிவைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாமாகலின், நட்புப் 'புல்லென்னு' மென்றார். இவை யைந்து பாட்டானும் நட்பின திலக்கணங் கூறப்பட்டது. (கO)

அதி. அo—நட்பாராய்தல்

[அஃதாவது, மேற்சொல்லிய விலக்கணத்தாரை யாராய்ந்தறிந்தே நட்கவேண்டுதலின், அவரை யாராயுந் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

எகூக. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(இ - ள்.) நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பினை விரும்பி அதன்கண்ணே நிற்பார்க்கு ஒருவனேடு நட்புச் செய்தபின் அவனை விடுதலுண்டாகாது; நாடாது நட்டலிற் கேடு இல்லை - ஆகலான், ஆராயாது நட்புச்செய்தல் போலக் கேடுதருவது பிறிதில்லை.

ஆராய்தல்; குணஞ்செய்கைகளது நன்மையை யாராய்தல். 'கேடு' ஆகுபெயர். நட்கிற் முமவரென்னும் வேற்றுமையின்மையின் 'வீடில்லை' யென்றும், அவ் வேற்றுமையின்மையான் அவன்கட் பழி பாவங்கள் தமவாமாகலின் இருமையுங் கெடுவரென்பது நோக்கி 'நாடாது நட்டலிற் கேடில்லை' யென்றுங் கூறினர். (க)

எகூஉ. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ - ள்.) ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமுஞ் செய்கையும் நல்லனென்பது பலகாலும் பலவாற்றானு மாராய்ந்து ஒருவனேடு நட்புக்கொள்ளாதவன்; கடைமுறை தான் சாம் துயரம் தரும் - முடிவிற்றான் சாதற்கேதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளக்கவேண்டாமற் றானே விளக்கும்.

கடைமுறைக்கண்ணென இறுதிக்கட் டொக்க ஏழாவது விரிக்க. குணமுஞ் செயலுந் தீயானெடு கொள்ளின் அவற்கு வரும் பகைமை யெல்லாந் தன்மேலவாய்ப் பின் அவற்றா னிறந்துவிடுமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் ஆராயாவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (உ)

எகூங. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றி
னினனு மறிந்தியாக்க நட்பு.

(இ - ள்.) குணனும் குடிமையும் குற்றமும் குன்றி னினனும் அறிந்து - ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினை

யும் குறைவற்ற சுற்றத்தினையு மாராய்ந்தறிந்து; நட்பு யாக்க - அவ ரோடு நட்புச் செய்க.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவ தாயின் அவர் நட்பு விடற்பாற் றன்றென்பார் 'குற்றமு' மென்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலிற் 'குன்றுவினனு' மென்றும், விடப்படிற் றங்குறையா மென்பார் 'அறிந்தியாக்க' வென்றுங் கூறினர். (நு)

எகூ. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(இ - ள்.) குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானை - உயர்ந்த குடியின்கட் பிறந்து தன்மாட்டு உலகர்சொல்லும் பழிக்கஞ்சுவானை; கொடுத்தும் நட்புக்கொளல் வேண்டும் - சில கொடுத்தாயினும் நட் புக்கோடல் சிறந்தது.

குடிப்பிறப்பாற் றான் பிழைசெய்யாமையும், பழிக்கஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை யிரண்டு மூடையானைப் பெறுதலருமையின், அவனட்பை விலைகொடுத்துங் கொள்க வென்ப தாம். (சு)

எகூஙி. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(இ - ள்.) அல்லது அழச் சொல்லி - தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதிற் சோகம் பிறக்கும்வகை சொல்லி விலக்கியும்; இடித்து - செய்தக்காற் பின்னுஞ் செய்யாவகை நெருக்கியும்; வழக்கு அறியவல்லார் - அவ்வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை; ஆய்ந்து நட்புக் கொளல் - ஆராய்ந்து நட்புக்கொள்க.

'அழச்சொல்லி' 'இடித்'தனவந்த பரிகார வினைகளான் அவற்றிற் கேற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. 'வழக்கு': உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட் டாரும் அறியும்வகை அறிவித்த லரிதாகலின், 'அறியவல்லா' ரென்றார். இரண்டாவது இறுதிக்கட் டொக்கது. (ஙி)

எகூசு. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(இ - ள்.) கிளைஞரை நீட்டி அளப்பது ஓர் கோல் - ஒருவனுக் குக் கேடென்பது தன்னட்டாராகிய புலங்களை யெஞ்சாம லளப்ப

தோர் கோல்; கேட்டினும் ஒருபுதி உண்டு - ஆகலின் அதன்கண் ணும் அவனுற் பெறப்படுவதோர் நல்லறிவுண்டு.

தத்த நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமற் போந்தார் பின் கேடுவந்துழிச் செயல்வேறு படுதலின் அக் கேட்டால் அவை வரையறுக்கப்படுமென்பது பற்றிக் கேட்டினைக் 'கோ' லாக்கியும், அதனுல் அவரை யளந்தறிந் தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை 'உறுதி' யென்றுங் கூறினர். 'கிளைஞர்' ஆகுபெயர். இஃதேகதேசவுருவகம். இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவரென்பதூஉங் கூறப்பட்டன. (சு)

எகூஎ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொழிஇ விடல்.

(இ - ள்.) ஒருவர்க்கு ஊதியமென்பது - ஒருவனுக்குப் பேறென்று சொல்லப்படுவது; பேதையார் கேண்மை ஒழிஇ விடல் - அறிவிலாரோடு நட்புக்கொண்டானுயின் அதனை யொழிந்து அவரினீங்குதல்.

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே"* மாறுபோலத் தீங்கு வருதலின் 'விட' லென் றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமையின்பத்திற் குரிமை யெய்தலு முடைமையின் அதனை 'ஊதிய' மென்றுங்கூறினர்.

எகூஅ. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணுற்றறுப்பார் நட்பு.

(இ - ள்.) உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம்மூக்கஞ் சுருங்கு தற்குக் காரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அல்லற் கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க - அதுபோலத் தமக் கொருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக.

'உள்ளஞ் சிறுகுவ' வாவன தம்மின் வலியாரோடு தொடங்கி யனவும் பயனில்லனவுமாம். 'ஆற்' றென்பது முதனிலைத் தொழிற் பெயர். முன்னெல்லாம் வலியராவார்போன்று ஒழிதலின், வலி யறுப்ப ரென்றூர். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடுமென்பதாம். (அ)

எகூக. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

* நாலடியார் - கூஅ0. நீதிவெண்பா - கூக.

(இ - ள்.) கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனோடு செய்த நட்பு; அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்றடுங்காலத்து ஒருவனினைப்பினும், அந் நினைத்த வுள்ளத்தைச் சுடும்.

நினைத்த துணையானே இயையில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதாமெனக் கைவீடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி, அவன்றனை ஆக்கிய கேடு தன்னையடுங்காலை யுள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென் றுரைப்பாருமுளர்.* இவை மூன்று பாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது. (கூ)

அ00. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

(இ - ள்.) மாசு அற்றார் கேண்மை மருவுக - உலகோடொத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - உலகோடொத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டியதொன்றனைக் கொடுத்தாயினும் விடுக.

உலகோடொத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் 'மருவுக' வென்றும், அதனோடு மாறுபடினர் நட்புத் துன்பமே பயத்தலின் அதனொழிவை விலைகொடுத்துங் கொள்கவென்றுங் கூறினர். இதனால் அவ்விருமையுந் தொகுத்துக் கூறப்பட்டன. (கo)

அதி. அக—பழைமை

[அஃதாவது, நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர். காரியத்திற்காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.]

அ0க. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

---

* மணக்குடவர்.

(இ - ள்.) பழைமை எனப்படுவது யாதெனின் - பழைமை யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்; கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு - அது பழைமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றிற்குடம்படும் நட்பு.

'கிழமை' ஆகுபெயர்; கெழுதகைமையென வருவனவுமது. உரிமையாற் செய்வனவாவன கருமமாயின செய்யுங்காற் கேளாது செய்தல், கெடும்வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவச்சங்களின்மை யென்றிவை முதலாயின. சிதைத்தல்: விலக்கல். இதனுற் பழைமையாவது காலஞ்சென்றதன்று, இப்பெற்றித்தாய நட்பென்பது கூறப்பட்டது. (க)

அ0உ. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(இ - ள்.) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை - நட்பிற் கவயவமாவன நட்டார் உரிமையாற் செய்வன; அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் - அதனுல் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந் தார்க்கு முறைமை.

வேறன்மைதோன்ற 'உறுப்' பென்றார். 'உறுப்'பென்பது ஈண் டிலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். அவயவமாதலறிந்தே இனியவராவரென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார். (உ)

அ0ஊ. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

(இ - ள்.) கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை - தாமுடம்படாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற் குத் தாஞ்செய்தாற்போல உடம்படாராயின்; பழகிய நட்பு எவன் செய்யும் - அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்?

செய்தாற்போல வுடம்படுதலாவது தாமும் அவரிட்டத் துரிமையா லுடம்படுதல். இவை யிரண்டு பாட்டானும் பழைமை யான்வரு முரிமையது சிறப்புக் கூறப்பட்டது. (ஊ)

அ0எ. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(இ - ள்.) நட்டார் கெழுதகையால் கேளாது செயின் - தன் கருமத்தை நட்டார் உரிமையாற் கேளாது செய்தாராயின்; விழை

தகையான் வேண்டியிருப்பர் - அச்செயலது விழையப்படுந்தன்மை பற்றி அதனை விரும்புவர் அறிவுடையார்.

ஒருவர்க்குத் தங்கருமந் தாமறியாமன் முடிந்திருத்தலினூஉங்கு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க் கல்லதின்மையின், அவர் மேல் வைத்துக் கூறினர். 'வேண்டியிருப்ப' ரென்பது எழுந்திருப்ப ரென்பதுபோல ஒருசொன் னீர்மைத்து. இதனைற் கேளாது செய்தி அதனை விரும்புகவென்பது கூறப்பட்டது. (ச)

அ0ஙி. பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(இ - ள்.) நோதக்க நட்டார் செயின் - தாம் வெறுக்கத்தக்கன வற்றை நட்டார் செய்தாராயின்; பேதைமை ஒன்றே பெருங் கிழமை என்று உணர்க - அதற்குக் காரணம் ஒன்றிற் பேதைமை யென்றுதல் ஒன்றின்மிக்க வரிமை யென்றுதல் கொள்க.

'ஒன்றே' வென்பது எண்ணிடைச்சொல். 'செயி' னெனவே, தம்மியல்பாற் செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளு மொக்கும். இழவூழான் வரும் 'பேதைமை' யாவர்க்கு முண்மையிற் றமக்கேதங்கொண்டா ரென்றுதல், ஊழ்வகையான் எம்மின் வரற்பா லது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின்வந்த தென்றுதல் கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படா தென்பதாம். கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனைற் கூறப்பட்டது. (ஙி)

அ0சு. எல்லைக்க ணின்றூர் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றூர் தொடர்பு.

(இ - ள்.) எல்லைக்கண் நின்றூர் - நட்புவரம்பிகவாது அதன் கண்ணே நின்றவர்; தொல்லைக்கண் நின்றூர் தொடர்பு தொலைவிடத் தும் துறவார் - தம்மொடு பழைமையிற் றிரியாது நின்றூரது நட்பினை அவராற் றொலைவுவந்தவிடத்தும் விடார்.

பழைமையிற் றிரியாமை: உரிமையொழியாமை. 'தொலைவு': பொருட்கேடும் போர்க்கேடும். (சு)

அ0எ. அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(இ - ள்.) அழிவந்த செய்யினும் அன்பு அரூர் - நட்டார் தமக் கழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட் டன்பொழியார்

அன்பின்வழி வந்த கேண்மையவர் - அன்புடனே பழையதாய் வந்த நட்பினையுடையார்.

'அழி' யென்பது முதனிலைத் தொழிற்பெயர். அழிவு: மேற் சொல்லிய கேடுகள். இவை இரண்டு பாட்டானுங் கேடு செய்தக்கண்ணும் நட்பு விடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (எ)

அ0அ. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

(இ - ள்.) கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலுங் கொள்ளாத உரிமையறியவல்லார்க்கு; நட்டார் இழுக்கம் செயின் நாள் - அவர் பிழை செய்வாராயின், அது பயன்பட்ட நாளாம்.

பிழையாவன சொல்லாது நற்பொருள் வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல் : உட்கோடல். 'கெழுதகைமை வல்லா' ரென்பது ஒரு பெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்து போந்துழியல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழை பொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (அ)

அ0கூ. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

(இ - ள்.) கெடாஅ வழி வந்த கேண்மையார் கேண்மை - உரிமையருது பழையதாய் வந்த நட்பினை யுடையாரது நட்பினை; விடாஅர் உலகு விழையும் - அவர் பிழைநோக்கி விடுதல்செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும்.

'கெடா' தென்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. விடாதாரையெனவே, விடுதற்காரணங் கூறப்பட்டது. நம்மாட்டும் இவரித் தன்மைய ராவரென்று யாவருந் தாமே வந்து நட்பாவரென்பதாம். கெடாரென்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகியென் றுரைப்பாருமுளர்.* (கூ)

அக0. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(இ - ள்.) பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவர் மாட்டுத் தம் பண்பினீங்காதார்; விழையார் விழையப்படுப - பகைவரானும் விரும்பப்படுவர்.

* மணக்குடவர்.

தம் பண்பாவது செய்யாதமுன் போல அன்புடையராதல். மூன்றனுருபுஞ் சிறப்பும்மையும் விகாரத்தாற் றொக்கன. அத் திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டாராவ ரென்பதாம். இவையிரண்டு பாட்டானும் பழைமையறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது. (கo)

அதி. அஉ—தீநட்பு

[இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு, **நட்பாராய்தற்*கட்** சுருங்கச்சொல்லிய **துணையானடங்காமை**யின், அதனை யிருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, மூதற்கட் **தீநட்புக்** கூறுகின்றார். அஃதாவது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின் றீமை ஒற்றுமைபற்றி உடையார்மேற்றாய், அது பின் அவரோடு செய்த நட்பின் மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கூறுமையே விளங்கும்]

அகக. **பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
பெருகலிற் குன்ற லினிது.

(இ - ள்.) பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதன்மிகுதியாற் பருகுவார்போன்றாராயினுந் தீக்குணமுடையார் நட்பு; பெருகலின் குன்றல் இனிது - வளர்தலிற் றேய்தனன்று.

"பருகு வன்ன வருகா நோக்கமொடு"† என்றார் பிறரும். நற்குணமில்லாரெனவே, தீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகுலில் வருங் கேடு குன்றுலில் வாராமையின், 'குன்றலினி' தென்றார். இதனைத் தீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையாற் கூறுப. (க)

அகஉ. **உறினட் டறினெருஉ மொப்பிலார் கேண்மை**
பெறினு மிழப்பினு மென்.

(இ - ள்.) உறின்நட்டு அறின் ஒருஉம் ஒப்பு இலார் கேண்மை - தமக்குப பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை; பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்கமியாது? இழந்தாற் கேடியாது?

---

* அதி - அo. † பொருநராற்றுப்படை, அடி . எஅ.

தமக்குற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலின், அவரை 'ஒப்பிலா' ரென்றார். அவர்மாட்டு நொதுமற் றன்மையே அமையுமென்பதாம். (உ)

அகஉ. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

(இ - ள்.) உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும்; பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக்கொள்ளும் பொதுமகளிரும்; கள்வரும் - பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு நோக்குங் கள்வரும்; நேர் - தம்முளொப்பர்.

'நட்பு' ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்தொழுகலின், கணிகையர் கள்வரென் றிவரோடொப்ப சென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானுந் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது. (உ)

அகச. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா வன்னுர்
தமரிற் றனிமை தலை.

(இ - ள்.) அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னுர் தமரின் - அமர் வாராத முன்னெல்லாந் தாங்குவது போன்று, வந்தழிக் களத்திடை வீழ்த்துப்போங் கல்வியில்லாத புரவிபோல்வாரது தமர்மையில்; தனிமை தலை - தனிமை சிறப்புடைத்து.

'கல்லா'மை; கதியைந்தும் சாரி பதினெட்டும் பொருமுரணுற்றலும்* அறியாமை. துன்பம் வாராத முன்னெல்லாந் துணையாவார் போன்று வந்துழி விட்டு நீங்குவரென்பது உவமையாற் பெற்றும். அவர் தமராலல் வருமிறுதி தனியாலல் வாராமையின், தனிமையைத் 'தலை' யென்றார்; எனவே, அதுவுந் தீதாதல் பெறுதும். (ச)

அகடி. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(இ - ள்.) செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - செய்துவைத்தாலும் அரணுறாத கீழ்மக்களது நீநட்பு; எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்குண்டாதலின் இல்லையாதல் நன்று.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. அரணுறாமை - தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்கு

* புறப்பொருள் வெண்பா மாலை, பெருந்திணை. கஉ,

மேலுரைத்தாங்* குரைக்க. சாராதவென்னும் பெயரெச்சங் 'கேண்மை' யென்னும் பெயர்கொண்டது; 'சிறியவ' ரென்பதனைக் கொள்ளின், செய்தென்பது நின்று வற்றும். இவை யிரண்டு பாட்டானுந் தொலைவிற் றுணையாகாத நட்பின்றீமை கூறப்பட்டது. (கி)

அகசு. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி† யுறும்.

(இ - ள்.) பேதை பெருங்கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச்சேறிந்த நட்பின்; அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று.

கெழீஇய வென்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. பன்மை உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும், 'கோடியுறு' மென்றார். பெருங்கழிநட்பென்று பாடமோ துவாருமுளர். (சு)

அகள. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி† யுறும்.

(இ - ள்.) நகை வகையர் ஆகிய நட்பின் - தாமறிதல்வகையராகாது நகுதல்வகையராதற்கேதுவாகிய நட்பான் வருவனவற்றின்; பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல.

'நட்பு' ஆகுபெயர். அந் நட்பாவது விடமருந் தூர்த்தரும் வேழம்பரும் போன்று பலவகையா னகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவாரோடு உளதாயது. 'பகைவரா' லென்பது அவாய்நிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. 'பத்தடுத்தகோடி' பத்தாகத் தொகுத்த கோடி. அந்நட்பான் வருமின்பங்களின் அப் பகைவரான் வருந்துன்பங்கள் இறப்ப நல்லவென்பதாம். இதற்குப் பிற‡ ரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள வுரைத்தார்.

அகஅ. ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.§

(இ - ள்.) ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான் முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு ¶கொண்ட

* அகசஅங் குறளுரை. † சுஙகஅம் குறளுரை. ‡ மணக்குடவர்.
§ நாலடியார் - எடு. ¶ 'முடியாதாகச் செய்தாரோடு' என்றும் பாடம்.

நட்பினை ; சொல்லாடார் சோரவிடல் - அது கண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக.

முடியாதாக்குதல் : முடியாதாக நடித்தல். 'சோரவிடல்' விடுகின்றவாறு தோன்றுமல் ஒருகாலைக் கொருகா லோயவிடுதல். அறியச் சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக் கருதுவராகலின், 'சொல்லாடா' ரென்றுஞ் 'சோரவிட' லென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதாரென் றிவர்க ணட்பின் றீமை கூறப்பட்டது. (அ)

அகக. கனவினு மின்னது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(இ - ள்.) வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையுஞ் சொல்லு மொவ்வாது வேறுவேறு யிருப்பார் நட்பு; கனவினும் இன்னாது - நனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணு மின்னாது.

வினை சொற்கள தொவ்வாமை முதன்மே லேற்றப்பட்டது. அஃதாவது வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதாயிருத்தலால், 'கனவினுமின்னா' தென்றார். உம்மை எச்சவும்மை; இழிவுசிறப்பும்மையுமாம். 'மன்'னும் 'ஓ'வும் அசைநிலை. (க)

அஉ0. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(இ - ள்.) மனைக் கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கணிருந்துழி நட்பாடிப் பலரோடு மன்றின்கணிருந்துழிப் பழிகூறுவார் நட்பு; எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினுந் தம்மை நணுகுதலைப் பரிகரிக்க.

மனைக்கட் கெழுமலும் மன்றின்கட் பழித்தலுந் தீதாகலின், அவர் ஒருகாலுந் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்கவென்பார், அவர் நட்பின்மேல் வைத்துக்கூறினர். இவை யிரண்டு பாட்டானும் வஞ்சர்நட்பின் றீமை கூறப்பட்டது. (கo)

அதி. அஙு—கூடாநட்பு

[இனி, எனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந் துணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.]

அஉக. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(இ - ள்.) நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந் துணையுங் கூடியொழுகுவார் நட்பு; சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை - அது பெற்றூல், அறவெறிதற்குத் துணையாய பட்டடையாம்.

எறியுமெல்லை வாராமுனெல்லாந் தாங்குவது போன்றிருந்து வந்துழி அறவெறிவிப்பதாய* 'பட்டடை'க்கும் அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழிலொப்புமை யுண்மையான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாக வுபசரித்தார். தீர்விடமென்று பாடமோதி முடிவிடமென் றுரைப்பாருமூளர்.† (க)

அஉஉ. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

(இ - ள்.) இனம்போன்று இனமல்லார் கேண்மை - தமக்குற் றூர்போன்று உறுதாரோடு உளதாய நட்பு; மகளிர் மனம்போல வேறுபடும் - இடம்பெற்றூற் பெண்பாலார் மனம்போல வேறுபடும்.

அவர் மனம் வேறுபடுதல், 'பெண்மனம் பேதின் றெருப்படுப்பே னென்னு—மெண்ணி லொருவன்'‡ என்பதனை மறிக. நட்பு வேறுபடுதலாவது பழைய பகையேயாதல். இவை யிரண்டு பாட்டானும் கூடாநட்பினது குற்றங் கூறப்பட்டது. (உ)

அஉங. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணாக்க ரரிது.

(இ - ள்.) நல்ல பல கற்றக்கடைத்தும் - நல்லன பல நூல்களைக் கற்றவிடத்தும்; மனம் நல்லர் ஆகுதல் மாணாக்கர்க்கு அரிது - அதனை மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க்கில்லை.

நல்லன மனக்குற்றங் கெடுப்பன. 'மனநல்ல' ரெனச் சினை வினை முதன்மேனின்றது. 'நல்லராகுதல்': செற்றம் விடுதல். உள்ளே செற்றமுடையாரைக் கல்வியுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம். (ங)

அஉச. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

---

* முழுதும் வெட்டுதற்குதவுவதாய.
† மணக்குடவர். ‡ வகேயாபதி

(இ - ள்.) முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்ஞ வஞ்சரை- கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தா லின்ஞராய வஞ்சரை ; அஞ்சப்படும் - அஞ்சல் வேண்டும்.

நகைய துவகைபற்றி 'இனிய' வென்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் 'வஞ்ச' ரென்றும், அச்செற்றங் குறிப்பறிதற் கருவியாய முகத் தானுந் தோன்றுமையின் அஞ்சுதல் செய்யப்படுமென்றுங் கூறினர். இவையிரண்டு பாட்டானுங் குற்றத்திற்கேதுவாய அவர் கொடுமை கூறப்பட்டது. (ச)

அஉடு. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ் சொல்லினுற் றேறற்பாற் றன்று.

(இ - ள்.) மனத்தின் அமையாதவரை - மனத்தாற் றம்மொடு மேவாதாரை ; எனைத்தொன்றும் சொல்லினுல் தேறற்பாற்று அன்று - யாதொரு கருமத்தினுஞ் சொல்லாற் றெளிதன்முறைமைத் தன்று நீதிநூல்.*

நீதிநூலென்பது அவாய்நிலையான் வந்தது. பகைமை மறைத் தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லைச் செவ்விய சொல்லெனக் கருதி அவரைக் கருமங்களிற்றெளிதல் நீதிநூன் முறைமையன் றென்பதாம். (ஙி)

அஉசு. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ லொல்லை யுணரப் படும்.

(இ - ள்.) நட்டார்போல் நல்லவை சொல்லினும் - நட்டார் போன்று நன்மைபயக்குஞ் சொற்களைச் சொன்ஞராயினும் ; ஒட் டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் அது பய வாமை அச்சொல்லியபொழுதே யறியப்படும்.

'சொல்லினு' மெனவே சொல்லாமையே பெற்றும். ஒட்டா ராதலாற் றீமைபயத்தல் ஒருதலையென்பார், 'ஒல்லையுணரப்படு' மென்றார். (சு)

அஉஎ. சொல்வணக்க மொன்ஞர்கட் கொள்ளற்க வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்.

(இ - ள்) வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமைசெய்தலைக் குறித்தமையால் ; ஒன்ஞர்

* 'முறைமைத் தன்றென்று சொல்லும் நீதிநூல்' என்றும் பாடம்.

கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்த தென்று கருதற்க.

தம்வணக்க மன்றென்பது தோன்றச் 'சொல்வணக்க' மென்றும், 'வில்வணக்கம்' வேறுயினும் வணங்குத லொப்புமை பற்றி அதன் குறிப்பை யேதுவாக்கியுங் கூறினர். வில்லியது குறிப்பு அவனியை வில்வணக்கத்தின்மே னிற்றலான், ஒன்னரது குறிப்பும் அவரியை சொல்வணக்கத்தின் மேலதாயிற்று. இதுவுந் தீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவரைச் சொல்லாற் றெளியற்க வென்பது கூறப்பட்டது. (எ)

அஉஅ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னர்
ழுதகண் ணீரு மனைத்து.*

(இ - ள்.) ஒன்னர் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - ஒன்னர் குறிப்பை யுணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவ ரழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற் கிடனும்.

தாநட்பென்பதனைத் தங் கையானுங் கண்ணானுந் தேற்றிப் பின் கோறற்கு வாங்கவிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றுள்ளே தோன்றுமென்பார், 'ஒடுங்கு' மென்றார். பகைவர் தம் மென்மைகாட்டித் தொழினு மழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்கவென்பதாம். இதனால் அவரைச் செயலாற் றெளியற்க வென்பது கூறப்பட்டது. (அ)

அஉக. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(இ - ள்.) மிகச்செய்து தம் எள்ளுவாரை - பகைமை தோன் றுமற் புறத்தின்கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கட் டம்மை யிகழும் பகைவரை; நட்பினுள் நகச்செய்து சாப் புல்லற்பாற்று - தாமும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணஞ்செய்து அகத்தின்கண் அது சாம்வண்ணம் பொருந்தற் பான்மை யுடைத்து அரசநீதி.

நின்றென்பதூஉம் அரசநீதியென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. அகலுனென்று புறவுனென்றுதல் ஒருவற்குத் தகாதெனினும்

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம் - ஈ.

பகைவர்மாட்டாயிற் றருமென்பது நீதிநூற் றுணிபென்பார், அதன் மேல்வைத்துக் கூறினார். சாவவென்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது, "கோட்டின்வாய்ச் சாக்குத்தி" * என்புழிப் போல. எள்ளுவாரைப் புல்லலெனக் கூட்டுக. (கூ)

அஉ0. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

(இ - ள்.) பகை நட்பாம் காலம் வருங்கால் - தம் பகைவர் தமக்கு நட்டாராயொழுகுங்காலம் வந்தால்; முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல் - தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவுந் தவிர்க.

அக்காலமாவது தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாதவளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவையிரண்டு பாட்டானும் அந்நட்பிடையொழுகுமாறு கூறப்பட்டது. (கo)

அதி. அச—பேதைமை

[இனி, அந்நட்பினையெதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறிய தொடங்கினார். அப் பகைதான் முற்றக்கடியுங் குற்றமன்மையி† னுளவாய வெகுளியானுங் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்திகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்திகாரத்தானுங் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து, இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் பேதைமை கூறுகின்றார். அஃதாவது, யாதுமறியாமை.]

அஙக. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போக விடல்.

(இ - ள்.) பேதைமை என்பது ஒன்று - பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று; யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - அதுதான் யாதென்று வினவின், தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல்.

கேடு: வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்: செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமையுங் கெடுத்துக்கோட லென்பதாம்.

---

* கலித்தொகை - கo டு. † சசo - ஆம் குறளுரை.

அகூஉ. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

(இ - ள்.) பேதைமையுள் எல்லாம் பேதைமை - ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது; கையல்ல தன்கண் காதன்மை செயல் - தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல்.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களே விரும்பிச் செய்தலென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது. (உ)

அகூஊ. நாணமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணமை பேதை தொழில்.

(இ - ள்.) நாணமை - நாணவேண்டுமவற்றுக்கு நாணமையும்; நாடாமை - நாடவேண்டுமவற்றை நாடாமையும்; நார்இன்மை - யாவர் மாட்டும் முறிந்தசொற்செய லுடைமையும்; யாதொன்றும் பேணமை - பேணவேண்டுமவற்றுள் யாதொன்றினையும் பேணமையும்; பேதை தொழில் - பேதையது தொழில்.

நாணவேண்டுமவை: பழி பாவங்கள். நாடவேண்டுமவை: கருமங்களிற் செய்வன தவிர்வன. முறிதல்: கண்ணறுதல். பேணவேண்டுமவை: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றுமியல்பாய் வருதலின் 'தொழி'லென்றார்.

அகூஎ. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ - ள்.) ஓதி - மன மொழி மெய்க ளடங்குதற் கேதுவாய நூல்களை யோதியும்; உணர்ந்தும் - அவ்வடக்கத்தான் வரும் பயனை யுணர்ந்தும்; பிறர்க்கு உரைத்தும் - அதனை யறியலுறப் பிறர்க்குரைத்தும்; தான் அடங்காப் பேதையின் - தான் அவையடங்கியொழுகாத பேதைபோல, பேதையார் இல் - பேதையார் உலகத்தில்லை.

உம்மை முன்னுங் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய இவற்றுற் றீராமையானும், வேற்று மருந்தின்மையானும் 'பேதையிற்பேதையா ரில்' லென்றார். இவை யிரண்டு பாட்டானும் பேதையது தொழில் பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையாற் கூறுப. (ஊ)

அகரு. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

(இ - ள்.) பேதை - பேதையாயினான்; எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - வரும் பிறவிகளெல்லாந் தான் புக்கழுந்தும் நிரயத்தினை; ஒருமைச் செயல் ஆற்றும் - இவ்வொரு பிறப்புள்ளே செய்து கொள்ள வல்லனும்.

எல்லாப்பிறப்பும் ஏழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்துதற்கிடனாய நிரயம்; ஈண்டைப் பிறப்புக்களினுங் கொடுவினை வயத்தால் அந்நிரயத் துன்பமே யுழந்து வருதலின், 'எழுமையுந் தான்புக்கழுந்து மள' றென்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத்துன்ப முடித்தற்கேதுவாங் கொடுவினைகளையே யறிந்து சில காலத்துள்ளே செய்துகோடல் பிறர்க்கரிதாகலின், 'ஆற்று' மென்றார். இதனான் அவன் மறுமைச் செயல் கூறப்பட்டது. (அ)

அகரு. பொய்ப்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(இ - ள்.) கை அறியாப் பேதை வினைமேற்கொளின் - செய்யுமுறைமை யறியாத பேதை ஒரு கருமத்தை மேற்கொள்வனாயின், பொய்படும் ஒன்றே புனை பூணும் - அதுவும் புரைபடும், தானுந் தானை பூணும்.

புரைபடுதல்: பின் ஆகாவகை உள்ளழிதல். 'ஒன்றே' வென்பது எண்ணிடைச்சொல். அதனையுங் கெடுத்துத் தானுங் கெடுமென்பதாம். இதனான் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது. (சு)

அகரு. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(இ - ள்.) பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை - பேதையாயினான் பெரிய செல்வத்தைத் தெய்வத்தா னெய்தியவழி; ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னை டோரியைபு மில்லாதார் நிறைய எல்லாவியைபுமுடைய தமராயினர் பசியாகிற்பர்.

எல்லா நன்மையுஞ் செய்துகோடற் கருவி யென்பது தோன்றப் 'பெருஞ் செல்வ' மென்றும், அதனைப் படைக்கு மாற்றலில்லாமை தோன்ற 'உற்றக்கடை' யென்றும், எல்லாம் பெறுதரூன்ற 'ஆர' வென்றும், உணவும் பெருமை தோன்றப் 'பசிப்ப' ரென்றுங் கூறினர். (எ)

அநஅ. மைய லொருவன் களித்தற்குற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

(இ - ள்.) பேதை தன்கை ஒன்று உடைமை பெறின் - பேதையாயினுன் தன் கைக்கண்ணே ஒன்றனையுடைமையாகப் பெற்றனனாயின்; மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையா னொருவன் அம்மயக்கத்தின் மேலே மதுவுண்டு மயங்கினுற்போலும்.

'பெறி' னெனவே தெய்வத்தானன்றித் தன்னுற் பெறுமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன மையலும் மதக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றலைதடுமாறுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் அவன் செல்வமெய்தியவழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது. (அ)

அநக. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(இ - ள்.) பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - பின் பிரிவுவந்துழி அஃதிருவர்க்குந் தருவதொரு துன்பமில்லை; பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலாற், பேதையாயினுர் தம்முட் கொண்ட நட்பு மிகவினிது.

நாடோறுந் தேய்ந்து வருதலின்.* துன்பம் தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு. இதனுல் அவரது நட்பின் குற்றங் கூறப்பட்டது. (க)

அசo. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்குற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

(இ - ள்.) சான்றோர் குழாஅத்துப் பேதை புகல் - சான்றோரவையினிடத் பேதையாயினுன் புகுதல்; கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்று - தூயவல்ல மிதித்த காலே இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும்.

கழுவாக்காலென்பது இடக்கரடக்கு. அதனுல் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல இவனுல் அவ்வவையும் இழிக்கப்படுமென்பதாம். இதனுல் அவன் அவையிடை இருக்குமாறு † கூறப்பட்டது. (கo)

---

* குறள், எஅஉ - பார்க்க, † நாலடியார் - உருச.

அதி. அடு—புல்லறிவாண்மை

[இனி, ஏனைப் புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய வறிவினை யாடற்றன்மையென விரியும். அஃதாவது, தான் சிற்றறிவினனுயிருந்தே தன்னைப் பேரறிவினனுக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற் கொள்ளாமை.]

அசக. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.*

(இ - ள்.) இன்மையுள் இன்மை அறிவின்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க வில்லாமையாவது அறிவில்லாமை; பிறிதின்மை இன்மையா வையாது உலகு - மற்றைப் பொருளில்லாமையோவெனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார்.

'அறி'வென்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மே னின்றது. புல்லறிவாளர் செல்வமெய்திய வழியும் இம்மைமறுமைப்பய னெய்தாமையின் அதனை 'இன்மையு ளின்மை' யென்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழியும் அஃதிழவாமையின் அதனை 'இன்மையா வையா' தென்றுங் கூறினர். இதனுற் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது. (க)

அசஉ. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

(இ - ள்.) அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின்; பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவனல்வினையே, வேறொன்றுமில்லை.

ஒரோவழி நெஞ்சுவந் தீதல்கூடலிற் புல்லறிவாளரும் நல்வினை செய்ப என்பார்க்குப், பெறுவான் வீழ்பொருளெய்தியான் போல்வ தல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றா ரல்ல ரெனக் கூறியவாறு. கூடிற்றாயின், அதற்குக் காரணமென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. இதனுல் அஃதுடையார் தம் மாட்டு நல்லன செய்தலறியாமை கூறப்பட்டது. (உ)

அசஙு. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

---

* நாலடியார் - உடுக.

(இ - ள்.) அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை – புல்லறி வுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம்; செறுவார்க்கும் செய்தல் அரிது - அது செய்தற்குரியராய தம் பகைவர்க்குஞ் செய்த லரிது.

பகைவர் தாம் அறிந்த தொன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவமுதலிய பலவற்றையும் எக் காலத்துஞ் செய்யமாட்டாமையின், அவர்க்குஞ் 'செய்தலரி' தென் றார். இதனால் அவர் தம்மாட்டுந் தீயன செய்தலறிவரென்பது கூறப்பட்டது. (க)

அசச. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையமயா மென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறி வுடைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்; யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு - அது தம்மைத்தாமே யாம் கல்லறிவுடையமென்று நன்குமதிக்கும் மயக்கம்.

'வெண்மை' யாவது அறிவுமுதிராமை. 'ஒண்மை' யெனக் காரியப்பெயர் காரணத்திற்காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்து வைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கமென்றார். (ச)

அசசு. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்ல தூஉ மையந் தரும்.

(இ - ள்.) கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாங் கல்லாத நூல்களேயுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல்; கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும் - கசடறக் கற்ற தொரு நூலுண்டாயின், அதன்கண்ணும் பிறர்க் கையத்தை விளைக்கும்.

'வல்ல' தென ஏழாவது இறுதிக்கட் டொக்கது. உண்டாயி னென்பது அவாய்நிலையான் வந்தது. 'ஐயம்' அதுவல்ல ரென்ப தூஉம் இவ்வாறுகொல்லோ வென்பது. (ஞ)

அசசு. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

(இ - ள்.) தம் வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தங்கணிகழுங் குற்றங்களே யறிந்து கடியாராயின்; அற்றம் மறைத்

தலோ புல்லறிவு - ஆடையால் அற்ற மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம்.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப் படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்ததொன்றனையே மறைத்து அவ்வளவாற் றம்மையு முலக வொழுக்கினராக மதித்தலும் 'புல்லறி' வென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியத்தற்குற்றங் கூறப்பட்டது. (சு)

அசஎ. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ - ள்.) அருமறை சோரும் அறிவிலான் - பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்; தானே தனக்குப் பெருமிறை செய்யும் - அவ்வுறுதி யறியாமையாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்து கொள் ளும்.

'சோரு'மென இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மே னின்றது. மிக்கவருத்தம் பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி 'அருமறைசோரு' மென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப் படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க்குரைக்குமென்* றுரைத் தார்; அது பேணுமை யென்னும்† பேதைமையாவதன்றிப் புல்லறி வாண்மையன்மை யறிக. (எ)

அசஅ. ஏவவுஞ் செய்கலான் ருன்றேரு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

(இ - ள்.) ஏவவும் செய்கலான் - புல்லறிவாளன் தனக்குறுதி யாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவுஞ் செய்யான்; தான் தேரான் - அதுவன்றித் தானுகவும் இவை செய்வனவென் றறி யான்; அவ்வுயிர் போஒமளவும் ஓர்நோய் - அவ்வுயிர் யாக்கையினீங்கு மளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம்.

உயிர் தான் உணர்தற்றன்மைத்தாயிருந்தும், நின்ற யாக்கை வயத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயி ரென்றும், அதனினீங்கியபொழுதே அதற்கு இரண்டனுளொன்று கூடுதலிற் 'போஒமளவு' மென்றும், குலமலமுதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் துன்பஞ்செய்தலின் ஒரு 'நோ' யென்றுங் கூறினர். (அ)

*மணக்குடவர். † குறள் - அகக.

அசுக. காணுதாற் காட்டுவான் ருன்காணுன் காணுதான்
கண்டானுத் தான்கண்ட வாறு.

(இ - ள்.) காணுதாற் காட்டுவான் தான் காணுன் - தன்னை எல்லாமறிந்தாலுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந் தன்மையிலா தானே அறிவிக்கப்புகுவான் அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியா னுய் முடியும்; காணுதான் தான் கண்டவாறு கண்டானும் - இனி அவ்வறியுந்தன்மை யில்லாதான் கொண்டது விடாமையாற்* ருனறிந்தவாற்ருல் அதனை அறிந்தானுய் முடியும்.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்ருணும் இயை வதன்றென்பதாம். (கூ)

அஙo. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(இ - ள்.) உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந் தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவா னில்லையென்று சொல்லுவான்; வையத்து அலகையா வைக்கப் படும் - மகனென்று கருதப்படான், வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும்.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென்பன பலவேனுஞ் சாதிபற்றி 'உண்டென்ப' தென்றும், தானே வேண்டியகூறலால் ஒப்பும், வடிவால் ஒவ்வாமையுமுடை மையிற் றன்யாக்கை கரந்து மக்கள்யாக்கையுட் டோன்றுதல்வல்ல 'அலகை' யென்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் உறு திச் சொற் கொள்ளாமையது குற்றங் கூறப்பட்டது. (கo)

அதி. அகூ—இகல்

[இனி, அவற்ருன் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுன் வருவன கூறுவான் றொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றர். அஃதாவது, இருவர் தம்மூட் பொருது வலிதொலைதற் கேதுவாய மாறு பாடு.]

அடுக. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

---

*கொடிறும் பேதையுங் கொண்டது விடா.

(இ - ள்.) எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய் - எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமை யென்னுந் தீக்குணத்தை வளர்க்கும் குற்றம்; இகல் என்ப - இக லென்று சொல்லுவர் நூலோர்.

மக்களையும் விலங்குகளோ டொப்பிப்பதென்பது தோன்ற 'எல்லாவுயிர்க்கு' மென்றும், பகுதிக்குணத்தை இடைநின்று விளைத்தலிற் 'பகலென்னும் பண்பின்மை' யென்றுங் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக்குணமாயிற்று. இதனால் இகலது குற்றங் கூறப்பட்டது. (க)

அதிக. பகல்கருதிப் பற்று செயினு மிகல்கருதி
யின்னுசெய் யாமை தலை.

(இ - ள்.) பகல் கருதிப் பற்று செயினும் - தம்மொடு கூடா மையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானெனினும்; இகல் கருதி இன்னு செய்யாமை தலை - அவனோடு மாறுபடுதலைக் குறித் துத் தாமவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமை உயர்ந்தது.

செய்யிற் பகைமை வளரத் தாந் தாழ்ந்துவரலானும், ஒழியின் அப் பற்றுதன தாமே யோய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும் 'செய்யாமை தலை'யென்றார். பற்றுதவென்பது விகாரமாயிற்று. (உ)

அதிக. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

(இ - ள்.) இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபா டென்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யு நோயை ஒரு வன் தன் மனத்தினின்று நீக்குமாயின்; தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும் - அவனுக்கு அந் நீக்குதல் எஞ்ஞான்றும் உளதாற் கேதுவாய புகழைக் கொடுக்கும்.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட் டாயிற்று. 'தாவில் விளக்கம்'* வெளிப்படை. யாவரு நண்பராவர், ஆகவே எல்லாச் செல்வமு மெய்திக் கொடை முதலிய காரணங்களாற் புகழ்பெறு மென்பதாம். (கூ)

அதிச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

* குறள் - உகூ.

(இ - ள்.) இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கில்லையாயின் ; இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்க வின்பத்தினைக் கொடுக்கும்.

'துன்பத்துட் டுன்பம்': பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கு மெளியனு யுறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், 'இகலென்னு' மென்றார். 'இன்பத்து ளின்பம்', யாவரு ஈட்பாக லின் எல்லாப் பயனு மெய்தியுறுவது. (சு)

அதிகு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(இ - ள்.) இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம்மூள் ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுகவல்லாரை ; மிகல் ஊக்கும் தன்மையவர் யார் - வெல் லக் கருதுந் தன்மையுடையார் யாவர் ?

இகலை யொழிந்தொழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரி தாகலின் 'வல்லாரை' யென்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவருமில்லை யென்றுங் கூறினர். இவை கான்கு பாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

அதிசு. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(இ - ள்.) இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிற ரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிதென்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை ; தவலும் கெடலும் நணித்து - பிழைத் தலும் முற்றக்கெடுதலுஞ் சிறிது பொழுதுள் உளவாம்.

மிகுதல் : மேன்மேலூக்குதல். 'இனி' தென்பது, தான் வேறல் குறித்தல். பிழைத்தல் - வறுமையா னின்னுதாதல். முற்றக் கெடுதல் - இறத்தல். இவற்றோடு 'நணித்' தென்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததும் தழீஇய வெச்சவும்மை களாக வுரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே யுளவா மென்பதாம். (சு)

அதிஎ. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணி னிகன்மேவ
லின்னு வழிவி னவர்.

(இ - ள்.) இகல் மேவல் இன்னு அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னுதலறிவினை யுடையார்; மிகல் மேவல் மெய்ப் பொருள் காணூர் - வெற்றி பொருந்தலையுடைய நீதிநூற் பொருளை யறியமாட்டார்.

'இன்னுவறிவு', தமக்கும் பிறர்க்குந் தீங்கு பயக்குமறிவு; வெற்றிவழிகின்றூர்க்கு உளதாவது. காணப்படும் பயத்ததாகலின் மெய்ந்நூலெனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், 'காணூ' ரென்றூர். இவை யிரண்டு பாட்டானும் இகலினர்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (எ)

அதிஅ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(இ - ள்.) இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யெதிர்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண் மிகுதலை மேல்கொள்வானையிற் கேடுக் தன்கண் வருதலை மேற்கொள்ளும்.

எதிர்தல்: ஏற்றுக்கோடல். சாய்த்தபொழுதே வருதலின், 'சாய்தல் ஆக்க' மென்றூர். 'இகலிற்' கெனவும் 'அதனை' யென வும் வந்தன வேற்றுமைமயக்கம். (அ)

அதிக. இகல்காணு னுக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

(இ - ள்.) ஆக்கம் வருங்கால் இகல் காணுன் - ஒருவன் தன்க ணுக்கம் வரும்வழிக் காரணமுண்டாயினும் இகலை நினையான்; கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடு செய்துகோடற்கட் காரணமின்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும்.

இகலான் வருங் கேடு பிறரானன்றென்பது தோன்றத் 'தரற்' கென்றூர். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன் னடப்பன இகலினது இன்மை உண்மைக ளென்பதாம். (க)

அசுo. இகலான் மின்னுத வெல்லா நகலான்
நன்னய மென்னுஞ் செருக்கு.

(இ -ள்.) இகலான் இன்னுத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறு பாடொன்றூனே இன்னுதனவெல்லாம் உளவாம்; நகலான் நன்னயம்

என்னும் செருக்கு ஆம் - நட்பொன்றுனே நல்ல நீதி யென்னும் பெருஞ் செல்வம் உளதாம்.

'இன்னுத'ன: வறுமை, பழி, பாவமுதலாயின. 'நகல்': மகிழ்தல். நகலென்பதூஉஞ் செருக்கென்பதூஉம் தத்தங் காரணங்கட்காயின. 'நயமென்னுஞ் செருக்' கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித் தார். இவை மூன்று பாட்டானும் அவ்விருமையுங் கூறப்பட்டன.

அதி. அஎ—பகைமாட்சி

[அஃதாவது, அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றுனும் பகையின்மை கூடாமையின் மேற் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை, ஈண்டுச் சிறப்பு வகையான் விதிக்கின்றுராகலின், இஃததன் பின் வைக்கப்பட்டது.]

அசுக. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ - ள்.) வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மின் வலி யார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக; மெலியார்மேல் பகை ஓம்பா மேக - ஏனை மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக.

'வலியா' ரென்புழித் துணைவலியு மடங்கலின், 'மெலியா'ரென் புழித் துணைவலி யின்மையுங் கொள்ளப்படும். அத் துணைதான் படை பொருண் முதலிய வேற்றுமைத்துணையும், நல்லறிவுடைமை நீதிநூல்வழி யொழுகண் முதலிய ஒற்றுமைத்துணையு மென விரண் டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலி தொலையாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்க நோக்காகிய இதனுட் பகைமாட்சி பொதுவகையாற் கூறப்பட்டது. (க)

அசுஉ. அன்பில னன்ற துணையிலன் ருன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(இ - ள்.) அன்பு இல்லன் - ஒருவன் தன் சுற்றத்தின்மே லன் பிலன்; ஆன்ற துணை இலன் - அதுவேயன்றி வலிய துணையிலன்; தான் துவ்வான் - அதன்மேற் ருன் வலியிலன்; ஏதிலான் துப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங் ஙனந் தொலைக்கும்?

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியு மிலனுகலின், அவன் மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாதென்பதாம். 'துவ்வான்': துவ்வினைச் செய்யான். (உ)

அசுஉ. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(இ - ள்.) அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும்; அறியான் - அறியவேண்டுமவற்றை யறியான்; அமைவு இலன் - பிறரோடு பொருத்தமிலன்; ஈகலான் - இவற்றின் மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன்; பகைக்குத் தஞ்ச மெளியன் - இப்பெற்றியான் பகைவர்க்கு மிகவெளியன்.

'தஞ்ச மெளிய' னென்பன ஒருபொருட் பன்மொழி.* இக் ஙான்கு குற்றமுமுடையான் பகையின்றியு மழியுமாகலின் 'தஞ்ச மெளிய' னென்றார். (ஙு)

அசுச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(இ - ள்.) வெகுளி நீங்கான் - ஒருவன் வெகுளியினீங்கான்; நிறை இலன் - அதுவேயன்றித் தான் நிறையுடைய னல்லன்; எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - அவன்மேற் சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கு மெளிது.

'நிறை'†: மறைபிற ரறியாமை. வெகுடன்மாலைய ஞகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி, இனி தென்று பாடமோதி அவன் பகைமை இனிதென் றுரைப்பாருமுளர். (ச)

அசுஙி. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(இ - ள்.) வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலை யோதான்; வாய்ப்பன செய்யான் - அது விதித்த தொழில்களைச் செய்யான்; பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான்; பண்பு இலன் - தான் பண்புடையனல்லன்; பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப்பகைமை யினிது.

---

* 'தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே' - தொல்காப்பியம், சொல். உகசு.

† 'நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை' - கலித்தொகை - கஉட.

தொல்லோரடிப்பட வழங்கிவந்த தாகலான் 'வழி'யென்றும், தப்பாது பயன்படுதலின் 'வாய்ப்பன' வென்றும், இக்குற்றங்களுடையான் முனேயழிதலிற் 'பற்றார்க்கினி' தென்றுங் கூறினர்.

அசுசு. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும்.

(இ - ள்.) காணுச் சினத்தான் - தன்னேயும் பிறரையுந் தானறியாமைக்கேதுவாகிய வெகுளியையுடையான் யாவன்; கழி பெருங் காமத்தான் - மேன்மேல் வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன்; பேணுமை பேணப்படும் - அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும்.

காணுத சினமென்பது விகாரமாயிற்று. முன்னேனுக்கு யாவரும் பகையாகலானும், எனேனுக்குக் காரியந் தோன்றுமையானும் தாமே யழிவரென்பது பற்றி, இவர் 'பேணுமை பேணப்படு' மென்றார். (சு)

அசுஎ. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்தீருந்து
மாணுத செய்வான் பகை.

(இ - ள்.) அடுத்து இருந்து மாணுத செய்வான் பகை - வினேயைத் தொடங்கியிருந்து அதற்கேலாதன செய்வான் பகைமையை; கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும் - சிலபொருளழியக் கொடுத்தாயினுங் கோடல் ஒருதலேயாக வேண்டும்.

ஏலாதன: மெலியனுய் வைத்துத் துணிதலும், வலியனுய் வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனுற் சில பொருளழியினும் பின் பலபொருளெய்தற்கு ஐயமின்மையின், 'கொளல் வேண்டு மன்ற' வென்றார். இவை யாறு பாட்டானும் அது சிறப்பு வகையாற் கூறப்பட்டது. (எ)

அசுஅ. குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்றூர்க்
கினனிலனு மேமாப் புடைத்து.

(இ - ள்.) குணன் இலனுய்க் குற்றம் பலவாயின் இனன் இலனும் - ஒருவன் குணனென்று மிலனுய் உடைய குற்றம் பலவாய வழி, அவன் துணேயிலனும்; மாற்றூர்க்கு ஏமாப்பு உடைத்து - அவ்விலனதாருனே அவன் பகைவர்க்குத் துணேயாதலேயுடைத்து.

'குணம்' இறைமாட்சியுட்* சொல்லியன. 'குற்றம்': இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்று மத்தன்மையனவும். துணை:

* குறள் - கூஅஉ, கூஅஙு.

சுற்றம், நட்பு, பொருள், படைமுதலாயின. பகைவர்க்கு இவற்று ளுளதாம் பயன்றானே யுளதாமாகலின், 'ஏமாப்புடைத்' தென்றார். 'இல்லை' யென்னுஞ் செய்தெனெச்சம் உடையனவென வந்த பெயரெச்சக் குறிப்புக் கொண்டது. (அ)

அசுக. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(இ - ள்.) அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - நீதியை யறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா - அவரைச் செறுவார்க்கு உயர்ந்த வின்பங்கள் நீங்கா.

உபாய மறிதலும் அறிந்தாற் செய்துமுடிக்குந் திண்மையு மில்லாதாரே பகைவராதல் கூடாமையிற் 'பெறி' னென்றும், அவரை யறிந்து மேற்சென்றபொழுதே பகையின்மையுஞ் செல்வ மும் ஒருங்கே யெய்தலிற் சேணுடையின்பங்கள் 'இகவா' வென் றுங் கூறினர். (கூ)

அஎ0. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானே யொல்லா தொளி.

(இ - ள்.) கல்லான் வெகுளும் சிறுபொருள் ஒல்லானே - நீதி நூலைக் கல்லாதானெடு பகைத்தலான் வரும் எளிய பொருளே மேவாதானே; எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது - எஞ்ஞான்றும் புகழ் மேவாது.

'சிறுபொருள்': முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானே வேறல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாதென்பதாம்; ஆகவே, இச் சிறிய முயற்சியாற் பெரிய பயனெய்துகவென்றவாறாயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதி காரத்தோடு மாறுதன்மேலும் ஓர் பொருட்டொடர்பு படாம லுரைத்தார். இவை மூன்று பாட்டானும் அதனிலைய பயன் கூறப் பட்டது. (கO)

அதி. அஅ—பகைத்திறந் தெரிதல்

[அஃதாவது, மாறுத பகையை ஆக்குதற்குற்றமும், முன் ஆகி நின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், தொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வதும், ஏனைக் கூளதற்பாலதன்கட் செய் வனவும், கூளையும் பருவமும், கூளையாக்காற் படுமிழுக்கும்

என்று இத்திறங்களே ஆராய்தல். இரட்டுறமொழித லென்பத னுற் பகையது திறமும், பகையிடத்தாக்குந் திறமுமென விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணப் பகையவாகலின் இது **பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.**]

அஎக. **பகையென்னும் பண்பி லதனை யொருவ**
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

(இ - ள்.) பகை என்னும் பண்பு இலதனை - பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை ; ஒருவன் நகையேயும் வேண்டற் பாற்று அன்று - ஒருவன் விளையாட்டின்கண்ணே யாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல்.

மாணுத பகையை யாக்கிக்கோடல் எவ்வாற்றானுந் தீமையே பயத்தலிற் 'பண்பில' தென்றும், அதனை விளையாட்டின்கண் வேண் டினுஞ் செற்றமே விளைந்து மெய்யாமாகலின் 'நகையேயு' மென் றும், வேண்டாமை தொல்லையோரது துணிவென்பார் நீதிநூன் மேல் வைத்துங் கூறினர். அப் பெயர் அவாய்நிலையான் வந்தது. (க)

அஎஉ. **வில்லே ருழவர்* பகைகொளினுங் கொள்ளற்க**
சொல்லே ருழவர் பகை.

(இ - ள்.) வில் ஏர் உழவர் பகை கொளினும் - ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டானாயினும், சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க - சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக.

'சொல்' ஆகுபெயரான் நீதிநூன்மே னின்றது. வீரம் சூழ்ச்சி யென்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலையன்று, வந்ததாயினுந் தனக்கேயாம் ; ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயிற் றன்வழியி னுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். உம்மையான் அதுவுமாகாமை பெறுதும். இரண்டு முடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவக விசேடம்.

அஎங. **ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்**
பல்லார் பகைகொள் பவன்.

(இ - ள்.) தமியனுய்ப் பல்லார் பகைகொள்பவன் - தான் தனியனுய் வைத்துப் பலரோடு பகைகொள்வான் ; ஏமுற்றவரினும் ஏழை - பித்துற்றாரினும் அறிவிலன்.

---

* புறப்பொருள் வெண்பாமாலை, வாகை - டு.

தனிமை: சுற்றம் நட்புப் படை முதலியவின்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனைத் தீங்கெய்தாமையின், தீங்கெய்து தலுமுடைய இவனை 'அவரினும் ஏழை' யென்றார். தீங்காவது துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க, அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவை மூன்று பாட்டானும் பகைகோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது. (ஈ)

அஎச. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
நகைமைக்கட் டங்கிற் றுலகு.

(இ - ள்.) பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச் செய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே; தங்கிற்று உலகு - அடங்கிற்று இவ்வுலகு.

வேண்டிய வழி யென்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல்: பகைநிலைமையி னீக்குதல். ஒழுகல்: நீதிவழியொழுகல். பெருமை: பொருள், படையென இருவகைத்தாய ஆற்றல். அதன் வழித்தாதற்கு எஞ்ஞான்றுந் திரிபின்மையின், அத்துணிவு பற்றித் 'தங்கிற்'றென்றார். (ச)

அஎடி. தன்றுணை யின்றுற் பகையிரண்டாற் றுணைசெ
னின்றுணையாக் கொள்கவற்றி னென்று.

(இ - ள்.) தன்றுணை இன்று - தனக்குதவுந் துணையோ வெனின் இல்லை; பகை இரண்டு - கலிவுசெய்யும் பகையோவெனின் இரண்டு; ஒருவன் தான் அவற்றின் ஒன்று இன்றுணையாக் கொள்க - அங்ஙனமாய் நின்றவழி ஒருவனுகிய தான் அப்பகை யிரண்டனுட் பொருந்திய தொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க.

பொருந்தியது: எனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது: அவ் வெல்லும் பொழுது. திரிபின்றுகச் செய்துகொள்க வென்பார், 'இன்றுணையா' வென்றார். 'ஆல்' கள் அசை. இவை யிரண்டு பாட்டானும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது. (ஙி)

அஎசு. தேறினுந் தேரு-விடினு மழிவின்கட்
டேருன் பகாஅன் விடல்.

(இ - ள்.) தேறினும் தேருவிடினும் - பகைவனை முன் தெளிந் தானுயினும் தெளிந்திலனுயினும்; அழிவின்கண் தேருன் பகாஅன்

விடல் - தனக்குப் புறத்தொரு வினையாற் முழ்வுவந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க.

முன் றெளிந்தாலுயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள்ளாய் நின்று கெடுத்தலேக்கி. தெளிந்திலலுயினும் அப்பொழுது நீக்காதொழிக வென்றது, அவ்வழிவிற்குத் துணையாதலேக்கி. இதலுன் நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது. (கூ)

அளஎ. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

(இ - ள்.) நொந்தது அறியார்க்கு நோவற்க - நொந்ததனைத் தாமாக வறியாத நட்டார்க்குத் தன்னேவு சொல்லற்க; மென்மை பகைவரகத்து மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர் மாட்டு அவ்வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க.

'நோ' வென்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கணுயிற்று. பகைவர்கட் டவிர்வது கூறுவார், நட்டார் கட் டவிர்வதும் உடன்கூறினர். இதலுல் அவ்விருபகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது. (எ)

அளஅ. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(இ - ள்.) வகை அறிந்து தற்செய்து தற்காப்ப - தான் வினை செய்யும்வகையை அறிந்து, அது முடிதற்கேற்பத் தன்னைப் பெருக்கி, மறவி புகாமற் றன்னைக் காக்கவே; பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - தன் பகைவர்மாட்டுளதாய களிப்புக் கெடும்.

'வகை': வலியலுய்த் தானெதிரே பொருமாறும், மெலியலுய வளவிற் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல்: பொருள் படைகளாற் பெருகச்செய்தல். களிப்பு: இவற்றுன் வேறுமென் றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுதி றிந்து தாமே அடங்குவ ரென்பதாம். இதலுற் கூளதற்பாலதன்கட் செய்வன கூறப்பட்டது. (அ)

அளக. இளதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(இ - ள்.) முள் மரம் இளதாகக் கொல்க - களையவேண்டுவ தாய முண்மரத்தை இளதாய நிலைமைக்கட் களைக; காழ்த்த விடத்துக் களையுநர் கைகொல்லும் - அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார் கையினை அதுதான் களையும்.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக, அன்றியே வலிதாய காலத்துக் களையலுறிற் றம்மை அதுதான் களையுமென்பது தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல். இதனுற் களையும் பருவங் கூறப்பட்டது. (கூ)

அஅ0. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

(இ - ள்.) செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாத வரசர்; உயிர்ப்ப வுளரல்லர் மன்ற - பின் உயிர்க்கு மாத்திரத்திற்கும் உளரல்லர் ஒரு தலையாக.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறக்தாரே யாவரென்பதாம். அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினு மமையும். இதனுற் களையாவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது. (கo)

அதி. அகூ—உட்பகை

[அஃதாவது, புறப்பகைக்கு இடனுக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதுவும் களையப்படுவதன் பாலதாகலின், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.]

அஅக. நிழலீரு மின்னுத வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(இ - ள்.) நிழல் நீரும் இன்னுத இன்னு - ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய்செய்வன இன்னுவாம்; தமர் நீரும் இன்னுசெயின் இன்னுவாம்- அதுபோலத் தழுவவேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனிய வேனும் பின் இன்னுசெய்வன இன்னுவாம்.

நோய்: பெருங்கால், பெருவயிறு முதலாயின. 'தம' ரென்ற தனுல் உட்பகையாதற் குரியராய ஞாதியரென்ப தறிக. இன்னு செயல் : முன் வெளிப்படாமை நின்று துணைபெற்றவழிக் கெடுத்தல். (க)

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(இ - ள்.) வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டு நிற்கும் பகைவர் பகையினை அஞ்சா தொழிக; கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - அங்ஙனம் நில்லாது கேள்போல மறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக.

'பகைவர்' ஆகுபெயர். முன்னேயறிந்து காக்கப்படுதலான் 'அஞ்சற்க' வென்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையிற் கெடுதல் ஒருதலை யென்பதுபற்றி 'அஞ்சுக' வென்றுங் கூறினர். பின்செய்யும் பகையினுங் கொடிதாகலானும், காக்கலாகாததாகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர் தொடர்பாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது. (உ)

அஅஙு. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(இ - ள்.) உட்பகை அஞ்சித் தற்காக்க - உட்பகையாயினரை யஞ்சித் தன்னைக் காத்துக்கொண் டொழுகுக; உலைவிடத்து மட்பகையின் மாணத் தெறும் - அங்ஙன மொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் மட்கலத்தை யறுக்குங் கருவிபோல அவர் தப்பாமற் கெடுப்பர்.

'கா'த்தல்: அவரணையாமலும் அவர்க்குடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்குங் கருவி 'மட்பகை' யெனப்பட்டது. பகைமை தோன்றுமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம். (ங)

அஅச. மனமாணு வுட்பகை தோன்றி னினமாணு
வேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) மனம் மாணு உட்பகை தோன்றின் - புறந்திருத்தியதுபோன்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்; இனம் மாணு ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக் கேதுவாகிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும்.

அவை சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறுபட்டவழித் தான் றேறுமையும், பின் அவற்றுன் வினைவனவுமாம். (ச)

அஅஞ. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறத்து உறவுமுறைத் தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவ

தாயின்; இறல் முறையான் எதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தன் முறையோடு கூடிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும்.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றுமற் கோறன் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர்முதலிய உறுப் புக்களைத் தேய்த்தலும் முதலாயின. (நி)

அஅசு. ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றுமை யொன்ற லரிது.

(இ - ள்.) ஒன்றுமை ஒன்றியார்கண் படின் - பகைமை தனக் குள்ளாயினர் மாட்டே பிறக்குமாயின்; பொன்றுமை ஒன்றல் எஞ் ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்று மரிது.

பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெரியனைய காலத்து மென்பார், 'எஞ்ஞான்று' மென்றார். இவை நான்கு பாட்டானும் அதனாற் றனக்குவரும் தீங்கு கூறப்பட்டது. (சு)

அஅள. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(இ - ள்.) செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பினது புணர்ச்சிபோலப் புறத்து வேற்றுமைதெரியாமற் கூடினராயினும்; உட்பகை உற்ற குடி கூடாது - உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்முட் கூடார்.

செப்பினது புணர்ச்சி செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்றுவரென்பதாம். குடி கூடாதென்பதனை நாடு வந்த தென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்ற குடியோடு கூடா தென்றும், உட்பகை யுண்டாய குடி அப் பகையோடு கூடாதென்றும் உரைப்பாருமுளர். (எ)

அஅஅ. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(இ - ள்.) உட்பகை உற்ற குடி - முன் வளர்ந்துவந்ததாயினும் உட்பகையுண்டாய குடி; அரம் பொருத பொன் போலப் பொருது உரம் தேயும் - அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல அதனாற் பொரப்பட்டு வலி தேயும்.

'பொரு' தென்னுஞ் செயப்பாட்டு வினையெச்சம் தேயுமென்னும் வினைகொண்டது. அஃது உரத்தின் ஒழிலாயினுங் குடிமேலேற்றுதலின், வினைமுதல் வினையாயிற்று. காரியஞ் செய்வது போன்று பொருந்தி மெல்லமெல்லப் பிரிவித்தலான், வலிதேய்ந்து விடுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் அவன் குடிக்குவருந் தீங்கு கூறப்பட்டது. (அ)

அஅக. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(இ - ள்.) உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும், அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை யொத்த சிறுமையுடைத்தேயாயினும்; கேடு உள்ளதாம் - பெருமையெல்லாம் அழியவருங் கேடு அதனகத்ததாம்.

எத்துணையும் பெரிதாய கேடு தனக்கெல்லை வருந்துணையும் எத்துணையுஞ் சிறிதாய உட்பகையுள்ளே யடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது. (கூ)

அகூ0. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

(இ - ள்.) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தமில்லாதாரோடு கூட ஒருவன் வாழும் வாழ்க்கை, குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடு கூட உறைந்தாற்போலும்.

'குடங்க' மென்னும் வடசொற் றிரிந்து நின்றது. இடச் சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலையென்பது பெற்றும். இதனாற் கண்ணோடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது. (கO)

அதி. கூO—பெரியாரைப் பிழையாமை

[அஃதாவது, பெரியராயினுரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுற மொழிதலென்பதனாற் பெரியாரென்பது ஆற்றலாற் பெரியாராய வேந்தர்மேலும் தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சி நின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்ற திறுதிக்கண் வைக்கப்பட்டது.]

அகக. ஆற்றுவா ரார்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(இ - ள்.) ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை; போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தங்கட் டீங்கு வாராமற் காப்பார் செய்யுங் காவல்க ளெல்லாவற்றினும் மிக்கது.

'ஆற்ற' லென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களைய வல்லாரென்பது தோன்ற 'ஆற்றுவா' ரென்றும்; அரண், படை, பொருள், நட்பு முதலிய பிற காவல்கள் அவரானழியுமாகலின் அவ் விகழாமையைத் 'தலை' யாய காவலென்றுங் கூறினர். பொது வகையால் அவ்விரு திறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனாற் கூறப்பட்டது. (க)

அகஉ. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

(இ - ள்.) பெரியாரைப் பேணுது ஒழுகின் - ஆற்றல்களாற் பெரியராயினுரை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின்; பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப் பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்.

அத் துன்பங்களாவன இருமையினும் இடையுறுது வரும் மூவகைத்* துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்து கொள்கின்றனரென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனாற் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையாற் கூறுப. (உ)

அகங. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னற்றா பவர்க ணிழுக்கு.

(இ - ள்.) அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - வேற்று வேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை; கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல் வேண்டினுனையின் ஒருவன் நீதி நூலைக் கடந்துசெய்க.

---

*தன்னை, பிறவுயிர்களை, தெய்வத்தைப்பற்றி வருவன.

அப்பெரியாரைக் ,"காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடுஉம் வெல்போர் வேந்"* தர் என்னூர் பிறரும். நீதிநூல் செயலாகா தென்று கூறலின், 'கேளா' தென்னூர். (நடு)

அகசை. கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க் காற்ருதா ரின்ஞ செயல்.

(இ - ள்.) ஆற்றுவார்க்கு ஆற்ருதார் இன்ஞ செயல் - மூவகையாற்றலு முடையார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டு இன்ஞதவற்றைச் செய்தல்; கூற்றத்தைக் கையால் விளித்தற்று - தானேயும் வரற்பாலதை கூற்றுவனே அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தாலொக்கும்.

'கையால் விளித்தல்' இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர் முதலிய கோடற்குரியாரை அதற்கு முன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையுங் கூறிய வாறு. இவை யிரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது. (சு)

அகஞ. யாண்டுச்சென் ரியாண்டு முளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட் டவர்.

(இ - ள்.) வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர் - பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனுற் செறப்பட்ட அரசர்; யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கே போயுள ராவர்? ஓரிடத்தும் உளராகார்.

இடைவந்த சொற்கள் அவாய் நிலையான் வந்தன. 'வெந்துப் பின் வேந்' தாகலால் தன்னிலம் விட்டுப்போயவர்க்கு இடங் கொடுப் பாரில்லை, உளராயின் இவர் இனி யாகாரென்பது நோக்கி அவனைத் தட்புக்கோடற்பொருட்டும் தானே வந்தெய்திய அவருடைமை வெள வுதற் பொருட்டுங் கொல்வர், அன்றெனின் உடனே யழிவரென்பன நோக்கி, 'யாண்டுச்சென் ரியாண்டு முளராகா' ரென்னூர். இதனுல் அக் குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யா ரென் பது கூறப்பட்டது. (ஞ)

அகஎ. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார் பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.†

* புறநானூறு-சக. †குறள் - உசு.

(இ - ள்.) எளியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச் சென்றுழலுருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானுயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தாற் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார்.

தீ முன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர்மேற் சேறலின் இடையே உய்யவுங் கூடும். அருந்தவர் வெகுளி அன்ன தன்றித் தானிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்குங் காத்தலரிதாகலின், அது கூடாதாகலான் அதற்கேதுவாய பிழை செய்யற்க வென்பதாம். (க)

அகூஎ. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின்.

(இ - ள்.) தகை மாண்ட தக்கார் செறின் - சாப வருள்கட்கேதுவாய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசனை வெகுள்வராயின்; வகை மாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும் - உறுப்பழகு பெற அவனரசாட்சியும் ஈட்டிவைத்த பெரும்பொருளும் என்பட்டுவிடும்?

உறுப்பு: அமைச்சு, நாடு, அரண், படை யெனவிவை. 'செறி' னென்பது அவர் செருமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன்வருவனவற்றிற்கும் இஃதொக்கும். அரசர் தஞ் செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒரு கணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம். (எ)

அகூஅ. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

(இ - ள்.) குன்று அன்னார் குன்ற மதிப்பின் - குன்றத்தையொக்கும் அருந்தவர் கெட நினைப்பாராயின்; நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் - அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றுற் போலுஞ் செல்வர் தங் குடியொடும் மாய்வர்.

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின்,* 'குன்றன்ன' ரென்றார்: "மல்லன் மலையனைய மாதவர்" † என்றுர் பிறரும். நிலைபெற்றுற் போறலாவது இறப்பப்பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராற் கருதப்படுதல். (அ)

* உக - ஆம் குறள் உரை.

† சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம் - ககக.

அகக. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ - ள்.) ஏந்திய கொள்கையார் சீறின் - காத்தற்கருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வராயின்; வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும் - அவராற்றலான் இந்திரனும் இடையே தன் பதம் இழந்து கெடும்.

"வேந்தன்மேய தீம்புன லுலகமும்"* என்றார் பிறரும். ஈகுட னென்பான் இந்திரன் பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்புமிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய, அதனைத் சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தா னென்பதனை யுட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவை நான்கு பாட்டானும் மூனிவரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது. (க)

கூ00. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

(இ - ள்.) சிறந்து அமைந்த சீரார் செறின் - கழிய மிக்க தவத் தினையுடையார் வெகுள்வராயின்; இறந்து அமைந்த சார்பு உடைய ராயினும் உய்யார் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார்.

'சார்பு': அரண், படை, பொருள், நட்பெனவிவை. அவை யெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற் றிரிபுறம்போல அழிந்துவிடு மாகலின், 'உய்யா' ரென்றார். சீருடையது 'சீ' ரெனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யாரென்பது கூறப் பட்டது. (கo)

அதி. கூக—பெண்வழிச்சேறல்

[இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ் சிதைத்தல் அழிவு தலைத்தருத லென்னுந் தொழில்களாற் பகை யோடொத்தலிற் பகைப்பாற்படுவனவா மாகலான், அவற்றைப் பகைப்பகுதிய திறுதிக்கட் கூறுவான் றொடங்கி, முதற்கட் **பெண்வழிச்சேறல்** கூறுகின்றார். அஃதாவது, தன்வழியொழு கற்பாலளாய இல்லாள்வழியே தான் ஒழுகுதல்.]

கூ0க. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

---

* தொல். பொருள். அகம். கு.

(இ - ள்.) மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பங் காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்றுணையாய அறத்தினையெய்தார்; மனை விழைவார் வேண்டாப் பொருளும் அது - இனிப் பொருள் செய்தலை முயல்வார் அதற்கிடையீடென்று இகழும்பொருளும் அவ்வின்பம்.

மனையும் விழைதலும் பயனும் ஆருபெயர். அவ்வின்பம் அவடன்மையராதற்கு ஏதுவாய வின்பம். அஃது அவளாற் பயனுய வறத்தினும் அவ்வறத்திற்குந் தனக்கும் ஏதுவாய பொருளினுஞ் செல்ல விடாமையின், விடற்பாற்றென்பதாம். (க)

கூ0உ. பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்.

(இ - ள்.) பேணுது பெண் விழைவான் ஆக்கம் - தன்னுண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தி நின்ற செல்வம்; பெரியது ஓர் நாண் ஆக நாணுத் தரும் - இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்.

எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனுகலின். அச் செல்வத்தால் ஈதலுந் துய்த்தலும் முதலிய பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைச் செய்கை அவள்கண்ண தாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனுற் றன்னுண்மையின்மை அறிந்து பின் தானும் நாணுமென்பது நோக்கிப் 'பெரியதோர் நாணுக நாணுத் தரு' மென்றார். இவை யிரண்டு பாட்டானும் மனைவிழைதற் குற்றங் கூறப்பட்டது. (உ)

கூ0ஊ. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

(இ - ள்.) இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம்; நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃதிலனாய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும்.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மையாயிற்று, அங்ஙனமஞ்சி யொழுகுதலின், அவளை நியமிப்பாரில்லேமாம், ஆகவே, எல்லாக் குற்றமும் வீளையுமென்பது நோக்கி, 'எஞ்ஞான்றும் நாணுத்தரு' மென்றார். (ஙு)

கo சு. மனையாளே யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(இ - ள்.) மனையாளே அஞ்சும் மறுமை இலாளன் - தன் மனை யாளையஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பய னில்லாதானுக்கு ; வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோராற் கொண்டாடப்படாது.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்ல றஞ் செய்தற்குரிய நன்மையின்மையின் 'மறுமையிலாள' னென்றும், வினையை யாளுந் தன்மை தன்றன்மையில்லாத அவனுன் முடிவு போதாமையின் 'வீறெய்தலின்' றென்றுங் கூறினர். (சு)

கo சி. இல்லாளே யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(இ - ள்.) இல்லாளே அஞ்சுவான் - தன் மனையாளே யஞ்சு வான் ; நல்லார்க்கு நல்லசெயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான் றேடிய பொருளேயாயினும் அதனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும்.

'நல்லார்' : தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினரும் நல்விருந்தினரும். நல்லனசெய்தல் : அவர் விரும்பு வனகொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினுமென்பார், 'எஞ்ஞான்று' மென்றார். "இல்லாளே யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாளுக!"* என்றார் பிறரும். (சி)

கo சு. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(இ - ள்.) இல்லாள் அமையார்தோள் அஞ்சுபவர் - தம்மில்லா ளுடைய வேய்போலுந் தோளினை அஞ்சுவார் ; இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தாற் றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மையிலர்.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களை யெல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமை யின், 'வாழினு! மென்றார். 'அமையார்தோ' ளெனவே, அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர்தோள்களை வென்ற ராயினும் இல்லாடோள்களை அஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம்.

* சிவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம் - உகஅ.

இவை நான்கு பாட்டானும் அவளை யஞ்சுதற் குற்றங் கூறப் பட்டது. (ஈ)

ஈ0எ. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி* னுண்டைப் பெண்ணே பெருமை யுடைத்து.

(இ - ள்.) பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - நாணின்றித் தன்னில்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்டன்மையின்; நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - நாணினையுடைய அவள் பெண்டன்மையே மேம்பாடுடைத்து.

'நாணுடைப் பெண்' ணென வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது நாணின்மை முடித்தற்காதலின், அம்மறுதலைத் தொழில் வருவிக்கப்பட்டது. 'ஏவல்' ஆகுபெயர். இறுதிக்கட் 'பெண்' ணென்பதூஉம் அது. ஏவல்செய்வித்துக்கோடற் சிறப்புத் தோன்றப் 'பெண்ணே' யெனப் பிரித்தார். (எ)

ஈ0அ. நட்டார் குறைமுடியார் நன்றூற்றார் நன்னுதலாள் பெட்டாங் கொழுகு பவர்.

(இ - ள்.) நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் - தாம் வேண்டியவாறன்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார்; நட்டார் குறை முடியார் - தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்கமாட்டார்; நன்று ஆற்றார் - அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ்செய்யவுமாட்டார்.

'நன்னுதலா' ளென்பதனை "அமையார்தோள்"† என்புழிப் போலக் கொள்க. அவடானே அறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலுங் கூடாமையின், இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம். (அ)

ஈ0ஈ. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் பெண்ணேவல் செய்வார்க ணில்.

(இ - ள்.) அறவினையும் - அறச்செயலும்; ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும்; பிறவினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச்செயல்களும்; பெண் ஏவல் செய்வார் கண் இல் - தம் மனையாள் ஏவல்செய்வார்மாட்டு உளவாகா.

---

* பெண்மை ஆணமைகட்குப் பொருள் கட்புலனாகிய அமைதித் தன்மை; ஆளுந்தன்மை என்பர் நச்சினார்க்கினியர். † குறள், ஈ0ஈ.

புலன்க ளொத்தாகலின், 'பிறவினை' யெனப் பன்மையாயிற்று. அவை நோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னேயொழிந் தார்க்குத் தலைமை அவள் கண்ணதாகலின், பின் அவைதாமும் இலவாயினவென்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினர். இவை மூன்று பாட்டானும் அவளேவல் செய்தற்குற்றங் கூறப் பட்டது. (கூ)

கூகo. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(இ - ள்.) எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச்சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனினுமுய செல்வத் தினையும் உடையராய வேந்தர்க்கு; பெண்சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது.

"இடனில் பருவத்தும்"* எனவும், "இடனின்றி யிரந் தோர்க்கு"† எனவும் வந்தமையான், 'இட' னென்பது அப்பொருட் டாதலறிக. இளமைக்காலத்து மென்பார், 'எஞ்ஞான்று' மென்றார். அப் 'பேதைமை' யாவது மேற்சொல்லிய விழைதல், அஞ்சல், எவல் செய்தலென்னும் மூன்றற்குங் காரணமாயது. எதிர்மறைமுகத் தான் அம்மூன்றும் இதனைற் றொகுத்துக் கூறப்பட்டன. (கo)

அதி. கூஉ—வரைவின் மகளிர்

[அஃதாவது, தங்கலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரான் வருங் குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.]

கூகக. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(இ - ள்.) அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் - ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர்; இன்சொல் இழுக்குத் தரும் - அது கையுறுத் தினையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனிய சொல் அவனுக்குப் பின் இன்னுமையைப் பயக்கும்.

---

* குறள் - உகூஅ. † கலித்தொகை - உ

'பொரு' ளென்புழி இன் விகாரத்தாற் றொகுகது. ஆய்ந்த தொடியினையுடையா ரென்றதனானும், இனியசொல் லென்றதனானும், அவர் கருவி கூறப்பட்டது. அச் சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க வென்பதாம். (க)

கஉக. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் நயன்றூக்கி நள்ளா விடல்.

(இ - ள்.) பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு உள்ளபொருளே அளந்தறிந்து அஃதெய்துந் துணையும் தம் பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது; நயன் தூக்கி நள்ளா விடல் - ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக.

பண்பு சொல்லின்க ணல்லது தங்கட் கிடவாமை தோன்றப் 'பண்பின் மகளி' ரென்றும், அவர்க்கு அது சாதி தருமமாதல் நூலானேயன்றி அவர் செயலானு மறிந்தென்பார் 'நயன்றூக்கி' யென்றும் அவ்வறிவு அவரை விடுவதற்கு உபாயமென்பது தோன்றப் பின் 'நள்ளாவிட' லென்றுங் கூறினர். (உ)

கஉங. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி லேதில் பிணந்தழீஇ யற்று.

(இ - ள்.) பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிர தது பொய்மையையுடைய முயக்கம்; இருட்டு அறையில் ஏதில் பிணம் தழீஇயற்று - பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன் னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும்.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானே முயங்குங்கால் அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோ ரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடொக்குமெனவே, அகத்தால் அருவரா கின்றும் பொருளேக்கிப் புறத்தாற் றழுவுவர்; அதனை யொழிக வென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப் பட்டது. (ங)

கஉச. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயு மறிவி னவர்.

(இ - ள்.) பொருட் பொருளார் புன்னலம் - இன்பமாகிய பொருளே இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிர தது புல்லிய நலத்தை; அருட்பொருள் ஆயும் அறிவினவர் தோயார்- அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்துசெய்யும் அறிவினை யுடையார் தீண்டார்.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், 'பொருட் பொருள்', 'அருட்பொரு' ளென விசேடித்தார். புன்மை: இழிந் தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின், 'தோயா' ரென்பதாம். (சு)

கூகடு பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின் மாண்ட வறிவி னவர்.

(இ - ள்.) மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கை யாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கை யறிவினை யுடையார்; பொது நலத்தார் புன்னலம் தோயார் - பொருள் கொடுப்பார்க் கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்.

மதிநன்மை: முற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனந் தெளிவுடைத்தாதல். அதனலன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படா வமையின் 'மதிநலத்தின் மாண்ட வறிவினவ' ரென்றும், அவ்வறி வுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்ந்நலத்தது புன்மை யும் விளங்கித் தோன்றலின், 'தோயா' ரென்றுங் கூறினர். (நு)

கூகசு. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள்.

(இ - ள்.) தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் - ஆடல், பாடல், அழகென்பனவற்றுற் களித்துத் தம் புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை; தம் நலம் பாரிப்பார் தோயார் - அறிவொழுக்கங்களா னேய தம் புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார்.

ஆடன்முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின், 'தகை' யென்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றுற் புகழ்பரப்புவார் 'தோயா' ரென்றுங் கூறினர். 'தந்நல' மென்புழி நலம் ஆகுபெயர். இவை மூன்று பாட்டானும், அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது கூறப்பட்டது. (சு)

கூகஎ. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

(இ - ள்.) நெஞ்சின் பிற பேணிப் புணர்பவர் தோள் - நெஞ்சி னுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற்புணரும் மகளிர் தோள்களே; நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையாற் றிருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர்.

பொருளும் அதனைற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின்மேலதாகலின், புணர்வது உடம்பு மாத்திர மென்ப தறிந்து அதுவழி ஓடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமை யின், அஃதிலார் 'தோய்வ' ரென்றார். (எ)

கூகஅ. ஆயு மறிவினர் லல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

(இ - ள்.) மாய மகளிர் முயக்கு - உருவு சொற் செயல்களான் வஞ்சித்தலே வல்ல மகளிரது முயக்கத்தை; ஆயும் அறிவினர் அல் லார்க்கு அணங்கு என்ப - அவ்வஞ்சனை ஆராய்ந்தறியு மறிவுடைய ரல்லார்க்கு அணங்குதாக்* கென்று சொல்லுவர் நூலோர்.

'அணங்கு': காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்குத் தீண்டல். இவ்வுருவகத்தான் அம்முயக்கம் முன் இனிது போன்று பின் உயிர்கோடல் பெற்றும். இது நூலோர் துணிவென் பது தோன்ற அவர்மேல் வைத்துக் கூறினர். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது. (அ)

கூகக. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

(இ - ள்.) வரைவு இலா மாண் இழையார் மென்றோள் - உயர்ந்தோர் இழிந்தோரென்னாது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லியதோள்கள்; புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு - அக்குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம்.

உயர்தற்கேதுவாகலின், 'புரை' யெனப்பட்டது. சாதியா னிழிந்தாரினீக்குதற்குப் 'புரையிலாப் பூரியர்க' ளென்றும், அவர் ஆழ்தற்கேது உருவமுதலிய மூன்றுமென்பது தோன்ற 'மாணிழை யார் மென்றோ' ளென்றும், அவர்க்கு அளற்றினை யிடையின்றிப் பயக்குமென்பது தோன்ற உருவகமாக்கியுங் கூறினர். (க)

*குறள் - கஅஅ.

கூஉ0. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(இ - ள்.) இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும்; திரு நீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளாற் புறக்கப்பட்டார்க்கு ஈட்பு.

'இருமனம்': ஒருவனுடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தேயுடைய மனம். 'கவறு' ஆகுபெயர். ஒத்த குற்றத்தவாகலின் கள்ளும் சூதும் உடன் கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனமென உடன் கூறினர். வருகின்ற அதிகார முறைமையும் இதனுணர்க. திணைவிரா யெண்ணியவழிப் பன்மைபற்றி முடிபு கோடலின்,* ஈண்டு, அஃறிணையாற் கொண்டது. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப்படுமென்பதாம். இவை நான்கு பாட்டானும் சேர்வார் இழிந்தோரென்பது கூறப்பட்டது. (கo)

அதி. கூஉ—கள்ளுண்ணாமை

[இனி, ஒழுக்கமும் உணர்வுமழித்தற்கண் அவ்வகைவின் மகளிரோடொப்பதாய கள்ளினையுண்ணாமையது திறப்பு எதிர்மறை முகத்தாற் கூறுகின்றார்.]

கூஉக. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(இ - ள்.) கட்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற் காதல் செய்தொழுகு மரசர்; எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரா னஞ்சப்படார்; ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையு மிழப்பர்.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றுற் பெரியராய காலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னேரா னெய்தநின்ற ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பரென்பதாம். இவை யிரண்டானும் அரசு இனிது செல்லாதென்பது இதனுற் கூறப்பட்டது. (க)

கூஉஉ. உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார்.

(இ - ள்.) கள்ளை உண்ணற்க - அறிவுடையராயினர் அஃதில ராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணுதொழிக; உணில் சான்றோ

* தொல். சொல். ஒடு.

ரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலே வேண்டாதார் உண்க.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளானழித்துக் கொள்வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணுராகலின், 'சான்றோரா லெண்ணப்பட வேண்டாதார்' ருண்க வென்றார். (உ)

கூஉங. சான்ருண் முகத்தேயு மின்னுதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(இ - ள்.) ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது - யாதுசெய்யினும் உவக்குந் தாய்முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்; மற்றுச் சான்றோர்முகத்து என் - ஆனபின், குற்றம் யாதும் பொருத சான்றோர் முன்பு களித்தல் அவர்க்கியாதாம் ?

மனமொழி மெய்கள் தம்வயத்த வன்மையான் நாணழியும்; அழியவே, ஈன்றாட்கும் இன்னாதாயிற்று ; ஆனபின், கள் இருமையுங் கெடுத்தலறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்றோர்க்கு இன்னாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (கூ)

கூஉச. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.

(இ - ள்.) கள் என்னும் பேணுப் பெருங்குற்றத்தார்க்கு - கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினையுடையாரை ; நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் - நாணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர்முகமாகாள்.

காணுதற்குமஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவராகலிற் 'பேணு' வென்றும், பின் ஒருவாற்றானும் கழுவப்படாமையிற் 'பெருங்குற்ற' மென்றும், இழிந்தோர்பானில்லாமையின் 'நல்லா' ளென்றுங் கூறினார். பெண்பாலாக்கியது வடமொழி முறைமை பற்றி.* இவை மூன்று பாட்டானும் ஒளியிழத்தற் காரணங் கூறப்பட்டது. (ச)

கூஉஞ. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

* பிரயோக விவேகம், நிங்ஙப்படலம் - கரு.

(இ - ள்.) பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற் றனக்கு மெய்ம் மறப்பினைக் கொள்ளுதல்; கை அறியாமை உடைத்து - அவன் பழ வினைப்பயனை செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாக வுடைத்து.

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவு மறியாமை சொல்லல் வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் "பதனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று"* என்பதனை மறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றனைக் கொள்ளுங்காற் றீயது கொள்ளாமை யின், 'மெய்யறியாமை கொளல்' முன்னையறியாமையான் வந்த தென்பதாம். (இ)

கூஉசு. துஞ்சினுர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(இ - ள்.) துஞ்சினுர் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினுர், செத்தாரின் வேறுதலுடையரேனும், அக்காலத்தறிவின்மையான் வேறெனப்படார்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்டாரின் வேறுதலுடையரேனும், எக்காலத்து மறிவின்மையான் வேறெனப்படார், அவர்தாமே யாவர்.

உறங்கினுர்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்பு நிற்றல். வேறுதலும் வேறன்மையுமுடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை கிரனிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினுரும் நஞ்சுண்பாருமொப்பர். கைவிடப்படுதலாற் செத் தாரும் கள்ளுண்பாருமொப்ப ரென்றுரைப்பாருமுளர்; அதிகாரப் பொருள் பின்னதாயிருக்க யாதுமியைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமை புணர்த்து ஈண்டுக் கூறல் பயனின்மையானும், சொற் கிடக்கை கிரனிறைக் கேலாமையானும் அஃதுரையன்மை யறிக. இவை யிரண்டு பாட்டானும் அவரதறிவிழத்தற் குற்றங் கூறப்பட் டது. (ஈ)

கூஉஎ. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(இ - ள்.) கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளே மறைந்துண்டு அக்களிப்பாற் றம்மறிவு தளர்வார், உள்ளூர் உள் ஒற்றி எஞ்

* புறநானூறு - உ0கூ.

ஞான்றும் நகப்படுவர் - உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்ற துய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர்.

'உள்ளூர்' ஆகுபெயர். உண்டென்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல் தளர்ச்சியாற் களிப்பினை யுணர்ந்து அதனாற் கள்ளுண்டதுணர்தல். (எ)

கூஉஅ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(இ - ள்.) களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைந்துண்டுவைத்து யான் கள்ளுண் டறியேனென்று உண்ணுத பொழுது தம்மொழுக்கங் கூறுதலையொழிக; நெஞ்சத்து ஒளித்ததூஉம் ஆங்கே மிகும் - அவ்வுண்டபொழுதே பிறராறியின் இழுக்கா மென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான்.

'களித்தறியே' னெனக் காரியத்தாற் கூறினர். இவையிரண்டு பாட்டானும் அது மறைக்கப்படாதென்பது கூறப்பட்டது. (அ)

கூஉக. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(இ - ள்.) களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு களித்தா னெருவனை இஃதாகாதென்று பிறனெருவன் காரணங் காட்டித் தெளிவித்தல்; நீர்க் கீழ்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - நீருண்மூழ்கினை னெருவனைப் பிறனெருவன் விளக்கினல் நாடுதலை யொக்கும்.

'களித்தானை' யென்னு மிரண்டாவது "அறிவுடை யந்தண னாவானைக்காட் டென்றலே"* என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன் மனத்துக் காரணஞ்செல்லா தென்பதாம். இதனுன் அவனைத் தெளிவித்தல் முடியாதென்பது கூறப்பட்டது. (கூ)

கூகூ. கள்ளுண்ணப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

(இ - ள்.) கள் உண்ணப் போழ்தில் களித்தானை - கள்ளுண்பானெருவன் தான் அஃதுண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே; காணுங்கால்

* களித்தொடை - எஉ.

உண்டதன் சோர்வு உள்ளான்கொல் - காணுங்கால் தானுண்ட பொழுது உளதாஞ் சோர்வினை அவன் சோர்வால் அதுவுமிற் றென்று கருதான்போலும்.

'சோர்வு': மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருத லளவையான் அதனிழுக்கினை* யுய்த்துணரின் ஒழியுமென இத ஞல் அஃதொழிதற்காரணங் கூறப்பட்டது. (கo)

அதி. கூசு—சூது

[இனி, அக் கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு யிடை யீடாகிய சூதாடலும் பிணியுழத்தலுங் கூறுவான் றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறுகின்றார்.]

கூகக. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(இ - ள்.) வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான் வெல்லு மாற்றலுடையனெயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்றதூஉம் தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று - வென்று பொருளெய்துவார் உளராலெனின் அவ்வென்ற பொருடானும் இரையான் மறைந்த தூண்டிலிரும்பினை இரையெனக் கருதி மீன் விழுங்கினற்போலும்.

வேறல் ஒருதலை யன்மையின் 'வென்றிடினு' மென்றும், கருமங் கள் பலவுங் கெடுதலின் 'வேண்டற்க' வென்றுங் கூறினர். எய்திய பொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளையென்பதூஉம், அதனற்பின் துயருழத்தலும், உவமையாற் பெற்றும். (க)

கூகஉ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(இ - ள்.) ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அத் தூண்டிற்பொன் போன்ற ஒன்றனை முன்பெற்று இன்னும் பெறுது மென்னுங் கருத்தால் நூற்றினையிழந்து வறியராஞ் சூதர்க்கும்; ஒன்று எய்தி வாழ்வது ஓராறு உண்டாங்கொல் - பொருளால் அறனு மின்ப முமெய்தி வாழ்வதொரு நெறியுண்டாமோ? ஆகாது.

அவ்வாற்றுற் பொருளிழந்தே வருதலான் அதனலெய்தும் பய னும் அவர்க்கில்லை யென்பதாம். (உ)

---

* 'அவனிழுக்கினை' என்பதும் பாடம்.

கூகூக. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

(இ - ள்.) உருள் ஆயம்'ஓவாது கூறின் - உருளுங் கவற்றின் கட் பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின் ; பொருள் ஆயம் போஒய்ப் புறமே படும் - அரசனீட்டியபொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப்போய்ப் பகைவர்கண்ணே தங்கும்.

கவற்றின திருட்சியை அதனிளைய ஆயத்தின்மே லேற்றியும், சூதாடலை அது கூறலாகிய காரணத்தின்மே லிட்டுங் கூறினர். 'பொருளாய' மென்பது உம்மைத்தொகை. 'ஆயம்' வடமொழித் திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலளகலின் அவை யிரண்டும் பகைவர்பாற் செல்லுமென்பதாம். (கூ)

கூகூச. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(இ - ள்.) சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையும் கெடுக்குஞ் சூதுபோல ; வறுமை தருவது ஒன்று இல் - கல்குரவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்வினைத்தையும் நீக்கித் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால், 'சீரழிக்கு' மென்றார். வறுமைக்கு எல்லையாவ ரென்பதாம். (ச)

கூகூஞ. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

(இ - ள்.) இல்லாகியார் - முற்காலத்துத் தாமுளராகியே இலராகியொழிஞர் ; கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃதாடுங் களத்தினையும் அவ்வாடற்கு வேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

கைத்தொழில் : வெல்லு மாயம்படப் பிடித்தெறிதல். அவ்விவறுதலாற் பாண்டவர் தம்மரசுவிட்டு வனத்திடைப் போய் ஆண்டு மறைந்தொழுகினரென அனுபவங் காட்டியவாறு. இவையைந்து பாட்டானும் அதனது வறுமை பயத்தற்குற்றங் கூறப்பட்டது. (ஞ)

கூடீசு. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

(இ - ள்.) சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன் பெயர் சொல்லல் மங்கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார்; அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறுரப்பெறார், மறுமைக்கண் நிரயத்துன்ப முழப்பவர்.

செல்வங்கொடுத்து நல்குரவுகொடுத்தற்றொழில் வேறுபடாமையிற் 'சூதென்னு முகடி' யென்றும், வெற்றிதோல்விக ணேக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு 'அகடாரா' ரென்றும், பொய்யுங் களவும் முதலிய பாவங்களீட்டலின் ஆண்டு 'அல்ல லுழப்பா' ரென்றுங் கூறினர். வயிறுராமை சொல்லவே, ஏனைப் புலன்ணுகரப்பெறுமை சொல்ல வேண்டாவாயிற்று. 'உழப்ப' ரென்பது எதிர்காலவினை. (கூ)

கூடீஎ. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

(இ - ள்.) காலை கழகத்துப் புகின் - அறம் பொருளின்பங்கட்கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடுகளத்தின்கட் கழியுமாயின்; பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக்கழிவு தொன்றுதொட்டு வந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும்.

'பழகிய' வென்பது பண்புடனு மியையும். தான் செய்துகொள்ளும் அறமுதலியவேயன்றி முன்னோரைத் தொடங்கி வருகின்ற செல்வமும், முன்செய்த நல்வினையின் பயனுய பண்பும் இலவாமென்பதாம். எ)

கூடீஅ. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

(இ - ள்.) சூது - சூது; பொருள் கெடுத்து - தன்னைப்பயின்றவன் பொருளைக் கெடுத்து; பொய் மேற்கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப்பண்ணி; அருள் கெடுத்து - மனத்தெழும் அருளைக் கெடுத்து; அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்றுன் அவனை இருமையினுந் துன்பமுறுவிக்கும்.

இத்தொழில்கண் மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிகளாகவுங் கொள்க. முன்னதனுன் இம்மையினும், ஏனையவற்றுன் மறுமையினுமாம். பொருள் கொடுத்தென்பது பாடமாயின், அவ்வெச்சத்

திற்கு முடிவு மேற்கொளீஇ யென்புழி மேற்கோடலாகிய வினை முதல்வினை. (அ)

கஙக. உடைசெல்வ மூணெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(இ - ள்.) ஆயம் கொளின் - அரசன் சூதினைத் தனக்கு விநோதத் தொழிலாக விரும்புமாயின்; ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென் றிவ்வைந்துஞ் சாராவாம்.

'ஆயம்' ஆகுபெயர். இச் சிறப்புமுறை செய்யுணேக்கிப் பிறழ நின்றது. செல்வம் அறுவகை* யுறுப்புக்கள். ஊணுடையென்பன வற்றுல் துப்புரவுகளெல்லாங் கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவையுளவாகா வென்பதாம். இவை நான்கு பாட்டானும் சிறுமை பலசெய்து† அவற்றுனிருமையுங் கெடுத்தல் கூறப் பட்டது. (கூ)

கசo. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

(இ - ள்.) இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப்பயன்களேயு மிழக்குந்தோறும் அதன்மேற் காதல் செய்யுஞ் சூதன்போல; துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர் - உடம்பான் மூவகைத் துன்பங்களேயும் அனுபவிக்குந்தோறும் அதன் மேற் காதலையுடைத்து உயிர்.

சூது ஆகுபெயர். உயிரினதறியாமை கூறுவார்போன்று சூதின தறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இத னெதிர்மறை முகத்தாற் சூதினை வெறுத்தொழிவானே யொக்கும் உடம்பினை வெறுத்தொழியு முயிரெனவுங் கொள்க. இதனுன் அஃதொழிதற்கருமையும் ஒழிந்தாரது பெருமையுங் கூறப்பட்டன. (கo)

அதி. கூடு—மருந்து

[பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதமுதலிய பிணிகள் வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன் கழிவின்க ணல்லது தீராமையின் அவையொழித்து, ஏனைக் காரணங்க

---

* குறள், நஅக. † குறள், கூநச.

ளான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் றிறங் கூறுகின் றூர். காரணங்களாவன உணவு செயல்கள தொவ்வாமையாக லின் பிணிகளுங் காரணத்தான் வருவன்வாயின.]

கூசக. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(இ - ள்.) மிகினும் குறையினும் - உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த வளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - ஆயுள்வேதமுடையாரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ்செய்யும்.

நூலோரெண்ணியவெனவே, அவர் அவற்றுள் வருத்த வாதப் பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதி யென்னும் பகுதிப்பாடும் பெற்றும். அவற்றிற் குணவொத்தலாவது சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்களொத்தலாவது மனமொழி மெய்களாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல்செய்யின், அவை தத்த நிலையி னில்லாவாய் வருத்துமென்பதாம். காரணமிரண்டும் அவாய்நிலையான் வந்தன. மூற்றும்மை விகாரத்தாற் றொக்கது. இதனால் யாக்கைகட் கியல்பாகிய நோய் மூவகைத்தென்பதூஉம், அவை துன்பஞ்செய்தற்காரணம் இருவகைத்தென்பதூஉம் கூறப் பட்டன. இன்பஞ்செய்தற் காரணம் முன்னர்க் கூறுப. (க)

கூசஉ. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

(இ - ள்.) அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற் றெளியவறிந்து பின் னுண்ணுமாயின்; யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம்.

குறிகளாவன யாக்கை நொய்ம்மை, தேக்கின் றூய்மை, கரணங்க டொழிற்குரியவாதல், பசிமிகுதலென விவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், 'யாக்கைக்' கென்றூர். 'உணி' னென்பது அதனருமை தோன்ற நின்றது. (உ)

கூசஙு. அற்ரு லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ரு னெடிதுய்க்கு மாறு.

(இ - ள்.) அற்ரூல் அளவு அறிந்து உண்க - முன்னுண்டது அற்ரூற் பின்னுண்பதனை அறுமளவறிந்து அவ்வளவிற்ரூக உண்க ;

உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும் பல வாய பிற யாக்கைகளிற் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுட யாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலங் கொண்டு செலுத்து நெறி அதுவாகலான்.

இம்மை மறுமை வீடுபேறுக ளெய்தற்பாலது ஈதொன்றுமே யாகலின் 'உடம்பு பெற்றீ' னென்றும், அது நெடிதுநின்றழி அவை பெருகச்செய்து கொள்ளலாமாகலின் 'நெடிதுய்க்குமா' றென்றுங் கூறினர். பெற்றானென்று பாடமோதுவாருமுளர். (நு)

நுசுச. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(இ - ள்.) அற்றது அறிந்து - முன்னுண்டது அற்றபடியை யறிந்து; துவரப்பசித்து - பின் மிகப்பசித்து; மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க - உண்ணுவ்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க.

'அற்றதறிந்' தென்னும் பெயர்த்துரை* அதனை யாப்புறுத்தற் பொருட்டு. உண்டது அற்றாலும் அதன்பயனாகிய இரதமாதலான் அதுவுமறல்வேண்டுமென்பார், மிகப்பசித்தென்றார். பசித்தலினை ஈண்டு உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற் றம்முண் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாத பித்த ஐகளாலைய பகுதிக்கடாதவற்றைச் செய்வனவாதலும் பெரும்பொழுது சிறுபொழுதென்னும் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்காகாமையும், தேனுநெய்யுந் தம்முளளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றூற் றுய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், 'கடைப்பிடித்' தென்றார். (சு)

நுசுடு. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம் மூவகை மாறுகோளுமில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டிய வளவினனன்றிப் பிணிவாராவளவினுல் ஒருவனுண்ணுமாயின்; உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவனுயிர்க்குப் பிணிகளாற் றுன்பம் விளைதலுண்டாகாது.

* முன்னர்க்கூறிய தொன்றனைப் பின்னரும் ஓரேதுக் கருதிக் கூறல்.

உறுவதனை ஊறென்றூர்; அஃது இன்பத்திற் செல்லாதாயிற்று, இல்லையென்பது தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல் வைத்துக் கூறினூர். மாறுபாடில்வழியுங் குறைதல் நன்றென்பதாம். இவை நான்கு பாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றதளவும், காலமும், பயனுங் கூறப்பட்டன. (இ)

கூசசு. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்.

(இ - ள்.) இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறைதலை நன்றென்றறிந்து அவ்வாறே யுண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறுபோல்; கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப்பெரிய இரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும்.

அவ்வாறே யுண்டல்: உண்ணலாமளவிற் சிறிது குறைய வுண்டல். 'இன்ப' மாவது வாதமுதலிய மூன்றும் தத்தநிலையிற் றிரியாமையின் மனமொழிமெய்கள் அவன் வயத்தவாதலும் அதனுன் அற முதலிய நான்கு மெய்தலுமாம். இரையை யளவின்றி யெடுத்து அதனுன் வருந்தும் விலங்கோடொத்தலின், 'இரையா' னென்றூர். விதியெதிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு. (ஈ)

கூசஎ. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்.

(இ - ள்.) தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன் பகுதியும் அதற்கேற்றவுணவும் காலமுமாராயாது வேண்டிய தோருணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத் தீயளவன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின்; நோய் அளவு இன்றிப் படும் - அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும்.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. 'நோய்' சாதியொருமை. இவையிரண்டு பாட்டானும் அவ்வகை யுண்ணுவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (எ)

கூசஅ. நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(இ - ள்.) நோய் நாடி - மருத்துவனையினுன் ஆதுரன்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணிந்து; நோய் முதல் நாடி - பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து

தெளிந்து; அது தணிக்கும் வாய் நாடி - பின் அது தீர்க்கு முபாயத்தினை யறிந்து; வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செய்க.

காரணம் உணவு செயலென மூற்கூறியவிரண்டும்* அவற்றை ஆயுள்வேதமுடையார் நிதானமென்ப. அவை நாடுதற்பயன் நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்துசெய்தல், உதிரங்கலேதல், அறுத்தல், சுடுதன்முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, 'அதுதணிக்கும்வா' யென்றார். "கழுவாயுமுள"† என்றார் பிறரும். பிழையாமை பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமையிற் றப்பாமை. (அ)

கூசக. உற்ற ளவும் பிணியளவுங் காலமுங்
கற்றன் கருதிச் செயல்.

(இ - ள்.) கற்றன் - ஆயுள்வேதத்தினைக் கற்ற மருத்துவன்; உற்றன் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் - அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால், ஆதுரனளவினையும் அவன்கணிகழ்கின்ற நோயினளவினையும் தன் செயற்கேற்ற காலத்தினையும் அந்நூனெறியால் நோக்கி, அவற்றோடு பொருந்தச்செய்க.

ஆதுரனளவு: பகுதி பருவம் வேதனை வலிகளினளவு. பிணியளவு: சாத்தியம், அசாத்தியம், யாப்பியமென்னுஞ் சாதிவேறுபாடும், தொடக்க நடு வீறென்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மைமென்மைகளு முதலாயின. காலம் மேற்சொல்லியன.‡ இம்மூன்றும் பிழையாமல் நூனெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்துசெய்க வென்பார், 'கற்றன் கருதிச் செய' லென்றார். இவையிரண்டு பாட்டானும் அவ்விழுக்குப்பட்டுழி மருத்துவன் நீர்க்குமாறு கூறப்பட்டது. (கூ)

கூஙo. உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானுற் கூற்றே மருந்து.

(இ - ள்.) மருந்து-பிணிக்கு மருந்தாவது; உற்றவன்-அதனையுற்றவன்; தீர்ப்பான் - அதனைத் தீர்க்கு மருத்துவன்; மருந்து - அவனுக்குக் கருவியாகிய மருந்து; உழைச் செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று - அதனைப்பிழையாமல் இயற்றுவானென்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது.

---

* கூசக - ஆம் குறளுரை.

† புறநானூறு - நக. ‡ கூசச - ஆம் குறளுரை.

நான்கென்னு மெண் வருகின்றமையின், அது நோக்கி 'அப்பா' லென்றெழிந்தார். நாற்கூற்ற தென்பது விகாரமாயிற்று. அவற்றுள் 'உற்றவன்' வகை நான்காவன : பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல் வன்மை, மருத்துத்தன்பம் பொறுத்த லெனவிவை. 'தீர்ப்பான்' வகை நான்காவன : நோய் கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியுநுண்ணறிவு முடைமை, பலுகாலுந் தீர்த்துவருதல், மனமொழிமெய்க டியவாத லெனவிவை. 'மருந்'தின் வகை நான்காவன : பலபிணிகட்குமேற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதினெய்தப் படுதல், பகுதியோடு பொருந்துதலெனவிவை. இயற்றுவான்வகை நான்காவன : ஆதுரன்மாட் டன்புடைமை, மனமொழிமெய்க டியவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல்வன்மை, அறிவுடைமை யெனவிவை. இவையெல்லாங் கூடியவழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் 'மருந்' தென்றார், ஆயுள்வேத முடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் பாதமென்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமு முதிர்ந்து அசாத்தியமாமென்றுங் கூறினார். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவன வெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன. (கo)

அங்கவியல் முற்றிற்று.

ங. ஒழிபியல்

இனி, அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்காதொழிந்த வற்றதியல்பு, பதின்மூன்றதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் குடிமை கூறுகின்றார்.

அதி. கசு—குடிமை

[அஃதாவது, உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகவின், அச்சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது.]

கூடுக. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(இ - ள்,) செப்பமும் நாணும் ஒருங்கு - செம்மையும் நாணும் சேர; இற்பிறந்தார்கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார் மாட்டல்லது பிறர்மாட்டியற்கையாக உளவாகா.

இல்லுக் குடி குலமென்பன ஒரு பொருள்; ஈண்டியர்ந்தவற்றின் மேல. செம்மை: கருத்துஞ் சொல்லுஞ் செயலுந் தம்முண் மாறுகாமை. நாண்: பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்கவேண்டாமற் றாமேயுளவாம், பிறர்க்காயிற் கற்பித்தவழியும் தெரிதலில்லாவென்பதாம். (க)

கூடுஉ. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) குடிப்பிறந்தார் - உயர்ந்தகுடியின்கட் பிறந்தார்; ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் - தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார்.

ஒழுக்க முதலியன மெய்ம் மொழி மனங்களினவாகலின், அம்முறையவாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், 'இழுக்கா'ரென்றார். (உ)

கூடுங. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(இ - ள்.) வாய்மைக் குடிக்கு - எக்காலத்தும் திரிபில்லாத குடியின்கட் பிறந்தார்க்கு; நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப - வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர்.

பொய்ம்மை திரிபுடைமையிற் றிரிபின்மையை 'வாய்மை' யென்றும், இல்லாரை யெல்லாரு மெள்ளுவ* ராகலின் இகழாமையை அவர் கூறுக்கியுங் கூறினர். 'குடி' ஆகுபெயர். நான்கின் வகை யென்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந் நான்கானுளதாமென் றுரைக்க. இவை மூன்று பாட்டானுங் குடிப்பிறந்தாரதியல்பு கூறப்பட்டது. (கூ)

கூடுச. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(இ - ள்.) அடுக்கிய கோடி பெறினும் - பலவாகவடுக்கிய கோடியளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும்; குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தம்மொழுக்கங் குன்றுந் தொழில்களைச் செய்யார்.

அடுக்கியகோடி' யென்பது ஈண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. குன்றுந்தொழில்கள் குன்றுதற்கேதுவாய தொழில்கள்.

கூடுடு. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரி தின்று. †

(இ - ள்.) பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட்பிறந்தார்; வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும் - தாங்கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கிய விடத்தும்; பண்பின் றலைப்பிரிதல் இன்று - தம் பண்புடைமையின் நீங்கார்.

தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல் அவர்க்கு நல்குரவாவது 'வழங்குவது உள்வீழ்'வதாகலின், அதனையே கூறினர். (இ)

கூடுசு. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(இ - ள்.) மாசு அற்ற குலம்பற்றி வாழ்தும் என்பார் - வசையற்று வருகின்ற நங் குடிமரபினையே டொத்து வாழக்கடவேமென்று

* குறள், எருஉ. † நாலடியார், கசக.

கருதி அவ்வாறு வாழ்வார் ; சலம்பற்றிச் சால்பு இல செய்யார் – வறுமையுற்ற வழியும், வஞ்சனையைப் பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார்.

அமைவின்மை: அம்மரபிற் கேலாமை. இவை மூன்று பாட்டானும் அவர் வறுமையுற்ற வழியும் அவ்வியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது. (சு)

கூடுஎ. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.*

(இ - ள்.) குடிப்பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்த குடியின்கட் பிறந்தார்மாட்டுளதாங் குற்றம் ; விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும் - தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித்தோன்றும்.

உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகையொத்துப் பான் மீறுபட்டது. குடியதுயர்ச்சியானும் மதிபோன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம். (எ)

கூடுஅ. நலத்தின்க ணின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

(இ - ள்.) நலத்தின்கண் ஈர் இன்மை தோன்றின் – குலநலமுடையனாய் வருகின்றவன்கண்ணே ஈரமின்மை யுளதாமாயின் ; அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் – அவனை அக் குலப்பிறப்பின் கண்ணே ஐயப்படும் உலகம்.

நலமும் குலமும் ஆகுபெயர். ‘ ஈரின்மை ’யாற் கொடாமையுங் கடுஞ்சொல்லு முதலிய கூறப்பட்டன. ‘ தோன்றி ’னென்பதுதோன்றுமை விளக்கிநின்றது. நலனுடையனாய் வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையான் வந்தது. ஐயப்படலென்பது பாடமாயின், ஐயப்படுகவென விதியாக்கியுரைக்க. இவை யிரண்டு பாட்டானும் வேறுபட்டவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (அ

கூடுக. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(இ - ள்.) நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும் ; குலத்திற் பிறந்தார்

* நாலடியார் - கடுக.

வாய்ச் சொல் காட்டும் - அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தார் வாயிற்சொற் காட்டும்.

'கிடந்தமை': உள்ளபடி. மூலத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், இலை முதலிய கூறாயினுர்: ஆகவே, பொருளினுஞ் செயன் முதலியன வேண்டாவாயின. குலத்தியல் பறிதற்கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்ற வாறுயிற்று. (க)

கூசுO. நலம்வேண்டி னுணுடைமை வேண்டுங் குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு.

(இ - ள்.) நலம்வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவனுயின், தானுணுடைமையுதலே வேண்டுக; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக - குலனுடைமையை வேண்டுவனுயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலே வேண்டுக.

'நலம்' புகழ் புண்ணியங்கள். 'வேண்டு' மென்பது விதிப்பொருட்டாய் நின்றது, "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்"* என்புழிப் போல. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்மூன்னோர் தந்தை தாயென்றிவ† ரெல்லாருமடங்க 'யார்க்கு' மென்றார். 'பணிவு' இருக்கையெழலும் எதிர்செலவும் ‡ முதலாயின. இவையிரண்டு பாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன. (கO)

அதி. கூஎ—மானம்

[இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் றொடங்கி, முதற்கண் மானங் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றுந் தங்நிலையிற் றழாமையும், தெய்வத்தாற் றாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது, அக் குடிப்பிறப்பினை நிறுத்துத லுடைமையின், அச் சிறப்புப்பற்றி முன்வைக்கப்பட்டது.]

கூசுக. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.§

---

* தொல். சொல். இளவியாக்கம் - நக.

† புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண் - நக, ‡ நாலடியார்-கசந, § நாலடியார் நOO.

(இ - ள்.) இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செய்யாத வழித் தாம் அமையாத சிறப்பினையுடையவே யெனினும்; குன்ற வருப விடல் - தங் குடிப்பிறப்புத் தாழவருஞ் செயல்களே யொழிக.

அமையாமை, இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகார முறைமையான் வந்தது. இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும், மான்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்கவென்பதாம். (க)

ங்சுஉ. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ - ள்.) சீரினும் சீர் அல்ல செய்யார் - புகழ்செய்யுமிடத்தும் தங் குடிமைக் கொவ்வாத இளிவரவுகளைச் செய்யார்; சீரொடு பேராண்மை வேண்டுபவர் புகழுடனே மானத்தை நிறுத்துதலே விரும்புவார்.

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்பற்றிப் 'பேராண்மை' யெனப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யாரென்பதாம். (உ)

ங்சுஙட. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

(இ - ள்.) பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும் - குறைந்த நல்குரவுளதாயவழிப் பணியாமை வேண்டும்.

'பணி' யாமை தாழ்வு வாராமற் பழையவுயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாந் தாழ்தலும், அல்லற் காலை அது தாழ்வுசெய்யத் தாமுயர்தலும் வேண்டுமென்பதாம். இவை மூன்று பாட்டானும் தாந் தாழ்தற்கேதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது. (ங)

ங்சுங. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(இ - ள்.) மாந்தர் - குடிப்பிறந்த மாந்தர்; நிலையின் இழிந்தக் கடை - தம்முயர்ந்த நிலையை விட்டு அதனினின்றுந் தாழ்ந்தவழி; தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினையொப்பர்

அந்நிலையை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும், உவமையாற் பெற்றும். (சு)

கசுடு. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(இ - ள்.) குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந்தோரும்; குன்றுவ குன்றி அனைய செயிற் குன்றுவர் - தாழ்தற்கேதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினுஞ் செய்வராயிற் ருழ்வர்.

குன்றியனையவு மென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் ரொக்கது. தாழ்தற் கேதுவாய செயல்களாவன இளிவந்தன. சொற் பின்வருநிலை. (டி)

கசுசு. புகழின்ரூற் புத்தேணைட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று* நிலை.

(இ - ள்.) இகழ்வார்பின் சென்று நிலை - மானத்தை விட்டுத் தன்னை யவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்றநிலை; புகழ் இன்று - இவ்வுலகத்துப் புகழ் பயவாது; புத்தேள் நாட்டு உய்யாது - எனைப் புத்தேளுலகத்துச் செலுத்தாது; மற்று என் - இனி அவனுக்கு அது செய்வதியாது?

புகழ் பயப்பதனைப் 'புக' ழென்ரூர். பயனுய இவ்விரண்டு மின்றிக் கொன்னே மானங்கெடுகின்றது என்னை யென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவை செய்தற்குற்றங் கூறப்பட்டது. (சு)

கசுஎ. ஒட்டார்பின் சென்ரூருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(இ - ள்.) ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின் - தன்னை யிகழ்வார்பின்னேசென்று பொருள்பெற்று அதனலொருவன் உயிர் வாழ்தலின்; அந்நிலையே செட்டான் எனப்படுதல் நன்று - அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

ஒட்டுதல்: பொருந்துதல். 'அந்நிலையே' யென்றது செல்லாத முன்னைநிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதே யென்றுமாம். புகழும் புத்தேணுடும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர் வாழ்வா மென்பாரை நோக்கிக் கூறியது. (எ)

* நாலடியார் - உகஉ.

கசுஅ. மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

(இ - ள்.) பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து - உயர் குடிப் பிறப்புத் தன் வலியாகிய மானம் அழிய வந்துழி ; ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இறத்தலொழிந்து பயனில் லாத வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னுமிறவாமைக்கு மருந் தாமோ !

'மற்' றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றி நின்றது. நற்குணங்கட்கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றிப் 'பெருந்தகைமை' யென்றும், அவை யெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப் பற்றிப் 'பீ' டென்றும், அஃதழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப் படுதலின் அதனை 'ஊ' னென்றும், பின்னுமிறத்தல் ஒருதலை யென் பார் 'மருந்தோ' வென்றுங் கூறினர். மானத்தின் றொழில் அதற் கிடனுகிய குடிப்பிறப்பின்மே னின்றது. (அ)

கஅக. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

(இ - ள்.) மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னர் - தன் மயிர்த் திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானையொப்பார் ; மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர்நீக்கத் தான் மானமெய்து மெல்லை வரின், அதனைத் தாங்காதிறப்பர்.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உயிரும் மான மும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து, எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை யெய்துவரென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது. (கூ)

கஎ0. இளிவரின் வாழாத மானமுடையார்
ஒளிதொழு தேத்து முலகு.

(இ - ள்.) இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக் கோரிழிவு வந்துழிப் பொறுத்து உயிர்வாழாது அதனை நீத்த மான முடையாரது புகழ் வடிவினை ; தொழுது ஏத்தும் உலகு - எஞ்ஞான் றுந் தொழுது துதியாநிற்பர் உலகத்தார்.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்து"* வராகலின், துறக்கச்செலவு சொல்ல வேண்டாவாயிற்று. இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது. (கo)

* புறநானூறு - உள.

அதி. கூஅ—பெருமை

[அஃதாவது, செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர்குற்றங் கூறுமை என்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை, நிலையினு மேன்மேலுயர்த்தற்* பயத்தவாயவிவை உளவாவது நிலையிற் றழாமை யுள்வழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப்பட்டது.]

கூஎக. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

(இ - ள்.) ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனுக் கொளியாவது பிறராற் செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்கமிகுதி; ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச்செயலை யொழிந்து உயிர்வாழக்கடவேமென்று கருதுதல்.

'ஒளி': தானுளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. "ஒளிநிறு நெஞ்சுபுகழ் செய்யான்"† என்றார் பிறரும். மேலும் "செயற்கரிய செய்வார் பெரிய"‡ ரென்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினுளைய பெருமையை அதன் காரணத்தின் மேலிட்டு 'உள்ள வெறுக்கை' யென்றும், அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினார். இவ்வாறு இதனெதிர்மறைக்கண்ணுமொக்கும். இதனாற் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது. (க)

கூஎஉ. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(இ - ள்.) எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும்; சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் - பெருமை சிறுமையெனப்பட்ட சிறப்பியல்புகளொவ்வா, அவை செய்யுந் தொழில்களது வேறுபாட்டான்.

வேறுபாடு: நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதின்பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் 'பிறப்

* நாலடியார் - உசஅ. † நாலடியார் - கூ. ‡ குறள் - உசு.

பொக்கு' மென்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்* ஆகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' வென்றுங் கூறினர். (உ)

நகூஎந. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(இ - ள்.) மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்கலாது சிறியராயினர், உயர்ந்த வமளிமுதலியவற்றின் மிசையிருந்தாராயினும், பெரியராகார்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் - அவைசெய்து பெரியராயினர், தாழ்ந்த வறுநிலத்திருந்தாராயினும், சிறியராகார்.

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களாற் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இவை யிரண்டு பாட்டானும் முறையே குடிமைமாத்திரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதுளதாகாமை கூறப்பட்டது. (ந)

நகூஎச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(இ - ள்.) ஒருமை மகளிரே போல - கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் றம்மைத்தாங் காத்துக்கொண்டொழுகுமாறு போல; பெருமையும் தன்னைத்தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக்குணனும், ஒருவன் நிறையின் வழுவாமற் றன்னைத்தான் காத்துக்கொண் டொழுகுவானுயின் அவன்கணுண்டாம்.

பொருளின்றொழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்றநின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழி மெய்களை யொடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனுல் அஃதுளதாமாறு கூறப்பட்டது. (ச)

நகூஎடி. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

(இ - ள்.) பெருமை உடையவர் - அவ்வாற்றுற் பெருமையுடையராயினர்; அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் - தாம் வறியராயவழியும் பிறராற் செய்தற்கரியவாய தஞ்செயல்களை விடாது அவை செய்யு நெறியாற் கடைபோகச் செய்தலை வல்லராவர்.

---

* குறள் - நூ0டு.

வறியராயவழியுமென்பது, முன்செய்து போந்தமை தோன்றப் 'பெருமையுடையவ' ரென்றதனானும், 'ஆற்றுவா' ரென்றதனானும் பெற்றும். இதனால் அதனையுடையார் செய்தி கூறப்பட்டது. (இ)

கூஎசு. சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(இ - ள்.) பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு - அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினையாங் கோடுமென்னுங் கருத்து; சிறியார் உணர்ச்சியுள் இல்லை - மற்றைச் சிறியராயினுர் மனத்தின்கண் உளதாகாது.

குடிமை, செல்வம், கல்வியென் றிவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடாதென்பதாம். (சு)

கூஎஎ. இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

(இ - ள்.) சிறப்புந் தான் - தனக்கொக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும்; சீர் அல்லவர்கட் படின் - தனக்கொவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின்; இறப்பே புரிந்த தொழிற்ரும் - அதனை யொழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலையுடைத்தாம்.

தருக்கினை மிகச்செய்யு மென்பதாயிற்று. 'சிறப்பு' : குடிமை. செல்வம், கல்விகளினுய மிகுதி. இவை யிரண்டு பாட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது. (எ)

கூஎஅ. பணியுமா மென்னும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(இ - ள்.) பெருமை என்னும் பணியும் - பெருமையுடையார் அச்சிறப்புண்டாய ஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுகுவர்; சிறுமை (என்னும்) தன்னை வியந்து அணியும் - மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாத ஞான்றுந் தம்மை வியந்து புனையாநிற்பர்.

பொருளின் றொழில்கள் பண்பின்மே லேற்றப்பட்டன. இஃது 'அற்றமறைக்கும் பெருமை'* யென்புழியுமொக்கும். 'என்று' மென்பது பின்னும் வந்தியைந்தது. 'ஆ' மென்பனவிரண்டும் அசை. புனைதல் : பிறரிற் றமக்கோர் மிகுதியை யேற்றிக்கோடல். இதற்கு,

* குறள் . கூஅO.

உயர்ந்தார் தாழ்வார், தாழ்ந்தார் உயர்வார், இஃதொரு விரோத மிருந்தவாறென்னென உலகியலே வியந்து கூறிற்றுக்குவாருமுளர்.

கூஎக. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

(இ - ள்.) பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குண மாவது காரணமுண்டாயவழியும் அஃதியல்பாதலேக்கித் தருக்கின்றியிருத்தல்; சிறுமை பெருமிதம் ஊர்ந்துவிடல் - சிறுமைக் குணமாவது அஃதில்வழியும் அதனை யேற்றிக்கொண்டு தருக்கின் முடிவின்கண்ணே நின்றுவிடுதல்.

அளவறத் தருக்குத லென்பதாயிற்று. விடுமென்று பாட மோதுவாருமுளர்*; முற்றுத்தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முளியையாமையின், அது பாடமன்மை யுணர்க. சூ

கூஅO. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(இ - ள்.) பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறையாகிற்பர்; சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச் சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர்.

மறைத்தலுங் கூறலும் ஏனையிடத்து மியைந்தன. 'அற்றம்' ஆகுபெயர். 'தா' னென்பது அசை. இவை மூன்று பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன. (கO)

அதி. கூகூ—சான்றாண்மை

[அஃதாவது, பலகுணங்களானு நிறைந்து அவற்றையாடற்றன்மை. பல குணங்களானுமென்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.]

கூஅக. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(இ - ள்.) கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு - நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்

* மணக்குடவர்.

கொண்டொழுகுவார்க்கு; நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர்.

சிலகுணங்க ளிலவாய்வழியும், உள்ளன செய்துகொண்டன வாயவழியுஞ் 'சான்றாண்மை' யென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம். (க)

கூஅஉ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

(இ - ள்.) சான்றோர் நலன் குணநலமே - சான்றோர் நலமாவது குணங்களாலாய நலமே; பிற நலம் எந்நலத்து உள்ளதூஉம் அன்று - அஃதொழிந்த வுறுப்புக்களாலாய நலம் ஒருநலத்தினுமுள்ளதன்று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் 'பிறநல' மென்றும், அது குடிப்பிறப்புங் கல்வியு முதலாக நூலோரெடுத்த நலங்களுட் புகுதாமையின் 'எந்நலத் துள்ளதூஉ மன்' றென்றுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானும் சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன. உ

கூஅங. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்.

(இ - ள்.) அன்பு - சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலுமுளதாய வன்பும்; நாண் - பழிபாவங்களி னஞ்சலும்; ஒப்புரவு - யாவர்மாட்டு மொப்புரவு செய்தலும்; கண்ணோட்டம் - பழையார்மேற் கண்ணோடலும்; வாய்மை - எவ்விடத்தும் மெய்ம்மைகூறலுமென; சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்க ளைந்து.

எண்ணெடு முன்னவற்றோடுங் கூடிற்று. இக்குணங்க ளில் வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் 'தூ' ணென்றார். எகதேசவுருவகம். (கூ)

கூஅச. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(இ - ள்.) நோன்மை கொல்லா நலத்தது - பிறவறங்களும் வேண்டுமாயினுந் தவம் ஒருயிரையுங் கொல்லாத வறத்தின்கண்ணதாம்; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது - அதுபோலப் பிற

குணங்களும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கண்ணதாம்.

'நல' மென்னும் ஆகுபெயர்ப்பொரு ளிரண்டனையுந் தலைமை தோன்ற இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றஞ் சொல்லாக்குணஞ் சிறந்ததென்பதாம். (சு)

கூஅஙி. ஆற்றுவா ராற்றல் பணிதல தெனசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

(இ - ள்.) ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரதாற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்; சான்றோர் மாற்றுரை மாற்றும் படை அது - இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமை யொழிக்குங் கருவியும் அது.

'ஆற்றல்': அது வல்லராந்தன்மை. இறந்ததுதழீஇய வெச்ச வும்மை விகாரத்தாற் றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற்குணத்தது சிறப்புக்கூறுவார், ஏனையது முன்கூறினர். (ஙி)

கூஅசு. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

(இ - ள்.) சால்பிற்குக் கட்டளை யாது எனின் - சால்பாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின்; தோல்வி துலை அல்லார்கண்ணும் கொளல் - அது தம்மினுயர்ந்தார் மாட்டுக்கொள்ளுந் தோல்வியை இழிந்தார்மாட்டுங் கோடல்.

'துலை' - ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல்: வெல்லுமாற்றலுடையரா யிருந்தே ஏற்றுக்கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல்கருதித் தம்மோ டொப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரினுயர்வரா யின், அதனுற் சால்பளவறியப்படு மென்பதாம். (கூ)

கூஅஎ. இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

(இ - ள்.) இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக்கின்னுதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின்; சால்பு என்ன பயத்தது - அச்சால்பு வேறென்ன பயனையுடைத்து?

சிறப்பும்மை அவர் இன்னுசெய்தற்கிடனுதல் விளக்கிநின்றது. 'ஓ'காரம் அசை. வினு எதிர்மறைப்பொருட்டு. தாமுமின்னு செய்வராயின், சால்பா லொருபயனுமில்லை யென்பதாம். இவையைந்து பாட்டானுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்டது. (எ)

கூஅ. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
தின்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - சால்பென்று சொல்லப்படும் வலியுண்டாகப்பெறின்; ஒருவற்கு இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது.

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. 'இன்மையான் வருவதனை 'இன்மை'தானுக உபசரித்துக் கூறினர். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடையரென்பதாம். (அ)

கூஅகூ. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ - ள்.) சான்ருண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார்; ஊழி பெயரினும் தாம் பெயரார் - ஏனைக் கடலுங் கரையுணில்லாமற் காலந் திரிந்தாலும் தாந் திரியார்.

சான்ருண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃதுடையாரைக் கரையாக்கியுங் கூறினர்; "பெருங்கடற் காழி யனையன் மாதோ"* என்ருர் பிறரும். ஏகதேசவுருவகம். (கூ)

கூகூ. சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை.

(இ - ள்.) சான்றவர் சான்ருண்மை குன்றின் - பல குணங்களானு நிறைந்தவர் தந்தன்மை குன்றுவராயின்; இருநிலந்தான் பொறை தாங்காது - மற்றை யிருநிலந்தானுந் தன் பொறையைத் தாங்காதாய் முடியும்.

தானுமென்னு மெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அவர்க்கது குன்றுமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவையெஞ்ஞான்று முளவாகாவென்பது தோன்றநின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. 'ஓ'காரம் அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாகவருதலான், அதுவும் அது தாங்கலாற்றுதென் றுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவற்றுணிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது. (கo)

* புறநானூறு - கூகo.

அதி. கoo—பண்புடைமை

[அஃதாவது, பெருமை சான்றாண்மைகளிற் றும் வழுவாதுநின்றே எல்லாரியல்புகளு மறிந் தொத்தொழுகுதல்; "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"* என்றார் பிறரும். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கூகூக. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ - ள்.) யார்மாட்டும் எண் பதத்தால் - யாவர்மாட்டு மெளிய செவ்வியராதலால்; பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினை யெய்து தல் எளிதென்று சொல்லுவர் நூலோர்.

குணங்களா னிறைந்து செவ்வியெளியருமாயக்காற் பண் புடைமை தானே உளதாமாகலின், 'எண்பதத்தாலெய்த' லெளிதென் றும், அஃதுலகத்தையெல்லாம் வசிகரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொல்லோர்சென்ற நன்னெறியாக்கியும், அதனை யெளிது னெய்து தற்கு இது நூலோரோதிய வுபாயமென்பார் அவர்மேல் வைத்துங் கூறினர். (க)

கூகூஉ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ - ள்.) அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண் டும் - பிறர்மே லன்புடையனாதலும் உலகத்தோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும்; பண்புடைமை என்னும் வழக்கு - ஒருவனுக்குப் பண்புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி.

*அமைதல் - ஒத்துவருதல். 'குடிப்பிறத்த' லென்றது பிறந்தார் செயலை. தனித்தவழி ஆகாது இரண்டுங் கூடியவழியே ஆவதென் பது தோன்ற, முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவை யிரண்டு பாட்டானும் பண்புடையராதற் காரணங் கூறப்பட்டது. (உ)

கூகூங. உறுப்பொத்தன் மக்களொப் பன்ருல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

(இ - ள்.) உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - செறியத் தகாத வுடம்பா லொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோ டொப்பாகாமை

* கலித்தொகை - கங.உ.

யின் அது பொருந்துவதன்று ; ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் - இனிப் பொருந்துவதாய வொப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல்.

வடநூலார் அங்கமென்றமையின், 'உறுப்' பென்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படுமொப்பாவது உயிரின்வேறாய் நிலையுதலில்லாவுடம்பொத்தலன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையரென்பதாம். (உ)

கூகூ. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

(இ - ள்.) நயனெடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு - நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை ; உலகு பாராட்டும் - உலகத்தார் கொண்டாடாநிற்பர்.

'புரிந்த' வென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனெடு நன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப் 'பாராட்டு' மென்றார். (ச)

கூகூரு. நகையுள்ளு மின்ன தீகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(இ - ள்.) இகழ்ச்சி நகையுள்ளும் இன்னாது - தன்னையிகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது ; பாடு அறிவார் மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள - ஆகலாற் பிறர்பாடறிந்தொழுகுவார்மாட்டுப் பகைமையுள்வழியும் அஃதுளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன.

'பாடறிவா' ரெனவே, அவ்வின்னுமை யறிதலும் பெற்றும். அதனையறிந்தவர் பின் அது செய்யார், இனியவே செய்வாரென்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடருந் தம்மூளையாம லுரைப்பாரும், 'இன்ன' தென்னுஞ் சொற்குப் பிறவாதென்றுரைப்பாருமாயினர். (டு)

கூகூசு. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

(இ - ள்.) பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றுமுண்டாய் வாரா

நின்றது; இன்றேல் அது மண்புக்கு மாய்வது - ஆண்டுப் படுதலில்லையாயின், அது மண்ணின்கட் புக்கு மாய்ந்துபோவதாம்.

படவென்பது திரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பில்லார் சார்பன்மையின் ஓர் சார்புமின்றி மண்ணின்கட்புக்கு மாயுமது வேண்டாவாயிற் றென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. இவை நான்கு பாட்டானும் அதனையுடையார துயர்ச்சி கூறப்பட்டது. (கூ)

கூகூஎ. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(இ - ள்.) மக்கட்பண்பு இல்லாதவர் - நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர்; அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மை போலும் கூர்மையையுடையரே யாயினும்; மரம் போல்வர் - ஓரறிவிற்குரிய மரத்தினை யொப்பர்.

'அரம்' ஆகுபெயர். ஓரறிவு ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள், முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய பொருள்பற்றி வந்தது; எனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனுய மக்கட்பண்பின்மையின், அது தானுமில்லை யென்பதாயிற்று. (எ)

கூகூஅ. நண்பாற்ரு ராசி நயமில செய்வார்க்கும்
புண்பாற்ரு ராதல் கடை.

(இ - ள்.) நண்பு ஆற்ரு ராகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு கட்பினைச் செய்யாது பகைமையைச் செய்தொழுகுவார் மாட்டும்; பண்பு ஆற்ரு ராதல் கடை - தாம் பண்புடையரா யொழுகாமை அறிவுடையார்க் கிழுக்காம்.

'நயம்' - ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்ரு மைக் கிடனுதல் தோன்றநின்றது. அதனைச் செய்யிற் ரூமும் அவர் தன்மையரா வரென்பார், 'கடை' யென்ரூர். (அ)

கூகூகூ. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் ரிருள்.

(இ - ள்.) நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடுங்கலந்து உண்மகிழ்தன் மாட்டாதார்க்கு; மாயிரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று - மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட் கிடந்ததாம்.

எல்லாரோடும் கலந்தறியப் பெருமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட் பட்டதென்றார். பாழ்பட்டன்றிருளென்று பாடமோதி, இருணீங்கிற்றன் றென்றுரைப் பாருமுளர். (கூ)

கஂஂஂ. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(இ - ள்.) பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் - பண்பில்லாதவன் முன்னை நல்வினையாலெய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்; நன்பால் கலம் தீமையால் திரிந்தற்று - நல்ல ஆன்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன் சுவைத்தாகாது கெட்டாற்போலும்.

கலத்தீமையென்பது மெலிந்துநின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்கு மாற்றலிலஞ்ஞை றேன்றப் 'பெற்ற' வென்றும்; எல்லாப் பயனுங் கோடற்கேற்ற இடனுடைமை தோன்றப் 'பெருஞ்செல்வ' மென்றுங் கூறினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனான் வருகின்ற அதிகாரப் பொருண்மையுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்கு பாட்டானும் அஃதில்லாரதிழிவு கூறப்பட்டது. (கஂ)

அதி. கஂக—நன்றியில் செல்வம்

[அஃதாவது, ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினதியல்பு. உடையானது குற்றஞ் செல்வத்தின்மேலேற்றப்பட்டது. அதிகாரமுறைமை மேற்றோற்றுவாய் செய்தவதனாற் பெற்றும்.]

கஂஂக. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

(இ - ள்.) வாய்சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணான் - தன்மனையகலமெல்லாம் நிறைதற்கேதுவாய பெரும் பொருளை யீட்டிவைத்து உலோபத்தால் அதனையுண்ணாதவன்; செத்தான் செயக் கிடந்தது இல் - உளனாயினுஞ் செத்தானும்; அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோ ருரிமையின்மையான்.

'வைத்தா'னென்பது முற்றெச்சம். உண்ணுதல் : அதனை னோம் புலன்களையும் நுகர்தல். 'வாய்சான்ற பெரும்பொரு'ளை வைத்தானொருவன் அதனையுண்ணாது செத்தவழி அதன்கண் அவனுற்செய்யக்

இடந்தேரு நிரிமையில்லே யாகலான், வையாது பெற்ற பொழுதே நுகர்கவென் நுரைப்பினு மமையும். இதற்குச் 'செத்தா' னென்பது எச்சம். இதனால் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

கoo உ. பொருளாரு மெல்லாமென் நீயா நிவறு
மருளாரு மாணப் பிறப்பு.

(இ - ள்.) பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளொன்று முண்டாக அதனு லெல்லாமுண்டா மென்றறிந்து அதனேயீட்டி; ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கீயாது பற்றுள்ளஞ்செய்யு மயக்கத்தாலே; மாணப் பிறப்பு ஆம் - ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப்புண்டாம்.

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க 'எல்லா' மென்றும், ஈட்டுதற்குமுன்னுண்டாயவறிவு பின் மயங்குதலின் 'மரு'ளென்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினேபற்றி உணவுகளுளவாயிருக்கப் பசித்துவருந்தும் 'பிறப்பு' ளதா மென்றுங் கூறினர். (உ)

கoo ஊ. சட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ - ள்.) ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின்மிக வீட்டுதுமென்று பொருளின நீட்டன் மாத்திரத்தையே விரும்பி அதன்பயனுய புகழை விரும்பாத மக்களது பிறப்பு; நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரமா மத்துணேயே.

'இசை' இருமைக்கு முறுதியாய அறமாகலின் ஈகையான்*, அதனேயே வேண்டல் செய்யாது ஈட்டற் றுன்பத்தையும் காத்தற் றுன்பத்தையும் வேண்டிய வறிவின்மைபற்றி, 'நிலக்குப்பொறை' யென்றூர். பிறப்பென்றது அதற்குரிய வுடம்பினே. (ந)

கoo எ. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

(இ - ள்.) ஒருவரால் நச்சப்படாஅதவன் - ஒருபொருளுமீந்தறி யாமையின் ஒருவராலும் நச்சப்படுதலில்லாதவன்; எச்சமென்று என் எண்ணுங்கொல் - தானிறந்த வழி ஈண்டொழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ?

ஈண்டொழிந்து நிற்கும் புகழ்† ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக் கதனேடியாது மியைபில்லே யென்பார், 'என்னெண்ணுங்

* குறள் - உஙக. † குறள் - உஙஉ.

கொல்லோ' வென்றார். 'ஓ' காரம் அசை. இவை மூன்று பாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (சு)

க00டு. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினு மில்.

(இ - ள்.) கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கீவதும் தானுகர்வதுமாய இரண்டு செய்கையுமுடையரல்லாதார்க்கு ; அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாக வடுக்கிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லை.

இன்பத்தினும் அறஞ்சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற் கூறப்பட்டது. 'அடுக்கிய கோடி' யென்றது ஈண்டெண்ணப்படும் பொருண்மே னின்றது. ஒன்று மில்லார்போலப் பயனிரண்டுமிழந் தலின், 'இல்' லென்றார். (டு)

க00சு. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றீக்கார்க்கொன் றீத லியல்பிலா தான்.

(இ - ள்.) தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பிலா தான் - தானுகராஞாய் அதன்மேலுக் தகுதியுடையார்க்கு அவர் வேண்டிய தொன்றனை ஈதலியற்கை யிலஞயினன் ; பெருஞ்செல் வம் ஏதம் - இரண்டுஞ் செய்தற் கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய்.

தகுதி : தானங்கோடற் கேற்புடைமை. 'ஏதம்' ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்றாக்கின மையின், நோயென்றார். 'ஈதலியல்பிலா' தானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தன் முதலியவற்றால் துன்பமே*யாமென் றுரைப்பாரு முளர். இவை இரண்டு பாட்டானும் அவ்விருமையும் உடன்கூறப்பட்டன. (சு)

க00எ. அற்றார்க்கொன் றாற்றுதான் செல்வ மிகநலம் பெற்று டமியண்மூத் தற்று.

(இ - ள்.) அற்றார்க்கு ஒன்று ஆற்றுதான் செல்வம் - ஒரு பொருளுமிலராயினார்க்கு அவர் வேண்டிய தொன்றனைக் கொடாதா னது செல்வம் கொன்னே கழிதல் ; மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பா ரின்மையிற் கொழுநனின்றித் தமியளாய் மூத்த தன்மைத்து.

* நாலடியார் - உஅ0.

'நலம்' வடிவினன்மையும் குணத்தினன்மையும். இரண்டு மொருங்கு பெறுதலரிதாகலின், 'பெற்ற' லென்றார். கொடுப் பாருங் கொழுஞனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரி யோடுவமை கூறினமையின், தானு மேற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியுமென்பதாயிற்று. (எ)

கOOஅ. நச்சப் படாதவன் செல்வ நடுஙரு
ணச்சு மரம்பழுத் தற்று.*

(இ - ள்.) நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க் கணியனு யிருந்தும் ஒன்றுங் கொடாமையின் அவரா னச்சப்படாதவன் செல்வமெய்துதல்; ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்தற்று - ஊரிடை நிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற்போலும்.

'நடுஙு' ரென்பது பின்முன்னுகத் தொக்க வாரும்வேற்றுமைத் தொகை. அண்மையுடைமைகளாற் பயனில்லை யென்பதாம். (அ)

கOOக அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொன்பொருள் கொள்வார் பிறர்.

(இ - ள்.) அன்பு ஓரீஇ - ஒருவன் கொடாமைப் பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலை யொழிந்து; தற்செற்று - வேண்டுவன நுகராது தன்னைச் செறுத்து; அறம் நோக்காது - வறியார்க்கு ஈதன் முதலியவறத்தை நினைப்பதுஞ் செய்யாது; ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய வொள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர்.

பயனுய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளாலுள்ளது ஈட்டற்றுன்பமே யென்பது தோன்ற 'ஈட்டிய' வென்றும், அவன்வழியி லுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்றப் 'பிற' ரென்றுங் கூறினர். (க)

கOஉO. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி -
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(இ - ள்.) சீர் உடைச் செல்வர் சிறுதுனி - புகழுடைத்தாய செல்வத்தினையுடையவரது நிற்குங் காலஞ் சிறிதாய வறுமை; மாரி வறங்கூர்ந்தனையது உடைத்து - உலகத்தையெல்லாம் நிலை நிறுத்துமேகம் வறுமை மிக்காற்போல்வதோ ரியல்பினையுடைத்து.

* நாலடியார் - உஙக.

'துனி' - வெறுப்பு; அதனைச்செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதினீங்குதலிற் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமையாற் பெறப்பட்டது; பட்வே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படா தென்பதாயிற்று. இதற்குச் சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரிவறங் கூர்ந்தனைய தன்மையையுடைத்தென அதிகாரத்தோடு பொருந் தாமை மேலும், ஓர் பொருட்டொடர்புபடாம லுரைப்பாருமுளர். இவை நான்கு பாட்டானும் அச் செல்வத்தது குற்றங் கூறப்பட்டது.

அதி. கo2—நாணுடைமை

அஃதாவது, மேற்சொல்லிய சால்பு பண்புமுதலிய குணங்களா லுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடைய ராந்தன்மை. அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.]

கoகக. கருமத்தா னாணுத னாணுத் தீருநுத
னல்லவர் நாணுப் பிற.

(இ - ள்.) நாணுக் கருமத்தால் நாணுதல் - நன்மக்கணாணுவது இழிந்த கருமங்காரணமாக நாணுதல்; பிற திருநுதல் நல்லவர் நாணு - அஃதன்றி மனமொழிமெய்களை தொடுக்கத்தான் வருவனவோ வெனின், அவை அவரளவல்ல, அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள்.

'பிற குலமகளிர் நாணென்றதனுன் ஏனையது நன்மக்க ணாணென்பதும், 'நாணுத' லென்றதனுற் கருமத்தழிவும் பெற்றும். 'திருநுதனல்லவ' ரென்பது புகழ்ச்சிக்குறிப்பு. ஏதுப்பன்மைபற்றிப் 'பிற' வென்றார். இனி அற்றமறைத்தன் முதலியன பொதுமகளிர் நாணே டொக்குமென் றுரைப்பாருமுளர்;* அவர்க்கு நாண் கேடு பயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர் பெயராற் கூறப் படாமையானும் அஃதுரையன்மை யறிக. இதனுன் நாணினதிலக் கணங் கூறப்பட்டது. (க)

கoகஉ. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(இ - ள்.) ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல - ஊணும் உடையும் அவையொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்

* மணக்குடவர்.

லாம் பொது; மாந்தர் சிறப்பு நாணுடைமை - நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல.

ஒழிந்தன உறக்கமும் அச்சமும் காமமும். 'சிறப்பு': அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சமென்று பாடமோதுவாருமுளர். (உ)

கoகஉ. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(இ - ள்.) உயிரெல்லாம் ஊனைக் குறித்த - எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனுகக் கொண்டு அதனைவிடா; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனுகக்கொண்டு அதனை விடாது.

உடம்பென்பது சாதி யொருமை. 'நன்மை' ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடி யல்லது பயனெய்தாதவாறுபோலச் சால்பு நாணேடுகூடியல்லது பயனெய்தா தென்பதாம். ஊனைக்குறித்த வென்று பாடமோதுவாருமுளர்.* (உ)

கoகஊ. அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை.

(இ - ள்.) சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றே - சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடு நடை பிணியன்றே - அவ்வாபரண மில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

அழகு செய்தலின் 'அணி' யென்றும், பொறுத்தற் கருமையிற் 'பிணி' யென்றுங் கூறினர். 'ஏ' காரவிடைச்சொற்கள் எதிர்மறைக் கண் வந்தன. இவை மூன்று பாட்டானும் அதன் சிறப்புக் கூறப் பட்டது. (ஊ)

கoகஎ. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

(இ - ள்.) பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை; உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக் குறைவிடமென்று சொல்லுவர்.

ஒப்பமதித்தல்: அதுவுந் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக் கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும்

* மணக்குடவர்.

புகழ்வரென்பதாம். இதனால் அதனை யுடையாரது சிறப்புக் கூறப் பட்டது. (கு)

கoகசு. நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

(இ - ள்.) மேலாயவர் - உயர்ந்தவர்; வேலி நாண் கொள் ளாது - தம்க்கேமமாக நாணினைக் கொள்வதன்றி; வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக்கொள்ள விரும்பார்.

பழிபாவங்கள் புகுதாமற் காத்தலின், 'வேலி'யென்றார். நாணும் ஞாலமுந் தம்முண் மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுது நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பாரென்ப தாம். 'மன்'னும், 'ஓ'வும் அசை. நாணுகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென் றுரைப்பாருமுளர். (சு)

கoகள. நாண ுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவர் நாணுள் பவர்.

(இ - ள்.) நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பறிந்து அதனை விடாதொழுகுவார்; நாணுல் உயிரைத் துறப்பர் - அந்நா ணுமுயி ருந் தம்முண் மாறுயவழி நாண் சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர்; உயிர்ப்பொருட்டு நாண் துறவார் - உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண்சிறந்த தென்பதாம். இவை யிரண்டு பாட் டானும் அவர்செயல் கூறப்பட்டது. (எ)

கoகஅ. பிறர்நாணத் தக்கது தானு ணுயி
னறநாணத் தக்க துடைத்து.

(இ - ள்.) பிறர் நாணத்தக்கது தான் நாணுணுயின் - கேட் டாருங் கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தானுணுதுசெய்யு மாயின்; அறம் நாணத்தக்கது உடைத்து - அந்நாணுமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினை யுடைத்து.

தானெனச் செய்வானைப் பிரிக்கின்ரு ராகலின், 'பிற' ரென் ரார். நாணே டியைபில்லா தானை அறஞ்சாரா தென்பதாம். (அ)

கoகக. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

(இ - ள்.) கொள்கை பிழைப்பின் குலஞ் சுடும் - ஒருவனுக் கொழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பொன்

றனையுங் கெடுக்கும்; நாணின்மை நின்றக்கடை உலம் சுடும் - ஒருவன் மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும்.

நிற்றல்: ஒருபொழுது நீங்காமை. 'உலம்' சாதியொருமையாக லின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றுள் வந்தன வெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்கவழிவினும் நாணழிவு இறப்பத் தீதென்பதாம். (கூ)

கoஉo. நாணைத் தில்லா தியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று.

(இ - ள்.) அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம்மனத்தின் கண் நாணில்லாத மக்கள் உயிருடையார் போன்றியங்குகின்ற வியக் கம்; மரப்பாவை நாணுல் உயிர் மருட்டியற்று - மரத்தாற் செய்த பாவை இயந்திரக் கயிற்றினையு தன்னியக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினாற்போலும்.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணு டைய பாவையியக்கம்போல்வதல்லது உயிரியக்க மன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாரதிழிவு கூறப்பட்டது. (கo)

அதி. கoந—குடிசெயல்வகை

[அஃதாவது, ஒருவன் முன்பிறந்த குடியை உயரச்செய்தலின்றிறம். இது தாழ்வின்க ணுணுதலுடையார்க் குளதாவதாகலின் நாணு டைமையின்பின் வைக்கப்பட்டது.]

கoஉக. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(இ - ள்.) கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின்- தன் குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையின் எண்ணிய கருமஞ் செய்தற் கியான் கையொழியேனென்னும் ஆள் வினைப் பெருமைபோல; ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை.

குடிசெய்தற்கென்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத் தாய கருமச்செயலாற் செல்வமும் புகழுமெய்திக் குடியுயருமாகலின், பீடுடையதில்' லென்றார். குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன்கருமஞ் செய்யவென்றும் பிறர்கருமஞ் செய்யவென்று முரைப்

பாருமுளர்; தன் கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல், தலைமையன்மையானும் அவை யுரையன்மை யறிக. (க)

கடஉ. ஆள்வினை யுமான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினை யாள்வினை யூங்கு குடி.

(இ - ள்.) ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையான் - முயற்சியும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கருமச்செயலால்; குடிநீளும் - ஒருவன் குடியுயரும்.

நிறைதல்: இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்பு தல். 'ஆள்வினை' மடி புகுதாமற்பொருட்டு. 'ஆன்றவறிவு' உயர் தற்கேற்ற செயல்களும் அவை முடிக்குந் திறமும் பிழையாம லெண் ணுதற்பொருட்டு. இவை யிரண்டு பாட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது. (உ)

கடஉ. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(இ - ள்.) குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை யுயரச் செய்யக் கடவேனென்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு; தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் - தெய் வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினார். தற்றுதல்: இறுக வுடுத்தல். முன்னடப்பார் செயல் நியதிமே லேற்றப்பட்டது. (ஊ)

கடஎ. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.*

(இ - ள்.) தங்குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு - தங் குடிக் காம் வினையை விரைந்து முயல்வார்க்கு; சூழாமல் தானே முடிவெய் தும் - அவ்வினை முடிக்குந் திறம் அவர் சூழவேண்டாமற்றானே முடி வெய்தும்.

'குடி' ஆகுபெயர். தெய்வ முந்துறுதலாற் பயன் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப் பட்டது. (எ)

கடஅ. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

* குறள் - கூஉ0

(இ - ள்.) குற்றம் இலனெய்க் குடி செய்து வாழ்வானே - குற்றமாயின செய்யாது தன் குடியை யுயரச்செய் தொழுகுவானே ; சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார்.

குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்தலெனக்கி யாவருஞ் சென்று சார்வரென்பதாம். (டு)

கoஉசு. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(இ - ள்.) ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது ; தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குளதாக்கிக் கோடல்.

போர்த்தொழிலி னீக்குதற்கு 'நல்லாண்மை' யென விசேடித்தார். குடியினையாளுந் தன்மை : குடியிலுள்ளாரை யுயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச் செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும். (கூ)

கoஉஎ. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(இ - ள்.) அமரகத்து வன்கண்ணர்போல - களத்தின்கட் சென்றூர் பலராயினும் போர் தாங்குதல் வன்கண்ணர்மேலதாஞ்போல ; தமரகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கட் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம்.

பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்று பாட்டானும் அது செய்வாரெய்துஞ் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

கoஉஅ. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(இ - ள்.) மடி செய்து மானம் கருதக் கெடும் - தங் குடியினையுயரசெய்வார் அச்செயலேயே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு, மானத்தையுங் கருதுவராயிற் குடி கெடும் ; குடி செய்வார்க்குப் பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதி யில்லை.

பாருமூளர் ; தன் கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல், தலைமையன்மையானும் அவை யுரையன்மை யறிக. (க)

கoஉஉ. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(இ - ள்.) ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையான் - முயற்சியும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கருமச்செயலால் ; குடிநீளும் - ஒருவன் குடியுயரும்.

நிறைதல் : இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்பு தல். 'ஆள்வினை' மடி புகுதாமற்பொருட்டு. 'ஆன்றவறிவு' உயர் தற்கேற்ற செயல்களும் அவை மூடிக்குந் திறமும் பிழையாம லெண் ணுதற்பொருட்டு. இவை யிரண்டு பாட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது. (உ)

கoஉங. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(இ - ள்.) குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை யுயரச் செய்யக் கடவேனென்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு ; தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் - தெய் வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினர். தற்றுதல்: இறுக வுடுத்தல். முன்னடப்பார் செயல் நியதிமே லேற்றப்பட்டது. (ங)

கoஉச. சூழாமற் றூனே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.*

(இ - ள்.) தங் குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு - தங் குடிக் காம் வினையை விரைந்து முயல்வார்க்கு ; சூழாமல் தானே முடிவெய் தும் - அவ்வினை முடிக்குந் திறம் அவர் சூழவேண்டாமற்றானே முடி வெய்தும்.

'குடி' ஆகுபெயர். தெய்வ முந்துறுதலாற் பயன் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப் பட்டது. (ச)

கoஉஞ. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

* குறள் - கூஉo

(இ - ள்.) குற்றம் இலனுய்க் குடி செய்து வாழ்வானே - குற்றமாயின செய்யாது தன் குடியை யுயரச்செய் தொழுகுவானே ; சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார்.

குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்தலேனைக்கி யாவருஞ் சென்று சார்வரென்பதாம். (இ)

கoஉசு. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(இ - ள்.) ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது ; தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குளதாக்கிக் கோடல்.

போர்த்தொழிலி னீக்குதற்கு 'நல்லாண்மை' யென விசேடித்தார். குடியினையாளுந் தன்மை : குடியிலுள்ளாரை யுயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச் செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும். (ஈ)

கoஉஎ. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(இ - ள்.) அமரகத்து வன்கண்ணர்போல - களத்தின்கட் சென்றூர் பலராயினும் போர் தாங்குதல் வன்கண்ணர்மேலதாஞற்போல ; தமரகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கட் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம்.

பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள் உவ்மைக்கண் வருவிக்கப்பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்று பாட்டானும் அது செய்வாரெய்துஞ் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

கoஉஅ. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(இ - ள்.) மடி செய்து மானம் கருதக் கெடும் - தங் குடியினை யுயரசெய்வார் அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு, மானத்தையுங் கருதுவராயிற் குடி கெடும் ; குடி செய்வார்க்குப் பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதி யில்லை.

காலத்தை நோக்கி மடிசெய்தல்: வெயின் மழை பனியென்பன வுடைமைநோக்கிப் பின்னர்ச் செய்துமென் றெழுகிந்திருத்தல். மானங் கருதுதல்: இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத் துத் துன்பமுறுவேன் யானேவென்று உட்கோடல். மேல் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழு"* தென்ற துட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று கருதினும் அது கருதற்கவென்று மறுத்தவாறு. (அ)

கஉகூ. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு.

(இ-ள்.) குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமு முறற்பாலதாய தன் குடியை அவையுறுமற் காக்க முயல் வானது உடம்பு; இடும்பைக்கே கொள்கலங்கொல் - அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமா மத்துணேயோ, அஃதொழிந்து இன்பத் திற்காதலில்லேயோ?

"உறைப்பெய லோலை போல, மறைக்குவன் பெருமகிற் குறித்து வருவேலே"† என்புழியும் மறைத்தல் இப்பொருட்டா யிற்று. என் குடிமுழுது மின்புற் றுயரவே நானிருமையு மெய்துத லான் இம் மெய்வருத்த மாத்திரம் எனக்கு நன்றென்று முயலு மறி வுடையான் அஃதொருஞான்று மொழியாமை நோக்கி, 'இடும் பைக்கே கொள்கலங் கொல்லோ' வென்றார். இது குறிப்பு மொழி. இவையிரண்டு பாட்டானும் அவர் அது செய்யுமியல்பு கூறப் பட்டது. (கூ)

கஉகூ. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று நல்லா னிலாத குடி.

(இ-ள்.) இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய நவியம் புகுந்து தன் முதலே வெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழா நிற்கும்; அடுத்து ஊன்றும் நல்லாள் இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடி யாகிய மரம்.

முதல்: அதன்வழிக் குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலுமுடைமையின், மர மாக்கினர்; "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன, வோங்குகுல வையவத னுட்பிறந்த வீரர், தாங்கல்கடன்"‡ என்றார் பிறரும். இது குற்றங் கூறப்பட்டது. (கஉ).

* குறள், சஅக. † புறநானூறு, உகூ.
‡ சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம் - கூ.

அதி. கoச—உழவு

[அஃதாவது, சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித்தாய உழுதற்றொழில்; செய்விக்குங்கால் ஏனையோர்க்கு முரித்து. இது, மேற் குடியுயர்தற் கேதுவென்ற ஆள்வினைவகையாகலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப் பட்டது.]

கoகூக. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
ழுழந்து முழவே தலை.

(இ-ள்.) சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - உழுதலான்வரும் மெய்வருத்தநோக்கிப் பிறதொழில்களைச் செய்துதிரிந்தும், முடிவில் ஏருடையார் வழியதாயிற்று உலகம்; அதனால் உழந்தும் தலை உழவே - ஆதலான் எல்லாவருத்தமுற்றும், தலையாய தொழில் உழவே.

'ஏர்' ஆகுபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின்பொருட்டு உழுவார்கட் செல்லவேண்டுதலிற் 'சுழன்று மேர்ப்பின்னதுலக' மென்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர 'உழந்து முழவே தலை' யென்றுங் கூறினர். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

கoகூஉ. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்று
தொழுவாரை யெல்லாம் பொறுத்து.

(இ-ள்.) அஃது ஆற்றுது எழுவாரை எல்லாம் பொறுத்து - அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழில்கண்மேற் செல்வார் யாவரையுந் தாங்குதலால்; உழுவார் உலகத்தார்க்கு ஆணி - அது வல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்.

"காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்"* டென்றாற்போல உழுவாரென்றது உழுவிப்பார்மேலுஞ் செல்லும். 'உலகத்தா' ரென்றது ஈண்டிவரை யொழிந்தாரை. கலக்காம னிறுத்தற்கண் ஆணி போறலின், 'ஆணி'யென்றார். பொறுத்தலானென்பது திரிந்து நின்றது. ஏகதேசவுருவகம். அஃதாற்றார் தொழுவாரே யெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அதுமாட்டாதார் புரப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரே யாவரென்றுரைப்பாருமுளர்.† (உ)

* பட்டினப்பாலை, அடி:—உ அ - உ அச. † மணக்குடவர்.

கoகக. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(இ - ள்.) உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரு முண்ணும் வகை உழுதலேசெய்து அதனுற் ருமுமுண்டு வாழ்கின்ருரே தமக்குரியராய் வாழ்கின்றவர்; மற்றெல்லாம் தொழுது உண்டு பின் செல்பவர் - மற்றையா ரெல்லாம் பிறரைத் தொழுது அதனுற் ருமுண்டு அவரைப் பின்செல்கின்றவர்.

'மற்'றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமு மக்கட் பிறப் பினராய்வைத்துப் பிறரைத் தொழுது அவர் சிலகொடுப்பத் தம் முயிரோம்பி அவர்பின்செல்வார் தமக்குரியரல்ல ரென்பது கருத்து.

கoகச. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(இ - ள்.) அலகு உடை நீழலவர் - உழுதற்குழுலான் நெல் வினையுடையராய தண்ணளியுடையோர்; பலகுடைநீழலும் தங் குடைக்கீழ்க் காண்பர் - பலவேந்தர் குடைநிழலதாய மண்முழு தினையுந் தம்மரசன் குடைக்கீழே காண்பர்.

'அலகு'- கதிர்; அஃதீண் டாகுபெயராய் நென்மேல தாயிற்று. உடையவென்பது குறைந்துநின்றது. நீழல்போறலின் 'நீழ'லெனப் பட்டது. 'நீழலவ' ரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதலேக்கி ஒற்றுமைபற்றித் 'தங்குடை' யென்ருர், 'குடைநீழ' லென்பதூஉம் ஆகுபெயர். "ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே"* என்றது லுல் தம்மரசனுக்குக் கொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம்; "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற் றமு முழவிடை விளைப்போர்"† என்ருர் பிறரும். (ச)

கoகஞ. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ - ள்.) கைசெய்து ஊண் மாலையவர் இரவார் - தங் கையா லுழுதுண்டலே யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவார்; இரப் பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை யிரப்பார்க்கு அவர் வேண் டிய தொன்றனைக் கரவாது கொடுப்பர்.

'செய்'தென்பதற்கு உழுதலேயென வருவிக்க. 'கைசெய்தூண் மாலையவ' ரென்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடைய ரென்னும் ஏதுவை யுட்கொண்டு நின்றது. (ஞ)

* புறநானூறு, கூஞ. † சிலப்பதிகாரம்: நாடுகாண்காதை, கசசு.

கoஈக. உழவினுர் கைம்மடங்கி னில்லே விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலே.

(இ - ள்.) உழவினுர் கை மடங்கின் - உழுதலேயுடையார் கை அதனைச் செய்யாது மடங்குமாயின்; விழைவதூஉம் விட்டேம் என் பார்க்கு நிலே இல்லே - யாவரும் விழையுமுணவும் யாந்துறந்தே மென் பார்க்கு அவ்வறத்தின்க ணிற்றலுமுளவாகா.

உம்மை இறந்திக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், தாமுண்டலும் இல்லறஞ்செய்தலும் யாவர்க்கு மில்லேயாயின. அவ ருறுப்பு மாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்து இம்மைமறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். ஒன்றனே மனத்தால் விழைதலு மொழிந்தேமென்பார்க்கென வுரைப்பாருமுளர்*. இவை யைந்து பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

கoஉஎ. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(இ - ள்.) தொடிப்புழுதி கஃசா உணக்கின் - ஒருநிலத்தினே யுழுதவன் ஒருபலப் புழுதி கஃசாம்வண்ணம் அதனைக் காயவிடுவா னுயின்; பிடித்து எருவும் வேண்டாது சாலப்படும் - அதன்கட் செய்த பயிர் ஒரு பிடியின்க ணடங்கிய எருவுமிட வேண்டாமற் பணைத்து விளையும்.

'பிடித்து': பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன் விகாரமென் பாருமுளர்.† வேண்டாமல், சான்று என்பன திரிந்துநின்றன. (எ)

கoஉஅ. ஏரினு நன்ரு லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

(இ - ள்.) ஏரினும் எரு இடுதல் நன்று - அப்பயிர்க்கு அவ்வுழு தலினும் எருப்பெய்தல் நன்று; கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று - இவ்விரண்டுஞ் செய்து களே கட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால் யாத்தலி நன்று.

ஏர் ஆகுபெயர். காத்தல்: பட்டி முதலியவற்றுன் அழிவெய்தா மற் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களேகட்டல், நீர்கால் யாத்தல், காத்தலென்றிம்முறையவாய இவ்வைந்தும் வேண்டுமென்பதாம். (அ)

கoஉக. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

* மணக்குடவர். † மணக்குடவர்.

(இ - ள்.) கிழவன் செல்லான் இருப்பின் - அந்நிலத்திற்குரிய வன் அதன்க ணுடோறுஞ்சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின் ; நிலம் இல்லாளிற் புலந்து ஊடிவிடும் - அஃது அவனில்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனே டிடி விடும்.

செல்லுதல் ஆகுபெயர். பிறரை யேவியிராது தானேசேறல் வேண்டுமென்பது போதரக் 'கிழவ' னென்றார். தன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்தவழி மனையா ளூடுமாறு போலவென்றது அவன் போகமிழத்த லேக்கி. இவை மூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது. (கூ)

கo்o. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(இ - ள்.) இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் - யாம் வறியேமென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால் ; நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகளென்று உயர்த்துச் சொல்லப்படு கின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும்.

உழுதன் முதலிய செய்வார் யாவர்க்குஞ் செல்வங்கொடுத்து வருகின்றவாறு பற்றி 'நல்லா' ளென்றும், அது கண்டுவைத்தும் அது செய்யாது வறுமையுறுகின்ற பேதைமைபற்றி 'நகு'மென்றுங் கூறினர். இரப்பாரையென்று பாடமோதுவாருமுளர்.* இதனான் அது செய்யாதவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகார முறைமைக்குக் காரணமுமிது. (கo)

அதி. கoடு—நல்குரவு

[அஃதாவது, நுகரப்படுவன யாவு மில்லாமை.]

கoசக. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

(இ - ள்.) இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவ னுக்கு வறுமைபோல வின்னாதது யாதென்று வினவின் ; இன்மை யின் இன்னாதது இன்மையே - வறுமைபோல வின்னாதது வறு மையே பிறிதில்லை.

'இன்னாதது' - துன்பஞ்செய்வது. ஒப்பதில்லையெனவே, மிக்க தின்மை சொல்லவேண்டா வாயிற்று, (க)

---

* மணக்குடவர்.

கoசஉ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(இ - ள்.) இன்மையென ஒருபாவி - வறுமையென்று சொல்லப்படுவதொரு பாவி; மறுமையும் இம்மையும் இன்றி வரும் - ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமுமில்லையாக வரும்.

இன்மையென வொருபாவி யென்பதற்கு மேல் "அழுக்கா றென வொருபாவி"* யென்புழி யுரைத்தாங் குரைக்க. மறுமை, இம்மை யென்பன ஆகுபெயர். ஈயாமையானுந் துவ்வாமையானும் அவையிலவாயின. இன்றிவிடுமென்று பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாரு முளர்.† (உ)

கoசஊ. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.‡

(இ - ள்.) நல்குரவு என்னும் நசை - நல்குரவென்று சொல்லப்படு மாசை; தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும் - தன்னைப் பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும்.

நசை யில்வழி நல்குரவு மில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியிற் றொல்லோர்க்கில்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையு மூளவாக்கலான் அவ்விரண்டனையு மொருங்கு 'கெடுக்கு' மென்றார். "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்"§ என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" ¶ என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பென் றுரைப்பாரு முளர்$; அஃததற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்சிறப்பில்லாமையறிக. (ஊ)

கoசஎ. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(இ - ள்.) இற்பிறந்தார் கண்ணேயும் - இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும்; இளிவந்த சொற்பிறக்கும் சோர்வு இன்மை தரும் - அது பிறத்தற்கேதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும்.

---

* குறள், கசுஅ. † மணக்குடவர். ‡ முதுமொழிக்காஞ்சி, சு:
§ மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, அடி - எசு.
¶ தொல். பொருள். செய். உகக. $ மணக்குடவர்.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்ற நின்றது. 'இளிவந்த சொல்': இளிவருதற்கேதுவாகிய சொல்; அஃதாவது எமக்கீயவேண்டு மென்றல். 'சோர்வு' தாமுறுகின்ற துன்பமிகுதி: பற்றி ஒரோவழித் தம் பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக கினைத்தல். (சு)

கoசடு. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(இ - ள்.) நல்குரவு என்னும் இடும்பையுள் - நல்குரவென்று சொல்லப்படுந் துன்பமொன்றனுள்ளே; பல் துன்பங்கள் சென்று படும் - பல துன்பங்களும் வந்து விளையும்.

'குரை': இசைநிறை. செலவு விரைவின்கண் வந்தது. துன்ப முந் தானுமுடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்ப மடியாகச் செல்வர் கடைநோக்கிச் சேறற்றுன்பமும், அவ ரைக் காண்டற் றுன்பமும், கண்டான் மறுத்துழி நிகழுந் துன்ப மும், மறுவழியும் அவர் கொடுத்தது வாங்கற்றுன்பமும், அது கொடுவந்து றுகர்வன கூட்டற்றுன்பமு மூதலாயின நாடோறும் வேறுவேறுக வருதலின் எல்லாத்துன்பங்களு முளவாமென்றுங் கூறினர். இவை யைந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப் பட்டது. (இ)

கoசசு. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(இ - ள்.) நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந்நூற் பொருளைத் தெளியவறிந்து சொன்னராயினும்; நல் கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும் - நல்கூர்ந்தார் சொல்லுஞ் சொற் பொருளின்மையைத் தலைப்படும்.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறைமுடிக்க வேண்டுமென் றஞ்சி யாவருங் கேளாமையிற் பயனில் சொல்லாய் முடிதல். கல்வியும் பயன்படாதென்பதாம். (சு)

கoசள. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(இ - ள்.) அறம் சாரா நல்குரவு - அறத்தோ டியையில்லாத நல்குரவுடையான்; ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னையீன்ற தாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக் கப்படும்.

அறத்தோடு கூடாமை : காரண காரியங்களுளொன்று யியையாமை. 'நல்குரவு' ஆகுபெயர். சிறப்பும்மை அவளதியற்கையன்புடைமை விளக்கிநின்றது. கொள்வதின்றுதலே யன்றிக் கொடுப்பதுண்டாதலு முடைமையின், அதுநோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பரென்பதாம். (எ)

கoசஅ. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

(இ - ள்.) நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு - நெருநற்றுங் கொன்றதுபோன்று எனக்கின்னுதவற்றைச் செய்த நல்குரவு; இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனி யாது செய்வேன்?

அவ்வின்னுதனவாவன : மேற்* சொல்லிய துன்பங்கள். நெருநன் மிக வருந்தித் தன் வயிறு நிறைத்தானொருவன் கூற்று. (அ)

கoசக. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

(இ - ள்.) நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்துறங்கலுமாம்; நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது - நிரப்புவந்துழி யாதொன்றுனு முறக்கமில்லை.

நெருப்பினும் நிரப்புக் கொடிதென்றவா றுயிற்று. இதுவு மவன் கூற்று. இவை நான்கு பாட்டானும் நல்கூர்ந்தார்க் குளதாங் குற்றங் கூறப்பட்டது. (க)

கoஉo. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(இ - ள்.) துப்புரவு இல்லார் துவரத் துறவாமை - நுகரப்படும் பொருள்களில்லாதார் தம்மாற் செயற்பாலது முற்றத்துறத்தலேயாகவும் அது செய்யாதொழிதல்; உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறரில்லி னுளவாய உப்பிற்குங் காடிக்குங் கூற்றும்.

மானமழியாமையிற் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத்துறத்தல் சுற்றந் தானே விட்டமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயினுர் நின்ற தம்முடம்பினையுந் துறத்தல். அதுசெய்யாது கொண்டிருத்தல் இரண்டனையு மாளப்பண்ணுதலின், அதனை அவற்றிற்குக்

* குறள், கoசடு.

'கூற்' றென்றார். இனி முற்றத் துறத்தலாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினர் பின்னவற்றை மனத்தாற் றுறவாமை யென்றுரைப்பாருமுளர்*. இதனுள் அஃதுளதாயவழிச் செய்வது கூறப்பட்டது. (கo)

அதி. கoசு—இரவு

[இனி, மானந்தீரா இரவு இரவாமையோ டொத்தலின், அதனானும் வீடெய்தற் பயத்ததாய உடம்போம்பப்படுமென்னும் அறநூல் வழக்குப்பற்றி மேலெய்திய துவரத்துறத்தல் விலக்குதற் பொருட்டு **இரவு** கூறுகின்றார். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கoருக. **இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி**
னவர்பழி தம்பழி யன்று.

(இ - ள்.) இரத்தக்கார்க் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கேற்புடையாரைக் காணில், அவர்மாட் டிரக்க; கரப்பின் அவர் பழி தம்பழி அன்று - இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான்.

இரவென்னு முதனிலைத் தொழிற்பெயர திறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இரத்தற் கேற்புடையராவார்: உரையாமை முன்னுணரு மொண்மையுடையராய் மாற்றாதீவார்.† அவர் உலகத்தாியராகலிற் 'காணி' னென்றும், அவர்மாட் டிரந்தார்க்கு இரவான்வரு மிழிவின்மையின் 'இரக்க' வென்றும், அவர் ஈதலிற் குறைகாட்டாமையிற் 'கரப்பி' னென்றும், காட்டுவராயின் அப்பழி தூவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட் கடிதுசேறலின் 'அவர் பழி' யென்றும், ஏற்பிலார்மாட் டிரவன்மையிற் 'றம்பழி யன்' றென்றுங் கூறினார். (க)

கoருஉ. **இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை**
துன்ப முருஅ வரின்.

(இ - ள்.) ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவற்கு இரத்தலானும் இன்பத்திற்கேதுவாம்; இரந்தவை துன்பம் உருஅ வரின் - இரந்த பொருள்கள் ஈவாரதுணர்வுடைமையாற்றான் றுன்புறுமல் வருமாயின்.

---

* மணக்குடவர். † குறள், உஉக.

'இன்பம்' ஆகுபெயர். உருமென்பது கடைக்குறைந்து நின்றது. 'துன்பம்' சாதியொருமைப்பெயர். அவையாவன: ஈவார் கட் காலமு மிடனு மறிந்து சேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம்வயத்தராக்கலும், அவர் மனநெகிழ்வன நாடிச்சொல்லலு முதலியவற்றுன் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம். அவையுருமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்தீயக் கோடல். இரந்தவர் துன்பமுருவரினென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றுற் றுன்புறுது எதிர்வந் தீவராயினென்றுரைப்பாருமுளர்.* இவையிரண்டு பாட்டானும் நல்கூரானுயிர் நீங்கு மெல்லைக்கண் இளிவில்லாவிரவு விலக்கப்படாதென்பது கூறப்பட்டது. (உ)

கஅகூ. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேழை யுடைத்து.

(இ - ள்.) கரப்பிலா நெஞ்சிற் கடன் அறிவார் முன் நின்று இரப்பும் - கரத்தலில்லா நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் நின்று அவர்மாட்டொன்றிரத்தலும்; ஓரேழை உடைத்து - நல்கூர்ந்தார்க்கு ஓரழகுடைத்து.

"சிறிய சுருக்கத்து வேண்டுமுயர்"† வென்றதனுல், அவர்க்கு அது கடனெனப்பட்டது. அதனையறிதல்: சொல்லுதலுற் றுரைக்கலாகாமைக் கேதுவாய அதனியல்பினை யறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன் மாத்திரமே யமைதலின் 'முன்னின்' றென்றும், சொல்லுதலான் வருஞ் சிறுமையெய்தாமையின் 'ஓரேழை யுடைத்' தென்றுங் கூறினர். உம்மை அதனிழிபு விளக்கி நின்றது.

கஅகூச. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு.

(இ - ள்.) கரத்தல் கனவிலும் தேற்றுதார்மாட்டு இரத்தலும் - தமக்குள்ளது கரத்தலைக் கனவின்கண்ணு மறியாதார்மாட்டுச் சென்றிரத்தலும்; ஈதலே போலும் - வறியார்க்கீதலே போலும்!

உம்மை ஈண்டுமெவ்வாறு நின்றது. தான் புகழ்பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின், "ஈதலேபோலு" மென்றூர். ஏகாரம் ஈற்றசை. (ச)

* மணக்குடவர். † குறள், கூகூக.

கoடுடு. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
நிரப்பவர் மேற்கொள் வது.

(இ - ள்.) கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லு தன்மாட்டாது முன்னிற்றன்மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது ; கரப்பிலார் வையகத்து உண்மையான் - அவர்க்கு உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்துளராய தன்மையானே, பிறிதொன்றனன்று.

அவரில்லையாயின், மானநீக்க மாட்டாமையின் உயிர்நீப்பரென் பதாம். (டு)

கoடுசு. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

(இ - ள்.) கரப்பிடும்பை இல்லாரைக் காணின் - உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால் ; நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம்விடா திரப்பார்க்கு நிரப்பான் வருந் துன்பங்களெல்லாஞ் சேரக்கெடும்.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்றன்மையின் அதனை நோயென்றும், அஃதில்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழியுவகையராவ ராகலின் 'எல்லா மொருங்கு கெடு' மென்றுங் கூறினர். 'இடும்பை' ஆகுபெயர். முழுதுங் கெடுமென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென் றுரைப்பாருமுளர்*. (சு)

கoடுஎ. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

(இ - ள்.) இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் - தம்மை யவமதித் திழிவு சொல்லாது பொருள்கொடுப்பாரைக் கண்டால் ; உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து - அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து உள்ளுள்ளே யுவக்குந் தன்மையுடைத்து.

'இகழ்ந்தெள்ளா' தெனவே, நன்குமதித்தலும் இனியவை கூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன்களானும் பேரின்பமெய்திஞராகக் கருதலான், 'உள்ளுளுவப்ப துடைத்' தென்றார். இவை யைந்து பாட்டானும் அவ்விரக்கத்தக் காதியல்பு கூறப்பட்டது. (எ)

கoடுஅ. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

* மணக்குடவர்,

(இ - ள்.) இரப்பார் இல்லாயின் - வறுமையுற்றிரப்பா ரில்லை யாயின்; ஈர்ங்கண் மா ஞாலம் - குளிர்ந்தவிடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள்; மரப்பாவை சென்று வந்தற்று - உயிரில்லாத மரப்பாவை இயந்திரக் கயிற்றூற் சென்று வந்தாற் போலும்.

ஐகாரம் அசைநிலை. ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடொத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளா ரென்றது அவரையொழிந்தாரை. அவர்க்கீதலைச் செய்து புகழும் புண்ணியமுமெய்தாமையின், உயிருடையரல்ல ரென்பதாம். "ஈவா ருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" என்றூர் பிறரும். இத்தொடையின்ப நோக்காது இரப்பவரில்லாயி னென்று பாடமோதுவாருமுளர்.* (அ)

கoடுகூ. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண் மேவா ரிலாஅக் கடை.

(இ - ள்.) இரந்துகோள் மேவார் இலாக்கடை - அவர்பாற் சென்று ஒன்றனே யிரந்துகோடலை விரும்புவாரில்வழி; ஈவார்கண் தோற்றம் என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்ன புகழுண்டாம்? யாதுமில்லை.

'தோற்றம்' ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல்வன்மை வெளிப்படாமையின், அதனாற் புகழெய்தாரென் பதாம். இவையிரண்டு பாட்டானும் உலகிற் கிரப்பார் வேண்டு மென்பது கூறப்பட்டது. (க)

கoசுo. இரப்பான் வெகுளாமை வேண்டும்† நிரப்பிடும்பை தானேயுஞ் சாலுங் கரி.

(இ - ள்.) இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருளுதவாவழி இவனெனக் கீகின்றிலனென்று அவனே யிரப் பான் வெகுளா தொழிதல்வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் கரி சாலும் - அது வேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறு சான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயுஞ் சான்றுத லைமையும்.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையு முதலிய பிற சான்று முண்டென்பதுபட நின்றமையின், உம்மை எச்சவும்மை. தனக்கேயன்றி மற்றையிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள்

* மணக்குடவர். † இனியவை நாற்பது, சo.

கடைக்கூட்டற்கு அவனுறுந்துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானுறுந் துன்பந் தானறிந்து வெருளற்க வென்பதாம். இதனால் அவர்க்கின்றியமையாததோ ரியல்பு கூறப்பட்டது. (கo)

அதீ. கoஎ—இரவச்சம்

[அஃதாவது, மானந்தீரவரு மிரவிற்கஞ்சுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கoசுக. கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.*

(இ - ள்.) கரவாது உவந்து ஈயும் கண் அன்னார்கண்ணும் இரவாமை - தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்மகிழ்ந்து கொடுக்குங் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமைகூர்தல்; கோடி உறும் - இரந்து செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாதென்பது பட நின்றமையின், உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது. அவ்விரவான் மானந் தீராதென்னுந் துணையல்லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியா னுயிரோம்பலே நல்ல தென்பது கருத்து. (க)

கoகூ. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(இ - ள்.) உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் - இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன் றுயிர்வாழ்தலே யன்றி இரந்து முயிர்வாழ்தலே வேண்டி விதித்தானையின்; பரந்து கெடுக - அக்கொடியோன்றானும் அவரைப்போன்று எங்குமலமந்து கெடுவானாக.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய வுண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினைவயத்தாற் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே, அவற்றுட் சில வுயிர்க்கு இரத்தலையும் ஒருசெய்தொழிலாகக் கற்பித்தானையின், அத் தீவினையாற் றானும் அத்தன்மையுறல் வேண்டுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது.

---

* காலடியார், கoசு.

கoசுங. இன்மை யிடும்பை யிரந்துநீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ - ள்.) இன்மை இடும்பை இரந்து நீர்வாம் என்னும் வன்மையின் - வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக் கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல; வன்பாட்டது இல் - வலிமைப்பாடுடையது பிறிதில்லை.

நெறியாய முயற்சி நிற்க, நெறியல்லாத இரவாற் நீர்க்கக் கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு: முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராதுசெய்துநிற்றல். இதனுன் வறுமை நீர்தற்கு நெறி இரவன்றென்பது கூறப்பட்டது. (ங)

கoசுச. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

(இ - ள்.) இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு - நுகர வேண்டுவனவின்றி நல்கூர்ந்த வழியும் பிறர்பாற்சென் றிரத்தலை யுடம்படாத அமைதி; இடமெல்லாம் கொள்ளாத்தகைத்தே - எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மே லேற்றப்பட்டது. இதனுன் அந்நெறியல்லதனைச் சால் புடையார் செய்யாரென்பது கூறப்பட்டது. (ச)

கoசுஞ. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னுங்கினிய தில்.

(இ - ள்.) தாள் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் - நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்த நீர்போலும் அடு புற்கையேயாயினும், உண்ணலின் ஊங்கு இனியது இல் - அதனை யுண்டற்குமே லினியதில்லை.

தாடந்த கூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய இரவான் வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்ததோ டொக்குமென்பதாம். இதனுல் நெறியினையது சிறிதேனும் அது செய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது. (ஞ)

கoசுசு. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கீரவி ளிலிவந்த தில்.

(இ - ள்.) ஆவிற்கு நீரென்று இரப்பினும் - தண்ணீர்பெறுது இறக்கு நிலைமைத்தாயதோ ராவினைக் கண்டு அறவோர்க்கு இதற்குத்

தண்ணீர் தரல்வேண்டுமென் றிரந்து சொல்லுங்காலும்; இரவின் நாவிற்கு இளிவந்தது இல் - அவ்விரவுபோல ஒருவனுவிற் கிளி வந்தது பிறிதில்லை.

ஆகாத்தோம்பல் பேறமாகலின் 'ஆவிற்' கென்றும், பொருள் கொடுத்துக் கொள்ள வேண்டாத எண்மைத்தாகலின் 'நீ' ரென்றும், இரக்கின்றனுக்கு இளிவு அச்சொல்லளவே யாகலின் 'நாவிற்' கென்றும், அதுதான் எல்லாவிளிவினும் மேற்படுதலின் 'இளிவந்த தில்' லென்றுங் கூறினர். இதனுன் அறனும் முயன்று செய்வதல் லது இரந்து செய்யற்கவென்பது கூறப்பட்டது. (உ)

கoசுஎ. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(இ - ள்.) இரப்பாரை எல்லாம் இரப்பன் - இரப்பாரையெல் லாம் யானிரவாதின்றேன்; இரப்பிற் கரப்பார் இரவன்மின் என்று - யாது சொல்லியெனின், நுமக்கிரக்க வேண்டுமாயிற் றமக்குள்ளது கரப்பாரை யிரவாதொழிமி னென்றுசொல்லி.

இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. இவ்விளிவந்த செய லான் ஊட்டியவழியும் உடம்பு நில்லாதாகலின் இதுவேண்டா வென்பது தோன்ற, 'இரப்ப' னென்றார். இதனுன் மானங்கீர வரு மிரவு விலக்கப்பட்டது. (எ)

கoசுஅ. இரவென்னு மேமாப்பி ரேணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

(இ - ள்.) இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ்வறுமை யென்னும் கடலே இதனைக் கடத்துமென்று கருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி; கரவு என்னும் பார் தாக்கப் பக்குவிடும் - அதன்க ணேடுங்காற் கரத்தலென்னும் வன்னிலத் தோடு தாக்குமாயிற் பிளந்துபோம்.

முயற்சியாற் கடப்பதனை இரவாற் கடக்கலுற்றனுன் அதன் கரை காணுமையின், 'ஏமாப்பிரேணி' யென்றார். ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டது. அது கடத்தற்கேற்ற தன்மையானும், நிலமறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்க ணேறற்க வென்பதாம்: இஃதவயவ வுருவகம். (அ)

கoசுக. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(இ - ள்.) இரவு உள்ள உள்ளம் உருகும் - உடையார் முன் இல்லார் சென்றிரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்

முள்ளங் கரைந்துருகாநிற்கும்; கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும் - இனி அந்நிலையைக் கண்டு வைத்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமளவுதானு மின்றிப் பொன்றி விடும்.

"இரவினை, யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ, கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு"* என்றூர் பிறரும். இரவினுங் கரவு கொடிதென்பதாம். இதற்குப் பிற † ரெல்லாம் இரக்கின்றவ ருள்ள முருகுமென் றுரைத்தார். (க)

க0எ0. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

(இ - ள்.) சொல்லாட இரப்பவர் உயிர் போஒம் - கரப்பார் இல்லையென்று சொல்லாடிய தூணையானே இரப்பார்க்கு உயிர் போகாநின்றது; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர்தமக்கு உயிர் பின்னு நிற்றலான் அப் பொழுது எப்புரையுட் புக்கொளித்து நிற்கும்!

உயிர்போகலாவது இனியாமென்செய்து மென்றேங்கிச் செய லற்று நிற்றல்; "அந்நிலையே, மாயானே மாற்றி விடின்"‡ என்றூர் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொற் சொல்வாரைக் கோறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம், இஃதென்னேவென்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவா ராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாதெங்கே யொளித்துநிற்கும், இரண்டானும் போமே யன்றோவென இரவஞ் சிலை லெருவன் கூற்றுக்கி யுரைப்பாருமுளர்.§ இவை மூன்று பாட் டானும் அவ்விரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப் பட்டன. (க0)

அதி. க0அ—கயமை

[அஃதாவது, மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ் சிறப்பு வகை யாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினுல் யாவர்க்கு மெய்த வைத்தமையின், ஆண்டுக் குறிப்பாற் கூறி யனவும் ஈண்டொழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய

* நாலடியார், கூ0டு. †மணக்குடவர். ‡ நாலடியார், கூ0அ. § மணக்குடவர்.

குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை. அதனால், இஃதெல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது.]

கoஎக. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(இ - ள்.) மக்களே போல்வர் கயவர் - வடிவான் முழுதும் மக்களேயொப்பர் கயவர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களேயொத்தாற்போன்ற வொப்பு வேறிரண்டு சாதிக்கண் யாங் கண்டதில்லை.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற் பெற்றும். அவரென்றது அவர்மாட்டுளதாய வொப்புமையை. மக்கட்சாதிக்குங் கயச் சாதிக்கும் வடிவொத்தலிற் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமை யறியப்படா தென்பதாம். இதனாற் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது. (க)

கoஎஉ. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(இ - ள்.) நன்று அறிவாரிற் கயவர் திரு உடையர் - தமக் குறுதியாவன வறிவாரின் அலையறியாத கீழ்மக்கள் நன்மையுடையர்; நெஞ்சத்து அவலம் இலர் - அவர்போல அலை காரணமாகத் தந்நெஞ்சத்தின்கட் கவலையிலராகலான்.

'நன்'றென்பது சாதியொருமை. உறுதிகளாவன இம்மை மறுமை வீடுகட்குரியவாய புகழ ஞானங்கள். இவற்றை யறிவார் இவை செய்யாகின்றே மிகச்செயப்பெறுகின்றிலேமென்றும், செய்கின்ற வினை தமக்கு இடையூறு வருங்கொலென்றும், இவற்றின் மறுதலையாய பழி பாவ மறியாமை யென்பனவற்றுள் யாது வினையுமோ வென்றும் இவ்வாற்றுற் கவலையெய்துவர்; கயவர் அப்புகழ் முதலிய வொழித்துப் பழி முதலிய செய்யாகின்றும் யாதுங் கவலையுடைய ரல்லராகலாற் றிருவுடையரெனக் குறிப்பா லிகழ்ந்தவாறு. இதனாற் பழி முதலியவற்றிற் கஞ்சாரென்பது கூறப்பட்டது. (உ)

கoஎங. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(இ - ள்.) தேவர் அனையர் கயவர் - தேவருங் கயவரும் ஒருதன்மையர்; அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான் - அஃதியாதனானின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவருந் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான்.

உயர்ச்சியும் இழிவுமாகிய* தங் காரணவேறுபாடு குறிப்பாற் முன்றின்றமையின், இது புகழ்வார்போன்று பழித்தவாமுயிற்று. இதனுல் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வரென்பது கூறப் பட்டது. (ங)

கo எச. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(இ - ள்.) கீழ் - கீழாயினுன் ; அகப்பட்டி ஆவாரைக் காணின் - தன்னிற் சுருங்கிய பட்டியர யொழுகுவாரைக் கண்டானுயின் ; அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும் - அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் முன் மேம்பட்டு அதனுற் றன் மிகுதி காட்டி யிறுமாக்கும்.

அகப்பட்டி : அகமாகிய பட்டி ; பட்டிபோன்று வேண்டியவாறே யொழுகலின், ' பட்டி ' யென்முர் ; " நோதக்க செய்யுஞ் சிறுபட்டி "† னன்முர் பிறரும். இதனுல் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது. (ச)

கo எடு. அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(இ - ள்.) கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவராதாய வாசாரங் கண்டதுண்டாயின் அதற்குக் காரணம் அரசனுன் எதம் வருமென் றஞ்சு மச்சமே ; எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் - அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும் பொருள் அதனுலுண்டா மாயிற் சிறிதுண்டாம்.

ஆசாரத்தின் காரணத்தை ' ஆசார ' மென்றும், அவாவப்படுவ தனை ' அவா ' வென்றுங் கூறினர். எச்சத்தின்கண் ணென்னு மேழாவது இறுதிக்கட் டொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறு பான்மை பொருட்பேறு, இவ்விரண்டானுமன்றி இயல்பாக வுண்டா காதென்பதாம். வேண்டிய செய்தலே இயல்பு, ஆசாரஞ் செய்தல் இயல்பன்றென்பது இதனுற் கூறப்பட்டது. (ஙி)

கo எசு. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(இ - ள்.) தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்க லான் - தாங்கேட்ட மறைகளே இடந்தோறுந் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான் ; கயவர் அறை பறை அன்னர் - கயவர் அறையப்படும் பறையினையொப்பர்.

* ' தாழ்ச்சியுமாகிய ' என்பதும் பாடம். † கலித்தொகை, டுக.

மறை : வெளிப்படிற் குற்றம் விளையுமென்று பிறரைமறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர் : அம்மறைத்தற்குரியார். 'உய்த்' தென்றார், அவர்க்கது பெரும்பாரமாதலேக்கி. பறை ஒருவன் கையாற் றன்னையறிவித்த தொன்றனை இடந்தோறும் கொண்டு சென்று யாவரையு மறிவிக்குமாகலான், இது தொழிலுவமம். இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது. (சு)

கo்எஎ. சார்ங்கை வீதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.*

(இ - ள்.) கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாதவர்க்கு - கயவர் தங்கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினையுடைய ரல்லாதார்க்கு ; ஈர்ங்கை விதிரார் - தாமுண்டு பூசிய கையைத் தெறித்தல் வேண்டுமென் றிரந்தாலுந் தெறியார்.

வளைந்த கை : முறுக்கிய கை. மெலிவார்க்கு யாதுங்கொடார், நலிவார்க்கு எல்லாங் கொடுப்பரென்பதாம். (எ)

கo்எஅ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(இ - ள்.) சொல்லப் பயன்படுவர் சான்றோர் - மெலியார் சென்று தங்குறையைச் சொல்லிய துணையானே இரங்கப் பயன் படுவர் மேலாயினோர் ; கீழ் கரும்புபோல் கொல்லப் பயன்படும் - மற்றைக் கீழாயினோர் கரும்புபோல வலியார் நைய நெருக்கியவழிப் பயன்படுவர்.

பயன்படுதல்: உள்ளது கொடுத்தல். கீழாயினோர திழிவுதோன்ற மேலாயினோரையும் உடன்கூறினோர். இவை யிரண்டு பாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது. (அ)

கo்எக. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

(இ - ள்.) உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின் - பிறர் செல்வத்தாற் பட்டுந்துகிலு முடுத்தலேயும் பாலோடடிசி லுண்டலேயுங் கீழாயினோன் காணுமாயின், பிறர்மேல் வடுக் காண வற்றாகும் - அவற்றைப் பொறாது அவர்மாட்டு வடுவில்லேயாகவும் உண்டாக்க வல்லனும்.

* நாலடியார், உகடு.

உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத் தொழின்மேனின்றன;* அவற்றுற் பூண்டல் ஊர்தன் முதலிய பிறதொழில்களுங் கொள்ளப் படும். அவற்றைக் கண்ட துணையானே பொருமை யெய்தலிற் 'காணி' னென்றும், கேட்டார் இது கூடுமென் றியை யப் படைத்தல் அரிதாகலின் 'வற்புறு' மென்றுங் கூறினர். இத னுற் பிறர்செல்வம் பொருமை கூறப்பட்டது. (க)

கஅ0. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(இ - ள்.) கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கயவர் தம்மை யாதானுமொரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற் குரியர்: எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறெத்தொழிற் குரியர்?

உணவின்மையாகப் பிறிதாக ஒன்று வந்துற்ற துணையானென் பது தோன்ற 'ஒன்றுற்றக்கா' லென்றும், கொள்கின்றூர் தங் கயமை யறிந்து வேண்டாவென்றற்கு முன்னே விற்றுகிற்றலின் 'விரைந்' தென்றுங் கூறினர். ஒரு தொழிற்கு முரியரல்ல ரென்பது குறிப் பெச்சம். இதனுற்றும் பிறர்க் கடிமையாய் நிற்பரென்பது கூறப் பட்டது. (கo)

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

* சஉடு - ஆம் குறளுரை.

கூ. காமத்துப்பால்

க. களவியல்

இனி, அப்பொருளைத் தினைக்காரணமாக வுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங்கூறுவா னெடுத்துக்கொண்டார். ஈண்டின்பமென்றது ஒருகாலத் தொருபொருளான் ஐம்புலனுநுகர்தற் கிறப்புடைத்தாய காம வின்பத்தினை ; இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனுஞ் 'சுவைபலவென்று கூறுவார் கூறுக யாங்கூறுவ தின்பச்சுவை யொன்றனையுமே'யென இதனையே மிகுத்துக் கூறினான். இது புணர்ச்சி பிரிவென இருவகைப்படும். எனை இருத்தல், இரங்கல், ஊடலென்பனவோ வெனின், இவர் பொருட் பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்க ணடக்கினரென்க. இனி, அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவைமிகுதிபயப்ப உலகநடையோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோளிரண்டனுள்ளுங் களவாவது பிணி மூப் பிறப்புக்க ளின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனு மன்பு முதலியவற்றுற் றம்மொளப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவு மடுப்பவுமன்றிப் பால்வகையாற் றமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை யேழதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் டகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

அதி. கoக—தகையணங்குறுத்தல்

[அஃதாவது, பொழில் விளையாட்டு விருப்பான் ஆயகீங்க அதன்கட் டமியளாய் நின்றாளை வேட்டவிருப்பான் இளையார்நீங்கத் தமியனுய்வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்ற பொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.]

கoஅக. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

[தலைமகளுருவுமுதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது.]

(இ - ள்.) கணங்குழை - இக்கனவிய குழையை யுடையாள்; அணங்குகொல் - இப்பொழிற்கு ணுறைவாளோர் தெய்வ மகளோ; ஆய் மயில்கொல் - அன்றி யொரு மயில் விசேடமோ; மாதர்கொல் - அன்றி யொரு மானுடமாதரோ? என் நெஞ்சு மாலும் - இவளை யின்னளென்று துணியமாட்டாது என் நெஞ்சு மயங்காநின்றது.

'ஓ' அசை. 'ஆய்மயில்' படைத்தோன் விசேடமாக வாய்ந்து படைத்த மயில்; மயிற்சாதியுட் டெரிந்தெடுத்த மயிலென்றுமாம். 'கணங்குழை' ஆகுபெயர். கணங்குழையென்று பாடமோதிப் பல வாய்த் திரண்ட குழையென் றுரைப்பாருமுளர். எழுதலாகா வுருவுந் தன் வருத்தமும்பற்றி 'அணங்குகொ' லென்றும், சாயலும் பொழில் வயி னிற்றலும்பற்றி 'ஆய்மயில்கொ' லென்றும், தன் நெஞ்சஞ் சென்றமையும் அவ ளெதிர்நோக்கியவாறும்பற்றி 'மாதர்கொ' லென் றுங் கூறினனென். (க)

கoஅஉ. நோக்கினு ணோக்கெதிர் நோக்குத லுக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

[மானுடமாதராத றெளிந்த தலைமகன் அவணோக்கினுளைய வருத்தங் கூறியது.]

(இ - ள்.) நோக்கினுள் நோக்கெதிர் நோக்குதல் - இப்பெற்றித் தாய வனப்பினையுடையாள் என்னோக்கிற் கெதிர்நோக்குதல்; தாக்கு அணங்கு தானைக்கொண் டன்னது உடைத்து - தானே தாக்கி வருத்துவதோ ரணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டுவந் தாற்போலுந் தன்மையை யுடைத்து.

மேலும் "அணங்குகொ லாய்மயில்கொ" லென்றமையான், சுட்டு வருவிக்கப்பட்டது. எதிர்நோக்குத லென்றமையின், அது குறிப்பு நோக்காயிற்று. வனப்பால் வருந்துதன்மேலுங் குறிப்பு நோக்கால் வருந்துதல் கூறியவாறு. 'நோக்கினு' ளென்பதற்கு என்னு ணோக் கப்பட்டாளென் றுரைப்பாரு முளர். (உ)

கoஅஊ. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

[இதுவுமது]

(இ - ள்.) கூற்று என்பதனைப் பண்டு அறியேன் - கூற் றென்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவ தல்லது கண்

டறியேன் ; இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன் ; பெண்டகையால் பேர் அமர்க் கட்டு - அது பெண்டகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து.

பெண்டகை : ஈாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் குணங்கள். அவை அவ்வக்குறிகளா னறியப்பட்டன. அமர்த்தல் : அமர் செய்தல் ; பெயரடியாய வினை. பெண்டகையால், இன்பம்பயத்தலு மூண்டேனும் துன்பம்பயத்தன் மிகுதிபற்றிக் கூற்றுக்கிக் கூறினன். (கூ)

கொஅசு. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

[இதுவுமது]

(இ - ள்.) பெண்டகைப் பேதைக்குக் கண் - பெண்டகையையுடைய விப்பேதைக்கு உளவாய கண்கள் ; கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக்கண்டா ருயிருண்ணுந் தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன.

அமர்த்தல் : மாறுபடுதல் ; குணங்கட்கும் பேதைமைக்கு மேலாது கொடியவா யிருந்தன வென்பதாம். (சு)

கொஅஎ. கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
ஞேக்கமிம் மூன்று முடைத்து.

[இதுவுமது]

(இ - ள்.) கூற்றமோ - என்னை வருத்துத லுடைமையாற் கூற்றமோ ; கண்ணே - என்மே லோடுத லுடைமையாற் கண்ணே ; பிணையோ - இயல்பாக வெருவுத லுடைமையாற் பிணையோ ? அறிகின்றிலேன் ; மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து - ஆம் மடவரல் கண்களினோக்கம் இம்மூன்றன் றன்மையையு முடைத்தாயிராகின்றது.

இன்பமுந் துன்பமும் ஒருங்குசெய்யாகின்ற தென்பதாம். தொழில்பற்றிவந்த ஐயவிலேயுவமம். (எ)

கொஅசு. கொடும்புரு வங்கோடா மறைப்பி னெடுங்கணுட்
செய்யல மன்னிவள் கண்.

[இதுவுமது]

(இ - ள்.) கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியாநட்பாய கொடும்புருவங்கடாஞ் செப்பமுடையவாய் விலக்கினவாயின் ;

இவள் கண் நடுங்கு அஞர் செய்யல - அவற்றைக் கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்குந் துயரைச் செய்யமாட்டா.

நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ்செம்மையுடைய ராதல் வேண்டலிற் 'கோடா' வென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடைநின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாகவந்து அஞர் செய்யுமாகலின், 'மறைப்பி' னென்றுங் கூறினன். 'நடுங்கஞர்': நடுங்கற்கேதுவாய வஞர். தாமியல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுதிக்கண் மேற்சென்றிடிக்க* மாட்டாவாயின வென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக் கண் வந்தது. (ச)

கO அஎ. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

[அவண் முலைகளினுய வருத்தங் கூறியது.]

(இ - ள்.) மாதர் படாஅ முலைமேற் றுகில் - இம்மாதர் படா முலைகளின்மே லிட்டதுகில்; கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் - அவை கொல்லாமற் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மே லிட்ட முகபடாத்தினை யொக்கும்.

கண்ணை மறைத்தல்பற்றிக் 'கட்படா' மென்றன். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையும் பெருமையுங் கண்டு இத்துணை யாற்ற லுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய்விலவெனக் கருதிப் 'படாஅ முலை' யென்றன். உவமை சிறிதுமறையாவழி உவை கொல்லு மென்பது தோன்ற நின்றது. (எ)

கO அஅ. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணரு முட்குமென் பீடு.†

[நுதலினுய வருத்தங்கூறியது.]

(இ - ள்.) ஞாட்பினுள் நண்ணரும் உட்கும் என் பீடு - போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்தார்வாய்க்கேட் டஞ்சுதற் கேதுவாய என்வலி; ஒண்ணுதற்கு உடைந்ததே - இம்மாதர தொள்ளிய நுதலொன்றற்குமே அழிந்துவிட்டது.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. 'ஞாட்பினு' ளென்றதனாற் பகைவராதல் பெற்றும். 'பீ' டென்ற பொதுமையான் மன

* குறள், எஅச. † திருக்கோவையார், உக.

வலியுங் காயவலியுங் கொள்க. 'ஓ' வென்னும் வியப்பின்கட் குறிப்பு அவ்வலிகளது பெருமையும், முதலது சிறுமையுந்தோன்ற நின்றது. கழிந்ததற் கிரங்கலிற் றற்புகழ்தலன்றுயிற்று. (அ)

கoஅக. பீணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனே வேதில தந்து.

[அணிநலத்தாலை வருத்தங் கூறியது.]

(இ - ள்.) பீணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து மான்பீணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையு முடையவளாயவிவட்கு; வேதில தந்து அணி எவன் - ஒற்றுமை யுடைய இவ்வணிகளே யமைந்திருக்க வேற்றுமையுடைய அணிகளைப் படைத்தணிதல் என்ன பயனுடைத்து?

'மடநோக்கு': வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாத லும் எனக்கணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென் பதாம். (கூ)

கoகo. உண்டார்க ணல்ல தடுநருக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

[தலைமகள் குறிப்பறிதலுற்றுன் சொல்லியது.]

(இ - ள்.) அடுநரு - அடப்படு நரு; உண்டார்கண் அல்லது - தன்னை யுண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது; காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச்செய்த லுடைத்தன்று.

'அடுநரு' வெளிப்படை. 'காம' மென்றது ஈண்டு அது நுகர்தற் கிடனுகியாரை. கண்டார்கணென்னு மேழாவது இறுதிக்கட்டொக் கது. மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ் சிறந்ததே யெனினும் இவள்குறிப் பாராய்ந் தறியாமையின் யானது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க; "அரிமயிர்த் திரண்முன்கை*" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல. (கo)

அதி. ககo—குறிப்பறிதல்

[அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினை யறிதலும், தோழி குறிப்பினை யறிதலும், அவடான் அவ்விருவர் குறிப்பினையு மறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகன் றலைமகளைக் கூடுங்

* புறநானூறு, கக,

கால் இது வேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.]

கo. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.*

[தலைமகன்றலைமகளுளப்பாட்டுக் குறிப்பினை அவணுணர்கிளை னறிந்தது.]

(இ - ள்.) இவள் உண்கண் உள்ளது இருநோக்கு - இவளுடைய வுண்கணகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டு நோக்காயிற்று ; ஒருநோக்கு நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து - அவற்றுள் ஒருநோக்கு என்கணுய்செய்யுநோக்கு, எனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு.

'உண்கண்': மையுண்ட கண். நோய்செய்யு நோக்கு அவண் மனத்திளைய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு ; மருந்தாய நோக்குத் தன்கணிழ்கின்ற அற்பு நோக்கு ; நோய்செய்யு நோக்கினைப் பொதுநோக் கென்பாருமுளர் : அது நோய்செயிற் கைக்கினை யாவ தல்லது அகமாகாமை யறிக. இவ்வருத்தந் தீரும் வாயிலுமுண்டாயிற் றென்பதாம். (க)

கo. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

[இதுவுமது]

(இ - ள்.) கண் களவுகொள்ளும் சிறுநோக்கம் - இவள்கண்கள் யான்காணுமல் என்மேலுைக்குகின்ற அருகிய நோக்கம் ; காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியள வன்று, அதனினு மிகும்.

தாணுக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலாற் 'களவுகொள்ளு' மென்றும், அஃதுளதாங்காலஞ் சிறிதாகலிற் 'சிறுநோக்க' மென்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலையென்பான் 'செம்பாக மன்று பெரி'தென்றுங் கூறினுன். (உ)

கo. நோக்கினு ணோக்கி யிறைஞ்சினு ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

[நோக்கினுளு நாணினுளு மறிந்தது.]

(இ - ள்.) நோக்கினுள் - யாணுக்காவளவிற் றுனென்னையன்போடு நோக்கினுள் ; நோக்கி இறைஞ்சினுள் - நோக்கி ஒன்றனை

* திருக்கோவையார், டு.

யுட்கொண்டு நாணி இறைஞ்சினாள்; அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர் - அக்குறிப்பு இருவேமிடையுந் தோன்றிய அற்புப்பயிர் வளர அதன்க ணவள் வார்த்த நீராயிற்று.

'அஃ' தென்னுஞ் சுட்டுப்பெயர் அச்செய்கைக் கேதுவாய குறிப் பின்மே னின்றது. யாப்பினு ளுயதனை 'யாப்' பென்றார். ஏகதேச வுருவகம். (கூ)

கoகூச. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

[நாணினாலு மகிழ்ச்சியினாலு மறிந்தது.]

(இ - ள்.) யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் - யான்றன்னை நோக்குங்காற் றானெதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்கா கிற்கும்; நோக்காக்கால் தான்நோக்கி மெல்ல நகும் - அஃதறிந் தியா னோக்காக்காற் றானென்னை நோக்கித் தன்னுள்ளே மகிழா கிற்கும்.

'மெல்ல': வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப் பினிது விளங்கும். 'மெல்ல நகு' மென்பதற்கு முறுவலிக்குமென் றுரைப்பாரு முளர். (எ)

கoகூடு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தா ணோக்கினாள் போல நகும்.

[இதுவுமது]

(இ - ள்.) குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக்கொண்டு நோக்காத்தானையல்லது; ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒருகண்ணைச் சிறங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின் றன்னுள்ளே மகிழாகிற்கும்.

'சிறக்கணித்தா' ளென்பது செய்யுள் விகாரம். சிறங்கணித் தல்: சுருங்குதல். அது தானும் வெளிப்பட நிகழாமையிற் 'போல' வென்றான். நோக்கியென்பது சொல்லெச்சம். இனியிவளை யெய்து தல் ஒருதலையென்பது குறிப்பெச்சம். (அ)

கoகூசு. உரு அதவர்போற் சொலினுஞ் செரு அர்சொ
லொல்லை யுணரப் படும்.

[தோழிசேட்படுத்தவழி அவள்குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) உரு அதவர்போல் சொலினும் - புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற் சொன்னாராயினும்; செரு அர் சொல் ஒல்லை

உணரப்படும் - அகத்துச் செறுதலிலாதார் சொற் பிற்பயத்தல் குறையுற்றூராற் கடிதி னறியப்படும்.

கடுஞ்சொல்லென்பது இவ்விடங் காவன்மிகுதியுடைத்து, வரற் பாலி ரல்லீரென்றன்* முதலாயின. 'செறு' ரெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக்கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து, உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்கு மொக்கும். (கூ)

கoகூஎ. செறுஅச் சிறுசொல்லுஞ் செற்றூர்போ னேக்கு
முறுஅர்போன் றூற்றூர் குறிப்பு.

[இதுவுமது]

(இ - ள்.) செறுஅச் சிறுசொல்லும் - பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்லும்; செற்றூர்போல் நோக்கும் - அகத்துச் செறுநிருந்தே புறத்துச் செற்றூர்போன்ற வெகுளி நோக்கும்; உறுஅர்போன்று உற்றூர் குறிப்பு - நொதுமலர் போன்று நட்பாயினூர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன.

'குறிப்பு' ஆகுபெயர். இவை உள்ளே யொருபயன் குறித்துச் செய்கின்றன இயல்பல்ல வாகலான், இவற்றிற் கஞ்சவேண்டா வென்பதாம். (எ)

கoகூஅ. அசையியற் குண்டாண்டோ ரேர்யா னேக்கப்
பசையினள் பைய நகும்.

[தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.]

(இ - ள்.) யான் நோக்கப் பசையினள் பைய நகும் - என்னை யகற்றுகின்ற சொற்காற்று தியானிரந்து நோக்கியவழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றுள்; அசை இயற்கு ஆண்டு ஓரேர் உண்டு - அதனுல் நடங்கிய வியல்பினையுடையாட்கு அந் நகையின்கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக் குறிப்புண்டு.

'ஏர்' ஆகுபெயர். அக்குறிப்பு இனிப் பழுதாகாதென்பதாம். (அ)

கoகூக. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

[தோழி மதியுடம்படுவா டன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) ஏதிலார்போலப் பொதுநோக்கு நோக்குதல் - முன்னறியாதார்போல ஒருவரையொருவர் பொதுநோக்கத்தா னேக்கு

* திணைமொழியைம்பது, ரு.

தல் ; காதலார் கண்ணே உள - இக்காதலையுடையார் கண்ணே யுள வாகாநின்றன.

'பொதுநோக்கு': யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற்றொழில் ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறுபாட்டாற் பலவாமாகலானும், 'உள' வெனப் பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்"* தலின் அது பற்றிக் 'காதலா' ரென்றும் அது புறத்து வெளிப்படாமையின் 'ஏதிலார்போல' வென்றுங் கூறினாள். (கூ)

கசOO. கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில.

[இதுவுமது]

(இ - ள்.) கண்ணெடு கண்ணிணை நோக்கு ஒக்கின் - காமத்திற் குரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கா லொக்குமாயின் ; வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல - அவர் வாய்மைதோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனு முடையவல்ல.

நோக்காலொத்தல் காத லுணர்க்கினவாதல். 'வாய்ச்சொற்கள்' : மனத்தின்கணின்றி வாயளவிற் றோன்றுகின்ற சொற்கள். இருவர் சொல்லுங்கேட்டு உலகியன்மேல்வைத்துக் கூறியவாறு. இருவர் சொல்லுமாவன அவள் புனங்காவன்மேலும் அவன் வேட்டத்தின் மேலுஞ் சொல்லுவன.† பயனில்சொற்களாகலின், இவை கொள்ளப் படாவென்பதாம். இவை புணர்த்த னிமித்தம். (கO)

அதி. ககக—புணர்ச்சிமகிழ்தல்

[அஃதாவது, அங்ஙனங் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப் புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். அதிகாரமுறைமையும் இத னானே விளங்கும்.]

ககOக. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

---

* "ஏனல் காவ லிவளு மல்லள்" என்ற பாட்டு ; இதனை இறைய னாகப் பொருள், அ-ம் சூத்திரத்துரையிலும், தொல். பொருள். களவு. உந-ஆம் சூத்திரத்துரையிலுங் காண்க.

† திருக்கோவையார், சுசு.

[இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.]

(இ - ள்.) கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம் புலனும் - கண்ணுற்கண்டும் செவியாற்கேட்டும் நாவாலுண்டும் மூக் கான்மோந்தும் மெய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படு மைம்புலனும்; ஒண்டொடி கண்ணே உள - இவ்வொள்ளிய தொடியையுடையாள் கண்ணே யுளவாயின.

உம்மை முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கி நின்றது. வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களானனு பவிக்கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணே யனுபவிக்கப்பட்டன வென்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன. (க)

கசo உ. **பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை**
தன்னெய்க்குத் தானே மருந்து.

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.]

(இ - ள்.) பிணிக்கு மருந்து பிற - வாதமுதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதான* மாயினவன்றி மாறுபவியல்பினை யுடையனவாம்; அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணியிழையினை யுடையாள் தன்னிறைய பிணிக்கு மருந்துந் தானேயாயிறைவள்.

இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினதுகலிற் 'தன்னை' யென்றும், அவ்வருத்தந் தமியாளை யிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தாதுகலிற் 'றானேமருந்' தென்றுங் கூறினன். இப்பிணியும் எளியவாயவற்றுற் றீரப்பெற்றில மென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. (உ)

கசo ங. **தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ**
றாமரைக் கண்ணு லகு.

[நிந்திசயவின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற் கின்னையாதல் தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது.]

(இ - ள்.) தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிதுகொல் - ஐம்புலன்களையு நுகர்வார்க்குத் தாம் விரும்புமகளிர் மெல்லிய தோளின்மட் டுயிலுந் துயில்போல வருந்தாம லெய்தலாமோ; தாமரைக்கண்ணுன் உலகு - அவற்றைத் துறந்த தவயோகிக ளெய் துஞ் செங்கண்மா லுலகம்?

---

* சுசஅ - ஆம் குறளுரை.

ஐம்புலன்களையு நுகர்வா ரென்னும்பெயர் அவாய்நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலெவிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம்மனோர்க் காகாதென்னுங் கருத்தால் 'இனிதுகொ' லென்றான். இந்திரனுலகென் றுரைப்பாருமூளர்.* 'தாமரைக்கண்ணு' னென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃ துரையன்மை யறிக. (கூ)

கசoசு. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ரு ளிவள்.

[பாங்கற்கூட்டத் திறுதிக்கட் சொல்லியது.]

(இ - ள்.) நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும் நீ - தன்னேயகன்றுழிச் சுடாநிற்கும், அணுகுழிக் குளிராநிற்கும், இப்பெற்றித்தாய நீயை; இவள் யாண்டுப் பெற்ரூள் - என்கட் டருதற்கு இவளெவ்வுலகத்துப் பெற்ரூள்?

கூடாமுன் றுன்புறுதலின் 'நீங்கிற் றெறூஉ'மென்றும், கூடிய பின் னின்புறுதலிற் 'குறுகுங்காற் றண்ணென்னு'மென்றும், இப் பெற்றியதோர் நீ உலகத்தில்லேயா மாகலின் 'யாண்டுப்பெற்ரூ' ளென்றுங் கூறினன். தன் காமத்தீத்தன்னையே அவடந்தாளாகக் கூறினன், அவளான் அது வெளிப்படுதலின். (ச)

கசoஎ. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்.†

[தோழியிற்கூட்டத் திறுதிக்கட் சொல்லியது.]

(இ - ள்.) வேட்டபொழுதின் அவையவை போலுமே - மிக வினியவாய பொருள்களைப் பெரூது அவற்றின்மேல் விருப்பங் கூர்ந்தபொழுதின்கண் அவையவை தாமேவந் தின்பஞ்செய்யுமாறு போல் இன்பஞ் செய்யும்; தோட்டார் கதுப்பினுள் தோள் - எப் பொழுதும் பெற்றுப்புணரினும், பூவினையணிந்த தழைந்த கூந்த லினையுடையா டோள்கள்.

தோடு ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு. பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் வாராமைபற்றி இவ்வாறு கூறினன். தொழிலுவமம். (எ)

* மணக்குடவர். † திருக்கோவையார், க.

கக0சு. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி யியன்றன தோள்.

[இதுவுமது]

(இ - ள்.) உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால் - தன்னைப் பெரிது வாடிய என்னுயிர் பெற்றுறுந்தோறுந் தளிர்க்கும் வகை தீண்டுதலான்; பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன - இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோ ரமிழ்திலுற் செய்யப் பட்டன.

ஏதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்கு மெய்திற்று. வாடிய வுயிரைத் தளிர்ப்பித்தல் பற்றி, அவை 'யமிழ்தினியன்றன' வென்றான். தளிர்த்தல்: இன்பத்தாற் றழைத்தல். (சு)

கக0எ. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்கு
லம்மா வரிவை முயக்கு.

[இவளே நீ வரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமது பாத்துண்ணு மில்லறத்தோடு படல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையது முயக்கம்; தம்மில் இருந்து தமது பாத்துண்டற்று - இன்பம் பயத்தற்கட் டமக்குரிய இல்லின்கணிருந்து உலகோர் தந் தாளான் வந்த பொருளேத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத்துத்* தங் கூற்றை யுண்டாற்போலும்.

தொழிலுவமம். இல்லறஞ் செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக்கிப் புணர்ச்சியே தருமென வரைவுடன்படான் கூறியவாறுயிற்று. (எ)

கக0அ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

[ஒத்த அன்புடைய நமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியதென வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) (நீ சொல்லுகின்ற தொக்கும்;) வளி இடை போழப் படா முயக்கு - ஒருபொழுது நெகிழாமையிற் காற்று லிடையறுக்கப்படாத முயக்கம்; வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரையொருவர் விழைவா ரிருவர்க்கு மினிதே.

* சசு - ஆம் குறளுரை.

முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் தேற்றத்தின் சண்வந்தது. ஈண்டு இருவரில்லை; இன்மையான் இஃதொவ்வா தென்பது கருத்து. களவிற் புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன் படான் கூறியவாறு. (அ)

ககஅ. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

[காதத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.]

(இ - ள்.) ஊடல் உணர்தல் புணர்தல் இவை - புணர்ச்சி யினிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடலும், அதனையளவறிந்து நீங்குதலும், அதன்பி னிகழ்வதாய அப் புணர்ச்சிதானுமென இவை யன்றே; காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்துகொண்டு காமத்தை யிடைவிடா தெய்தியவர் பெற்ற பயன்கள்.

ஆடவர்க்குப் பிரிவென்பதொன் றுளதாதன்மேலும், அது தான் பரத்தையர்மாட் டாதலும் அதனையறிந்து மகளிர் ரூடிநிற்றலும் அவ்வூடலைத் தவறுசெய்தவர் தாமே தந் தவறின்மை கூறி நீக்கலும் பின்னு மவ்விருவரும் ஒத்தவன்பினராய்க் கூடலுமன்றே முன் வரைந்தெய்திஞர் பெற்ற பயன்; அப்பயன், இருதலைப்புள்ளி னொருயிராய உழுவலன்புடைய வெமக்கு வேண்டாவென அவ் வரைந்தெய்தலை யிகழ்ந்து கூறியவாறு. (கூ)

ககக. அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

[புணர்ந்துடன் போகின்றுன் தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை யறியவறிய முன்னையறியாமை கண்டாற்போலக் காணப்படாகின்றது; சேயிழை மாட்டுச் செறி தோறும் காமம் - சிவந்த விழையினை யுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவண்மாட்டுக் காதல்.

களவொழுக்கத்திற் பல விடையீடுகளா னெய்தப்பெறுது அவாவுற்றுன் இதுபொழுது நிரந்தரமாக வெய்தப் பெற்றமையின், 'செறிதோறு' மென்றுன். அறிவிற் கெல்லையின்மையான் மேன்மே லறியவறிய முன்னையறிவு அறியாமையாய் மூடியுமாறுபோலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற் செறியச்செறிய முன்னைச்

செறிவு செறியாமையாய் முடியாகின்றதெனத் தன்னுராமை கூறிய வாறு. இப் புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கு முண்டேனும் அவண் மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்றுனிகழாமையறிக. (கo)

அதி. ககஉ—நலம்புனைந்துரைத்தல்

[அஃதாவது, தலைமகன் தலைமக ணலத்தைப் புனைந்து சொல்லியது. இது புணர்ச்சிமகிழ்ந்துழி நிகழ்வதாகலின், **புணர்ச்சிமகிழ்த** லின்பின் வைக்கப்பட்டது.]

ககஉக. **நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு**
மென்னீரள் யாம்வீழ் பவள்.

[இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.]

(இ - ள்.) அனிச்சமே வாழி நன்னீரை - அனிச்சப்பூவே, வாழ்வாயாக! மென்மையால் நீ யெல்லாப்பூவினு நல்லவியற்கையை யுடையை; யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள் - அங்ஙன மாயினும், எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினுமெல்லிய வியற் கையை யுடையள்.

அனிச்சம் ஆகுபெயர். 'வாழி' யென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி யானே மெல்லியனென்னுந் தருக்கினை யொழிவாயாகவென்ப தாம். அதுபொழு துற்றறிந்தாஞ்சலின், ஊற்றி னினிமையையே பாராட்டினன். இன்னீரளென்று பாடமோதுவாருமுளர். (க)

ககஉஉ. **மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்**
பலர்காணும் பூவொக்கு மென்று.

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! இவள் கண் பலர்காணும் பூ வொக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதி; மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலமுதலிய மலர்களைக் கண்டால் மயங்காதின்றுய், நின்னறிவிருந்தவாறென்!

மையாத்தல் ஈண்டு ஒவ்வாதவற்றை யொக்குமெனக் கோடல்; இறுமாத்தல், செம்மாத்தலென்பனபோல வொருசொல். இயற்கைப் புணர்ச்சி நீக்கமுதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றை டொருபுடையொக்கு மலர்களைக் கண்டுழியெல்லாம் அவற்றின்கட் காதல்செய்துபோந்தான், இதுபொழுது அக்கண்களி

ஞலமுழுதுந் தானே தமியாளே யிடத்தெதிர்ப்பட் டனுபவித்தா ளுகலின் அம்மலர்கள் ஒவ்வாமை கண்டு ஒப்புமை கருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு. (உ)

ககஙூ. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

[கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் றலைமகளதியல்பு கூறியது.]

(இ - ள்.) வேய்த்தோளவட்கு - வேய்போலுந் தோளினை யுடையவட்கு; மேனி முறி - நிறந் தளிர்நிறமாயிருக்கும்; முறுவல் முத்தம் - பல்லு முத்தமாயிருக்கும்; நாற்றம் வெறி - இயல்பாய நாற்றம் நறுநாற்றமா யிருக்கும்; உண்கண் வேல் - உண்கண்கள் வேலாயிருக்கும்.

பெயரடையானும் ஓரியல்பு கூறப்பட்டது. 'முறி' 'முறுவ' லென்பன ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந் துரையாயிற்று. பின்னுற் கருதப்பட்டாளே யறியேனென்று சேட் படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉமாம். (ஙூ)

ககஙஉ. காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று.

[பாங்கற்கூட்டத்துச்சென்று சார்தலுறுவான் சொல்லியது.]

(இ - ள்.) குவளை - குவளைப்பூக்கடாமும்; காணின் - காண் டற்றெழிலை யுடையவாயின்; மாண் இழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்டவிழையினையுடையாள் கண்களை யாமொவ்வேமென்று கருதி அந்நாணினை லிறைஞ்சி நிலத்தினை நோக்கும்.

பண்பானேயன்றித் தொழிலானு மொவ்வாதென்பான் 'காணி' னென்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத் தாமென்பது தோன்றக் 'கவிழ்ந்' தென்றுங் கூறினன். காட்சியு நாணு மின்மையிற் செம்மாந்து வானை நோக்கினவென்பதாம். (ச)

ககஙரு. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

[பகற்குறிக்கட் பூவணி கண்டு சொல்லியது.]

(இ - ள்.) அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள் - இவள் தன் மென்மை கருதாது அனிச்சப்பூவை முகிழ்களையாது சூடினாள்; நுசுப்பிற்கு நல்ல பறை படாஅ - இனி யிவளிடைக்கு நல்ல பறைக ளொலியா.

அம் முகிழ்ப்பாரம் பொருமையின் இடை முரியும், முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக்குறிப்பால் நுசுப்பின்மே லேற்றப்பட்டன. (இ)

ககக. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

[இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.]

(இ - ள்.) மீன் - வானத்து மீன்கள்; மதியும் மடந்தை முகனும் அறியா - வேறுபாடு பெரிதாகவும் தம் மதியினையும் எம் மடந்தை முகத்தினையும் இதுமதி இதுமுகமென் றறியமாட்டாது; பதியின் கலங்கிய - தங்நிலையினின்றுங் கலங்கித் திரியாநின்றன.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதுமியங்குதல்பற்றிப் 'பதியிற் கலங்கிய' வென்றுன். வேறுபாடு வருகின்ற பாட்டாற் பெறப்படும். இனி இரண்டனையும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியாவென் றுரைப்பினுமமையும். (ஈ)

ககஎ. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

[இதுவுமது]

(இ - ள்.) (அம்மீன்கள் அங்ஙனங்கலங்குதற்குக்காரணம் யாது?) அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப்போல - முன் குறைந்தவிடம் வந்து நிரம்பியே விளங்கு மதிக்கட்போல; மாதர் முகத்து மறு உண்டோ - இம்மாதர்முகத்து மறுவுண்டோ?

இடம்: காலே. 'மதிக்'கென்பது வேற்றுமை மயக்கம். தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையு மின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலவென விகழ்ந்து கூறியவாறு. (எ)

ககஅ. மாதர் முகம்போ லொவிவிட வல்லியேற்
காதலே வாழி மதீ.

[இதுவுமது]

(இ - ள்.) மதி வாழி - மதியே, வாழ்வாயாக! மாதர் முகம் போல் ஒளிவிட வல்லியேல் காதலே - இம்மாதர்முகம்போல யான் மகிழும் வகை ஒளிவீச வல்லையாயின், நீயுமென் காதலேயுடையை யாதி.

மதுவுடைமையின் அதுமாட்டாய், மாட்டாமையின் என்னுற் காதலிக்கவும்படா யென்பதாம். 'வாழி' யென்பது இகழ்ச்சிக் குறிப்பு. (அ)

ககக. மலரன்ன கண்ணுண் முகமொத்தீ யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

[இதுவுமது]

(இ - ள்.) மதி - மதியே; மலர் அன்ன கண்ணுள் முகம் ஒத்தி யாயின் - இம்மலர்போலுங் கண்ணினையுடையாண் முகத்தை நீயொக்க வேண்டுதியாயின்; பலர் காணத் தோன்றல் - இதுபோல யாண் காணத் தோன்று, பலர்காணத் தோன்றுதொழி.

தானே முகத்தினலமுழுதுங்கண்டனுபவித்தாளுகலின் ஈண் டும் பலர்காணத் தோன்றலே யிழித்துக்கூறினன். தோன்றின் னைக்கவ் வொப்புண்டாகா தென்பதாம். (கூ)

ககஉ. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

[உடன்போக்குரைத்த தோழிக்கு அதனதருமைகூறி மறுத்தது.]

(இ - ள்.) அனிச்சமும் அன்னத்தின் தூவியும் - உலகத்தா ரான் மென்மைக்கெடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகிய விரண்டும்; மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் - மாதரடிக்கு நெருஞ்சிப்பழம்போல வருத்தஞ்செய்யும்.

முள் வலிதாதலுடைமையிற் 'பழ' மென்றன். இத்தன்மைத் தாயவடி "பாத்தியன்ன குடுமிக் கூர்ங்கற்"* கூளையுடைய வெஞ் சுரத்தை யாங்ஙனங் கடக்குமென்பது குறிப்பாற் பெறப்பட்டது; செம்பொருளேயன்றிக் குறிப்புப்பொருளும் அடிநலனறியாமையாக லின், இதுவு மிவ்வதிகாரத்த தாயிற்று. (கஉ)

அதி. ககங—காதற்சிறப்புரைத்தல்

[அஃதாவது, தலைமகன் தன் காதன்மிகுதி கூறலும், தலைமகள் தன் காதன்மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்வதாகலின், **புணர்ச்சிமகிழ்தல், நலம்புனைந்துரைத்தல்** களின் பின் வைக்கப்பட்டது.]

* அகநானூறு, களிற்றியானைநிரை . கு.

ககஉக. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

[இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் டலைமகன் றன்னையப்புணர்த்தியது.]

(இ - ள்.) பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம்மெல்லிய மொழியினையுடையாளது வாலிய வெயிறூறிய நீர்; பாலொடு தேன் கலந் தற்று - பாலுடனே தேனைக் கலந்த கலவைபோலும்.

கலந்ததற்றென்பது விகாரமாயிற்று; கலக்கப்பட்டதென்ற வாறு. 'பாலொடுதே' னென்றவதனால் அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத்தென்பதாயிற்று. 'எயிறூறிய' வென இடத்து நிகழ்பொருளின்மேழில் இடத்தின்மே னின்றது. வேறுவேறறியப்பட்ட சுவையவாய பாலுந் தேனுங் கலந்தழி அக்கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாதலின், அது பொருளாகிய நீர்க்கு மெய்துவிக்க. (க)

ககஉஉ. உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

[பிரிவச்சங் கூறியது.]

(இ - ள்.) உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடுயிரிடையுளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய; மடந்தையொடு எம்மிடை நட்பு - இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள்.

என்னவெனப் பன்மையாற் கூறியது, இரண்டுந் தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்துவருதல், இன்பத்துன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமையென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகியாள் பின்னுடையளாமன்றே, ஆயவழி, இவன் யாவன்கொலெனவும், என்கணன்புடையன்கொலெனவும், இன்னுமிவனைத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும் அவண்மனத்தினகணிகழும்; அங்ஙிகழ்வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீரக் கூறியவாறு. என்னேயென்று பாடமோதுவாருமுளர். (உ)

ககஉங. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

[இடந்தலைப்பாட்டின்கட் டலைமகணீக்கத்துச் சொல்லியது.]

(இ - ள்.) கருமணியிற் பாவாய் நீ போதாய் - என்கண்ணிற் கருமணியின்கணுறையும் பாவாய், நீ யங்குநின்றும் போதருவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதராதிருத்தி

யாயின், எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு இருக்க விடமில்லையாம்.

யான் காணு தமையாமையின், இவள் புறத்துப் போகற்பால ளன்றி என்கண்ணு ளிருக்கற்பாலள்; இருக்குங்கால் நின்னே டொருங்கிருக்க இடம்போதாமையின் நின்னினுஞ் சிறந்த விவட்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக வென்பதாம். (கூ)

ககஉச. வாழ்த லுயிர்க்கன னாயிழை சாத
லதற்கன னீங்கு மிடத்து.

[பகற்குறிக்கட் புணர்ந்துநீங்குவான் சொல்லியது.]

(இ - ள்.) ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - தெரிந்த விழையினையுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல்போலும்; நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - பிரியுமிடத்து அதற்கு அதனினீங்கிப் போதல் போலும்.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழுங்காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ்செய்தலானும், அவற்றை அவள் புணர்வு பிரிவுகட் குவமையாக்கினன். (ச)

ககஉடு. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னெள்ளமர்க் கண்ணுள் குணம்.

[ஒருவழித்தணந்துவந்த தலைமகன் நீயிர் தணந்தஞான்று எம்மையுள்ளியு மறிதிரோவென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) ஒள்ளமர்க் கண்ணுள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒள்ளியவாய் அமரைச்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனாயின், நினைப்பேன்; மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன்.

'மன்' ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள்: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்துணையுந் தலைமகன் கூற்று; மேற் றலைமகள் கூற்று. (இ)

ககஉசு. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

[ஒருவழித்தணப்பின்கட் டலைமகனைத் தோழி இயற்பழிக்கு மென்றஞ்சி அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) தாங் காணுமைபற்றிச் சேய்மைக்கட் போயினு ரென்று கருதுவார் கருதுக; எங் காதலவர் கண்ணுள்ளிற் போகார் -

எம்முடைய காதலர் எங்கண்ணகத்து நின்றும் போகார் ; இமைப்பிற் பருவரார் - யாமறியாதிமைத்தோமாயின் அதனால் வருந்துவதுஞ் செய்யார் ; நுண்ணியர் - ஆகலாற் காணப்படா நுண்ணியர்.

இடைவிடாத நினைவின் முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலிற் 'கண்ணுள்ளிற் போகா' என்றும், இமைத்துழியும் அது நிற்றலான் 'இமைப்பிற் பருவரா' என்றுங் கூறினாள். (சு)

கசஉ எ. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

[இதுவுமது]

(இ - ள்.) காதலவர் கண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம் - காதலர் எப்பொழுது மெங்கண்ணி னுள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தாலெழுதுவதுஞ் செய்யேம் ; கரப்பாக்கு அறிந்து - அத் துணைக்காலமும் அவர் மறைதலையறிந்து.

இழிவுசிறப்பும்மை மாற்றப்பட்டது. 'கரப்பாக்' கென்பது வினைப்பெயர் ; வருகின்ற 'வேபாக்' கென்பது மது. யானிடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (எ)

கசஉ அ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

[இதுவுமது]

(இ - ள்.) காதலவர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும் - காதலர் எந்நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலையஞ்சாநின்றேம் ; வேபாக்கு அறிந்து - அவர் அதனான் வெய்துறலை யறிந்து.

எப்பொழுதும் எந்நெஞ்சின்க ணிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (அ)

கசஉ கூ. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

[வரைவிடை வைத்துப் பிரிவின்கட் டலைமக ளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை யியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது.]

(இ - ள்.) இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் - என் கண்ணிமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமை

யேன்; அனைத்திற்கே எதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் துயிலாநோய் செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

தன் கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து 'இவ்வூ' ரென்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையல்லை யென்பதாம்.

ககஙo. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

[இதுவுமது]

(இ - ள்.) என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளே யுவந்துறையாநிற்பர்; இகந்து உறைவர் எதிலர் என்னும் இவ்வூர் - அதனையறியாது அவரைப் பிரிந்துறையாநின்றூர் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

'உவந்துறைவ' ரென்றதனால் அன்புடைமை கூறினாள். பிரியாமையும் அன்புமுடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லை யென்பதாம். (கo)

அதி. ககச—நாணுத்துறவுரைத்தல்

[அஃதாவது, சேட்படுக்கப்பட்டு ஆற்றாளாயதலைமகன் தோழிக்குத் தன் ஞண்டுறவுரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன் ஞண்டுறவுரைத்தலுமாம். இது, காதன்மிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப்புரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

ககஙக. காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

[சேட்படுக்கப்பட்டு ஆற்றாளாய தலைமகன் சொல்லியது.]

(இ - ள்.) காமம் உழந்து வருந்தினர்க்கு - அரியராய மகளிரோடு காமத்தையனுபவித்துப் பின் னதுபெறாது துன்புற்ற வாடவர்க்கு; ஏம மடல் அல்லது வலி இல்லை - பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனியெனக்கு வலியாவதில்லை.

ஏமமாதல் அத்துன்ப நீங்கும்வகை அவ்வனுபவத்தினைக் கொடுத்தல். 'வலி' ஆகுபெயர். பண்டுமாடவராயினர் இன்பமெய்தி வருகின்ற வாறு நிற்க, நின்னையதற்குத் துணையென்று கருதிக் கொன்னே

முயன்ற யான் இதுபொழுது அல்லாமையை யறிந்தேனுகலான் இனி யானுமவ்வாற்றான் அதனையெய்துவலென்பது கருத்து. (க)

ககஙஉ. நோனு வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

[நாணுடைய துமக்கு அது முடியாதென மடல்விலக்க லுற்றாட்குச் சொல்லியது.]

(இ - ள்.) நோனு உடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவ்வருத்தத்தினைப்பொறுத வுடம்புமுயிரும் அதற்கேமமாய மடன்மாவினை யூரக் கருதாநின்றன; நாணினை நீக்கிநிறுத்து - அதனை விலக்குவதாய நாணினை யகற்றி.

"வருந்திஞர்க்" கென மேல்வந்தமையிற் செயப்படுபொருள் ஈண்டுக் கூறாராயினர். 'மடல்' ஆகுபெயர். 'நீக்கிநிறுத்' தென்பது ஒருசொன்னீர்மைத்து. அறிவு நிறை யோர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாணீங்காது நின்றது, அதுவுமிது பொழுது நீங்கிற்றென்பான், 'உடம்புமுயிரு' மென்றான். அவை தாந் தம்மூணீங்காமற்பொருட்டு மடலேறுமென்றது அவள் தன்னாற்றுமை யறிந்து கடிதிற் குறைகோடற்கேக்கி. (உ)

ககஙஊ. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்ரு ரேறு மடல்.

[நாணேயன்றி நல்லாண்மையு மூடைமையின் முடியாதென்றாட்குச் சொல்லியது.]

(இ - ள்.) நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்கவாண்டகைமையும் யான் பண்டுடையேன்; காமுற்றூர் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமத்தா னீங்குதலான், அக் காமமிக்கா ரேறும் மடலினை யின்றுடையேன்.

நாண்: இழிவாயினசெய்தற்கண் விலக்குவது. ஆண்மை: ஒன்றற்குந் தளராதுநிற்றல். அவை பண்டுள்ளன; இன்றுள்ளது இதுவேயாகலிற் கடிதின் முடியுமென்பதாம். (ங)

ககஙச. காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை.

[நாணுநல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனுல் அவைநீங்குவனவல்ல வென்றாட்குச் சொல்லியது.]

(இ - ள்.) நாணெடு நல்லாண்மை என்னும் புணை - யான் றன்னைக் கடத்தற்குக்கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணை

கலை ; காமக்கடும்புனல் உய்க்குமே - என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோகாநின்றது.

அது செய்யமாட்டாத ஏனைப்புனலி னீக்குதற்குக் 'கடும்புன' லென்றான். இப் புனற்கு அவை பூணையாகா ; அதனான் அவை நீங்கு மென்பதாம். (அ)

ககஉடு. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

[இவ்வாற்றுமையும் மடலும் நுமக் கெவ்வாறுவந்தன வென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழு தின்க ணனுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் முன்னறியேன்; தொடலைக் குறுந்தொடி தந்தாள் - இதுபொழுது எனக்கு மாலைபோலத்தொடர்ந்த சிறுவளையினையுடையா டந்தாள்.

காமம் ஏனைப்பொழுதுகளினு முளதேனும் மாலைக்கண் மலர்த லுடைமையின்* 'மாலையுழக்குந்துய' ரென்றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின் அவ்விழிவும் அவளாற் றரப்பட்டதென் றும், அவடான் நீ கூறியதே கூறுமிலைமையளென்பது தோன்றத் 'தொடலைக் குறுந்தொடி' யென்றுங் கூறினான். அப்பெயர் உவ மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இவை அவடந்தன வாகலின் நின்னு நீங்குமென்பது கருத்து. (இ)

ககஉசு. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

[மடலூரும் பொழுது இற்றைக்குங் கழிந்தவென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) பேதைக்கு என் கண் படல் ஒல்லா - நின் பேதை காரணமாக என் கண்கள் ஒருகாலுந் துயிறலைப் பொருந்தா ; யாமத் தும் மன்ற மடலூர்தல் உள்ளுவேன் - அதனால் எல்லாருந் துயிலு மிடையாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதாநிற்பேன்.

'பேதை' யென்றது பருவம்பற்றியன்று மடமைபற்றி. இனிக் குறைமுடிப்பது நாளையென வேண்டாவென்பதாம். (சு)

ககஉள. கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

* குறள் - கஉஉள.

[பேதைக் கென்கண் படலொல்லா வென்பதுபற்றி அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய வாடவரன்றே ஆற்றறற்பால ரென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறூப் பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினை யனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல; பெருந்தக்கது இல் - மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்தில்லை.

பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகாநின்றது, நீ யஃதறிகின்றிலை யென்பதாம். இத்தினையுந் தலைமகன் கூற்று; மேற் றலைமகள் கூற்று. (எ)

ககஉ அ. நிறையரியர் மன்னளிய ரென்னுது காம
மறையிறந்து மன்று படும்.

[காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.]

(இ - ள்.) நிறை அரியர் (என்னுது) - இவர் நிறையால் நாமீதூர்தற் கரியரென் றஞ்சுதல் செய்யாது; மன் அளியர் என்னுது - மிகவு மளிக்கத்தக்காரென் றிரங்குதல் செய்யாது; காமம் மறை இறந்து மன்றுபடும் - மகளிர் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது.

'என்னு' தென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. 'மன்' றென்பது தந்தை தன்னையரை நோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள்போன்று, தன்காமம் பெருகியவாறும் இனி யறத்தொடு நிற்றல்வேண்டு மென்பதுங் குறிப்பாற் கூறியவாறுயிற்று. (அ)

ககஉக. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

[இதுவுமது]

(இ - ள்.) எல்லாரும் அறிகிலார் என்று - யான் முன்னடங்கி நிற்றலான் எல்லாரு மென்னை யறிதலிலர், இனி யவ்வாறு நில்லாதியானே வெளிப்பட்டறிவிப்பலென்று கருதி; என் காமம் மறுகில் மருண்டு மறுகும் - என் காமம் இவ்வூர் மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல்: அம்பலாதல்; மறுகுதல்: அலராதல். அம்பலு மலருமாயிற்று, இனி யறத்தொடுநிற்றல்வேண்டு மென்பதாம். அறிவிலாரென்பதூஉம் பாடம். (க)

ககசo. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

[செவிலிக் கறத்தொடுநின்றுவைத்து யானிற்குமாறென்னையென்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) யாம் கண்ணிற் காண அறிவில்லார் நகுப - யாங் கேட்குமாறு மன்றிக் கண்ணுற் காணுமாறு எம்மையறிவிலார் நகா நின்றார்; யாம் பட்ட தாம் படாவாறு - அவரங்ஙனஞ் செய்கின்றது யாமுற்ற நோய்கள் தாமுறாமையான்.

'கண்ணி' னென்றது முன் கண்டறியாமை யுணரநின்றது. அறத்தொடுநின்றமை யறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றில லெனப் புலக்கின்றாளாகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்குந் தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற் கேலாமையறிக. (கo)

அதி. ககடு—அலரறிவுறுத்தல்

[அஃதாவது, களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற வலர் தனக்கறிகின்றவாற்றைத் தோழிக்கறிவுறுத்தலும், வரைவாக, உடன்போக்காக ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை யவன்றனக்கறிவுறுத்தலுமாம். இது நாணுத் துறந்தவழி நிகழ்வதாகலான். நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.]

ககசக. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

[அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி யலர் கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.]

(இ - ள்.) அலர் எழ ஆருயிர் நிற்கும் - மடந்தையொடெம்மிடை கட்பு* ஊரின்க ணலரா யெழுதலான் அவளைப் பெறுது வருந்து மென் னரியவுயிர் பெற்றதுபோன்று நிலைபெறும்; அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார் - அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறுகின்ற பலருமறியார்.

அல்ல குறிப்பட்டுத் தலைமகளை யெய்தப்பெறுத வருத்தமெல்லாந் தோன்ற அரிய வுயிரென்றும், அங்ஙனமரியாளை எளியளாக்கி

* குறள் - ககஉஉ.

யெடுக்கின்றமையின், அஃதவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாக நின்ற தென்பான் 'அலரெழ வாருயிர் நிற்கு'மென்றும்; பற்றுக்கோடாதலே அவ்வேதிலாரறியிற் றூற்றுதொழிவர், ஒழியவே ஆருயிர் போமாக லான் அவ்வாறியா தொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினான். மூற்றும்மை விகாரத்தாற் றொக்கது. (க)

கசஅ. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

[இதுவுமது]

(இ - ள்.) மலர் அன்ன கண்ணுள் அருமை அறியாது - மலர் போலுங் கண்ணையுடையாளது எய்தற்கருமை யறியாது; இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் அவளை யெளியளாக்கி அவளோ டலர் கூறலை எமக்குபகரித்தது.

'அருமை' அல்ல குறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. 'ஈந்த' தென்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின். அலர் கூறுவாரை அவர் செய்த வுதவிபற்றி 'இவ்வூ' ரென்றான். (உ)

கசஆ. உருஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

[இதுவுமது]

(இ - ள்.) ஊர் அறிந்த கௌவை உருஅதோ - எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வூரறிதலான் வீளுந்த அலர் எனக்குறுவ தொன்றன்றே; அதனைப் பெருஅது பெற்றன்ன நீர்த்து - அது கேட்ட வெண்மனம் அக்கூட்டத்தைப் பெறுதிருந்தே பெற்றாற் போலு நீர்மையை யுடைத்தாகலான்.

பெற்றன்ன நீர்மை: பெற்றவழி யுளதா மின்பம்போலு மின்ப மூடைமை. 'நீர்த்' தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. (ஊ)

கசஇ. கவ்வையாற் கவ்வித காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

[இதுவுமது]

(இ - ள்.) காமம் கவ்வையால் கவ்வித - என் காமம் இவ்வூ ரெடுக்கின்ற அலராலே யலர்தலை யுடைத்தாயிற்று; அது இன்றேல் தன்மை இழந்து தவ்வென்னும் - அவ்வலரில்லையாயின், தன் னியல்பிழந்து சுருங்கும்.

அலர்தல்: மேன்மேன்மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வி தென்றுற்போலக் கவ்வையுடையதனைக் 'கவ்வி' தென்றார். இயல்பு: இன்பம் பயத்தல். 'தவ்வென்னு' மென்பது குறிப்புமொழி; "நூல் கால் யாத்த மாலை வெண்குடை, தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப"* என்புழியுமது. (ச)

ககசஞ. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

[இதுவுமது]

(இ - ள்.) களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - கள்ளுண் பார்க்குக் களிக்குந்தோறுங் கள்ளுண்டல் இனிதாமாறுபோல; காமம் வெளிப்படுந்தோறும் இனிது - எனக்குக் காமம் அலராந் தோறும் இனிதாகாநின்றது.

வேட்கப்பட்டற்றுலென்பது 'வேட்டற்று' லென நின்றது, வேட்கையுருதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்ற தென்பதாம். (கி)

ககசட. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

[இடையீடெளாணும் அல்லகுறியாணுந் தலைமகனை யெய்தப்பெறுத தலைமகள் அவன் சிறைப்புறத்தாளுகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது.]

(இ - ள்.) கண்டது ஒருநாள் - யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒருஞான்றே; அலர் திங்களைப் பாம்பு கொண்டற்று - அதனினுமவலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போன்று உலகெங்கும் பரந்தது.

காரியத்தைக் காரணமாக வுபசரித்துப் 'பாம்புகொண்டற்' றென்றார். இருவழியும் 'மன்'னும் 'உம்' மையும் அசைநிலை. காட்சி யின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்து கோடல் வேண்டுமென்பதாம் (ஞ)

ககச஠. ஊரவர் கௌவை யெருவாக வன்னை சொன்
னீராக நீளுமிந் நோய்.†

[வரைவுநீட ஆற்றுளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தாளுத லறிந்த தோழி ஊரவரலரும் அன்னைசொல்லு நோக்கி யாற்றல் வேண்டுமெனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.]

* நெடுநல்வாடை, அடி - கசச - கசடு.
† ங - ஆந் திருவாய்மொழி: மாசறு சோதி - ச.

(இ - ள்.) இந்நோய் - இக்காமநோயாகிய பயிர்; ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ்வூரின்மகளி ரெடுக்கின்ற அலர் எருவாக, அதுகேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது.

'ஊரவ' ரென்பது தொழிலான் ஆணெழித்துநின்றது. எக தேச வுருவகம். சுருங்குதற் கேதுவாவனதாமே விரிதற் கேது வாகாநின்றன வென்பதாம். வரைவாணுதல் பயன். (எ)

ககசஅ. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.

[இதுவுமது]

(இ - ள்.) கௌவையால் காமம் நுதுப்பேமெனல் - எதிலா ரெடுக்கின்ற அலரால் நாங் காமத்தை யவித்துமென்று கருதுதல்; நெய்யால் எரி நுதுப்பே மென்றற்று - நெய்யா லெரியை யவித்து மென்று கருதுதலோடொக்கும்.

மூன்றனுருபுகள் கருவிக்கண் வந்தன. இளர்த்தற் காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம். (அ)

ககசக. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை.

[வரைவிடைவைத்துப் பிரிவின்க ணூற்றூளாய தலைமகள் அவன் வந்து சிறைப்புறத்தானுத லறிந்து அலரஞ்சி யாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) அஞ்சலோம்பு என்றூர் பலர் நாண நீத்தக்கடை - தம்மையெதிர்ப்பட்ட ஞான்று நின்னிற் பிரியேன் அஞ்சலோம் பென்றவர்தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் துறந்தபின்; அலர் நாண வொல்வதோ - நாமேதிலார் கூறு மலருக்கு நாணக்கூடுமோ? கூடாது.

'நாண' வென்னும் வினையெச்சம் 'ஒல்வ' தென்னுந் தொழிற் பெயருள் ஒல்லுதற்றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணு நிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையதென்பதாம். (கூ)

ககஙO. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்குமிவ் வூர்.

[தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழி தலைமகட்குச் சொல்லு வாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது.]

(இ - ள்.) யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - உடன்போகற் கேதுவாகலுைக்கி யாம் பண்டே விரும்புவதாய வலரை இவ்வூர் தானே யெடாநின்றது; காதலர்தாம் வேண்டின் கல்குவர் - இனிக் காதலர்தாமும் யாம் வேண்டியக்கால் அதனை யினிதினேர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றுய் வந்தது.

எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. நங்கட் காதலுடைமை யின் மறுறென்பது தோன்றக் 'காதல' ரென்றுள். இவ்விருபது பாட்டும் புணர்தனிமித்தம். (கo)

களவியல் முற்றிற்று.

உ. கற்பியல்

இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் பிரிவாற்றுமை கூறுகின்றார்.

அதி. ககக—பிரிவாற்றுமை

[அஃதாவது, வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின் பங்களின்பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்துசெல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவளாற்றுளாந்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன் குறிப்பானுணர்ந்து கூறலும், பிரிவுணர்த்தியவழிக் கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆக்குவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.]

ககடுக. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[பிரிந்து கடிதின் வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.]

(இ - ள்.) செல்லாமை உண்டேல் எனக்கு உரை - நீ யெம்மைப் பிரியாமை யுண்டாயின் அதனை யெனக்குச் சொல்; மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை - அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல்.

தலைமகளையொழித்து 'எனக்' கென்றாள், தானவளென்னும் வேற்றுமையின்மையின். அக்காலமெல்லா மாற்றியிருந்து அவ்வரவு காணவல்ல ளல்லள், பிரிந்தபொழுதே யிறந்துபடு மென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைப்பாருமுளர்.* (க)

ககடுஉ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

[பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னின்றஞான்று அவர் நோக்குமாத்திரமும்

* மணக்குடவர்.

புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்ப முடைத்தா யிருக்கும்; புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப்புணர்ச்சி தான் நிகழாநிற்கவும் அது பிரிவரென் றஞ்சு மச்சத்தினை யுடைத் தாயிற்று, அவரன்பினிலமை யிது.

'பார்வ' லென்றதனாற் புணர்ச்சிபெறுத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. 'புன்க' ணென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மே லாயிற்று. அவ்வச்சத்தினை யுடைத்தாதலாவது, "மூள்ளுறழ் மூளையிற் றமிழ்தூறுங் தீநீரைக், கள்ளினு மகிழ் செய்யுமென வுரைத்து மமையாரென், னெள்ளிழை திருத்தும்"* பண்டை யிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக் காட்டி அச்சஞ்செய்த லுடைமை. அழுங்குவித்தல் பயன். (உ)

ககடுங. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

[இதுவுமது]

(இ - ள்.) அறிவு உடையார் கண்ணும் - பிரியேனென்ற தஞ் சொல்லும் நம் பிரிவாற்றுமையும் அறிதலுடையராய காதலர்கண் ணும்; ஓரிடத்துப் பிரிவு உண்மையான் - ஒரோவழிப் பிரிவு நிகழ் தலான், தேற்றம் அரிது - அவர் சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட் டன்புடையரெனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது.

'அரோ' அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது. (கூ)

ககடுச. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

[இதுவுமது]

(இ - ள்.) அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்ட ஞான்றே தலையளிசெய்து நின்னிற்பிரியேன் அஞ்சலென்றவர் தாமே பின் பிரிவராயின்; தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லே மெய் யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ?

'தேறியா' ரென்பது தன்னைப் பிறர்போற்கூறல். சொல்லுஞ் செயலுமொவ்வாமைக்குற்றம் அவர்க்கெய்தும், அஃதெய்தாவகை யழுங்குவியென்பது கருத்து. (ச)

* கலித்தொகை - கூ.

ககருடி. ஒம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

[இதுவுமது]

(இ - ள்.) ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயின், அதனை யாளுதற் கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக; மற்று அவர் நீங்கிற் புணர்வு அரிது - அழுங்குவிப்பாரின்றி அவர் செல்வராயின் அவராலாளப் பட்ட வுயிருஞ் செல்லும், சென்றுற் பின்னவரைக் கூடுதல் எனக் கரிதாம்.

ஆளுதற்கமைதல்: இறைவராதற்குத் தெய்வத்தா லேற் புடையராதல். 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. (டி)

ககருக. பிரிவுரைக்கும் வன்கண்ணா யினரிதவர்
நல்குவ ரென்னு நசை.

[தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நங் கவவுக்கடுமையறிந்த தலைவர் தாமே நம்முனின்று தம் பிரிவினை யுணர்த்தும் வன்கண்மையுடையராயின்; நல்குவர் என்னும் நசை அரிது - அத்தன்மையார் பின்பு நம் மாற்றுமை யறிந்துவந்து தலை யளி செய்வரென்றிருக்கு மாசை விடப்படும்.

அருமை: பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரிவெண்ணுதலும் உணர்த்தலும் வல்லராயினர். பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டைய தென்பதாம். அழுங்குவித்தல் பயன். (சு)

ககருஎ. துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை.

[இதுவுமது]

(இ - ள்.) துறைவன் துறந்தமை - துறைவன் என்னைப் பிரிய லுற்றமையை; முன்கையிறை இறவாநின்ற வளை தூற்றுகொல் - அவனுணர்த்தாமற் றானேயுணர்ந்து என் முன்கையி னிறையினின் றுங் கழலாநின்ற வளைகள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்த வுணர்ந்துவந்து நீ யறிவித்தல் வேண்டுமோ?

முன்னே நிகழ்ந்தமையிற் 'புறந்தம்ம' யென்றும், கேட்ட துணையான் மெலிந்து ஆற்றுமையின் 'இறவாகின்ற' வென்றுங் கூறினாள். அழுங்குவித்து வந்து கூறற்பாலையல்லையாய் நீயும் இவ் வினைகள் செய்தனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு. (எ)

ககஎஅ. இன்னு தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னு தினியார்ப் பிரிவு.

[இதுவுமது]

(இ - ள்.) இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது - மகளிர்க்குத் தங் குறிப்பறியுந் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்த லின்னாது; இனியார்ப் பிரிவு அதனினும் இன்னாது - அதன்மேலுந் தங் காதலரைப் பிரிதல் அதனினு மின்னாது.

தலைவன் செலவினை யழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமைபற்றிப் புலக்கின்றூளாகலின், 'இனனில்லூ'ரென்றூள். உல கியல் கூறுவாள்போன்று தனக்கவ்விரண்டு முண்மை கூறியவாறு.

ககஉக. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.*

[காமந் தீயேபோன்று தானின்றவிடத்தைச் சுடுமாகலான் நீ யாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) தீத் தொடிற் சுடிற் சுடலல்லது - தீத் தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது; காமநோய்போல விடிற் சுடல் ஆற்றுமோ - காமமாகிய நோய்போலத் தன்னை யகன்றூற் றப்பாது சுடுதலை வற்றே? மாட்டாது.

சுடுமாயினென்பது மந்திரமருந்துகளாற் றம்பிக்கப்படாதாயி னென்றவாறு. காமத்திற் கதுவுமில்லையென்பாள் வாளா 'சுட'லென் றூள். அகறல்: நுகரானமை. சுடலென்பது முன்னுங் கூட்டப்பட் டது. தீயினுங்கொடியதனை யாஞற்றுமா றென்னையென்பதாம். (கூ)

ககசுo. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

[தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீ செய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) (நீ சொல்லுகின்றதொக்கும்,) அரிது ஆற்றி அல்லல் நோய் நீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்குடம்பட்டுப் பிரியுங்கால்

* நாலடியார், கo.

நிகழும் அல்ல னெயினையு நீக்கி; பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப்பிரிவுதன்னையு மாற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழு மகளிர் உலகத்துப் பலர்.

பண்டையிற் சிறப்பத் தலையளிபெற் றின்புறுகின்ற வெல்லைக் கண்ணே அஃதிழந்து துன்புறுதற் குடம்படுதல் அரியதொன்றுக லின் அரியதனைச்செய்தென்றும், செல்லுந்தேயத்து அவர்க்கியாது நிகழுமென்றும், வருந்துணையும் யாமாற்றியிருக்குமா றென்னென்றும்; அவ்வாவுதான் எஞ்ஞான்று வந்தெய்துமென்றும் இவ்வாற்றுனிகழுங்கவலை மனத்து நீங்காதாகலான் 'அல்லனெய் நீக்கி' யென்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழும் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்ற லென்றிவை முதலாக வந்து அதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் 'பிரிவாற்றி' யென்றும், தங் காதலரை யின்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னு மிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லையென்பது குறிப்பாற்றோன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பல' ரென்றுங் கூறினாள். 'அரி' தென்பது வினைக்குறிப்புப்பெயர். பிரிவின்கணிகழ்வனவற்றைப் 'பிரி' வென்றாள். செய்து, நீக்கி ஆற்றி யென்பன ஒசைவகையான் அவ்வவற்ற தருமையுணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. யானுமிறந்துபடுவ லென்பது கருத்து. (கo)

அதி. ககஎ—படர்மெலிந்திரங்கல்

[அது படரான்மெலிந்திரங்கலென விரியும். அஃதாவது பிரிவாற்றாளாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின், அந்நினைவான் மெலிந்திரங்குதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

ககக. **மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிரைப்பவர்க்**
கூற்றுநீர் போல மிகும்.

[காமநோயை வெளிப்படுத்தல் நின்னாணுக் கேலாதென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) நோயை யான் மறைப்பேன் - இந்நோயைப் பிறரறிதலஞ்சி யான் மறையாளினின்றேன்; இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர்போல மிகும் - நிற்பவும், இஃது அந்நாண்வரை நில்லாது நீர் வேண்டுமென் றிறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறு போன் மிகாநின்றது.

அம்மறைத்தலாற் பயனென்னென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோசெல்வர்க் கொத்தனென்யான்" என்புழிப்போல ஈண்டுச் சுட்டுப்பெய ரீறு திரிந்துநின்றது. இஃதோர் நோயை யென்று பாடமோதுவாருமூளர்; அது பாடமன்மை யறிக. இனி அதற்கடுத்தது நீ செயல்வேண்டுமென்பதாம். (க)

ககசூஉ. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.

[ஈண்டையா ரறியாமன் மறைத்தல் ஆண்டையா ரறியத் தூதுவிடுத லென்னுமிரண்டனுள் ஒன்று செயல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டையாரறியாமன் மறைத்தலும் வல்லே னுகின்றிலேன்; நோய் செய்தவர்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - ஆகாக்கால், நோய் செய்தார்க் குரைக்கவெனின், அதுவும் எனக்கு நாணினைத் தாரா நின்றது, இனியென் செய்கோ?

ஒருகாலைக் கொருகான் மிகுதலிற் 'கரத்தலுமாற்றே' னென்றும், சேயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூது விட்டால் இன்னுமிருந்தேனென்பது பயக்குமென்னுங் கருத்தால் 'நாணுத்தரு' மென்றுங் கூறினாள். (உ)

ககசூஉ. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னெஞ் வுடம்பி னகத்து.

[இதுவுமது]

(இ - ள்.) காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்கலொல்லாத நாணும்; நோஞ் என் உடம்பின் அகத்து - தம்மைப் பொருத என் னுடம்பின்கண்ணே; உயிர் காவாத் தூங்கும் - உயிர் காத் தண்டாக அதனிருதலையினுந் தூங்காநின்றன.

பொருமை மெலிவாஞ்யது. தூங்குமென்பது, ஒன்றினொன்று மிகாது இரண்டும் ஒத்தசீரவென்பதுதோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காம நாண்கள் தம்முளொத்து உயிரினை யிறுவியாநின்றன; யான் அவற்றுளொன்றினுக ணிற்க மாட்டாமையின் இஃதிற்றேவிடுமென்பதாம். (ஊ)

ககசுசை. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

[தலைவியர் காமக்கடற்படார், படினும், அதனை ஏற்றபுணையா னீந்திக் கடப்பரென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) உண்டு காமக்கடலே-யாவர்க்கும் உளவாய் வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே; அது நீந்தும் ஏமப் புணை இல் - அதனை நீந்தும் அரணுகிய புணையில்லை.

இருவழியும் 'மன்'னும் 'உம்'மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலையென்பது கருத்து. (சை)

ககசுஙி. துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.

[தூதுவிடாமை நோக்கித் தோழியொடு புலத்து சொல்லியது.]

(இ - ள்.) நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பஞ்செய்தற்குரிய நட்பின்கண்ணே துன்ப வரவினைச் செய்யவல்லவர்; துப்பின் எவனுவர்கொல் - துன்பஞ்செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர் கொல்லோ?

துப்புப் பகையுமாதல் "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மைய, னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை யண்மையன்"* என் பதனுனு மறிக. அப்பகைமை ஈண்டுக் காணுமையின் அவர்செய்வது மறியப் பெற்றிலே மென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக் கண் வந்தது. துயர்வருதலே விலக்கலாயிருக்க அது செய்கின்றிலை யெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக் கியுங் கூறினுள். (இ)

ககசுசு. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

[காமத்தானின்பமுற்றூர்க்கு அதனினுை துன்பம் வருமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) காமம் இன்பம் கடல் - காமம் புணர்வாலின்பஞ் செய்யுங்கால், அவ்வின்பங் கடல்போலப் பெரிதாம்; மற்றஃது அடுங்கால் துன்பம் அதனிற் பெரிது - இனி அதுதானே பிரிவாற் றுன்பஞ்செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம்.

* புறநானூறு, கூஅ0.

'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. 'அடுங்கா'லென வந்தமை யின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோ டொத்துவரின் ஆற்றலாம்; இஃ ததன தளவன்றென்பது கருத்து.

ககசுஎ. காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

[காமக்கடல் நிறைபுனையாக நீந்தப்படுமென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காம மாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண் கின்றிலேன்; யாமத்தும் யானே உளேன் - அக்காலைமைக்காலந் தான் எல்லாருந் துயிலும் அரை யிருளாயிற்று, அவ்வரையிருட்கண் ணும் அதற்கொரு துணையின்றி யானேயாயினேன், ஆயும் இறந்து பட் டுய்ந்துபோகா துளேனாகின்றேன், ஈதொரு தீவினைப் பய னிருந்தவாறென்!

கடுமை ஈண்டு மிகுதிக்கணின்றது. உம்மை முன்னுங் கூட்டப் பட்டது. யானே யாயினேனென்பது நீ துணையாயிற்றிலையென் னுங் குறிப்பிற்று. (எ)

ககசுஅ. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

[இரவின் கொடுமை சொல்லி யிரங்கியது.]

(இ - ள்.) இரா அளித்து - இவ்விரா அளித்தா யிருந்தது; மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை - உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களெயெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான் என்னை யல்லது வேறு துணையுடைத்தாயிற்றில்லை.

'துயிற்றி' யெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலை யான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோடொன்று கின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடு மெல்லையெனை என்னையே துணையாகக்கோடலின் அறிவின்றென்பது பற்றி 'அளித்' தென்றூள்; இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

ககசுக. கொடியார் கொடுமையிற் ருங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

[இதுவுமது]

(இ - ள்.) இந்நாள் நெடிய கழியும் இரா - காதலரொடு நாமின்புற்ற முன்னாள்களிற் குறியவாய் அவர் பிரிவாற்றேமாகின்ற

இந்நாள்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள்; கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாங் கொடுமை செய்யா நின்றன.

தன்னுற்றுமை கருதாது பிரிதலின், 'கொடியா' ரென்றுள். கொடுமை: கடிதின்வாராது நீட்டித்தல். அவர் பிரிவானும் நீட்டிப் பானுமுளதாய ஆற்றுமைக்குக் கண்ணேடாமைமேலும் பண்டையி னெடியவாய்க் கொடியவாகா நின்றனவென்பதாம். (கூ)

ககஎ0. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னெவென் கண்.

[நின்கண்கள் பேரழகழிகின்றனவாகலின் அழற்பாலே யல்லே யென்றுட்குச் சொல்லியது.]

(இ - ள்.) உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் - மனம் போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற் செல்லவல்லனவாயின்; என் கண் வெள்ளநீர் நீந்தல - என் கண்கள் இங்ஙனம் வெள்ள மாகிய தந்நீரை நீந்தா.

அது மாட்டாமையின், இனி அவற்றிற்கு நீந்துதலே யுள்ள தென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. மனத் திற்குச் செலவாவது நினைவேயாகலின் 'உள்ளம்போன்' றென்றும், மெய்க்கு நடந்துசெல்லவேண்டுதலிற் கண்கள் அதனைநடுசென்று காதலரைக்காண்டல் கூடாதென்னுங் கருத்தாற் 'செல்கிற்பி' னென்றுங் கூறினள். இதனுன் வருகின்ற வதிகாரமுந் தோற்று வாய் செய்யப்பட்டது. (கo)

அதி. ககஅ—கண்விதுப்பழிதல்

[அஃதாவது, கண்கள் தங் காட்சி விதுப்பான் வருந்துதல். காட்சி விதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல், இது படரான் மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்திரங்கலின் பின் வைக்கப்பட்டது.]

ககஉக. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

[நின்கண்கள் கலுழ்ந்து தம்மழகிழவாகின்றன, நீ யாற்றல்வேண்டு மென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத் தணியா நோயை யர்மறிந்தது தாமெமக்குக் காதலரைக் காட்டலா

னன்றே ; கண்தாம் கலுழ்வது எவன்கொல் - அன்று அத்தொழில வாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லி யழுகின்றது என் கருதி ?

'காட்ட' வென்பதற் கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. இன்றுந் தாமே காட்டுதலல்லது யாங் காட்டுதல் யாண் டைய தென்பதாம். (க)

ககஎஉ. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன்.

[இதுவுமது]

(இ - ள்.) தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல் விளைவதனை யாராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கினின்ற உண்கண்கள் ; பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகவிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறுபடுத் துணராது துன்பமுழப்பது என்கருதி ?

விளைவது : பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்காரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றேயுள்ளது; அதுவுஞ் செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கை யென்பதாம். (உ)

ககஎஊ. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

[இதுவுமது]

(இ - ள்.) தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது - இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்துநோக்கி இன்றுந் தாமே யிருந்தழுகின்ற விது; நகத்தக்கது உடைத்து - நம்மாற் சிரிக்கத்தக்க வியல்பினை யுடைத்து.

கண்களென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க் காப்பார்க்கு நகைவிளைக்குமாகலான், 'நகத்தக்கதுடைத்' தென்றாள். (ஊ)

ககஎஎ. பெயலாற்று நீருலந்த வுண்க ணுயலாற்று
வுய்வினோ யென்க ணிறுத்து.

[இதுவுமது]

(இ - ள்.) உண்கண் - உண்கண்கள் ; உயலாற்று உய்வு இல் நோய் என்கண் நிறுத்து - அன்று யானுப்பமாட்டாமைக் கேது

வாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தி ; பெயலாற்ரு நீர் உலந்த - தாமு மழுதலே மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன.

நிறுத்தல்: பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனுல் நிலைபெறச் செய்தல். முன் எனக் கின்னுதன செய்தலாற் பின் தமக் கின்னுதன தாமே வந்தன* வென்பதாம். (சு)

ககஎடு. படலாற்ரு பைத லுழக்குங் கடலாற்ரு
காமநோய் செய்தவென் கண்.

[இதுவுமது]

(இ - ள்.) கடல் ஆற்ரூக் காமநோய் செய்த என் கண் - எனக் குக் கடலுஞ் சிறிதாம்வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என் கண்கள் ; படல் ஆற்ரு பைதல் உழக்கும் - அத்தீவினையாற் ரூமுந் துயில்கிலவாய்த் துன்பத்தையு முழுவாகின்றன.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்ததாக்கிக் கூறினுள். துன்பம் அழுதலா லுயது. (டு)

ககஎசு. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

[இதுவுமது]

(இ - ள்.) எமக்கு இந்நோய் செய்தகண் தாஅம் இதற்பட்டது- எமக்கிக் காமநோயினைச் செய்த கண்கடாமும் இத்துயிலா தழுதற் கண்ணேபட்டது; ஓஒ இனிதே - மிகவு மினிதாயிற்று.

'ஓ' வென்பது மிகுதிப்பொருட்கண் வந்த குறிப்புச்சொல். தம் மால் வருத்தமுற்ற வெமக்கு அது தீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

ககஎஎ. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்தீழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

[இதுவுமது]

(இ - ள்.) விழைந்து இழைந்து வேண்டி அவர்க்கண்ட கண்- விழைந்து உண்ணெகிழ்ந்துவிடாதே அன்று அவரைக் கண்ட கண்கள் ; உழந்துழந்து உள்நீர் அறுக - இன்று இத்துயிலாதழுங்க லாயதுன்பத்தினை யுழ்ந்துழந்து தம்மகத்துள்ள நீர் அற்றேபோக !

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்து நிகழ்பொருளின் ரூழில் இடத்தின்மே னின்றது. (எ)

* குறள் உகசு.

ககஎஅ. பேணுது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண்.

[காதலர் பிரிந்து போயினுரல்லர் ; அவரீண்டுளர்; அவரைக்காணு மளவும் நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) பேணுது பெட்டார் உளர் - நெஞ்சால் விழையாதுவைத்துச் சொன்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தே யுளர் ; மற்று அவர்க் கண் காணுது அமைவில - அவ்வுண்மையாற் பயன் யாது ? அவரைக் கண்கள் காணுதமைகின்றன வில்லையாயின.

செயலாற் பிரிந்து நின்றமையிற் 'பேணு' தென்றும், மூன்னலம் பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங் கூறினுராகலிற் 'பெட்டா' ரென்றுங் கூறினுள். 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. யானுற்றவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாநின்றன வென்பதாம். இனிக் கொண்கனேயென்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணுதமைகின்ற கொண்கனைத் தாங் காணு தமைகின்றனவில்லை ; இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்துளரோவென் றுரைக்க. இதற்கு 'மன்' அசைநிலை. (அ)

ககஎக. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

[நீயுமாற்றி நின் கண்களுந் துயில்வனவாதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) வாராக்கால் துஞ்சா - காதலர் வாராத ஞான்று அவர் வரவுபார்த்துத் துயிலா; வரின் துஞ்சா - வந்த ஞான்று அவர் பிரிவஞ்சித் துயிலா ; ஆயிடைக்கண் ஆரஞர் உற்றன - ஆகலான் அவ்விருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினை யுடைய.

'ஆயிடை' யெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒருஞான்று மில்லையென்பதாம். (கூ)

ககஅ0. மறைபெற லூரார்க் கரிதன்று லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து.

[காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கொடுமையை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) எம்போல் அறைபறை கண்ணுர் அகத்து மறைபெறல் - எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினையுடை

யார் தங்நெஞ்சின்க ணடைக்கிய மறையை யறிதல் ; ஊரார்க்கு அரி தன்று - இவ்வூரின்க ணுள்ளார்க்கு எளிது.

'மறை யென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ் வதனைப் புறத்துள்ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை யுண்மையின், அறைபறை* யாகிய கண்ணென்றாள். இங்ஙனஞ் செய்யுள் விகாரமாக்காது, அறைபறைக் கண்ணுரென்று பாட மோதுவாருமூளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின் றன வென்பதாம். (க0)

அதி. ககக—பசப்புறுபருவரல்

[அது பசப்புற்ற பருவரலென விரியும் ; அஃதாவது, பசப்புறுதலா னுய வருத்தம். இதனைப் "பந்தெறிந்த வயா"† வென்பது போலக் கொள்க. பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவ தோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப் பெறுத வழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின்பின் வைக்கப் பட்டது.]

கசஅக. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

[முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட நான் ; பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனை யாற்றாது இதுபொழுது பசந்தவென் னியல்பினை யார்க்குச் சொல்வேன் ?

'பிற' வென்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல் குறித் துப் பிரிவுணர்த்தின ராகலின் அவரன்புடைய ரென்னுங் கருத் தான் 'நயந்தவ' ரென்றும், இதுவே யுடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னுங் கருத்தான் 'நல்காமை' யென்றும், முன்னருடம்படுதலும் பின்னராற்றாது பசத்தலும் பிறர் செய்தன வல்லவென்பாள் 'பசந்தவென் பண்' பென்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனி யொரு வர்க்குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் 'யார்க் குரைக்கோ' வென்றுங் கூறினாள். (க)

* கo எசு - ஆம் குறளுரை. † கலித்தொகை - சo.

ககஅஉ. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

[ஆற்றுளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

(இ - ள்.) (யாஞற்றியுளேனுகவும்) பசப்பு - இப்பசப்புத்தான்; தந்தார் அவர் என்னும் தகையால் - என்னே யுண்டாக்கினர் அவ ரென்னும் பெருமிதத்தான்; என் மேனிமேல் இவர்தந்து ஊரும் - என்மேனியை மேல்கொண்டு செலுத்தாநின்றது.

"குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தன்மா விவர்ந்து செல்ல"* என்புழியும் இவர்தல் இப்பொருட்டாத லறிக. இஃது உரிமைபற்றி யூர்கின்றது, இதற்கு நீ கவலல்வேண்டா வென்ப தாம். (உ)

ககஅஊ. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

[அழகுநாணுமழியாமல் நீயாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) கைம்மாறு நோயும் பசலையும் தந்து - பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்குந் தலைமாறுக இக்காம நோயினையும் பசலையையும் எனக்குத் தந்து; சாயலும் நாணும் அவர் கொண் டார் - என்மேனி யழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினர்.

எதிர்நிரனிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறியற்று. இனி அவர் தந்தாலல்லது அவையுள வாகலும் இவை யிலவாகலுங் கூடாவென்பதாம். (ஊ)

ககஅ஋. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

[பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையு மறிதியாகலின் நீட்டியாது வருவரென்றவழிச் சொல்லியது.]

(இ - ள்.) யான் உள்ளுவன் - அவர் சொற்களை யான் மனத்தா னினையாநிற்பேன்; உரைப்பது அவர்திறம் - வாக்காலுரைப்பதும் அவர் நற்றிறங்களையே; பசப்புக் கள்ளம் - அங்ஙனஞ் செய்யாநிற்க வும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது.

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம் - க.

'பிற'வும் 'ஓ'வும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின் அதன்கண்ணும் வரற்பாற் றன்றுயிருக்க வத்தமை யின், இதன் செயல் கள்ளமா யிருந்ததெனத் தானுற்றுகின்றமை கூறியவா றுயிற்று. (சு)

ககஅஙி. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

[காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலையென்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.]

(இ - ள்.) எங் காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் நங் காதலர் உங்கேசெல்வாராக; என் மேனி பசப்பூர்வது இவக்காண் - என்மேனி பசப்பூர்வ திங்கேயன்றே? அப்பெற்றியது இன்று பிறி தொன்றுமோ?

'உவக்காண்' 'இவக்கா' ணென்பன ஒட்டிகின்ற விடைச் சொற்கள். தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவர் செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவும் வரவும் போல்வ தறிந்துவைத்து அறியாதாய் போல நீ சொல்லுகின்ற தென்னை யென்பதாம். (டு)

ககஅசு. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

[இதுவுமது]

(இ - ள்.) விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக் கினது மெலிவுபார்த்து நெருங்கிவரு மிருளேபோல; கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன் முயக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரும் இப்பசப்பு.

'பார்க்கு' மென்பன இலக்கணைச் சொல். முன் பிரியா திருக்க வந் தனக்கவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றுல் என் செய்யா தென்பதாம். (சு)

ககஅள. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

[இதுவுமது]

(இ - ள்.) புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் - முன் னொருஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடை பெயர்ந்தேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப்புடை

பெயர்ந்த வளவிலே பசப்பு அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது.

கொள்வதென்பது குறைந்துநின்றது. 'அள்ளிக்கொள்வது' அள்ளிக்கொள்ளப்படும் பொருள். அப் புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாரூயது இப் பிரிவின்கணுமாறு சொல்லவேண்டுமோவென்பதாம். (எ)

ககஅஅ. பசந்தா ளிவளென்ப தல்லா லிவணீத்
துறந்தா ரவரென்பா ரில்.

[நீ யிங்ஙனம் பசக்கற்பாலையல்லையென்ற தோழியொடுபுலந்து சொல்லியது.]

(இ - ள்.) இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவ தல்லது; இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளை யவர் துறந்துபோயினரென்று அவரைக் கூறுவா ரொருவருமில்லை.

'என்பா' ரென வேறுபடுத்துக் கூறினாள், தன்னையே நெருங்கு தல்பற்றிப் புலக்கின்றமையின். (அ)

ககஅக. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.

[இதுவுமது]

(இ - ள்.) நயப்பித்தார் நன்னிலையராவர் எனின் - இப்பிரிவையானே யுடம்படும்வகை சொல்லியவர் இன்று நின் கருத்தான் நல்ல நிலையின ராவராயின்; என் மேனி பட்டாங்கு பசக்க - என் மேனி பட்டதுபடப் பசப்பதாக.

நன்னிலையராதல்: நன்மைக்கண்ணே நிற்றலை யுடையராதல். பட்டாங்காகவென ஆக்கம் விரித்துரைக்க. முன் இப்பிரிவின் கொடுமை யறியாத வென்னை இதற்குடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வேண்டுவது, என் மேனியும் பசப்பும் யாது செய்யினென் னென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

ககக0. பசப்பெனப் போர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்று ரெனின்.

[தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை யியற்பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.]

(இ - ள்.) நயப்பித்தார் நல்காமை தூற்றுரெனின் - அன்று தாங் குறைநயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்

டோர் தூற்றுராயின்; பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே - பசப் புற்றுளென வேற்றுமையா னன்றிப் பசப்புத்தானேயிளுளென ஒற் றுமையாற் றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று.

நட்டாரென்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல் பொருது புலக்கின்ற ளாகலின், இகழ்ச்சிக் குறிப்பாற் கூறினுள். அவரை அருளிலரென்னுது இன்னும் பசந்தா ளிவளென்கையே யானுற்று நெறியாவ தென்பதாம். (கo)

அதி. கஉo—தனிப் படர்மிகுதி

[அது தனியாகிய படர்மிகுதியென விரியும். அஃதாவது, படர் மிகுதி தலைவன்க ணின்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லை யாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட் குரியதாகலின், **பசப்புறுபருவரலின்பின் வைக்கப்பட்டது.**]

கககூக. **தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே**
காமத்துக் காழில் கனி.

[காதலரும் நின்னினு மாற்றுராய்க் கடிதின்வருவர் நீ யவரொடு போரின்ப நுகர்தியென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மாற் காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர்; பெற்றூரே காமத்துக் காழ் இல் கனி - பெற்றூரன்றே காமநுகர்ச்சி யென்னும் பரலில்லாத கனியை.

காமம் ஆகுபெயர். 'அத்து' அல்வழிக்கண் வந்தது. முன்னை நல்வினை இல்வழிப் பெறப்படாமையிற் 'பெற்ற' ரென்றும், அவ ராற் றடையின்றி நுகரப்படுதலிற் 'காழில் கனி' யென்றுங் கூறி னுள். நங் காதலர் பிரிதலேயன்றிப் பின் வாராமையு முடைமையின், அக் கனி யாம் பெற்றிலே மென்பதாயிற்று. (க)

கககூஉ. **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
வீழ்வா ரளிக்கு மளி.

[இதுவுமது]

(இ - ள்.) வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளுநோக்கிப் பிரிந்தாற் றம்மை யின்றியமையா மகளிர்க்கு, அவரையின்றி யமையாக் கணவர் அளவறிந்து வந்து செய்யுந் தலை

யளி ; வாழ்வார்க்கு வானம் பயந்தற்று - தன்னையே நோக்கி உயிர் வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற்போலும்.

நங்காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளி யில்லை யாகலான், மழை வறந்துழி அதனுன் வாழ்வார்போல இறந்து படுதலே நமக்குள்ள தென்பதாம். (உ)

ககஙூ. **வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே**
வாழுந மென்னுஞ் செருக்கு.

[இதுவுமது]

(இ - ள்.) வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே - தாம் விழையுங் கணவரான் விழையப்படு மகளிர்க்கு ஏற்புடைத்து ; வாழுநம் என்னும் செருக்கு - காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாமின்புற்று வாழ்துமென் றிருக்குந் தருக்கு.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபா டென்பதாம். (ஊ)

ககஙூ. **வீழப் படுவார் கெழீஇயிலர் தாழ்வீழ்வார்**
வீழப் படாஅ ரெனின்.

[காதலரை யியற்பழித்தலையஞ்சி அவரருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் நன்கு மதிக்கப்படுதியென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) வீழப்படுவார் - கற்புடை மகளிரால் நன்குமதிக்கப் படுவாரும் ; தாம் வீழ்வார் வீழப்படாரெனின் கெழீஇயிலர் - தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர்.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கெழீஇயின்மை : நல் வினையின்மை ; அஃது அருத்தாபத்தியாற் றீவினையுடைமை யாயிற்று. தீவினையுடையேற்கு அந்நன்குமதிப்பாற் பயனில்லை யென்பதாம். (எ)

ககஙூ. **நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ**
தாங்காதல் கொள்ளாக் கடை.

[அவர்மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்தாற்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மாற் காதல்செய்யப்பட்டவர் நமக்கென்ன வின்பத்தைச் செய்வர் ;

தாம் காதல் கொள்ளாக்கடை - அவ்வாறே தாமும் நங்கட் காதல் செய்யாவழி.

எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அக் காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம். (ஙி)

ககக.ரு. ஒருதலையா னின்னது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

[இதுவுமது]

(இ - ள்.) காமம் ஒருதலையான் இன்னாது - மகளிர் ஆடவ ரென்னு மிருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணேயாயின் அஃ தின்னாது ; காப்போல இருதலையானும் இனிது - காவினது பாரம் போல இருதலைக் கண்ணுமொப்பின், அஃதினிது.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. 'கா' ஆகு பெயர். என்மாட்டுண்டாய வேட்கை அவர்மாட்டு மூண்டாயின், யானிவ்வாறு துன்ப முழத்தல் கூடுமோ வென்பதாம். (சு)

ககக.எ. பருவரலும் பைதலுங் காணன்கொல் காம
னெருவர்க ணின்றெழுகு வான்.

[இதுவுமது]

(இ - ள்.) ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன் - காமநுகர் தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்ற லொழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள் ; பருவரலும் பைதலும் காணன் கொல் - அவ்விடத்துப் பசப்பாலுய பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ ?

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்ந்தன வறிதற் குரிய கடவுளும்* என்கண் வேறுபட்டான், இனி யானுய்யுமா றென்னே யென்பதாம். (எ)

ககக.அ. வீழ்வாரி னின்சொற் பெருஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணி ரில்.

[தலைமகன்றூது வரக் காணது சொல்லியது.]

(இ - ள்.) வீழ்வாரின் இன்சொல் பெருது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படுங் காதலர்திறத்துநின்றும் ஓரின்சொல்லளவும்

* குறள், ச.

பெருதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல ; வன்கணர் உல கத்து இல் - வன்கண்மை யுடையார் இவ்வுலகத் தில்லை.

காதலர்திறத்துச் சொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத் தால், 'இன்சொ' லென்றுள். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. யான் வன்கண்ணே ஞகலின், அதுவும் பெருது உயிர் வாழாநின்றே னென்பதாம். (அ)

கக. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

[இதுவுமது]

(இ - ள்.) நசைஇயார் நல்கார் எனினும் - என்னுல் நச்சப் பட்ட காதலர் என்மாட் டன்பிலரே யாயினும் ; அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய - அவர்திறத் தியாதானு மோர்சொல் லும் என்செவிக் கினியவாம்.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரல ரென்னுஞ் சொல்லாயினும் அமையு மென்பதுபட நின்றது. அதுவும் பெற்றிலே னென்பதாம்.

கஉ. உருஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு.

[தலைமகன் றூது வரப்பெறு து தான்றூதுவிடக்கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.]

(இ - ள்.) உரு அர்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு - நின்னே டுறுதார்க்கு நின்னுறு நோயை யுரைக்கலுற்ற நெஞ்சே ! கடலைச் செறு அய் - நீயாந்ரு யாயினும் அரிதாய அதனை யொழிந்து, நினக்குத் துயரஞ்செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃதெளிது.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும் கேட்பார் உறவில ராகலானும் அதி முடிவதொன்றன்று, முடிந்தாலும் பயனில்லை யென்பது கருதாது, முயலாநின்ரு யென்னுங் குறிப்பான், 'வாழிய' வென்ருள். (கo)

அதி. கஉக—நினைந்தவர் புலம்பல்

[அஃதாவது, முன்கூடிய ஞான்றை யின்பத்தினை நினைந்து தலைமக டனிமையெய்தலும், பாசறைக்கட் டலைமகன் றனிமை யெய் தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன் மைப்பாலாற் கூறப்பட்டது. இது படர்மிகுதி தன்கண்ண

தாக நினைந்த தலைமகட்கு மூரித்தாகலின், அவ்வியைபு பற்றித் தனிப்படர்மிகுதியின் பின் வைக்கப்பட்டது.]

கஉ0க. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

[தூதாய்ச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.]

(இ - ள்.) உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் - முன் கூடிய ஞான்றை யின்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும், அது பொழுது பெற்றுற்போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால்; கள்ளினும் காமம் இனிது - உண்டுழி யல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பம்பயத்த லுடைத்து.

தன் றனிமையுந் தலைமகளை மறவாமையுங் கூறியவாறு. (க)

கஉ0உ. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

[இதுவுமது]

(இ - ள்.) தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்க ணினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்ப மில்லையாம்; காமம் எனைத்து இனிது ஒன்றேகாண் - அதனுற் காமம் எத்துணையேனு மினிதொன்றே காண்.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்பவினிதென்பான், எனைத்து மினிதென்றான். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தானுற்றிய வகை கூறியவாறு. (உ)

கஉ0ஙு. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) தும்மல் சினைப்பது போன்று கெடும் - எனக்குத் தும்மல் எழுவதுபோன்று தோன்றிக் கெடாநின்றது; நினைப்பவர் போன்று நினையார்கொல் - அதனுற் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும்.

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்ம றோன்றுமென்னு முலகியல்

பற்றித் தலைமக னெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமை யுணர்ந்தாள் சொல்லியதாயிற்று. (க)

கஉ0ச. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோழ வுளரே யவர்.

[இதுவுமது]

(இ - ள்.) எம் நெஞ்சத்து அவர் ஒஎ உளரே - எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுது முளரேயா யிராநின்றார்; அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமுமுளமாதுமோ, ஆகேமோ?

ஓகார விடைச்சொல் ஈண்டிடைவிடாமை யுணர்த்தி நின்றது. உளமாயும் வினைமுடியாமையின் வாராராயினரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினரோ வென்பது கருத்து. (ச)

கஉ0டு. நந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

[இதுவுமது]

(இ - ள்.) தம் நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின்கண்ணே யாஞ் செல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர்; எந்நெஞ்சத்து ஓவா வரல் நாணுர்கொல் - தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலை நாணுர் கொல்லோ?

ஒருவரைத் தங்கண் வருவதற்கு ஒருகாலு முடம்படாது தாமவர்கட் பலகாலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின், 'நாணுர்கொ' லென்றுள். (ஞ)

கஉ0சு. மற்றியா னென்னுளேன் மன்னே வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

[அவரோடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைந்து இறந்துபா டெய்தாநின்றுப் அது மறத்தல்வேண்டுமென்றுட்கூச் சொல்லியது.]

(இ - ள்.) யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரோடு புணர்ந்தஞான்றை யின்பத்தை நினைதலான் இத் துன்ப வெள்ளத்தும் உயிர் வாழ்கின்றேன்; மற்று யான் என்னுளேன் - அதுவின்றுயின், வேறெத்தால் உயிர்வாழ்வேன்?

'நாள்' ஆகுபெயர். உயிர்வாழ்வதற்கு வேறுமுள, அவைபெற்றிலே னென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

அவை அவன்றூது வருதல், தன்றூது சேறன் முதலாயின. அவை யாவுமின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோ டில்லையென் பது கருத்து. (சு)

கஉ0எ. மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

[இதுவுமது]

(இ - ள்.) மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அவ்வின்பத்தை மறத்தலறியேனெய் இன்றுள்ளாகிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடாகின்றது; மறப்பின் எவனுவன் - அங்ஙனம் பிரிவாற்றுத யான் மறந்தால் இறந்துபடாது உளேனுவது எத் தால்?

மறக்கப்படுவது அதிகாரத்தான் வந்தது. 'மன்' ஈண்டும் அது படாின்று ஒழியிசையாயிற்று. 'கொல்' அசைகிலை. (எ)

கஉ0அ. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

[இத்துன்பமறிந்துவந்து காதலர் நினக்கின்பஞ்
செய்வரென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) எனைத்து நினைப்பினும் காயார் - தம்மை யாெனத் துணையும் மிக நினைந்தாலும் அதற்கு வெகுளார்; காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றே - காதலர் எனக்குச் செய்யுமின்பமாவது அவ்வளவன்றே?

வெகுளாமை அதற்குடன்பட்டு நெஞ்சின்க ணிற்றல். தனக்கு அவ்வின்பத்திற் சிறந்ததின்மையின், அதனைச் 'சிறப்' பென்றூள். காதலர் நம்மாட்டருளென்றும், செய்யுங்குணமென்றும் பாடமோது வாரு மூளர். தோழி கூறியவதனைக் குறிப்பா னிகழ்ந்து கூறிய வாறு. (அ)

கஉ0கூ. வினியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

[தலைமகன் றூதுவரக் காணுது வருந்துகின்றூள் வற்புறுத்துந்
தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து - முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லு

வார தளியின்மையை மிகவு நினைந்து ; என் இன்னுயிர் விளியும் - என்றினிய வுயிர் கழியாநின்றது.

'அளியின்மை' பின்வருவராகலுமாய்ப் பிரிதலும், பிரிந்து வாராமையும், ஆண்டுநின்றுழித் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல் வேண்டுமென வற்புறுத்தாட்கு, என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவரன்பின்மைக்கென எதிரழிந்து கூறிய வாறு. (கூ)

கஉகO. விடாஅது சென்றூரைக் கண்ணினூற் காணப்
படாஅதி வாழி மதி.

[வன்புறை யெதிரழிந்தாள் காமமிக்க கழிபடராற்சொல்லியது.]

(இ - ள்.) மதி - மதியே ! விடாஅது சென்றூரைக் கண்ணினூல் காணப்படாஅதி - என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினூரை யானென் கண்ணளவா னுயினும் எதிர்ப்படும் வகை நீ படாதொழிவாயாக.

கண்ணளவா னெதிர்ப்படுதலாவது மதி இருவரானு நோக்கப் படுதலின் இருவர் கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கொற்றுமை யுண்மையிற் 'சென்றூரைக் காண' வென்றும், குறையுறுகின்ற ளாகலின் 'வாழி' யென்றுங் கூறினாள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினூற் காணுமாறு மதிபடுகின்றதில்லை யென அதனூற் றுயில்பெறாது வருந்துகின்றாள் கூற்றாக்குக. இப்பொருட்கு 'வாழி' யென்பது அசைநிலை. (கO)

அதி. கஉஉ—கனவுநிலை யுரைத்தல்

அஃதாவது, தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்க ணினைவு மிகுதி யாற் கண்டதாகலின் இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப்பட்டது.]

கஉகக. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

[தலைமகன் றூதுவரக் கண்டாள் சொல்லியது.]

(இ - ள்.) காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துகின்றதறிந்து அது நீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு

என் மாட்டுவந்த கனவினுக்கு; விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச் செய்வேன்?

'விருந்' தென்றது விருந்திற்குச் செய்யு முபகாரத்தினை. அது கனவிற்கொன்று காணுமையின், 'யாது செய்வே' னென்றாள். (க)

கூகூ. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

[தூதுவிடக் கருதியாள் சொல்லியது.]

(இ - ள்.) கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின் - துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலு முண்கண்கள் யானிரந்தாற் றுஞ்சுமாயின்; கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கியாளுற்றியுளே ளுய தன்மையை யானே விரியச் சொல்வேன்.

'கயலுண்க' ணென்றாள், கழிந்த நலத்திற்கிரங்கி. 'உயல்': காம நோய்க்குத் தப்புதல். தூதர்க்குச் சொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்றுள்ளுஞ் சுருக்குவனவற்றின் பரப்புந் தோன்றச், சொல்வேனென்னுங் கருத்தாற் 'சாற்றுவே' னென்றாள். இனி அவையுந் துஞ்சா, சாற்றலுங்கூடா தென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. மூன்னுங் கண்டாள் கூற்றுகலின், கனவுநிலை யுரைத்த லாயிற்று. (உ)

கூகூக. நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர்.

[ஆற்றுளெனக் கவன்றாட்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

(இ - ள்.) நனவினுன் நல்காதவரை - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை; கனவினுற் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின்கட் கண்ட காட்சியானே என்னுயி ருண்டாசாகின்றது.

மூன்ற னுருபுகள் ஏழன் பொருண்மைக்கண் வந்தன. அக் காட்சியானே யாளுற்றியுளே ளுகின்றேன், நீ கவலல் வேண்டா வென்பதாம். (ட)

கூகசு. கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தரற்கு.

[இதுவுமது]

(இ - ள்.) நனவினுன் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்றுழி நாடிக்கொண்டு

வந்து கனவு தருதலான் ; கனவிலுற் காமம் உண்டாகும் - அக் கனவின்கண்ணே எனக்கின்ப முண்டாகாநின்றது.

'காமம்' ஆகுபெயர். நான்காவது மூன்றன் பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர் சென்ற தேயமறிந்துசென்று கொண்டுவந்து தந்து நல்குவித்த கனவால் யாஞுற்றுவ லென்பதாம். (ச)

கஉகடு. நனவினுங் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

[இதுவுமது]

(இ - ள்.) நனவிலுங் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன்னனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்த வின்பந்தானுமினிதாயிற்று அப்பொழுதே ; கனவுந்தான் கண்டபொழுதே இனிது - இன்று கனவின்கட் கண்டு நுகர்ந்த வின்பமும் அக் கண்டபொழுதே யினிதாயிற்று, அதனுன் எனக்கிரண்டு மொத்தன.

'இனி' தென்பது முன்னுங் கூறப்பட்டது. 'கனவு' ஆகுபெயர். முன்னும் யான் பெற்றதிவ்வளவே, இன்னும் அது கொண்டாற்றுவ லென்பதாம். (இ)

கஉகசு. நனவென வொன்றில்லை யாயிற் கனவிலுற்
காதலர் நீங்கலர் மன்.

[இதுவுமது]

(இ - ள்.) நனவென ஒன்று இல்லையாயின் - நனவென்று சொல்லப்படுகின்ற ஒருபாவி யில்லையாயின் ; கனவிலுற் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார்.

'ஒன்' றென்பது அதன் கொடுமை விளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பது பட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற்றூற்றுகின்றமை கூறியவாறு. (சு)

கஉகஎ. நனவினல் காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது.

[விழித்துழிக் காணுளாயினுள் கனவிற்கூட்டினானென்று ஆற்றுளாய்ச் சொல்லியது.]

(இ - ள்.) நனவினுன் நல்காக் கொடியார் - ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளி செய்யாத கொடியவர் ; கனவினுன்

எம்மைப் பீழிப்பது என் - நாடோறுங் கனவின்கண் வந்து நம்மை வருத்துவது எவ்வியைபுபற்றி ?

பிரிதலும் பின்னினைந்து வாராமையு நோக்கிக் ' கொடியா ' ரென்றும், கனவிற் றோண்மேலராய் விழித்துழிக் கரத்தலின் அதனானுந் தன்பமாகாநின்ற தென்பாள் ' பீழிப்ப ' தென்றுங் கூறினாள். நனவி னில்லது கனவினு மில்லையென்பர், அது கண்டில மென்பதாம். (எ)

கஉகஅ. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

[தானுற்றுதற்பொருட்டுத் தலைமகனையியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.]

(இ - ள்.) துஞ்சுங்கால் தோள்மேல ராகி - என்னெஞ்சு விடாதுறைகின்ற காதலர் யான் றுஞ்சும்பொழுது வந்து என்றோண் மேலராய் ; விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்த ராவர் - பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணராவர்.

கலவி விட்டு மறையுங் கடுமைபற்றி ' விரைந் ' தென்றாள். ஒரு காலும் என்னினீங்கி யறியாதாரை நீ நோவற்பாலையல்லை யென்ப தாம். (அ)

கஉகக. நனவினு னல்காரை நோவர் கனவினுட்
காதலர்க் காணு தவர்.

[இதுவுமது]

(இ - ள்.) கனவினுட் காதலர்க் காணுதவர் - தமக்கொரு காதல ரின்மையின் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர் ; நனவினுன் னல்காரை நோவர் - தாமறிய கனவின்கண் வந்து நல்காத நங் காத லரை அன்பிலரென நோவாநிற்பர்.

இயற்பழித்தது பொருது புலக்கின்றா ளாகலின், அயன்மை தோன்றக் கூறினாள். தமக்குங் காதலருளராய் அவரைக் கனவிற் கண்டறிவாராயின் நங் காதலர் கனவின்க ணேற்றி நல்குத லறிந்து நோவா ரென்பதாம். (க)

கஉஉ0. நனவினு னந்நீத்தா ரென்பர் கனவினுட்
காணார்கொ லிவ்வூ ரவர்.

[இதுவுமது]

(இ - ள்.) இவ்வூரவர் நனவினுன் நந்நீத்தார் என்பர் - இவ் வூரின்மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நங் காதலரைக்

கொடுமைகூறு நிற்பர்; கண்விளுல் காணுர்கொல் - அவர் கனவின் கண் நீங்காதுவருதல் கண்டறியாரோ?

என்னெடு தன்னிடை வேற்றுமையின்றுயின் யான்கண்டது தானுங்கண்டமையும், அதுகாணுது அவரைக் கொடுமை கூறுகின்ற மையின் அயலாளே யாமென்னுங் கருத்தால், 'இவ்வூரவ' ரென்றுள்.

அதி. கஉந—பொழுதுகண்டிரங்கல்

[அஃதாவது, மாலைப்பொழுது வந்துழி அதனைக் கண்டு தலைமக ளிரங்குதல். கனு முந்துறுத வினையில்லை* யென்பதுபற்றிப் பகற்பொழு தாற்றியிருந்தாட்கு உரியதாகலின், இது கனவு நிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.]

கஉஉக. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

[பொழுதொடு புலந்து சொல்லியது.]

(இ - ள்.) பொழுது - பொழுதே; நீ மாலையோ அல்லை - நீ முன்னுள்களின் வந்த மாலையோவெனின், அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை - இருந்தவாற்றுன் அந்நாட் காதலரை மணந்த மகளிருயிரையுண்ணும் இறுதிக்காலமா யிருந்தாய்.

முன்னுள்: கூடியிருந்த நாள். அந்நாண்மணந்தாரெனவே, பின் பிரிந்தா ராதல் பெறுதும். 'வாழி' யென்பது குறிப்புச் சொல்; "வாலிழை மகளிர் ருயிர்ப்பொதி யவிழ்க்குங் காலை"† என்றுற் போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. 'வேலை' யென்பது ஆகுபெயர்; வேலையென்பதற்கு வேலாயிருந்தா யென்பாருமுளர்.‡

கஉஉஉ. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

[தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.]

(இ - ள்.) மருள்மாலை - மயங்கிய மாலாய்; புன்கண்ணை - நீயு மெம்போலப் புன்க ணுடையையா யிருந்தாய்; நின் துணை எங் கேள்போல் வன்கண்ணதோ - நின்றுணையும் எந்துணைபோல வன் கண்மை யுடையதோ; கூறுவாயாக.

மயங்குதல்: பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல்; கலக்குத லுந் தோன்றுகின்றது. புன்கண் ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையு

---

* பழமொழி - உ. † கலித்தொகை - ககக. ‡மணக்குடவர்.

மூண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. எமக்குத் துன்பஞ் செய்தாய், நீயு மின்பமுற்றிலை யென்னுங் குறிப்பால் ' வாழி ' யென்றாள். (உ)

கஉஉங. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

[ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) பனி அரும்பிப் பைதல்கொள் மாலை - காதலர் கூடிய காலெல்லாம் என்முன் நடுக்கமெய்திப் பசக்துவந்த மாலை ; துனி அரும்பித் துன்பம் வளர வரும் - இக்காள் எனக்கிறந்துபாடு வந்துதோன்றி அதற்குளதாந் துன்பம் ஒருகாலைக்கொருகால் மிக வாராநின்றது.

குளிர்ச்சி தோன்ற மயங்கிவரு மாலை யென்னுஞ் செம்பொருள் இக் குறிப்புணர நின்றது. துனி : உயிர்வாழ்வதற்கண் வெறுப்பு, அதனால் யாஞற்றுமா றென்னையென்பது குறிப்பெச்சம். (ங)

கஉஉச. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

[இதுவுமது]

(இ - ள்.) மாலை - காதல ருள்ளபொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்த மாலை ; காதலர் இல்வழி - அவரில்லாத இப்பொழுது ; கொலைக்களத்து ஏதிலர்போல வரும் - அஃதொழிந்து நிற்றலே யன்றிக் கொல்லுங் களரியிற் கொலைஞர் வருமாறுபோல அவ்வுயிரைக் கோடற்கு வாராநின்றது.

ஏதிலர் : அருள் யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துவந்த பொழுதும் இன்று என்மேற் பகையாய்த் துன்பஞ் செய்துவாராநின்றது, இனி யாஞற்றுமாறென்னையென்பதாம். (ச)

கஉஉடு. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

[இதுவுமது]

(இ - ள்.) (காலையும், மாலையும், அவர் கூடியஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன : அவற்றுள்,) யான் காலைக்குச் செய்த நன்று என் - யான் காலைக்குச் செய்த வுபகாரம் யாது ? மாலைக்குச் செய்த பகை எவன் - மாலைக்குச் செய்த அபகாரம் யாது ?

கூடியஞான்று பிரிவரென் றஞ்சப்பண்ணிய காலை அஃ தொழிந்து இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாரா நின்றதென்னுங் கருத்தால் 'நன்றென்கொ' லென்றும், கூடிய ஞான்று இன்பஞ் செய்துவந்த மாலை அஃதொழிந்து இஞ்ஞான்று அளவிறுன்பஞ் செய்யாநின்ற தென்னுங்கருத்தாற் 'பகையெவன் கொ' லென்றுங் கூறினாள். பகை ஆகுபெயர். தன்னொடொத்த காலை போலாது மாலை தன் கொடுமையாற் றுன்பஞ் செய்யாநின்ற தென்பதாம். (இ)

கஉஉசு. மாலைநோய் செய்தன் மணந்தார கலாத
காலை யறிந்த தீலேன்.

[இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்குடம்பட்ட தென்னை யென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலை; மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்குமுன்னே அறியப்பெற்றிலேன்.

இங்ஙனம் வேறுபடுத லறிந்திலேன், அறிந்தேனையின் அவர் பிரிவிற் குடம்படே னென்பதாம். (சு)

கஉஉள. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

[மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரண மென்னை யென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) இந்நோய் - இக்காமநோயாகிய பூ; காலை அரும்பி - காலைப்பொழுதின்க ணரும்பி; பகல் எல்லாம் போது ஆகி - பகற் பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து; மாலை மலரும் - மாலைப் பொழுதின்கண் மலராநிற்கும்.

துயிலெழுந்த பொழுதாகலிற் கனவின்கட் கூட்ட நினைந் தாற்றுதல்பற்றிக் 'காலையரும்பி' யென்றும், பின் பொழுது செலச் செல அது மறந்து பிரிவுள்ளி யாற்றுளாதல்பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' யென்றும், தத்தந் தூணையையுள்ளி வந்துசேரும் விலங்குகளையும் மக்களையுங் கண்டு தான் அக்காலத்தி னுகர்ந்த வின்ப நினைந் தாற்றுமைமிகுதிபற்றி 'மாலைமலரு' மென்றுங் கூறினாள். பூப்போல இந்நோய் காலவயத்ததாகாநின்ற தென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. ஏகதேச வுருவகம். (எ)

கஉஉஅ. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

[இதுவுமது]

(இ - ள்.) ஆயன் குழல்-முன்னெல்லாம் இனியதாய்ப் போந்த ஆயன்குழல்; அழல்போலும் மாலைக்குத் தூதாகி - இதுபொழுது அழல்போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய்; கொல்லும் படை - அது வந்தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையு மாயிற்று.

பின்னின்ற 'போலு' மென்பது உரையசை. முன்னரே வர வுணர்த்தலிற் றூதாயிற்று, கோறற் கருவியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்ல மாலே இத்துணையும் பெற்றுழ் என்செய்யா தென் பதாம். (அ)

கஉஉக. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

[இதுவுமது]

(இ - ள்.) (இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந் தேன்;) மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண் டாரும் மதிமருளும்வகை மாலை வரும்பொழுது; பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும்.

மதிமருள வென்பது 'மதிமருண்' டெனத் திரிந்து நின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினுளாகலின் 'மாலை படர்தரும் போழ்' தென்றுள். யாணிறந்துபடுவ லென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்துஎன் பதி நிலைகலங்கி நோயுழக்குமென் றுரைப்பாரு முளர்.

கஉஉஎ. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

[இதுவுமது]

(இ - ள்.) மாயா என் உயிர் - காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என்னுயிர்; பொருள்மாலையாளரை உள்ளி மருள்மாலை மாயும் - இன்று பொருளியல்பே தமக்கியல்பாக வுடையவரை நினைந்து, இம் மயங்கு மாலைக்கண்ணே இறந்துபடா நின்றது.

குறித்தபருவங் கழியவும் பொருண்முடிவு நோக்கி வாராமை யிற் சொல்வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொரு

ளியல்பே தம்மியல்பாயினர், காலமிதுவாயிற்று, இனி நீ சொல்லு இன்றவாற்றுற் பயனில்லை யென்பதாம். (கo)

அதி. கஉச—உறுப்புநலனழிதல்

[அஃதாவது, தலைமகடன் கண்ணும், தோளும், நுத்லு முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது, இரக்கமிக்குழி நிகழ்வதாக லின், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.]

கஉசுக. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ரு ருள்ளி
நறுமலர் நாணின கண்.

[ஆற்றுமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

(இ - ள்.) சிறுமை நமக்கு ஒழியச் சேட்சென்றூர் உள்ளி - இவ்வாற்றுமை நங்கண்ணே நிற்பத் தாஞ் சேணிடைச்சென்ற காதலரை நீ நினைந்தழுதலால்; கண் நறுமலர் நாணின - நின்கண்கள் ஒளியிழந்து முன் றமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன.

'நமக்' கென்பது வேற்றுமைமயக்கம். உள்ள வென்பது 'உள்ளி' யெனத் திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காய வாகுபெயர். இவை கண்டார் அவரைக் கொடுமை கூறுவர், நீ யாற்றல்வேண்டுமென்பது கருத்து. (க)

கஉசுஉ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

[இதுவுமது]

(இ - ள்.) பசந்து பனிவாரும் கண் - பசப்பெய்தண்மே னீர் வார்கின்ற நின் கண்கள்; நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - கம்மா னையக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவ போலாநின்றன, இனி நீ யாற்றல்வேண்டும்.

சொல்லுவபோறல் அதனை யவருணர்த்தற் கனுமானமாதல். நயந்தவர்க்கென்று பாடமோதுவாரு முளர். (உ)

கஉசுக. தணந்நமை சால வழிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

[இதுவுமது]

(இ - ள்.) மணந்த நாள் வீங்கியதோள் - காதலர் மணந்த ஞான்று இன்பமிகுதியாற் பூரித்த நின்றேள்கள்; தணந்தமை சால அறிவிப்பபோலும் - இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவதுபோல மெலியாநின்றன, இது தகாது.

அன்றுமவ்வாறு பூரித்து இன்று மிவ்வாறு மெலிந்தால் இரண்டுங் கண்டவர் கடிதினறிந்து அவரைத் தகவின்மை கூறுவரென்பதாம். (கூ)

கஉகூச. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் தணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

[இதுவுமது]

(இ - ள்.) தணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - அன்றுந் தந் தணைவர் நீங்குதலான் அவராற் பெற்ற செயற்கை யழகேயன்றிப் பழைய வியற்கையழகுமிழந்த இத்தோள்கள்; பணை நீங்கிப் பைந்தொடி சோரும் - இன்றதற்குமேலே தம்பெருமை யிழந்து வளை கழலாநின்றன, இவை யிங்ஙனஞ் செயற்பாலவல்ல.

பெருமையிழத்தல்: மெலிதல். 'பைந்தொடி': பசிய பொன்னாற் செய்த தொடி. 'சோரு' மென்னும் வளைத்தொழில் தோண்மேனின்றது. அன்றும் பிரிந்தாரென்று அவரன்பின்மை யுணர்த்தி இன்றுங் குறித்தபருவத்து வந்திலரென்று அவர் பொய்ம்மை யுணர்த்தா நின்றன; இனி அவற்றைக் கூறுகின்றேர்மேற் குறையுண்டோ வென்பதாம். (ச)

கஉகூடு. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

[இதுவுமது]

(இ - ள்.) கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக் கை நெகிழினும் ஆற்றுதாட்கு இக்கால நீட்டத்து என்னுமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன; தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகு மிழந்த இத்தோள்கள்; இனி யதனையாமறைக்குமா யென்னை?

'உரைக்கு' மென்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச் சொல். 'ஒடு' வேறு வினைக்கண் வந்தது. அவரொடு கலந்த

தோள்களே சொல்லுவனவாஞல் அயலார் சொல்லுதல் சொல்ல வேண்டுமோ வென்பதாம். (இ)

கஉஉசு. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற ஞெந்து.

[தானுற்றுதற்பொருட்டியற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

(இ-ள்.) தொடியொடு தோள் நெகிழ - யானுற்றவும் என் வயத்தவன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண்மெலிய ; அவரைக் கொடியவர் எனக் கூறல் நொந்து நோவல் - அவற்றைக் கண்டு நீ யவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவாகின்றேன்.

'ஒடு' மேல்வந்த பொருண்மைத்து. யானுற்றே ஞகின்றது அவர் வாராததற்கன்று, நீ கூறுகின்றதற் கென்பதாம். (சு)

கஉஉஎ. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து.

[அவ்வியற்பழிப்புப் பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

(இ-ள்.) நெஞ்சே - நெஞ்சே ! கொடியார்க்கு என் வாடு தோள் பூசல் உரைத்து - இவள் கொடியா ரென்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினுல் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி, பாடு பெறுதியோ - ஒரு மேம்பாடெய்தவல்லையோ ? வல்லையாயின் அதனையொப்பதில்லை.

'கொடியார்க்'கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச் சொல். 'வாடுதோ' ளென்பதும் அவை தாமே வாடாநின்றன வென்பது தோன்றநின்றது. 'பூசல்' ஆகுபெயர்; அஃது அவள் தோணெகிழ்கியற்பழித்தன்மேலும் அதனுற் றனக்காற்றுமை மிகன் மேலும் நின்றது. நின்னுரை கேட்டலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லா நீங்கும், நீங்க அஃதெனக்குக் காலத்தினுற் செய்த நன்றியா மாகலின், அதன் பயனெல்லா மெய்துதியென்னுங் கருத்தாற் 'பாடுபெறுதியோ' வென்றாள். (எ)

கஉஉஅ. முயங்கிய கைகளு யுக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

[வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) முயங்கிய கைகளே ஊக்க - தன்னையிறுக முயங்கிய கைகளே இவட்கு நோமென்று கருதி ஒருஞான் றியானெகிழ்த்தே னுக; பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது - அத்துணையும் பொறாது பைந்தொடிகளே யணிந்த பேதையது நுதல் பசந்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற் கியாதுசெய்யுமோ!

இனிக் கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து. (அ)

கஉந.க. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

[இதுவுமது]

(இ - ள்.) முயக்கிடைத் தண் வளி போழ - அங்ஙனம் கைகளே யூக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக; பேதை பெருமழைக்கண் பசப்புற்ற - அத்துணை யிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மைய வான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடையீடுகளே யெல் லாம் யாங்ஙனம் பொறுத்தன!

தன்மை ஈண்டு மென்மைமே னின்றது. 'போழ' வென்றது உடம்பிரண்டும் ஒன்றுனதுதோன்ற நின்றது. 'மழை':குளிர்ச்சி. (க)

கஉசo. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு.

[இதுவுமது]

(இ - ள்.) கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண் வளி போழவந்த கண்ணின் பசப்புத் துன்பமுற்றது; ஒள் நுதல் செய்தது கண்டு - தனக்கயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக் கண்டு.

அது கைகளே யூக்க அவ்வளவிற் பசந்தது, யான் கைகளையு மூக்கி மெய்களுநீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் துணையும் பசந்தில னெனத் தன்வன்மையும் அதன் மென்மையுங்கருதி வெள்கிற்றென்ப தாம். ஆகவே; அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று மூற்பட்டு நல னழியும், யாங் கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று. (கo)

அதி. கஉடு—நெஞ்சொடு கிளத்தல்

[அஃதாவது, ஆற்றுமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சொடு செய்திற னறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக்கள் தந்நலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்புநலனழிதலின்பின் வைக்கப்பட்டது.]

கஉசஎ. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து.

[தன்னாற்றுமை தீருந்திற மடியது.]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ்வெவ்வநோயினைத் தீர்க்கு மருந்தாவ தொன்றனை; எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல்லாய் - (யானறியு மாற்றலிலன்) எத்தன்மையதியாதொன்றுயினும் நீ யறிந்தெனக்குச் சொல்.

எவ்வம்; ஒன்றானுந் தீராமை. உயிரினுஞ் சிறந்த நாணினை விட்டுச் செய்வ தியாதொன்றுயினு மென்பாள், 'எனைத்தொன்று' மென்றாள். (க)

கஉசஉ. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

[தலைமகனைக் காண்டற்கண் வேட்கைமிகுதியாற் சொல்லியது.]

(இ - ள்.) என் நெஞ்சு வாழி - என்னெஞ்சே, வாழ்வாயாக; அவர் காதல் இலராக நீ நோவது - அவர் நங்கட் காதலிலராகவும் நீ யவர்வரவு நோக்கி வருந்துதற்கேது; பேதைமை - நின்பேதை மையே, பிறிதில்லை.

நம்மை நினையாமையின் நங்கட் காத லிலரென்ப தறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பாற் செல்லக் கருதாது அவர் வரவு பார்த்து வருந்தாநின்றாய், இது நீ செய்துகொள்கின்றதென்னுங் கருத்தாற் 'பேதைமை' யென்றாள். 'வாழி' இகழ்ச்சிக்குறிப்பு. யாமவர்பாற் சேறலே அறிவாவதென்பதாம். (உ)

கஉசஙு. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.

[இதுவுமது]

(இ - ள்.) நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே, அவர்பாற் செல்வதுஞ் செய்யாது ஈண்டிறந்துபடுவதுஞ் செய்யா

திருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்ற தென்னை? பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல் - இப்பையுணோய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக் கருதுதல் உண்டாகாது.

நம்மாட் டருளுடைய ரன்மையிற் றுமாக வாரார், நாஞ் சேறலே இனித் தகுவதென்பதாம். (கூ)

கஉசச. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.

[இதுவுமது]

(இ - ள்.) நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே, நீ யவர்பாற் சேரலுற்றாயாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; இவை அவர்க் காணல் உற்று என்னைத் தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாங் காட்சிவிதுப்பிலுல் அவரைக் காண்டல்வேண்டி நீ காட்டென்று என்னைத் தின்பனபோன்று நலியாநிற்கும்.

கொண்டென்பது 'கொள' வெனத் திரிந்து நின்றது. 'தின்னு' மென்பது இலக்கணைக்குறிப்பு. அங்ஙவிவு தீர்க்கவேண்டு மென்ப தாம்: என்றது தான்சேறல் குறித்து. (ச)

கஉசஞ. செற்று ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்று லுருஅ தவர்.

[இதுவுமது]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! யாம் உற்றுல் உறுஅதவர் - யாம் தம்மையுறத் தாமுறுத நங் காதலரை; செற்றுரெனக் கைவிடல் உண்டோ - வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ? இல்லை.

உறுதல்: அன்புபடுதல். அவ்வலி யின்மையின் அவர்பாற் செல்வதே நமக்குத் தகுவதென்பதாம். (ரி)

கஉசட. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.

[தலைமகன் கொடுமைநினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.]

(இ - ள்.) என் நெஞ்சு - என்னெஞ்சே! கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்து உணராய் - யான் றம்மொடு புலந்தால்

அப்புலவியைக் கலவி தன்னுனே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகாற் புலந்து பின் னதனே நீங்கமாட்டாய் ; பொய்க் காய்வு காய்தி - அதுவுமாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயாகின்றாய் ; இனி யிதனே யொழிந்து அவர்பாற் செல்லத் துணிவாயாக.

கலத்தலானென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனு னுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனுன் மயக்கிப் புலவிக்குறிப்பினே யொழித்தல். 'பொய்க்காய்வு' : நிலையில் வெறுப்பு. கண்டான் மாட்டாத நீ காணுதவழி வெறுக்கின்றதனுற் பயனில்லே யென்பதாம். (சு)

கஉசஎ. காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
யாஞே பொறேனிவ் விரண்டு.

[நாண்டடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது.]

(இ - ள்.) நன்னெஞ்சே - நல்லநெஞ்சே ! ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண்விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு ; (ஒன்று) நாண் விடு - ஒன்றின் அதுவிடமாட்டாயாயின் நாணினே விடு ; இவ்விரண்டு யாஞே பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின் ஒன்றற்கொன்று மறுதலேயாய இவ்விரண்டனேயும் உடன் முங்கு மதுகை யானிலன்.

'யாஞே' வென்னும் பிரிநிலே நீ பொறுப்பினு மென்பதுபடநின்றது. 'நன்னெஞ்சே' யென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலேபெறுத்தலின், நல்லேயென்னுங் குறிப்பிற்று. அது நன்றேயெனினும் என்னுயிருண்டாதல் சாலாமையின், அதற்காகின்றிலேனென்பதாம். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. (எ)

கஉசஅ. பிரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) என் நெஞ்சு - என்னெஞ்சே ! அவர் பிரிந்து நல்காரென்று - அவர் இவ்வாற்றுமையை யறியாமையின் நொந்துவந்து தலேயளி செய்யாராயினு ரென்று கருதி ; பிரிந்தவர்பின் ஏங்கிச் செல்வாய் பேதை - அஃதறிவித்தற்பொருட்டு நம்மைப் பிரிந்து போயவர்பின் ஏங்கிச்செல்லலுற்ற நீ யாது மறியாய்.

ஆற்றுமை கண்டுவைத்தும் நல்காது போயினுரைக் காணுதவழிச் சென்றறிவித்த தூணேயானே நல்க வருவ ரென்று கருதினமையிற் 'பேதை' யென்றுள். (அ)

கஉசக. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) என் னெஞ்சு - என்னெஞ்சே ; காதலவர் உள்ளத் தாராக - காதலர் நின்னகத்தா ராக ; நீ உள்ளி யாருழைச் சேறி - முன்பெல்லாங் கண்டுவைத்து இப்பொழுது நீபுறத்துத் தேடிச் செல் கின்றது யாரிடத்து ?

உள்ளமென்புழி அம்முப் பகுதிப்பொருள் விகுதி. நின்னகத் திருக்கின்றவரை அஃதறியாது புறத்துத் தேடிச்சேறல் நகை யுடைத்து, அதனே யொழி யென்பதாம். (கூ)

கஉஙo. துன்னுத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

[அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபட்சொல்லியது.]

(இ - ள்.) துன்னுத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக் கூடாவண்ணந் துறந்து போயினுரை நாம் நம்மகத்துடையே மாக ; இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினு மிழப்போம்.

"குன்றி, னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்"* என்புழிப்போல 'நெஞ்' சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத் துன்னுமற் றுறந்தாராகவும், நாமவரை மறத்தன்மாட்டே மாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்ற நிறையு மிழப்பே மென்பதாம். (கo)

அதி. கஉசு—நிறையழிதல்

[அஃதாவது, தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல் : "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை"† என்றுர் பிறரும். அஃதழி தற்காரணம் நெஞ்சொடு கிளந்தமையின், இது நெஞ்சொடு கிளத்தலின்பின் வைக்கப்பட்டது]

---

* குறுந்தொகை, கடவுள்வாழ்த்து. † கலித்தொகை - கஉங.

கூடுக. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

[நாணுநிறையு மழியாமை நீ யாற்றல் வேண்டுமென்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னுங் கதவு - நாணுகிய தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவினை ; காமக்கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது, இனி அவை நிற்றலுமில்லை, யாஞற்றலு மில்லை.

'கணிச்சி' குந்தாலி. நாணுள்ள துணையும் நிறை யழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக் கிடந்தன பிறர் கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்கலிற் றன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினாள். (க)

கூடுஉ. காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

[நெஞ்சின்கட் டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு
மென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும் - எல்லாருந் தொழிலொழியு மிடையாமத்தும் என்னெஞ்சத்தை யொறுத்துத் தொழில்கொள்ளா நின்றது ; காமமென ஒன்று கண் இன்று - ஆகலாற் காமமென்று சொல்லப்பட்ட வொன்று கண்ணோட்டமின்றி யிருந்தது.

'ஓ' வென்பது இரக்கக் குறிப்பு. தொழிலின்கண்ணே யாடல் தலைமகன்பாற் செலவிடுத்தல். தாயைப் பணிகோடல் உலகியலன்மையிற் 'காமமென வொன்' றென்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் 'கண்ணின்' றென்றுங் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு. (உ)

கூடுங. மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.

[மகளிர்காமம் மறைக்கப்படுமென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யானென்னுள்ளே மறைக்கக் கருதுவேன் ; குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றிவிடும் - அதனாலென், இஃதென் கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டே விடாநின்றது.

'மன்' ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரங்கற்கண் வந்தது. தும்மலடங்காதாற்போல அடங்குகின்ற தில்லையென்பதாம். (க)

கஉருசு. நிறையுடையே னென்பேன்மன் யானெவென் காம
மறையிறந்து மன்று படும்.

[இதுவுமது]

(இ - ள்.) யான் நிறையுடையேன் என்பேன் - இன்றினூங் கெல்லாம் யானென்னே நிறையுடையே னென்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனாலென்! இன்றென் காமம் மறைத்தலைக் கடந்து மன்றின்கண் வெளிப்படாநின்றது.

'மன்' னும் 'ஓ'வும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல்: பலரு மறிதல். இனி என் வரைத்தன் றென்பதாம். (ச)

கஉருஙி. செற்றூர்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றூ ரறிவதொன் றன்று.

[நம்மை மறந்தாரை நாமுமறக்கற்பால மென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) செற்றூர்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மை யகன்று சென்றூர் பின் செல்லாது தாமும் அகன்றுநிற்கு நிறை யுடைமை; காமநோய் உற்றூர் அறிவது ஒன்று அன்று - காம நோயினையுறுதார் அறிவதொன்றன்றி உற்றூர் அறிவதொன்றன்று.

இன்பத்தொடு கழியுங் காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலிற் 'செற்று' றென்றூள். பின்சேறல்: மனத்தால் இடை விடாது நினைத்தல். 'பெருந்தகைமை' ஈண்டாகுபெயர். காமநோ யுறுதார் மானமுடையார். நன்றென வுணராமாட்டுஞ் சென்றே நிற்கும் யானறிவதொன் றன்றென்பதாம். (ஞ)

கஉருசு. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

[இதுவுமது]

(இ - ள்.) செற்றவர்பின் சேறல் வேண்டி - என்னை யகன்று சென்றூர்பின்னே யான் சேறலே வேண்டுதலான்; என்னை உற்ற துயர் எற்று அளித்து - என்னை யுற்றதுயர் எத்தன்மையது? சால நன்று?

'செற்றவ' ரென்றது ஈண்டும் அப்பொருட்டு.* வேண்ட வென்பது 'வேண்டி' யெனத் திரிந்து நின்றது. 'அளித்' தென்பது

* கஉருஙு-ஆம் குறளுரை.

இகழ்ச்சிக் குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவுங் கேட்கவுமாவ தொன்றன்று, சாலக் கொடி தென்பதாம். (சு)

கூஉஇஎ. நாணென வொன்றே வறியலங் காமத்தார்
பேணியார் பெட்ப செயின்.

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவாற்கூடிய தலை மகள் நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) பேணியார் காமத்தால் பெட்ப செயின் - நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின்; நாண் என ஒன்றே அறியலம் - நாணென்றொன் றையும் அறியமாட்டேமா யிருந்தேம்.

'பேணியா' ரெனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. விரும்பியன: வேட்கை மிகவினைக் கருதியிருந்த கலவிகள். 'நாண்': பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். 'ஒன்' றென்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன்குற்ற நோக்கி, அவளையு முளப்படுத்தாள். (எ)

கூஉஇஅ. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றேநம்
பெண்மை யுடைக்கும் படை.

[இதுவுமது]

(இ - ள்.) நம் பெண்மை உடைக்கும் படை - நங்நிறையாகிய வரணை யழிக்குந் தானை; பன்மாயக் கள்வன் பணிமொழியன்றே - பல பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றே? ஆனபின் அது நிற்குமாறென்னை?

'பெண்மை' ஈண்டுத் தலைமைபற்றி நிறைமே னின்றது. வந் தாற் புலக்கக்கடவேமென்றும், புலந்தால் அவன் சொற்களானுஞ் செயல்களானும் நீங்கேமென்றும், இவை முதலாக வெண்ணிக் கொண்டிருந்தன யாவுங் காணாது கலவிக்கட் டன்னினுமுற்படும் வகை வந்து தோன்றினனென்பாள், 'பன்மாயக் கள்வ' னென்றாள். 'பணிமொழி': நம்மினுந்தா னன்புமிகுதி யுடையவனைச் சொல்லுஞ் சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக, நந் நிறையழியா தொழியுமோ வென்பதாம். (அ)

கூஉஇக. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

[இதுவுமது]

(இ - ள்.) புலப்பல் எனச் சென்றேன் - அவர் வந்தபொழுது புலக்கக்கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; நெஞ்சம் கலத்தலுறுவது கண்டு புல்லினேன் - போயும், என்னெஞ்சம் நிறையினில்லாது அறைபோய்* அவரோடு கலத்தருடங்குதலே யறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன்.

வாயாமை: புலத்தற்கருவியாய நெஞ்சு தானே கலத்தற்கருவியாய் நிற்றலின் அது முடியாமை. (கூ)

கஉசூ0. நீணந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க் குண்டோ
புணர்ந்துடி நிற்பே மெனல்.

[இதுவுமது]

(இ - ள்.) நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினர்க்கு - நிணத்தைத் தீயின்கண்ணே யிட்டால் அஃதுருகுமாறுபோலத் தங் காதலரைக் கண்டால் நிறையழிந்துருகு நெஞ்சினையுடைய மகளிர்க்கு; புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் புணரா மூடிப் பின்பு உணராது அங்ஙிலையே நிற்கக்கடவேமென்று கருதுதலுண்டாகுமோ? ஆகாது.

புணர்தல் ஈண்டு மிக நணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணரவென்பது 'புணர்ந்' தெனத் திரிந்து நின்றது. யானத்தன்மையேனுகலின் எனக்கஃ தில்லையாயிற் றென்பதாம். (க0)

அதி. கஉஎ—அவர்வயின் விதும்பல்

[அஃதாவது, சேயிடைப்பிரிவின்கட் டலைமகனும் தலைமகளும் வேட்கைமிகவினுன் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றுமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையுஞ் சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினர். பிற†செல்லாம் இதனைத் தலைமகனே நினைந்து தலைமகள் விதுப்புற லென்றுரை. சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடுகூடிய பொருளுணர்த்துவ தல்லது தானென்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றுய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற்பன்மையாற் கூறப்படாமை

* கலித்தொகை - கூஎ. † மணக்குடவர்.

யானும் அஃதுரையன்மை யறிக. இதனுட் டலைமகள் கூற்று நிறையழிவா னிகழ்ந்ததாகலின், அவ்வியைபுபற்றி நிறையழித லின்பின் வைக்கப்பட்டது.]

கஉசுக. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.*

[தலைமகள் காண்டல் விதுப்பிலுற் சொல்லியது.]

(இ - ள்.) அவர் சென்ற நாள் ஒற்றி விரல்தேய்ந்த - அவர் கம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்க ணிழைத்தவற்றைத் தொட்டு எண்ணுதலான் என்விரல்க டேய்ந்தன ; கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி, அவர் வரும் வழிபார்த்து என் கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின ; இவ்வாறுயும் அவர் வர வுண்டாயிற்றில்லை.

'நாள்' .ஆகுபெயர். புல்லியவாதல் : நுண்ணிய காணமாட் டாமை. ஒற்றவென்பது 'ஒற்றி' யெனத் திரிந்துநின்றது. இனி யான் காணுமா றென்னையென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்த லும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச் செய்தலான், விதுப் பாயிற்று. (க)

கஉசுஉ. இலங்கிழா யின்று மறப்பினென் றேண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

[ஆற்றுமைமிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லீ சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) இலங்கு இழாய் - விளங்காநின்ற விழையினையுடை யாய் ! இன்று மறப்பின் - காதலரை இன்று யான் மறப்பேனையின் ; மேல் காரிகை நீத்து என்றேள் கலங் கழியும் - மேலுங் காரிகை யென்னை நீப்ப, என்றேள்கள் வளை கழல்வனவாம்.

'இலங்கிழா' யென்பது இதற்கு நீ யாதும் பரியலையென்னுங் குறிப்பிற்று. 'இன்று' : யானிறந்துபடுகின்ற வின்று. மேலும் : மறு பிறப்பினும். எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. நீப்பவென்பது 'நீத்'தெனத் திரிந்துநின்றது. கழியுமென்னும் இடத்துநிகழ் பொரு ளின் றொழில் இடத்தின்மே னின்றது. இவ்வெல்லைக்க ணினைந் தால் மறுமைக்கண் அவரையெய்தி யின்புறலாம் ; அதனான் மறக் கற்பாலே னல்லே†னென்பதாம். (உ)

*திருக்கோவை - கூசரு. † திருக்கோவை - உ0டு.

கஉசுங. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்ருர்
வரனசைஇ யின்னு முளேன்.

[இதுவுமது]

(இ - ள்.) உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்ருர் - இன்ப நுகர்தலே நச்சாது வேறலே நச்சி நாந் துணையாதலேயிகழ்ந்து தம்மூக்கந் துணையாகப் போயினர்; வரல்நசைஇ இன்னும் உளேன் - அவற்றை இகழ்ந்து ஈண்டு வருதலே நச்சுதலான், யானிவ்வெல்லே யினு முளேனுயினேன்.

'உர' னென்பது ஆகுபெயர். அந் நசையா னுயிர்வாழாநின் றேன், அஃதில்லேயாயின் இறந்துபடுவ னென்பதாம். (கூ)

கஉசுச. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி - நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடிய காமத்துடனே நங்கண் வருதலே நினேந்து; என்னெஞ்சு கோடுகொடு ஏறும் - என் னெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற் பிணத்தெழாநின்றது.

வினேவயிற்பிரிவுழிக் காமவின்ப நோக்காமையும் அது முடிந் துழி அதுவே நோக்கலுந் தலேமகற்கியல்பாகலின், 'கூடிய காமமோ' டென்ருள். ஒடு வருபு விகாரத்தாற் ருெக்கது. கோடு கொண் டேறலாகிய மரத்ததுதொழில் நெஞ்சின்மே லேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்துநின்றது. அஃ துள்ளிற்றிலேனுயின் இறந்துபடுவ லென்பதாம். (ச)

கஉசுஞ. காண்கமற் கொண்கனைக் கண்ணுரக் கண்டபி
னீங்குமென் மென்ருேட் பசப்பு.

[தலேமகன் வரவுகூறி ஆற்ருயாய்ப் பசக்கற்பாலே யல்லே யென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) கண் ஆரக் கொண்கனைக் காண்க - என் கண்க ளாரும்வகை என்கொண்கனே யான் காண்பேனுக; கண்டபின் னன் மென்ருேட் பசப்பு நீங்கும் - அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கட் பசப்புத் தானே நீங்கும்.

'காண்க' வென்பது ஈண்டு வேண்டிக்கோடற் பொருட்டு. அது வேண்டுமென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதுணேயா னீங்காதென்பதாம் (ஞ)

கஉசுசு. வருகமற் கொண்க ளொருநாட் பருகுவன்
பைதலே யெல்லாங் கெட.

[இதுவுமது]

(இ - ள்.) கொண்கன் ஒருநாள் வருக - இத்தினைநாளும் வாராக்கொண்கன் ஒருநாள் என்கண் வருவானுக; பைதல் நோயெல்லாம் கெடப் பருகுவன் - வந்தாற் பையுளைச் செய்கின்ற இந்நோயெல்லாங் கெட அவ்வமிழ்தத்தை வாயில்களைந்தானும் பருகக்கடவேன்.

'வருக' வென்பதற்கும், 'மன்' னென்பதற்கும் மேலுரைத்த வாறே கொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக் கடவ நோய்களுங் கெடுப்ப லென்பதாம். (சு)

கஉசுஎ. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்
கண்ணன்ன கேளிர் வரின். [கொல்

[இதுவுமது]

(இ - ள்.) கண் அன்ன கேளிர் வரின் - கண்போற்சிறந்த கேளிர் வருவராயின்; புலப்பேன்கொல் - அவர் வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக் கடவேனே; புல்லுவேன்கொல் - அன்றி என்னுற்றுமை நோக்கிப் புல்லக் கடவேனே; கலப்பேன்கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விருசெயல்களையும் விரவக் கடவேனே, யாதுசெய்யக் கடவேன்?

புலவியும் புல்லலும் ஒருபொழுதின்கண் விரவாமையிற் 'கலப்பேன்கொ' லென்றுள். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொ லென்பதற்கு ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட்போலக் கலந்தொழுகுவேனேவென் றுரைப் பாரு முளர். (எ)

கஉசுஅ. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்க மிருந்து.

[வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவுநீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) வேந்தன் வினை கலந்து வென்றீக - வேந்தன் வினைசெய்தலைப் புரிந்து வெல்வானுக; மனைகலந்து மாலை விருந்து அயர்க - யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப் பொழுதிற்கு விருந்தயர்வோமாக.

'மனை' யென்பது ஈண்டாகுபெயர், "மங்கல மென்ப மனை மாட்சி"* என்புழிப்போல. வினைசெய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்கரித்தன் முதலியவின்மையின், 'மனை கலந்து மாலைக்கு விருந்தயர்க' மென்றான். நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிற†யெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றுக்கி யுரைத்தார்; தலைமகனைக் கூறுது வேந்தன் வெல்க வென்றும், மனைகலந் தென்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்க மென்றும் வந்த அவ்வுரை தானே அது கூடாமைக்குக் காரியாயிற்று. (அ)

கஉ. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார் வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

[இதுவுமது]

(இ - ள்.) சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - சேணிடைச் சென்ற தங் காதலர் மீண்டுவரக் குறித்த நாளை யுட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்து மகளிர்க்கு; ஒருநாள் எழுநாள்போல் செல்லும் - ஒருநாள் பலநாள்போல் நெடிதாகக் காட்டும்.

ஏழென்பது அதற்குமேலாய மிக்க பன்மை குறித்து நின்றது, "ஒருவர் கூறை யெழுவ ருடுத்து" என்றாற்போல. தலைமகள் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனால் இதுவுந் தலைமகள் கூற்றுகாமை யறிக. இருநாளென்று பாடமோதுவாரு முளர். (க)

கஉ எ0. பெறினென்னும் பேற்றக்கா லென்னை முறினென்னை முள்ள முடைந்துக்கக் கால்.

[இதுவுமது]

(இ - ள்.) உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம் பிரிவினையாற்றாது உள்ளமுடைந் திறந்துபட்டவழி; பெறின் என் - நம்மைப் பெறக்கடவ ளாஞலென்? பெற்றக்கால் என் - அதுவன்றியே பெற்றாலென்? உறின் என் - அதுவன்றியே மெய்யுறக் கலந்தாற்றானென்? இவை யொன்றானும் பயனில்லை.

இம்மூன்றும் உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன. அதன் மேலும் முன்னே வழக்குண்மையின். அதற்குமுன்னே யான்செல்ல வேண்டுமென்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி‡ இரங்கலாவதல்லது விதுப்பாகாமை யறிக. (கo)

* குறள் - கூo. † மணக்குடவர். ‡ மணக்குடவர்.

அதி. கஉஅ—குறிப்பறிவுறுத்தல்

அஃதாவது, தலைமகன், தலைமகள் தோழியென் றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க் கறிவுறுத்தல். இது, பிரிந்து போய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.]

கஉஎக. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

[பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினுற் புதுவது பன்னலும் பாராட்டத் தலைமகள் இதுவொன்றுடைத்தென வஞ்சியவழி அதனை யவள்குறிப்பா னறிந்து அவனவட்குச் சொல்லியது.]

(இ - ள்.) கரப்பினும் - நீ சொல்லாது மறைத்தா யாயினும்: ஒல்லா கையிகந்து - அதற்குடம்படாதே நின்னைக் கைகடந்து; நின் உண் கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு - நின் னுண்கண்களே எமக்குச் சொல்ல லுறுவதொரு காரியமுண்டாயிராநின்றது; இனியதனை நீயே தெளியச் சொல்வாயாக.

கரத்தல்: நாணு னடக்குதல். தன்கட் பிரிதற்குறிப்புளதாகக் கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன் பிரியாமைக்குறிப் பறிவுறுத்தவாறு. (க)

கஉஎஉ. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

[நாணல் அவள் அதுசொல்லாளாயவழி அவன் றோழிக்குச் சொல்லியது.]

(இ - ள்.) கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோட் பேதைக்கு - என் கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினையு முடைய நின் பேதைக்கு; பெண்நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது.

இலதாய பிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான், இவ்வாறு கூறினன். (உ)

கஉஎஊ. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

[இதுவுமது]

(இ - ள்.) மணியில் திகழ்தரும் நூல்போல் - கோக்கப்பட்ட பளிக்குமணியகத்துக் கிடந்து புறத்துப் புலனு நூல்போல; மடந்தை

அணியில் திகழ்வது ஒன்று உண்டு - இம்மடந்தைய தணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றதொரு குறிப்புண்டு.

அணி : புணர்ச்சியாலைய வழகு. அதனகத்துக் கிடத்தலாவது அதனேடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனே யானறிகின்றிலேன், நீ யறிந்துகூறல் வேண்டு மென்பது கருத்து.

கூஎச. முகைமொக்குள்ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குளுள்ளதொன் றுண்டு.

[இதுவுமது]

(இ - ள்.) முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகை யது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல ; பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு - கின்பேதை என் னேடு நகக்கருது நகையது முகிழ்ப்பி னுளதாய்ப் புறத்துப் புலனு காததோர் குறிப்புண்டு.

முகிழ்ப்பு: முதிர்ச்சியாற் புடைபடுதல். 'நகை' புணர்ச்சி யின் பத்தா னிகழ்வது. (ச)

கூஎஞ. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

[இதுவுமது]

(இ - ள்.) செறி தொடி செய்து இறந்த கள்ளம் - செருங்கிய வளைகளையுடையாள் என்கண் ணில்லாததொன்றினை யுட்கொண்டு, அது காரணமாக என்னே மறைத்துப்போன குறிப்பு ; உறு துயர் தீர்க்கு மருந்து ஒன்று உடைத்து - என் மிக்கதுயரைத் தீர்க்கு மருந் தாவ தொன்றினை யுடைத்து.

உட்கொண்டது பிரிவு. 'கள்ளம்': ஆகுபெயர். மறைத்தற் குறிப்புத் தானு முடன்போக் குட்கொண்டது. 'உறுதுயர்' நன்று செய்யத் தீங்குவினேதலானும் அதுதான் தீர்திறம் பெருமையானும் உளதாயது. 'மருந்து': அப்பிரிவின்மை தோழியாற் றெளிவித்தல். நீ யது செய்தல் வேண்டு மென்பதாம். (ஞ)

கூஎசு. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனே அது தெளிவிக்கச் சென்ற தோழிக்கறிவுறுத்தது.]

(இ - ள்.) பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் - காதலர் வந்து தம் பிரிவினு லுய துன்பத்தினே மிகவுமாற்றி நாமகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி; அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து - இருந்தவாற்றுன் மேலுமத் துன்பத்தினே அரிதாக வாற்றியிருந்து அவரன்பின்மையை நினேயுந் தன்மை யுடைத்து.

பிரிதற்குறிப்பினுற் செய்கின்றதாகலான், முடிவில் இன்னு தாகாகின்ற தென்பதாம். (சு)

கஉஎஎ. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளே.

[இதுவுமது]

(இ - ள்.) தண்ணந்துறைவன் தணந்தமை - குளிர்ந்த துறை யையுடையவன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற் பிரிந் தமையை; நம்மினும் வளே முன்னம் உணர்ந்த - அவன் குறிப்பா னறிதற்குரிய நம்மினும் இவ்வளேகள் முன்னே யறிந்தன.

கருத்துங்கழ்ந்ததாகலிற் 'றணந்தமை' யென்றும், யான்றெளிய வுணர்தற்குமுன்னே தோள்கண் மெலிந்தன வென்பாள் அதனே வளேமேலேற்றி அதுதன்னே யுணர்வுடைத்தாக்கியுங் கூறினுள். (எ)

கஉஎஅ. நெருநற்றுச் சென்ருரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.

[இதுவுமது]

(இ - ள்.) எங் காதலர் சென்ருர் நெருநற்று - எங் காதலர் பிரிந்துபோயினுர் நெருநற்றே; யாமும் மேனிபசந்து எழுநாளேம் - அப்பிரிவிற்கு யாமும் மேனி பசந்து எழுநாளுடையமாயினேம்.

நெருநற்றுச் செய்த தலேயளியாற் பிரிவு துணியப்பட்ட தென் பாள் 'நெருநற்றுச் சென்ரு' ரென்றும், அதனே யையுற்றுச் செல்கின் றது எழுநா ளுண்டாகலின் அன்றே மேனி பசந்த தென்பாள் 'மேனி பசந்தெழுநாளே' மென்றுங் கூறினுள். இவ்வாற்றுற் றலே மகனது பிரிதற்குறிப்பினே யுணர்த்திநின்றது. (அ)

கஉஎக. தொடிநோக்கி மென்ருேளு நோக்கி யுடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

[தலேமகள் குறிப்பறிந்ததோழி அதனேத் தலேமகற் கறிவித்தது.]

(இ - ள்.) (யானது தெளிவித்தவழித் தெளியாது) தொடி நோக்கி - அவர் பிரிய யா ளீண்டிருப்பின். இவை நில்லாவெனத்

தன்முழுடியை நோக்கி; மென்முலைளும் நோக்கி - அதற்கேதுவாக இவைமெலியுமெனத் தன் மென்முலைகளையு நோக்கி ; அடிநோக்கி - பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல்வேண்டுமெனத் தன்னடியையு நோக்கி; ஆண்டு அவள் செய்தது அஃது - அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்கா யிருந்தது.

செய்த குறிப்புச் செய்தற்கேதுவாய குறிப்பு. 'அஃ'தென் முழுள் "செறிதொடி செய்திறந்த கள்ள"* மென்மு ளுகலின். பிரி தற் குறிப்புண்டாயின் அஃதழுங்குதல் பயன். (கூ)

கஉஅ0. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினும்
காமநோய் சொல்லி யிரவு.

[தலைமகன் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கறிவுறுத்தது.]

(இ - ள்.) காமநோய் கண்ணினுற் சொல்லி இரவு - மகளிர் தங் காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணினுற் சொல்லி, அது நீர்க்க வேண்டுமென்று அவரை யிரவாது உடன் போதல் குறித்துத் தம்மடியினை யிரத்தல்; பெண்ணினுல் பெண்மை உடைத்து என்ப - தமக்கியல்பாகிய பெண்மை மேலும் ஓர் பெண்மை யுடைத்தென்று சொல்லுவர் அறிந்தோர்.

தலைமகளதுடன்போதற் றுணிபு தோழியாற்றெளிந்தா ளுகலின், தன் பிரிவின்மைக் குறிப்பினை யறிவுறுப்பான், அவள் பெண் மையினைப் பிறர்மே லிட்டு வியந்து கூறியவாறு. (கo)

அதி. கஉக—புணர்ச்சிவிதும்பல்

[அஃதாவது, தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சிமிகுதிபற்றித் தலைமகன் பிரிதற் குறிப்பறி வுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கை மிகவினுற் பின்னுந் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.]

கஉஅக. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

[பிரிதற்குறிப்பினுகியாளோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

---

* குறள், கஉஎடு.

(இ - ள்.) உள்ளக் களித்தலும் - நினைந்ததுணையானே களிப்பெய்தலும்; காண மகிழ்தலும் - கண்ட துணையானே மகிழ்வெய்தலும்; கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு - கள்ளுண்டார்க்கில்லை காமமுடையார்க் குண்டு.

களித்தல்: உணர்வழியாதது; மகிழ்தல்: அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டழியல்ல தின்மையிற் 'கள்ளுக்கில்' லென்றுள். 'உண்'டென்பது இறுதி விளக்கு, அப்பெற்றித்தாய காமமுடையயான் புலத்தல் யாண்டைய தென்பதாம். (க)

கஉஅஉ. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.

[இதுவுமது]

(இ - ள்.) காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகவுண்டா மாயின்; தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவரால், தங் காதலரோடு தினையளவு மூடுதல் செய்யாமை வேண்டப்படும்.

'பனைத்துணையு' மென்புழி ஐந்தனுருபு விகாரத்தாற் றொக்கது. ஊடின் வருத்தமிகுமெனப் பிறர்க்குறுதி கூறுவான்போன்று தன் விதுப்புக் கூறியவாறு. (உ)

கஉஅந. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண்.

[இதுவுமது]

(இ - ள்.) பேணாது பெட்பவே செய்யினும் - நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும்; கொண்கனைக் கண் காணாது அமையல - கொண்கனை என் கண்கள் காணாதமை இன்றன்வில்லை.

தன் விதுப்புக் கண்கண்மே லேற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனெடு புலக்குமாறென்னை யென்பதாம். (ங)

கஉஅச. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) தோழி - தோழீ! ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர்செய்த தவற்றைத் தன்னெடு நினைந்தயானவரோ டூடுதற்கண்ணே சென்றேன்; என்னெஞ்சு அது

மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது.

சேறனிகழ்தல் நினைத்த நெஞ்சிற்கு மொத்தலின், 'அது மறந்' தென்றாள். அச்செலவாற் பய னென்னென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறை போகலான், அது முடிந்ததில்லை யென்பதாம். (அ)

கூஅசு. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

[இதுவுமது]

(இ - ள்.) எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல் - முன்னெல்லாங் கண்டிருந்தும் எழுதுங் காலத்து அஞ்சனக்கோலி னியல்பு காணமாட்டாத கண்ணேபோல; கொண்கன் பழி கண்ட விடத்துக் காணேன் - கொண்கனது தவறு காணுதவிடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்துக் காணமாட்டேன்.

'கோல்' ஆகுபெயர். இயல்பு: கருமை. என்னியல்பிதுவாக லின் மேலும் அது முடியாதென்பதாம். (ஆ)

கூஅசு. காணுங்காற் காணேன் றவருய காணாக்கார்
காணேன் றவறல் லவை.

[இதுவுமது]

(இ - ள்.) காணுங்கால் தவருய காணேன் - கொண்கனை யான் காணும்பொழுது அவன் றவருயவற்றைக் காண்கின்றிலேன்; காணாக் கால் தவறல்லவை காணேன் - காணுதபொழுது அவையே யல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு நான் நின்னொடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந் திலே னென்பதாம். (இ)

கூஅஎ. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

[இதுவுமது]

(இ - ள்.) உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல் - தம்மை யீர்த்துக்கொண்டு போத லறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல; பொய்த்தல் அறிந்து புலந்து என் -

புலவி முடிவுபோகாமை யறிந்துவைத்துக் கொண்களேடு புலந்து பெறுவதென் ?

'பாய்பவ' ரென்பது ஆகுபெயர். 'பொய்த்தல்': புரைபடுதல். புலந்தாலும் பயனில்லை யென்பதாம். பொய்த்த லறிந்தே னென்பது பாடமாயின், உய்த்தலறிய ஒடி நீருட்பாய்வார்போல முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடியாமை யறிந்தேன்; இனி அது செயற்பாற் றன்றென வுரைக்க. (எ)

கஉஅஅ. இளித்தக்க வின்னு செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

[தலைமகள் புணர்ச்சிவிதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.]

(இ - ள்.) கள்வ - வஞ்சகா! களித்தார்க்கு இளித்தக்க இன்னுசெயினும் கள்ளற்றே - தன்னையுண்டு களித்தார்க்கு இனி வரத்தக்க இன்னுதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும்; நின் மார்பு - எங்கட்கு நின் மார்பு.

அவ்வின்னுதன நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை யென்றிவை முதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச்செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப் படாநின்ற தென்பதாம். 'கள்வ' வென்றதும் அது நோக்கி. (அ)

கஉஅக. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

[உணர்ப்புவயின்வாரா வூடற்கட் டலைமகன் சொல்லியது.]

(இ - ள்.) காமம் மலரினும் மெல்லிது - காமவின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும்; அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலை யறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர்.

தொட்டதனையானே மணச்செவ்வி யழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின் உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின்கண்ணே யொத்து நுகர்தற்குரியா ரிருவர் அதற்கேற்ற இடனுங் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகர வேண்டுதலின் 'அதன் செவ்விதலைப்படுவார்' சிலரென்றும், அவற்றுள் யாதானுமொன்றனுற் சிறிது வேறுபடினும் வாடுதலின் 'மலரினு

மெல்லி' தென்றுங் கூறினன். குறிப்பொவ்வாமையின் யானது பெறுகின்றிலே னென்பதாம். தலைமகளுடன்றீர்வது பயன். (க)

கஉகo. கண்ணிற் றுனித்தே கலங்கினள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

[இதுவுமது]

(இ - ள்.) கண்ணின் துனித்தே - காதலி முன்னெருஞான்று புல்லல் விதுப்பினுற் சென்ற என்னெடு தன் கண் மாத்திரத்தானூடி; புல்லுதல் என்னிலும் தான்விதுப்புற்றுக் கலங்கினள் - புல்லுதலே என்னினுந் தான் விதும்பலால் அதுதன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனுல் யானித்தன்மையே ஞகவும் விதுப்பின்றி யூடிநிற்கின்ற விவள் அவளல்லள்.

கண்மாத்திரத்தானூடல் சொன்னிகழ்ச்சியின்றி அது சிவந்த தினையேயாதல். அவளாயின் இங்ஙன மூடற்க னீடாளென்பது பயன். (கo)

அதி. கஉo—நெஞ்சொடு புலத்தல்

[அஃதாவது, காரணமுண்டாயவழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.]

கஉகக. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

[தலைமகன்கட் டவறுண்டாயவழியும் புலவிகருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் - அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய் நிற்றல் கண்டுவைத்தும்; நீ எமக்கு ஆகாதது எவன் - நீயெமக்காய் நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது?

அவர்க்காதல்: அவர்கருதியதற் குடம்படுதல். எமக்காகாத தென்றது புலவிக்குடம்படாமையை. ஒரு கருமத்தைத் தாமாக வறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர், நீ யதுவுஞ் செய்கின்றிலே யென்றதாம். (க)

கஉகஉ. உருஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செருஅ ரெனச் சேறியென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) என்னெஞ்சு - என்னெஞ்சே! உறுதி அதவர்க் கண்ட கண்ணும் - மேலும் நம்மாட் டன்புடைய ராகாதவரை உள்ளவா றறிந்தவிடத்தும்; செறுதி அரென அவரைச் சேறி - நாஞ் சென்றால் வெகுளா ரென்பதுபற்றி நீ யவர்மாட்டுச் செல்லாநின்றாய், இப்பெற் றியதுமேலு மோ ரறியாமை யுண்டோ!

'அவரை'யென்பது வேற்றுமை மயக்கம். பழங்கண்ணோட்டம் பற்றி வெகுளாரென்பது கந்தாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோ வென்பதாம். (உ)

கூகஙு. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ* நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

[இதுவுமது]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! நீ பெட்டாங்கு அவர்பின் செலல் - என்மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்; கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்தில்லையென்னு நினைவோ நின் னியல்போ? கூறுவாயாக.

என்னைவிட்டு அவர்மாட்டுச் சேறல் நீ பண்டே பயின்றதென் பாள் 'பெட்டாங்' கென்றும், தா னிதுபொழுது மானமிலளாகலிற் 'கெட்டார்க்' கென்றுங் கூறினாள். 'பின்'னென்பது ஈண்டிடப் பொருட்டு. 'செல'லென்பது ஆகுபெயர். "ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்"† பாயிற்று நின்றொடர் பென்பதாம். (ங)

கூகச. இனியன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

[இதுவுமது]

(இ - ள்.) நெஞ்சே - நெஞ்சே! துனி செய்து மற்றுந் துவ் வாய் - நீ யவரைக் கண்டபொழுதே இன்பநுகரக் கருதுவதல்லது அவர் தவறு நோக்கி முன் புலவியை யுண்டாக்கி அதனை யளவறிந்து பின்னுகரக் கருதாய்; இனி அன்ன நின்னெடு சூழ்வார் யார் - ஆக லான் இனி யப்பெற்றிப்பட்டவற்றை நின்னை டெண்ணுவார் யார்? யானது செய்யேன்.

அப்பெற்றிப்பட்டன புலக்குந் திறங்கள். 'கா'ணென்பது உரை யசை. 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்ப

* பழமொழி - கூச. † கலித்தொகை - உடு.

தாக வெண்ணியிருந்து பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினாள். (சு)

கஉகஞ. பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மருஅ விடும்பைத்தென் னெஞ்சு.

[வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) பெருஅமை அஞ்சும் - காதலரைப் பெருதஞான்று அப்பெருமைக் கஞ்சாநின்றது; பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினை யுட்கொண்டு அதற் கஞ்சாநின்றது; என் நெஞ்சு அருஅ இடும்பைத்து - ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத விடும்பையை யுடைத்தாயிற்று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வாயினேர்கின்ற ளாகலிற் 'பெருமை யஞ்சு' மென்றும், கலவியாராமையின் இன்னுமிவர் பிரிவராயின் யாது செய்து மென்பது நிகழ்தலிற் 'பெறிற் பிரிவஞ்சு' மென்றும், இவ் விரண்டு மல்லது பிறிதின்மையின் எஞ்ஞான்று 'மருஅ விடும்பைத்' தென்றுங் கூறினாள். (இ)

கஉகக. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) என்னெஞ்சு இருந்தது - என்னெஞ்சு ஈண்டிருந்தது; தனியே இருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் றன்னொடு நினைத்தக்கால்; என்னைத் தினிய - அவ்வளவறிந்து என்னைத் தின்பதுபோன்று துன்பஞ் செய்தற்கே.

எம்மாட்டிருந்தது, அன்று அவர் கொடுமைகளை யுட்கொண்டு எனக்காற்றுமை செய்தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன் றென்பதாம். (சு)

கஉகஎ. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு.

[இதுவுமது]

(இ - ள்.) அவர் மறக்கல்லா என் மாணு மடநெஞ்சிற் பட்டு - தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி; நாணும் மறந்தேன் - என்னுயிரினுஞ் சிறந்த நாண்டன்னையும்*மறந்துவிட்டேன்.

* கஎக - ஆம் குறளுரை.

மாணுமை : ஒருநிலையி னில்லாமை. மடமை கண்டவழி நினைந்து காணுதவழி மறக்குந் தவற்றைக், காணுவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண்: எஞ்ஞான்றுங் கூடியொழுகினும் அஞ் ஞான்று கண்டார்போன் றொடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையு 'மறந்தே' னென்றுள். (எ)

கூகூஅ. எள்ளி னிளிவா மென் றெண்ணி யவர்திறம்
முள்ளூ முயிர்க்காத நெஞ்சு.

[இதுவுமது]

(இ - ள்.) உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலையுடைய என்னெஞ்சு ; எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மை யெள்ளிச் சென்றுரென்று நாமு மெள்ளுவேமாயிற் பின் னமக் கிளிவாமென்று கருதி; அவர் திறம் உள்ளும் - அவர் திறத்தினையே நினையாநின்றது.

எள்ளுதல் : வாயின்மறுத்தல். இளிவு : வழிபடாமையானும், பிரிவாற்றுமையானும், நாணும் நிறையு முதலிய விழத்தலானும் உளதாவது. திறம் : வாயினேர்தலும், வருதலும், கூடலு முதலா யின. இளிவிற் கஞ்சுதலானும் இறந்துபட மாட்டாமையானும் கூடக் கருதாநின்ற தென்பதாம். (அ)

கூகூக. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

[உணர்ப்புவயின்வாரா வூடற்கட் டலைமகன் சொல்லியது.

(இ - ள்.) துன்பத்திற்கு - ஒருவருக்குத் துன்பம் வந்துழி, அது நீக்குதற்கு ; தாம் உடைய நெஞ்சம் துணையல்வழி - தாமுரித் தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி ; துணையாவார் யாரே - வேறு துணையாவார் ஒருவருமில்லை.

ஈண்டுத் 'துன்ப'மாவது ஊடலுணர்ப்புவயின் வாராமை. அதற்கு 'நெஞ்சந் துணை' யாகாமையாவது அவளை யன்பிலளென் றொழியாது கூடற்கண்ணே விதும்பல். ஒரு துணையு மின்மையின் இஃதுற்றுவிடுதலே யுள்ளதென்பதாம். (கூ)

கூகூO. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

[இதுவுமது]

(இ - ள்.) தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாமுரித்தாகவுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி ; எதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ ?

பிறளொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே, என்னை வருத்தாநின்றபின் அப் பிறள் புலக்கின்ற தெளிதென்ப தாம். (கo)

அதி. கஉக—புலவி

[அஃதாவது, இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கஉoக. புல்லா தீராப் புலத்தை யவருறு
மல்லனெய் காண்கஞ் சிறிது.

[வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயி னேர்தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.]

(இ - ள்.) அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் - அங்ஙனம் புலந்தாற் காதல ரெய்து மல்லனெயினை யாஞ் சிறிது காணக் கடவேம் ; புல்லாது இராப் புலத்தை - நீ யவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக.

'அல்லனெய்': துன்பத்தைச் செய்யுங் காமநோய். 'சிறி'தென் றுள், புலவியை நீளவிட லாகா தென்பது பற்றி. 'புலத்தை' யென் புழி ஐகாரம் "கடம்பூண் டொருகா னீவந்தை"* என்புழிப்போல முன்னிலவினை விகுதி. புலத்தி யென்பதூஉம் பாடம். புலவிக் குறிப்புக் கண்டு அவள்வழியளாய் நின்று நாமுற்ற வருத்தம் அவருஞ் சிறிதுற்றறிதல் வேண்டுமென நகையாடி நோவித்தவாறு. (க)

கஉoஉ. உப்பமைத் தற்றுற் புலவி யதுசிறிது
மீக்கற்று னீள விடல்.

[புலவியொழிந்து வாயினேரும்வகை அவள் சொல்லியது.]

(இ - ள்.) புலவி உப்பு அமைந்தற்று - புலவி கலவி இன்பஞ் செயற்கு வேண்டுமளவிற்றுதல், உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவைய

* கலித்தொகை - சுங.

வாக்கற்கு வேண்டுமளவிற்றுதல் போலும் ; சிறிது நீளவிடல் அது மிக்கற்று - இனி, அதனே யவ்வளவிற் சிறிது மிக விடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற்போலும்.

'நீளவிடல்' : அளவறிந்துணராது கலவிமே லெழுந்த குறிப் பழுங்குமளவுஞ்செய்தல். 'சிறிது நீளவிட' லாகாதென்றுள், நேர்விக் கின்றுளாகலின். உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவையின்றுஞும் போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பமின்று மென்றமையின் இது பண்புவமை. (உ)

கஙூஙஞ. அலந்தாரை யல்லனெய் செய்தற்றுற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

[பரத்தையரிடத்துநின்றும் வந்த தலைமகனெடு
தலைமகள் புலந்து சொல்லியது.]

(இ - ள்.) தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் - தம்மைப் பெரிது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர் சேறல் ; அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று - பண்டே துன்பமுற் றழிந் தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும்.

பிறர்பாற் சேறலின் நும்மைப் பெரிது புலந்தூடி யிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவராற்று ரென்பதாம். (கூ)

கஙூசு. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

[இதுவுமது]

(இ - ள்.) ஊடியவரை உணராமை - நும்மோடூடிய பரத்தை யரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல் ; வாடிய வள்ளி முதல் அரிந்தற்று - பண்டே நீர்பெரிது வாடிய கொடியை அடியிலே யறுத்தாற்போலும்.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம் புதல்வரைக்கண் டாற்றி யிருக்கற்பாலமாயாம் நும்மோடூடுதற்குரியமல்லம் ; அன்மையின் எம்மை யுணர்த்தல் வேண்டா ; உரியரா யூடிய பரத்தையரையே யுணர்த்தல் வேண்டுவது ; அதனால், ஆண்டுச் சென்மி னென்ப தாம். (ச)

கஙூஎ. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணீ ரகத்து.

[தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் றன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் - நற்குணங்களாற் றகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது; பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை - தம் பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிக ழும் புலவி மிகுதியன்றே.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான், 'நலத்தகை நல்லவர்க்கு' மென்றான். அழகு இன்பப் பயனைத் தலைப்படுதல். தானுகர்ந்த வின்பத்திற் கேது வாகிய புலவியை வியந்து கூறியவாறு. (இ)

கூ0சு. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

[இதுவுமது]

(இ - ள்.) துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலா மாகிய துனியும், இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின்; காமம் கனியும் கருக்காயும் அற்று - காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங் காயும்போலும்.

மிகமுதிர்ந் திறுமெல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவு மினிமை செய்யா தாதலின் துனியில்லையாயிற் 'கனியற்' றென்றும், கட்டிளை மைத்தாய காய் நுகருஞ் செவ்வித்தன்றுகலிற் புலவி யில்லையாயிற் 'கருக்காயற்' றென்றுங் கூறினான். இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு. (சு)

கூ0எ. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

[இதுவுமது]

(இ - ள்.) புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்று கருதலான்; ஊடலின் ஓர் துன்பம் உண்டு - இன்பத்திற் கின்றியமையாத ஊட லின்கண்ணேயும் ஒருதுன்ப நிகழும்.

'என்' றென்னு மெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக் கப்பட்டது. 'சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'கொல்' லென்பதனை நீடுவதென்பதனுடனுங் கூட்டுக. 'ஆங்'கென்பது அசைநிலை. ஊடல் கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு. (எ

கஉ0அ. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.

[உணர்ப்புவயின்வாராவூடற்கட் டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.]

(இ - ள்.) நொந்தாரென்று அஃது அறியும் காதலர் இல்லா வழி - இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினையறியு மன்புடையாரைப் பெறுவழி; நோதல் மற்று எவன் - ஒருவர் நோகின்றதனாற் பயனென்?

அறிதல்: ஈண் டுடலை யினிதுணர்தல். 'மற்று' வினைமாற் றின்கண் வந்தது. இவள் நங் காதலியல்லள்; அன்மையின் இந்நோ வறியாள்; அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லையெனத் தன்னாற்றுமை யுணர்த்தியவாறு. (அ)

கஉ0கூ. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

[இதுவுமது]

(இ - ள்.) நீரும் நிழலதே இனிது - உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே இனிதாவது, வெயிலின்கண்ணது ஆகாது; புலவியும் வீழுநர்கண்ணே இனிது - அதுபோலக் கலவிக் கின்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது வேறு யன்பிலார்கண் ஆகாது.

நிழற்கணிருந்த நீர் குளிர்ச்சியிக்குத் தாகந்தணித்தலின் 'இனி' தாயிற்று. வீழுநர் ஆற்றுமைக்கு நோதலுங் கூடுதற்கண் வேட்கையு முடைய ராவார். இவள் நம் மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப் புலவிதானு மின்னுதாகாகின்ற தென்பதாம். (கூ)

கஉகo. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

[இதுவுமது]

(இ - ள்.) ஊடல் உணங்க - தானூடற்கண்ணே மெலியா நிற்கவும்; விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா - விட்டிருக்கவல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முய றற்கேது தன்னவாவே, பிறிதில்லை.

அன்பு மருளு மில்லாதாரை உடையரென்றும் அவரோடியாங் கூடுவமென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றூர் செயலாகலின்,

'கூடுவேமென்ப தவா' வென்றான். காரியங் காரணமாக வுபசரிக் கப்பட்டது. இக்கூட்டம் முடியாதென்பதாம். (கo)

அதி. கஙஉ—புலவி நுணுக்கம்

[அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது, தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத் தற்காரணமில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணிய தோர் காரணமுளதாக வுட்கொண்டு அதனை யவன்மே லேற்றி அவள் புலத்தல். காரணத்தி னுணுக்கம் காரியத்தின்மே னின்றது. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கஙக. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நுண்ணேன் பரத்தநின் மார்பு.

[உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தாளுகத் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) பரத்த - பரத்தமையுடையாய்! பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் - நின்னைப் பெண்ணியல்பினை யுடையார் யாவருந் தங் கண்ணுற் பொதுவாகவுண்பர்; நின் மார்பு நுண்ணேன் - அதனால் அவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந் தேன்.

கற்பு நாண் மூதலிய நற்குணங்க ளின்மையிற் பரத்தையர்க் குள்ளது பெண்ணியற்கை மாத்திரமே யென்னுங் கருத்தாற் 'பெண் ணியலா' ரென்றாள். பொதுவாகவுண்டல்: தஞ் சேரிச் செலவின் முறையானன்றி ஒருகாலத் தொருங்கு நோக்குதல்; அதுவுமோர் குற்றம். தா நோக்கி யின்புற்றவாறே அவருநோக்கி யின்புறுவ ரென ஆசங்கித்து அவர்பாற் பொருமை யெய்துதலின் நுணுக்க மாயிற்று. (க)

கஙக உ. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

[தலைமகனீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.]

(இ - ள்.) ஊடி இருந்தேமாத் தும்மினார் - யாந் தம்மோ டூடி யுரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினார்; யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து - அது நீங்கித் தம்மை நீடுவாழ்கென் றுரையாடுவேமாகக் கருதி.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற் றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பா னிகழ்ந்ததாகக் கோடலின் நுணுக்கமாயிற்று. (உ)

கஙகங. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

[தலைமகள் புலவிக்குறிப்பினைக்கண்டு நீவிர்கூடியொழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

(இ - ள்.) கோட்டுப்பூச் சூடினும் - யான் கோடுதலைச் செய்யுமாலையைச் சூடினேனாயினும்; ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மாற் காதலிக்கப்பட்டா ளொருத்திக்கு இப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ?

கோடென்பது முதனிலைத் தொழிற்பெயர்; பூ ஆகுபெயர்; வினையமாகச் சூடினுமென்பதாம்; "கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்"* என்றார் பிறரும். இனி அம் மருதநிலத்துப் பூவன்றி வேற்றுநிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினே னாயினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப்பூவணி காட்டல் வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினு மமையும். (ங)

கஙகச. யாரினுங் காதல மென்றோழி யூடினள்
யாரினும் யாரினு மென்று.

[இதுவுமது]

(இ - ள்.) யாரினும் காதலம் என்றோழி - காமநுகர்தற்குரிய விருவாயினுள் யாவரினும் யாம் மிக்க காதலையுடையே மென்பது கருதி யாரினுங் காதலமென்றோழுக; யாரினும் யாரினும் என்று ஊடினள் - நின்றோழி அது கருதாது, என்னுற் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கட் காதலுடையே னென்றோழுகக் கருதி, அம் மகளிர் யாரினும் என்கட் காதலுடைய ராயினீ ரென்று சொல்லிப் புலந்தாள்.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யானன்புமிகுதியாற் சொல்லியதனைக் கருத்து வேறுபடக் கொண்ட தல்லது பிறிதுகாரண மில்லையென்பதாம். (ச)

கஙகஙி. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றோழி
கண்ணிறை நீர்கொண் டனள்.

[இதுவுமது]

* புறநானூறு - உஎடு.

(இ - ள்.) இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனை - காதன் மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொன்னேனாக; கண் நிறை நீர் கொண்டனள் - அதனான் ஏனை மறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனாகக் கருதி, அவள் தன் கண்ணிறைத்த நீரினைக் கொண்டாள்.

வெளிப்படு சொல்லைக் குறிப்புச் சொல்லாகக் கொள்கின்றதல்லது என்பாற் றவறில்லை யென்பதாம். (இ)

கஙகசு. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

[இதுவுமது]

(இ - ள்.) உள்ளினேன் என்றேன் - பிரிந்தகாலத்து நின்னை யிடையின்றி நினைந்தே னென்னுங் கருத்தால் யானுள்ளினே னென்றேன்; மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக் கனள் - என, அதனை ஒருகான் மறந்து பின்னினைந்தே னென்றதாகக் கருதி, என்னை யிடையே மறந்தீரென்று சொல்லி முன் புல்லுதற்கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற்கமைந்தாள்.

'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்தி வகையான் மறத்தலை யுட்கொண்டு புலந்தாளென்பதாம். (சு)

கஙகள. வழுத்தினு டும்மினே னாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

[இதுவுமது]

(இ - ள்.) தும்மினேனாக வழுத்தினுள் - கூடியிருக்கின்றவள் யான் றும்மினேனாகத் தன்னியற்கைபற்றி வாழ்த்தினுள்; அழித்து யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள் - அங்ஙனம் வாழ்த்தியதானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள்.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், 'அழித்' தென்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மலுறன்று மென்பது மகளிர் வழக்கு. இவ்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம். (எ)

கஙகஅ. தும்முச் செறுப்ப வழுதா னுமருள்ள
லெம்மை மறைத்தீரோ வென்று.

[இதுவுமது]

(இ - ள்.) தும்மூச் செறுப்ப - எனக்குத் தும்மறேன்றியவழி (யாருள்ளித்" தும்மினீரென்று புலத்தலே யஞ்சி, அதனை யானடக்கி னேன்) அங்ஙன மடக்கவும்; நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் - நுமர் நும்மை நினைத்தலே எம்மை மறைக்க லுற்றீரோவென்று சொல்லிப் புலந்தழுதாள்.

'தும்மூ' வென்பது முதனிலைத் தொழிற்பெயர். 'செறுப்ப' வென்புழி இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. 'எம்மை' யென்பது தும்மோடியாது மியைபில்லாத வெம்மை யென்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகு வென்ப. தும்மினுங் குற்றம் ஒழியினுங் குற்றமாயக்காற் செயற் பாலதியா தென்பதாம். (அ)

கஉகக. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரின்னீர ராகுதி ரென்று.

[இதுவுமது]

(இ - ள்.) தன்னை உணர்த்தினுங் காயும் - இவ்வாற்றானுடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும்; பிறர்க் கும் நீர் இங்நீரர் ஆகுதிர் என்று - பிறமகளிர்க்கும் நீர் அவரூடியவழி இவ்வாறே பணிந்துணர்த்து நீர்மையை யுடையீ ராகுதிரென்று சொல்லி.

இவள் தெளிவித்த வழியுந் தெளியாளென்பதுபற்றி என்மே லேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன்; பணிய அதுதானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது; இனி, யிவண்மாட்டுச் செய்யத்தகுவ தியாதென்பதாம். (க)

கஉஉ0. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

[இதுவுமது]

(இ - ள்.) நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என் சொற் களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றை யொழிந் திருந்து தன்னவயவங்கள தொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாநிற்கும்; அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - என் னவயவமனைத்தும் நோக்கினீர் அவற்ற தொப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி.

யான் எல்லா வவயவங்களானும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்றுலொருவராகப் பலரையு நினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமி னென்னுங் கருத்தால், 'அனைத்து நோக்கினீர் யாருள்ளி' யென்றுள். வாளாவிருத்தலும் குற்றமாயிற் றென்பதாம். (கo)

அதி. கஙந—ஊடலுவகை

[அஃதாவது, அப்பெற்றித்தாய ஊடலாற் றமக்குக் கூடலின்பஞ் சிறந்துழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமக னுவத்தலுமாம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.]

கஙஉக. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

[தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙன நீ புலக்கின்றதென்னை யென்றுட்கு அவள் சொல்லியது.]

(இ - ள்.) அவர்க்குத் தவறு இல்லையாயினும் - அவர்மாட்டுத் தவறில்லையாயினும்; அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது - நமக் கவர் தலையளி செய்கின்றவாறு அவரோ டூடுதலை விலக்க வற்றாகின்றது.

'அவர்க்'கென்பது வேற்றுமை மயக்கம். அளவிறந்த வின்பத்தராகலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாரு மெய்துவரெனக் கருதி அது பொருமையான் ஊடனிகழாநின்ற தென்பதாம்.

கஙஉஉ. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

[புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து புலவியான் வருந்துவ தென்னையென்றுட்கு அவள் சொல்லியது.]

(இ - ள்.) ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊடலேதுவாக நங்கட் டோன்றுகின்ற சிறிய துனிதன்னுல்; நல்லளி வாடினும் பாடு பெறும் - காதலர் செய்யு நல்ல தலையளி வாடுமாயினும், பெருமையெய்தும்.

தவறின்றி நிகழ்கின்ற வூடல் கடிதினீங்கலின் அத்துன்பமு கில்லாதென்பாள் 'சிறுதுனி' யென்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனுன் நல்லளி வாடாதென்பாள் 'வாடினு' மென்றும், பின்னே

பேரின்பம் பயக்குமென்பாள் 'பாடுபெறு' மென்றுங் கூறினாள். அது வருத்தமெனப்படா தென்பதாம். (உ)

கஉஉ. புலத்தலிற் புத்தேணு டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து.

[இதுவுமது]

(இ - ள்.) நிலத்தோடு நீர் இயைந்தன்ன ரகத்துப் புலத்தலின் - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல; புத்தேள் நாடு உண்டோ - நமக்கின்பந் தருவ தொரு புத்தேளுலக முண்டோ? இல்லை.

நீர் தானின்ற நிலத்தியல்பிற்ருமாறு போலக் காதலருந் தாங் கூடிய மகளிரியல்பின ராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள் 'நிலத்தொடு நீரியைந்தன்ன ரகத்' தென்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப் புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றதென்பாள் 'புலத்தலிற் புத்தேணு டுண்டோ' வென்றுங் கூறினாள். உவமம் பயன்பற்றி வந்தது. (ங)

கஉஊ. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

[அப்புலவி இனி யாதானீங்குமென்றூட்குச் சொல்லியது.]

(இ - ள்.) புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக்கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம்; என் உள்ளம் உடைக்கும் படை - அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம்.

'புலவியு' ளென்னு மேழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ள மூடைக்கும் படைக்கலமென்றது வணக்கத்தையும் பணி மொழியையும். படைக்கலமென்றுள், அவற்றுன் அப்புலவியுள்ள மழிதலின், புலவி நீங்குந்திறங் கூறியவாறு. (ச)

கஉஎ. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து.

[தலைமகளை யூடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனுய்த் தன்னுள்ளே சொல்லியது.]

(இ-ள்.) தவறு இலராயினும் தாம் வீழ்வார் பென்றோள் அகறலின் - ஆடவர் தங்கட் டவறிலராயினும் உடையார்போல ஊட்டப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக்

கூடப்பெறுத வெல்லைக்கண்; ஆங்கு ஒன்று உடைத்து - அவர்க்கு அப்பெற்றியதோ ரின்பம் பயத்தலுடைத்து.

உடையராயக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமு மெய்துவ ராகலின் அது மிக நன்று; மற்றையிலராயக்காலும் வரு மின்பத்தை யிகழ்ந்ததில்லையென்னுங் கருத்தால், 'தவறிலராயினு' 'மாங்கொன்றுடைத்' தென்றான். ஊடலினுய வின்பம் அளவிறத் தலிற் கூறற்கரி தென்பான், அப்பெற்றியதொன் றென்றான். தவ றின்றி யூடியதூஉம் எனக்கின்பமாயிற் றென்பதாம். (நி)

கஉஉசு. உணலினு முண்ட தறலினிது* காமம்
புணர்தலி னூட லினிது.

[இதுவுமது]

(இ - ள்.) உணவினும் உண்டது அறல் இனிது - உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந் தரும்; காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேற்புணர் தலினும் முன்னைத் தவறுபற்றி யூடுதல் இன்பந் தரும்.

காமத்திற்கென்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தாற் றொக்கன. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்து மாம்; அதுபோல, அகன்று கூடும்வழி ஆராதுமாய்ப் பேரின்பத்தது மாமெனத் தன்னனுபவம்பற்றிக் கூறியவாறு. (சு)

கஉஉஎ. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

[இதுவுமது]

(இ - ள்.) ஊடலின் தோற்றவர் வென்றார் - காமநுகர்தற் குரிய இருவருள் ஊடலின்கட் டோற்றவர் வென்றாராவர்; அது கூடலிற் காணப்படும் - அஃதப்பொழுதறியப்படாதாயினும், பின் னைப் புணர்ச்சியின்கண் அவரா லறியப்படும்.

'தோற்றவர்': எதிர்த லாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக் கட் பேரின்ப மெய்தலின் 'வென்றா' ராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. யானதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம் பெற்றே னென்பதாம். (எ)

கஉஉஅ. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

[இதுவுமது]

* குறள் . கூசஉ.

(இ - ள்.) நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு - இதுபொழுது இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்க ணுளதாய இனிமையை; ஊடிப் பெறுகுவங் கொல்லோ - இன்னுமொருகால் இவளூடி யாம் பெறவல்லேமோ?

கலவியது விசேடம்பற்றி 'நுதல் வெயர்ப்ப' வென்றான். இனிமை: கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறிதலாலுய வின்பம்.* இனி அப் பேறு கூடாதெனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு. (அ)

கஉஉக. ஊடுக மன்னே வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னே விரா.

[இதுவுமது]

(இ - ள்.) ஒளியிழை ஊடுக மன் - ஒளியிழையினையுடையாள் இன்னுமெம்மோ டூடுவாளாக, யாம் இரப்ப இரா நீடுக மன் - அங் ஙனம் அவளூடிநிற்றற்கும் அதனை யுணர்த்துதற் பொருட்டு யாமிரந்து நிற்றற்கும் காலம்பெறும்வகை இவ்விரவு விடியாது நீட் டித்தல் வேண்டுக.

'ஊடுக' 'நீடுக' வென்பன வேண்டிக்கோடற் பொருள. 'மன்' னிரண்டும் ஆக்கத்தின் கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலே யமையு மென்பதாம். (கூ)

கஉஉ0. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

[இதுவுமது]

(இ - ள்.) காமத்திற்கு இன்பம் ஊடுதல் - காமநுகர்ச்சிக் கின்ப மாவது அதனை நுகர்தற்குரியாராவார் ஆராமைபற்றித் தம்மூடுதல்; அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின் - அவ்வூடுதற் கின்ப மாவது, அதனை யளவறிந்து நீங்கித் தம்மூட் கூடி முயங்குதல் கூடு மாயின், அம் முயக்கம்.

'கூடுதல்': ஒத்தவளவினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்குமிடையாகிய வளவறிந்து நீங்குத லரிதென்பதுபற்றிக் 'கூடி முயங்கப்பெறி' னென்றான். அவ்விரண் டின்பமும் யான் பெற்றே னென்பதாம். (கo)

* குறள் . ககoக.

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்புப் புலவி யென நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றுமை யுள்ளும், ஆற்றுமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறையழிதல வீறுயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன்முதற் புணர்ச்சி விதும்பல வீறுயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊடலுவகை யீறுயவற்றுள்ளுங் கண்டு கொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்திலுலைய நீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாரா லெனின், அஃது, அறம் பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும், முனிவராணையான் ஒருகாலத் தோற்றுற்றத் துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டொழிக்கப்பட்ட தென்க.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருவள்ளுவர் பரிமேலழகருரை முற்றுப்பெற்றது.

உரைச்சிறப்புப் பாயிரம்

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்த்தேர் பரிமே லழகனெனு
மன்னு முயர்நாமன் வந்து.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
றெரித்த வுரையாமோ தெளி.

உ

திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய

திருவள்ளுவமாலை

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—இருக்க
உருத்திர சன்ம ரெனவுரைத்து வானில்
ஒருக்கஓ வென்றதோர் சொல்.

(பொ - ரை.) அருட்செல்வத்தையும் அதற்குத்தக்க தெய்வத் தன்மையையுமுடைய திருவள்ளுவரோடு, அவரிருத்தற்குத் தனது உருவத்திலுலே தக்க நல்ல சங்கப்பலகையிடத்து உருத்திரசன்மர் ஒருவரே ஒப்பவேறி யிருக்கவென்று கூறி, விண்ணிலிருந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமைசெய்யும்படி ஒரு வாக்கியம் ஓவென்று இரைந்தெழுந்தது. (க)

நாமகள்

நாடா முதல்நான் மறைநான் முகன்நாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்று யிலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(பொ - ரை.) பகைவரைப் புறங்கொடுக்கச்செய்து இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்காநின்ற இலைபோலும் வேற்படையையுடைய பாண்டிய மன்னனே! உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்து உய்யும்வழியை நாடி, படைப்புக்காலத்திலே அயனது நாவிலிருந்து இருக்கு முதலாகிய நான்கு வேதங்களையும் பாடி, நடுவான காலத்திலே பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்; அதற்குப் பிற்பட்ட இக்காலத்திலே என் வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி வள்ளுவன் வாயின்கண்ண தாயிற்று. (உ)

இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(பொ - ரை.) புலவர்க்கரசனுகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது, எக்காலத்துந் தன்னழகுகெடாது நெடுங்காலங் கழியினும் நிலைபெற்று மலர்ந்து தேனைச்சொரிகின்ற குணமுடைய தாய் விளங்குமாதலால், குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது கடவுட்டன்மை பொருந்திய உயர்வாகிய மலர் போலும். (கூ)

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை மும்பொருளா நான்முகத்தோன்
றன்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(பொ - ரை.) நான்முகன் தான் தன்னுரு மறைந்து திருவள்ளுவனுகத்தோன்றி நான்குவேதங்களி னுண்மைப்பொருளை அறம் பொருள் இன்ப மென்னும் மும்பாற் பொருளாகத் தமிழிற் றந்து கூறிய திருக்குறளாய திருமுறையை (என்) தலை வணங்குக, வாய் துதிக்க, நல்ல மனம் தியானிக்க, காது கேட்க. (சு)

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பா விரி.

(பொ - ரை.) மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம் பொருந்திய நாட்டையுடைய மன்னனே ! திருவள்ளுவரால் அருளப்பட்ட குறள் வெண்பா மிகப்பெரிய பொருளைத் தன்னுட்கொண்டு காட்டுதல், தினையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்க ணுள்ள பனிநீர் உயர்ந்த பனையினளவான அதன் சாயையைத் தன் னுட்கொண்டு காட்டுங் குணம்போலுங் குணத்தையுடைத்து. (டு)

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுவதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(பொ - ரை.) திருமாலுங் குறளாய்ப் பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடிகளால் உலகமனைத்தையும் விரும்பி அளந்தான்; மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் தம்மினின்றுந் தோன்றி அந்நிலை நிற்கின்ற வெண்பாக்குறளின் இரண்டு சிறிய அடிகளால் அவ்வுலகமனைத்தினுமுள்ளோரால் நினைக்கப்பட்டவற்றை யெல்லாம் ஆராய்ந்து அளந்தார். (கூ)

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு அறமுதலா அந்நான்கும்—ஏனைருக்
கூழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று.

(பொ - ரை.) தானே அனைத்தையும் அறிந்து, தண்ணிய தமிழின்கண் குறள்வெண்பாக்களால் விட்டு நீங்குதல்கூடாத அறமுதலாகிய அந்நான்கு பொருள்களையும் அவற்றை யறியாதவர்களுக்கு அவர் எளிதினறிய முறையாற் சொல்லியருளிய திருவள்ளுவருக்கும், ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்கும், இவ்வுலகம் எதிர்நன்றியாது செய்யும்? (ஒன்றும் இல்லை) அவரும் அதுவும் வாழ்க. (எ)

மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(பொ - ரை.) அறமுதலாகச் சொல்லப்பட்ட நான்கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனே மறந்தாயினும் ஒரு மனிதனாக உட்கொண்டு வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவனாவன்; அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார். (அ)

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

(பொ - ரை.) அறுவகை மதத்தோரும் ஒரு மதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றே யென்று நாட்டுவராயின், மற்றொருமதத்தார் தம் நூலிலே அதனை மறுத்து அவை வேறுமென்று நாட்டுவர்; அப்படி வேறென்று நாட்டின், பின்னொரு மதத்தார் அதனை அன்றென்று மறுப்பர்; (ஆதலால், மதநூல்களெல்லாம் இவ்வாறு முரண்படுகின்றன;) திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட குறளே நன்றென்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பகுதியோரும் உடன்படுவர். (கூ)

சீத்தலைச்சாத்தனார்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் ரூரன்ரே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

(பொ - ரை.) பாக்களின் முறைதெரிதற்கிடனாகிய திருவள்ளுவர்தம் திருக்குறளானது, கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற மூன்றுமலைகளையும், குடநாடு புனநாடு தென்னாடு எனப்படுகின்ற மூன்று நாடுகளையும், பொருநை காவிரி வைகை எனப்படுகின்ற மூன்று ஆறுகளையும், கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற மூன்று ஊர்களையும், மங்கலமுரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப்படுகின்ற மூன்று முரசுகளையும், இயல் இசை நாடகம் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும், வில்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும், கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற மூன்று குதிரைகளையும், தாம் முறையேயுடைய சேர சோழ பாண்டியர் எனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின்மேலுங் கொள்ளப்பட்ட மாலையன்றே? (க0)

மருத்துவன்நல்லோதரனார்

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி

மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

(பொ - ரை.) தன் பகையென வெகுண்டு மலையைக் குத்து கின்ற பெரிய களிறுபோலுள்ள அரசனே, சீந்திநீர்ச் சருக்கரை யையும் சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனொடு கலந்து மோந்தபின் அதனால் தலைக்குத்துடையோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லை யாகும்; திருவள்ளுவர் அருளிய திருக்குறளினுலே சீத்தலைச்சாத்த னுர்க்குத் தலைக்குத்து இல்லையாயிற்று. (ஙக)

நாகன்றேவனுர்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பா லொருபாவை ஆய்பவோ வள்ளுவனுர்
முப்பான் மொழிமூழ்கு வார்.

(பொ - ரை.) காளத்தொடு பொருந்திய தாமரைமலர்களை யுடைய ஒருகுளத்து நீரின்கண்ணே மூழ்குவோர் வேறு தண்ணீரை விரும்பாதொழிதல் வியப்பைச் செய்வதன்று; திருவள்ளுவரது முப் பால்களையுடைய நூலின்கண்ணே தோய்பவர் தாம் வீணுக அப்பால் ஒருநூலை விரும்புவரோ? (விரும்பார்;) ஆகலின், இதுவே வியப் பைச் செய்வது. (கஉ)

அரிசில்கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(பொ - ரை.) வேதத்திலே பலவகையாகப் பரவிக்கிடக்கும் எல்லாப்பொருள்களையும் இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு வேறுகப் பிரித்து, அது அது தனது தனது வகையோடு சேரும் படி சுருங்கிய சொல்லால் பொருள்விளங்க விரிவாகச் சொல்லுதல் வல்லார் வள்ளுவரல்லது ஒருவருமில்லை. (கஙு)

பொன்முடியார்

கானின்ற தொங்கலாய்! காசிபனுர் தந்ததுமுன்
கூனின் றளந்த குறளென்ப—நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனுர்
தானின் றளந்த குறள்.

(பொ - ரை.) மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டிய மன்னனே! முன் காசிபராலே தரப்பட்ட குறளை, மண்ணின் கண்ணே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர். தாம் இங்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்பட்ட குறள், நூலின் முறையோடு கூடி விண்ணின்கண்ணே நின்றும் மண்ணின்கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. (கச)

கோதமனார்

ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா-ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர் வின்று.

(பொ - ரை.) மறையோர்கள் நான்கு வேதங்களையும் வாய்ப் பாடமாகக் காப்பாற்றி ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஒதுவராகலின் அவற்றின் வலிமை குறையுமென்று ஏட்டின்கண் எழுதார்; திருவள்ளுவரது திருக்குறளை ஏட்டின்க ணெழுதி வைத்து வலியுடையவரும் வலியில்லாரும் ஓதினாலும் வலிமை குறைதலில்லை. (கடி)

நத்தத்தனார்

ஆயிரத்து மூந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(பொ - ரை.) பாயிரநான் கதிகாரங்களோடு சேர்ந்து தொகை யாகிய அரிய ஆயிரத்து மூந்நூற்றுமுப்பது குறள் வெண்பாக்களையும் ஓதியுணர்ந்த பின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டறிதற்கு நூலுளவோ? (இல்லை); நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து வந்துகேட்க வீற்றிருக்கலாம். (கசு)

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினு மில்.

(பொ - ரை.) திருவள்ளுவரது திருக்குறளின் மேற்பட்ட நூலொன்று உளதென்று சொல்லவல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை; (ஆதலால்) நாம் இந்நூலைக் குறித்துச் செயக்கடவன, நாம் இதன் பொருளைச் சிந்தித்துக்கொள்ளுதலும்; சிந்தித்துப் பிறருக்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அல்லவா ? (கள)

ஆசிரியர் நல்லந்துவனார்

சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில்.

(பொ - ரை.) அறிவுடையோராற் சொல்லப்பட்ட பலநூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றிவைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம் தன்னிடத்தே தோன்றும்படி திருக்குறளைச் சொல்லிய திருவள்ளுவரை யொப்பார் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை. (கஅ)

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் ருமாண்ட பாடலினான்
முப்பாலி னுற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(பொ - ரை.) எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப் பொருந்திய வேலையுடைய பாண்டியன் மனமகிழ, சொல்லப்பட்ட பொருள் வழுவாமல் முதன்மையுடைய பாவாகிய குறள்வெண்பாக்களாலே தாம் மாட்சிபெற்ற பாடற்ருழிலினாலே மூன்று பால்களிலே அதமுதலிய நான்கு பகுதிப்பொருளையும் அருளியவர் கடவுட்டன்மையையுடைய திருவள்ளுவநாயனார். (கக)

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்ருன்றாம்—கூடுபொருள்
எள்ளரி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(பொ - சை.) திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை, பாயிரம் நான்கதிகாரத்தையுடைத்து, அறம் மூப்பத்துமூன் றதிகாரத்தையுடைத்து, ஊழ் ஓரதிகாரத்தையுடைத்து, பொருள் எழுபததிகாரத்தையுடைத்து, காமம் இருபத்தைந் ததிகாரத்தையுடைத்து. (உ0)

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி உபதேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செங்காப்
போதார் புலற்கூடற் கக்கு.

(பொ - சை.) வடமதுரைக்கு அப்பக்கத்தைக் குறித்துச் சென் றேறுகிய உமாதேவியினது தோளைமணந்த கடவுளே ஆதாரமென்று சொல்லுவர்; நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு இப்பக்கம் மாதா நுபங்கி யெனப்படுகின்ற குற்றமற்ற புலமையாகிய தேனைச் சொரி கின்ற செவ்விய நாவாகிய மலரையுடையவரை (வள்ளுவரை) ஆதார மாகக் கூறுவர்.

உபதேசி நப்பின்னை யென்றும், அவள் தோள் மணந்தான் கண்ணபிரான் என்றும், உத்தரமாமதுரை அவன் அவதரித்த வட மதுரையென்றும், மாதாநுபங்கி செருக்கொழிதலுடையான் என்றும் பொருள் கூறுவர். (உக)

தொடித்தலைவிழுத்தண்டினர்

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

(பொ - சை.) பாயிரம், இல்லறம், துறவறம், ஊழென அறப் பாலி னுட்பிரிவுகள் நான்கும்; அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபென அறியப்பட்ட பொருட்பாலி னுட்பிரிவுகள் ஏழும்; ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று அவ்விருபாற்கூற்றெனக் காமத் துப் பாலி னுட்பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து பெறுதற்கரிய அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற நான்கு பொருளையும் சொல்லிய பெருநாவலரே அவற்றுளடங்காது ஒழிந்த பொருள் உள தாயின், அதனை நன்முக அறியவல்லவர் போலும்! (உஉ)

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனு
இதற்குரிய ரல்லாதா ரில்.

(பொ - ரை.) ஒருவராலே செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும், திருவள்ளுவரால் அருளப்பட்ட, தன் வழியிலொழுகுவோர்க்குப் பயன்விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருளொன்றே; ஆராயுங்கால் செய்யப்படாத அவ்வேதமோதுதற்குரியவர் அந்தணரே; பொய்படாத இத்திருக்குறளோதுதற்கு உரியவ ரல்லாதார் உலகத்தி லில்லை. (உக)

மாங்குடிமருதனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(பொ - ரை.) திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளின் மாட்சியைச் சொல்லின், அஃது ஓதப்படுவதற்கு எளிய சொற்களை யுடையதாகியும் அறியப்படுதற்கு அரிய பொருள்களை யுடையதாகியும் வேதமெனப்படுகின்ற பொருளாகியும் அவ்வேதத்தின் மிக விளங்கி, குற்றமற்றோர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந் தோறும் அவர்களுடைய மனத்தைக் கலைக்கும். (உச)

எழிச்சலூர் மலாடனார்

பாயிர நான்கில் லறமிரு பான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—ஆய
அறத்துப்பா லல்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
நிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(பொ - ரை.) திருவள்ளுவ நாயனார் அவ்வேதத்தின் கருத்துக்களை யாராய்ந்து, தம்மாலே செய்யப்பட்ட நூலினது நிறத்திற்குத் தக்க நன்மையுடைமையால் இவையே உரியவை யென்று தெரிந்து, அறத்துப்பாலைப் பாயிரம் நான்கதிகாரமும், இல்லறவியல் இருபததி

காரமும், துறவறவியல் பதின்மூன் றதிகாரமும், ஊழ் ஓரதிகாரமு மாக, நால்வகையுடைத்தாகக் கூறினர். (உடு)

போக்கியார்

அரசிய லமையந்து அமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றெண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

(பொ - ரை.) எண்ணப்பட்ட பொருட்பால் அரசியல் இருபத் தைந்ததிகாரமும் அமைச்சியல் பத்ததிகாரமும் அரணியல் இரண்டதி காரமும் பொருளியல் ஓரதிகாரமும் படையியல் இரண்டதிகாரமும் நட்பியல் பதினேழதிகாரமும் ஒழிபியல் பதின்மூன்றதிகாரமுமாகிய இவ்வியல்களேழுடைத்து. (உசு)

மோசி கீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

(பொ - ரை.) பெயர்பெற்ற திருவள்ளுவர் ஆண்பாற்கூற்று ஏழதிகாரமும், பெண்பாற்கூற்றுப் பன்னிரண்டதிகாரமும், ஒரு வரையொருவர் அடுத்து அன்பைப் பூணுதற்பகுதியுடைய அவ்விரு பாற்கூற்று ஆறதிகாரமுமாக, மாட்சியான காமத்துப்பாலி னியல் கள் மூன்றுக நன்கு கூறினர். (உஎ)

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெனு
அந்தா மரைமே லயன்.

(பொ - ரை.) அழகிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கும் நான் முகக் கடவுள் தான் திருவள்ளுவனெனு, அதிகாரம் நூற்றுமூப்பத்து மூன்றுக, வடமொழியிலிருந்த மெய்யாகிய வேதப்பொருள் பொய்யு றாது விளங்கும்பொருட்டு, உலகத்தார்க்குத் தமிழிற் செய்து தந்தான். (உஅ)

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பா லுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

(பொ - ரை.) பலவகை நூல்களாலுஞ் சொல்லப்பட்ட எல்லாப்பொருளும் இந்நூலகத் தடங்கி யிருக்கின்றன; இதனிடத் தில்லாத யாதொரு பொருளும் எந்நூலகத்தும் இல்லை; (ஆதலால்) சொல்லளவினலே விரிந்த நூல்களாற் பயன் யாது? திருவள்ளு வராலே தரப்பட்ட இந்நூலொன்றே மண்ணுலகத்தாருக்குத் துணையாத லமையும். (உக)

பாரதம் பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

(பொ - ரை.) பாரதம் சீராமகதையையும், மனுமிருதி பழைய வேதத்தையும் ஒப்பனவாகும்; எவ்வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோரும் அவற்றின்றன்மையோடு அறிய அவர்க்குச் சொல் லும்படிக்குத் திருவள்ளுவர் சொல்லால் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத் தக்கது வேறொன்றில்லை. (க ஏ)

உருத்திரசன்மகண்ணனார்

மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்
துணைச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணைக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறும் அறிவு.

(பொ - ரை.) மணலைத் தோண்டுந்தோறும் நீர் பெருகும்; புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும் தாயினது முலைக்கண் நல்ல பால் பெருகும்; அவைபோல, பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந் தோறும் அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும். (உக)

பெருஞ்சித்திரனார்

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொரு ளெல்லாம்—உரைத்ததனற்
ரூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

(பொ - ரை.) பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியனே! குற்றமில்லாத திருவள்ளுவர் இனிய குறள்வெண் பாக்களாலே நான்கு வேதங்களாலுஞ் சொல்லப்பட்ட ஒள்ளிய பொருள்களேயெல்லாங் கூறினமையால், மேம்பாட்டுக்குத் தக்கவை அக்குறள் வெண்பாக்களோ? முதனூலாய் நின்ற அவற்றைப் பயந்த வேதங்களோ? நீ சொல்வாயாக. (கூஉ)

நரிவெரூஉத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்-மன்பதைகட்
குள்ள அரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(பொ - ரை.) திருவள்ளுவர், இன்பமுதலிய இந்நாற்பொருளியல்புகளேயும் மக்கட்பரப்புக்கு அக்காலத்தில் அறியும்வண்ணஞ் சொல்லப்பட்ட பழமொழி வேதமானது ஓதியுணரப்படுதற் காரி தென்று, அவற்றை உலகத்தார் எளிதினுணரும்படி திருக்குறளைக் கூறினர். (கூகூ)

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

(பொ - ரை.) உலகின்கண்ணே புலவரெனத் திருவள்ளுவரை யன்றி வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதல், மாலையென்பது நிலவால் விளங்குகின்ற அந்திக்கும் பெயராக மற்றும் சூழ்கின்றவிருளையுடைய அந்திக்கும் பெயராகச் சொல்லுதல் போலும். (கூச)

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்

இன்பமுந் துன்பமு மென்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி யுணர உரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

(பொ - ரை.) புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர், பின் வரக்கடவனவாய சுகமுந் துக்கமு மென்னப்பட்ட இவற்றினுடைய இருவகைக் காரணங்களையும் ஆராய்ந்தறியவும், தம்மே லன்பு நீங்கா மல் உள்ளங் களிகூரவும், திருக்குறளே மக்கட் பரப்புக்கெல்லாம் வாயுறைவாழ்த்தாகக் கூறினர். (கூரி)

கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புன
ஆவிற் கருமுனியா யானைக்—கமரரும்பல் [தம்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(பொ - ரை.) மல்களுக்குள்ளே தாமரை மலரும், பொன் களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், பசுக்களுக்குள்ளே காம தேனும், யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவர்களுக்குள்ளே திரு மாலும்போல, நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள் வெண்பாச் சிறந்தது என்று அறிவுடையோர் சொல்லுவர். (கூசு)

மதுரைப் பெருமருதனார்

அறமூப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத வியப்பொருளே வெண்குறளால் வள்ளுவ
ஓதவழுக் கற்ற துலகு. [னார்

(பொ - ரை.) திருவள்ளுவர் அறத்தின் கூறுபாடு மூப்பத் தெட்டதிகாரங்களாலும், பொருட்கூறுபாடு எழுபததிகாரங்களாலும், காமத்தின் கூறுபாடு இருபத்தைந்ததிகாரங்களாலும் தெளியும் பொருட்டு, காரணகாரிய வொழுங்கால் வேதத்தி னுயர்வாகிய பொருளைக் குறள்வெண்பாக்களாலே ஓதலால் உலகமானது வழுவுதலினின்றும் நீங்கிற்று. (கூஎ)

கோவூர்கிழார்

அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வா
முன்னை முதுவோர் மொழி. [தே

(பொ - ரை.) அறமுதலிய நான்கு பொருள்களையும் அகன்ற உலகத்துள்ளோரெல்லாம் வகைப்பட ஆராய்ந்து தெளியும் பொருட்டுக் குறள் வெண்பாக்களாலே சொல்லப்பட்ட திருவள்ளுவ நாயனாரது முப்பால்களையுடைய புத்தகத்தின்கண்ணே முற் காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு நேர்தல் பொருந்தாது. (நஅ)

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயவில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

(பொ - ரை.) தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள் வெண்பாக்களோடு கூடிச் சிறந்து தோன்றுகின்ற முப்பால்களையும் ஓதாதது வாக்கிற்கு இன்சொற்சொல்லி வாழ்தல் உண்டாகாது, மனத்திற்குச் சொற்களின் சுவையை அறிதல் உண்டாகாது, இவையன்றியும் காயத்துக்கு நல்ல செயலுண்டாகாது என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள். (நக)

இழிகட் பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா.

(பொ - ரை.) இகபரங்கட்காவன இரண்டையும் வினைப் பயன் நுகர்தற்குரிய ஏழு பிறப்பிற்குமாகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும், அறம் பொருள் இன்பமென்னும் முப்பால்களுள் அம்முப்பாற் பொருள்களோடு வீடுமாகிய நாற் பொருள்களின் விதிகளும் வழங்கவும், திருவள்ளுவ நாயனார் இனிய குறள் வெண்பாவைப் பாடினார். (சo)

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(பொ - ரை.) மக்களுக்கு ஆவனவற்றையும் ஆகாதவற்றையும் அறிவுடையார் யாவரும் இதிலிருந்து எடுத்துச்சொல்லுதற்கு வல்லவராவார்; ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார். (சக)

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளோ விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்—ஆதலால்
உள்ளுந ருள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(பொ - ரை.) வேதத்தின் பொருளோ உலகத்தார் ஓதியுணரும் பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ்மொழியினாலே சொல்லியருளினார்; ஆதலால், நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின்கண்ணே உண்டென்று அறிவுடையோர் சொல்லுவர். (சஉ)

வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றுன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்து தமிழ்த்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

(பொ - ரை.) வடமொழி வேதமுடைத்து, தமிழ்மொழி திருவள்ளுவனாயனார் சொல்லிய குறட்பா வுடைத்து; ஆதலால், வடமொழியையும் தென்மொழியையும் ஆராய்ந்து இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று ஒன்றைத் தெரிந்து சொல்லுதல் கூடாது. (சஙு)

களத்தூர்கிழார்

ஒருவ ரிருகுறளே முப்பாலி னேதுந்
தரும முதல்நான்குஞ் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனூர்
புந்தி மொழிந்த பொருள்.

(பொ - ரை.) இருக்குமுதற் பாரதமீறாகிய அரிய வேதங்க ளைந்தும் அவ்வேதத்தின் வழிப்பட்ட சமயநூல்களாறும் நம் முடைய திருவள்ளுவரால் உலகத்தார்க்குப் புத்தியாகச் சொல்லப் பட்ட நூலி லடங்கும்; ஆதலால், ஒருவர் ஒருவிகற்பமும் இருவிகற் பமுமாகிய இருவகைக் குறள்களேயுமே முப்பால்களில் மனனஞ் செய்து அறியப்படுகின்ற அறமுதலிய நாற்பொருள்களும் அவருக் குப் போதும். (சஎ)

நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றிவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவ ரின்குறள்வெண் பா.

(பொ - ரை.) எழுத்துமுதல் வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதலில்லாமல் எக்காலத்தில் எவரால் எவை செய்யப் பட்டன, அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள்வெண்பாக்களிற் சொல்லப் பட்டன. (சஙி)

அக்காரக்கனி நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயத்தின் பயன்.

(பொ - ரை.) மதியமும் முப்பானூலும் பதினாறு கலைகளா லும், அறுபத்துநாலு கலைகளாலும் நிறைந்து; நோக்குதற்கு, ஆராய்ச்சி செய்வதற்கு இனிதாகி; முகக்கண்ணினிலையில், அகக்கண் ணினிலையில், நிரம்புகின்ற தண்மையுடைத்தாயினும், குணமுடைத் தாயினும்; திருவள்ளுவரது முப்பானூலினது நயத்தால் விளைவ தாகிய இனிய பயனைத் தரும் ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து உண்டோ? (சகூ)

நப்பாலத்தனார்

அறந்தகளி யான்ற பொருட்டிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு-குறும்பாவா
வள்ளுவனு ரேற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

(பொ - ரை.) தருமம் அகலாகவும், பொருள் திரியாகவும், காமம் நெய்யாகவும், செவ்வியசொல் நெருப்பாகவும், குறட்பாத் தண்டாகவும், திருவள்ளுவ நாயனார் பூமியின்கண் வாழ்வோரது அகத்திருளை ஒழிப்பதாகிய விளக்கு ஏற்றினார். (சஎ)

குலபதிநாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கண்டு.

(பொ - ரை.) நெஞ்சமாகிய தாமரைமலரை விரித்து மக்களது அகத்திலுள்ள, பிறிதொன்றினாலே நீக்கப்படாத, அஞ்ஞான விருளை நீக்குதலால், திருவள்ளுவரது குறள்வெண்பாவும், புறத்துத் தாமரைமலரை விரித்துப் புறத்திருளை நீக்குகின்ற சூரியனும், அச் செய்கையைக் கொண்டு ஒக்குமென்று கொள்ளத்தகும். (சஅ)

தேனீக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(பொ - ரை.) கடவுட் டன்மையையுடைய திருவள்ளுவ நாயனார் மூன்று பால்களையுடையதாகக் கூறிய குறணூலைக் கேட்டறிதலால் உலகின்கண் வாழ்வாருடைய மனத்துப் பொய்யின் பகுதியிற் பட்டவையெல்லாம் பொய்யேயாய்ப் போயின, பொய்ம்மையல்லாத மெய்யின் பகுதியிற் பட்டவை யெல்லாம் மெய்யேயாய் விளங்கின. (சக)

கொடிஞாழன் மாணிபூதனார்

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தே—மறனெறிந்த

வாளார் நெடுமாற வள்ளுவனுர் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(பொ - ரை.) பகைவரை யெறிந்த வாட்படை தங்கிய வீரேறு போலும் பாண்டியனே! திருவள்ளுவநாயனாரது வாக்கால் இதற்குமுன் கேட்கப்பட்டில்லாதவை யெல்லாம் இப்போது கேட்டு, அறத்தின் நிறத்தை அறிந்தேம், பொருளின் நிறத்தை அறிந்தேம், இன்பத்தின் நிறத்தை அறிந்தேம், வீட்டின் நிறத்தை அறிந்தேம். (நி0)

கவுணியனுர்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனுர்
பன்னிய இன்குறள்வெண் பா.

(பொ - ரை.) முற்பட்டதாகிய நல்லவழியை நாமறியும் பொருட்டு நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவ நாயனாராற் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள் நினைத்தால் மனத்திற்கு இன்பஞ் செய்வன; கேட்டாற் காதுக்கு இன்பஞ் செய்வன; ஓதினால் வாய்க்கு இன்பஞ் செய்வன; தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன.

மதுரைப் பாலாசிரியனுர்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

(பொ - ரை.) சுக்கிரன் தேவகுரு சூரியன் சந்திரன் என்பன புறத்திருளை விரைவிலே நீக்கும் ஒளிகளாம்; (அதுபோல) முற்றுணர்ந்த திருவள்ளுவநாயனாரது இனிய குறள்வெண்பா உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம். (நி2)

ஆலங்குடிவங்கனுர்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் மூப்பான் மகிழ்ந்து.

(பொ - ரை.) திருவள்ளுவரது பாட்டினது தீஞ்சுவையைச் சொல்லுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது தித்திப்பாகிய சுவையும் ஒப்பாகாது; அத்தெள்ளிய அமுதை யுண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள்; வளம் பொருந்திய தமிழின்கண்ணதாகிய முப்பாலாகிய அதின் மும்மடி சிறந்த பாலை எவ்வுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு தீஞ்சுவை யறிவார். (நூஉ)

இடைக்காடர்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(பொ - ரை.) நாயனாரது நூலின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களும், கடுகை அதனடியே துளைசெய்து ஏழு கடனீரையும் அத்துளையுட் பெய்து தன்னளவிற் குறுகும்வண்ணம் தறித்துவைத்தால், அதுபோல்வன வாகும்.

ஔவையார்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்.

(பொ - ரை.) நாயனாரது நூலின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களும், கடுகினும் மிக நுண்ணிதாகிய அணுவை அதனடியே துளைசெய்து ஏழு கடனீரையும் அத்துளையுட் பெய்து தன்னளவிற் குறுகும்வண்ணம் தறித்துவைத்தால், அதுபோல்வன வாகும்.

ஆசிரியர் திருப்பெயர்கள் - கூ

திருவள்ளுவர்.
நாயனார்.
தேவர்.
முதற்பாவலர்.
தெய்வப்புலவர்.
நான்முகனார்.
மாதானுபங்கி.
செந்நாப்போதார்.
பெருநாவலர்.

நூலின் திருப்பெயர்கள் - கூ

திருக்குறள்.
முப்பானூல்.
உத்தரவேதம்.
தெய்வநூல்.
திருவள்ளுவர்.
பொய்யாமொழி.
வாயுறைவாழ்த்து.
தமிழ்மறை.
பொதுமறை.

க

திருக்குறட் பாயிரக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், பீ. ஏ. எழுதியது.]

திருக்குறள் இற்றைக்குச் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்னே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் உலகின் கண்ணுள்ள மக்களெல்லாம் உய்யும்பொருட்டு இயற்றப்பட்ட ஓர் அரிய பெரிய தமிழ்நூல். அஃது இரண்டு அடியாலாகிய குறள் வெண்பாவா லாக்கப்பட்டதால் திருக்குறள் என்னும் பெயர் பூண்டது.

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்ற தமிழ் ஆன்றோர் முறைப்படி திருவள்ளுவ நாயனார் இந் நூலுக்குப் பாயிரமாக, க. கடவுள் வாழ்த்து, உ. வான் சிறப்பு, ங. நீத்தார் பெருமை, ச. அறன் வலியுறுத்தல் என்கிற முதல் நான்கு அதிகாரங்களையுஞ் செய்தருளினர். இந்நான்கு அதிகாரங் களும் பாயிரம் என்பதை அவர் தாம் முதலாவது சொல்லப்புகுந்த அறத்துப்பாலின் முதற்பகுதியதாகிய இல்லறவியலுக்கு முன்னே அவற்றை வைத்த வைப்பு முறையே இனிது விளங்கும். அன்றியும் சிறப்புப்பாயிரம் சொன்ன சங்கப்புலவர்களில் கீரமேதாவியார் "வீடொன்று பாயிரம் நான்கு" எனவும், எறிச்சலூர் மலாடனார் "பாயிரநான் கில்லற மீருபான் மூன்றே" எனவும், நத்தத்தனார் "ஆயிரத்து மூன்றூற்று முப்ப தருங்குறளும் பாயிரத்தினெடு" என வுந் தாங்கள் பாடிய வெண்பாக்களில் விளங்க வுரைத்தருளினர்கள்.

நாயனார் முதல் நான்கு அதிகாரங்களையும் பாயிரமாக யாது கருத்துப்பற்றிச் சொல்லியருளினர் என்பதே ஈண்டு எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியாகும்.

பாயிரத்தைப் பற்றித் தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :—

"'பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும்'-என்றாகலின்.

அப் பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போலவுங் குறிச்சிலுக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படும் என்ச." ஆகலான் எந்நூல் உரைப்பினும் பாயிரம் உரைத்து நூல் உரைப்பதே மரபு என்று பண்டைத் தமிழ்நூற் புலவர் நிறீஇயினர்.

மேலே சொல்லிய முறைமைப்படி திருக்குறள் நூலில் நுண் பொருளவாகக் கூறப்பட்டன பருப்பொருளவாக முதல் நான்கு அதிகாரங்களிலும் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பது கருதுவாம்.

நூலிற் கூறப்படும் பொருள்கள், மக்களால் அடைதற்பாலன வாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களாம். திருவள்ளுவநாயனார் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பொருள்களையும் நூலில் அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் என மூன்று பால்களாகப் பகுத்து, அவற்றின் இலக்கணங்களை யெல்லாம் விரிவாகவும், வீட்டைப்பற்றிப் பாயிரத் தில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்திலும், அறத்துப்பால் துறவறவியலில் நிலையாமை துறவு மெய்யுணர்வு அவாவறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களிலும் காரணவகையாற் றெருட்டும் கூறியருளினார். ஆகவே, சிறப்புப் பாயிரமாகிய திருவள்ளுவமாலை யில் " மூப்பாலி னுற்பான் மொழிந்தவர் " என்று கீரந்தையார் கூறியவண்ணம் நாயனார் முப்பாலினும் நான்கு பாலையும் மொழிந்தா ராவர்.

மக்கள் நான்கு உறுதிப் பொருள்களையும் அடைவது உலக வாழ்வினாலேயே. இந்த உலகவாழ்வு உண்டாம் பொருட்டும் செல்வி தின் நடைபெறும்பொருட்டும் முதற்கண் வேண்டப்படுவது கடவுள். "தானலா துலகமில்லை" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியருளியபடி கடவுளின்றி உலகம் உளதாகாது; உயிரில் பொருளும் உளதாகாது; உயிர்ப் பொருளும் உளதாகாது. ஆகையி னாலே நாயனார் பாயிரத்தில் முதல் அதிகாரமாகக் கடவுள் வாழ்த்துக் கூறினார். கடவுள் வாழ்த்து, வாழ்த்து வணக்கம் பொருளியல் புரைத்தல் என மூவகைப்படும். இம் மூன்றனுள் நாயனார் முதலதி காரத்திற் கூறிய வாழ்த்து பொருளியல் புரைத்தலாகும். நாயனார் கடவுள் வாழ்த்தைப் பொருளியல்புரைத்தல் என்ற வகையிற் கூறி யது தாம் நூலில் நுவல எடுத்துக்கொண்ட நுண் பொருள்களைப் பருப்பொருள்களாகக் குறித்து விளக்குதற்பொருட் டென்க.

உயிர்களின் உலகவாழ்வு அதனை யியக்கும் ஒரு கடவுளையன்றி நிகழாது என்று சொல்லுவதனோடு அமையாது, நாயனார் முதல் எட்டுக் குறள்களிலும் கடவுள் இன்ன இன்ன குணம் உடையவர் என்று வகுத்துக்கூறி ஒன்பதாவது குறளில் அவ்வெட்டுக் குணங்களையுந் தொகுத்துக்கூறி இத்தகைய பேரறிவும் பேரன்பும் பேராற்றலும் உடைய கடவுளை மக்கள் மனத்தான் நினைந்து நாவினால் வாழ்த்திக் காயத்தால் வணங்கி வழிபட்டாலன்றி உலக வாழ்வின் பயனாகிய பிறவிப் பெருங்கடலை நீந்துதல் முடியாது என்று பத்தாவது குறளில் வற்புறுத்தியருளினார். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களுள் உயிர்கள் முடிவில் அடையும் பொருள் வீடு ஒன்றே என்பதையும், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் வீட்டை யடைவிக்கக் கருவிகளா யுதவும் இடையிலுள பொருள்களென்பதையும், அறமானது பொருள் இன்பம் போலாது வீட்டினையும் உதவவல்லது என்பதையும் நாயனார் இவ்வதிகாரத்தில் குறிப்பித்தருளினார். இன்னும் அவர் கடவுளை எல்லாக் குறள்களிலும் ஒருமையிற் சொன்னதனாலும், முதலாவது குறளில் கடவுள் தன்வயத்தனாதல் என்ற குணத்தைச் சார்ந்த முதன்மையுடையவன் என்றும் எ-வது குறளில் கடவுள் தனக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாதவன் என்றும் கூறியதனாலும், முழுமுதற் கடவுள் ஒருவனே என்றும்; அவன் உயிர்களையெல்லாம் ஆளுந்திறத்தினையுடையவன் என்றும், உ, ங, ஞ, ஙி, சு, எ, அ, க0, குறள்களில் உயிர்களைப் பன்மையிற் கூறியதனாலும் வணங்கு முயிர்களைக் குறிக்குமிடத்து க-வது குறளில் வணங்காத்தலை யென்றும், வணங்கப்படும் கடவுளைக் குறிக்குமிடத்து உ, ங, ஞ, ஙி, சு, எ, அ, க, க0 குறள்களில் தான் என்றும் அடியென்றும் கூறியதனால் உயிர்கள் பலர் என்றும்; அவர்கள் கடவுளால் ஆளப்படுந்தன்மையுடைய அடிமைத்திறம் வாய்ந்தவர்களென்றும்; உயிர்களின் தொழிற்பாட்டைக் குறிக்குமிடத்து உ, ஞ, எ, அ, க0 குறள்களில் 'சேர்ந்தார்' 'சேரா தார்' என்று கூறியதனால், உயிர்கள் ஒன்றனைச் சார்ந்துநிற்றலும் சார்ந்ததன்வண்ணமாதலுமாகிய இயற்கைக்குணம் உடையவர்களென்றும், அறியாமையினால் உலகத்தைச் சார்ந்து அதன் வண்ணமாய்க் குறைந்த இன்பத்தையும் பெருந்துன்பத்தையும் அடையும் உயிர்கள் பேரின்பப் பயனாகிய கடவுளைச் சார்ந்தாலல்லாமல் பிறவிப் பெருங்கடலைக் கடந்து வீடு அடையமுடியா தென்றும் நாம் ஊகித்தறியக் கிடக்கின்றன.

இனி, முதலாவது அதிகாரத்திற் கூறியவாறு உலகில் உயிர்ப் பொருளையும் உயிரில் பொருளையும் இயக்கி ஆளவல்லது அக்கினி

யிற் சூடுபோலக் கடவுளினின்றும் பிரிக்கவொண்ணுத அவனுடைய அருட்சத்தியாகும். இந்த அருட்சத்தி தொழிற்படாது கடவுளிடம் ஒடுங்கியிருக்குங் காலத்து உலகமும் தொழிற்படாது. அருட்சத்தி வெளிப்பட்டபொழுதுதான் உலகமும் வெளிப்பட்டுத் தொழிற்படும். இந்த அருட்சத்தியின் வெளிப்பாடாகக் கற்றோரும், கல்லாதாரும், அறிவுடையாரும், பேதையரும் உலகில் கண்கூடாகக் காணக்கூடியது மழை. மழையின்றி உலகியல் நடவாது என்பது யாவருக்கும் வெளிப்படை. மழை ஒருகால் உலகிற் பெய்தலும் மற்றொருகால் பெய்யாதிருத்தலும் எத்தகைய ஆற்றலும் அறிவும் உடைய மக்களின் சத்திக்கும் மேற்பட்ட ஒரு சத்தியின் தொழிற்பாடு என்று யாவரும் அறியலாம். பருவகாலத்தில் மழை பெய்தாலன்றி உயிர்கள் பசி நோயால் வருந்துவர் என்னும் வெளிப்படையான செயலன்னது உயிர்கள் கடவுளின் அருள்வழி உலகில் ஒழுகிஞலன்றி தன்பமடைந்து வருந்துவ ரென்னும் உண்மையைக் குறிப்பா லுணர்த்துகின்றது. இந்த உண்மையை நாயனர், "துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்—அளியின்மை வாழு முயிர்க்கு" என்று அரசன்மீது வைத்துக் கூறினர்.

மேலே கூறிய காரணங்களினல் நாயனர் பாயிரத்தின் இரண்டாவது அதிகாரமாகக் கடவுள் வாழ்த்துக்குப் பின்னர்க் கடவுளின் அருள் வெளிப்பாடாகிய வான்சிறப்பை வைத்தருளினர். வான் என்று சொல்லாது வான் சிறப்பு என்று அவர் அதிகாரத்துக்குப் பெயரிடு தந்தது, மழை உலகம் நடைபெறுதலுக்கு இன்றியமை யாமையைக் குறித்தற் பொருட்டு. மழையானது மாநிலத்து உயிர்களுக்குக் குடிநீரா யுதவுவதுமன்றி உண்ணுவதற்கேற்ற உணவுப் பொருள்களையும் உண்டுபண்ணுகிறது என்றும், மழை பெய்யா விடில் உழவர் உழவுதொழிலைச் செய்து உணவுப் பொருள்களை உண்டுபண்ணமாட்டார்களென்றும், இல்லற வாழ்க்கையிலுள்ள மக்கள் ஏனைய மூன்று ஆச்சிரமத்திலுள்ளவர்களுக்கும் உற்ற துணையாயிருந்து தானம் செய்யமாட்டார்களென்றும், துறவிகள் தாங்கள் செயற்பாலதாகிய தவம் செய்யார்களென்றும், தேவாலயங்களில் நடைபெறவேண்டிய பூசனையும் விழவும் நிகழா என்றும் உயிர்கள் பசிநோயினல் வருந்துவ வென்றும் நாயனர் பலவாறாக மழையைச் சிறப்பித்துக் கூறியருளினர். உழவு தொழில் நடவாது எனவே, அதன் சார்புபற்றி வரும் வியாபாரம் கைத்தொழில் முதலிய ஏனைய தொழில்களும் அரசியலும் நடைபெறு என்பது தானே போதரும். இவ்வாறாக மக்கள் உலக வாழ்வில் அடைதற் பாலதாகிய நெறிகொள் சிற்றின்பத்திற்கும் முடிவில் அடைதற்

பாலதாகிய வீட்டினை உறுவிக்கும் அருளை வளர்த்தற்கும் வேண்டிய பொருளை நன்முயற்சியா லீட்ட உதவுங் கருவி மழைதான் என்று நாயனார் இந்த இரண்டாவது அதிகாரத்தில் குறிப்பித்தருளினார்.

இனிக் கடவுளின் அருள் விளக்கம் உலகின்கண் நிகழ்ந்தாலும் ஆணவமலத்தால் மறைப்புண்டு அறியாமையில் உழலும் மக்கள் கடவுளையும் கடவுளினருளையும்பற்றி அறிந்தாலன்றி உலக வாழ்வின் பயன் அடையார்கள். கடவுளின் அருள் தங்களிடம் பதியப் பெற்ற பெரியோர்களே அவ்வருளை அறிவார்கள். ஆகையால் அத்தகைய பெரியோர்கள் மக்களுக்கு அறிவித்தாலன்றி அவர்கள் அவ்வருளை அறியமாட்டார்கள். ஆதலின் நாயனார் கடவுளின் அருள்விளக்கமாகிய வான்சிறப்பிற்குப்பின் மூன்றும் அதிகாரமாக **நீத்தார் பெருமையை** வைத்துக் கூறினார். நீத்தாராவர் இருவகைப்பற்றினையும் நீத்த முனிவர்; அவர்கள் தங்களிடத்தில் கடவுளின் அருள்விளங்கப் பெற்றவர்கள். அவர்களை உரையாசிரியராகிய பரிமேலழகரும் **''அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார்''** என்று கூறினர். நீத்தார் என்று சொல்லுதலமையாது **நீத்தார் பெருமை** என்றது, மக்கள் அவர்கள் பெருமையை யுணர்ந்தாலன்றி அவர்கள் கூறும் மறைமொழிகளைக் கேட்டு, அவற்றின்வழி உலகில் ஒழுகல் இயலாது என்பதைக் குறிக்கின்றது. நாயனார் முதல் இரண்டு குறள்களிலும் நீத்தார் பெருமை எத்தன்மைத் தென்றும்; ஈ-வது குறளில் அவர்கள் இம்மை மறுமை வகையினைச் செவ்விதிலுணர்ந்து உலகின்கண் மக்களுக்கு அறத்தை உணர்த்துதலாகிய தொண்டு பூண்டவர்கள் என்றும்; ச, ரு, குறள்களில் அவர்கள் தங்கள் அறிவின் ஆற்றலால் ஐம்புலனையும் வென்றவர்கள் என்றும்; ரூ-வது குறளில் அவர்கள் உலகில் செயற்கரிய செயல் செய்யும் பெரியாரென்றும்; எ-வது குறளில் அவர்கள் தத்துவங்களை அறிந்து அவையிற்றின்தலைநிற்கும் தத்துவஞானிகளென்றும்; அ-வது குறளில் அவர்கள் மக்கள் அறிந்து உய்யும்படி மறைமொழிகள் சொல்லவல்ல நிறைமொழி மாந்தர் என்றும்; ஊ-வது குறளில் அவர்கள் எல்லா நற்குணங்களையு முடையவர்களாதலின் மலைபோன்று யாதொரு துளக்கமுமில்லாத தீரர் என்றும்; க0-வது குறளில் அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டொழுகுஞ் செம்மையோர் என்றும் அவர்களுடைய இலக்கணங்களைக் கூறியருளினர்.

அத்தகைய நீத்தாராகிய பெரியார் உலகில் மக்கள் உய்யும் பொருட்டுக் கூறும் மறைமொழி அறமாகும். அறம் என்பது

ாயனூர் கட்டுரைப்படி மன மொழி மெய்களாற் செயற்பாலன வற்றைச் செய்தலும், விலக்கற்பாலனவற்றைச் செய்யா தொழிதலு மாகும். மக்கள் இவ்வாறு அறத்தின்வழி யொழுகினுலன்றி அவர்கள் உலகவாழ்வின் பயனை அடையார்கள். ஆதலின், நாயனூர் பாயிரத்தில் நீத்தார் பெருமைக்குப் பின் நான்காவது அதிகாரமாக அறன்வலியுறுத்தல் என்பதை வைத்துக் கூறினர். அறமானது மக் களுக்கு உலகவாழ்விலடையும் பொருள் இன்பம் என்னும் இரண்டு பொருள்களையுந் தருவதுடன் முடிவில் அடையும் வீட்டினையுந் தரவல்லது. அறத்தின்வழி ஒருவன் ஒழுகினுல் அவனடை யத்தக்க பொருளினையும், அது பற்றி நெறிகொள் சிற்றின் பத்தையும் அடைந்து, பின் அனுபவ வுணர்வினுல் பருவ மடைந்தபொழுது அவ்விரண்டு பொருள்களையும் விடுத்து வீடு பேறு நாடி முயன்று வீடு அடைதல் திண்ணம். ஆதலின் நாயனூர் அறன்வலியுறுத்தல் என்று சிறப்பித்துக் கூறினர். அறன் வலியுறுத்தல் என்று பாயிரத்திற் கூறினவை, அறம்பற்றிக் காலக் கிரமத்தில் மக்களுக்குத் திண்ணமாய் உண்டாகும் எனைய மூன்று பொருள்களும் பருப்பொருள்களாக அடங்குவன வாகும்.

இதுகாறுங் கூறியவற்றுல், உலகவாழ்வு செவ்வி தின் கடை பெற்று மக்கள் நான்கு உறுதிப்பொருள்களையும் அடைவதற்குக் கடவுளும், வான்சிறப்பாகிய கடவுளின் அருள் விளக்கமும், அவ் வருள் தங்களிடம் விளங்குந் தன்மையுடைய பெரியோர்களும், அப் பெரியோர்கள் கூறிய அறமும் இன்றியமையாது வேண்டப்படுதலால் நாயனூர், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கையும் நான்கு அதிகாரங்களில் பாயிர மாகத் தாம் நூலில் நுவல எடுத்துக்கொண்ட நான்கு உறுதிப் பொருள்களின் பருப்பொருள்களாகக் கூறியருளினர் என்பது ஒரு வாறு விளக்கப்பட்டது.

சில குறட்பாக்களுக்கு ஏனை உரையாசிரியர் உரையும் விளக்கமும்

குறள் க. முன்னுரை :—

முதலாவது குறளுக்கு முன்னுரை (அவதாரிகை) யாகப் பரிமேலழகர் கூறியது பின்னர் அவர் கூறிய குறிப்புரைக்கே முரணுகவுள்ளது. அகரத்தை உயிரெழுத்து மெய்யெழுத்துக்களுக்குத் தலைமையாக உவமை கூறியது அகரத்திற்கே தனிச்சிறப்பாயிருத்தல்போல, முழுமுதற் கடவுளாகிய ஒருவனுக்கே ஈண்டுத் தலைமை கூறப்பட்டது. முழுமுதற் கடவுள் (குறள் - எ) சத்துவ முதலிய முக்குணங்களையுங் கடந்து மாயாகாரிய உலகிற்கு அப்பாற்பட்ட அருட்குணங்களை யுடையவன் (குறள் - கூ) ஆதலின் ஈண்டு சத்துவ, இராசச, தமோகுணங்களையுடைய மால், நான்முகன், உருத்திரன் ஆகிய மூவரையும் தலைமையுடையவராகக் கொண்டு அம் மூவர்க்கும் வாழ்த்துப் பொதுபடக் கூறல் ஆசிரியர் கருத்தன்றென்க. உலகிற்கு முழுமுதற்கடவுள் ஒருவனேயன்றி மூவரன்று.

குறள் உஎ. சுவையொளி யூருசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

தத்துவங்களைப்பற்றி சாங்கியநூலுள் கூறப்பட்டதின் வேறுக வேறுவேறு சமயநூல்களுள் வரையறுக்கப்பட்டுள்ளன. சைவநூல் களுள் தத்துவங்கள் மூப்பத்தாறு எனக் காணப்படுகின்றன.

அம்மூப்பத்தாறு தத்துவங்களும் ஆசிரியர் வள்ளுவனார் கூறும் ஐந்தின் வகையுள் அடங்கும்.

அறஞ்செய்யுமாற்றைக் கூறுமுகத்தால் அறத்தினிலக்கணத்தை விளக்கியது.

குறள் கூக. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) தத்தமக்கியலும் அறவினைக ளெல்லாவற்றையும் இயலும் வகைகளானெல்லாம் இடைவிடாதே அவை எய்துமிடத் தானெல்லாம் எஞ்சாது செய்தல்.

வகைகளாவன : மனமொழிமெய்களும், அறவினைக்கேற்ற துறை களும். 'ஓவாதே' யெனவே எவ்வளவு காலம் ஒருவர்க்கு அறவினை

செய்ய வியலுமோ அத்துணைக்காலமும் அறவினை செய்தல்வேண்டும் என்பது பெறப்பட்டது. செல்லும் வாயெனவே எய்துமிடத்திலுள்ள உயிர்களும் அடங்கின.

குறள் ருக. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ - ள்.) அறத்தொடுபொருந்த வருவதே இன்பமாவது. அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் துன்பத்தினிடத்த; அதுவேயுமன்றிப் புகழுமுடையவல்ல. இன்பம் - இம்மை மறுமை இன்பங்களும், வீடுபேறும்.

எ - ம் அதிகாரம். புதல்வரைப் பெறுதல். முன்னுரை.

ஆசிரியர் ஆருவது அதிகாரம் பத்தாவது குறளில் மக்கட் பேறென்று ஏழாவததிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்திருப்பதானும், ஏழாவததிகாரம் எ, கூ, கo குறள்கள் தவிர ஏனைய ஏழு குறள்களிலும் மக்கள் என்று பொதுப்படக் கூறுதலினானும், இவ்வதிகார முதற்குறளில் மக்கட்பேறென்ற தோற்றுவாய்ச் சொற்றொடரையே வழங்கியிருத்தலானும், இவ்வதிகாரம் "புதல்வரைப் பெறுதல்" என்று குறிக்கப்பெறுவது ஆசிரியர் கருத்தன்று என்பது புலனாகும்.

குறள் சுக. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

'கேட்ட தாய்' என்னும் சொற்றொடருக்குப் பெண்ணியல்பான் தானுக அறியாமையிற் கேட்ட தாயென ஆசிரியர் பரிமேலழகர் விரிவுரை கூறியுள்ளார். அவ்வுரையினால் பெண்கள் கல்வியும் அறிவும் உடையரல்லர் என்றுவது, அவையின்மையால் அவர்தாமாக அறியும் ஆற்றலிலர் என்றுவது கொள்வதற் கிடமில்லை. "பெண்ணியல்பு" என்றமையால் ஆசிரியர் பெண்களின் பொதுவான மனநிலைமையையும் சிறப்பாகத் தாய்மார்களின் மனநிலைமையையும் குறித்துள்ளார்.

தாய் தன் மகன்பால் வைத்த பேரன்பால் அவனியல்புகளனைத்தையும் உள்ளவாறு காணுந் திறனுடையளல்லள். ஆகவே அறிஞர் அவனைச் சான்றோன் எனக் கூறக் கேட்டபோது பேருவகை யடைவள் என்க.

குறள் அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

ருநூசு ஏனை உரையாசிரியர் உரையும் விளக்கமும்

தன்னை நோக்கி வந்த விருந்து தன்னில்லின் புறத்ததாகத் தானே யுண்டல் சாவினை யடைந்ததோ டொக்கும். தானுண்பது சாவினைப் போக்கும் அமிர்தமேயெனினும் அதனைத் தானே யுண்ண விரும்புதல் முறைமையன்று எனவும் பொருள் கொள்ளலாம்.

குறள் அடி. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம் வித்துமிடல் வேண்டுங் கொல்லோ என்று பொருள் முடிவு செய்தல் நன்று. மிசைவான் வேண்டும் என்று வினைமுடிவு செய்க. முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தானுண்பான் விருந்தினரை உண்பிக்குங் கடப்பாட்டினிற்குங்கால், அதற்கு வித்தன்றி வேறு பொருளில்லாத நிலைமையில் விருந்தினரை உண்பிக்க விரும்பாமல் தனது விளைபுலத்திற்கு வித்திடுதலே விரும்பான் என்பது பொருள்.

இவ்வுண்மை இளையான்குடிமாற நாயனார் புராணத்தில் விளங்குதல் காண்க. வித்தினை யட்டுண்ணுதல் வேளாளன் விரும்பாததொன்று. விருந்தினரை உண்பிக்குங்கால் அவ்வித்தையும் அட்டு விருந்தினரை ஊட்டும் கடமையில் நிற்பார் விருந்தோம்பும் அறமூடையார்.

குறள் கசுஉ. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

அறனெக்கம் என்பதை உம்மைத் தொகையாகக் கொள்ளாது அறத்தினெலாகிய ஆக்கம் என மூன்றும் வேற்றுமைத் தொகைப் பொருள் கொள்ளுதல் பொருத்த முடைத்து.

அறத்தினெலாகிய ஆக்கம் என்பதில் இம்மை மறுமை வீட்டுச் செல்வங்கள் மூன்றும் அடங்கும்.

" சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு "

என்றாராகலின்.

குறள் கசுசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

இதில் சுற்றம் என்பதற்குச் சுற்றமொடு என மூன்றும் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.

அழுக்கறுப்பான் எழுவாய், கெடும் பயனிலை. சுற்றம் எழுவாயன்று.

குறள் உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

தீயவே தீய பயத்தலால் என்று அரசன் சண்முகனார் பாடமாகக் கொண்டு,

தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலால், அத்தன்மையவாய தீவினைகள், சிலகால் நன்மையும் செய்யும் தீயினும் ஒருவனால் அஞ்சப்படும். வேள்விக்கும் அட்டிற்றொழில் செய்தற்கும் தீ உதவி நன்மைசெய்யுமாறு காண்க.

குறள் உசுசு. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ் செய்வா ராசையுட் பட்டு.

(இ - ள்.) தவஞ் செய்வாராவார் தங் கருமத்தை அறநூல்களில் விதித் தாங்கு செய்பவரே; அவரை யொழிந்த ஏனையோர் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடுசெய்பவராவர்.

இக்குறளின் கருத்து: இல்லறத்தானும் தன் கடமையை அறநூல்களில் விதித்தாங்கு செய்யின் தவஞ்செய்தவனென்பதாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துறையூர்ப் பதிகத்தில் "வேண்டிக்கொள்வேன் தவநெறியே" என்று நம்பிரானை வேண்டிக்கொண்ட காலத்துக் குறிக்கப்பட்டுள்ள தவநெறி இல்லறத்திற்குந் துறவறத்திற்கும் பொதுவாதல் காண்க.

--அரசன் சண்முகனார்.

குறள் உகஅ. தன்னுயிர் தானறப் பெற்றானே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ - ள்.) ஒருவன், தன்னுயிரானது தானென்னும் தன் மூனைப்பினின்று நீங்கப் பெற்றவனைப் பெறுதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும்.

குறள் உகூக. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

இக்குறட்கு, கற்றறிந்தார் தாமின்புறுவது கண்டு உலகின்புறக் காமுறுவர் என உரைநடை செய்து செம்பொருள் கொள்ளுதல் ஆசிரியர் கருத்துக்குப் பொருத்தமாகும்.

நூல்களைக் கற்றறிந்தவர் தாம் கற்றறிந்த கல்வியினாலே நுகரும் இன்பத்தை உலகிலுள்ள ஏனைய மக்களும் நுகரவேண்டுமென்று

விரும்புவர் என்பதே இதற்குச் செம்பொருள். "யான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்" என்பது பண்டைத் தமிழர் குறிக் கோளாகும். அதனையே ஆசிரியர் இங்கு விதந்தோதினர் என்க.

குறள் சகo. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்ருரோ டேனை யவர்.

மக்களொடு விலங்கனையர்; இலங்கு நூல் கற்ருரோடு ஏனையவர் என்று கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளலும் ஆம்.

குறள் நிஎo. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

அது - கடுங்கோல். ஈண்டு ஆகுபெயராய்க் கடுங்கோலரசனைக் குறிக்கிறது.

குறள் சுஉo. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

ஊழாலையவலி முற்பிறப்பிற் செய்த முயற்சி வலியாலுகியது. அம்முயற்சி வலியினும் இப்பிறப்பிலே செய்கிற முயற்சிவலி மிக் கிருப்பின் ஊழ்வலியைத் தான்டலாம் என்பது கருத்து.

குறள் சுருடி. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

(இ - ள்.) யான் செய்தது எத்தன்மைத் தென்று பின் ருனே யிரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாதொழிக; அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையனையினையின், பின் னேனும் அத்தகைய காரியங்களைச் செய்யாதிருத்தல் நன்று.

ஒரு வினையைச் செய்யுமுன் அதனைப் பல்லாற்ருலும் சூழ்ந்து, பின் தான் இரங்கும் வினைகளை யொழித்து நல்வினையைச் செய்தல் வேண்டும். கழிவிரக்கங்கொள்ளும் வினைகளை ஒருகாலும் செய்தல் கூடாது. அத்தகைய வினைகள் தன்கணிகழாமல் குறிக்கொண்டு காத்தல்வேண்டு மென்பது கருத்து. யாதாமொரு குற்றஞ்செய்தா னொருவனை இனி மீண்டாயினும் செய்யற்க என்று கூறும் உலகமுறையை யொட்டி ஆசிரியர் இங்ஙனம் நயம்பெற உரைத் தார்.

குறள் எஙக. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(இ - ள்.) நாடென்ப நாடா வளத்தன - பிறநாடுகளிலுள்ள வளத்தை நாடாது தன் நாட்டிற்கு வேண்டும் வளங்களை யெல்லாம்

தன்னகத்தே யுடையது நாடாகும் ; இவ்வாறன்றி, நாட வளந்தரு நாடு நாடல்ல - பிறநாட்டு வளங்களே நாடி யடைதலால் வளம்படும் நாடு நாடல்ல.

ஒருநாட்டு மக்களுக்கு வேண்டுவனவாகிய பொருள்களெல் லாம் அதனிடத்தில் அமைதல் வேண்டும் என்பது கருத்து.

குறள் கூடூ. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணுணுத் தரும்.

தாழ்ந்த இயல்பின்மை - தாழ்தற்கு ஏதுவாய ஆணியல்பு இல்லாமை; அஃதாவது, ஆண்டகை யின்மை. ஆண்மக்களுக்கு ஆளுந்தன்மையாகிய ஆண்மை யியல்பாகலின் அதனை ஆசிரியர் இயல்பு என்றார். ஈண்டு உரையாசிரியர் இவ்வாண்மையின்மையை மனையாளிடத்து அச்சம் என்றார்.

குறள் கூஎஎ. இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

(இ - ள்) சீரல்லவர்கண்-பெருமையுடையரல்லாத சிறியோ ரிடத்து, சிறப்பு படின் - செல்வங் கல்வி முதலிய சிறப்புகள் உள வாயின், இறப்பே புரிந்த தொழில் - (அச் சிறப்புகள் அவனுக்கு) செருக்கினை விரும்பும்படியாயுள்ள செயல்களைச் செய்விக்கும். தாம், தான் அசைகள்.

சிறப்பென்பது மக்கள் பலரிடத்திலில்லாது சிலரிடத்தில் மட்டு மிருக்கும் செல்வம், கல்வி, அதிகாரம் முதலியன. இறப் பென்பது தன்னளவைக் கடந்திருத்தல் ; அஃதாவது செருக்கு.

குறள் கoஎக. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

வடிவால் முழுதும் மக்களே போன்றிருப்பர் கயவர். ஆனால் அவருக்கு ஒப்பானவர் பிறரை யாம் கண்டதில்லை.

இதனால் கயவர் மிகக் கீழானவர் என்றும், அவருக்கும் கீழா னவர் பிறரில்லை யென்றும் கூறப்பட்டது.

இவ்வுரை, ஜெர்மானியப் புலவர் சூபனேர் (Schopenhaur) என்பவரால் தமது சமயம் என்னும் கட்டுரையில் கண்டது.

குறள் ககoடூ. தாம்வீழ்வார் மென்ருேட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணு னுலகு.

தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கட் டுயிலும் துயில் போல இனிமை பயப்பதோ செங்கண்மா லுலகம் ?

திருக்குறள்
அருஞ்சொற் பொருளகராதி

[எண் குறள் எண்ணைக் குறிக்கும்]

அஃகாமை - சுருங்காமை களஅ
அஃகி - நுண்ணிதாய் கள்ஙி
அகடு - வயிறு கஙசு
அகத்து - நடுவண் எஉஎ
அகப்பட்டி - சுருங்கியபட்டி ; அகமாகியபட்டி கoஎச
அகம் - மனம் எoஉ
அகலல் - நீங்குதல் சுகக
அகலாக்கடை - பெருகாதாயின் சஎஅ
அகல் - அகன்ற உஙி
அகறலின் - கூடப்பெறுத வெல்லைக்கண் கஙஉஙி
அகழ்தும் - விரிக்கும் நஎஉ
அகனமர்ந்து - மனமகிழ்ந்து அச
அகன்ற - சென்ற களஙி
அகன்ஞர் - பெரியராயினோர் களo
அசாவாமை - தளராமை சுகக
அசையியற்கு - நுடங்கிய இயல்பினை யுடையாட்கு கoகஅ
அசைவிலா - தளராத ஙிகச
அசைவு - மடி நஎக
அஞர் - துயர் கoஅசு
அஞ்சுவது - அஞ்சிக் காப்பது நஙசு
அடக்கலாற்றின் - அடக்க வல்லனயின் கஉசு
அடல் - வருத்துதல், கோறல் உoசு, அசுங
அடற்றகை - அடும் தறுகண்மை எசுஅ
அடியளந்தான் - தன்னடியளவானே எல்லா வுலகையு மளந்த இறைவன் சுகo
அடுக்கிய - தொடர்ந்த ஙிஉஙி
அடுங்கால் - துன்பஞ் செய்யுங்கால் ககசுசு
அடுத்திருந்து - தொடங்கியிருந்து அசுஎ
அடுத்து - பற்றுவன கொடுத்து கoஙo
அடுமுரண் - பகைவெல்லுதற் கேற்ற மாறுபாடு ஙிசுஎ
அடையாவாம் - சாராவாம் கூஉக
அட்டிய - வார்த்த கoகஙட
அணங்கு - தெய்வமகள் கoஅக
அணியுமாம் - வியந்து புனையாநிற்பர் கூஎஅ
அணுகாது - செறிவதுஞ் செய்யாது சுகக
அண்ணுத்தல் - அங்காத்தல் உஙிஙி
அதர்வினை - வழிவினவி ஙிகச
அதிர - நடுங்க சஉக
அமர்த்தல் - மாறுபடுதல் கoஅச

அமர்ந்த - பொருந்திய எரி
அமர்ந்து - மனமகிழ்ந்து அச
அமிழ்தற்று - அமிழ்தினே யொக்கும் எஉ0
அமைகலா ஆறு - வருந்து கின்ற இயல்பு உகக
அமைந்தக் கண்ணும் - தானே வந்தெய்திய விடத்தும் கூ0சு
அமைந்தற்று - அளவிற்று கஉ0உ
அமைந்தின்று - அமைந்த தில்லை நசo
அமையல - அமைகின்றன வில்லை கஉஅக
அமையாக்கடை - உடன்படா ராயின் அ0ங
அமைஆர் - வேய்போலும் கூ0சு
அமைவர் - மேவுவர் ருஅ0
அமைவில - அமைகின்றன இல்லையாயின ககளஅ
அமைவிலன் - பொருத்த மிலன் அசுஙக
அயர்கம் - அயர்வேமாக சஉசுஅ
அரிந்தற்று - அறுத்தாற் போலும் கஙo0ச
அருங்கேடன் - அரிதாகிய கேட்டையுடையன் உக0
அருஞ்செவ்வி - காலமரிய னைய் ருசுரு
அருந்தியது - உண்டது கூசஉ
அருப்பரு - கிழத்தல் அருத ருஉஉ
அருமறை - பெறுதற்கரிய உபதேசப்பொருள் அசஎ
அரும்பி - எய்தி, தோன்றி கஉஉங
அருளாட்சி - அருளாற் பயன் கோடல் உருஉ
அருளாதான் - உயிர்கள்மாட்டு அருள்செய்யாதவன் உசகூ
அலகு - கதிர் க0ஙச
அலகை - பேய் அருo
அலந்தார் - துன்பமுற்றழிந் தார் கஙo0ங
அல்லல் - பகை சசுo
அல்லல் - துயர், நிரயத் துன்பம் சுஉசு, கஙசு
அல்லாவார் - அலமரார் ருகஙக
அல்வழி - ஆகாவழி கஉகூக
அவம் - பயனில் முயற்சி உசுஉ
அவாம் - விரும்பும் உகரி
அவாய் - அவாவி சுசஙக
அவித்தான் - அறுத்தான் சு
அவியினும் - சாவினும் சஉo
அவிர் (தல்)-விளங்குதல் ககள
அவ்வித்து - பொருது கசுஎ
அவ்விய - கோட்டத்தினைப் பொருந்திய கசுக
அழிவின்வை - கேட்டினைத் தரும் தீநெறிகள் எஅள
அழீஇ-அழித்துச்சொல்லி கஅஉ
அழுக்கறுப்பான் - அழுக்காற் றைச் செய்வான் கசுங
அழுக்கற்று - அழுக்காற்றைச் செய்து கஎo
அழுக்காறு - பிறராக்கம் பொறுமை ஙரு
அளவளாவுதல் - நெஞ்சுகலத் தல் ருஉங
அளவு - எல்லை சஎள
அளியின்மை - தண்ணளி யில்லாமை ருருஎ
அளீஇ - கலந்து கூக
அறத்தாறு-அறத்தின்பயன் ங.எ
அறவாழி - அறக்கடல் அ

அறன்வரையான் - (ஒருவன்) அறத்தைத் தனக்கு உரித் தாகச் செய்யாது கநிO
அறிகல்லாதவர் - அறியமாட் டாதார் சஉஎ
அறிகொன்று - அறிவையும் அழித்து சுஙஅ
அறிவதில்லை - மதிப்பதில்லை சுக
அறிவறிந்த - அறியவேண்டி வன அறிதற்குரிய சுக
அறுதொழிலோர் - அந்த ணர் நிசுO
அறுப்பான் - கெடுப்பான் நசசு
அறுவாய் - குறைந்தவிடம் ககஎ
அறைபோகாதாகி - (பகைவ ராற்) கீழறுக்கப்படா ததாய் எசுச
அறைப் படுத்தும் - கீழறுத்துத் திறப்பித்தும் எசஎ
அற்கா - நில்லாத நங
அற்குப - நிலையுள்ள ,,
அற்றம் - அவமானம், மெலிவு கஅO, ககஅசு
அற்றேம் - இலமாயினேம் அஅ
அனைத்தானும் - அத்துணை யாயினும் சகசூ
அன்பொரீஇ - அன்புசெய் தலை யொழிந்து கOOக
அன்னநீரார் - அப்பெற்றித் தாய இயல்பினையுடை யார் நிஉஎ
ஆகலூழ் - அதற்கேதுவாகிய ஊழ் நஎஉ
ஆகாவாம் - நில்லாவாம் நஎச
ஆகாறு - வருகின்ற நெறி யளவு சஎஅ
ஆகுலநீர - ஆரவார நீர்மைய கூச
ஆகூழ் - ஆதற்குக் காரண மாகிய ஊழ் நஎக
ஆக்கல் - உயர்த்தல் உகச
ஆக்கிக்கொளல் - உளதாக்கிக் கோடல் கOஉசு
ஆக்கிக்கோடல் - முடித்துக் கொள்க சுஎஅ
ஆக்கும் - வளர்க்கும் சுகசு
ஆங்கால் - வினையுங்கால் நஎக
ஆசு - குற்றம் நிOங
ஆடியற்று - ஆடிலுறற் போலும் சOக
ஆட்சி - பயன் கோடல் உநிஉ
ஆண்மை - ஆளுந்தன்மை சுOசு
ஆயம் - வருவாய் கூங
ஆயிடை - அவ்விரு வழியும் ககஎக
ஆர - நிறைய அஙஎ
ஆரா - ஒருகாலும் நிரம்பாத நஎO
ஆரார் - ஆரப்பெறார் கூங
ஆராவியற்கை - நிரம்பாத வியல்பு நஎO
ஆருயிர் - பெறுதற்கரிய மக்களுயிர் எங
ஆர்க்கும் - பிணிக்கும் சஅஉ
ஆர்வம் - விருப்பம் எச
ஆர்வலர் - அன்புசெய்யப் பட்டார் எக
ஆள்வினை - முயற்சி சுங
ஆறு - நெறியாக கசுக
ஆறு - பயன் நஎ
ஆற்ற - மிக சுச
,, - துவர நஎசுஎ
ஆற்றலது - ஆற்றலை யுடையது எசுநி
ஆற்றறுக்கும் - களத்திடை வீழ்த்துப்போம் அகச

ஆற்றறுப்பார் - கைவிடு வார் எகூஅ
ஆற்றூக்கடை - செய்யா விடின் சசுகூ
ஆற்றூதார் - ஆற்ற லில்லாதார் அகூச
ஆற்றூதான் - கொடா தான் க00எ
ஆன்ற - நிரம்பிய கசஅ
,, - அமைந்த சுஅக
ஆன்று - நிறைந்து சுஉருி
இகந்து - பிரிந்து ககஉO
இகவாவாம் - நீங்காவாம் கசசு
இகழ்ச்சி - சோர்வு ருிஉகூ
இசைபட - புகழுண்டாக உஉ.க
இடிக்கும் - நெருங்கிச் சொல்லும் சசஎ
இடிபுரிந்து - கழறுதலே மிகச் செய்து சுOஎ
இடும்பை-பிறவித்துன்பங்கள் ச
,, -துன்பம் கஉஅ
இட்டிதாயினும் - சிறிதாயிற் ருயினும் சஎஅ
இணர் - கொத்து சுருிO
இமையார் - அமரர் கூOசு
இயலாள் - இயல்பின் கண்ணே நிற்பாள் கசஎ
இயல்வது - இனிது நடப் பது எஉசா
இயற்றல்-தனக்குப் பொருள் வரும் வழிகளே மேன் மேலுளவாக்கல் உஅருி
இயன்றது - நடந்தது உருி
இயைந்தக்கால் - கூடியக் கால் சஅக
இயைபு - பொருத்தம் ருிஎஉ
இயையாக்கடை - முடியாத வழி உஉO
இரத்தக்கார் - இரத்தற் கேற் புடையார் கO்ிக
இருந்தேமா - இருந்தே மாக கஉகஉ
இருந்தோம்பி - இல்லின்க ணிருந்து பொருள்களைப் போற்றி அக
இருபுனல்-கீழ்நீர்மேனீர் எகூள
இருமனம் - கவர்த்தமனம் கூஉO
இருவினை - நல்வினை தீவினை ருி
இருவேறு-இரண்டு கூறு நடஎச
இலம் - வறியம் களச
இலர் - நல்கூர்வார் உஎO
இலாக்கடை - இல்வழி கO்ிக
இல்லல்ல - (யாவர்க்கும் முன் னே)அமைந்துகிடந்தன ககருி
இல்லாகியாங்கு - இல்லை யாயினுற்போல உசஎ
இல்லாகியார் - முற்காலத் தும் தாமுளராகியே இல ராகி யொழுகினர் கூஉருி
இல்லாக்கால் - நல்கூர்ந்த வழி கOசுச
இல்லிலோர் - இல்லாளை இல்லாதோர் ருிசு
இவக்காண் - இங்கே யன்றே ககஅருி
இவர்ந்து - மேல் கொண்டு ககஅஉ
இவறல் - வேண்டும் வழிப் பொருள் கொடாமை சஉஉ
இவறன்மை - உலோபத்தினது தன்மை சஉஅ
இவறி - விரும்பி க00உ
இவறியார் - கைவிடாதார் கஉருி

இவறியான் - பற்றுள்ளஞ் செய்தான் சஙஎ
இழத்தும் - இழப்பேம் கஉருO
இழத்தொறூஉம் - இழக்குந் தோறும் கூசO
இழந்தவன் - (ஆடை) குலைந்த வன் எஅஅ
இழவூழ் - இழத்தற்கேது வாகிய ஊழ் நஎஉ
இழிந்த - தாழ்ந்த கஙநூ
இழுக்கல் - வழுக்குதல் சகருி
இழுக்கம் - ஒழுக்கத்தில் தவறுதல் கநஙந
இழுக்காமை - மறவாமைக் குணம் நிநூசு
இழுக்காறு - தீநெறி ககுச
இழைத்துணர்ந்து-நுண்ணி தாக வாராய்ந்தறிந்து சகள
இழைந்து - உண் ணெகிழ்ந்து ககளள
இளி - இழிவு சுஎO
இளித்தக்க - இளிவாகத் தக்க கஉஅஅ
இறந்தமைந்த - கழியப் பெரிய கூOO
இறல் - இறுதி கஅO
இறன்முறை - இறத்தல் முறை அஅருி
இறும் - முறியும் சளருி
இற்பிறந்தார் - குடிப்பிறந் தார் கூருிக
இனமுறையர் - எமக்கின்ன முறையினே யுடையர் கூகூஅ
இனேத்துணேத்து - இன்ன அளவிற்று அள
இனேயர் - இத்துணே யன் பினர் எகூO
இன்கண் உடைத்து - இன்ப முடைத்தாயிருக்கும் ககருிஉ
இன்சொலினது - இனிய சொற்களேச் சொல்லுத லின் கண்ணது கூநூ
இன்புறூஉம் - இன்பத்தை மிகுவிக்கும் கூச
இன்மையா - இல்லாமை யாக அசக
இன்றுணேயா - இனிய துணே யாக அளருி
இன்னம் - இத்தன்மையம் எகூO
இன்னுச்சொல்-கடுஞ்சொல் நருி
ிகலான் - இவறன்மாலே யன் அசுஙூ
ஈத்துவக்கும் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்த லான் உஉஅ
ஈந்தது - உபகரித்தது ககசஉ
ஈயப்படும் - இடப்படும் சகஉ
ஈரம் - அன்பு கூக
ஈர்ங்கண் - குளிர்ந்த இடம் கOருிஅ
ஈர்ங்கை - உண்டு பூசிய கை கOளள
ஈன்பது - பயப்பது ககுருி
உகாஅமை - உமிழாமை நிஅருி
உக்கக்கால் - இறந்துபட்ட வழி கஉஎO
உஞற்றிலவர் - முயற்சி இலராயினர் சுOச
உஞற்றுபவர் - முயல்வார் சுஉO
உடம்பாடு - மனப் பொறுத்தம் அகூO
உடற்றும் - வருத்தும் கந

உடற்றுபவர் - மூடியாதாக்கிச் செய்யாதார் அகஅ
உடன்று - வெகுண்டு எசுருி
உடுக்கை - ஆடை எஅஅ
உடையேமா - உடையே மாக கஉருி0
உட்கப்படாஅர் - அஞ்சப் பட்டார் கூஉக
உணக்கின் - காயவிடுவ ஞயின் க0கூள
உணங்க - மெலியாநிற்க கஙுக0
உணரற்பாற்று - உணரும் பான்மையை யுடைத்து கக
உண்கண் - மையுண்டகண் க0ககூ
உண்டற்று - உண்டாற் போலும் கக0ள
உண்ணற்க - உண்ணு தொழிக கூஉஉ
உண்பதூஉம் - உண்ணப் படுவதும் கசுசு
உப்பக்கம் - புறம் சுஉ0
உயிரச்சம் - உயிர்பொருட் டான்வரும் அச்சம் ருி0க
உயிர்த்து - மூக்கான் மோந்து கக0க
உய்க்கிற்பின் - அனுபவிக்க வல்லஞயின் சசo
உய்வில் - உய்யமாட்டாமைக் கேதுவாய கஙளச
உரம் - திண்ணிய அறிவு சுo0
உரவோர் - மனவலியுடை யார் கஙுசு
உரனசைஇ - இன்பநுகர்தலே நச்சாது வேறலேநச்சி கஉசுஙூ
உரியாள் - உரிமையாகியாள் கசகூ
உரைசான்ற புகழமைந்த ருிஅக
உலந்த - வற்றிவிட்டன கஙளச
உலைவிடத்து - உலைவுவந் தால், தளர்ச்சி வந்த விடத்து எசுஉ, அஅங
உலைவின்றி - இளையாது சுஉ0
உல்கு - சுங்கம் எருிசு
உவக்காண் - உங்கே கஙஅருி
உவமை - நிகர் எ
உவரி - கடல் எசுஙூ
உழத்தொறூஉம் - அனுபவிக் குந் தோறும் கூசo
உழந்து - வருத்தமுற்று க0ஙக
உழப்பிக்கும் - உறுவிக்கும் கூஙஅ
உழையிருந்தான் - அமைச் சன் சுஙஉஅ
உளவரை - தனக்குள்ள வளவு சஅ0
உள்வீழ்ந்தக் கண்ணும் - சுருங்கியவிடத்தும் கருிருி
உள்ளப்படும் - நன்கு மதிக்கப் படும் சுசுருி
உள்ளல் - கருதுதல் உஅஉ
உள்ள வெறுக்கை - ஊக்க மிகுதி கூ00
உள்ளறிவான் - உளப்பாட்டினை அறிவான் சுஎள
உள்ளற்க-நினையாதொழிக எகூஅ
உள்ளாறும் - மனத்தின்கண் அப்பொழுதே ஆறும் கஉகூ
உள்ளியது - நினைத்த பொருள் ருிசo
உள்ளுள் - உள்ளுள்ளே க0ருிள
உள்ளூர் - ஊர் நடு உகசு
உள்ளொற்றி - உண்ணிகழ் கின்றதுய்த்துணர்ந்து கூஉள
உறவினும் - மிகவருமாயி னும் சுசுகூ

உறன்முறை - உறவுமுறைத் தன்மை அஅரி
உரூஅ - உருமல் கஅருஉ
உரூஅதவர் - நொதுமலர் கஅகசு
உரூஅதோ - உறுவதொன் றன்றே ககசஉ
உறுகண் - துன்பம் உசுக
உறுதோறு - பெற்றுறுந் தோறும் ககஅசு
உறுபசி - மிக்கபசி எஉச
உறுபடையான் - பெரும்படை யுடைய வரசன் சகுஅ
உறூஉம் - மிகுவிக்கும் கூச
உறைபதி - உறைவிடம் கஅகரு
உறைவது - ஒழுகுவது சஉசு
உற்றக்கடை - வந்துற்ற விடத்து ஙஎஉ
ஊக்காது - நோக்காது உருஙு
ஊக்கார் - மேற்கொள்ளார் சசுஙு
ஊக்கி - தொடங்கி சஎஙு
ஊட்டா - உறுவியாது ஙஎஅ
ஊண்மாலையவர் - உண்டலே யியல்பாகவுடையார் கஅஙருரி
ஊதியம் - பயன் உஙக
ஊரா - அடா சுஅக
ஊராண்மை - உபகாரியாந் தன்மை எஎஙு
ஊருணி - ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் உகரி
ஊழ்த்தும் - மலர்ந்து வைத் தும் சுருஅ
ஊறுபாடு - துன்பம் விளை தல் சுசருரி
ஊற்றும்-பற்றுக்கோடாம் சகச
ஊற்றுக்கோல் - ஊன்று கோல் சகருரி
ஊன் - உடம்பு உருக
ஊன்று நிலை - தாங்குந் திண்மை எஅகு
எஃகு - படைக்கலம் எருகு
,, - கூர்மை எஎஙு
எச்சம் - வழியினுள்ளார் (தா னிறந்தழி எஞ்சி நிற்ப தாகலின் எச்சம் என் றார்) ககஉ
எச்சம் - நன்மக்கள் ககச
எஞ்சாது - அஞ்சியொழி யாது சுகஅ
எஞ்சாமை - இடைவிடாது நிற்றல் ஙஅஉ
எண்ணியாங்கு - எண்ணிய வாறு சுசுசு
எண்ணுவம் - (பின்) எண் ணக்கடவோம் சசுள
எண்பொருளவாக - எளிய பொருளவாமாறு சஉச
எதிரதா - (வரக்கடவதாகிய வதனை) முன்னறிந்து சஉசு
எதிர்சாய்தல் - எதிர்தலே யொழிதல் அருஅ
எதிர்சாய்ந்து - ஏற்றுக்கொள் ளாது சாய்ந்து அருரி
எத்தன்மைத்தாயினும் - யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும் ஙருரி
எப்பால் - எவ்வகைப் பட்ட ருஙஙு
எய்தின்று - உற்றது கஉசஅ
எரிமுன்னர் - எரிமுகத்து சஙருரி
எவனவர் - என்செய்வர் ககசுரி
எவ்வது - யாதொருவாற் றான் சஉசு
எவ்வம் - இளிவரவு, துன்பம் உஉங, அருங

எழிலி - மேகம் கள
எழுஞாளேம் - எழுகாஞ்டைய மாயினேம் கஉஎஅ
எள்ளப்படும் - இகழப்படும் ககக
எள்ளற்க - இகழாதொழிக சகக
எறிக - செய்க நிசுஉ
எற்ரு - நீங்காத சுசுங
எற்றிற்கு - எத்தொழிற்கு கoஅo
எற்றென்று - யான்செய்தது எத்தன்மைத்தென்று சுநிநி
எனைத்துணையராயினும் - எத் துணைப் பெருமையுடைய ராயினும் கசச
எனைமாட்சித்தாகியக்கண் ணும் - மாட்சியெல்லா முடைத்தாயவிடத்தும் எநிo
என்றற்று - என்று கருது தலோடொக்கும் ககசஅ
ஒக்கறுதல் - ஆசையாற் ருழ்தல் நகசநி
ஒதப்பாடு - குற்றமுண் டாதல் சசுச
ஒதில - பழுதாம் சசo
ஒதிலார் - அயலார் கஅஅ
ஒதின்மை - பகைமை அகசு
ஒந்திய - உயர்ந்த அகக
ஒமம் - காவல் எநஅ
ஒமரா - காவலற்ற சசஅ
ஒமாப்பு - வலியாதல், அரண் ககஉ, கஉசு
ஒமார்த்தல் - ஒமஞ்செய்தல் சுசுo
ஒழுற்றவர் - பித்துற்ருர் அஎந
ஒர் - அழகு கoநிந.
ஐயுணர்வு - செல்லப்படு கின்ற புலன்கள் வேறு பாட்டான் ஐந்தாகிய வுணர்வு (மனம்) நடநிச

ஐயுறவு - ஐயப்படுதல் நிகo
ஓக்கல் - சுற்றத்தார் சஎந
ஓட்டல் - தாக்குதல் சகசக
ஓட்டார் - பகைவர் அஉசு
ஓட்பம் - ஒண்மை சoச
ஒண்மை - நல்லறிவு அசச
ஒத்தாங்கு - ஒப்ப நிசுக
ஒப்பாரி - ஒப்பு கoஎக
ஓரால் - நீக்குதல் கநிந
ஒருவந்தம் - ஒரு தலையாக, நிலைபெற்ற நிசுந, நிகந
ஒருவுக - விடுக அoo
ஒருவுதல் - ஒழிதல் சுநிஉ
ஒரூஉம் - ஒழியும் அகஉ
ஒல்காமை - தளராமை சுசுஉ
ஒல்கார் - சுருங்கார் கஎசு
ஒல்லாக்கால் - இயலாவிட த்து சுஎந
ஒல்லும் வாய் - இயலுமிட த்து சுஎந
ஒல்லை - கடிது நிசுங
ஒழியவிடல் - ஒழியவிடுக ககந
ஒழுகலாற்ருர் - ஒழுகமாட் டார் உஅசு
ஒழுக்காரு - ஒழுக்கமெறி யாக ககசக
ஒளியார் - அறிவால் ஒள்ளி யார் எகச
ஒள்ளமர்க்கண்ணுள் - ஒள்ளி யவாய் அமரைச்செய்யும் கண்ணையுடையாள் ககஉநி
ஒள்ளியராதல் - தந்நூலறி வுஞ் சொல்வன்மையுந் தோன்ற விரித்தல் எகச
ஒறுக்கிற்பவர் - எள்ளுதற் குரியார் எஎக
ஒற்கம் - தளர்ச்சி சகச.

ஒன்றல் - கூடுதல் அஅசு
ஒன்ரு - இணையின்ரு உஙஙு
ஒன்ருக - தன்னெடிணைப் பதின்றித் தானேயாக நஉஙு
ஒன்ருமை - பகைமை அஅசு
ஓச்சி - தொடங்கி ருசுஉ
ஓச்சும் - செலுத்தும் ருசச
ஓட்டன்ரே - புறங்கொடுத்த லாம் எஎடு
ஓதல் - தவிர்தல் சுருஙு
ஓத்து - வேதம் எஙச
ஓம்பப்படும் - பாதுகாக்கப் படும் கஙக
ஓம்பல் - செய்தல் சஙு
ஓம்பி - போற்றி, மிசைவித்து அக,அடு
ஓம்புவான் - புறந்தருவான் அஙு
ஓரார் - கேளாது சுகருடு
ஓர்த்து - ஆராய்ந்து ஙருஎ
ஓஒவினிதே ; மிகவும் இனி தாயிற்று ககஎசு
கசடற - பழுதற நஙகக
கடப்பாடு - ஒப்புரவு உகக
கடா - ஐயுறுத ருஅருடு
கடாஅக்களிறு - மதக் களிறு கoஅஎ
கடாம் - மதம் ,,
கடி - காவல் கஉoருடு
கடிதல் - ஒழித்தல் ருசகூ
கடிதோச்சி - அளவிறப்பச் செய்வார் போற் ரெடங்கி ருசுஉ
கடுகி - குறைந்து ருசுச
கடுத்தபின் - ஐயுற்ரூல் சுகூஙட
கடுத்தது - மிக்கது எoச
கடைப்பிடித்து - குறிக் கொண்டு கூசச
கடைமுறை - முடிவில் எகூஉ
கடையர் - இழிந்தார் கஙகடு
கட்டபின்-கலேகட்டால் கoஙஅ
கட்டளைக்கல் - உரைகல் ருoருடு
கட்படாம் - முகபடாம் கoஅஎ
கணத்தர் - இனத்தார் எஉo
கணிச்சி - குந்தாலி கஉடுக
கணை - அம்பு உஎகூ
கண் சாய்பவர் - தம்மறிவு தளர்வார் கூஉஎ
கண்டற்று - உணர்ந்தாற் போலும் உசகூ
கண்ணஞ்சா - பாகர்க் கடங்கா ருoo
கண்ணஞ்சாது - செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற் கஞ்சாது ருஅருடு
கண்ணற - கண்ணேட்ட மற கஅச
கண்ணினேண - ஒருவர் கண் களோடு ஒருவர் கண்கள் கஙoo
கண்பாடு - உறக்கம் கoசகூ
கதம் - வெகுளி கஙo
கதுப்பினுள் - தழைந்த கூந்த லினையுடையாள் கஙoருடு
கதுமென - விரைந்து கஙஎஙு
கந்தா - பற்றுக்கோடாக ருoஎ
கரப்பாக்கு அறிந்து - மறை தலேஅறிந்து கஙஉஎ
கரப்பிடும்பை - உள்ளது கரத்தலாகிய நோய் கoருசு
கரப்பிலார் - உள்ளது கர வாது கொடுப்பார் கoருடுடு
கரவு - வஞ்சனை உஅஅ
கரி - சான்று உருடு
கரியார் - இருண்டிருப் பார் உஎஎ

கருக்காய் - இளங்காய் கஙoசு
கரைந்து - அழைத்து நிஉள
கலந்தற்று - கலந்த கலவை போலும் ககஉக
கலுழும் - அழும் ககளங
கலுழ்வது - அழுகின்றது ககளக
கவர்ந்தற்று - நுகர்ந்ததனைநி ஒக்கும் ஙoo
கவறு - சூது சுஉo
கவிகை - குடை நஅகூ
கவிழ்ந்து - இறைஞ்சி ககஙச
கவின் - அழகு கஉநச
கவுள் - கபோலம் சுளஅ
கவ்வித - அலர்தலை யுடைத் தாயிற்று ககசச
கவ்வை - அலர் ககசநக
கழகம் - களம் கூநடி
கழாஅக்கால் - தூயவல்ல மிதித்த காலை அசo
கழிய - மிக சoச
களர் - சேற்று நிலம் நிoo
களையுநர் - களைவார் அளக
கள்வார் - களவினைப் பயில்வார் உகo
கள்வேம் - வஞ்சித்துக் கொள்வேம் உஅஉ
கள்ளற்று - கள்ளுப் போலும் கஉஅஅ
கள்ளாண்மை - பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை உஅக
கள்ளார் - களவினைப் பயிலாதார் உகo
கள்ளொற்றி - கள்ளை மறைத் துண்டு கூஉள
கூறுத்து-செற்றங்கொண்டு நகஉ

கற்றக் கடைத்தும் - கற்ற விடத்தும் அஉந
கன்றிய - மிக்க உஅச
காட்சி - காண்டல் நஅசு
காணலுற்று - காண்டல் வேண்டி கஉசச
காண்கம் - காணக்கட வேம் கஙoக
காண்கிற்பின் - காணவல்ல ராயின் ககo
காண்பரிது - காண்டல் அரிது கசு
காண்பவர் - அநுபவிப் பார் நஎகூ
காண்பு - காண்டல் கசு
காதலம் - காதலை யுடையேம் கஙகச
காதலனுயின் - காதல் செய்த லுடையனுயின் உoக
காதற்று - காதலை யுடைத்து கூசo
காதன்மை-அன்புடைமை நிoள
காமக்கலன் - விரும்பியேறும் மரக்கலம் சுoநி
காமுறுதல் - அவாவுதல் சoஉ
காமுறுவர் - விரும்புவர் நகக
காமுற்றற்று - அவாவினுற் போலும் சoஉ
காம்பு - வேய் கஉளஉ
காயார் - வெகுளார் கஉoஅ
காய்தி - காயா நின்றுய் கசகசு
காரறிவாண்மை - இருண்ட வறிவினையுடையராதல் உஅள
கால்வல் - கால்வலிய சகசு
காழ் - பரல் ககக
காழ்த்த விடத்து - முதிர்ந்த நிலைமைக்கண் அளக

கிழமை - உரிமை எஅடி
கிளவா - சொல்லாத எகடி
கீழல்லார் - சிறியராகார் கூ௰நே
கீழ்தல் - சிதைத்தல், விலக்கல் அ0க
குடங்கர் - குடில் அகூ0
குடம்பை - மூட்டை நேநஅ
குடிமை - குலனுடைமை கநேந
குடியாக - மேன்மேலுயரும் நற்குடியாக சூ0உ
குடியோம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணல் நேகூ
குண நலம் - குணங்களா லுய நலம் கூஅஉ
குழாத்து-அவையின்கண் அசா0
குழாத்தற்று - குழாம் வந் தாற் போலும் நேநஉ
குளவா - குளப்பரப்பு நி2 நே
குறுகுங்கால் - அணுகுழி கக0ச
குறுகுதல் - நணுகுதல் அஉ0
குறியெதிர்ப்பு - அளவு குறித்து வாங்கி அவ்வாங்கிய வாறே எதிர்கொடுப்பது உஉக
குன்றன்னூர் - குன்றத்தை யொக்கும் அருந்தவர் அகூஅ
குன்றிக்கால் - குன்றின் கச
குன்றுவர் - தாழ்வர் கூசுடி
கூத்தாட்டு - கூத்தாடுதல் செய்கின்ற நேநஉ
கூப்பி - குவித்து உசு0
கூம்பும் பருவத்து - வினை மேற் செல்லாதிருக்கும் காலத்து சகூ0
கூழ் - சோறு சுச
கூழ்த்தாகி - உணவிற்றாய் எசடி
கூன்கையர் - வளைந்த கை யினையுடையார் க0எஎ
கெடல் - தவிர்ந்திருத்தல் கூகஉ
கெடாஅ - உரிமையழியாது அ0க
கெடுங்காலை - கெடுங் காலத்து எகக
கெடுநீரார் - இறக்குமியல் பினை யுடையார் சு0டி
கெடுவல் - கெடக் கடவேன் ககசு
கெழீஇ - செறிந்த அகசு
கெழுதகை - உரிமை அ0ச
கெழுதகைமை - உரிமை எ00
கேடில் - அழிவில்லாத ச00
கேண்மை - கேளாந் தன்மை க0சு
கேண்மையவர் - நட்பினை யுடையார் அ0எ
கேளாத்தகைய - செவிடாந் தன்மைய சகஅ
கேளார் - பகையாய் ஏற்றுக் கொள்ளாதார் கூசநே
கைகூப்பி - கைகுவித்து உசு0
கைதூவேன் - கையொழி யேன் க0உக
கைம்மாறு - தலைமாறுக ககஅநே
கையறியா - செய்யுமுறைமை யறியாத அகூசு
கையறியாமை - செய்வதறி யாமை கூஉடி
கையாறு - இடும்பையாக சுஉஎ
கையிகந்த - குற்றத்தின் மிக்க டிசுஎ
கையிகந்து - கைகடந்து சஉஎக
கைவேல் - கைப்படை யாய வேல் எஎச
கொக்கொக்க - கொக்கிருக்கு மாறு போல இருக்க சகூ0
கொடிறு - கதுப்பு க0எஎ

சொடுப்பதூஉம் - பிறர்க் கீவதும் கஂஂரி
கொட்க-புலப்படும் வகை சுசுங
கொட்பு - திரிபு எஅக
கொண்டன்னது - கொண்டு வந்தாற் போலும் கஂஅஉ
கொலை வினையர் - கொலைத் தொழிலை யுடையர் நஉக
கொளக் கிடந்தது - அடையக் கிடந்தது ரிஅக
கொளப்பட்டோம் - நன்கு மதிக்கப்பட்டேம் சுகக
கொளற்கரிதாய் - புறத்தாராற் கோடற்கரிதாய் எசரி
கொளீஇ - பண்ணி கூநஅ
கொள்ளற்க - கொள்ளா தொழிக எகஅ
கொள்ளாக் கடை - செய்யா வழி கககரி
கொற்றம் - வென்றி ரிஅந
கொன்றன்ன - கொன்று லொத்த கஂக
கொன்றுங்கு - கெடுக்கு மாறுபோல ரிநஉ

கோ

கோடா - செப்ப முடைய வராய் கஂஅசு
கோடியுமல்ல - கோடியளவு மன்றி நகஎ
கோடின்றி - கரையின்றி ரிஉந
கோடு - வளைவு உஎக
கோடு கொடேறும் - மேன் மேற் பணைத்தெழா நின் றது கஉசுச
கோட்டக்கது உடைத்து - கொள்ளுந் தகுதியை யுடைத்து உஉ0
கோட்டதாயினும் - கோட்டை யுடைய தாயினும் ரிகக
கோட்டம் - கோடுதல் ககக
கோட்டுப்பூ - கோடுதலைச் செய்யும் மாலை கஎஎந
கோளில் - கொள்கையில்லாத க
கோறல் - கொல்லுதல் நஉக
கௌவை - அலர் ககசந
சலம் - தீய வினை சுசு0
சகாடு - சகடம் சஎரி
சாக்காடு - மரணம் உநரி
சாய - கெடும் வண்ணம் எசக
சாயல் - மேனியழகு ககஅந
சாய்தல் - ஒழிதல் அரிஅ
சாய்பவர் - தளர்வார் கூஉள
சார - நிற்க நஉந
சார்தரா - சாரமாட்டா நஎக
சார்பிலார் - துணையில்லார் சசக
சால-பொறுக்குமளவின்றி சஎரி
சாலப்படும் - பணைத்துவிளையும் கஂநள
சாலும் - அமையும் உரி
சால்பு - அமைதி கஂரி
சாவாமருந்து - அமிர்தம் (சாவாமைக்குக் காரண மாகிய மருந்து) அஉ
சாற்றுவேன் - விரியச் சொல்லுவேன் கஉகஉ
சிதைவிடத்து - சிதைவு வந்த விடத்து ரிகள
சிதைவின்றி - அழிவின்றி ககஉ
சிமிழ்த்தற்று - பிணித்தாற் போலும் உஎச
சிறக்கணித்தாள் - சிறங் கணித்தாள் (சிறங்க ணித்தல் - சுருங்குதல்) கஂகரி
சிறப்பு - வீடுபேறு கஅ

சினத்தாற்றி - சினமாகிய சுற்றத்தின் கண்ணே செலுத்தி குசுஅ
சினைப்பது - தோன்றுவது (சினைத்தல்-அரும்பல்) கஉ0கூ
சீரல்ல - தங்குடிமைக் கொவ்வாத இளிவரவுகள் கூசுஉ
சீரார் - தவத்தினை யுடையார் கூ00
சீர் - பெருமையாகிய ஆற்றல், புகழ் சகூக, க0க0
சீர்த்த விடத்து - செல்லுங் காலம் வாய்த்த வழி குகூ0
சீர்மை - விழுப்பம் கஉங
சுடரும் - ஒளிமிகும் உசுஎ
சுற்றப்படும் - சூழப்படும் குஉகு
சூழற்க - எண்ணுதொழிக உ0ச
சூழாது - எண்ணுது சசுகு
சூழ்ச்சி - விசாரம் சுஎக
சூழ்ந்துவிடும் - துணியும் சகுக
செகுத்து - (விலங்கினுயிரைப்) போக்கி உகுகூ
செங்கோல்-முறைசெய்தல் ஙகூ0
செந்தண்மை - செவ்விய தண்ணளி ஙஉ0
செப்பம் - நடுவுநிலைமை கச2
செம்பாகம் - பாதி அளவு க0கூஉ
செம்மல் - தருக்கு அ2அ0
செம்மாக்கும் - இறுமாக்கும் க0எச
செயப்பட்டார் - செய்வித்துக் கொண்டவர் க0கு
செயற்பால - செய்துகொள்ளப்படுமவற்றை சஙஎ
செயற்பாலது - செய்தற்பான்மையது ச0
செயிர் - குற்றம் உகுஅ
செயிர்ப்பவர் - பகைப்பார் அ2அ0
செயுநீர - தவிராது செய்யும் நீர்மையையுடைய உகூ
செய்கலாதார் - செய்ய மாட்டாதார் உசு
செய்கலான் - செய்யான் அசஅ
செய்கிற்பான் - முடிவு செய்ய வல்லான் குகுகு
செய்தக்க - செய்யத் தக்கன சசுசு
செய்தவக்கண்ணும் - செய்த விடத்தும் ஙகஉ
செய்தவம் - செய்யப்படுவ தாய தவம் உசுகு
செய்தற்று - செய்தாற் போலும் கஙஉங
செய்தாங்கு - செய்தாற் போல அ0ங
செய்யல-செய்யமாட்டா க0அசு
செய்யவள் - திருமகள் கசுஎ
செய்யற்க - செய்யாதொழிக உ0கு
செய்வல் - செய்யக் கடவேன் க0உங
செருக்கி - களித்து கூகசு
செலச்சொல்லி-மனங்கொளச் சொல்லி சஉச
செல்கிற்பின் - செல்லவல்லவாயின் ககஎ0
செல்லா - வறுமைசூர்ந்த ஙஙக0
செல்லாது - நடவாது கஅ
செல்லாமை - பிரியாமை ககஙக
செல்லும்வாய் - எய்துமிடம் ஙங
செல்லும்வாய் - முடிவதோ ருபாயம் சுஎங
செல்விருந்து - சென்ற விருந்து அசு

செவ்வி - ஏற்றகாலம் கஉ0
செவ்வியான் - செம்மையுடை யவன் ககக
செரூய் - தூர்க்கமுயல்வா யாக கஉ00
செறி - நெருக்கம் கஉஎந
செறிதொடி - நெருங்கிய வளை களை யுடையாள் கஉஎந
செறிவு - அடக்கம் கஉந
செறின் - முனியின் எஎஅ
செறுநர் - பகைவர் சஅஅ
செறுப்ப - அடக்க கநகஅ
செற்றூர் - செற்றங்கொண் டார் நகந
செற்று - கெடுத்து கசஅ
சேண் - உயர்ந்த அசுக
சேயிழை - சிவந்த இழையினை யுடையாள் கககO
சேறி - செல்வாயாக கஉசச
சொல்லற்க -சொல்லாதொழிக கஅச
சொல்லாவிடல் - சொல்லாது விடுக சுகஎ
சொல்லிழுக்குப்பட்டு - சொற் குற்றத்தின்கட்பட்டு கஉஎ
சொற்காத்து - புகழ்நீங்காமற் காத்து நிசு
சொற்கோட்டம் - சொல்லின் கட் கோடுதல் கககக
சோகாப்பர் - துன்புறுவர் கஉஎ
சோரார் - வழுப்படச் சொல் லார் எஉக
சோர்விலாள் - நற்குண நற் செய்கைகளில் கடைப்பிடி யுடையாள் நிசு
சோர்வுபடும் - கெடும் சO0நி
ஞாட்பு - போர்க்களம் கO அஅ
ஞாலம் - நிலவுலகம் கO உ
தகவு - நடுவுநிலைமை ககச
தகுதி-நடுவுநிலைமை, பொறை ககக, கநிஅ
தகை - நன்மை நிசு
தகைசான்ற-நன்மையமைந்த ,,
தகைமாண்ட - சாபவருள்கட் கேதுவாய பெருமை மாட் சிமைப்பட்ட அகஎ
தகையவாய் - குணங்களை அவாவி சுசஉ
தக்காங்கு-நடுவாக நின்று நிசுக
தக்கார் - நடுவுநிலைமையுடை யவர் ககச
தங்கியான் - தங்கினவன் கஎள
தங்கிற்று - நிலைபெற்றது சுகந
தஞ்சம் எளியன் - மிக எளி யன் அசுந
தடிந்து - குறைத்து கள
தணந்தமை - பிரிந்தமை கஉந
தணிக்கும் - தீர்க்கும் கசஅ
தண்டா - தணியா ககஎக
தண்ணம் - குளிர் கஉஎள
தண்பதம் - தாழ்ந்தபதம் நிசஅ
தண்மை - தண்ணளி நO
தந்நலம் - தம்புகழ் கஎசு
தமர் - தமக்குச் சிறந்தார் சசந
தமியர் - தனியர் உஉக
தரற்கு - செய்துகோடற் கண் அநிக
தருவாரில்-விற்பாரில்லை உநிசு
தலைச்செல்லாவண்ணத்தால் - பின்னும் அது செய்யாமற் பொருட்டு நிசுக
தலைப்படுவர் - எய்துவர் நநிசு
தலைப்படுவார்-பெறுவார் கஉஅக
தலைப்பிரிதல் - நீங்குதல் கநிநி

தலைப்பிரியா - நீங்காத கூள
தலைப்பெய்து - கண்டு சoடி
தலைவந்த-தன்மேல்வந்த எசுள
தவல் - பிழைத்தல் அடுசு
தவா - கெடாத நசுள
தவ்வென்னும் - சுருங்கும் (தவ்வென்னும் என்பது ஒலிக்குறிப்பு) ககசச
தவ்வை - மூத்தவள் ககுள
தழீஇ - அணைத்து டுசசு
தழீஇயது-கட்பாக்குவது சஉடி
தள்ளா - குன்றாத எநக
தள்ளாது - தவறாது உகo
தள்ளினும் - பால்வகையாற் கூடிற்றில்லையாயினும் டுகசு
தள்ளும் - தவறும் உகo
தறுகண் - பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறம் எளந
தற்று - ஆடையைத் தற்றுக் கொண்டு (தற்றுதல்— இறுக வுடுத்தல்) கoஉந
தாக்கற்கு - பாய்தற்பொருட்டு சஅசு
தாக்குறின்-எதிர்ப்படின் டுகக
தாமரைக்கண்ணான் - செங்கண்மால் ககoந
தாமரையிளள் - திருமகள் சுகள
தாஅயது - கடந்த சுகo
தார் - தூசிப்படை எசுள
தாழ்ச்சி - நீட்டிப்பு சுளக
தாழ்விலா - கேடில்லாத எநக
தாழ்வு - வறுமை ககள
தாளாண்மை - முயற்சி சுகந
தாளாற்றி - முயறலைச் செய்து உகஉ
தானம் - அறநெறியான்வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல் ககூ
தீகழ்தரும் - புறத்துப்புலஞ்சும் கஉஎந
திட்பம் - திண்மை சுசுக
திண்மை-கலங்கா நிலைமை டுசு
திரிந்தற்று - கெட்டாற் போலும் கoo0
திரிந்து - வேறுபட்டு கூo
திரு - செல்வம், திருமகள் ககுஅ, களக
திருச்செற்று - செல்வத்தைக் கெடுத்து ககுஅ
திருத்துதல் - அழகியதாதல் கoகக
திருவுடையர் - நன்மையுடையர் கoஎஉ
திறப்பாடு - முடித்தற்கேற்ற கூறுபாடு சுசoo
திறனல்ல - செய்யத்தகாத கொடியவற்றை கடுள
தினல் - தின்கை உடுச
தினற்பொருட்டு-ஊன்தின்கை காரணமாக உடுசு
தீதொரீஇ - தீயதனீக்கி சஉஉ
தீப்பால - தீமைக் கூற்ற வாகிய வினைகள் உoசு
தீப்பிணி - தீயநோய் உஉள
தீர - முற்ற, அற நசுஅ, சுஎடி
தீரத்துறந்தார் - முற்றத் துறந்தார் நசுஅ
தீர்ந்தார் - நீங்கினர் களo
தீர்வாம்-நீக்கக்கடவேம் கoசுந
தீவாழ்க்கையவர் - இழிதொழில் வாழ்க்கையுடையார் நந.o
தீவினைப்பால் - தீவினையாகிய பகுதி உoகூ
துச்சில் - ஒதுக்கு நசo

துஞ்சல் - உறங்கல் கoசக
துஞ்சா - துயிலா ககஎக
துஞ்சினர் - உறங்கினர் கூஉசு
துடைத்தவர் - நீக்கினவர் கoஎ
துணிக - தொடங்குக சசுஎ
துணிவு - கலங்காமை சுசுக
துணிவுடைமை - ஆண்மை யுடைமை நஉங
தூணைக்கூறின் - இவ்வள வென்று எண்ணுற்கூறி அறியலுறின் உஉ
தூணைத்தூணை - தகுதியளவே அளவு அஎ
தூணையல்வழி - தூணையாகா வழி கஉகக
துப்பாய - நல்ல சஉ
துப்பாயதூஉம் - உணவாய் நிற்பதும் கஉ
துப்பாயார் - பற்றுக்கோ டாயினர் கoசு
துப்பார்க்கு - உண்பார்க்கு கஉ
துப்பு - உணவு கஉ
துப்புரவு - அனுபவிக்கப் படுவன, நுகர்ச்சி உசுங,நுஎஅ
துயிற்றி-துயிலப்பண்ணி ககசுஅ
துய்க்க - உண்க கூசச
துய்த்தல் - நுகர்தல் நுஎஎ
தூரீஇயற்று - நாடுதலே யொக்கும் கூஉக
தூலையல்லார் - இழிந்தார் (தூலை—ஒப்பு) கூஅசு
தூவர - மிக,முற்ற கூசச, கoஙிO
தூவ்வாதவர் - நல்கூர்ந்தார் சஉ
தூவ்வாமை - நல்குரவு கூச
தூவ்வாய்-நுகரக்கருதாய், கஉகச
தூவ்வான் - வலியிலன் அசுஉ
தூளக்கற்ற - நீலேபெற்ற சுகக
தூறந்தார் - இருவகைப் பற்றினையும் விட்டார், களைகணனவராற்றுறக் கப்பட்டார் உஉ, சஉ
தூறவற்க - விடாதொழிக கoசு
தூறவாமை - முற்றத்தூறத் தலேயாகவும் அது செய் யா தொழிதல் கoஙிO
தூனி - வெறுப்பு, புலவி எசுக, கஉகச
தூனித்து - ஊடி கஉகO
தூன்புறூஉம் - தூன்பத்தை மிகுவிக்கும் கூச
தூன்னற்க - செய்யா தொழிக உoக
தூன்னுமை - மேவாமை நுகசு
தூன்னி - பொருந்தி சகக
தூர் - பற்றுக்கோடு சஙிஙி
தூக்கம் - நீட்டித்தல் சுசுஅ
தூக்கார்-ஆராய்தலிலராய் கoங
தூக்கின் - ஆராயின் கoங
தூங்கற்க - நீட்டியா தொழிக சுஎஉ
தூங்காது - நீட்டியாது சுஎஉ
தூங்காமை - விரை வுடைமை நுஅங
தூங்குக - நீட்டிக்க சுஎஉ
தூங்கும் - தூங்கா நின்றன. ('தூங்கும்' என்பது ஒன்றி னென்று மிகாது இரண் டும் ஒத்த சீர என்பது தோன்ற நிற்றது.) ககசுங
தூவாத - வெய்யசொற்கள் சுஅஙி
தூவி - சிறகு ககஉO
தூறு - குவை சநடு
தூற்றுகொல் - அறிவி யாவோ ககஙிஎ

தூற்றுதல் - பலருமறியப் பரப்புதல் கஅஅ
தெண்ணீர்-தெளிந்தநீர் கoசுடு
தெருளாதான் - ஞானமில் லாதவன் உசஙூ
தெவ் - பகைவர் சுஙக
தெளிவிலது - இனத்தோடுந் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத(வினை) சசுச
தெள்ளியராதல் - அறிவுடைய ராதல் நுஎச
தெறல் - கெடுத்தல் உசுச
தெறூஉம் - சுடாநிற்கும் ககoச
தெற்றென்க - தெளிக நிஅத
தென்புலத்தார் - பிதிரர் [பிதிரராவார் படைப்புக் காலத்து அயனுற் படைக் கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கிடம்தென் றிசை யாதலின் 'தென் புலத்தார்' என்றார்] சந
தேராது - ஆராயாது நிoக
தேர்ச்சி - சூழ்ச்சி சுநடு
தேர்ந்துகொளல் - அருமை யையோர்ந்துகொள்க சசக
தேறப்படும் - தெளியப் படும் நிoத
தேறற்க - தெளியா தொழிக நிoக
தேறற்பாற்றன்று - தெளி தன்முறைமைத்தன்று அஉடு
தேறியார் - தெளிந்தார் கஙநிச
தேற்றம் - செய்தற்கட் கலங் காமை நிகநூ
தேற்றுதல்-தெளிவித்தல் கூகூநூ
தொகை - குழுவு எகக
தொடங்கற்க - தொடங்கா தொழிக சகூக
தொடலை - மாலை ககநுநி
தொடலைக்குறுந்தொடி - மாலைபோலத் தொடர் ந்த சிறுவளையினை யுடையாள் ககநுநி
தொட்டனைத்து - தோண் டிய வளவிற்றுக நுகூசு
தொல்லை - பழைமை அoசு
தொல்வரவும் - பழைய குடிவரவினையும் கoசநூ
தொழுதேத்தும் - தொழுது துதியாநிற்பர் கூஎo
தோட்கப்படாத - துளக்கப் படாத சதஅ
தோட்டார் - பூவினை யணிந்த ககoநி
தோயார் - தீண்டார் கூகச
தோற்றம் - உயர்ச்சி கஉச
நகல் - மகிழ்தல் அசுo
நசை - ஆசை கoசநூ
நசைஇ - நச்சி கஉசுந
நசையியார் - நச்சப்பட்ட காதலர் கஙகூக
நடுக்கற்ற - துளக்கமற்ற சுநிச
நடுவிகந்து - நடுவு நிற்றலை யொழிந்து ககநூ
நணித்து - சிறிதுபொழுதுள் உளவாம் அநிசு
நண்ணுர் - பகைவர் கoஅஅ
நயத்தக்க - விரும்பத்தக்க நிஅo
நயப்பித்தார் - உடம்படும் வகை சொல்லியவர் ககஅகூ
நயம்-ஈரம், உவகை கூகூஅ, நஉகச
நயவற்க-விரும்பாதொழிக சநஉக

நயனில - விருப்பமிலவாகிய செயல், நீதியொடுபடாத ககஉ, ககள
நயனுடையான் - ஒப்புரவு செய்வான் உகசு
நலக்குரியார் - எல்லா நன்மை களும் எய்துதற்கு உரி யார் கசக
நல்லாறு-நல்லொழுக்கநெறி சக
நல்விருந்து-தக்கவிருந்தினர் அச
நல்வினை - வீட்டிற்கேது வாகிய அறம் நஉடு
நவிறொறும் - கற்குந் தோறும் எஅந
நள்ளா - பொருந்தாது கஉ
நற்பாலவை - தூயவினையான் வந்த பொருள்கள் சுடுக
நற்பொருள் - மெய்ந்நூற் பொருள் கoசசு
நனி - மிக சoந
நனைகவுள் - மதத்தானனைந்த கபோலம் சுஎஅ
நன்றல்லது - தீமை கoஅ
நன்றறிவார் - தமக்குறுதி யாவனவறிவார் கoஎஉ
நன்றின்பால் - நல்லதன்கண் சஉஉ
நன்றாக்காது - அருளே கோக் காது உடுந
நன்னயம் - இனிய வுவகை கள் நகச
நாகரிகம்-கண்ணோட்டம் டுஅo
நாச்செற்று - உரையாடா வண்ணம் நாவையடக்கி நஉடு
நாடாச்சிறப்பு - அளவிறந்த சிறப்பு எச
நாணுள்பவர் - நாணினது சிறப்பறிந்து அதனை விடாதொழுகுவார் கoகள
நாநலம் - நாவா னுளதாய நலம் சுசக
நாமநீர்-அச்சந்தருங்கடல் கசசு
நாரின்மை - மூறிந்த சொற் செயலுடைமை அநந
நார் - ஈரம் அநந
நிச்சநிரப்பு - நாடோறும் இர வான் வருந்தித் தன் வயிறு நிறைத்தல் டுகஉ
நிரந்தவர்-(தமக்கு வாய்க்கு மிடம் பெருந்துணையும்) கூடியொழுகுவார் அஉக
நிரந்து - நிரல்படக் கோத்து சுசஅ
நிலமக்கள் - போரின்க ணிலையுடைய வீரர் எஎo
நிலையஞ்சி - பிறப்பு நின்ற நிலையை அஞ்சி (பிறப்பு நின்றநிலையாவது இயங் குவ நிற்பவென்னும் இருவகைப் பிறப்பினும் இன்பமென்ப தொன் றின்றி உள்ளன வெல் லாந்துன்பமேயாய நிலை மை) நஉடு
நில்லன்மின் - நிற்றலையொழி மின் எஎக
நிறை - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல் டுஎ
நிறையுடைமை - சால்புடை மை கடுச
நீடின்றி - நீடுதலின்றி டுசுசு
நீட்டல் - சடையாக்கல் உஅo

நீழலவர் - தண்ணளியுடை யோர் கoஙச
நீள்புகழ் - பொன்றுது நிற் கும் புகழ் உஙச
நுசுப்பு - இடை கசகஞி
நுட்பம் - நுண்ணறிவு சுஙசு
நுணங்கிய-நுண்ணிதாகிய சகக
நுண்ணியம் - யாம் நுண் ணறிவுடையேம் எகo
நுதுப்பேம் - அவித்தும் கசச அ
நெஞ்சிற்றுறவார் - நெஞ் சாற்பற்றருதுவைத்து உஎசு
நெநீர் - விரைந்து செய்வ தனை நீட்டித்துச் செய்யு மியல்பு கூoஞி
நெடும்புனல் - ஆழமுடைய நீர் சகூஞி
நோதக்க - வெறுக்கத்தக் கனவற்றை அoஞி
நோய்ப்பால - துன்பஞ்செய் யுங் கூற்றவாகிய பாவங் கள் உoசு
நோலாதவர் - தவஞ்செய்யா தார் உஎo
நோற்கிற்பவர் - பொறுப் பவர் கஞிக
நோஞ் - வருத்தம் பொருத கசகஙஉ
நோன்பு - தவம் நஙசச
நோன்மை - பொறை சஅ
நோன்றல் - பொறுத்தல் உசுக
பகச்சொல்லி - தம்மைவிட்டு நீங்குமாற்றுற்புறங்கூறி கஅள
பக்குவிடும் - பிளந்து போம் கoசுஅ
படலாற்று - துயில்கில வாய் கசகளஞி
படாஅதி - படாதொழிவா யாக கஙஉகo
படாஅமை - உளவாகாமல் நஙஅ
படியுடையார் - நிலமுழுதும் ஆண்டார் சுoசு
படிவத்தர் - விரதவொழுக் கினர் ஞிஅசு
படிறு - வஞ்சனை கஙக
பட்டன்று - கிடந்தது கஙகக
பட்டாங்கு - பட்டதுபட கசஅக
பட்டி - பட்டி (பட்டி போன்று வேண்டிய வாறு ஒழுகல்) கoஎச
பணை - பெருமை கஉகச
பண்பிலது - நீமை பயப் பது அளக
பண்பிலார் - நீக்குண முடையார் அகக
பண்பின்மை - நீக்குணம் அஞிக
பதடி - பதர் கஙகசு
பதம் - செவ்வி ஞிசஅ
பதி - இடம் கoகஞி
பயந்தற்று - (வானம்) பெய் தாற்போலும் கஙகஙஉ
பயமிலர்-பயன்படுதலிலர் எஉஅ
பயவா - விளையாத சoசு
பயன்சாரா - பயனெடு படாத கஙகச
பயிரொறும் - பயிலுந் தோறும் எஅஙு
பரத்த - பரத்தமைபுடை யாய் கஙஉக
பரிதல்-வருந்துகின்றது கஉசஙு
பரிந்தோம்பி - நிலையாப் பொருளை வருந்திக் காத்து அஅ

பரியது - எல்லா விலங்கினும் தான் பேருடம்பினது ருகக
பரியும் - அஞ்சாநிற்கும் ரு0உ
பருவந்து - (நல்குரவான்) வருந்தி அக
பருவரார் - வருந்துவதுஞ் செய்யார் ககஉசு
பல்லாற்றுல் - ஒன்றையொன் றெவ்வாத சமய நெறிக ளெல்லாவற்றினும் உசஉ
பழி பிறங்கா - (பிறராற்) பழிக்கப்படாத சுஉ
பழுதென்னும் - பிழைப்ப வெண்ணும் சுஙக
பற்றற்றகண்ணும் - செல்வந் தொலைந்து வறியனைவழி யும் ரிஉக
பற்றற்ற கண்ணே - ஒருவன் இருவகைப்பற்றும் அற்ற பொழுதே நசக
பற்றற்றான் - எல்லாப் பொரு ளையும் பற்றிகின்றே பற் றற்ற இறைவன் நரி0
பற்று - வெறுப்பன அரிஉ
பற்றற்றி - பற்றியவிடம் விடாதே நின்று எசஅ
பற்றுள்ளம் - பொருளைவிடத் தகுமிடத்து விடாது பற்று தலைச் செய்யு முள்ளம் சஙஅ
பணி - நடுக்கம் கஉஉங
பணியரும்பி - நடுக்கமெய்தி
பணிவாரும் - நீர்வார் கின்ற கஉஙஉ
பனுவல் - நூல் உக
பன்மாயக்கள்வன் - பல பொய்களை வல்ல கள் வன் கஉரிஅ
பாடிலர் - ஆண்மையிலர் கo சு
பாடேன்றும் - தன் பெரு மையை நிலைநிறுத்தும் ருகஉ
பாத்து - பகுத்து சச
பாரிக்கும் - வளர்க்கும் அருக
பாரித்து - விரித்து ககஙங
பால் - ஊழ் நஉசு
பிரியலம் - பிரியேம் கஙகரு
பிழைத்தது-தப்பியவாறு எஎக
பிழைத்துணர்ந்தும் - பிறழ வுணர்ந்தவழியும் சகஎ
பிழையாதற்று - தப்பாது ந0எ
பிறங்கா - பழிக்கப்படாத சுஉ
பிறங்கிற்று - உயர்ந்தது உங
பிறனியலாள் - பிறனுக் குரிமை பூண்டு அவனு டைய இயல்பின்கண் ணே நிற்பாள் கசஎ
பின்சார - பின்னே நிற்க நஉங
பீடு நடை-பெருமித நடை ருகு
பீழிக்கும் - வருத்தும் அசஙங
பீழை - துன்பம் சுருஅ
புக்கில் - எஞ்ஞான்று மிருப்பதோ ரில் நசo
புணர்ச்சி - ஒரு தேயத்த ராதல் எஅரு
புரளவிடல்-கழிய விடுக எரிருி
புரிந்தொழுகுவார் - விரும்பி யொழுகுவார் கசஙந
புரை - குற்றம் உகஉ
புலத்தக்கனள் -புலத்தற் கமைந்தாள் கஙகசு
புலப்பல் - புலக்கக் கட வேன் கஉருக
புலைவினையர் - புலைத்தொழி லினர் நஉசு

புல்லற்பாற்று - பொருந்தற் பான்மை யுடைத்து அஉக
புறத்தாறு-புறமாகிய நெறி சசு
புறப்படுத்தாலுகும் - புறத் திட்டாலும் நிகo
புறனழீஇ - ஒருவனைக் காணுதவழி இகழ்ச் துரையால் அழித்துச் சொல்லி கஅஉ
புற்கென்ற - புல்லிய வாயின கஉசுக
புன்கேண்மை - தீநட்பு அகநி
புன்சொல் - பழித்துரை கஅக
புன்மை - குற்றம் களச
பூசனை - பூசை கஅ
பூப்பர் - பொலிவர் உசஅ
பூரியர் - கீழ்மக்கள் கூகக
பெட்டக்கதாகி - விரும்பத் தக்கதாய் எஙஉ
பெட்டாங்கு -வேண்டிய வாறு கoஅ
பெட்டு - காதலித்து கசக
பெட்ப - விரும்பிய வற்றை கஉநிள
பெயக்கண்டு-இடக்கண்டு நிஅo
பெயரார் - நிரியார் கூஅக
பெயல் - பருவ மழை நிசநி
பெயர்நிரீஇயற்று-நீரைப் பெய்து அதற்கேமஞ் செய்ததனேடொக்கும் சுசுo
பெரிதாற்றி - மிகவு மாற்றி கஉஎசு
பெருந்தகைமை - உயர்குடிப் பிறப்பு கூசுஅ
பெருந்தக்க மேம்பட்ட நிச
பெருமிதம் - மேம்பாடு, தருக்கு சஙக, கூஎக
பேணிக்கொளல் - துணை யாகக் கொள்க சசஉ
பேராண்மை - பெரிய ஆண் டகைமை கசஅ
பேராவியற்கை - ஒருநிலை மையனுமியல்பு நஎo
பேர்த்து - மாறி ந நிள
பைதல் - துன்பம் ககளஉ
பைய - மெல்ல கoகூஅ
பொச்சாந்து மறந்து ககூக
பொச்சாப்பு - சோர்வு உஅநி
பொத்துப்படும் - புரை படும் சசுஅ
பொய்யற்க - பொய்யா தொழிக உகஙட
பொருண்மாலையாளர் - பொருளியல்பே தமக் கியல்பாகவுடையார் கஉநo
பொருளல்லது - பாவம் உநிச
பொருளல்லவற்றை-மெய்ப் பொருளல்லவற்றை நடுநிக
பொருளற்றூர் - ஊழான் வறியராயினூர் உசஅ
பொருளாட்சி - பொருளாற் பயன் கோடல் உநிஉ
பொருள்தீர்ந்த - பயனினீங் கிய ககூக
பொறியின்மை-பயனைத் தருவ தாய விதியில்லாமை சுகஅ
பொன்று - அழிவில்லா நடசு
பொன்றுமை-இறவாமை அஅசு
பொன்றுங்கால் - இவ்வுடம் பினின்றும் உயிர்போங் காலத்து நடசு
போகவிடல் - கைவிடுதல் அஙக
போகாறு - போகின்ற நெறியளவு சஎஅ

போகூழ் - கைப்பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழ் நஎக
போதாகி - பேரரும்பாய் முதிர்ந்து கஉஉஎ
போதாய் - போதருவா யாக ககஉங
போது - பேரரும்பு கஉஉஎ
போழப்படாஅ - அறுக்கப் படாத கக0அ
போற்றுக்கடை - குறிக் கொண்டுகாவாவிடத்து நகருி
மங்கலம் - நன்மை சு0
மடுத்தவாய் - விலங்கிய இடம் சுஉச
மட்பகை - மட்கலத்தை அறுக்குங் கருவி, மண் ணைப் பருக்குங் கருவி அஅங
மதலையாம்-தாங்குவதாம் சசக
மதிமுட்டம் - இயற்கையா கிய நுண்ணறிவு சுநசு
மயலாகும் - மயங்குதற் கேதுவாம் நசச
மரத்தற்று - மரத்தினை யொக்கும் உகள
மரீஇயவன்-பயின்றவன் உஉள
மருங்குடையார் - கிளை யுடையார் ருஉசு
மருங்கோடி-செங்நெறிக்கட் செல்லாது கொடு நெறிக் கட் சென்று உக0
மருட்டியற்று - மயங்கி னெற்போலும் க0உ0
மருவுக - பயில்க அ00
மருள்தீர்ந்த - மயக்கத்தி னீங்கிய ககக
மலைந்து - செய்து சுருிள

மல்லல் - வளப்பம் உசருி
மழித்தல் - தலைமயிரை மழித்தல் உஅ0
மறக்கல்லா - மறக்கமாட் டாத கஉகள
மறவர் - வீரர் எஎஅ
மறலி - மறப்பு சு0ருி
மறுகும் - சுழலா நின் றது ககஙக
மறுமையிலாளன் - மறு மைப்பய னில்லாதான் க0ச
மறைமொழி - மந்திரம் உஅ
மனத்திட்பம் - மனத்தினது திண்ணம் சுசுக
மனநலம் - மனத்தது நன்மை சருிள
மனைத்தக்க - மனையறத் திற்குத் தக்க ருிக
மன்னுவாம் - உளவாகா ருிருச
மன்னிய - நிலைபெற்ற சுகஉ
மாக்கள் - மாந்தர் நஉக
மாசற்ற - குற்றம் அற்ற சுசக
மாடு - செல்வம் ச00
மாணடி - மாட்சிமைப் பட்ட அடி ங
மாணுக்கடை-அல்லாக்கால் ருிள
மாணுத - ஏலாதன அசுங
மாணுர் - பகைவர் அஉங
மாணிழை - மாண்ட இழையினையுடையாள் ககசச
மாண்டற்கரிது - நன்றுத வில்லை களள
மாண்பு - நற்குண நற் செய்கைகள் ருிக
மாறல்ல - மாறுகொள் ளாத கசச
மாற்றலர் - பகைவர் எசக

மிகப்பட்டு - தான் மேம்பட்
டுத் தன்மிருதி காட்டி கoஎச
மிக்கற்று - அளவின்
மிக்காற்போலும் கஙoஉ
மிச்சில் - மிக்கது அடி
மீக்கூறும் - உயர்த்துக்
கூறும் ஙஅசு
முகடி - சேட்டை சுகள
முகனமர்ந்து - முகமினிய
னாய் அச
முதுவர்-தம்மின் மிக்கார் எகடி
முந்துறும் - முற்பட்டு
நிற்கும் ஙஅo
முயற்றின்மை - முயற்சி
யில்லாமை சுகசு
மூரண் - மாறுபாடு சகஉ
மூரிந்து - இழந்து அசக
மூறி - தளிர் ககஙஙட
மெய்வேல் - தன்மார்பின்க
ணின்றவேல் எஎச
மென்னீரள் - மெல்லிய வியற்
கையை யுடையள் கக்கக

மே

மேவற்க - மேலிட்டுக்
கொள்ளற்க அளள
மேற்கொளீஇ - மேற்கொ
ள்ளப்பண்ணி கஙஉ
மைந்து - வலி டுஙக
மையல் - மயங்குதல் அஙஅ
மையாத்தி - மயங்கா நின்
றாய் ககஉ
மொய்ம்பினவர் - வலியினை
யுடையார் சகஉ
யாக்க - செய்க எகஙட
யாங்கணும் - எவ்விடத்
தும் அசுச
யாண்டும் - எக்காலத்தும் ச
வகுத்தான் - தெய்வம் ஙளள
வட்டாடியற்று - வட்டா
டினூற் போலும் (வட்
டாடல் - உண்டையுரு
ட்டல்) சoக
வணங்கிய - பணிந்த சகஙக
வண்பயன் - வளப்பத்தை
யுடைய விளையுள் உஙக
வரிசையா - தத்தந் தகுதிக்
கேற்ப டுஉஅ
வல்லரண் - அழியாதநகரி எஙள
வல்லுருவம் - வலிவுடை
யார் வேடம் உளஙட
வழங்காதெனின் - பெய்
-யாதெனின் ககஙக
வழுக்கி - மறந்து கஙஙக
வழுத்தினூள் - வாழ்த்தி
னூள் கஙகள
வளவரை - செல்வத்தி
னெல்லை சஅo
வள்ளி - கொடி கஙoச
வள்ளியம் - வண்மையுடை
யேம் டுஙகஅ
வறங்கூர்ந்தனையது - வறு
மைமிக்காற் பெ ரு ல் வ
தோரியல்பினது கoகo
வன்கணது - தறுகண்மை
யை யுடையது எசுச
வன்கணவர் - அருளிலா
தார் உஉஅ
வன்பாட்டது - வலிமைப்
பாடுடையது கoசுஙட
வன்பால் - வன்னிலம் எஅ
வாயில் - வழி சு
வாலறிவன் - மெய்யுணர்
வினையுடையவன் உ
வாழுநம் - வாழ்தும் ஙஙஙஙட

வாளற்று - ஒளியிழந்து கஉசுக
வீசும்புளார் - வானத்துளார் உஞி
விதிரார் - தெறியார் க0எள
விதுப்புற்று - விதும்ப லால் கஉகூ0
வித்தகர் - சதுரப்பாடுடை யார் உகஞி
வியவற்க - தன்னை நன்கு மதியாதொழிக சங்க
விருந்தொரால் - விருந்தி னரை ஏற்றுக்கொள் ளாது நீக்குதல் கடுஙு
விருப்பரு - அன்பருத உஞஉ
விழைதகை - விழையப் படுந்தன்மை அ0ச
விளித்தற்று - அழைத்தா லொக்கும் அகூச
விளிந்தார் - இறந்தார் கசஙு
விஞவு - பயன் உஅச
விறல் - வெற்றி கஅ0
விற்றுக்கோட்டக்கது - விற் ருயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து உஉ0
வினபடுபாலால் - செயல் பட்ட கூற்ருனே உஎக
வினையாண்மை - வினையை யாளுந்தன்மை கூ0ச
வீங்கிய - பூரித்த கஉஙங
வீயா - தொலையாத உஅச
வீழ்த்த - கோத்த கஉடுக
வீற்றிருக்கை - அரசிருக் கை எஅகூ
வெஃகா - விரும்பாத களக
வெஃகாமை - வேண் டாமை களஅ
வெஃகி - விரும்பி களஉ
வெருவந்து - வெருவி ருசுக
வெரூஉம் - அஞ்சும் ருகக
வெளிறு - வெண்மை ரு0ங
வெறி - நறுமாற்றம் ககஙங
வெறுக்கை - ஊக்கமிகுதி சு00
வெறுத்தக்க - செறியத் தக்க கூகூங
வென்றீக - வெல்வாளுக கஉசுஅ
வேட்ட - விருப்பங்கூர்ந்த கக0ரு
வேபாக்கு - வெய்துறல் ககஉஅ
வேரார் - வெகுளார் சஅள
வேர்ப்பர் - வெகுள்வர் சஅள
வேலி - ஏமம் க0ககசு
வேளாண்மை - உபகாரம் அஅ
வைகல் - நாடோறும் அங
வையகம் - உலகம் எரு

திருக்குறள்

பாட்டு முதற்குறிப்பகராதி

[எண் குறள் எண்ணைக் குறிக்கும்]

அகடாரார்	௩௱௨	அந்தணர் நூற்	௨௦௭
அகப்பட்டி	௪௦௩	அமரகத்தாற்	௩௦௭
அகரமுதல	௩	அமரகத்துவ	௩௰௬
அகலாதணு	௨௯௨	அமிழ்தினு	௨௭
அகழ்வாரை	௬௭	அமைந்தாங்	௪௰௪
அகனமர்ந்து	௩௪	அரங்கின்றி	௪௬௪
அகனமர்ந்தீ	௩௭	அரம்பொரு	௩௩௩
அஃகாமை	௯௬	அரம்போலு	௩௭௬
அஃகியகன்	௯௪	அரிதரோதேற்	௪௩௯
அங்கணத்து	௨௭௨	அரிதாற்றி	௪௩௰
அசையியற்	௪௪௩	அரியகற்ருசற்	௪௯௩
அச்சமுடை	௨௦௪	அரியவற்று	௪௭0
அச்சமேகீ	௪0௩	அரியவென்ரு	௨0௬
அஞ்சாமைய	௪௯0	அருங்கேட	௭௬
அஞ்சாமையீ	௪௪௯	அருஞ்செவ்	௨௪௬
அஞ்சுமறியா	௩௨௬	அருட்செல்	௰௯
அஞ்சுவதஞ்	௪௯௩	அருமறை	௩௪௪
அஞ்சுவதோ	௪௩௭	அருமையு	௨௩௨
அடக்கமம	௯௭	அரும்பய	௭௪
அடல்வேண்டு	௪௨௯	அருவினையெ	௪௰௬
அடற்றகை	௨௯0	அருளல்லதி	௯௪
அடுக்கியகோ	௩௯0	அருளில்லார்	௰௯
அடுக்கிவரினு	௨௩௭	அருளென்	௨௰௯
அடுத்ததுகா	௨௯௭	அருளொடு	௨௰௬
அணங்குகொ	௯0௯	அருள்கருதி	௪0௩
அணியன்ரே	௩௰௪	அருள்சேர்	௰௭
அந்தணரென்	௪௯	அருள்வெஃகி	௯௯

அலந்தாரை ௯௯௯
அலரெழவாரு ௯௬0
அலர்நாண ௯௬௬
அல்லலரு அ௯
அல்லவை ங௯
அல்லற்பட் உ௬உ
அவர்தந்தா ௯௯அ
அவர்நெஞ் ௯அ௬
அவாவில்லா ௬ங௯
அவாவினை ௬ங௯
அவாவென்ப ௬ங௫
அவிசொரிந் ௬ங
அவையறிந் உ௯௬
அவையறியார் உ௭0
அவ்வித்தழுக் ௯௬
அவ்வியநெ ௯உ
அழக்கொண் உ௫0
அழச்சொல் ங00
அழல்போ ௯௯௫
அழிவதூஉ ௬௭௯
அழிவந்த ங0௯
அழிவினவை உ௯௭
அழிவின்ற உ௯அ
அழுக்கற்ற ௯உ
அழுக்காறவா ௬௯
அழுக்காறுடையார் ௯௬
அழுக்காறுடையான் ௫௬
அழுக்காறென ௯உ
அழுக்காற்றி ௯௬
அளவல்லசெய் ௬0௯
அளவளாவில் உ00
அளவறிந்தார் ௬0௯
அளவறிந்து ௬அங
அளவின்கணி ௬0ங
அளித்தஞ்ச ௯ங௯
அறங்கூறு ௯௯
அறஞ்சாரா ங௯உ
அறஞ்சொல் ௯உ
அறத்தாறி து ௬உ
அறத்தாற்றி உ௬
அறத்தான்வ ௬அ
அறத்திற்கே ங௬
அறத்தினூஉங் ௬௫
அறம்பொரு ௬௬உ
அறவாழிய ௯
அறவினையா ௬௬உ
அறவினையு ங௯௬
அறனழீஇ ௯௯
அறனறிந்தா உ௯௬
அறனறிந்துழு ௬௯௬
அறனறிந்துவெ ௯௫
அறனுக்கம் ௯0
அறனியலா ங௫
அறனிழுக்கா ௬௯௯
அறனீனு உ௯௯
அறனெனப் உஉ
அறனோக்கி ௯அ
அறன்கடை ங௯
அறன்வரை ங௯
அறிகிலா ௯உ௬
அறிகொன் உ௯உ
அறிதோறறி ௯௬அ
அறிந்தாற்றி ௬௬உ
அறிவற்றங் ௬௯௬
அறிவிலார்தா ங௬உ
அறிவிலானெ ங௬உ
அறிவினுஉ ௬௬௯
அறிவினுளெ எங
அறிவின்மை ங௬உ
அறிவுடையாரா ௬௯ங
அறிவுடையாரெ ௬௯௯
அறிவுருவா உ௫௬
அறுவாய்நி ௯உ
அறைபறை ௯0ங

அற்காவியல் ககஉ
அற்றதறிந்து நடுடு
அற்றமறைக்கு நசுக
அற்றமறைத்த நகஅ
அற்றவரென் கநஎ
அற்றுரழிபசி அ0
அற்றுரைத்தே ககக
அற்றுர்க்கொ நஎஅ
அற்றுலளவறி நடுச
அற்றேமென் உநஎ
அனிச்சப்பூ சஉ0
அனிச்சமு சஉஉ
அன்பகத்தில் நஉ
அன்பறிவாரா உடுக
அன்பறிவு ககஎ
அன்பிலரு நஉச
அன்பிலாரெல் ந0
அன்பிற்குமு ந0
அன்பின்வழி நந
அன்பின்விழை நசஉ
அன்பீனுமா நக
அன்புடை—லி நஎந
அன்புடை—ல்வே உடுஅ
அன்புரோரெ நஎ0
அன்புமறனு உக
அன்புற்றமர்ந்த நக
அன்பொரீஇ நஎக
அன்போடியை ந0
அன்றறிவாமெ கஎ
ஆகாளவிட் கஅந
ஆகூழாற் கச0
ஆக்கங்கருதி கஎஎ
ஆக்கமதர்வி உஉசு
ஆக்கமிழந் உஉசு
ஆக்கமுங் உசச
ஆங்கமை உஎக
ஆபயன்கு உகந

ஆயுமறிவி நசடு
ஆய்ந்தாய்ந் உகக
ஆராவியற்கை கநக
ஆவிற்குநீர் நகக
ஆள்வினேயு நஅச
ஆற்றுருமா கஅக
ஆற்றினளவறிந்தீ கஅந
ஆற்றினளவறிந்து உஎச
ஆற்றின்வருந் கஎக
ஆற்றினிலேத உஎக
ஆற்றினெழு உக
ஆற்றுபவர்க் உஅ0
ஆற்றுவா—லிக நடுடு
ஆற்றுவா—ல்பசி அ0
ஆற்றுவா—ல்பணி நஎக
இகலாரு நஉந
இகலிற்கெ நஉக
இகலின்மிக நஉஉ
இகலெதிர் நஉஉ
இகலென்ப நஉ0
இகலென்னு நஉக
இகல்காரு நஉந
இகழ்ச்சியிற் உ0சு
இகழ்ந்தெ நகசு
இடமெல்லா நகக
இட்னில்பரு எஅ
இடிக்குந்து கஎக
இடிபுரிந்தெள் உநக
இடிப்பாரை கஎக
இடுக்கட்ப உசஅ
இடுக்கண்கா நஅசு
இடுக்கண்வ உநசு
இடும்பைக்கி உநக
இடும்பைக்கே நஅக
இடைதெரிந் உசுக
இணருழ்த்து உசஎ
இணரெரிதோ ககஉ

இதனையிதனு ககூஅ
இமைப்பிற்கர சஉடு
இமையாரின் நடo
இம்மைப்பிறப் சகூஅ
இயல்பாகு கஉள
இயல்பிலு உக
இயல்புளி உoஅ
இயற்றலு கசள
இரக்கவிர நகூச
இரத்தலினி அக
இரத்தலுமீ நகடு
இரந்துமுயி நகூஅ
இரப்பனிரப் சoo
இரப்பாரை நகூசு
இரப்பான்வெ நகூள
இரவாரிரப் நஅஅ
இரவுள்ளவுள் சoo
இரவென்னு சoo
இருணீங்கி கநo
இருநோக்கி சகக
இருந்துள்ளி சளo
இருந்தோம்பி நந
இருபுனலும் உளஅ
இருமனப்பெ நசசு
இருமைவகை கஉ
இருவேறுல கசக
இருள்சேரிரு டு
இலக்கமுடம் உநஅ
இலங்கிழா சளஅ
இலமென்றசை நகூo
இலமென்றுவெ சுச
இலர்பலராகிய கூசு
இலனென்றீய எஉ
இலனென்னு எக
இல்வாழ்வா ககூ
இல்லதெனி உந
இல்லாரை உஅச
இல்லாளெயஞ் நசo
இல்லாள்கட் நநக
இல்லதவற டிoக
இவறலுமாண் ககூடு
இழத்தொறூஉ நடுநு
இழிவறிந்துண் நடுசு
இழுக்கலுடை கடுக
இழுக்காமை உoடு
இழைத்தநிக உகூச
இளித்தக்க சஅஅ
இளிவரின் நசூடு
இளைதாகமு நநo
இளையரின உசூச
இறந்தமைந் நநஅ
இறந்தவெ உoந
இறந்தாரிற ககநூ
இறப்பேபுரி நசுஅ
இறலீனுமெ சூடு
இறுதிபய உசூஉ
இறைகடி உகடு
இறைகாக் உoக
இற்பிற—கண்ண நடுக
இற்பிற—கண்ணே நக்க
இனத்தாற் உகசூ
இனம்போன் நகo
இனியவுள சoo
இனியன்ன சகூo
இனைத்துணைத் நடு
இனையரிவ உகூஅ
இன்கணுடை சநடு
இன்சொலாலீத் கசஅ
இன்சொலாலீர நள
இன்சொலி நகூ
இன்பங்க சுசக
இன்பத்து—பய நஉக
இன்பத்து—வி உநஅ
இன்பமிடை கநஅ

இன்பமொ	ங.கூச	உணவினு	இ0ங
இன்பம்விழை—னி	உ.ஆ	உண்டார்க	சக0
இன்பம்விழை—ன்	உ.ச	உண்ணற்க	ந.சசு
இன்மையிடு	ங.கூக	உண்ணுது	ருகூ
இன்மையினி—த	ங.கூ0	உண்ணுமையு	கூக
இன்மையினி—து	உ.கங	உண்ணுமைவே	கூஉ
இன்மையு	ருள	உதவிவரைத்த	சக
இன்மையெ	ந.கூக	உப்பமைந்	சகங
இன்மையொ	ந.எஉ	உயர்வகலந்	உ.அ0
இன்றியமை	ங.சூஉ	உயிருடம்பி	கஉ0
இன்றும்வ	ங.கூங	உயிர்ப்பவு	ந.ங.க
இன்னுசெ—ரை	கக.ச	உய்த்தல	சஅள
இன்னுசெ—ர்	ந.எக	உரமொரு	உஉஅ
இன்னுதிரக்	அ0	உரனசைஇ	சளகூ
இன்னுதின	சங.அ	உரனென்	கஉ
இன்னுமை	உ.ஆ	உருவுகண்	உருங
இன்னுவெ	கக.ரு	உருளாய	ங.ருக
ஈட்டமிவ	ந.எள	உரைப்பா	அஉ
ஈதலிசைப	அஉ	உலகத்தாரு	ங.உ0
ஈத்துவக்கு	அக	உலகத்தோ	ருங
ஈர்ங்கைவி	சஇச	உலகத்தழீஇ	கசூஉ
ஈவார்கணெ	ந.க்ள	உலவிடத்	உஅஅ
ஈன்றபொ	உகூ	உவக்காணெங்	சசகூ
ஈண்டீண்மு	ங.சீள	உவந்துறை	சஉ.சூ
ஈன்றுள்பசி	உசகூ	உவப்பத்	கருக
உடம்பாடி	ந.க.ச	உழந்துழந்	சசரு
உடம்பொ	சஉங	உழவினர்	ங.அகூ
உடுக்கையி	உகூஅ	உழுதுண்டு	ங.அஅ
உடுப்பதூஉ	சஇச	உழுவாரு	ங.அள
உடைசெல்	ங.ருங	உழைப்பிரி	உ0உ
உடைத்தம்	கஅக	உளபோன்	உகூ
உடமையு	ங.சூ	உளரெனினு	உஎரு
உடையரெ	உஉரு	உளரென்னு	கருசு
உடையார்	கரிஉ	உளவரைதூ	கஅச
உட்கப்படா	ந.சசு	உள்ளக்களித்	சஅரு
உட்பகைய	ங.கூ.உ	உள்ளத்தார்	சளங
உணர்வது	உஎக	உள்ளத்தாலு	க0உ

உள்ளத்தாற்	௯0சு
உள்ளமிலா	உஉள
உள்ளமுடை	உஉசு
உள்ளம்போ	சசஙட
உள்ளற்க	ஙட0க
உள்ளியதெல்	ககஉ
உள்ளியதெய்	உ0சு
உள்ளினுங்	சருஞி
உள்ளினே	சகஙக
உள்ளுவதெல்	உஉள
உள்ளுவன்—னு	சசஅ
உள்ளுவன்—ம	சஉச
உள்ளொற்றி	ஙசஅ
உறங்குவ	கஉஞி
உறன்முறை	ஙஙஉ
உரு அதவர்க்	சஅக
உரு அதர்போ	சகஉ
உரு அதோ	சஙக
உரு அர்க்கு	சஞச
உறினட்ட	ஙட0சு
உறினுயிர	உகஙச
உறுதோறு	சகள
உறுபசியு	உஎள
உறுபொரு	உஅஞி
உறுப்பமைந்	உஃள
உறுப்பொத்	ஙஎஙட
உறவதுசீர்	ஙட0ள
உறைசிறி	உஞ்ள
உற்றகோய்நீ	ககசக
உற்றகோய்நோ	கூச
உற்றவன்	ஙஞிள
உற்றனளவு	ஙஞிள
ஊக்கமுடை	கஃசசு
ஊடலிற்றோற்	ஞி0ஙட
ஊடலிற்றோன்	ஞி0க
ஊடலினுண்	சகஞி
ஊடலுணங்	சகசு
ஊடலுணர்தல்	சகஅ
ஊடற்கட்	சஅசு
ஊடிப்பெறு	ஞி0ஙட
ஊடியவ	சகசச
ஊடியிருந்	சகஎள
ஊடுகமன்	ஞி0ச
ஊடுதல்	ஞி0ச
ஊணுடை	ஙஅ0
ஊதியமென்	ஙட0க
ஊரவர்கௌவை	சஙஉ
ஊருணிநீர்	எள
ஊழிபெய	ஙஎ0உ
ஊழிற்பெரு	கசஙட
ஊழையு	உஙஞி
ஊறொரா	உஞிக
ஊனைக்கு	ஙஅக
எச்சமென்	ஙஎள
எட்பகவ	ஙஙச
எண்சேர்ந்	ஙசஉ
எண்ணித்து	களக
எண்ணியவெ	உஞிங
எண்ணியா	கஅசக
எண்ணென்ப	கஞி0
எண்பதத்தாலெ	ஙஎஙட
எண்பதத்தாலே	உ0க
எண்பொருள	ககசஉ
எதிரதாக்கா	ககசச
எந்நன்றி	சங
எப்பொருளு	உசஙட
எப்பொருளெ	கஙக
எப்பொருள்யார்	ககசஉ
எய்தற்கரி	கஅள
எரியாற்சு	ஙட்சசு
எல்லாப்பொ	உஅஉ
எல்லார்க்குந	சஅ
எல்லார்க்குமெ	உஉஉ
எல்லாவிளக்	க0அ

எல்லைக்கணி	ந0ச
எவ்வதுறை	ககூந
எழுதுங்கா	சஅள
எழுபிறப்பு	உசூ
எழுமையெ	சஉ
எளிதென	நிநி
எள்ளாத	கஅ0
எள்ளாமை	க0க
எள்ளினிளி	சகூஉ
எற்றிற்கு	ச0நி
எற்றென்	உசஅ
எனைத்தானுங	கநிகூ
எனைத்தானுமெ	ககநி
எனைத்திட்	உநிச
எனைத்துங்	ந0கூ
எனைத்துணை	நிச
எனைத்துநி	சநிள
எனைத்தொ	சநிறி
எனைப்பகை	எச
எனைமாட்சி	உஅந
எனைவகை	ககூள
என்பிலதனை	ந.உ
என்றுமொ	உசஅ
என்னைமுன்	உகூக
ஏதம்பெருஞ்	நஎஅ
ஏதிலாரார	நகநி
ஏதிலார்கு	சுக
ஏதிலார்போ	சகந
ஏந்தியகொ	நநஅ
ஏமுற்றவ	நஉஅ
ஏரிணுநன்	நஅகூ
ஏரிணுழாஅ	அ
ஏவவுஞ்செ	நகக
ஐந்தவித்தா	கஉ
ஐயத்தினீங்	கநக்
ஐயப்படாஅ	உசுசு
ஐயுணர்வெ	கநூக
ஒட்டார்	நசுச
ஒண்ணுதற்	சற0கூ
ஒண்பொரு	உஅள
ஒத்ததறிவா	எள
ஒப்புரவினு	எஅ
ஒருதலேயா	சநிந
ஒருநாளெ	சஅக
ஒருபொழுது	கஉந
ஒருமைக்க	கநிந
ஒருமைச்	நகநி
ஒருமைமக	நசுள
ஒருமையுளா	சஅ
ஒலித்தக்கா	உஅஅ
ஒல்லுங்கரு	ந0அ
ஒல்லும்வகை	ககூ
ஒல்லும்வாயெ	உநிநி
ஒல்வதறிவ	கஅக
ஒழுக்கத்தினெ	நிஉ
ஒழுக்கத்தினெ	நிஉ
ஒழுக்கத்து	கக
ஒழுக்கமுடைமை	நிக
ஒழுக்கமுடைய	நிந
ஒழுக்கமும்	நநிக
ஒழுக்கம்வி	நி0
ஒழுக்காரு	சு0
ஒளியார்மு	உள0
ஒளியொருவ	நசுசு
ஒறுத்தாரை	நிஅ
ஒறுத்தார்க்	நிஅ
ஒறுத்தாற்	உஉக
ஒற்றினெனெ	உஉஉ
ஒற்றுமு	நஉக
ஒற்றெற்றி	உஉச
ஒற்றெற்று	உஉச
ஒன்றுகநல்	ககஅ
ஒன்றுமை	நநந
ஒன்றுவலக	அந

ஒன்றுனு ... சக
ஒன்றெய்தி ... நஙி0
ஒன்னார்த் ... கூச
ஓஒதல்வே ... உசஅ
ஓதியுணர்ந் ... நகச
ஓம்பினமை ... சநள
ஓர்த்துள்ள ... ககஉ
ஓர்ந்துகண் ... உ0எ
ஓஒவினிதே ... சசஙி
கூடலன்ன ... சஉஅ
கடலோடா ... ககஅ
கடனறிந் ... உசு0
கடனென்ப ... நசுக
கடாஅக்களி ... ச0க
கடாஅவுரு ... உஉந
கடிதோச்சி ... உகச
கடிந்தகடிந் ... உஙி0
கடுஞ்சொல் ... உகசு
கடுமொழியுங் ... உகசு
கடைக்கொட் ... உஙிஉ
கணைகொடிதி ... க00
கண்களவு ... சகக
கண்டதுமன் ... சநஉ
கண்டாங்கலு ... சசந
கண்டாருயிரு ... ச0அ
கண்டுகேட் ... சகச
கண்ணிறைந் ... சஅஉ
கண்ணிற்கணி ... உகக
கண்ணிற்றுனி ... சஅக
கண்ணின்பச ... சசுக
கண்ணின்றுக ... சுள
கண்ணுங்கொ ... சளக
கண்ணுடைய ... கஙிக
கண்ணுள்ளார் ... சஉஙி
கண்ணுள்ளிற் ... சஉச
கண்ணெனுக ... சகச
கண்ணோட்—த் ... உகஅ
கண்ணோட்—மி ... உஉ0
கண்ணோட்—மெ ... உகஅ
கதங்காத்துக் ... ஙி0
கதுமெனத்தா ... சசச
கயலுண்கண் ... சஙிக
கரத்தலுமாற் ... ச0
கரப்பவர்க் ... ச0க
கரப்பிடும்பை ... நகசு
கரப்பிலாதெ ... நகஙி
கரப்பிலார் ... நகசு
கரப்பினும் ... சஅஉ
கரவாதுவந் ... நகஅ
கருமஞ்சிதை ... உஉ0
கருமஞ்செய ... நஅந
கருமணியிற் ... சஉந
கருமத்தாலு ... நஅ0
கருவியுங்கா ... உநக
கலங்காதுக ... உஙிந
கலந்துணர் ... சளக
கல்லாதமே ... நகஅ
கல்லாதவரிற் ... உஎஙி
கல்லாதவருந ... கஙிஙி
கல்லாதாலு ... கஙிஙி
கல்லாதான் ... கஙிச
கல்லார்ப்பி ... உகள
கல்லாவொரு ... கஙிஙி
கல்லான்வெ ... நஉள
கவறுங்கழக ... நஙிக
கவ்வையாற் ... சநக
கழாஅக்கால் ... நகசு
களவிலைலாகி ... க0உ
களவின்கட் ... க0ந
களவென்னு ... க0ச
களித்தறியே ... நசக
களித்தானை ... நசக
களித்தொறு ... சநஉ
கள்வார்க்கு ... க0ஙி

கள்ளுண்ணுய்	ஙசக	காலைக்குச்	சசுங
கறுத்தின்னு	ககஙு	காலையரும்பி	சசுச
சுற்ககசடற	கரிo	கானமுயலெ	உகஉ
கற்றதனுலா	ச	குடம்பை	கஉச
கற்றறிந்தார்	உஎக	குடிசெய்வ	ஙஅச
கற்றருட்கற்	உஎங	குடிசெய்வார்	ஙஅரி
கற்றூர்முற்	உஎங	குடிதழீஇ	உoஅ
கற்றிலனயினு	கரிஅ	குடிபுறங்காத்	உகo
கற்றீண்டு	கஙஉ	குடிப்பிறந்தார்	ஙசுக
கற்றுக்கண்	உசுo	குடிப்பிறந்—கு	ககஙு
கனவிலனுண்	சரிக	குடிப்பிறந்—த	ஙoo
கனவினுமி	ஙoக	குடிமடிந்து	உஙo
காக்கபொரு	' சள	குடியாண்மை	உஙக
காக்கைகர	உoக	குடியென்னுங்	உஉகூ
காட்சிக்கெ	கசஅ	குணநலஞ்	ஙஎo
காணச்சின	ஙஉசு	குணநாடி	ககஙு
காணுதாற்	ஙஉo	குணமென்னுங்	கச
காணிற்குவ	சஉo	குணனிலனுய்	ஙஉசு
காணுங்காற்	சஅள	குணனுங்குடி	உகக
காண்கமற்	சளக	குலஞ்சுடுங்	ஙஅஉ
காதலகாத	கசுஅ	குழலினிதி	உஅ
காதலரில்	சசுங	குறிக்கொண்	சகஉ
காதலர்தூ	சரிஅ	குறித்தது	உசுக
காதலவரில	சளo	குறிப்பறிந்து	உசுச
காதன்மை	ககஙச	குறிப்பிற்—ரா	உசுள
காமக்கடன்	சசக	குறிப்பிற்—ர்	உசுசு
காமக்கடு—லு	சஉள	குற்றமிலனுய்	ஙஅச
காமக்கடு—னீ	சசஉ	குற்றமேகாக்	கசுசு
காமக்கணிச்	சளச	குன்றென்னுர்	ஙஙள
காமமுஙாணு	சசo	குன்றினனே	ஙசுச
காமமுழங்	சஉசு	குன்றேறி	உஅசு
காமமென	சளச	கூடியகாமம்	சளக
காமம்விடு	சளஉ	கூடித்தாட்ட	கஉக
காமம்வெகுளி	கஙுச	கூழுங்குடியு	உகக
காலங்கருதி	கஅரி	கூருமைநோ	உசுரி
காலத்தினுற்	சo	கூற்றங்குதி	கஙு
காலாழ்களரி	ககக	கூற்றத்தை	ஙஙசு

கூற்றமோ ௯0அ
கூற்றுடன்று உ.அக
கெடல்வே ஙஙஙி
கெடா அவழி ஙo஫
கெடுங்கா ஙoக
கெடுப்பதூஉ அ
கெடுவல்யா ஈஙி
கெடுவாக ஈஙி
கெட்டார்க் ஈகo
கேடறியா உஎஅ
கேடில்வி கஙிஈ
கேடும்பெ ஈஙி
கேட்டார்ப் உஈச
கேட்டினு ஙoo
கேட்பினுங் ககo
கேளிழுக்கங் ஙoஙி
கைம்மாறுவே எசு
கையறியா ஙஈள
கைவேல்க உகூஉ
கொக்கொக் கஅள
கொடியார்—யி ஈஈஉ
கொடியார்—யு ஈசுள
கொடுத்தலு உoக
கொடுத்துங் ஙஉசு
கொடுப்பத சுக
கொடுப்பதூஉ ஙஎஅ
கொடும்புரு ௯0அ
கொடைய கஈக
கொலமே உகo
கொலையிற் உகo
கொலைவினை கஉo
கொல்லாங உஎo
கொல்லாமை ககக
கொல்லான் கூங
கொள்ப்பட் உசுஙி
கொளற்கரி உஅக
கொன்றன் ஈஉ

கோட்டுப் ஈகூஅ
கோளில் சு
சமன்செய் ஈசு
சலத்தாற் உஙிo
சலம்பற்றி ஙசுo
சாதலினின் அஉ
சாயலுநா ஈஈஅ
சார்புணர்ந் கஙஈ
சால்பிற்குக் ஙஎக
சான்றவர் ஙஎஉ
சிதைவிடத் உஉள
சிறப்பறி உஉஙி
சிறப்பீ—மு கடி
சிறப்பீ—ம் ககங
சிறப்பொடு கூ
சிறியாருணர் ஙசுஅ
சிறுகாப்பி உஅக
சிறுபடை ஈகo
சிறுமைநமக் ஈசுசு
சிறுமைபல கஙிக
சிறுமையுஞ் உகo
சிறுமையுணீ ஙக
சிறைகாக்கு உடி
சிறைநல ககக
சிற்றினம களஉ
சிற்றின்ப சுங
சினத்தைப் ககக
சினமென்னு ககக
சீரிடங்கா ஙகo
சீரினுஞ்சீ ஙசுங
சீருடைச்செ ஙஎக
சீர்மைசிற எo
சுடச்சுட கூசு
சுவையொளி கங
சுழலுமிசை உகூங
சுழன்றுமேர் ஙஅள
சுற்றத்தாற் உoக

சூழாமற்றே	ஙஅச	செற்றேனென	சளக
சூழ்ச்சிமுடி	உருச	செற்றேர்பி	சளரு
சூழ்வார்கண்	கள0	சென்றவிட	கசுக
செப்பமுடை	சச	சொல்வல்	உசசு
செப்பின்பு	ஙஙங	சொல்லுக—லி	எஉ
செயற்கரியசெ	கங	சொல்லுக—லே	உசரு
செயற்கரியயா	உகரு	சொல்லுதல்	உருஉ
செயற்கைய	உசஉ	சொல்லப்ப	சo்ச
செயற்பாலசெ	ககஎள	சொல்வண	ஙகக
செயற்பாலதோ	கஅ	சொற்கோட்	சசு
செயிரிற்றலே	கூஉ	ஞாலங்கருதி	கஅரி
செய்கபொ	உஅசு	ஞாதியென	சாங
செய்தக்க	களஅ	தக்காங்கு	உகச
செய்தேமஞ்	ஙoஎ	தக்காரின	களo
செய்யாமற்செய்	சo	தக்கார்தக	சச
செய்யாமற்செற்	ககச	தஞ்சந்தம	சகஉ
செய்வாரே	ககஅ	தணந்தமை	சசுசு
செய்வினே	உருசு	தண்ணந்துறை	சஅச
செருக்குஞ்	கசுரு	தந்தைமகற்	உஅ
செருவந்த	உகள	தந்நலம்	ஙசச
செல்லாமை	சஙரு	தந்நெஞ்சத்	சருசு
செல்லாவி	கoக	தமராகித்	உoஉ
செல்லான்	ஙஅக	தம்பொரு	உள
செல்லிடத்	கoக	தம்மிலிருந்	சகள
செல்வத்துட்	கருள	தம்மிற்பெரி	களo
செல்விருந்	ஙரு	தம்மிற்றம்	உஅ
செவிகைப்ப	ககக	தலைப்பட்டார்	கஉஅ
செவிக்குண	கருஅ	தலையினிழிந்	ஙசுங
செவிச்சொல்	உசுங	தவஞ்செய்	கரு
செவியிற்சுவை	கசுo	தவமறைந்	கூஅ
செவியுணவி	கருஅ	தவமுந்தவ	கூச
செறுஅச்சிறு	சகங	தவறிலரா	ருoஉ
செறிதொடி	சஅங	தள்ளாவிளே	உளசு
செறிவறிந்	சள	தற்காத்துத்	உச
செறுநரை	கஅசு	தனக்குவமை	ரு
செறுவார்க்	ஙஉள	தனியேயிருந்	சகக
செற்றவர்பி	சளரு	தன்குற்றநீக்	ககசு

தன்றுணையின் ௫௨௯
தன்னுயிர்க்கின் ௪௪௫
தன்னுயிர்தா ௯௯
தன்னுயிர்நீ ௪௪௯
தன்னூன்பெரு ௯0
தன்னெஞ்சறி ௪0௯
தன்னேத்தான்—க் ௪௪0
தன்னேத்தான்—த எ௫
தன்னேயுணர் ௫00
தூமின்புறு ௪௫௪
தாம்வீழ்—த ௯௫௪
தாம்வீழ்—மெ ௯௪௫
தாம்வேண் ௯௫௫
தார்தாங்கி ௨௯0
தாளாண்மையி ௨௫௫
தாளாண்மையெ ௨௫௫
தாளாற்றி எ௯
தானந்தவ ௪0
தீறனல்ல ௫அ
திறனறிந் ௨ச௫
தினற்பொரு ௯௨
தினைத்துணை ச௪
தினைத்துணையா ௪௯௯
தினைத்துணையு ச அ௯
நீப்பாலதான் எச
நீயவைசெய் எச
நீயவைநீய எ௫
நீயளவன்றி ௫௫௯
நீயினுற்சுட்ட ச௪
நீவினையார எ௨
நுஞ்சினர் ௫ச அ
நுஞ்சுங்காற் ச௯௪
நுணலுமா உ ச எ
நுப்பார்க்கு அ
நுப்பினெவ ச ச ச
நுப்புரவில் ௫௯௫
நும்முச்தெறு ச௪௯
துளியின்மை உ௪உ
துறந்தா—த் ௯ச
துறந்தா—ந் ௪௯
துறந்தார்படி உ உ௫
துறந்தார்பெரு ௪௪
துறந்தாரிற் ௫௯
துறப்பார் ௪ச உ
துறைவன் ச௫எ
துனியும்புல ச ச ௯௫
துன்பத்திற் ச ச உ
துன்பமுறவ உ௫ச
துன்புறூஉ ௫அ
துன்னுத்து ச எ௫
துன்னியார் ச்அ
தூங்காமை ௪ச ச
தூங்குக உ௫௫
தூய்மைது உ௯௪
தூஉய்மையெ ௪௫எ
தெண்ணீரடு ௫ ௪ ௪
தெய்வத்தா உ௫௫
தெய்வந் உச
தெரிதலுந் உ ச ச
தெரிந்தவி ௪எ எ
தெரிந்துணை ச ச உ
தெருளாதா அ ௪
தெளிவிலத ௪எ எ
தென்புலத் உ0
தேரான்பிற ௪ ௪ ௯௫
தேரான்றெ ௪ ௪ ௯௫
தேவரனைய ச0உ
தேறற்க ௪ ௪ ௯௫
தேறினுந் ௫உ ௪
தொகச்சொ உ ச0
தொடங்கற் ௪அ அ
தொடலைக் ச உ அ
தொடிகோக் ச அ ச
தொடிப்புழு ௫அ ௪

தொடியொடு	சசுஅ	நல்லார்கட்	கஙுசு
தொடிற்சுடி	சஙஅ	நல்லாறென	ககஅ
தொட்டனைத்	கஙுஉ	நல்லாறெனி	எகூ
தொல்வர	ஙகூக	நல்லாற்ரு	அள
தொழுதகை	ஙகஉ	நல்லினத்தி	களசு
நோன்றிற்	அசா	நவிரூறு	உகூசு
நகல்வல்ல	ஙளஙு	நற்பொரு	ஙகூஉ
நகுதற்பொரு	உகூசு	நனவிஞற்	சசுo
நகையீகை	ஙுஙுக	நனவினைங்	சசுக
நகையுமுவ	கஉo	நனவினைனல்காக்	சசுo
நகையுள்ளு	ஙஎசா	நனவினைனல்காத	சஙுக
நகைவகை	ஙoஅ	நனவினைனல்காரை	சசுக
நகைஇயார்	சஙுசா	நனவென	சசுo
நச்சப்படா	ஙளக	நன்மையுங்	ககூசு
நடுவின்றி	சூஙட	நன்றறிவா	சoஉ
நட்டார்குறை	ஙுசக	நன்ரூகுமாக்	ககக
நட்டார்க்கு	உஙுள	நன்ரூங்கா	கசஙு
நட்டார்போ	ஙுகக	நன்ரூற்ற	களக
நட்பிற்குவீ	உகூஅ	நன்றிக்கு	ஙுஉ
நட்பிற்குறு	ஙoஙட	நன்மிமறப்	சஉ
நண்பாற்ரு	ஙளஙு	நன்றென்ற	உளo
நத்தம்போற்	அசா	நன்றேதரி	சச
நயந்தவர்க்	சஙுள	நண்ணீரைவா	சகக
நயந்தவர்நல்	சசுசு	நாங்காதல்	சஙுஉ
நயனிலசொல்	எக	நாச்செற்று	கஉங
நயனிலனெ	எo	நாடாதுந	உகூக
நயனீன்று	ஙுகூ	நாடென்ப	உளக
நயனுடை	எஅ	நாடொறுநாடி	உகக
நயனெடு	ஙளச	நாடோறுநாடு	ககக
நயன்சாரா	எo	நாணகத்தி	ஙுஅங
நலக்குரியார்	ஙுசு	நாணுமை	ஙுகச
நலத்தகை	சகூச	நாணுலு	ஙுஅஉ
நலத்தின்க	ஙுசுக	நாணுமற	சகூக
நலம்வேண்	ஙுசுஉ	நாணென	சளசு
நல்குரவெ	ஙுகூஉ	நாணென்	ஙுசள
நல்லவை	ககக	நாணெடு	சஉள
நல்லாண்	ஙுஅதி	நாண்வேலி	ஙுஅஉ

நாநல	உசநட
நாளென	கஉஉ
நீணந்தீயி	சளள
நிலத்தியல்	களந
நிலத்திற்	நசுக
நிலவரைநீ	அந
நிலைமக்கள்	உகக
நிலையஞ்சி	ககஅ
நிலையிற்றீ	சஅ
நில்லாதவ	கஉக
நிழனீருமின்	நநக
நிறைநீர	உகுநி
நிறைநெஞ்	நசநி
நிறைமொழி	கச
நிறையரி	சஉக
நிறையுடைமை	நிஅ
நிறையுடையே	சளநி
நினைத்திருந்	நி0O
நினைத்தொன்	சள0
நினைப்பவர்	சடநி
நீங்கான்வெகு	நஉநி
நீங்கிற்றெ	சகசு
நீரின்றமை	க0
நீருநிழல	சகக
நுணங்கிய	ககO
நுண்ணியதூ	கசக
நுண்ணியமெ	உசுஅ
நுண்மா ணு	கடுசு
நுனிக்கொம்	கஅஉ
நூலாருணூல்	உடுக
நெஞ்சத்தார்	சஉடி
நெற்சிற்றுற	கக
நெடுங்கட	கூ
நெடுநீர்மற	உந0
நெடும்புன	ஙஅக
நெய்யாலெ	சநந
நெருப்பிணு	ஙகநட

நெருகலுள	கஉந
நெருநற்றுச்	சஅச
நோக்கிலை—கி	சக
நோக்கிலை—கெ	சO
நோதலெவன்	சகசு
நோயெல்லா	ககசு
நோய்நாடி	நடுசு
நோவற்க	நந0
நோனுவுடம்	சஉள
பகச்சொல்	சுஅ
பகல்கருதி	நஉக
பகல்வெல்	கஅச
பகுத்துண்	கக
பகைநட்பாக்	நஉக
பகைநட்பாங்	நகந
பகைபாவ	நடி
பகைமையு	உசுஅ
பகையகத்துச்	உளந
பகையகத்துப்	உளச
பகையென்	நஉஅ
பசக்கமற்	சடி0
பசந்தாளி	சடி0
பசப்பென	சடி0
படலாற்றூ	சசடி
படியுடை	உந0
படுபயன்	சந
படைகுடி	கசடி
படைகொண்	கக
பணியு மாமெ	நசுஅ
பணிவுடைய	நஅ
பணைநீங்கிப்	சசள
பண்டறியே	சO
பண்ணெண்	உகஅ
பண்பிலான்	நளசு
பண்புடை	நளச
பதிமருண்டு	சசுடி
பயனிலபல்	ள0

பயனில்சொற்	ஏக	பிணிக்குமருந்	சகநி
பயன்மரமுள்	ஏஎ	பிணியின்மை	உஎஅ
பயன்றூக்கார்	சக	பிணையேர்	சக0
பயன்றூக்கி	நசநந	பிரித்தலும்	உச0
பரிந்தவர்நல்	சஎஉ	பிரிவுரைக்	சநஎ
பரிந்தோம்பிக்	நி0	பிழைத்துணர்	கநிக
பரிந்தோம்பிப்	நநி	பிறப்பென்னு	கநந
பரியதுகூர்	உஉஅ	பிறப்பொக்	நசசு
பரியினுமா	கசஉ	பிறர்க்கின்	ககசு
பருகுவார்	ந0சு	பிறர்காணத்	நஅஉ
பருவத்தோ	கஅநி	பிறர்பழியு	நஅக
பருவரலும்	சநிந	பிறவிப்பெ	எ
பலகுடைநீ	நஅஅ	பிறன்பழி	சுஎ
பலசொல்ல	உசசு	பிறன்பொரு	நிந
பலநல்லகற்	நக0	பிறன்மனை	நிசு
பல்குழுவு	உஎஎ	பீலிபெய்	கஅஉ
பல்லவைக	உஎநி	புகழின்ரூற்	நசுச
பல்லார்பகை	கஎஉ	புகழ்ந்தவை	உ0நி
பல்லார் முனி	சுக	புகழ்பட	அச
பழகியசெல்	நநிஉ	புகழ்புரிந்	உநி
பழகியநட்	ந0ந	புக்கிலமை	கஉநி
பழிமலங்	உசக	புணர்ச்சிபழ	உகசு
பழியஞ்சி	உ0	புத்தேளுல	எசு
பழுதெண்	உசஉ	புரந்தார்கண்	உகச
பழைமையெ	ந0உ	புலத்தலிற்	நி0உ
பழையமெ	உசுநி	புலப்பலென	சஎசு
பற்றற்றகண்	ககக	புலப்பேன்	சஅ0
பற்றற்றகண்ணே	கஉக	புல்லவையுட்	உஎஉ
பற்றற்றே	ககக	புல்லாதிரா	சசுந
பற்றிவிடா	கஉஅ	புல்லிக்கிடங்	சசக
பற்றுகபற்	கஉக	புல்லிவிடா	நி0உ
பற்றுள்ள	கசுஎ	புறங்குன்றி	க00
பனியரும்பி	சசுந	புறங்கூறிப்	சுசு
பன்மாயக்கள்	சஎசு	புறத்திறுப்	நஉ
பாடுபெறு	சசுஅ	புறந்தாய்	க0அ
பாத்தூண்	அக	புன்கண்ணே	சசுஉ
பாலொடு	சஉந	பெண்ணிய	சகஎ

பெண்ணிற் உச
பெண்ணினுற் சஅடு
பெண்ணேவல் நகக
பெயக்கண்டு உஉக
பெயலாற்ரு சசச
பெரிதாற்றிப் சஅங
பெரிதினிது நகசு
பெரியாரை நஙடு
பெருக்கத்து நசுங
பெருங்கொ உ0க
பெருமைக்கு ககச
பெருமைபெ நசுக
பெருமையு நசுள
பெரும்பொரு உளசு
பெரு அமையஞ் சகத
பெறினென் சஅக
பெறுமவற்று உசு
பெற்ரூற் உடு
பேணுதுபெட்டா சசசு
பேணுதுபெட்ப சஅசு
பேணுதுபெண் நங
பேதைபெருங் நo அ
பேதைப்ப கச0
பேதைமையு நகச
பேதைமையெ நகந
பேதைமையொ நo ச
பேராண்மை உகூஉ
பொச்சாப்பார் உ0ச
பொச்சாப்புக் உ0ந
பொதுநலத் நசச
பொதுநோக் உ0உ
பொய்படுமொ நகடு
பொய்ம்மையு க0சு
பொய்யாமைபொ க0எ
பொய்யாமைய க0எ
பொருடீர்ந் எக
பொருட்பெண்டிர் நசந
பொருட்பொரு நசந
பொருணீங் அஅ
பொருண்மா சசுடு
பொருளல்லவரை உஅந
பொருளல்லவற் கந0
பொருளற்ரூர் அசு
பொருளாட்சி க0
பொருளாலு நஎஎ
பொருளென் உஅச
பொருள்கரு உடுசு
பொருள்கெடுத் நடுஉ
பொள்ளென கஅசு
பொறியின் உநடு
பொறிவாயி டு
பொறுத்தலிற டுஎ
பொறையொ உஎஎ
போற்றினரி உசுந
மகன்றந்தை உக
மக்கண்மெய் உ எ
மக்களேபோல் சo உ
மங்கலமென்ப உசு
மடலூர்தல் சஉஅ
மடிமடிக் உஉசு
மடிமைகுடி உநக
மடியிலா உநஉ
மடியுளா உநச
மடியைமடியா உஉக
மடுத்தவா உநஎ
மணிநீருமண் உஅo
மணியிற்றிக சஅஉ
மண்ணேடியை உகசு
மதிநுட்ப உசக
மதியுடன்தை சஉக
மயிர்நீப்பின் நசுடு
மருந்தாகித் எஎ
மருந்தென நடுச
மருந்தோமற் நசுடு

மருவுகமாசற்	ஙOஉ	மன்னுயிரெல்	சசஉ
மலரன்ன—ண்மூ	சஉஉ	மன்னுயிரோ	அஅ
மலரன்ன—ளரு	சஙக	மாதர் மூகம்	சஉக
மலரினுமெல்	சஅஅ	மாலேநோய்	சசுச
மலர்காணின்	சகக	மாலையோவல்	சகஉ
மலமிசை	ச	மாறுபாடில்	ஙருரு
மழித்தலுநீ	கOக	மீகச்செய்	ஙகஉ
மறத்தல்வெ	ககO	மிகன் மேவன்	நஉஉ
மறந்தும்பி	எஙு	மிகினுங்குறை	ஙருச
மறப்பினு	ருக	மிகுதியான்	ருக
மறப்பினெவ	சருள	முகத்தான	ஙள
மறமான்மா	உஅக	முகத்தினினி	நகO
மறவற்கமா	சஉ	முகத்தின்மு	உசுள
மறைந்தவை	உஉச	முகஙகட்ப	உகள
மறைபெற	சசசு	முகநோக்கி	உசுஅ
மறைப்பேன்மற்	சளச	முகைமொக்	சஅங
மறைப்பேன்மன்	சஙக	முடிவுமிடை	உருக
மற்றியானெ	சருசு	முதலிலார்க்	களக
மற்றுந்தொடர்	கஉள	முயக்கிடை	சசுசு
மன்த்ததுமா	கOO	முயங்கிய	சசுஅ
மனத்தாலு	களஙு	முயற்சிதிரு	உநச
மனத்தினமை	ஙகக	முரண்சேர்ந்	கஅஅ
மனத்துக்கண்	ககசு	முறிமேனி	சஉO
மனத்துளது	களஙு	முறைகோடி	உகஙு
மனத்தொடு	கOள	முறைசெய்	கசஅ
மனநலத்தி	களரு	முறைப்பட	உசஙு
மனநலநன்கு	களரு	முற்றுற்றி	உஅஉ
மன்னலமன்	களரு	முற்றியுமுற்	உஅஉ
மனந்தூயார்	களச	முனைமுகத்	உஅங
மனந்தூய்	களச	முன்னுறக்கா	உOச
மனமாணவு	ஙஙஉ	மேலிருந்து	நசுள
மனைத்தக்க	உங	மேற்பிறந்தா	கருள
மனைமாட்சி	உங	மையலொரு	நகசு
மனையாளே	ஙசO	மோப்பக்கு	நசு
மனைவிழைவா	ஙநஅ	யாகாவாரா	சகூ
மன்னர்க்கு	உகஉ	யாரங்கண்ணி	சஙO
மன்னர்விழை	உசுஉ	யாண்டுச்செ	ஙநச

யாதனின்யா	கஉசு
யாதானுங	கடுஉ
யாமுமுளே	சடுசு
யாமெய்யா	க0கூ
யூரினுங்கா	சகூஅ
யானெனதெ	கஉஅ
யானேக்கு	சகஉ
வகுத்தான்	கசஉ
வகைமாண்	ஙஙஎ
வகையறச்	களஅ
வகையறிந்துத	ஙங0
வகையறிந்துவ	உஎஉ
வசையிலாவ	அடு
வசையென்ப	அடு
வசையொழிய	அடு
வஞ்சமனத்தா	கூஎ
வருகமற்கொ	சஅ0
வருமுன்னர்	கசுசு
வருவிருந்து	ஙச
வரைவிலாமா	ஙசடு
வலியார்க்கு	கஉச
வலியார்முற்	அக
வலியினிலை	கூஅ
வழங்குவ	கூசு0
வழிநோக்	கஉடு
வழுத்திஞடு	சகூக
வறியார்க்	எக
வன்கண்கு	உச0
வாணிகஞ்செய்	சசு
வாய்மையெ	க0டு
வாராக்காற்	சசசு
வாரிபெருக்	ககூசு
வாழ்தலுயிர்	சஉச
வாழ்வார்க்	சடுக
வாளற்றுப்	சஎஅ
வாளொடென்	உஎச
வாள்போல்	ஙஙக
வானின்றுல	எ
வானுயர்தோ	கள
வாலேக்கி	உ0எ
விசும்பிற்று	கூ
விடாஅது	சடுஅ
விடுமாற்ற	உசுக
விண்ணின்று	அ
வித்துமிடல்	ஙடு
வியவற்க	ககசுஅ
விருந்துபுற	ஙச
விருப்பருச்	உ0ட
விரைந்து	உசசு
விலங்கொடு	கடுள
வில்லேருழ	கஉஅ
விழித்தகண்	உகஙக
விழுப்புண்ப	உகஙஉ
விழுப்பேற்	சூ0
விழைதகை	ங0ஙஉ
விழையார்	ஙஉ0டு
விளக்கற்ற	சசகூ
விளிந்தாரின்	டுச
விளியுமெனி	சடுள
வினைகலந்து	சஅ0
வினைக்கண்வினைசெ	உஙஙக
வினைக்கண்வினையு	ககஙக
வினைக்குரி	ககூஅ
வினைசெய்	உஉங
வினைபகை	உடுசு
வினைத்திட்	உடுக
வினையான்	உடுள
வினைவலியு	கஅ0
வீழப்படுவா	சடுஉ
வீழுநர்வீழ	சடுஉ
வீழுமிருவர்	சகள
வீழ்நாப	கள
வீழ்வாரினி	சடுங
வீறெய்தி	உடுஉ

வெண்மை	ங்கஅ	வேண்டா	கஙூ
வெருவந்த	உகடு	வேண்டிய	கூடு
வெள்ளத்தனையம	உஉசூ	வேண்டினு	கஉசூ
வெள்ளத்தனீயவி	உஙசூ	வேண்டுங்	கஙூசூ
வேட்ட	சகசூ	வேண்டுதல்	ச
வேட்பத்தா	உசடு	வேலன்று	உ0அ
வேட்ப்ன	உசூச	வேலொடு	உகக
வேண்டற்—ஃ	சூடு	வைத்தான்	ங்எசூ
வேண்டற்—ன்	ங்டு0	வையத்துள்	உஉ